அ. 22211
68-69

தர்ம விமர்சனம்

2972
MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THE TANJORE
RECEIVED
29 JUL 1948



ஸ்ரீ ராமாநந்தஸரஸ்வதீ ஸ்வாமிகள்
இயற்றியது

2972

உ

தர்ம விமர்சனம்



ஸ்ரீ ராமாநந்தஸரஸ்வதீ ஸ்வாமிகள்

இயற்றியது

பொறுப்பை ஸ்ரீஸ்வாமிகளின் பூர்வாசிரமகுமாரரான திருநெல்வேலி அட்வொகேட் ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் வஹித்து 1931ல் பிரசுரம் செய்தார். அப்பொழுது அச்சிட்ட பிரதிகள் வெகு சீக்கிரமாகவே செலவழிந்து விட்டபடியால் இப்பொழுது கிடைக்கிறதில்லை.

தற்கால நிலைமையில் நம் மததத்வங்களை போதிக்க இப்பேர்பட்ட அனுபவமும், ஆசாரமும் வாய்ந்தவர் எழுதிய கிரந்தங்கள் மிகவும் தேவைப்படுவதால் அவர்கள், தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும், இங்கிலீஷிலும் எழுதியிருக்கும் பல புஸ்தகங்களையும், அவர்களுடைய உலகவாழ்க்கை சரித்திரத்தையும், இக்காலத்திலுள்ளவர்களும் வாசித்துத் தெரிந்து பயனடைய வேண்டுமென்ற கருத்துடன், ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜனனத்திலிருந்து நூறுவது ஆண்டான இந்தப் பிலவங்க வருஷத்தில் மறுபடியும் அச்சிடுவதற்காக சில பக்தர்கள் கூடி ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள்.

முன்பதிப்பை வெளியிட்ட ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் இப்பால் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளவர்களின் அனுக்கிரஹத்தினால் துரீயாசிரமம் பெற்று ஸ்ரீ ஞானானந்த பாரதீ என்ற யோகபட்டத்துடன் திருச்சி ஜில்லா கரூர் ஸ்ரீ சங்கர மடத்தில் தங்கிக்கொண்டிருக்கும் ஸமயம் இந்தப்பதிப்பின் பொறுப்பையும் அவர்களே வஹிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில் ஸம்மதித்து அவசியமான கார்யங்களை செய்து கொடுத்தார்கள். முன்பதிப்பில் சில அத்தியாயங்களும், வாக்கியங்களும் மிகப் பெரிதாயிருப்பதாலும் ஸம்ஸ்கிருத பதங்களையே அதிகமாய் உபயோகப்படுத்தியிருப்பதாலும் தற்கால ஜனங்களுக்குப்புரிய சிரமமாயிருக்கின்றதென்று சிலர் சொல்வது வாஸ்தவமேயானாலும், ஸ்ரீராமானந்த

ஸ்வாமிகள் உபயோகித்திருக்கும் பதங்களையும், வாக்கியங்களையும் மாற்றிவிட்டால் கிரந்தத்தின் சைலியே மாறிவிடக்கூடியதா யிருப்பதால் அவ்விதம் செய்வது உசிதமில்லையென்று நினைத்து, அத்யாயங்களை மாத்திரம், சிறிது சிறிதாகப் பிரித்தும், இரட்டிப்பான விஷயங்களை எடுத்து விட்டும், விஷயங்களைக் கூடியமட்டும் கோர்வையாகச் செய்தும் இப்பதிப்பு வெளியிடப்படுகிறது. தவிரவும், உத்தராதி மடம் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகள் பலவாறாக அத்வைத மதத்தை தூஷணம் செய்த விஷயம் ஸ்ரீ ராமானந்த ஸ்வாமிகளுக்குத் தெரிய வந்தவுடன் "உத்தராதி ஸ்வாமி வாத ஸமாதானம்" என்றதோர் சிறிய புஸ்தகம் எழுதி வெளியிடப்பட்டது. தர்மவிமர்சனம் இரண்டாம் பதிப்புப் பிரசுரமாகும் போது அதையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டிருக்கும் அபிப்ராயப்படி அப்புஸ்தகத்தி லுள்ள விஷயங்களையும் ஸங்கிரஹித்து இப்பதிப்பில் 16, 17 அத்யாயங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமாநந்தஸ்வாமிகள் பூர்வாசிரமத்தில் 1920ல் திருநெல்வேலியில் பங்களூர் ஸ்ரீகர்பூர் ஸ்ரீநிவாஸராவ் அவர்களின் அத்யக்ஷத்தில் நடந்த சென்னை மாகாணவர்ணாசிரம மஹாநாட்டில் வரவேற்புக் கமிட்டித் தலைவர் முறையில் செய்த ஸ்வாகத பாஷணத்தையும், 1921ல் தஞ்சாவூரில் நடைபெற்ற சென்னை மாகாண வர்ணாச்ரம மஹாநாட்டில் அக்ராஸனாதிபதியாக இருந்து இவர் நடத்திய பிரஸங்கத்தையும் முன்பதிப்பில் போல இதிலும் அனுபந்தங்களாகச் சேர்த்திருக்கிறது.

இப்புஸ்தகத்தின் உபயோகத்தைப்பற்றி முன்பதிப்பின் முகவுரையிலுள்ள ஒரு முக்கியாம்சத்தை அப்படியே இங்கு சேர்த்துக் கொள்ளவேண்டியது மிகவும் உசிதமாகும் அதாவது:

"அதர்மமே மிகுந்திருக்கிற இக்கலிகாலத்தில் தர்மவிமர்சனம் அதாவது தர்மாதர்மங்களின் பரிசோதனையை செய்து தர்மத்தைத் தெரிந்தெடுப்பது பிரயோஜனமற்ற காரியமென்றே பெரும்பாலும் ஜனங்களுக்குத் தோன்றலாம். மோக்ஷத்தில் உத்தேசமும் மோக்ஷ ஸாதனமான தர்மத்தில் பிரவிருத்தியும் அதிகரிக்கக்கூடிய காலத்தில்தான் தர்மத்தை, உள்ளபடி தெரிந்து கொள்ளுவதில் ஆவலும் அதர்மாசரணையில் பயமும் விசேஷமாய் எங்கும் காணப்படும். காலரீதியினால் இவ்வித ஆவலும், பயமும் உலகத்தில் இப்பொழுது மிகவும் குறைந்திருப்பதால், தர்மவிமர்சன விஷயமான இப்புஸ்தகத்தை கவனிக்கவே அநேகர்களுக்குத் தோன்றாது. கவனிப்பவர்களிலும் இப்புஸ்தகம் இக்காலத்திற்கேற்றதல்லவென்றும் சிலர்கள் அபிப்ராயப்படுவார்கள். ஆகிலும், இவ்வதர்ம-யுகத்திலும்கூட கால் பங்கு தர்மமிருப்பதாகவும், உண்மையில் எல்லாவற்றையும் தரிப்பதே தர்மம் என்றிருப்பதால் தர்மம் உலகத்தை விட்டுப் பூராவும் மறைந்து விடாதென்றும், அடுத்த கிருதயுகத்தில் தோன்றப்போகும் தார்மிகர்கள் உற்பத்தியாவதற்காகவாவது இக்கலியுகத்தின் கடைசியில் களங்கமற்ற தர்மமூர்த்திகளாகச் சிலர்கள் இருப்பார்களென்று சொல்லும் சாஸ்திரங்களை நாம் திடமாய் நம்புவதால், இப்பொழுதும் தர்மாதர்ம சோதனையிலும் தர்மாசரணையிலும் ஊக்கமுள்ள சில ஜனங்கள் ஸ்வல்பமாகவாவது இருந்து கொண்டேயிருப்பார்களென்பதே உறுதி. இவர்களுக்கும் இவர்களின் கோஷ்டியில் சேரக்கூடியவர்களுக்கும் இப்புஸ்தகம் கொஞ்சம் உபயோகப்படலாம். இவர்களுக்குள் லௌகிக-ஆலோசனையில் பற்றுள்ள சிலர்களுடைய மனதுகளில் சிற்சில விஷயங்களில் தர்மாதர்ம-ஸம்பந்தமான ஸம்சயங்கள் ஏற்படக்கூடும். இப்படிப்பட்டவர்களுடைய ஸம்சய நிவிருத்தியின் பொருட்டு லௌகிக நடையிலேயே இதில் கண்ட விஷயங்கள்

எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், சாஸ்திர ஸம்மதமான விஷயங்களே விவரிக்கப்படுவதால் ஸங்கோசமன்னியில் நிர்தாக்ஷிண்யமாக உள்ளது உள்ளபடியே சொல்லப்பட்டிருப்பதில் சிலர்களுக்கு சில விஷயங்களில அதிருப்தியேற்படக்கூடியதுமுண்டு, எப்படியும் சாஸ்திரங்களில் தீவிரமான விசுவாஸமுள்ளவர்கள் வாஸ்தவத்தைத் தெரிந்து கொள்ள விரும்புவார்களே தவிர தங்களுடைய திருப்தியை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டார்கள்."

ஸ்ரீராமாநந்தஸ்வாமிகள் இக்காலத்திலுமிருந்து கலிபுருஷன் தலைவிரித்து ஆடுவதையும் இந்த தர்மநாட்டில் எங்கும் பிரவேசித்திருக்கும் பலவித துராசாரங்களையும் நேரில் பார்க்க நேரிட்டிருந்தால் வெகுதுக்கப்பட்டு இன்னும் நிர்தாக்ஷிண்யமாய் கண்டித்திருப்பாரென்பதில் ஸந்தேஹமில்லை. எவ்வளவு கண்டித்தபோதிலும் தங்களைத் திருத்திக் கொள்பவர்கள் எப்பொழுதும் சிலரே தானிருப்பார்கள். அவர்களுக்காகவாவது உபயோகப்படட்டும் என்ற நோக்கத்துடன்தான் இப்புஸ்தகம் வெளியிடப்படுகிறது.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்திலும், இங்கிலீஷிலும் எழுதியுள்ள கிரந்தங்களையும் கூடிய சீக்கிரம் அச்சிட்டு வெளியிட இக்கமிட்டியார் பிரயத்தினம் செய்து வருகிறார்கள்.

இப்பதிப்பை தயாரித்துக் கொடுத்த ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகளுக்கும், இதை வெளியிடுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுத்த நண்பர்களுக்கும், அச்சிட்டுக்கொடுத்த ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீ விலாஸ் பிரஸ் அதிகாரிகளுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவராம கணபதி கனபாடிகள், *காரியதரிசி*

P. S. ராமஸ்வாமி அய்யர், *தலைவர்*

ஸ்ரீராமாநந்த சதாப்தி ஞாபகார்த்தக்கமிட்டி.

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்

முகவுரை

விஷய ஸூசிகை — vii

அத்யாயம் 1. ஸாமான்ய ஸமதர்சனம் — 1

1. பொதுவான தர்மம் 2. மனோவிருத்தியின் சக்தி 3 ஜீவகாருண்யம் 4 நடத்தையில் வேறுபாடு 5. நூதன போக்கு 6. யோக்கியதையிலே வேறுபாடு

அத்யாயம் 2. ஜாதி வியவஸ்தை — 19

1. கர்மானுஸாரமாக வேற்றுமை 2. கர்மபூமி இதுவே 3. வியவஸ்தையால் ஸௌகரியம் 4. கலப்பு ஜாதிகள் 5. பிறவியினால் தான் ஜாதி 6. ஆலயப்ரவேசம் 7. ஆலயம் பொதுவல்ல

அத்யாயம் 3. முக்கிய ஸமதர்சனம் — 36

1. அத்வைதானுபவம் 2. ஸாமான்ய தர்மம் 3. பிரஹ்மம்தான் ஸர்வஸமம் 4. தர்மாதர்ம லக்ஷணம் 5. ராஜயோக பலன்

அத்யாயம் 4. பிராஹ்மண்யம் — 46

1. மோக்ஷத்தில் முக்யாதிகாரி 2. மார்க்கங்கள் வேறுபடும் 3. கர்ம—பக்தி—யோகங்கள் 4. மூன்று தோஷங்கள் 5. வேதத்தில் அனதிகாரிகள் 6. பிராஹ்மணனுக்கு ஜ்ஞானம் ஸுலபம் 7. பிராஹ்மணர் கடமை

அத்யாயம் 5. வேத மந்திர அனதிகாரிகள் 63

1. வேத மந்திரம் 2. மந்திரவத்தான ஸம்ஸ்காரம் அவசியம் 3. விவாஹம் உபநயனமாகிவிடாது 4. காலப்போக்கு 5. சூத்திரர்களுக்கு ஸந்நியாஸம் கிடையாது 6. கலியின் மஹிமை

அத்யாயம் 6. புராண வசனங்கள் 80

1. புராணத்தின் மதிப்பு 2. விபரீத ஆசாரம் 3. விபரீத சிரத்தை 4. விபரீத அர்த்தங்கள் 5. சிஷ்டாசாரம் 6. வெகுநாள் பழக்கம் 7. வைதிக தர்மம்

அத்யாயம் 7. ஸ்திரீ-சூத்திர-தர்மம் 95

1. பதிசுசுரூஷை 2. ஸம்பூர்ண பக்தி 3. வேறு தர்மங்கள் 4. சூத்திர தர்மம் 5. சாஸ்திர விரோதமானல் தள்ளத்தகுந்ததே 6. சாஸ்திர டலமிருந்தால் பிரமாணம்

அத்யாயம் 8. பிராஹ்மண்ய ரக்ஷணம் 106

1. ருதுமதீ விவாஹம் 2. ஸமாவேசனம் 3. ஜன்மத்தை உபயோகப்படுத்து 4. "பிரஹ்மஜ்ஞானி பிராஹ்மணன்" என்றால்? 5. குணகர்ம விபாகம் 6. ஸ்வதர்மம் 7. முயற்சி அவசியம்

அத்யாயம் 9. விவாஹ ஸம்ஸ்காரம் 125

1. பார்வை பலவிதம் 2. தார்மிகப் பார்வை 3. மிலேச்சப்பார்வை 4. விவாஹத்தின் உத்தேசம் 5. தர்மாப்பியாஸம் 6. க்ஷேத்திர சுத்தி

அத்யாயம் 10. விவாஹச் சட்டம் (1) 144

1. தர்ம விபரீதம் 2. அதர்மம் செய்ய நிர்பந்தம் 3. தர்ம ஸித்தியைக்கெடுக்கும் 4. அனுமரணம் கட்டாய மில்லை 5. விவாஹ ஸம்பந்தம் சாசுவதம் 6. ஸ்திரீ களுக்கு விவாஹம் அவசியம்

அத்யாயம் 11. விவாஹச் சட்டம் (2) 159

1. லௌகிக நியாயம் 2. கன்யைகளின் கதி 3. கர்ம கதி 4. உறுதி வேண்டும் 5. ஆபத் தர்மம் 6. வீண் ஸமாதானம் 7. தார்மிகர் கடமை

அத்யாயம் 12. தர்ம ரக்ஷணம் 178

1. ஹிந்து மதத்தின் உத்தேசம் 2. அதைர்யம் வேண்டாம் 3. யுக தர்மம் 4. தாய் நாடு 5. விசேஷ தர்மம் 6. விபரீதக் கல்வி 7. ஆஸ்திகர் கடமை

அத்யாயம் 13 ஆசாரம் 195

1. கூட்டத்தின் மதிப்பு 2. விபரீதச் சட்டங்கள் 3. தார்மிகர் கடமை 4. விபரீத வேஷம் 5. வெளிச் சின்னங்கள் 6. வஸ்திரதாரணம் 7. ஸ்வதேசப்பற்று

அத்யாயம் 14. வைதிக மதம் 214

1. விபரீத ஸங்கங்கள் 2. பிரஹ்ம த்வேஷம் 3. ஸம்ஸ்கிருதமும் தமிழும் 4. தேவ பாஷை 5. கலியிலும் தார்மிகர் 6. நம் மதம் அருதி 7. மற்ற மதங்களின் உபயோகம்

அத்யாயம் 15. ஆத்ம தத்வம் 233

1. கர்ம பேதங்கள் 2. ஜ்ஞான ஸாதனம் 3. ஜ்ஞானியின் நிலை 4. ஸ்வப்ந திருஷ்டாந்தம்

5. ஜகத்தின் தோற்றம் 6. ஆகாச திருஷ்டாந்தம் 7. ஜீவஈசுவரபேதம் 8. பந்தம்—மோக்ஷம் ஜீவனுக்கே

அத்யாயம் 16. விபரீத வாதங்கள் 252

1. சிதாபாஸன் 2. சிதாபாஸ மறைவு ஆத்மநாச மல்ல 3. வேத பிராமாண்யம் 4. லக்ஷணை 5. விபரீத கல்பனை 6. ஆஸுரப்பிரகிருதி 7. மனுஸ்மிருதி

அத்யாயம் 17. அவதாரங்கள் 277

1. அத்வைதிகளின் தாரதம்யம் 2. எந்த மதமும் அத்வைதத்திற்கு விரோதமில்லை 3. ஸாமான்ய தர்மம் 4. புத்தரின் நோக்கம் 5. ஞானிகளின் ஆசரணை 6. ஸ்ரீ கிருஷ்ணர்

அத்யாயம் 18. பகவானின் லீலை 300

1. லீலைக்கு நிமித்தம் 2. கோபிகளின் மனோ பாவம் 3. பகவானின் நிலை 4. விஹித கர்மா 5 கர்மத்தியாகம் 6. கர்மாவே அஸ்திவாரம்.

அத்யாயம் 19. ரூப கல்பனை 316

1. நிர்குணோபாஸனம் 2. ரூபத்தின் அவசியம் 3. கல்பனை வஸ்துவை பாதிக்காது 4. ஸர்வ வியாபீ 5. ரூபமில்லாமல் தியானம் கிடையாது 6. மனது ரூபமற்றதை கிரஹிக்காது 7. தத்வம் அறியவும் ரூபம் அவசியம்.

அத்யாயம் 20. விக்கிரஹாராதனம் 334

1. பிரஹ்ம பாவனை 2. பூஜாக்கிரமம் 3. ஆராதனையில் பேதம் 4. அசிரத்தைக்குக் காரணம் 5. ரூபபேதங்கள் 6. ரூபங்கள் வாஸ்தவமே.

அத்யாயம் 21. த்ரிமூர்த்திகள் 349

1. ஸகுண பிரஹ்ம ஆவிர்பாவம் 2. த்ரிமூர்த்திகளும் அவர்கள் சக்திகளும் 3 குணப் பிராதான்யம் 4. ஸம்ஹார கிருத்யம் தமோகுணமல்ல 5. ஸம்ஹாரத்தின் உத்தேசம் 6. மாயை மும்மூர்த்திகளை பாதிக்காது 7. பூத ஸ்ருஷ்டி.

அத்யாயம் 22. ஸகுணோபாஸனம் 371

1 லோகங்களில் தாரதம்யம் 2. ஸத்யலோகப் பிராப்தி 3 வைகுண்டலோகப் பிராப்தி 4. கைலாஸ லோகப் பிராப்தி 5. காரணத்தில் கார்யங்கள் அடங்கினவை 6. த்ரிபுராந்தகர் 7. கிரம முக்தி

அத்யாயம் 23. நித்ய ஸுகம் 392

1. விஷய ஸுகம் 2 வைதிக மதத்தின் மேன்மை 3 த்ருக்—த்ருச்ய விபாகம் 4. ஆத்மாநந்தம் 5. ஸ்வரூப மறைவு 6. நம்பிக்கை வேண்டும் 7. வழி தெரிந்து அப்யஸிக்க வேண்டும்.

அத்யாயம் 24. பர பக்தி 411

1. உண்மையான லோகோபகாரம் 2. விஷயத் தியாகம் 3. பூர்ணத்தியாகம் 4. பக்தி இருவிதம் 5. பக்தி யோகம் 6. எல்லா ஆசைகளையும் விடவேண்டும் 7. சரணாகதி

அத்யாயம் 25. பிரஹ்மாநந்தம் 430

1. பரம்பராஸாதனங்கள் 2. கர்ம-பக்தி-ஜ்ஞான யோகங்கள் 3. பிரஹ்ம வித்துக்கள் 4. ஸ்வரூப

ஸ்பூர்த்தி 5. ஸத்-சித்-ஆனந்தம் 6. ஆனந்தஸாகரம் 7. அனுஸந்தானக் கிரமம்.

அத்யாயம் 26. நிவிருத்தி மார்க்கம் 448

1. வர்ணாசிரம தர்மம் அவசியம் 2. ஸாதன சதுஷ்டயம் 3. நிவிருத்தி தர்மங்கள் 4. ஸாதன ஸன்னியாஸம் 5. ஸன்னியாஸி பேதங்கள் 6. வேறு சில வகுப்புகள் 7. வீரமார்க்கம்

அத்யாயம் 27. ஸன்னியாஸி தர்மங்கள் 471

1. குடீசகர் 2. பஹூதகர் 3. ஹம்ஸர் 4. அமுக்கிய பரமஹம்ஸர் 5. முக்கிய பரமஹம்ஸர் 6. துரீயாதீதர் 7. அவதூதர் 8. அதிவர்ணாசிரமி.

அனுபந்தம் 1. ஸ்வாகத பாஷணம் (திருநெல்வேலி 1920) 491

அனுபந்தம் 2. அத்யக்ஷ பாஷணம் (தஞ்சாவூர் 1921) 499

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	28	அருடைய	அவருடைய
60	20	பிருஹ்மண	பிராஹ்மண
95	22	நிஷபல	நிஷ்பல
102	15	ருப	ரூப
104	8	களன்பதில்	கஎன்பதில்
113	27	அர்த்தங்	அர்த்தஞ்
117	15	குறிய்பிடு	குறிப்பிடு
118	26	கேட்க்க	கேட்க
120	9	பட்டிருப்யதினுல்	பட்டிருப்பதினுல்
,,	17	செல்லி	சொல்லி
124	6	போய்வரும்	போய்விடும்
128	11	நிற்க்க	நிற்க
130	26	வித்தியாஸய்படும்	வித்தியாஸப்படும்
138	30	நித்திய	நிந்திய
140	8	விததியை	வித்யை
141	15	நிச்சயம்	நிச்சயம்.
150	12	விபரீத்	விபரீத
169	26	ஏற்ப்பட்டு	ஏற்பட்டு
202	10	விசேக்ஷ	விசேஷ
,,	18	யிருக்கூடியது	யிருக்கக்கூடியது
205	27	கேட்க்க	கேட்க
218	21	வர்க	வர்க்க
245	11	சொய்து	செய்து
268	13	பிரதிநிதி	பிரகிருதி
309	15	ஏற்ப்பட்டிருக்கும்	ஏற்பட்டிருக்கும்
310	25	ஏற்ப்பட்டிருக்கின்ற	ஏற்பட்டிருக்கின்ற

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
313	24	உத்தியோகஸ்த்தர்	உத்தியோகஸ்தர்
315	3	ஸித்தம்	ஸித்தம்.
320	29	ஏற்ப்படுத்த	ஏற்படுத்த
321	3	சித்தம்	ஸித்தம்.
332	26	ஏற்ப்பட்டால்	ஏற்பட்டால்
352	3	முவ்வகை	மூவகை
355	17	மூன்	முன்
368	21	ராஸஜ	ராஜஸ
384	14	முவ்வகை	மூவகை
387	19	கூடும்	கூடும்.
389	7	ஞபிப்யாஸம்	ஞப்பியாஸம்
394	18	வாஸ்த்வ	வாஸ்தவ
396	18	பிஹ்ம	பிரஹ்ம
447	8	வருகின்றேன்	வருகின்றேன்
458	20	ஸாவாரம்ப	ஸர்வாரம்ப
462	18	அவதூதா	அவதூதர்
487	20	கிருஹத்தின்	விருக்ஷத்தின்



தேவர்மலையில் ஸ்ரீ ராமானந்தர்

॥ श्रीसद्गुरुचरणारविन्दाभ्यां नमः ॥

தர்ம விமர்சனம்

அத்யாயம் I.

ஸாமான்ய ஸமதர்சனம்

1. பொதுவான தர்மம்

ஜீவனுக்கு உண்மையான நன்மையென்று எதெல்லாம் சொல்லப்படுமோ அதெல்லாவற்றிற்கும் பொதுவாயுள்ள ஸாதனங்களுக்குள் ஸமதர்சனம் முக்கிய ஸாதனம். இதுவே இவ்வுலகத்தில் நல்வாழ்க்கையையும், பரலோகத்தில் நற்கதியை யும், முடிவில் அனந்தமான மோக்ஷானந்தத்தையும் கொடுக்கக் கூடியது. அதாவது, நான்குவிதப் புருஷார்த்தங்களுக்குள் முக்கியப் புருஷார்த்தமாகிய மோக்ஷத்திற்கே இந்த ஸமதர் சனம், இதன் முக்கியார்த்தத்தில், நேர் ஸாதனமாயிருப்பது மல்லாமல், மோக்ஷத்திற்குப் பிரதான ஸாதனரூப – புருஷார்த்த மாகிய தர்மம் என்பதற்குள்ளாக எவையெல்லாம் அடங்கியவை களோ அவைகளையும் இதனாலேயே, இதன் கௌணார்த்தத்தில், பெரும்பாலும் ஸாதித்துக்கொள்ளலாம். ஆனால், இப்படி தர்ம – மோக்ஷங்களை ஸாதித்துக்கொள்ளக் கூடுமென்று மனதில் உறுதியுண்டாக வேண்டுமானால், கௌண– முக்கியார்த்தங்களில் ஸமதர்சனமென்பதின் லக்ஷணங்கள் பூராவையும் சரியானபடி தெரிந்துகொள்ளவேண்டியதவசியம். முயற்சியைச் செய்து தெரிந்துகொள்வதற்கே கொஞ்சம் நம்பிக்கையும் அதினால் ஸ்வல்ப உறுதியும் மனதில் ஆரம்பத்தி லேயே இருக்கவேண்டியதாகையால், இவைகளை முன்னிட்டுத் தெரிந்துகொள்ள யத்தினஞ் செய்பவருக்கு சீக்கிரத்தில் அவ்

வுறுதியும் நம்பிக்கையும் பலப்பட்டுக் காலக்கிரமத்தில் நேர் ஜ்ஞானத்திலேயே முடிவடையக்கூடும்.

ஸமதர்சனம் என்ற பதத்திற்கு "ஸமமாகப் பார்ப்பது" என்று அர்த்தம். இதில் "ஸமமாக" என்பதற்கும் "பார்ப்பது" என்பதற்கும் முக்கிய – பக்ஷத்தில் என்ன விசேஷ அர்த்தங்களென்ற விபரம் பின்னால் சொல்லப்படும். ஸாமான்யமாய் 'ஸமமாகப் பார்ப்பது' என்றால் வித்தியாஸமன்னியில், அதாவது, பக்ஷபாதமின்றி ஒரேவிதமாய் பார்வையைச் செலுத்துவது (எண்ணுவது) என்று அர்த்தம். இப்படிப் பார்ப்பதே தர்மமாகும். இப்பார்வையினால் தூண்டப்பட்ட செய்கைகளே தர்மச் செய்கைகளாகும். இப் பார்வைக்கு எதிரிடையான செய்கைகள் அதர்மங்களே. ஒருவருக்குத் தன்னிடத்தில் எவ்வளவு அபிமானமும், தனக்கு ஹிதமான காரியங்களில் எவ்வளவு ஊக்கமும் இருக்கின்றனவோ அவ்வளவு அபிமானத்தையும் ஊக்கத்தையும் தன் சக்திக்குத் தக்கவாறு மற்றவர்களின் விஷயத்திலும் காட்டுவது மனிதனுடைய மேலான தர்மம். ஒரே மாதிரியாகத் தன்னைப்போலவே மற்ற எல்லோரையும் பாவிக்க வேண்டுமென்று சொல்வதினாலேயே மற்ற ஜீவர்களில் ஒருவருக்கொருவர் (பரஸ்பரம்) வித்தியாஸமிருப்பதான பார்வையே கூடாதென்றும் சொன்னதாயிற்று. இவ்விஷயம் பின்னால் விவரிக்கப்படும். உலகத்தில் யாருக்கு சுகம் நேர்ந்தாலும் தனக்கு நேர்ந்ததாகவே ஸந்தோஷப்படவேண்டும். இதுபோல், யாருக்கு துக்கம் நேர்ந்தாலும் தனக்கே நேர்ந்ததாக பாவித்துக் கொண்டு, அந்த துக்கத்தை விலக்குவதற்குத் தன்னால் கூடுமானால் அதை உடனே விலக்கிவிட முயலவும் வேண்டும். இப்படியே தன்னுடைய முயற்சியினால் மற்றவர்களுக்கு சுகத்தையுண்டாக்கிவைக்க முடியுமானால் அம்முயற்சியைச் செய்வதும் பெரும் தர்மமாகும். எப்படித் தன்னிடத்தில் தனக்கு துவேஷபுத்தியில்லையோ, தனக்குக் கெடுதலைத்தான்

தேடுகிறதில்லையோ, அப்படியே மற்ற யாவரிடத்திலும் தனக்கு துவேஷமிருக்கலாகாது; யாருக்கும் கெடுதலைச் செய்ய வாவது நினைக்கவாவது கூடாது. தனக்கும் மற்றவர்களுக்கும், மற்றவர்களுக்குள் ஒருவருக்கொருவர் – விஷயததிலும், வித்தியாஸம் பாராட்டாமல் எல்லோருக்கும் ஹிதமான மார்க்கத்திலேயே நடந்து வருவதே தார்மிகனுடைய ஓர் லக்ஷணம்.

2. மனோவிருத்தியின் சக்தி

உலகத்தில் மனிதர்களுக்குள் பரஸ்பர – ஸம்பந்தமாயுள்ள நற்குண – நற்செய்கைகளடங்கிய ஸாமான்ய – தர்மங்கள் யாவும் ஸமதர்சனத்தைப் பொறுத்து நிற்கின்றன. தன்னுடைய எண்ணங்களினாலும் செய்கைகளினாலும் மற்றவர்களுக்கு உண்டாகக்கூடிய ஸாதக – பாதகங்களை கவனித்தும், மற்றவர்களுக்கு ஹிதமான வழியிலேயே தான் நடக்க வேண்டுமென்ற நோக்கங்கொண்டும் இருப்பவரால் துர்ச்செய்கை செய்யப்படவே மாட்டாது. மற்றவர்களுக்குக்கெடுதல் நேரிடக் கூடாதவிதமாய் துர்ச்செய்கைகளைச் செய்யலாமோவென்று கேட்டால், அப்படிக் கெடுதல் நேரிடக்கூடாத துர்ச்செய்கைகளே கிடையாதென்றும், எவ்வித துர்ச்செய்கைகளையும் செய்யவே கூடாதென்றுமே உறுதியாய்ச் சொல்லவேண்டும். இவ்வுலகத்தில் யார் எதைச் செய்தாலும் அது நல்லதாயிருந்தாலும் கெடுதலாயிருந்தாலும் மற்றவர்களுக்கு ஸம்பந்தப்படாமல் போகவேமாட்டாது. துர்ச்செய்கையைச் செய்கிறவரின் மனதில் மற்றவர்களை பாதிக்கக்கூடாதென்ற எண்ணமிருந்தபோதிலும், அது பாதிக்காமலிருக்க முடியாது. பிரபஞ்சம் பூராவையும் ஒரு மானஸ – தடாகம்போல் எண்ண வேண்டும். எப்படித் தடாகத்தில் ஒரு பக்கத்தில் ஜலத்தில் அடித்தால் அங்கு உண்டாகிற அலைகள் மற்ற பக்கங்களில் கூட தடாகம் பூராவும் பரவுமோ, அப்படியே பிரபஞ்சத்தில் மனோவிருத்திகளும் மற்றவர்களின் மனதுகளிலும் பிரவே

சித்துக் கலக்கக்கூடும் அசுத்த எண்ணங்களுடனும் செய்கைகளுடனும் கூடிய மனிதனால் மற்ற ஸாமான்ய ஜனங்களின் ஏற்கனவே சுத்தப்படாமலிருக்கிற மனதுகளை இன்னும் அதிகமாய்க் கெடுத்துவிடக்கூடும். எப்படி ஜலத்தைவிட நுட்பமோ காற்று, காற்றைவிட நுட்பமோ மின்சாரம், அப்படியே ஸகல ஸ்தூல பூதங்களையும்விட அதிக நுட்பமாயுள்ளது மனஸ் தத்வம். தூரத்தில் சுருட்டுக் குடித்துக்கொண்டு போகிற மனிதனுடைய சுவாஸப்பையிலிருந்து வெளிக்கிளம்பிய அசுத்தமான புகையினால் காற்று ஸம்பந்தத்தின்பேரில் மற்றொருவன் பாதிக்கப்படுவான். இப்படி நாற்றத்தினால் அறியக்கூடாத விதமாக ஒவ்வொரு க்ஷணத்திலும் ஜனங்களின் மூச்சுக் காற்றினாலும் சரீர-ஆவியினாலும் ஒவ்வொருவரும் மற்றவர்களை பாதித்துக்கொண்டேயிருக்கிறார். வெகு தூரத்திலிருக்கிற குடிகாரனிடமிருந்துண்டாகிய கெட்ட மின்சார - சக்தியினால் மற்றொரு குடிகாரன் இழுக்கப்பட்டு இவன் இன்னும் தாழ்ந்த ஸ்திதியை அடையக்கூடும். ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலும், தந்தி முதலான கண்ணுக்குத் தெரியக்கூடியவைகளின் ஸம்பந்தமில்லாமலே, நுட்பமான பூதத்தின் சக்தி அனுபவிக்கப்படக் கூடுமென்பது இக்காலத்திய பௌதிக சாஸ்திரத்தினால் வெளியிடப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இவ்வித ஸகல பூதங்களைக்காட்டிலும் அதிக நுட்பமான மனோசக்தியை விபரீத மார்க்கத்தில் உபயோகப்படுத்தி ரகஸியமாய்க் கெட்ட செய்கையைச் செய்து வருகிற பாபியும் தன் துர்நடத்தையினால் கண்ணுக்கெட்டாத வெகுதூரத்திலிருப்பவர்களும் தன் துன்மார்க்கவழியில் பிரவிருத்திக்கக் கூடியவர்களுமான மற்றவர்களையும் அதிகமாகக் கெடுத்துவிடக்கூடும். இதுபோலவே, நல்வழிகளில் மனோசக்தியை உபயோகப்படுத்தக்கூடியவர்கள், தாங்களும் நற்கதியை அடைந்துவருவதுடன், தங்களுடைய நல்ல எண்ணங்களினாலும் நடத்தைகளினாலும், நல்வழிகளிலுள்ள

மற்றவர்களுக்கு உபகாரிகளாகவும் ஏற்படுவார்கள். ஜலம், காற்று, மின்சாரம் முதலான ஸ்தூல பூதங்களின் சக்தியும் வேகமும், அவைகளின் ஸ்தூலத்தன்மைக்குத் தக்கபடி, தூரப்போகப் போகக் குறைந்துவிடக்கூடியவை. ஸ்தூலத் தன்மையே யில்லாததும் அதிநுட்பமானதுமான மனோசக்தி அப்படியல்ல. இப்பிரபஞ்சத்தில் எங்கிருந்தபோதிலும் ஒருவரால் மற்றொருவர் நன்மார்க்கத்திலாவது துன்மார்க்கத்தி லாவது மனோவிருத்திகளினால் பலமாக இழுக்கப்படக்கூடும். இது பெரும்பாலும் ஜனங்களுக்குத் தெரியாமலே இயற்கை யாகப் பிரபஞ்சத்தில் எப்போதும் நடந்துகொண்டிருக்கிறது.

இங்கு ஓர் சங்கைக்கிடமுண்டு. இந்திரியங்களுடன் கூடிய மனதினால் கட்டுப்பட்டிருக்கிற மனிதனுக்குத் தன் னுடைய சுகமே பெரியதாகத் தோன்றுமே யொழிய தன்னுடைய சுகத்தினால் மற்றவர்களுக்குக் கெடுதல் நேர்ந் தாலும் நல்லது உண்டானாலும் தான் ஏன் கவனிக்கவேண்டு மென்று அநேகர் சங்கிக்கக்கூடும். அதாவது, இவ்வுலகத்தில் எல்லோரும் தனக்கு ஸமானந்தான் என்பது வாஸ்தவமானாலும், தான் வேறு மற்றவர்கள் வேறு என்பதும் வாஸ்தவமாயிருப் பதால், மற்றவர்களின் நன்மை – கெடுதல்களை உத்தேசித்துத் தன்னுடைய சுகங்களை ஏன் குறைத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்கலாம். தான் சுகமென்று அனுபவிப்பதில் தனக்குக் கெடுதல் இல்லையென்றும் தன்னால் மற்றவர்கள் கெடுதலை அடைவதினால் தனக்கு பாதை கிடையாதென்றும் எண்ணுவதே இச்சங்கைக்கும் கேள்விக்கும் காரணம். உண்மை யிலோ, விஷயசுகம் ஒவ்வொன்றும் தனக்கே துக்கத்திலும், மற்றவர்களுக்குத் தன்னால் ஏற்படுகிற கெடுதல்கள் தனக்கே கேடுகளிலும், கடைசியில் முடிவாகின்றன. இவ்விஷயம் பெரும்பாலும் மத – நூல்களிலும் தத்துவ – சாஸ்திரத்திலும் விசேஷமாய் வெளியிடப்பட்டிருக்கிறபடியாலும், இங்கு விஸ்தரித்துச் சொல்வதானால் அதிகமாய் விரியுமாதலாலும்,

தெரிந்துகொள்ள வேண்டிய முடிவான விபரம் மாத்திரம் இவ்விடத்தில் கூறப்பட்டது. தத்துவங்களை நன்குய் விசாரித்துத் தெரிந்துகொண்டவருக்கு மத-நிபந்தனைகளின் கருத்துகள் தெளிவாய் விளங்கும். ஆரம்பத்தில் தத்துவங்களைத் தெரிந்து கொள்ள முடியாதவர் சிரத்தையுடனும், பக்தியுடனும் மத-நிபந்தனைகளை அனுஸரித்தே நடந்துவந்தால் காளடைவில் அந்த நிபந்தனைகளின் உத்தேசங்களும் நியாயத் தன்மையும் தானுகவே வெளியாகும். மேற்கண்டபடி எல்லோரையும் தனக்கு ஸமானமாக பாவித்தும், தன்னுடைய துர்-எண்ணங்களினுலும் துர்ச்செய்கைகளினுலும் தானும் கெட்டு மற்றவர்களையும் கெடுக்காமலும், தன்னுடைய நல்ல எண்ணங்களினுலும் நற்செய்கைகளினுலும் தானும் நற்கதி அடைந்தும் மற்றவர்களையும் நற்கதியில் சேர்ப்பிவித்தும் வருவதே புத்தியுள்ள மனிதன் செய்யவேண்டிய காரியம்.

3. ஜீவகாருண்யம்

தனக்கு ஸமானமாகவே எல்லோரையும் பார்க்கவேண்டுமென்று சொன்னது மற்ற மனிதர்களின் விஷயத்தில் மாத்திரமல்ல; எல்லா ஜீவராசிகளின் விஷயத்திலுமென்றே அதற்கு அர்த்தம். தன்னுல் நேரிலாவது மற்றவர்களின் மூலமாயாவது வேறு எவ்வகைப் பிராணிகளுக்கும் ஹிம்ஸை நேரிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது முக்கிய தர்மம். ஸமதர்சனத்திறுல் பிராணிகள் யாவற்றையும் தன்னைப்போல் எண்ணி அவைகளிடம் அன்பையும் கருணையையும் பாராட்டி வரவேண்டிய மனிதன் பிராணிகளைக்கொன்று மாம்ஸத்தைத் தின்றுவந்தால், இந்தப் பாபத்திற்குமேல் கடோரமான பாபம் வேறென்றுமில்லையென்பதே நிச்சயம். தன்னுடைய சுகத்தின்பொருட்டு மற்றவருக்குத் தீங்கைச் செய்தால், அது தனக்கே தீங்காக முடியுமென்று முன் சொன்னதற்கு மாம்ஸத்தைத் தின்போர்களே உதாஹரணமாவார்கள். கர்ம-

விதிப்படி, மாம்ஸத்தைச் சாப்பிடுகின்ற மனிதன் எதன் மாம்ஸத்தைத் தின்கின்ருனே அந்தப்பிராணியாகவே பின் ஜன்மத்தில் பிறந்து மற்ருெருவனுல் கொல்லப்பட்டுத் தின்னப் படுகின்ருன். உலகத்தில் தின்னப்படுகின்ற பிராணிகள் அதிகரித்து வருவதற்குக் காரணமே மாம்ஸத்தைத் தின்று வருகின்ற மனிதர்கள் ஜாஸ்தியாவதைத்தவிர வேறல்ல. அன்றியும், மாம்ஸத்தைத் தின்பதற்காகவும் வேறு விதங் களாகவும் கொடிய ஹிம்ஸைகளைச் செய்துவந்த மனிதர் களுடைய கொடும் பாபங்களின் பலனுகவே அவர்களுக்கு உலகத்தில் பலவிதக் கீழ்ப்பிராணி – ஜன்மங்களேற்பட்டு ஒன்றை மற்ருென்று அடித்துக்கொன்று வருகின்ற உக்கிரச் செய்கைகள் எங்கும் ஏராளமாய்க் காணப்படுகின்றன. கீழ்ப் பிராணிகளிடம் காணப்படுகின்ற துக்கங்கள் யாவும் முன் மனித – ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபங்களின் பலன்களே. இப்படி ஜாஸ்தியாகப் பிராணிகள் கஷ்டங்களை அனுபவிப் பதையும் இவ்வுலகத்தில் பிரதிதினமும் நடப்பு ஜன்மத்திலும் மனிதனுடைய பாழும் வயிற்றை நிரப்புவதற்காக மிருகங்கள், பக்ஷிகள், மீன்கள் முதலான பிராணிகள் ஏராளமாய் அடி பட்டு வருகிறதையும் கணக்கிட்டுப்பார்த்தால் இப்பூலோகத் தையே பெரும் கசாப்புக்கடையென்றும் நரகக்குழியென்றுமே நினைக்கவேண்டியதாகும். இதை ராக்ஷஸ – லோகமென்றும் சொல்லலாம். மாம்ஸம் தின்பதை மனிதன் நிறுத்திப் பிராணி களிடம் அன்பைச் செலுத்த ஆரம்பித்தால், தனக்காகவும் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டும் அவன் கொன்று வரக்கூடிய பிராணிகளின் ஸகிக்கக்கூடாத கஷ்டங்கள் நிவிருத்தியாவதுந் தவிர வேறு விதமாய் மனிதனுல் பிராணி களுக்குப் பல விதங்களில் ஏற்படுகிற கஷ்டங்களும் குறைவடைந்துவரும்.

தவிரவும், இப்போது மனிதன் ஸகலப் பிராணிகளுக்கும் சத்துரு – ஸ்தானத்திலிருப்பதிலிருந்து விடுபட்டு ஸர்வமித்திர

ஞகவே ஆகிவிடுவான். ஆனால், உலகத்தில் எங்கும் மாம்ஸம் சாப்பிடுவதை நிறுத்தும்படி செய்வது மிகவும் அஸாத்திய மான காரியந்தான். ஆகிலும், இப்பாரதகண்டத்தில் கர்ம — கதியில் நம்பிக்கையுள்ள ஹிந்துக்களுக்குள் நிறுத்தும்படி செய்வது முடியாத காரியமென்று நினைக்கவேண்டாம். சரியானப் பிரயத்தினந்தான் வேண்டியது. ஹிந்து — மதத்தி லிருந்தே வேறுபட்டுண்டாயிருக்கிற ஜைன — மதத்திலிருப் பவர்கள் எல்லோரும், பௌத்த — மதத்திலிருப்பவர்களில் அனேகரும் இவ்விதப் பிரயத்தினத்திற்கு அனுகூலமாகவே இருந்து ஒத்து வேலையுஞ் செய்யக்கூடும். கர்ம — கதி விபரங் களையே அறியாமலும், உலகத்தில் மனிதனுடைய போகத்திற் காகவே மற்றப் பிராணிகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன வென்று தப்பாக எண்ணிக்கொண்டுமிருக்கிற மஹமதியர்கள் கிருஸ்துவர்கள் முதலானவர்களுக்குள்ளும் சிலராவது ஒத்து வரக்கூடும். சிரமத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் இத் தேசத்தில் ஹிந்துக்களுக்குள் எங்கும் மனிதன் மாம்ஸம் தின்பதை நிறுத்திவிடும்படியான மஹா உத்தேசங்கொண்டு, கூர்மையான புத்தியும், சரீர—சக்தியும், மனோதைரியமுமுள்ள பல ஸாதுக்கள் நாடு நாடாகப்போய்த் தகுந்த முயற்சிகளைச் செய்துவந்தால் இந்த சிரமமான காரியமும் காலக்கிரமத்தில் ஸாத்தியப்பட்டுவிடும். இதுவே மஹத்தான ஈசுவர — கைங்கரியமாகும்.

மாம்ஸத்தைத் தின்றுகொண்டு கடவுளிடம் பக்தியைச் செலுத்துவதாயும் மதானுஷ்டானங்களைச் செய்வதாயும் சொல்பவர்களைவிட ஸர்வப்பிராணிகளிடமும் அன்பு பாராட்டிக் கருணையுடனிருப்போர், ஈசுவரபக்தியில்லாதவரானாலும், ஒரு விதத்தில் மேலோரென்றே தெரிந்துகொள்ளவேண்டும். குழந்தைகளை அடித்துக்கொன்றுகொண்டே அக்குழந்தைகளின் பிதாவிடத்தில் பக்தியைச் செலுத்துகிறவன் பேரில் அப் பிதாவுக்கு எக்காலத்திலும் திருப்தியாவது பிரீதியாவது

உண்டாகாது. ஜீவகாருண்யமிருப்பவர்பேரில்தான் ஸகல ஜகத்பிதாவாகிய ஈசுவரருக்குப் பூர்ணமான நல்ல எண்ண மிருக்கும். அந்த ஈசுவரரின் பேரிலேயே பொறுப்பைவைத்து மேற்கண்ட நன்முயற்சிகளைச் செய்துவந்தால் அவைகள் வீண் போகமாட்டா. சிரமமான காரியமேயென்று மலைக்கவேண்டாம். எல்லோரும் மாம்ஸம் தின்பதை நிறுத்திவிட்டால், எல்லாருக்கும், போதுமான தானியம் முதலியன கிடைக்கக்கூடுமா வென்று விசாரப்படவும் வேண்டாம். பிராணி–ஹிம்ஸையை நிறுத்துகிற பெரும் தர்மச்செய்கையினுலேயே தேசமெங்கும் செழித்து ஏராளமான தான்யம் முதலியன விளைந்து பரிமளிக்கும். இது ஈசுவரருடைய பொறுப்பேயொழிய மனிதன் விசாரப்படவேண்டிய விஷயமல்லவென்று உறுதியாய் நினைத்துக்கொள்ளலாம். உபயோகமற்ற வியவஹாரங்களில் புத்தியைச் செலுத்தி வீண்படுத்துவதைவிட ஜீவகாருண்ய விஷயமான முயற்சியில் உபயோகப்படுத்துவது பெரும் ஸர்வோத்தம தர்ம காரியமாகும். இம்முயற்சி ஸகல மதப் பிரவர்த்தகமான முயற்சிகளையும் விட மேலானது. இம் முயற்சிக்கு வேறெவ்வித தர்ம முயற்சிகளும் பொது நன்மைக் காரியங்களும் ஈடாகக்கூடியனவலல. இம்முயற்சியை பலமாய் நெடுநாள் செய்துவந்தும் ஹிந்துக்களிலும் சிலர் மாத்ரம் பிராணி ஹிம்சையைச் செய்வதிலிருந்து திரும்பி ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டும், மற்றும் அனேகர் அப்படித் திரும்பாமலுமிருந்துவந்தாலும், எம்மட்டில் ஜீவஹிம்சை நாட்டில் குறைவடையுமோ அம்மட்டில் ஜனங்களுக்கு க்ஷேமந் தானென்பதில் தடையில்லை. ஆகையால், இம்முயற்சியின் பலனுக இருக்கக்கூடியது எதுவானுலும் அதை ஈசுவரருக்கே ஒப்புவித்துவிட்டு விடாமுயற்சியாகச் செய்து வருவதே உத்தமம். இம்முயற்சியில் நோக்கமுள்ள ஸாதுக்கள் அவசியமான முன் ஆராய்ச்சிகள் பூராவையும் நன்றுகச்செய்ய வேண்டியதும், பின்னுல் இம்முயற்சியில் ஏற்படக்கூடிய எதிர்

வாதங்கள் பூராவையும் கண்டித்து நிராகரித்துவிடுவதற்குள்ள ஸாதனஹேது விஷயங்கள் யாவற்றையும் சேகரித்துவைத்துக் கொள்ளவேண்டியதும் மிக்க அவசியம்.

4. நடத்தையில் வேறுபாடு

தனக்கு ஸமமாகவே மற்ற யாவரையும் பாவித்து நடந்து வரவேண்டுமென்று சொல்வதினுல் தன் சுகங்களில் தனக்குப் பிரியமும், துக்கங்களில் வெறுப்பும் இருப்பதுபோல் மற்றவர்களுக்கும் அவரவர்களின் சுக துக்கங்களில் பிரிய வெறுப்புக்களிருக்குமென்பதை யறிந்து அதற்கு அனுகுணமாக நடந்துவர வேண்டுமென்பதுமல்லாமல், தன் பூர்வ வாஸனு—கர்மங்களினுல் தனக்குச் சில விஷயங்களில் விசேஷப் பிரிய—வெறுப்புகளும், இப்படியே விசேஷ சுக—துக்கங்களும், இருப்பதுபோலவே மற்றவர்களுக்கும் தனித்தனியாகவே விசேஷப் பிரிய—வெறுப்புகளும் கஷ்ட—சுகங்களுமிருக்குமென்று எண்ணி, அதற்குத் தகுந்தபடி நடந்துவர வேண்டுமென்பதும் தாத்பரியமாகும். வெயில் காலத்தில் விசிரியினுல் தன் சுகத்தின் பொருட்டு ஏற்படக்கூடிய குளிர்ந்த காற்று அதே காலத்தில் ஜ்வரக்குளிர் நடுக்கத்தினுல் கஷ்டப்படுகிறவனுக்கும் சுகமாயிருக்குமென்று நினைத்து அவன் விஷயத்தில் விசிரியை உபயோகப்படுத்தக் கூடாது. இதுபோல் தனக்குப் பசியில்லாத காலத்தில் பசியுடன் கூடிய மற்ருெருவன் வந்து அன்னத்தை யாசித்தால் அவனுக்கும் தன்னைப்போல் வாஸ்தவத்தில் பசியிராதென்று நினைத்துவிடக்கூடாது. தன்னைப்போலவே மற்றவர்களையும் பாவிக்கவேண்டுமென்று சொல்லியதை அவரவர்களின் தனித்தனியான வேறுபடக்கூடிய ஸ்திதிகளுக்கு விரோதமன்னியில் தனக்கு ஸமமாக எண்ணவேண்டும் என்றுதான் அர்த்தப்படுத்தவேண்டும். தனக்குக் கமலாரஞ்சுப்பழத்தில் பிரியமிருந்தால், தன் முன்பாகப் பசியுடன் வந்து நிற்கிற நாய்க்கும் அது பிரியமாமிருக்குமென்று எண்ணி அப்பழத்தை அதற்குப் போட்டால் அது தின்னமாட்டாது. அது தின்னக்கூடியதைக்

கொடுத்தால்தான் அதன் பசி நீங்கும். தனக்குப் புல் ருசியுள்ளதில்லையானாலும், அதில் பசுவுக்கு ருசியிருக்கிற விபரத்தைத் தெரிந்துகொண்டு அதை வாங்கிப் பசுவுக்குப்போடுவது உபகாரக்காரியமாகும். இப்படிப்போலவே, மனிதர்களுக்குள்ளும் அவரவர்களின் ஸ்தானத்திற்குத் தக்கபடி அவரவர்களுக்குச் செய்யவேண்டிய உபகாரக்காரியங்களும் வேறுபடக்கூடியவை. பகவத்கீதையை வாசிப்பதில் தனக்கு சுகமேற்படுவதாகத் தெரிந்தால், அப்படியே சண்டாளாதி-பஞ்சம-ஜாதிக்குழந்தைகளுக்கும் சுகமேற்படுமென்று எண்ணி கீதா புஸ்தகங்களை வாங்கி அக்குழந்தைகளிடம் கொடுப்பவரை பிராந்தியுள்ளவரென்றே நினைக்கவேண்டும், இப்படிப்பட்டவர் தான் மேலான சட்டப்புஸ்தகங்களை படித்துப் பெரும் உத்தியோகத்தை ஸம்பாதித்து சுகமாயிருப்பதையெண்ணி அந்த சட்டப்புஸ்தகங்களையே வாங்கி அக்குழந்தைகளிடம கொடுக்கிறதில்லை. அச் சட்டப்புஸ்தகங்களின் அருமையையும் அப்புஸ்தகங்களை வாசிக்கக் கூடியவர்களுக்கு இருக்கவேண்டிய முன் யோக்கியதையையும் அவர் தெரிந்துகொண்டிருப்பதே அப்படிக் கொடுக்காமலிருப்பதற்குக் காரணமாகும். கீதா-புஸ்தகத்தின் அருமையையும் அதைப் படிக்கவேண்டியவருக்கு இருக்க வேண்டிய யோக்கியதையையும் அவர் அறிந்துகொள்ளாததே முன் சொல்லியபடி கொடுப்பதற்குக் காரணமென்றே சொல்ல வேண்டும். ஆகையால், மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலும் அவர்களின் தனித்தனியான நிலைமைகளை கவனிக்க வேண்டியதும் முக்கியம். அதாவது, மற்றவர்களுடைய சுக-துக்கங்களையும் தன்னுடைய சுக-துக்கங்களைப்போலவே பாவிக்கவேண்டியதுடன், மற்றவர்களுக்கு அனுகூலமான விசேஷ ஸாதனங்கள் எவையென்று தெரிந்துகொள்ள வேண்டியதும் அவசியம்.

அன்றியும், எப்படிப் பின்னால் நமக்கு அதிகமான சுகம் அல்லது துக்க-நிவிருத்தியேற்படும் பொருட்டு இப்போது

கொஞ்சம் கஷ்டம் நேர்ந்தாலும் பொறுத்துக்கொண்டு முயற்சி செய்து வருகிறோமோ, அப்படியே ஒருவருக்குக் கொஞ்சம் கஷ்டமேற்படுவதினால் மற்றவர்களுக்கு ஏராளமான சுகமாவது துக்க — நிவிருத்தியாவது ஏற்படக்கூடியதானால் அக்கஷ்டத்தைப் பொறுமையுடன் அனுபவித்துக்கொண்டு மற்றவர்களின் அனுகூலத்தின் பொருட்டு முயலவேண்டியதும் அவருடைய கடமையாகும். பொதுஜன — நன்மையிலேயே உறுதியான ஊக்கமுள்ளவருக்குத் தனக்குக் கஷ்டமாவது நஷ்டமாவது ஏற்படுகிற விஷயமே மனதில் படமாட்டாது. இவ்விதமாகவே முன் சொல்லியபடி, பிராணிகளுக்கு மனிதனால் ஹிம்ஸை ஏற்படாமலிருக்கும் பொருட்டு அதிகமாய் முயலுவதில் பல அஸௌகரியங்களும் கஷ்டங்களும் முயலுபவர்களுக்கு உண்டாகக் கூடியதானாலும் அவைகளை ஒரு பொருட்டாக எண்ணாமலே முயற்சியைக் கைவிடாமல் முடிவுவரையில் கொண்டு செலுத்துவதே மேலான பெரும் தர்மக்கொள்கையைக் குறிப்பிடும். மற்றவர்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் தன் முயற்சிகளாலுண்டாகக் கூடிய நன்மைகளிலேயே புத்தி சென்று கொண்டிருந்து அல்பமான தன் சொந்த விஷய ஞாபகமே தலையெடுக்கக் கூடாமலிருப்பதே பெருந்தன்மையின் லக்ஷணம். இப்படித் தன்னை மறந்து மற்றவர்களின் நன்மைக்காக உழைப்பவரே பிறருடன் நன்றாக ஸமான பாவத்தை அடைந்தவராவர். இவர் பிறரைத் தானாகவே எண்ணி விடுகிறபடியால், தான் ஒருவர் தனியாக இருப்பதான எண்ணமே மறைந்துவிடும். ஸாமான்ய அர்த்தத்தில் ஒரு விதத்தில் ஸமதர்சனம் இவர் — விஷயத்தில் பூர்ணமாக ஸித்தித்துவிட்டதாகவே சொல்லலாம்.

இதுவரையில் 'மற்ற ஜீவர்களெல்லோரும் தனக்கு ஸமானம்' என்ற பார்வையுடனிருப்பவரைப்பற்றிக் கொஞ்சம் சொல்லப்பட்டது. இனி 'மற்ற ஜீவர்களுக்குள்ளாக பரஸ்பரம் வித்தியாஸமே இல்லை'யென்ற பார்வையின் தன்மையைச் சற்று

விசாரிப்போம். ஒன்றுக்கொன்று ஸமம் அல்லது துல்யம் என்று சொல்லப்பட்டவைகள் வெவ்வேறு என்பதே நிச்சயம். ஒன்றை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய அம்சங்கள் தனித்தனியே ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டியது அவசியம். இப்படி வேறுபட்டிருந்தபோதிலும், சில விஷயங்களில் ஒற்றுமையிருக்கக்கூடிய காரணத்தினால், ஒன்றுக்கொன்று அவ்விஷயங்களில் ஸமானமென்று வியவஹரிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் உதாஹரணமாக சரீரத்தையே எடுத்துக்கொள்ளலாம். ஒருவருடைய சரீரத்தில் அவயவங்கள் பல இருக்கின்றன. ஒன்றுக்கும் கெடுதலுண்டாவதில் அவருக்கு இஷ்டமில்லாததினால், எல்லா அவயவங்களிலும் அவருக்கு ஸமதர்சனமிருப்பதாகச் சொல்லக்கூடும். அவருக்கு எல்லா அவயவங்களிலும் ஸமமான பார்வையிருந்தபோதிலும், அந்தந்த அவயவங்களின் இயற்கையாயுள்ள தன்மைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் அவர் நடந்துகொள்ளக்கூடும். அதாவது, பார்வை ஒன்றானாலும், அந்தந்த அவயவங்கள் ஸம்பந்தமாய் அவர் நடந்துவருகிற விதங்கள் பேதப்படலாம். தலை, கை, கால், உடல் எங்கும் அவருக்கு ஒரே விதமான அபிமானமிருந்தாலும், எல்லாவற்றிற்கும் ஒரே விதமான அலங்காரத்தைச் செய்வதாவது, அல்லது, அவைகளுக்குக் கெடுதல் நேரிட்டால் ஒரேவிதமான வைத்தியம் முதலான சீர்-திருத்தங்களைச் செய்வதாவது கிடையாது. தலையில் ஜரிகைத் தலைப்பாகையைத் தூக்கிவைத்தால், காலில் தோல் செருப்பைத்தான் மாட்ட வேண்டும். முகத்தில் புறப்பட்ட பருவுக்குப் புனுகைத் தடவினால், காலில் புறப்பட்ட சிரங்குக்கு மண்ணைக் குழைத்துப் பூசினால் போதும். அந்தந்த அவயவங்களுக்குத் தக்கபடி வெவ்வேறு விதமாக ஆசரித்து வருவதினால் அவருடைய ஸமதர்சனத்திற்கு ஒருவித ஹானியுமில்லை.

இதுபோல், யோக்கியராகவும் விவரந்தெரிந்த வித்வானாகவுமிருக்கிற வீட்டுயஜமானனுக்குக் குடும்பத்திலுள்ள எல்லோர்

பேரிலும் ஸமமான பார்வையேயிருந்துவரும். பாரபக்ஷய-புத்தியேயிருக்கமாட்டாது. இப்படிப்பார்வை ஸமமாயிருந்தாலும், குடும்பத்தில் அவரவர்களின் ஸ்திதிக்குத்தகபடி அவர் அவர்களை நடத்துகிறவிதம் வெவ்வேருகத்தானிருக்கக்கூடியது. ஸமமான தர்சனத்தால் எல்லோரையும் ஒரேவிதமாக நடத்துகிறதென்ற அர்த்தமேற்படாது. குடும்பத்தில் பெரியோர்கள், தம்பிகள், ஸஹோதரிகள், மனைவி, குமாரர்கள், நாட்டுப்பெண்கள், குமாரத்திகள் முதலான எல்லோரிடத்திலும் வித்யாஸமில்லாமல் ஒரேவிதமான பார்வையைச் செலுத்தியபோதிலும், அவரவர்களை நடத்துகிற விதம் வெவ்வேருகவேயிருக்கும். மனைவியையும் ஸஹோதரியையும் எல்லா விஷயத்திலும் ஒரே விதமாய் நடத்திவருவது நியாயமாகுமா ? இப்படி வேறுபடுவதினுல் பக்ஷபாதமிருப்பதாகச் சொல்லக்கூடாது. குடும்பத்தில் பிறவியினுலும் ஸம்பந்தத்தினுலும் வந்துசேருகிற ஜீவர்களெல்லோரும் தனித்தனியான பூர்வஜன்மகர்மங்களுக்குத் தகுந்தபடி தனித்தனியான ஸ்தானங்களிலிருந்து அந்தந்த கர்ம-பலன்களை அந்தந்த காலங்களில் அனுபவிக்க வந்திருப்பதால், அந்தந்தஸ்தானத்திற்குரியதாகவே அப்போதைக்கப்போது குடும்பத்தில் நடத்தப்பட்டு வருவார்கள் என்பதே நியாயமாகும், ஆகையால் பார்வையில் வித்தியாஸமில்லை என்ற காரணத்தினுல் வெளி நடவடிக்கைகளிலும் வித்தியாஸமிராதென்று சொல்வது சரியல்ல.

5. நூதனப் போக்கு

இத்தேசம் பூராவையும் எடுத்துக்கொள்வோம். இப்பரதகண்டத்தில் ஸ்வதேசிகளாக இருப்பவர்கள் பெரும்பாலும் ஹிந்துக்களே. உண்மையான ஹிந்துக்களுக்கு கர்ம-கதியிலும், அனுதிகாலமாய் எல்லோருக்கும் முன்-கர்மங்களினுலுண்டாயிருக்கக்கூடிய வேறுபாடுகளுடன் பல ஜன்மங்களேற்பட்டு வந்திருக்கின்றனவென்பதிலும், உறுதியான நம்பிக்கையுண்டு.

ஸமதர்சனம் முக்கியமென்பது இப்போது புதிதாயுண்டான கொள்கையல்ல. இது அனாதியான வேதத்திலேயே சொல்லப்பட்டு எக்காலத்திலும் ஹிந்துக்களால் ஆசரித்துவரப்பட்டிருக்கிற பெரும் ஆர்ய-ஸநாதன-தர்மமே. பெரியோராகிலும் சிறுவராகிலும், மூடராயினும், வித்வானாயினும், பசு பக்ஷி மிருகங்களாயினும், எல்லா ஜீவர்களிடத்திலும் பக்ஷபாதமில்லாமல் ஸமமான பார்வையைச் செலுத்தவேண்டுமென்பது ஹிந்துக்களின் பிரதானக்கொள்கை. இக்கொள்கைக்கும் மேற்கண்ட கர்ம-கதி முதலான விஷயங்களிலுள்ள நம்பிக்கைக்கும் பரஸ்பர விரோதம் கிடையாது. இரண்டுக்கும் ஒற்றுமையாகவே அனாதிகாலமாக ஹிந்துக்கள் நடந்து வந்திருக்கிறார்கள்.

புதிதான மிலேச்சக்கொள்கைகள் இத்தேசத்தில் அதிகமாய் பிரவேசித்த பிறகுதான் பல இடங்களில் ஹிந்துப் பார்வையே நஷ்டமாகியும் மிலேச்சப்பார்வை அதிகரித்தும் போய் மேற்கண்ட இரண்டுக்கும் ஏதோ பரஸ்பர விரோதமிருப்பதுபோல் கொஞ்சகாலமாக அஜ்ஞானத்தினால் எண்ணப்பட்டும் பிதற்றப்பட்டும் வருகிறது. பொறுமையுடனும் சிரத்தையுடனும் நன்றாக ஆராய்ச்சி செய்யக்கூடியவர்களுக்கு அப்படி விரோதமில்லையென்றே புலப்படும். இப்பூலோகத்தில் வேறு எத்தேசத்திலுமில்லாத ஜாதிபேதங்களும் அவைகளைப் பொறுத்த ஆசார-நடத்தை பேதங்களும் இத்தேசத்திலிருக்குங்கால், இங்கு ஸமதர்சனமிருக்கக் கூடுமென்று எப்படிச் சொல்லலாமென்று நூதனப் படிப்புள்ளோர்களிற் சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். ஜாதி-பேதங்களையும் அடியோடு தொலைத்து, அவைகளை போதிப்பிவிக்கின்ற நூல்களையும் கொளுத்திவிட்டு சண்டாளாதி பஞ்சமர்களையும் கூட உட்காரச் செய்து பிராம்மணன் ஸம-பங்க்தியில் தீனி தின்றால்தான், ஸமதர்சனம் ஸித்திக்குமென்ற துற்புத்தி இக்காலத்தில் இந்நாட்டில் விருத்தியடைந்து வருகிறது. இவ்வித துற்புத்தியை

போதித்து அதிகப்படுத்தி வருகிற தர்ம-விரோதிகளே கலிகால மகிமையினுல் பெரும் லோகோபகாரிகளாக விளங்குகிருர்கள். இவர்கள் தங்களுடைய குதர்க்கத்தையே ஆதாரமாகக்கொண்டு பிதற்றிவந்தாலும கெடுதல் அதிகமாயிருக்கக் கூடியதல்ல. கீதா-சாஸ்திரம் முதலான பெரும் நூல்களேயே தங்கள் விபரீதக் கொள்கைகளுக்கு ஆதாரமாகவும் அஜ்ஞானி ஜனங்களின் முன்னிலையில் அடிக்கடி சொல்லிவருவதால் உலகத்தில் கெடுதல் சீக்கிரத்தில் அதிகப்பட்டு வருகின்றது. சண்டாளனை யும் பிராம்மணனையும் ஸமமாய்ப் பார்க்கவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணனே கீதையில் சொல்லியிருப்பதால், 'ஏன் சண்டாளனைக் கண்டால் விலகவேண்டும்? அவனுடன் சேர்ந்து ஏன் பிராம்மணன் முதலானவர்கள் சாப்பிடக்கூடாது? அவனுடன் விவாகம் முதலான ஸம்பந்தங்களையும் ஏன் செய்யக் கூடாது?' என்று கேட்கிருர்கள்.

6. யோக்கியதையினுல் வேறுபாடு

இப்படிக் கேள்வி கேட்கக்கூடியவர்களும் மனிதனுக்குத் தன் சரீரத்தில் எல்லா அவயவங்களிலும் ஒரே ஸமப்பார்வை யிருந்தாலும், அல்லது குடும்பத்தலைவருக்குத் தன் குடும்பத்தி லுள்ள எல்லோரிடத்திலும் ஸமப்பார்வை யிருந்தபோதிலும், ஆசாரணைகள் பேதப்படுமென்பதை அவசியம் ஒப்புக் கொண்டே தீரவேண்டும். இப்படியே, வெளியிலும் ஜனங் களின் விஷயத்தில் ஒருவருக்கு ஸம-புத்தியிருந்தாலும், ஆசாரணை விஷயத்தில் வித்தியாஸ மிருப்பதே ந்யாயமென்று சொன்னுல்மாத்திரம் கூச்சலிட்டு ஆக்ஷேபிக்கிருர்கள். தத்துவத்தைத் தெரிந்துகொள்ளாமையே இக்கூச்சலுக்குக் காரணம். ராஜா பிரஜைகளெல்லோரிடத்திலும் பக்ஷபாத மில்லாமல் ஸமப்பார்வையைச் செலுத்தவேண்டு மென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற விஷயம். இப்படி ஸமப்பார்வை யுள்ள ராஜா எக்காரணத்தினுலும், ஜனங்களுக்குள் வித்தியாஸ

மிருப்பதை கவனித்து, பல ஜனங்களிடத்தில் பலவிதமாய் நடந்துகொள்ளக் கூடாதென்பதே அவ்வாதிகளின் கொள்கையாக இருக்கவேண்டும். வித்வானை மரியாதை செய்வதும், மூடனை அலக்ஷியஞ் செய்வதும், ஸாதுக்களை ஸம்மானிப்பதும் துஷ்டர்களை தண்டிப்பதும், பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு ஆயிரக்கணக்கான சம்பளம் கொடுப்பதும், தோட்டிகளுக்கு ஸ்வல்ப சம்பளம் கொடுப்பதும், இதெல்லாம் ராஜாவிடத்தில் பெரும் தோஷங்களென்பதே அவ்வாதிகளின் அபிப்பிராயமா? அப்படிச் செய்வதினுல் ராஜாவுக்கு ஜனங்களிடத்தில் ஸமதர்சனம் கிடையாதென்றும் அவர் வக்கிர அல்லது வஞ்சகப் பார்வையுள்ளவரென்றும் சொல்லுகிருர்களா? அன்றியும், ராஜா எல்லோரையும் ஒரே விதமாகவே எப்போதும் நடத்தவேண்டுமானுல், சட்டங்களை ஏற்படுத்துவதற்கு நியாயமேயிருக்கமாட்டாதே? தனித்தனியான விஷயங்களுக்குத் தனித்தனியான சட்டங்களும், இவ்விதச் சட்டங்களை ஊர்ஜிதத்திற்தக் கொண்டுவரக்கூடிய வெவ்வேருன பிரகாரங்களும் அந்த வாதிகளின் கொள்கைப்படி எப்படி ஏற்படலாம்? ராஜா பலவிதமான ஜனங்களிடத்தில் பலவிதமாய் தான் நடந்துவருவதுமன்னியில், ஜனங்களும் ஒருவருக்கொருவர் நடந்துவரவேண்டிய பிரகாரங்களையும் தாரதம்மியத்துடன் திட்டப்படுத்தி வெவ்வேறு விதமாக ஜனங்கள் நடந்துவரும்படி செய்துவருவதும் அக்கிரமந்தானென்பதே அவ்வாதிகளின் கக்ஷியா? ராஜா எல்லோரையும் ஸமமாக பாவித்தாலும், அவரவர்களின் யோக்கியதைக்குத் தக்கபடி பலவிதமாய் நடந்துவருவது விரோதமாகாதென்று அவ்வாதிகள் சொல்லும் பக்ஷத்தில், தகுந்த காரணமிருந்தால் ஜனங்களிடம் பலவிதமாய் நடந்துவருவது ஸமதர்சனத்திற்கு விரோதமில்லை என்று அவர்கள் ஒப்புக்கொண்டதாகத்தான் ஆகும். யோக்கியதையின் தாரதம்மியத்தினுல் வெவ்வேறு பிரகாரமாக நடந்துவரலாமென்று அவர்கள் ஒப்புக்கொண்டபோதிலும், அவ்வித

யோக்கியதையைத் தீர்மானிப்பதில் எதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்பதில் அபிப்ராய-பேதமேற்படும். உண்மையில் மனிதர்களுக்குள் ஏற்பட்டிருக்கிற யோக்கியதை விஷயமான வித்யாஸங்களுக்குத் தக்கபடி அவர்கள் வெவ்வேறு விதமாக நடத்தப்பட்டு வருவது ஸமதர்சனத்திற்குக் குறைவாகா தென்பதை மாத்திரம் அவ்வாதிகள் ஒப்புக்கொள்வதே இப்போது போதுமானது.

அத்யாயம் 2.

ஜாதி வியவஸ்தை

1. கர்மானுஸாரமாக வேற்றுமை

மனிதர்கள், மிருகங்கள், பக்ஷிகள் முதலிய பிராணிகள் எல்லோரிடத்திலும் ஸமப்பார்வையைச் செலுத்துவதென்றால் இவ்வித ஸமப்பார்வைக்கு அந்தந்தப் பிராணிகளுக்குத் தகுந்த விதங்களில் அன்பையும் கருணையையும் பாராட்டுவதென்று தான் அர்த்தமாகுமேயொழிய அவைகளைத் தொட்டு உறவு கொண்டாடுகிறதென்றாவது, அவைகளுடன் கூடச்சேர்ந்து உண்பது என்றாவது, ஸம்பந்தஞ் செய்துகொள்வது என்றாவது அர்த்தமாகக் கூடியதில்லை. ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் "பிராஹ்மணனிடத்திலும் சண்டாளனிடத்திலும் பண்டிதர்கள் ஸமமாகப்பார்ப்பார்கள்" என்று சொல்லுமிடத்தில் அவ்விருவர்களுக்கும் மத்தியில் பசுவையும், யானையையும், நாயையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். இவ்வைந்து ஜீவர்களிடத்திலும் பொதுவாகச் செலுத்தக்கூடியது எவ்வித ஸமப்பார்வையோ அதைத்தான் செலுத்துவதென்று அர்த்தஞ் செய்யக்கூடுமே தவிர, மத்தியில் சொல்லப்பட்ட அம்மூன்று மிருகங்களையும் தள்ளி ஒதுக்கிவிட்டு ஆரம்பத்திலும் கடைசியிலும் குறிப்பிடப் பட்ட பிராஹ்மணன் சண்டாளன் இவ்விருவர்களின் விஷயத்தில் மாத்திரம் தொட்டு உறவாடுவதற்கும், ஸஹபோஜனஞ் செய்வதற்கும், பெண்கொள்வினை கொடுப்புவினை செய்வதற்கும் அர்த்தமாகலாமென்று சொல்வது எப்படி நியாயமாகுமோ தெரியவில்லை. மேலும், பின் சொல்லப்போகிற முக்கியார்த்தத்தில் ஸமதர்சனமென்றால் எதுவோ அதை ஸித்தித்துக் கொண்டிருக்கிற பிரஹ்மஜ்ஞானிகளின் பார்வையைக் குறித்து பகவான் சொன்னாரேயல்லாது கௌணார்த்தத்தில் அங்கு ஸமதர்சனத்தைப்பற்றிச் சொல்லவில்லை. முக்குணங்களுடைய

பந்தங்களையும் துவைதத்தையும் கடந்து நிர்குணாத்வைத-பிரஹ்ம-நிஷ்டையிலிருக்கிற ஜ்ஞானிகளிடம் எங்கும் ஒரே விதமான பிரஹ்ம-திருஷ்டி இருக்குமே தவிர, குணங்களின் தோற்றமாவது துவைதத்தின் வேற்றுமையாவது இருக்க மாட்டாதென்று சொல்லுமிடத்தில் உதாஹரணத்திற்காக ஸத்வகுணமுள்ள பிராம்மணனையும், ரஜோகுணமுள்ள பசுவையும், தமோ குணமுள்ள யானையையும், இப்படியே துவைதப் பார்வையில் மனிதர்களுக்குள் உத்தம ஸ்தானத்திலுள்ள வித்யா-வினய-ஸம்பன்னனான பிராஹ்மணனையும் நிகிருஷ்ட ஸ்தானத்திலுள்ள சண்டாளனையும், மிருகங்களுக்குள் உத்தம ஸ்தானத்திலுள்ள பசுவையும், மத்தியம-ஸ்தானத்திலுள்ள யானையையும், நிகிருஷ்ட ஸ்தானத்திலுள்ள நாயையும் எடுத்துக்கொண்டு, எங்கும் குணங்களுக்கு அதீதமாகவும், மேல் கீழ் என்ற வியவஹாரங்களற்றதாகவும், ஸகல பிராணிகளிடத்திலும் ஸமமாய் ஒன்றாகவுமிருந்துவருகிற பிரஹ்மத்தையே ஜ்ஞானிகள் ஸாக்ஷாத்கரிக்கிறார்களென்று தான் சொல்லியிருக்கிறார். இப்படிச்சொல்லியது மேற்கண்ட வாதிகளின் விபரீதக் கக்ஷிக்கு எவ்விதத்திலும் அனுகூலமில்லை. ஸர்வோத்தமமான கீதா-சாஸ்திரத்தை, நாவினால் அதன் பெயரைச் சொல்லக்கூட யோக்கியதையில்லாத அனதிகாரிகள், தாங்கள் தெரிந்துகொண்டுவிட்டதாக பாவித்து, பேசத் துணிந்தால் தவறான பிதற்றல்களும் தாறுமாறான கேள்விகளும் தான் ஏற்படும்.

பிறவியினாலேயே வேறுபட்டுள்ள சரீரங்களையுடைய மிருகாதிகளிடத்தில் சரீர-ஸம்பந்தமான ஸமத்வத்தை நாம் பாராட்ட முடியாதென்பது வாஸ்தவமானாலும், பிறவியினால் ஒரேவித சரீரங்களையுடைய மற்ற மனிதர்களுக்குள் முன் சொல்லியபடி இருக்கக்கூடிய யோக்கியதையின் தாரதம்மியத்தினால் அவர்களிடம் சில விஷயங்களில் ஒரேவிதமாய் நடந்து கொள்ளக்கூடாமலிருந்தாலும், யோக்கியதையினால் வேறு

பட்டிருப்பதாகத் தெரியாத மற்றவர்களிடம் ஏன் ஸமத்வத்தை எல்லா விதத்திலும் குறைவின்றிப் பாராட்டி நடந்துவரக் கூடாதென்று அவ்வாதிகள் கேட்கின்றார்கள். பிறவியில் எல்லா மனிதர்களுக்கும் ஒருவிதத்திலும் வேறுபடாத ஒரேவித சரீரமும் யோக்கியதையுமிருப்பதுபோல் எண்ணியதினால் அக் கேள்விக்கிடமாயிற்று. வெளிப் பார்வையில் எங்கும் மனித சரீரங்கள் ஒன்றுபோலிருப்பதால் அவைகளுக்குள் பிறவியில் வேறுபாடு கிடையாதென்று எண்ணக்கூடாது. இவ்வுலகத்தில் ஹிந்துக்களைத் தவிர மற்றவர்கள் இப்படி எண்ணுவது ஒருவிதத்தில் நியாயமாகும். பிறவிக்கு முன்பாக ஜன்மங்களிருந்ததாகவே அவர்களுக்குத் தெரியக்கூடாததால், அஜ்ஞானத்தினால் அவர்கள் அப்படி எண்ணுவது ஆச்சரியப்படத்தக்கதல்ல. கர்ம-கதியிலும் ஜன்மங்களின் தொடர்ச்சியிலும் நம்பிக்கை இருக்கவேண்டிய ஒரு ஹிந்துவினால் மேற்கண்டபடி எண்ணப்பட்டால், அவரிடம் ஹிந்துத் தன்மை மிகவும் குறைந்துபோய்விட்டதாகவே தீர்மானிக்க வேண்டியதாய் இருக்கும்.

'சரீரத்தில் வேறுபாடு' என்றால் ரூபத்தில் வித்தியாஸமென்று அர்த்தமல்ல. ஒவ்வொருவராலும் முன் ஜன்மங்களில் எவ்வித கர்மங்கள் சரீரத்தினாலும், வாக்கினாலும், மனதினாலும் செய்யப்பட்டனவோ, அவைகளின் பலன்களை அனுபவிக்கும்படியான தன்மையுள்ள சரீரத்துடனும், அக் கர்மங்களுக்கு ஒத்ததான வாஸனைகளுடனும் பாவனைகளுடனும் கூடிய மனது முதலான உள்-ஸ்வபாவத்துடனும், அவர் மறுபடியும் ஜன்மத்தை அடைந்திருக்கிறாரென்று அறிந்துகொள்ள வேண்டும். அனாதிகாலமாக எண்ணத் தொலையாத முன் ஜன்மங்களில் செய்யப்பட்ட நானாவித கர்மங்களின் பலனாக ஏராளமான வேறுபாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய சரீரத் தன்மையிலும் உள்-ஸ்வபாவத்திலும் தனித்தனியாகவே இருந்துவரவேண்டியதவசியம். பிறவியில் எல்லோரும்

ஒன்ருகவேயிருந்து அப்பால் வேறுபாட்டை அடைவதாக எண்ணுவதெல்லாம் அறியாமை. மனிதப்பிறவிக்குக் காரணமே முன் ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்ணிய-பாபங்களே. இப்புண்ணிய-பாப-கர்மங்களும், இவைகளைத் தூண்டியவைகளும் இவைகளால் மறுபடியும் விருத்தியடையப்பட்டவைகளுமான குணங்களும் எல்லோருக்கும் ஒரேவிதமாய் எவ்வகையிலும் இருந்திருக்க முடியாது. அந்தந்த குண-கர்மங்களுக்குத் தக்கபடியே ஸர்வேசுவரர் அவரவருக்குத் தனித்தனியே தகுதியுள்ள ஜனவகுப்பிலும் குடும்பத்திலும் ஜன்மத்தைக் கொடுத்து வருகிருர்.

2. கர்மபூமி இதுவே

பலவிதமாயிருக்கக்கூடிய குண-கர்மங்கள் பூராவையும் விபாகப்படுத்தி, ஜாதிகளென்ற பெரும் வகுப்புகளுக்குள் அந்தந்த பூர்வ குண-கர்மங்களையுடைய ஜீவர்கள் தனித்தனியே ஜன்மங்களின் பொருட்டு வந்து சேரும்படியாக ஈசுவரர் ஸங்கல்பித்து, மனித-ஸ்ருஷ்டி-காலத்திலேயே ஜாதி-வியவஸ்தையை ஏற்படுத்தியிருக்கிருர். இவ்வித ஜாதி-யேற்பாடு புதிதாக வந்ததல்ல. முன் கல்பங்களிலிருந்த பிரகாரமே நடப்பு கல்பாரம்பத்திலும் இப்பூலோகமும் அதில் ஆர்யர் என்ற பெயருடன் மனிதர்களும் தோன்றியபோதே வேதமும் கொடுபட்டு அதிலடங்கிய ஜாதி-விதிகளும் மனிதனுக்கு ஏற்படுத்தப்பட்டன. **இப்பூலோகத்தில் ஆதியில் மனிதன் தோன்றிய ஸ்தலம் ஆர்யாவர்த்தம்.** அப்பால் சில காலத்திற்குள் இப்பரதகண்டம் பூராவும் சிறுகச் சிறுக ஆர்யர்களின் வாஸஸ்தலமாக ஏற்பட்டு ஆர்யதர்மங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றன. காலகிரமத்தில், ஆர்ய-தர்மாசரணையிலிருந்து நழுவிப்போன ஜனங்கள் அதிகரித்து, அவர்கள் இப்பரத கண்டத்தைவிட்டு வெளியிடங்களுக்கு லௌகிக-ஸௌகரியங்களை உத்தேசித்துப் பல காலங்களில் குடியேறிப் போய் இப்பூலோகம் பூராவையும் பெரும்பாலும் வியாபித்துக்

கொண்டார்கள். இப்பரதகண்டத்திலேயே தங்கியிருந்து ஆர்ய-தர்மாசரணையே பெரியதென்று எண்ணி வைதிக-மதத்திலேயே உறுதியுடனிருந்துவந்தவர்களும் இக்காலத்தில் ஹிந்துக்கள் என்று அழைக்கப்பட்டவர்களுமான ஆர்யர்களிடம் மாத்திரம் தொடர்ச்சியாக ஜாதி-வியவஸ்தை காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. இதனுல்தான் இப்பூலோகத்தில் ஜாதி என்பது இவ்விந்தியாவில் மாத்திரம் காணப்பட்டும் மற்ற தேசங்களில் காணப்படாமலுமிருக்கிறது. உண்மையில் ஸகல மனிதர்களுக்கும் இப்பரதகண்டம்தான் ஸ்வ-தேசம். இதுவே தர்மானுஷ்டானத்திற்கு யோக்கியமான வைதிக-கர்ம-பூமி என்றும் மத்திய-தேசமென்றும் சொல்லப்படுகிறது. மற்ற தேசங்களெல்லாம் ஸமீப காலங்களில் குடியேறப்பட்ட லௌகிக-போக-பூமிப் பிரதேசங்களே தவிர வேறல்ல. மனித-ஸ்ருஷ்டியே ஆதியில் இப்பரதகண்டத்தில்தான் ஏற்பட்டதென்ற ஹிந்துக்கொள்கை ஆதாரமற்றதல்லவென்றும், இப்பூலோக ஸம்பந்தமான பலவித பௌதிக-தத்துவசாஸ்திர-ஆராய்ச்சிகளைச் செய்யும்போது ஆர்யாவர்த்த மேட்டுப் பிரதேசந்தான் ஆதி மனிதர்களின் வாஸஸ்தலமாயிருந்திருக்கக் கூடியதென்று தெளிவாய்த் தெரிய வருகிறதென்றும் சில நவீன ஐரோப்பிய தத்துவ-சாஸ்திர-வித்வான்கள் அபிப்பிராயப்படுவதாகவும் வெளியாகின்றது.

இது நிற்க. இவ்வுலகம் தோன்றிய காலம் முதல் ஈசுவரரால் ஏற்படுத்தப்பட்ட ஜாதி-வியவஸ்தை கெட்டுப் போகக்கூடாத விதமாக வைதிக-கர்மானுஷ்டானங்களைச் செய்துகொண்டு இத்தேசத்தில் வெகு ஜனங்கள் இருந்து வந்திருப்பதினுல், மேற்கண்டபடி ஜாதி-விதிகள் இத்தேசத்தில் மாத்திரம் காணப்படுகின்றன என்பது ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல. மற்ற தேசங்களில் எக்காலமும் ஜாதி-ஏற்பாடு இருந்திருப்பதுமில்லை; இருக்கக்கூடியதுமல்ல. மற்ற தேசங்களில் மனிதர்களின் சரீர-தர்மங்களிலும் ஆந்தர-ஸ்வபாவங்

களிலும் வேறுபாடுகள் ஏராளமாய் இருக்கக்கூடியதாலும், ஈசுவரரால் ஆதியில் மனிதனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டிருக்கிற வியவஸ்தையினால் அறியப்படக்கூடிய அடையாள வகுப்பு ஸ்தானங்களைவிட்டு அவர்கள் வெளியேறி அவ்வேறுபாடுகள் இன்னவைதானென்று குறிப்பிட மார்க்கம் இல்லாமல் போய்விட்டபடியால், அவ்வேறுபாடுகளுக்கு அனுஸரணையாக மனிதர்களைத் தனித்தனியே நடத்திவர வேண்டிய விஷயத்திலும் வியவஸ்தையில்லாமல் அந்த ஜனங்கள் தடுமாறிக்கொண்டே இருந்து கஷ்டப்படுகின்றார்கள். இவ்விதக் கஷ்டம் ஹிந்துக்களுக்குள் ஏற்படவில்லை. எந்த ஜாதியில் ஒருவருக்குப் பிறவி ஏற்பட்டிருக்கின்றதோ அந்த ஜாதியைக்கொண்டே அவருடைய வேறுபாடுகள் இன்னவை தானென்று தெரிந்துகொண்டு அவைகளுக்கு அனுகுணமாகவே அவர் உலகத்தில் மற்றவர்களால் நடத்தப்படுவதற்கு ஸௌகரிய முண்டு. ஒருவர் பள்ளிக்கூடத்தில் சேராமலே தனியாக வித்தியாப்பியாஸம் செய்துவந்தால், அவருடைய உண்மை யான யோக்கியதையைக் கண்டுபிடித்து அந்த யோக்கியதைக் குத் தகுந்தபடி அவரை நடத்துவது சிரமப்படும். பல வகுப்புகள் அடங்கிய பள்ளிக்கூடத்தில் படித்துவருகிறவரின் விஷயத் தில், அவர் எந்த வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறாரென்று மாத்திரம் தெரிந்துகொண்டுவிட்டால், அவருடைய யோக்கியதை இன்னதுதானென்று உடனே குறிப்பிட்டுத் தெரிந்துகொண்டுவிடலாம். இவ்வுலகத்தில் மற்ற தேசங்கள் யாவற்றையும் வகுப்பில்லாத திண்ணைப்பள்ளிக்கூடம் போல வும், இப்பரதகண்டத்தை மாத்திரம் வகுப்புகளடங்கிய உயர்ந்த வித்தியாசாலை போலவும் பாவித்துக்கொள்ளலாம். ஆகையால், இத்தேசத்தில் ஹிந்துக்கள் ஒருவருக்கொருவர் ஸமதர்சனத்தைச் செலுத்தி அவரவர்களின் வேறுபட்டுள்ள யோக்கியதைக்குத் தகுந்தபடி தனித்தனிவிதமாக நடந்துவரவேண்டிய விஷயத்தில் ஜாதி-வித்தியாஸமிருப்பது பெரும் அனுகூலமே அல்லாது விரோதமாகமாட்டாது.

3. வியவஸ்தையால் ஸௌகர்யம்

ஸமமான பார்வையை எங்கும் செலுத்தும்போதும் அவரவர்களுக்குள்ள யோக்கியதையின் வேறுபாடுகளுக் கிணங்கி பரஸ்பரம் நடந்து வரவேண்டியிருப்பதில், இப் பூலோகத்தில் வேறு எங்குமில்லாத இரண்டு ஸௌகரியங்கள் ஹிந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய முக்கிய வேறுபாடுகள் எவையென்று தனித்தனியே பரீக்ஷை செய்து தெரிந்துகொள்ளும்படியான சிரமத்தை மனிதனுக்குக் கொடுக்காமல் ஈசுவரனே ஜாதி–வியவஸ்தையை ஏற்படுத்திய தினால், அதாவது, இன்னவித பூர்வகுண–கர்மங்களை உடையோர் இன்ன ஜாதியில் பிறவியை அடைவாரென்று திட்டப்படுத்தியதினால், அவரவர்களின் வேறுபாடுகளும் ஸந்தேகமின்றி தெரியக்கூடியவை. மேலும், அவ்வேறுபாடுகள் நிச்சயப்படுவதுடன், அவ்வேறுபாடுகளுக்கிணங்கி ஒருவருக் கொருவர் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்ற விபரங்களும் சாஸ்திரங்களிலேயே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், நடத்தை விஷயத்திலும் ஹிந்துக்களுக்குள் அபிப்பிராய பேதமாவது சச்சரவுகளாவது நேரிடுவதற்குக் காரணமே இல்லை.

இவ்விருவகை ஸௌகரியங்களும் உலகத்தில் மற்ற ஜனங்களுக்குக் கிடையாதாகையால், அவர்களுக்குள் ஒருவருக் கொருவர் நடந்துகொள்ள வேண்டிய விஷயத்தில் ஏற்படுகிற வியவஹாரங்களுக்கு முடிவேயில்லாமலிருக்கின்றது. முதலா வது, அவர்களுக்குள் வேறுபாடுகளைக் கண்டுபிடிப்பதும் சிரமம். கண்டு பிடித்ததாகச் சொல்லிவருகிறவர்களுக்குள் அபிப்பிராய ஒற்றுமை இருப்பதும் சிரமப்படும். ஒருக்கால், வேறுபாடுகளைச் சரியாய் கண்டுபிடிப்பது ஸாத்தியமென்று சொல்லப்பட்டாலும், அவ்வேறுபாடுகள்–விஷயமான நடத்தை பேதங்களுக்கு மனிதனே தனித்தனி விதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருப்பதாலும் மனிதனுடைய புத்தியைப்

போல் அவ்விதிகளும் மாறிக்கொண்டேயிருக்கக்கூடியதாலும், இவ்விதிகளையேற்படுத்துகிறதற்கு யாவருக்கும் குறிப்பிட்ட அதிகாரமில்லாததினாலும். ஸ்வ-புத்தியினால் விதிகளைச் சொல்லக் கூடியவர்களும் பலராகையால் அவர்களுக்குள் ஒற்றுமைக்குறைவு ஏற்படக்கூடியதாலும், சரியானபடி எல்லோரும் ஒத்துக் கட்டுப்படக்கூடிய விதிகளுண்டாவதற்கே இடமில்லாமலிருக்கின்றது. அவர்களுக்குள் இவ்விதக் குழப்பம் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும். இதற்கு முடிவே கிடையாது இப்பூலோகத்தில் ஹிந்துக்களிடத்தில் மாத்திரம் இக்குழப்பத்திற்கு இடமில்லாமலிருந்திருக்கின்றது. இவ்வித விசேஷ அனுகூலத்தையும் கெடுத்துவிடுவதற்கே இக்காலத்திய ஆசாரச் சீர்திருத்தக்காரர்கள் (Social Reformers) பலமாய் முயலுகின்றார்கள். கலிபுருஷனே அவர்கள் மூலமாய் இவ்விதப் பிரதிகூல முயற்சிகளைச் செய்து வருவதால், இம்முயற்சிகளே சரியென்று அறிந்துகொண்டு விட்டதுபோல் தலைகளை ஆட்டிக் கொண்டு ஆயிரக்கணக்கான மூட ஜனங்களும் ஆமோதித்து வருவதாகக் கூத்தாடி வருகின்றார்கள். உண்மையை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் காது கொடுத்துக் கேட்பவர்களே அபூர்வமாயிருப்பதுடன் சொன்னதைச் சரியானபடி கிரஹித்துக்கொள்ள சக்தியுள்ளவர்களும் மிகவும் அபூர்வமாகவே காணப்படுகின்றார்கள். இவை எல்லாவற்றிற்கும் கால வேற்றுமையைத்தவிர வேறொன்றையும் காரணமாகச் சொல்லக் கூடவில்லை.

4. கலப்பு ஜாதிகள்

ஹிந்துக்களுக்குள் பிரஹ்ம—க்ஷத்திரிய—வைசிய—சூத்திரரென்ற முக்கியமான ஜாதிகள் நான்கேயானாலும், அவைகளிலிருந்தே காலக்கிரமத்தில் பல கலப்பு (ஸங்கர) ஜாதிகளும் உண்டாயிருக்கின்றன, இப்படி வேறு ஜாதிகளும் ஏற்படக் கூடுமென்று தெரிந்தே ஸர்வஜ்ஞனான ஈசுவரனால் இவ்விதக் கலப்பு ஜாதிகளுக்குள்ள விதிகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்

கின்றன. ஒரே ஜாதியிலுள்ள பிதாவினுலும் மாதாவினுலும் ஜனிக்கப்பட்டவன் அந்த ஜாதியைச் சேர்ந்தவனுவான். அந்தந்த ஜாதிகளுக்குள்ளாகவே விவாஹ ஸம்பந்த மேற்படுவது தான் கிரமமான ஸம்பந்தம். கிரமந்தவறி ஜனங்கள் நடப்பதும் நேரிடுமாகையால், கலப்பு ஜாதிகள் உண்டாவதும் ஸாத்தியமாயிற்று. மேல் ஜாதி பிதாவுக்கும் கீழ் ஜாதி மாதாவுக்கும் பிறந்தவனுடைய ஜாதி அனுலோம ஜாதியென்றும், மேல்ஜாதி மாதாவுக்கும் கீழ் ஜாதி பிதாவுக்கும் பிறந்தவனுடைய ஜாதி பிரதிலோம ஜாதியென்றும் சொல்லப்படுகின்றது. இப்படிப்பட்ட பிதாவுடையவும் மாதாவுடையவும் வெவ்வேறு ஜாதிகளுக்குத்தக்கபடி அனுலோமப் பிரதிலோம ஜாதிகளும் பலவகையாகும். அனுலோம ஜாதி பிரதிலோம ஜாதியைவிட உயர்ந்தது. அனுலோமப் பிரதிலோம ஜாதிகளிலும் துவிஜர்களுக்குள்ளாகவே ஸம்பந்தமேற்பட்டுப் பிறந்தவன் சூத்திர–ஸம்பந்தமேற்பட்டுப் பிறந்தவனைவிட மேலானவன். பிரதிலோம ஜாதிகளில் சூத்திரப் பிதாவுக்கும் துவிஜமாதாவுக்கும் பிறந்தவன் நிகிருஷ்ட ஜாதியைச் சேர்ந்தவன். தீண்டாமை முதலான தோஷங்கள் இவனுக்குத்தான் உண்டு முக்கியமாய் இவனைத்தான் பஞ்சமனென்று சொல்லுகிற வழக்கம் சூத்திர பிதாவுக்கும் பிராஹ்மண மாதாவுக்கும் பிறந்தவன் மற்ற பஞ்சமர்களைவிட அத்தியந்தம் கீழ்ப்பட்டவன். இவன்தான் சண்டாளனென்று சொல்லப்படுகின்றுன். கல்பாரம்ப–காலங்களில் இவ்விதமாக கலப்பு ஜாதிகளேற்பட்ட பின்பு, பூர்வகர்ம வசத்தினுல் அவ்வித ஜாதிகளிலேயே பிறவியை அடைய வேண்டிய ஜீவர்கள் அங்கேயே பிறந்து கர்ம பலன்களை அனுபவிக்கின்றுர்கள். வெவ்வேறு பிரதான நான்கு ஜாதியார்களில் ஒருவருக்கொருவர் வேறுபட்டுள்ள சரீர–மனே–வித்தியாசங்கள் எவ்வளவோ அதைக்காட்டிலும் மிகவும் அதிகமாய் வேறுபட்டிருக்கிற பாஹ்யாந்தர ஸ்வபாவங்களுடன் கூடிய சண்டாளர் முதலானவர்களின் விஷயத்தில் ஸமதர்சனத்தைச் செலுத்துவதென்றுல் அவர்களிடம் அன்புட

னும் கருணையுடனுமிருந்து அவர்களுக்கு வேண்டிய அனு கூலங்களைச் செய்துவைக்கலாமென்றுதான் அர்த்தமாகுமே தவிர அவர்களுடன் நெருங்கி உறவாடுகிறதென்ற அர்த்த மேற்படக்கூடியதல்ல.

[குறிப்பு :— ஏதோ இத் தென்தேசத்திலுள்ள பிராஹ்மண ரல்லாத ஜனங்கள்மாத்திரம் திராவிடர்களென்றும், அவர்களே இத்திராவிடதேச ஸ்வதேசீயர்களென்றும், அதிலும், பஞ்சமர்களே ஆதித்திராவிடர்களென்றும், இப்பால் கொஞ்ச காலமாகச் செய்யப்பட்டுவருகிற கக்ஷிகளெல்லாம் வீண் பொய்யான கக்ஷிகளைத் தவிர வேறல்ல. முன் சொல்லிய விபரப்படி பஞ்சமர்கள் மற்ற ஜாதியார்களிடமிருந்தே உண்டான வர்களென்ற உண்மையையும், இத்தென்நாட்டிலுள்ள ஸகல மனிதர்களும், உலகத்திலுள்ள மற்ற எல்லா மனிதர்களைப் போலவே ஆர்யாவர்த்தப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள் தானென்ற விஷயத்தையும், தெரிந்துகொள்ளாமலே அக் கக்ஷிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பரத கண்டத்தில் விந்தியபர்வதத்திற்குத் தென்புறமுள்ள தேசம் தக்ஷிணதேச மென்றும் திராவிடதேசமென்றும் சொல்லப்படுகிறது. இந்தத் திராவிட தேசததிலுள்ள முககியமான ஜனவகுப்பினர்களான மஹாராஷ்டிரர்கள், தெலுங்கர்கள். கர்ணடகர்கள், கூர்ஜர்கள், தமிழர்கள் இவ்வைந்து வகுப்பினர்களும் பஞ்ச திராவிடர்கள் என்று அனுதிகாலமாக அழைக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். பிராஹ்மணனைத் தவிர மற்றவர்கள்தான் திராவிடர்களென்று சொல்லி வருவதும் அறியாமையே. பிராசீன கிரந்தங்களிலும் நிகண்டுகளிலும் தென்தேச பிராஹ்மணர்களே முக்கியமாய்த் திராவிட—பதத்தினுல் குறிப்பிடப்பட்டிருக்கின்றார்கள். இக் காலத்தில் ஹடத்தின் பேரில் துர்க்கக்ஷிகளைச் செய்து வருகின்றவர்களுக்கு கிரந்தங்களிலும் வேறு விபரப் புஸ்தகங் களிலும் கண்டிருப்பதை எடுத்துச் சொல்வதில் பிரயோஜன மில்லை.]

5. பிறவியினுல் தான் ஜாதி

பிறவிக்கு முன்பாக ஒவ்வொரு ஜீவனிடத்திலுமிருந்திருக்கின்ற குண-கர்ம-பேதங்களை ஈசுவரன் தான் அறியக்கூடுமேயொழிய அவை மனிதனுக்கு ஸாதாரணமாய்த் தெரியக்கூடியவையல்ல அவ்வித பேதங்களுக்குத் தக்கபடி அந்தந்த ஜாதிகளில் ஈசுவரனுல் ஜன்மம் ஏற்படுத்தப்பட்ட பின்பு ஜன்மம் முடியும் வரையில் அந்தந்த ஜாதியார்களுக்கு என்ன ஸ்தானங்களும் தர்மங்களும் சாஸ்திரங்களின் மூலமாய் ஈசுவரனுல் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த ஸ்தானங்களுக்கும் தர்மங்களுக்கும் விரோதமன்னியில் அவரவர்கள் நடத்தப்படவேண்டுமென்பதே நியாயமாகும். அந்த ஸ்தானங்களாவது தர்மங்களாவது மனிதனுல் மாற்றப்படத் தகுந்தவைகளல்ல. பிறவியினுல் ஏற்பட்ட ஸ்தானம் மறு பிறவியினுல்தான் மாறத் தகுந்தது. பள்ளிக்கூடத்தில் ஒரு வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணுக்கன் வருஷ-முடிவில் வேறு வகுப்புக்கு அனுப்பப்படும் வரையில் அவனுடைய வகுப்பு-ஸ்தானம் மாற மாட்டாது. பரீக்ஷையின் பேரில் பிரதான-உபாத்தியாயரால் தான் அப்படி வேறு வகுப்புக்கு அனுப்பப்படுவானேயொழிய, மாணுக்கர்களுக்குள்ளாகவே ஒருவன் மற்ருெருவனை வேறு வகுப்புக்கு அனுப்பியதாகக் காட்டிக்கொண்டால் தண்டனை தான் பலனுகுமேயல்லாமல் அனுப்பப்பட்டவன் அவ்வேறு வகுப்பு மாணுக்கனுகிவிடமாட்டான். இதுபோல், பிறவியினுல் ஏற்பட்டிருக்கிற ஜாதி-வியவஸ்தைக்கும் அதற்கு அனுகுணமான தர்மங்களுக்கும் விரோதமாக இக்காலத்தில் பெரிய லௌகிகப் பதவிகளிலுள்ளவர்களும், ஆர்ய-தர்ம-ஞானமே இல்லாதவர்களும் அல்லது மழுங்கிப்போனவர்களுமான சிலர் கீழ்ஜாதி-ஸ்தானங்களிலுள்ள ஜனங்களுக்கு ஏதோ சுத்தி-காரியங்களைச் செய்வித்து மேல்ஜாதி-ஸ்தானங்களுக்குத் தூக்கிவிட்டுவிடுவதாகச் செய்துவருகின்ற பாசாங்குகள் பெரும் மோசமும் பாபங்களுமேயாகும். ஈசுவரருடைய ஆஜ்ஞா-

ரூபங்களாகிய சுருதி-ஸ்மிருதிகளுக்கு நேர் எதிரிடையாக யத்தினங்களைச் செய்பவர்கள் ஈசுவர-துரோஹிகளென்றே சாஸ்திர-மூலமாக வெளியாவதால், அவர்கள் மற்ற எல்லோராலும் பரிதபிக்கப்படத் தகுந்தவர்களேயல்லாது கொண்டாடப் படத் தகுந்தவர்களல்ல. இப்படிப்பட்டவர்கள் அநியாயமாய் கலியின் ஏவுதலுக்குட்பட்டுத் தாங்களும் அதோ-கதியை அடைந்து மற்றவர்களையும் கெடுத்து வருகின்றார்கள். இவர்கள் தங்களை ஸ்ரீ வஸிஷ்டருக்குள்ள யோக்கியதையைக் காட்டிலும் மிகவும் அதிக யோக்கியதையுள்ளவர்களாகவே பாவித்து வருகின்றார்கள். ஸ்ரீ விசுவாமித்திரரின் சரீரம் இதிஹாஸத்தில் சொல்லியபடி பிராஹ்மண சரு (चरु) விலிருந்து உத்பன்னமானதால் அவர் பிறவியிலேயே பிராஹ்மணராகத் தான் இருந்திருக்கிறார். ஆகிலும் அவருடைய தாயார் செய்த சரு- (चरु) மாறுதலின் காரணத்தினால் அவர் க்ஷத்திரியரென்ற வியவஹாரமே உலகத்தில் உறுதியடைந்துவந்ததிலிருந்து அவர் உத்தம மஹரிஷியான பிறகும் அவரை பிரஹ்ம-ரிஷியாக (அதாவது பிராஹ்மண ரிஷியாக) ஒப்புக்கொள்ளாமல் ஸ்ரீ வஸிஷ்டர் தயங்கின விஷயம் ஜகத்-பிரஸித்தமே. ஸ்ரீ விசுவாமித்திரர் பிறவியில் பிராஹ்மணர்தான் என்ற விபரம் ஸ்ரீ வஸிஷ்டருக்கு நன்கு தெரிந்தும், அவர் பிறவியில் க்ஷத்திரியர் என்பதான உலகப்பிரஸித்திக்கு எதிரிடையாக அவரை பிரஹ்ம-ரிஷியென்று தான் ஒப்புக்கொண்டுவிட்டால் உலகத்தில் வர்ண-(ஜாதி) வியவஸ்தை கெட்டுப்போய்விடக் கூடுமே என்று தயங்கினார். இக்காலத்திய சுத்தி-கர்த்தாக்களோவெனில் பிறவி-விஷயத்தை கவனிக்காமலே, தாங்களே ஜாதிகளை மாற்றியும் கற்பித்தும் விடுவதான பாசாங்குமூலமாய் கோரமான மஹா-பாப-கிருத்தியத்தைச் செய்துவருகின்றார்கள்.

6. ஆலயப் பிரவேசம்

ஸாமான்ய புத்தியினால் ஊஹித்துச் சரியாய் நடந்துவரக் கூடிய சங்கதிகளில்கூட கால வித்தியாஸத்தினால் விபரீதக்

கொள்கைகளேற்பட்டு பல துர்க்கக்ஷிகள் செய்துவரப்படுகின்றன. விரிவை விலக்க உத்தேசித்து, அந்த துர்க்கக்ஷிகளில் இன்னும் ஒன்றை மாத்திரம் உதாஹரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். எல்லோரையும் ஸமமாகவே எண்ணிவரவேண்டுமாகையாலும், கடவுள் எல்லோருக்கும் பொதுவான படியாலும், ஏன் பஞ்சமர்கள் மிலேச்சர்களுள்பட எல்லோரும் எல்லா ஹிந்து ஆலயங்களிலும் பிரவேசித்து உள்ளெங்கும் போகக்கூடாதென்று கேட்கின்றார்கள். ஹிந்துக்களாயிருப்பவர்களுக்கு ஆகம-சாஸ்திரத்தில் நம்பிக்கையிருக்க வேண்டியது நியாயம். அந்த சாஸ்திரத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆலயங்களில் யார் யார் எதுவரையில் பிரவேசிக்கலாமென்ற விபரம் பூராவையும் அந்த சாஸ்திரமே தனித்தனியாக விதித்திருப்பதால், இந்த விஷயத்தில் உண்மையான ஹிந்துக்களுக்குள் ஸந்தேஹமாவது சச்சரவாவது உண்டாக இடமேயில்லை. அந்த சாஸ்திரத்தில் நம்பிக்கை இல்லாதவர்களால் இக்காலத்தில் மேற்கண்ட கேள்வி கேட்கப்பட்டுவருகின்றது.

ஆகம—சாஸ்திரத்திலேயே நம்பிக்கையில்லாதவர்களுக்கும் ஹிந்துக்களல்லாதவர்களுக்கும் அந்த சாஸ்திரப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஆலயங்களில் கடவுளிருக்கிறார் என்ற நம்பிக்கை மாத்திரம் எப்படி வந்ததோ தெரியவில்லை. இவ்வித நம்பிக்கையும் இவர்களுக்கு இல்லையென்றே சொல்ல வேண்டும். ஆலயத்தில் கடவுளிருப்பதாகவே எண்ணாத ஜனங்கள் மேற்கண்டபடி பிரவேச விஷயமான கக்ஷியைச் செய்வதானால் ஹடமே காரணமாகும், நியாயத்தின் பொருட்டல்ல. ஸர்வ வியாபியான கடவுள் எல்லோருக்கும் பொதுவானதால் அக்கடவுளை தர்சனஞ்செய்ய எல்லோருக்கும் அதிகாரமுண்டென்று சொல்லுகின்றார்கள். கடவுள் ஸர்வ வியாபியென்று தெரிந்துகொண்டவர்கள் ஆலயத்திற்கு வர வேண்டிய காரியம் என்னவோ தெரியவில்லை. அக்கடவுளை

அவர்கள் எல்லா இடங்களிலும் பார்த்துக்கொண்டிருப்பதை விட்டு ஆலயத்திற்குள் மாத்திரமிருப்பதாக எண்ணி ஏன் கக்ஷி செய்யவேண்டும்? கடவுள் ஸர்வவியாபியாக இருந்தாலும் அவரை மற்றவிடங்களில் பார்க்க முடியாததினாலும், ஆலயங்களில் விக்கிரக ரூபமாய் பார்க்கக்கூடியதினாலும், தாங்கள் வருவதாக அவர்கள் சொல்லும் பக்ஷத்தில், ஸர்வவியாபியான கடவுளையே ரூபத்துடன் ஆலயங்களிலிருக்கும்படி எப்படி யாரால் செய்யப்பட்டதென்று அவ்வாதிகளைக் கேட்பதுடன் அக்கடவுளே அப்படி ரூபத்துடனிருப்பதாக அவர்களுக்கு எப்படித் தெரியவந்ததென்றும் கேட்கின்றோம். ஆகம-சாஸ்திரப்படி அதிகாரமுள்ளவர்களால் அந்த சாஸ்திரவிதிகளின் பிரகாரம் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதினால் கடவுளின் ஸான்னித்தியம் ஏற்பட்டதென்றும், இப்படி ஸான்னித்தியமிருக்கக்கூடுமென்று அந்த சாஸ்திரத்தினால் தான் தெரிய வருகிறதென்றுமே அவர்கள் பதில் சொல்லக் கூடும். இப்படியானால் அந்த சாஸ்திரத்திற்கண்ட மற்ற நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றே முடிவாகும்.

தாங்கள் சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்களில்லையென்றும், மற்றவர்கள் ஆலயத்தில் கடவுளிருப்பதாகச் சொல்லும் வார்த்தையைக் கேட்டு மாத்திரம் தாங்கள் வருவதாகவும், தங்களுடைய கக்ஷி லௌகிக கக்ஷிதானென்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளும் பக்ஷத்திலும், அவர்களுக்கு லௌகிக நியாயமும் இல்லையென்பதே வெளியாகும். கடவுள் பொதுவாயிருந்தாலும், சில நிபந்தனைகளுக்குட்பட்டுச் சில வகுப்பு ஜனங்கள் மாத்திரம் ஆலயத்திற்குள் பிரவேசித்துக் குறிப்பிட்ட பிரகாரம் தர்சனஞ்செய்ய வேண்டுமென்ற உத்தேசத்துடன் ஓர் விக்கிரகத்தில் கடவுளின் ஸான்னித்தியமிருக்கும்படியான காரியங்களையுஞ்செய்து கட்டிடம் முதலியவைகளையும் ஏற்படுத்தி நெடுநாளாக அவ்வகுப்பினர்களே ஆலயத்திற்குள் வந்து தர்சனம்

செய்துகொண்டு வந்திருப்பதினாலேயே மற்ற வகுப்பினர்களான பஞ்சமர் முதலியோர்களுக்குப் பிரவேசிக்க பாத்தியமில்லை என்றே ஏற்படும். அதாவது எந்த சாஸ்திரத்தை அனுஸரித்து ஒரு ஆலயம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதோ அந்த சாஸ்திரத்தின் நிபந்தனைகளின்படி யார் யார் எவ்வளவு ஸமீபம் வரையில் வந்து தர்சனஞ்செய்யலாமென்று விதிகள் காண்கின்றனவோ அவ்விதிகளுக்கு ஜனங்கள் யாவரும் கட்டுப்படுவதான தீர்மானத்துடனேயே அந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதென்பதே நிச்சயம்.

7. ஆலயம் பொதுவல்ல

அன்றியும் அனாதிகாலமாக அவ்விதிகளை மீறிப்போகாமல் எல்லா ஜாதியார்களும் நாளது வரையில் நடந்து வந்திருப்பதும் அத்தீர்மானத்தையே தெளிவாகக் குறிப்பிடக்கூடியது. காவேரி–நதி–ஜலம் எல்லோருக்கும் பொதுவென்பதில் ஸந்தேஹமில்லை. இவ்விதப் பொது ஜலத்தை ஒரு தனிக் கால்வாய் வழியாகக் கொண்டுபோய் ஒருவர் தன் சொந்தக் கிணற்றில் சேர்ப்பித்துக்கொண்டுவிட்டால் அக்கிணற்றின் ஜலத்தில் பொது ஜனங்களுக்கு யாதொரு பாத்தியதையுமிருக்கக் கூடியதல்ல. நதியிலிருந்தே ஒரு குடத்தில் ஜலத்தையெடுத்து ஒருவர் தன் வீட்டிற்குக் கொண்டுபோனால், யாரும் அவ்வீட்டிற்குள் புகுந்து குடத்து ஜலத்தை உபயோகப் படுத்தலாமென்று சொல்ல இடமில்லை. பொதுவான நதி ஜலமே அக்குடத்திலிருந்தபோதிலும் பொதுஜன–பாத்தியம் அக்குட ஜலம் ஸம்பந்தப்பட்ட மட்டில் நீங்கிவிட்டதென்றே சொல்ல வேண்டும். மின்சாரம் எங்குமுள்ளதுதான், எல்லோருக்கும் பொதுத்தான். ஒருவிதத்தில் ஸர்வவியாபி யென்றே அதைச் சொல்லலாம். ஆகிலும் யாராவது ஒரு மின்சார–என்சினீயர் சிரமப்பட்டு ஒருயந்திரம் மூலமாக மின்சாரசக்தி வெளியாகும்படி செய்வித்துக்கொண்டால் மின்சாரமென்பது எல்லோருக்கும்

பொதுவானதால் அந்த யந்திரத்தை உபயோகிக்கவும் எல்லோருக்கும் பாத்தியமுண்டென்று சொல்லக்கூடுமா ? இதுபோல் ஸர்வ வியாபியான கடவுளின் சக்தி ஒரு விக்கிரஹ மூலமாய் வெளியாகும்படியாக சாஸ்திரத்திற்கண்டபடி விசேஷ மந்திர—தந்திரப் பிரயோகங்களைச் செய்து ஆலயம் நிர்மாண மாகி இருந்தால், அவ்வாலயத்தில் எல்லோரும் பிரவேசிக்கலா மென்று சொல்வதற்கிடமில்லை. ஸர்வவியாபியான கடவுள் பொதுவாயிருந்தபோதிலும், ஆலய—விக்கிரஹத்தில் ஏற்படுத்தப்பட்ட ஸான்னித்தியத்திலும் பொது பாத்திய மிருப்பதுபோல் சொல்வது பிசகு.

இப்படி பாத்தியமில்லாமலிருந்தபோதிலும் ஆலயத்திற்கு வெளியில் சாஸ்திரத்திற் குறிப்பிட்ட தூரத்திலிருந்துகொண்டு பஞ்சமர் முதலியோர் கடவுளை வணங்கித் தியானித்து வருவதில் யாருக்கும் ஆக்ஷேபணை இராது. நதியிலிருந்து வீட்டிற்குக் கொண்டுவரப்பட்ட ஜலத்தையும் தாக முள்ளோருக்குக் கொடுத்துவருவதே ஹிந்துக்களின் வழக்கம். ஆனால், தாகத்துடன் வந்தவர் தானிருக்கவேண்டிய இடத்தி லிருந்து கொண்டு ஜலத்தை வாங்கிப் பானஞ் செய்யக்கூடுமே யொழிய, அவர் வீட்டிற்குள் ஜல பாத்திரமிருக்கிறவிடம் வரையில் பிரவேசித்துத் தானே ஜலத்தை எடுத்து உபயோகிக்க பாத்தியஸ்தராகமாட்டார். ஆலயத்திலுள்ள விக்கிரஹத்தின் தர்சனத்தில் பஞ்சமாதிகளுக்கும் பாத்திய முண்டென்று வைத்துக்கொண்டாலும், அவ்வித பாத்தியம் சாஸ்திரத்தில் குறிப்பிட்டவிடத்திலிருந்து தர்சனஞ்செய்ய பாத்தியமாகுமே ஒழிய ஆலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடிய பாத்தியமாக மாட்டாது. ஒரு குடும்பத்தில் பொதுவாகப் பூஜை செய்து வரப்பட்ட விக்கிரஹாதிகளின் தர்சனத்தில் அந்தக் குடும்பஸ் தர்கள் எல்லோருக்கும் ஸமமான பாத்தியமிருந்தாலும், எல்லோரும் ஒரேவிதமாக தர்சனஞ்செய்யலாமென்பது தாத்பரியமல்ல. ஸ்நானஞ் செய்து நல்ல ஆசாரத்துடனிருக்கக்

கூடியவர்கள் பூஜை நடக்கின்ற இடத்தில் ஸமீபத்திலிருந்து தர்சனஞ்செய்யலாம். ஸ்நானஞ் செய்யாமலிருப்பவர்கள் ஸமீபத்தில் வராமல் தூரத்திலிருந்து தர்சனஞ் செய்யலாம். ஸ்நானஞ் செய்திருந்தபோதிலும், விசேஷ ஆசௌசாதி தீட்டுகளுடனிப்பவருக்குப் பூஜா-கிருஹத்திலேயே பிரவேசிக்க பாத்தியமில்லை. குடும்பத்திலுள்ள பஹிஷ்டா ஸ்திரீகள் வீட்டிற்குள் பிரவேசிக்கவே இடமில்லை. இவ்விதமாகவே ஹிந்துககளென்ற காரணததினால் பஞ்சமாதிகளுக்கும் ஆலய தர்சனத்தில் பாத்திய முண்டென்று எண்ணினாலும், அவர்கள் ஆலயத்திற்கு வெளியிலிருந்துகொண்டுதான் கடவுளை வணங்கலாமென்று சாஸ்திரமே குறிப்பிட்டுச் சொல்வதினால் அந்தப் படிதான் அவர்கள் தர்சனஞ் செய்யக்கூடுமென்றும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க அவர்களுக்கு பாத்தியமில்லையென்றுமே தீர்மானிக்கவேண்டும்.

உண்மையில் கடவுளின் பிரீதியில் மாத்திரம் உத்தேசமிருப்பவர்களுக்கு எங்கிருந்து தர்சனஞ் செய்தாலும் பாதகமில்லை. ஆலயத்திற்கு வெளியிலிருந்து தர்சனஞ் செய்தாலும் பூர்ணமான நற்கதி கிடைக்குமென்பது நந்தன் சரித்திரத்தினால் தெளிவாய்த் துலக்கப்பட்டுமிருக்கின்றது. சாஸ்திர-நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத் தன்னுடைய ஸ்தானத்தை விட்டுக் கொஞ்சமேனும் அதிக்கிரமித்துப்போகாமல் பக்தியைச் செலுத்தியதினால்தான், நந்தன் ஸர்வோத்தம பதவியை அடையவும் எல்லோராலும் கொண்டாடப்படவும் இடமாயிற்று. லிங்க-ரூபியான ஈசுவரனை நந்தன் பார்க்கமுடியாமல் நந்திகேசுவரர் மறைத்துக்கொண்டிருந்தபடியால், ஈசுவரனும் நந்திகேசுவரரைச் சற்று விலகச்சொன்னதாகத் தெரியவருகின்றதே அல்லாமல், நந்தனை ஆலயத்திற்குள் வரும்படி ஈசுவரன் சொல்லவில்லை. நந்தன் சரித்திரம் வெளிப்பட்டிருந்தும், முன் சொல்லிய தூர்க்கக்ஷிகள் ஏற்படுவதனால், காலத்தைத்தவிர வேறெங்கும் குற்றஞ்சாட்டுவதற்கில்லை.

அத்யாயம் 3.

முக்கிய ஸமதர்சனம்

1. அத்வைதானுபவம்

இதுவரையில் கௌணார்த்தத்தில் ஸமதர்சன–விசாரஞ் செய்ததில், மற்ற ஜீவர்களெல்லோரையும் தன்னைப்போலவே பாவித்து அவர்களுக்கு ஹிதமான வழியிலேயே தான் எப்போதும் நடந்துவரவேண்டுமென்றும், மற்றவர்களுக்கு ஹிதமான காரியங்களைச் செய்வதில் தனக்குக் கொஞ்சம் அஸௌகரியமேற்பட்டாலும் அதைப் பாராட்டக்கூடாதென்றும், எல்லோரையும் ஸமமாக பாவித்தாலும் அவரவர்களின் தனித்தனியான நிலைமைக்குத்தக்கபடி அவரவர்களிடம் அனுகூலமாக நடந்து வரவேண்டுமென்றும், இப்படி நடந்து வருவதில் காணப்படக்கூடிய பேதங்கள் ஸமதர்சனத்திற்கு விரோதமாகாதென்றும், ஆர்ய–ஹிந்துக்களுக்குள் ஜாதி–வியவஸ்தையிருப்பது தர்மத்திற்கு அனுகூலமான பெரும் ஸாதனமென்றும், மற்றும் சில விவரங்களும் வெளியிடப்பட்டன. இனி முக்கியார்த்தத்தில் ஸமதர்சன லக்ஷணத்தைத் தெரிந்துகொள்ளக்கூடிய முயற்சி–ரூபமான ஆராய்ச்சியையும் சற்றுச்செய்து பார்ப்போம். உண்மையான ஸமதர்சனத்தின் லக்ஷணம் பேச்சுக்கும் எழுத்துக்கும் விஷயமாகக்கூடியதல்ல. அது ஜ்ஞானிகளிடத்தில் அனுபவ விஷயமாக மாத்திரமிருக்கக் கூடியது. ஸாமான்ய ஜனங்களுக்கு அது இன்னதென்று வியக்தமாய்த் தெரியக்கூடியதல்ல. ஆகிலும், முக்கிய–பக்ஷத்தில் ஸமதர்சன–லக்ஷணம் ஒன்றிருக்கிறதென்ற விபரத்தை ஸாதாரண ஜனங்களும் அறிந்துகொள்ள வேண்டியதவசியம். அந்த முக்கிய லக்ஷணத்தின் அம்சங்களாகவே ஸாமான்யார்த்தத்தில் ஸமதர்சனத்தின் லக்ஷணங்கள் ஏற்பட்டனவென்றும் அறிந்துகொள்ளவேண்டும். முக்கிய

லக்ஷணத்தை ஸாக்ஷாத்கரித்துக்கொள்ள யோக்கியதை இல்லாதவர்கள் கௌண லக்ஷணங்களைக் கைக்கொண்டு ஸமதர்சனத்தை அப்பியஸித்து வந்தால் கடைசியில் முக்கிய ஸமதர்சனமே ஸாத்தியப்பட்டுவிடக்கூடியதென்ற காரணத்தினுல் வேத–சாஸ்திரங்களில் கௌண–ஸமதர்சனத்தின் பொருட்டு விதிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பூர்ண சிரத்தையுடன் அவ்விதிகளை அனுஸரித்து நடந்துவந்தால்தான் முக்கிய–ஸமதர்சனத்தை ஸாதித்துக்கொள்ளக்கூடிய யோக்கியதை உண்டாகும். அவ்விதிகளை பேதித்துக்கொண்டும், தனக்கு முக்கியார்த்தத்தில் ஸமதர்சன–யோக்கியதை ஏற்பட்டுவிட்டதாக நினைத்துக்கொண்டும், இப்படியே வெளியிட்டுப் புலம்பிக்கொண்டுமிருப்பவருக்குப் பின்னுல் துற்கதிதான் பலனென்றே சாஸ்திர வாயிலாகத் தெரியவருவதினுல், நற்கதியில் இச்சையுள்ளோர் தான் ஸாமான்ய ஸ்திதியிலிருப்பதாகவே எண்ணிக்கொண்டு கௌணவிதிகளையே ஆசரித்து வருவதுதான் நியாயமாகும். எக்காலத்தில் நற்கதியிற்கூட இச்சையில்லாமலும், தான் தனி ஜீவனென்ற புத்தியும் தன்னைச்சுற்றிலும் தனக்கு வேருக பிரபஞ்மிருக்கிறதென்ற எண்ணமும் பூராவும் அற்றுப்போயும், ஸமாதி நிலைத்து சுத்தானந்தானுபவமே விளங்குமோ அப்போதுதான் முக்கியார்த்தத்தில் ஸமதர்சன–யோக்கியதையுண்டாயிற்றென்று சொல்லலாம். அதுவரையில் சொல்வதற்கிடமில்லை.

ஆகையால், அபரோக்ஷஜ்ஞானிகளுக்குத்தான் முக்கியார்த்தத்தில் ஸமதர்சன முண்டென்று சொல்லவேண்டும். இங்கு ஸமம் என்பதற்கு ஏகம் என்றும், தர்சனம் என்பதற்கு ஸாக்ஷாத்காரம் என்றும் அர்த்தம். வாஸ்தவத்தில், ஏகமாய் அபின்னமாயிருப்பது எதுவோ அதுதான் ஸம்பூர்ணமாய் ஸமம் என்று ஏற்படும். இரண்டாக இருக்கின்ற பதார்த்தங்களுக்குள் பூர்ண–ஸமத்வம் இருக்க முடியாது. ஏதாவது ஒரு அம்சத்திலாவது வித்தியாஸமிருந்தால்தான் இரண்டு என்ற தன்மை

இருக்கக்கூடும். இரண்டு என்பதிலேயே ஒன்றல்ல என்பது ஸித்தம். தன்னைத்தவிர வேருெரு ஜீவனிருப்பதான எண்ணமிருக்கும் வரையில் ஸமத்வ-பாவனையும் பூர்ணமாய் இராது. எல்லா விதத்திலும் தனக்கு ஸமமாயிருக்கக்கூடியது தானே தவிர வேறென்றாக இருக்கமுடியாது. அன்றியும், பேதங்களுக்கு மத்தியில் அபேதங்களும் காணப்படுவதான துல்யத்தன்மைதான் மனோபாவனைக்கு விஷயமாகக்கூடியது. ஸம்பூர்ணமான ஸமத்வம் நேர் அனுபவஜ்ஞான விஷயமே அல்லாது மனோவிருத்தி ரூப-பாவனாவிஷயமல்ல. ஆதலால், எங்கும் எல்லோரிடத்திலும் ஸம்பூர்ண-ஸமப்பார்வை இருக்க வேண்டுமானால், அப்பார்வை எங்கும் எல்லோரிடத்திலும் தானே இருப்பதான பார்வையென்றேயாகும். இப்படி ஒன்று என்ற பார்வையில் தன்னுடைய ஸ்தூல-ஸூக்ஷ்மாதி சரீரங்களில் தான், தனது என்ற புத்தியாவது, மற்றவைகளில் பிறர், பிறரது என்ற புத்தியாவது இருக்கமாட்டாது. தன்னுடைய சரீராதிகளிலும் பிரபஞ்சத்திலுமுள்ளதும், ஒன்றுக்கொன்று வேறுபடுத்திக் காட்டக்கூடியதுமான, திருச்யாம்சம் பூராவும் மறைவடைந்தபின்புதான் உண்மையான ஸமதர்சனம் ஏற்படக்கூடும். திருக்-திருச்யம், போக்தா-போக்கியம், கர்த்தா-கர்மம், இவ்வித துவைதம் நிச்சேஷமாய் நிவிருத்தியாவதே ஸமதர்சனமாகுமென்று எண்ணவேண்டும். ஆகையால், ஸாக்ஷாத் அத்வைத-ஜ்ஞானானுபவமே ஸமதர்சனம், வேறல்ல என்பதே நிச்சயம்.

தர்சனமென்று சொல்வதினாலேயே திருக்-திருச்ய பேதமுள்ள ஸ்தானத்தில்தான் ஸமதர்சனம் இருக்கலாமென்று ஒருக்கால் ஸந்தேஹிக்கக்கூடும். தர்சனம் என்பதற்கு ஸாக்ஷாத்காரஜ்ஞானமென்று முன் சொல்லப்பட்டது. ஜ்ஞாதா, ஜ்ஞேயம், ஜ்ஞானம் என்ற திரிபுடி இல்லாத பிரஹ்மானந்த-ஸ்வரூபானுபவத்தைக் குறிப்பிடும்போது தர்சனம் என்ற பதத்தை உபயோகிப்பது நியாயமில்லையேயென்று கேட்கலாம்.

ஸாமான்யார்த்தத்தில் தர்சனம் என்ற பதம் ஒவ்வாதென்பது வாஸ்தவம். ஆகிலும், துவைதத்திலேயே இருக்கின்ற ஜீவர்களுக்கு போதிப்பிக்கும்போது அவர்களின் புத்திகளுக்கு விஷயமாகக்கூடிய விதமாகத்தான் பதப்பிரயோகங்களைச் செய்யவேண்டியதாயிருக்கின்றது. இவ்விதமாகவே வேதத்திலும் ஸாதனங்களாகிய சிரவண—மனன—நிதித்தியாஸனங்களினால் ஸாத்தியப்படக்கூடிய பயன் ரூபமான ஆத்மாவைக் குறிப்பிடும்போது 'द्रष्टव्यः' என்றே பதப்பிரயோகஞ் செய்யப்பட்டிருக்கின்றது. தர்சனம் என்பதினால், அனுபவமில்லாத ஸ்திதியை உத்தேசித்துப் பின்னால் ஏற்படுகின்ற அனுபவம் பார்க்கப்பட்டதுபோல் வர்ணிக்கப்படுகின்றது. அனுபவமில்லாத ஸ்திதிக்கும் அனுபவம் ஏற்படுகின்ற ஸ்திதிக்கும் மத்தியில் அனுபவம் உண்டாகிறதை ஸாக்ஷாத்கரிப்பதையே தர்சனம் என்ற பதம் குறிப்பிடுகின்றதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

2. ஸாமான்ய தர்மம்

முக்கிய — ஸமதர்சன — லக்ஷணத்தின் அம்சங்களாகவே ஸாமான்ய — ஸமதர்சன — லக்ஷணங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், அமுக்கிய — ஸமதர்சன — விதிகளாகவே அனேக ஸாமான்ய—தர்ம—விதிகள் (Rules of morality) உண்டானவை என்றும் முன் சொல்லப்பட்டது. பெரும்பாலும் ஜனங்களுக்கு முக்கியார்த்தத்தில் ஸமதர்சனம் பிடிபடக்கூடியதில்லையாகையால், அமுக்கியார்த்தத்திலேயே ஸமதர்சனமென்பதைத் தெரிந்துகொண்டு அவரவர்களின் சக்திக்குத் தக்கபடி ஸாமான்ய-தர்மங்களை மாத்திரம் அனேகமாய் ஜனங்கள் அனுஸரித்து வந்திருக்கின்ற காரணத்தினால், ஸாமான்ய-தர்ம-விதிகளின் ஜ்ஞானந்தான் எங்கும் ஏறக்குறையப் பரவியிருக்கக் கூடியது. முன்னால் குறிப்பிட்ட பிரகாரம் இந்த ஆர்ய-ஸ்வதேசமாகிய பரத கண்டத்தைவிட்டுப் பலகாலங்களில்

லௌகிக நன்மையிலேயே நோக்கமுள்ள ஜனங்கள் உலகத்தில் மற்ற தேசங்களுக்குக் குடியேறிப்போகும்போது அவர்களிடம் ஸாமான்ய-தர்மங்களின் ஜ்ஞானந்தான் கொஞ்சங்கொஞ்சம் இருந்துவந்தபடியால், அத்தேசங்கள் பூராவிலும் அந்த தர்மங்கள் அவசியமென்பதான கொள்கை மாத்திரம் பரவி யிருக்கின்றது. இப்பரத கண்டத்திலேயும் ஜ்ஞானிகளிடத்தில் மாத்திரம் காணப்படக்கூடிய முக்கியபக்ஷ-ஸமதர்சனம் மற்ற தேசங்களுக்குப்போகக்கூடாததாலும், சுத்த-வைதிக-விசேஷ-தர்மானுஷ்டானங்களும் இத்தேசத்திற்குள்ளாகவே இருந்தபடி யாலும், வேதத்தினுல் மாத்திரம் வெளியிடப்பட்டிருக் கின்றதான முக்கிய-ஸமதர்சனம் ஒன்று உண்டென்ற விஷயமே மற்ற தேசங்களில் தெரியக்கூடாததாலும், ஸாமான்ய-தர்மங்களுக்கு மேலான தர்மங்களே கிடையா தென்ற கொள்கையுடன் மற்ற தேசத்தார்கள் திருப்தர்களா யிருந்துவிட்டார்கள்.

நாளடைவில் அத்தேசங்களில் புத்திக்கூர்மையுள்ள தத்துவவாதிகள் ஸாமான்ய தர்மங்களை மனிதன் கைக்கொள்ள காரணம் என்னவென்று ஆலோசிக்கும்போது, அவரவர் களுக்குத் தோன்றியபடியெல்லாம் காரணங்களைக் கற்பித்து வந்திருக்கின்றுர்கள். முக்கியார்த்தத்திலுள்ள ஸமதர்சனத்தின் லக்ஷணத்திலிருந்தே அமுக்கியார்த்தத்தில் அதன் லக்ஷணங் களும் அவைகளுக்கு அனுஸரணையான தர்ம-விதிகளும் ஆதியில் இப்பரதகண்டத்திலேயே உண்டாகி அப்பால் வெளிப் பிரதேசங்களிலும் பரவியிருக்கின்றனவென்ற விபரத்தைத் தெரிந்துகொள்ளாமல், மனுஷ்ய – ஸ்வபாவத்திலேயே ஸாமான்ய-தர்மங்களின் காரணங்களைத் தேடிப்பார்த்துக் கொண்டு பலர் பலவிதமாகவும், ஒருவருக்கொருவர் விரோத மாகவும் காரணங்களைச் சொல்லுகின்றுர்கள். அனேக ஜனங்களுக்கு அதிக நன்மை எதனுல் உண்டாகுமோ அதுதான் தர்மம் என்று ஒருவர் (Utilitarian) சொல்லி

வருகின்றார். இது சரியல்லவென்றும், மனிதனிடத்தில் மற்ற விஷயங்களை அறிந்துகொள்வதற்கு இந்திரியங்களிருப்பது போல் தர்மம் இன்னதென்று அறிந்துகொள்ளவும் ஒரு தனி இந்திரியம் (Moral sense) இருக்கிறதென்றும் மற்றொருவர் சொல்லுகின்றார். மூன்றாவது தத்துவவாதி முன்சொன்ன இரண்டு அபிப்பிராயங்களும் தப்பென்றும், இயற்கையாகவே மனிதனிடத்தில் தர்மத்தையும் அதர்மத்தையும் பிரித்து வெவ்வேறாகத்தெரிந்துகொள்வதற்கு உள்-விவேக-சக்தி (Intuition) இருக்கிறதென்றும் சொல்லுகின்றார். இப்படிப் பலர் உண்மையைத் தெரிந்துகொள்ளாமலே, தாங்கள் சொல்வதே சரியென்று பாமர ஜனங்களுக்கு போதித்துக்கொண்டும், தத்துவவாத-கக்ஷிகளை நாளுக்கு நாள் அதிகப்படுத்திக் கொண்டும், உண்மையில்லாத விபரங்களை ஜோடித்து பிரமத்தையுண்டாக்கக்கூடிய பெரும் புஸ்தகங்களை எழுதி அச்சுப்போட்டுப் பிரசாரஞ்செய்துகொண்டும், உலகத்தில் அஜ்ஞானத்தையே பெருகச்செய்து வருகின்றார்கள்.

3. பிரஹ்மம்தான் ஸர்வஸமம்

பிரஹ்மம் என்று சொல்லப்பட்ட ஆத்மா ஒன்றுதான் ஸத்தியப்பொருள். அதன் ஸ்வரூபம் ஸத்-சித்-ஆனந்த ஸ்வரூபம். அழியக்கூடியதும், காணப்படுகின்றதும், துக்க ஹேதுவாயிருப்பதுமான திருச்ய பிரபஞ்சம் பூராவும் மித்யையே. எவ்விடத்திலும், மனிதன், மிருகம், பக்ஷி, மீன், அற்பஜந்து, விருக்ஷம், புல், பூண்டு முதலான ஸகல ஜீவர்களிடத்திலும், முக்காலத்திலும் ஸ்திரமாய் மாறாமலுள்ளது அந்த ஸத்-சித்-ஆனந்த-பிரஹ்மந்தான். அது ஒன்றே தவிர பலவல்ல. ஏகமாயிருக்கிற அதுவே ஸர்வ-ஸமம். அதுவே தானென்ற அநுபவந்தான் ஸமதர்சனமாகும். இவ்வித அநுபவமில்லாதவர்களுக்கு பேதப்பிரபஞ்சமே ஸத்தியமாகத் தோன்றுமாகையால், அப்பிரபஞ்சமும் அதிலுள்ள பதார்த்தங்களும் நானாவித ஜீவ-சரீரங்களும் கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், ஸகல ஜீவர்களும் கடவுளின்

அம்சங்கள், அதாவது குழந்தைகள் தானென்றும், ஆகையால் எல்லா ஜீவர்களும் பரஸ்பரம் ஸஹோதர-பாவத்தை முன்னிட்டு ஒருவருக்கொருவர் எப்போதும் ஹிதத்தைச்செய்துகொண்டே இருக்கவேண்டுமென்றும், ஒருவராலும் மற்றொருவருக்குக் கெடுதல் செய்யப்படக் கூடாதென்றும் தாத்பரியத்துடன், எல்லோரும் ஒருவருக்கொருவர் நடந்துவரவேண்டிய கிரமங்களை கிலுப்தப்படுத்தி சாஸ்திர-விதிகள் விஸ்தாரமாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதிகளின்படி தவருமல் நடந்து வருபவர்கள் எப்படி முடிவில் ஏகத்வஜ்ஞானத்தையே அடைந்து முக்கிய ஸமதர்சிகளாவார்களோ அப்படியே அவ்விதிகள் அத்புதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளிலிருந்து தான் உலகத்திலிருக்கிற ஸகல ஸாமான்ய-தர்மவிதிகளும் (Moral rules) பிறந்திருக்கின்றன. பிறந்து வெகுகாலமாகி விட்டபடியால், பிறந்த இடத்தையும் தாயையும் மறந்துபோயும் தெரிந்துகொள்ளாமலும் அவ்விதிகளின் மூலகாரணங்களை மேற்கண்ட தத்துவ-வாதிகள் கண்டவிடங்களில் தேடிப் பார்த்துக்கொண்டு காலத்தை வீண்படுத்தி வந்திருக் கின்றார்கள். இப்போதுதான் கொஞ்ச காலமாக ஐரோப்பியர் களிலும் அமெரிக்கா தேசஸ்தர்களிலும் சில தத்துவ-பரி சோதகர்கள் ஹிந்து-வைதிக-அத்வைதக்கொள்கையை ஒரு விதமாகத் தெரிந்துகொண்டு, தங்களுக்கு முன் இருந்த தத்வ வாதிகள் சொல்லிவந்ததெல்லாம் சரியாயிருக்கக்கூடியவையல்ல வென்று சொல்ல ஆரம்பித்திருக்கின்றார்கள்.

4. தர்மாதர்ம லக்ஷணம்

எங்கும் ஆத்மாதான் உள்ளது, அது ஸமம், ஏகம் என்பதே எல்லா தர்மங்களுக்கும் மூல காரணம். ஏகத்வத்தை உறுதிப் படுத்தக்கூடிய எண்ணங்களும் செய்கைகளும் தர்மங்களாகும். ஏகத்வத்திற்கு விரோதமான, அதாவது, அதை பேதப்படுத்தக் கூடிய எண்ணங்களும் செய்கைகளும் அதர்மங்களாகும்.

ஸாமான்ய தர்மாதர்மங்களில் எதை விபாகப்படுத்திப் பரி சோதித்துப் பார்த்தாலும் இந்த லக்ஷணமே கடைசியில் வெளி யாகும். இது ஒருக்காலமும் மாருத நித்தியமான லக்ஷணம். துல்யபாவம், ஸஹோதரபாவம் முதலியதெல்லாம் ஏகத்வ ஜ்ஞானத்தின் லேசமான அம்சங்களே தவிர வேறல்ல. மேலும், தன்னைப்போல் மற்ற ஜீவர்களை பாவிக்கவேண்டுமென்று சொல்வதினுலேயே 'தான்' என்பதற்கே பிரதானத்தன்மை ஸித்திக்கின்றது. கங்கைக்கு ஸமானம் காவேரி, காசிக்கு ஸமானம் கும்பகோணம், என்ருல் கங்கைக்கும் காசிக்கும் முக்கியத் தன்மையைக்கொடுத்து, காவேரியையும் கும்ப கோணத்தையும் ஸ்தோத்திரஞ்செய்வதாகவே அர்த்தமாகுமே அல்லாமல் எல்லாவிதத்திலும் கங்கையுடையவும் காசியுடைய வும் மஹிமைகள் மற்ற இரண்டுக்கும் ஸித்தித்துவிட்டதாகச் சொல்லமுடியாது. இதுபோல், கௌண-ஸமதர்சனத்தில் தன்னைப்போலவே மற்ற ஜீவர்கள் பாவிக்கப்பட்டபோதிலும், தான் என்பதற்குள்ள பூர்ணபாவமும் மற்றவர்களுக்கு ஸம்பந்தப்பட்டதாகச் சொல்லக்கூடாது. மற்றவர்களின் விஷயத்தில் எந்த அம்சத்திலாவது கொஞ்சம் குறைவு இருந்தே தீரும். ஆகையால், கௌணர்த்தத்தில் ஸமம் என்று சொல்வது முழுவதும் ஸமம் என்று அர்த்தங்கொடுக்காது; சில விஷயங்களில், அல்லது, பெரும்பாலும் ஸமம் என்றுதான் அர்த்தமாகும்.

முக்கியார்த்தத்திலோவெனில், தானே எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பது பற்றி, பூர்ண-ஸமத்வம் ஸித்திக்கு மென்பதே உறுதி. பூர்ண-ஸமத்வம் ஸித்தித்து ஏகமாய் நிற்கிற ஆத்ம-வஸ்துவுக்கு விஷயமாகக் கூடியது வேறென்றுமில்லாததினுல் தன் – ஸ்வரூபபூதமாயிருக்கின்ற ஸத்–சித்–ஆனந்த–ஸ்பூர்த்தியே தர்சனம் என்ற பதத்தினுல் குறிப்பிடப்படுகின்றது. இவ்வித தர்சனம் பார்க்கப்பட்டது, பார்க்கிறவர், பார்வை என்ற திரிபுடியுள்ள பார்வை யல்ல.

இது திரிபுடியற்ற கேவல ஸ்வரூபானுபூதியே. அதிஸாமான்யார்த்தத்தில் 'பார்ப்பது' என்று சொல்லுமிடத்தில்கூட நேத்திரேந்திரியத்தின் மூலமாக மனோவிருத்தி வெளிக்கிளம்பி பார்க்கப்பட்ட பதார்த்தத்தை வியாபித்து அத்துடன் ஒன்றாகவே ஆவது என்றுதான் அர்த்தம். ஆனால் இந்தப் பார்வை ஸம்பூர்ணப் பார்வையல்ல. இப்பார்வை நாசத்துடன் கூடியதும் தவிர பிசகான பார்வையாகவுமிருக்கலாம். அதாவது, இப்பார்வையில் பார்க்கின்ற சேதனனைவிட பார்க்கப்படுவது பின்னமாக இருப்பதால் இவ்விரண்டுக்குமுள்ள ஸம்பந்தம் நீங்கிப்போய்விடும்; அல்லது, பார்க்கப்பட்டது எதுவோ அது, கானல் ஜலம் போல், பொய்யாயிருக்கக்கூடியதால் பார்வையே பிரமமாகவுமிருக்கலாம். இவ்விருவகை தோஷங்களும் ஏகத்வ-விஜ்ஞான-ரூபப்பார்வையில் இருக்க இடமில்லை. தன்னிடத்திலிருந்து தனக்கு எக்காலத்திலும் வியோகம் (பிரிவு) ஏற்படாது. தனக்குத்தானே பொய்யாகவும் ஆகமுடியாது. ஆகையால் ஏகத்வ விஜ்ஞானத்தைத்தான் ஸம்பூர்ணப் பார்வை (सम्यग्दर्शनम्) என்று சொல்லக்கூடும். இவ்விதமாக ஸம்பூர்ண-ஸமத்வமும் ஸம்பூர்ண-தர்சனமும் ஒன்று சேர்ந்திருக்கக்கூடிய முக்கிய - பக்ஷ - ஸமதர்சனமே உண்மையான ஸமதர்சனமாகும். ஸாமான்யார்த்தத்தில் ஸமதர்சனமென்று கூறப்படுவது ஏகதேசத்தில் ஸமதர்சனத்திற்கு ஸமானமாயிருப்பதாலும், பூர்ண-ஸமதர்சனத்தில் கிரமங்கிரமமாக அப்பியாஸகர்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிவித்து விடக்கூடியதாலும், ஸமதர்சனம் என்ற பெயராலேயே மரியாதை செய்யப்படுவதுபோல் அழைக்கப் படுகின்றதேயல்லாது அதுவே உண்மையான ஸமதர்சனமாகிவிடமாட்டாது.

5. ராஜயோக பலன்

மேற்கண்ட உண்மையான ஸமதர்சனத்தின் பொருட்டுச் செய்யப்படுகின்ற அப்பியாஸந்தான் ராஜயோகாப்பியாஸ

மென்று சொல்லப்படுகின்றது. ஆராய்ச்சி செய்து பார்த்து அடையத் தகுந்ததென்று தெரிந்துகொள்ளக் கூடியவைகளுக்குள்ளாக ஏகத்வ-விஜ்ஞானத்தைக்காட்டிலும் உத்தமமானது வேறொன்றுமில்லையாதலால், அதுவே ஸகல யோகஸித்திபலன்களுக்கும் மேலான ராஜயோக பலனென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வித ஏகத்வ-விஜ்ஞானந்தான் ஸாக்ஷாத் கைவல்ய மோக்ஷத்திற்கு அந்தரங்க-ஸாதனம். ஆதலால் முக்கியார்த்தத்தில் ஸமதர்சனமுள்ளோருக்கு முக்கியமான புருஷார்த்தமாகிய மோக்ஷம் ஸ்வதஸ்ஸித்தமாகவேயிருக்கின்றது. முன் விவரித்தபடி அமுக்கியார்த்தத்தில் ஸமதர்சனம் ஸித்தித்திருப்பவர்களுக்கும் மோக்ஷத்திற்கு ஸாதனரூப-புருஷார்த்தமாயிருக்கின்ற தர்ம-புருஷார்த்தம் கைக்கெட்டிவிடுகிறபடியால், அந்த தர்மமூலமாகப் படிப்படியாக மேல் ஸ்தானங்களுக்கு ஏறிப்போய் காலக்கிரமத்தில் ஏகத்வ-விஜ்ஞான-ரூபமான முக்கிய-ஸமதர்சனத்தையே எட்டிப் பிடித்துக்கொண்டு அதன்மூலமாய் மோக்ஷானந்தத்தையும் ஸாதித்துக்கொள்ளக்கூடும். தர்மம் ஸித்திப்பதினால் இஹ லோகத்திலும் சுகமுண்டு, பரலோகத்திலும் நற்கதியுண்டு. தர்மமூலமாய் ஜ்ஞான-ஸித்தியைப்பெற்றால் கைவல்ய முக்தியேயுண்டு. ஆகையால் மனிதனுக்கு வாஸ்தவமான நன்மையென்று எவையெல்லாம் எண்ணப்படக்கூடியவைகளோ அவை எல்லாவற்றையும் ஸாதித்துக்கொடுக்கக்கூடியது ஸமதர்சனமென்பதே ஸித்தம்.

அத்தியாயம் 4.

பிராஹ்மண்யம்

1. மோக்ஷத்தில் முக்யாதிகாரி

பிரஹ்ம-ஜ்ஞானத்தை ஸம்பாதிப்பதே பிராஹ்மண-ஜன்மத்தின் முக்கியமான காரியம். பிரஹ்மஜ்ஞானத்தினுல்தான் மோக்ஷம் ஸித்திக்கும். மோக்ஷ ஸித்தியே பிராஹ்மண ஜன்மத்தின் முடிவான பலன். வேத-சாஸ்திரங்களினுல் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற நான்கு புருஷார்த்தங்களில முக்கிய புருஷார்த்தமாகிய மோக்ஷம் அவ்விஷயத்தில் முயற்சியுள்ள பிராஹ்மணனுல் நிச்சயமாக அடையப்படக்கூடியது. இப்படியே தர்ம-புருஷார்த்தம் க்ஷத்திரியனுலும் அர்த்த-புருஷார்த்தம் வைசியனுலும், காம-புருஷார்த்தம் சூத்திரனுலும் முயற்சியின்பேரில் அடையப்படக்கூடியவைகள். இப்படிச் சொல்வதினுல் மோக்ஷம் க்ஷத்திரிய-வைசிய-சூத்திராதிகளுக்குக் கிடையாதென்ருவது, தர்மார்த்தகாமங்கள் பிராஹ்மணனுக்கும், அர்த்தகாமங்கள் க்ஷத்திரியனுக்கும், தர்மகாமங்கள் வைச்யனுக்கும், தர்மார்த்தங்கள் சூத்திரனுக்கும் கிடையாதென்ருவது தாத்பரியமல்ல. நான்குவித புருஷார்த்தங்களிலும் எல்லோருக்கும் அதிகாரமிருப்பது வாஸ்தவமாஞலும் அவரவர்களின் ஜாதிக்குள்ள நிலமையை உத்தேசித்து ஸாதாரணமாய் பிரயத்தினத்தின்பேரில் ஸாத்தியப்படக்கூடிய புருஷார்த்தம் இன்னதுதான் என்று தனித்தனியாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. முன்சீப் கோர்ட்டிலேயே இருந்துகொண்டு தொழிலை நடத்திவருகிற வக்கீலுக்கு மாஸம் ஒன்றுக்கு ஆயிரரூபாய்க்குமேல் வரும்படி கிடைக்கக்கூடாதென்ருவது, ஹைகோர்ட்டில் தொழில் நடத்திவருகிறவருக்குத்தான் இருபத்தையாயிரம் ரூபாய் கிடைக்கலாமென்ருவது விதி கிடையாது. இப்படி விதி ஏற்படாமலிருந்தும், ஸாமர்த்தியமும் புத்தியும் எவ்வளவு

அதிகமாயிருந்தபோதிலும், முன்சீப்கோர்ட்டு வக்கீலுக்கு ஆயிர-ரூபாய்க்குமேலாகவும், ஜில்லா கோர்ட்டில் இருந்து வருகிற வக்கீலுக்கு ஐயாயிர-ரூபாய்க்கு மேலாகவும். எப்படி ஸாதாரணமாய் கிடைக்கிறதில்லேயோ, கிடைப்பதற்கு அவகாசமும் குறைவோ, அப்படியே க்ஷத்திரியாதிகளுக்கு தர்மாதி-புருஷார்த்தங்கள்தான் ஸாதாரணமாய் ஸித்திக்கக்கூடியதென்பது கருத்து. இந்த ஸாமான்ய விதிக்கு விலக்காக பல உதாஹரணங்கள் புராணங்களிலும் பக்தர்களின் சரித்திரங்களிலும் துலங்குகின்றன. சாஸ்திரப்படிக்குள்ள அவரவர்களுடைய வர்ணுசிரம விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்டே அவரவர்களுக்குத் தகுதியான மார்க்கத்தில் மேலான விசேஷ முயற்சிகளேயும் செய்தால் மோக்ஷ-புருஷார்த்தமே யாருக்கும் கைகூடலாம். இவ்விதம் முயன்று வந்ததின் பேரில்தான் நந்தன் முதலான உத்தம பக்தர்களுக்கு உயர்ந்த பதவி கிடைத்ததாகச் சரித்திரங்கள் மூலமாய் வெளியாகின்றது. இப்படியே பிராஹ்மண-ஜன்மமேற்பட்டும் அதன் முக்கிய பலனே அடையாமலிருப்பதுடன் கீழான புருஷார்த்தங்கள்கூட கைக்கெட்டாமலிருந்து அனேகர் கஷ்டப்பட்டுக்கொண்டுமிருக்கின்றுர்கள். ஹைகோர்ட்டிலேயே இருந்து வருகிற வக்கீல்களுள்ளும் முன்சீப்கோர்ட்டு வக்கீலுக்குக் கிடைக்கிற வரும்படியில் ஸ்வல்ப பாகங்கூட கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்களுமுண்டு.

2. மார்க்கங்கள் வேறுபடும்

மோக்ஷத்திற்கு அந்தரங்கஸாதனமாகிய பிரஹ்ம-ஜ்ஞானமென்பது "தானே பிரஹ்மம்" என்ற அபரோக்ஷமான நேர் அனுபவ-ஜ்ஞானம். இது கேள்வியினுலும் புஸ்தகத்தினுலும் ஏற்படக்கூடிய மனே-விருத்தி-ரூபமான அறிவல்ல. காசியைப் பார்க்காதவன் மற்றவர்களிடத்திலிருந்தும் புஸ்தகத்தினுலும் காசியின் விபரங்களேத் தெரிந்துகொண்டால் அவனுடைய

காசிஜ்ஞானம் ஸாக்ஷாத்ஜ்ஞானமல்ல. காசிக்குப்போய் நேரில் பார்த்தவனுடைய ஜ்ஞானந்தான் உண்மையான காசிஜ்ஞானம். இதுபோல், மற்றவர்களிடம் கேட்டும், வேதாந்த-புஸ்தகங்களைப் படித்தும் ஏற்படக்கூடிய ஜ்ஞானம் வாஸ்தவ பிரஹ்ம ஜ்ஞானமல்ல. இது நேரில் தெரிந்துகொள்ளாத, அதாவது, பரோக்ஷமான ஜ்ஞானம். காலதோஷத்தினுல் வெகு பெயர்கள் புதிதான சிற்சில ஸாமான்ய புஸ்தகங்களைப் படித்துவிட்டுத் தங்களை ஜ்ஞானிகளென்றே எண்ணிக்கொண்டு, பிரஹ்மானுபவம் இன்னதென்றே தெரியக்கூடாத நிலைமையிலிருந்து கொண்டு தங்களுக்கே பிரஹ்மானுபவமிருப்பதாகப் பிரமம் கொண்டுமிருக்கின்றுர்கள். எந்த வேத-சாஸ்திரங்களினுல் பிரஹ்மத்தின் ஸ்வரூபமும் உண்மையான அனுபவத்தின் லக்ஷணமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனவோ, அவைகளிலேயே அந்த அனுபவம் ஏற்படுவதற்கு மார்க்கம் என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்று விசாரிப்பதற்கும் அவர்களுக்கு புத்தியுண்டாவதில்லை. தங்களுக்கே பிரஹ்மானுபவமிருப்பதாகப் பிரமம்கொண்டவர்கள் அம்மார்க்கத்தைப்பற்றி ஏன் விசாரிக்கப்போகிறுர்கள்? இக்காலத்தில் உண்மையான ஜ்ஞானிகள் எங்கிருக்கிறுர்களென்று ஸாதாரணமாய்த் தெரியக்கூடியதில்லை; மேற்கண்ட போலி ஜ்ஞானிகளை எங்கும் பார்க்கலாம்.

மோக்ஷ-மார்க்கம் இன்னதென்று துலக்கிக்கொடுக்கின்ற வேத சாஸ்திரங்களில் பிரவேசமாவது தேர்ச்சியாவது ஏற்படக்கூடாதவர்கள் அத்தேர்ச்சியுள்ளவர்களிடம் கேட்டு அம்மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியது மிக்க அவசியம். அவரவரின் வர்ணுசிரம-நிலைமைக்குத் தக்கபடி அம்மார்க்கம் வேறுபடும். காசிக்குப்போகவேண்டுமானுல், கன்யாகுமாரியிலிருந்து போகிறவர்களுக்கும், கல்கத்தாவிலிருந்து போகிறவர்களுக்கும் ஆரம்பம் முதல் மார்க்கம் ஒன்ருக மாட்டாது. அவரவரின் ஸ்தானத்திலிருந்து போவதற்கு

மார்க்கங்கள் வெவ்வேருகவே ஏற்பட்டிருக்கின்றன. கன்யா குமாரியிலிருந்து போகிறவருக்கு வடக்கே போகவேண்டு மென்றும், கல்கத்தாவிலிருந்து போகிறவருக்கு மேற்கே போக வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதை அலக்ஷியஞ்செய்து விட்டு, கன்யாகுமாரியிலிருப்பவர் தான் ஏன் கல்கத்தாக்காரரின் விதியைக் கைக்கொள்ளக்கூடாதென்று எண்ணி, தானும் மேற்கு முகமாகவே போகயத்தனித்தால் ஸமுத்திரத்தைத்தான் எதிரில் காணலாம். காசி தென்படாது. லௌகிக உத்யோகஞ் செய்வது முக்கியமாய் பணம் ஸம்பாதிப்பதற்காகத்தான் ஏற்பட்டிருக்கிறது. வக்கீல் – பரீக்ஷைக்கு வாசிப்பவர், எஞ்சினீயர்–பரீக்ஷைக்கு வாசிப்பவர், இவ்விருவர்களுடைய முடிவான உத்தேசம் பண–ஸம்பாத்யந்தான். இப்படிப்போல், ஜாதிகளுக்குள்ள வெவ்வேறு தர்மங்களின் முடிவான உத்தேசம் மோக்ஷம் ஒன்றுதான். எப்படி ஒரே திரவியத்தை ஸம்பாதிக்க அவரவர்களின் மனப் பிரவிருத்திக்கு அனுகூலமாக வெவ்வேறு படிப்புகளும், அப்பியாஸங்களும் பரீக்ஷைகளும் ஏற்பட்டிருக்கின்றனவோ அப்படியே ஒரே மோக்ஷ–புருஷார்த்தத்தை முடிவில் அடைவதற்காக அந்தந்த ஜாதியார்களின் பூர்வ–ஜன்ம குண–கர்மங்களுக்கு அனுகூல மாக ஈசுவரனால் வேத–சாஸ்திரங்களின் மூலமாய் வெவ்வேறு அப்பியாஸங்களும் தர்மங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் முக்கிய உத்தேசம் பணந்தானேயென்று சொல்லிக்கொண்டு, எஞ்சினீயர் பரீக்ஷைக்குப் படிப்பவர் பி.எல். மாணுக்கருக்கு ஏற்பட்டிருக்கின்ற சட்டபுஸ்தகத்தையெடுத்துப் பார்த்துக்கொண்டிருந்து தனக்கேற்பட்டிருக்கின்ற புஸ்தகங் களையும் அப்பியாஸங்களையும் கவனிக்காமலிருந்தால் அவருக்கு பரீக்ஷையும் தேருது, பணமும் கிடைக்காது. எல்லோருடைய உத்தேசமாகிய பணம் ஒன்ருகவிருந்தாலும் அதை ஸம்பாதிக் கும் வழிகள் வெவ்வேறுதான். மோக்ஷமென்பது எல்லோருக் கும் பொதுவான முக்கிய உத்தேசமானுலும், அதை அடையும் மார்க்கங்கள் வெவ்வேறுதான். அவரவருக்குக் குறிப்பிடப்பட்

டிருக்கின்ற மார்க்கத்திலிருந்துகொண்டு யத்தனஞ்செய்தால் தான் அது கைகூடும். ஒருவருக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற மார்க்கத்தில் மற்றவர் பிரவேசித்தால் துர்க்கதிதான் பலனாகும். ஆகையால் மோக்ஷத்திலேயே உத்தேசமிருப்பது எல்லோருக்கும் பொதுவானாலும், அவரவரின் வர்ணாசிரம நிலைமைக்குத் தகுந்த தனிமையான மார்க்கம் எதுவென்று முதலில் நன்றாக விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் முக்கியம்.

3. கர்ம—பக்தி யோகங்கள்

மோக்ஷமடைகிற மார்க்கம் இன்னதென்று தெரிந்துகொண்டால் மட்டிலும் போதாது. அம்மார்க்கத்தில் செல்வதற்குள்ள பிரயத்தினத்தையுஞ் செய்யவேண்டும். ரயிலேறி காசிக்குப்போகவேண்டுமானால் ரயில்வே—கைட்—புஸ்தகத்தைப் பார்த்தால் மார்க்கம் துலங்கும். அப்புஸ்தகத்தை திருப்பித் திருப்பிப் பார்த்து மைல்—கணக்கு மணிக்கணக்குகளை மனப்பாடம் பண்ணினதினால் காசியை நோக்கிச் சென்றதாக ஏற்படாது. வேதாந்தத்தையும் அதற்கு உதவியான மற்ற சாஸ்திரங்களையும் எவ்வளவு படித்தாலும், எவ்வளவு தடவை மற்றவர்களுக்குப் பாடஞ்சொல்லி வைத்தாலும், வாக்கியார்த்த விஷயத்தில் விசேஷ ஸாமர்த்தியமுண்டாயிருந்தாலும், தனக்கு ஆத்மானுபவம் உண்டாகக்கூடியதான சாஸ்திரப்படிக்குள்ள அப்பியாஸங்களைச் செய்தாலொழிய தன்னுடைய பரோக்ஷஜ்ஞானம் பயன்படாது. ரயில்வே—கைட் புஸ்தகத்தை மனப்பாடஞ் செய்துவிட்டு கரூரில் தன் வீட்டை விட்டு அசையாமலிருக்கிறவரைவிட புஸ்தகத்தையே பார்க்காமல் மற்றவர்களின் வார்த்தையை நம்பி காசியை உத்தேசித்து ஈரோடு வரையில் போயிருக்கிறவருக்கு காசி கொஞ்சம் ஸமீபந்தான். வாய்ப்பேச்சு வேதாந்த உபதேசகர்களைவிட ஸந்தியாவந்தனம் முதலான நித்ய—நைமித்திக கர்மாக்களை ஒழுங்காய்ச் செய்து வருகிறவர் மேலானவரென்றே சொல்லவேண்டும்.

அநேகரின் மனஸில் தாங்கள் உடனே ஜ்ஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டு மோக்ஷத்தை அடையவேண்டுமென்று உத்தேசமிருக்கிறது. ஆனால், ஜ்ஞானத்தை எந்த முன்–ஸாதனங்களினால் ஸாத்தியப்படுத்திக் கொள்ளக்கூடுமோ, அந்த ஸாதனங்களை ஸம்பாதிப்பதில் அவர்களுக்கு மனப்பிரவிருத்தி ஏற்படுகிறதில்லை. சித்தத்தின் சுத்தியும் ஐகாக்கிரியமுமில்லாமல் ஜ்ஞானத்தைத் தேடுவது உபயோகமில்லையென்று சொல்லுகின்ற சாஸ்திர–வாக்கியத்தில் அவர்களுக்கு நம்பிக்கையுண்டாவது சிரமப்படுகின்றது. கர்ம–யோகத்தினால் சித்தத்தின் சுத்தியும், பக்தி–யோகத்தினால் சித்தம் ஓர்மைப்படுவதுந்தான் பலனென்றும், இவைகள் மோக்ஷத்தின்பொருட்டு நேர்–காரணங்களாகமாட்டாவென்றும், ஜ்ஞானந்தான் மோக்ஷத்திற்கு நேர் ஸாதனமென்றும் சொல்லுகின்ற வாக்கியத்தைப் பிடித்துக்கொண்டு, கர்மாவும் உபாஸனையும் பிரயோஜனமில்லையென்று எண்ணி அவைகளில் பிரவிருத்தியில்லாமலே இருந்துகொண்டு, ஜ்ஞானமும் மோக்ஷமும் வேண்டுமென்று மாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஒருவர் கரூர் ரயில்வே ஸ்டேஷனில் நின்றுகொண்டு நேராக காசிக்குப்போகிற வண்டியில்தான் ஏறிப்போவதென்ற தீர்மானத்துடன், அங்கு வந்து போய்க்கொண்டிருக்கிற வண்டிகளைப்பற்றி விசாரிக்கும்போதெல்லாம் ஜனங்கள் காசிக்குப்போகிற வண்டியென்று சொல்லாமல் திருச்சினாப்பள்ளிக்கு அல்லது ஈரோடுக்குப்போகிற வண்டியென்று மாத்திரம் சொல்வதைக்கேட்டு, ஒன்றிலும் தான் ஏறிப்போகாமல் நின்றுகொண்டேயிருந்தால் இவர் காசிக்குப்போய்ச் சேருவது எப்படியோ தெரியவில்லை. இவருடைய அறியாமையைப்பார்த்து பரிதாபப்பட்டு யாராகிலும் இவரிடம் ஈரோடு போய்த்தான் காசிக்குப் போகவேண்டுமென்று சொன்னால், இவ்வார்த்தையில் இவருக்கு நம்பிக்கையும் கிடையாது. இதுபோல், கர்மாவினால் சித்தசுத்தியேற்பட்டு, உபாஸனையினால் மனதும் ஓர்மைப்பட்டபின்புதான் ஜ்ஞான–

மார்க்கத்தில் பிரவேசிக்கலாமென்று சொல்லும் வார்த்தையை இவர் காதுகொடுத்துக்கேட்பதுகூடக் கிடையாது. ஈரோடு முதலான பல ஜங்ஷன்களைக் கடந்து கடைசியாயிருக்கிற மொகல்ஸராய் என்கிற ஜங்ஷன் போய்ச்சேர்ந்த பிறகுதான் அங்கு நேராகக் காசிக்குப்போகிற வண்டி கிடைக்குமென்று சொல்லும் வார்த்தையை கவனிக்காவிட்டால் எப்படி காசிக்கு ஒருகாலமும் போய்ச்சேரப்போகிறதில்லையோ, அப்படியே கர்மா வென்றும் உபாஸனையென்றும் சொல்லும் வார்த்தைகள் நெடு நாளாகச் சொல்லப்படுகின்ற பழைய வார்த்தைகள் தான், இவை பிரயோஜனமில்லையென்று எண்ணி அலக்ஷியஞ் செய்து விட்டு. ஜ்ஞானம் வேண்டுமென்று மாத்திரம் பிதற்றிவருகிற வரும் ஒருகாலமும் ஜ்ஞானத்தை யடைந்து மோக்ஷானந்தத்தை அனுபவிக்கப்போகிறதேயில்லை.

4. மூன்று தோஷங்கள்

ஒவ்வொரு மனிதனுடைய ஸ்வபாவத்திலும் இயற்கை யாகவே மூன்று தோஷங்கள் பிறவிக்கு முன்னே தொடர்ந்து வந்திருக்கின்றன. எண்ணத்தொலையாத முன்–மனித–ஜன்மங் களில் அவனால் செய்யப்பட்ட பலவித துர்ச்செய்கைகளினால் மல–தோஷமென்ற கெடுதலும், பலவாறாக மனது அலைந்து ஓடிக்கொண்டே இருந்திருக்கிற வழக்கத்தினால் சாஞ்சலிய மென்ற விக்ஷேப–தோஷமும், உண்மையான தத்துவம் தெரிய வொட்டாமல் மறைவைச்செய்துவருகின்ற ஆவரண-தோஷமும் இவனைச் சார்ந்தேயிருக்கின்றன. இம்மூன்று தோஷங்களும் நிவிருத்தியானாலொழிய இவனுக்கு மோக்ஷமேற்படாது. இம் மூன்று தோஷங்களும் பிறவிக்கு முன்னேயே வெகு காலமாய் பல ஜன்மங்களில் தொடர்ந்து வந்திருப்பதால் விசேஷப் பிரயத்தினஞ்செய்து இவைகளைப்போக்கடித்தால் மட்டில் போகும். ஸாமான்யப் பிரயத்தினத்தால் போகக்கூடியவை யல்ல. வர்ணாசிரம-தர்மங்களை ஆசரிப்பது அவ்விசேஷப் பிரயத்தினத்தில் முக்கியமான பாகம். முன்–ஜன்மங்கள்

இருந்திருப்பதாகவே அறியாத மற்ற மதஸ்தர்களுக்கு விசேஷப் பிரயத்தினம் வேண்டுமென்ற விஷயமே தெரியமாட்டாது. பிறவிக்கு முன்னுள்ள காரணங்களினுல் பிறவியிலேயே மனிதர்களுக்குள் பரஸ்பர-வித்தியாஸங்கள் உண்டென்ற ஜ்ஞானமே அவர்களுக்குக் கிடையாதாகையால், பிறவியினுல் ஜாதி-பேதமாவது பிறவியைப்பொறுத்த ஆசரணை-பேதங்களாவது அவர்களுக்குள் ஏற்படவில்லை. ஆகையால், ஸாமான்ய-தர்மங்களாகிய மற்றவர்களுக்கு உதவி செய்தல், பொய் சொல்லாமை, திருடாமை, வஞ்சகஞ் செய்யாமை முதலானவைகளைத்தவிர வேறு விசேஷ-தர்மங்கள் அவர்களுக்குக் கிடையாது. ஆர்யர்களுக்கோவெனில் ஸாமான்ய-தர்மங்களை ஆசரிப்பதுடன் விசேஷ-வர்ணுசிரம-தர்மங்களையும் ஆசரிக்கவேண்டுமென்று கட்டாயமாக விதிக்கப்பட்டிருக்கின்றது. சரீரத்தில் வியாதியே இல்லாமலிருந்தால் ஸ்நானம், சாப்பாடு முதலான ஸாமான்ய சரீர-காரியங்களைச் செய்து கொண்டிருந்தால் போதும். முன்-காரணங்களினுல் பலமான வியாதியுடன் கூடியவருக்கு விசேஷ-காரியங்களான மருந்துண்பது, பத்தியமிருப்பது முதலியன அவசியங்களே. வியாதியிருந்துங்கூட அதிருப்பது தெரியாமலும் விசேஷ வைத்தியஞ்செய்துகொள்ளாமலும் உலகத்தில் பல ஜனங்கள் இருக்கிருர்களென்ற காரணத்தினுல், வியாதியிருப்பதைத் தெரிந்துகொண்டவரும் வைத்தியஞ் செய்துகொள்ளாமல் மற்றவர்களைப்போல் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருக்கவேண்டுமென்று சொல்லக்கூடாது. முன்-ஜன்மங்கள் இருந்தனவென்றும் அவைகளிலுண்டான கெடுதல்களினுல் ஸ்வபாவத்தில் சில தோஷங்களேற்பட்டிருக்கின்றனவென்றும் அறியாதவர்கள் அந்த தோஷங்களை நிவிருத்தி செய்ய யத்தனிக்கக் காரணமில்லை. ஆர்ய-வைதிக-மதஸ்தர்கள் அப்படியல்ல. இவர்கள் விசேஷ-விதிகளையும் ஆசரிப்பதற்குக் காரணம் வேத சாஸ்திரங்களினுல் இவர்களிடம் உண்டாக்கப்பட்டிருக்கிற அதிக ஜ்ஞானந்தான். ஜ்ஞானத்திற்குத் தக்கபடி ஆசரணை

களும் அவைகளுக்குரிய நிபந்தனைகளும் வித்தியாஸப்படுமென்பது நியாயமே.

முன்-ஜன்மங்களின் கெட்ட செய்கைகளினுலுண்டாகி விருத்தியடைந்துவந்திருக்கின்ற மல-தோஷத்தை நிவிருத்தி செய்ய ஸத்-கர்மாக்களென்ற நித்திய-நைமித்திக-கர்மாக்களும், மனஸின் சாஞ்சல்யரூபமான விக்ஷேப-தோஷத்தைப்போக்கடிக்க விசேஷ உபாஸனு:மார்க்கங்களும், ஆவரண-தோஷத்தை அப்புறப்படுத்துவதற்காக சிரவண-மனன-நிதித்தியாஸன-ரூபமான விசேஷ ஜ்ஞானுப்பியாஸங்களும், வேத-சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இம்மூன்று தோஷங்களில் மல தோஷம் மிகவும் தடித்த தோஷம்; விக்ஷேபம் கொஞ்சம் நுட்பமாயுள்ளது; ஆவரணம் மிகவும் நுட்பம். ஸத்கர்ம-அனுஷ்டானத்தால் வெகுதூரம் மலதோஷம் நிவிருத்தியானுல் தான், உபாஸனை உறுதிப்பட்டு விக்ஷேபத்தைப் போக்கடிக்கக் கூடும். அவ்விரண்டு தோஷங்களும் பெரும்பாலும் தொலைந்தால்தான், ஜ்ஞானுப்பியாஸத்தினுல் ஆவரணதோஷத்தைப் போக்கடிக்க ஸாத்தியப்படும். அறியாமையாலும் சோம்பேறித்தனத்தாலும் சாஸ்திரப்படிக்குள்ள அவரவர்களின் கர்மத்தைச் செய்யாமலும் உபாஸனு மார்க்கத்தைக் கைக்கொள்ளாமலும், ஜ்ஞானத்தை ஸம்பாதிக்க யத்தனிப்பவர் மூடரேயல்லாமல் வேறல்ல. அந்த யத்தினம் வீண்காரியமேயாகும். உத்தேசித்த பலன் கிடைக்கமாட்டாது. அழுக்கடைந்ததும் ஆடிக்கொண்டுமிருக்கின்ற கண்ணுடியில் சந்திரப்பிரதிபிம்பம் எப்படி ஸ்பஷ்டமாய்த் தோன்ருதோ, அப்படியே அசுத்தத்துடனும் விக்ஷேபத்துடனும் கூடிய அந்தக்கரணத்தில் ஆத்மாவின் தோற்றமேற்படக்கூடியதல்ல. வெகுகாலமாய்ச் சேர்ந்து தடித்துப்போயிருக்கின்ற மலமென்ற அழுக்கையும், ஊர்சுத்தி ஓடி ஆடச் செய்கின்ற சஞ்சலத்தன்மையையும், அந்தக்கரணத்தைவிட்டு வெளிப்படுத்துவதற்கு வழிதேடாமல் பிரஸ்தான-த்ரய-பாஷ்யங்களைப் பார்த்துக்கொண்டிருப்பவருக்கு இந்த லோகத்தில் மூடர்

களின் ஸமூஹத்தில் யோக்கியரென்றும் வித்வானென்றும் பெயர் கிடைக்குமேயொழிய பரலோகத்தின் பொருட்டு நன்மை யாவது மோக்ஷத்தின் பொருட்டு ஜ்ஞானமாவது கிடைக்கா தென்பது நிச்சயம். ஆகையால், மோக்ஷத்தில் உத்தேச முள்ளவர்கள் எல்லோரும் கர்ம-பக்தி-ஜ்ஞான-மார்க்கங்களில் கிரமமாய்ப் பிரவேசித்து மெல்ல மெல்ல மேற்செல்லவேண்டும்.

5. வேதத்தில் அநதிகாரிகள்.

கர்மம், பக்தி, ஜ்ஞானம் என்ற இம்மூன்றும் எல்லோருக்கும் பொதுவான ஸாதனங்களானாலும், அவைகளைக் கைகூடச் செய்கின்ற பிரகாரங்கள் வர்ணாசிரம-வியவஸ்தையின்படி அவரவர்களுக்குத் தனித்தனியாக ஏற்பட்டிருக்கின்றன. துவிஜர்களுக்குள்ள, அதாவது, பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசியர்களுக்குள்ள வேதாத்யயன – யஜனதி – கர்மாக்கள் சூத்திரருக்குக் கிடையாது. பிராஹ்மணனுக்குள்ள அத்யாபன-யாஜன-பிரதிக்கிரஹ-கர்மாக்கள் க்ஷத்திரியாதிகளுக்குக் கிடையாது. வேத-சாஸ்திரப்பிரகாரம் எந்த எந்த ஜாதியார்களுக்கு எந்த எந்த கர்மாக்கள் ஸர்வஜ்ஞனை ஈசுவரனால் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைச் செய்தால்தான் அவரவர்களுக்குள்ள மலதோஷம் நீங்கிப்போகும். தங்களுக்கு விதிக்கப்படாததும் மற்றவர்களுக்கு விதிக்கப்பட்டதுமான கர்மாக்களைச் செய்தால் பாபத்திற்குள்ளாவதுடன் ஏற்கெனவேயிருக்கிற மலதோஷமும் அதிகமாகத் தடித்து உறுதிப்படும். பலவிதமான வியாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கின்ற மனிதர்கள் அவரவர்களுக்குத் தனித்தனியே வைத்தியரால் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மருந்துகளை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், ஒருவருக்குச் சொல்லப்பட்ட மருந்துகளையும் பத்தியங்களையும் மற்றவர் கைக்கொண்டால் அனர்த்தமே விளையும். இப்படியே பக்தி-விஷயத்திலும் துவிஜபுருஷர்கள் வேத-மந்திர-ஜபங்கள் மூலமாகவும் உபாஸனையைச் செய்யலா

மென்றும், ஸ்திரீகளும் சூத்திராதிகளும் வேத-மந்திரங்களில்லாமல் நாமோச்சாரண-ஸ்தோத்திராதிகளாலும் பூஜையாலும் பக்தியைச்செலுத்தி நற்கதியடையலாமென்றும் சொல்லுகின்ற சாஸ்திர-நிபந்தனைகளுக்குக்கட்டுப்பட்டு நடந்து வரவேண்டியதும் அவசியம். இப்படிக்கில்லாமல், வேத-மந்திர-ஜபாதிகளில் அதிகாரமில்லாதவர்கள் மந்திரங்களைக் கைக்கொண்டும் நூதனமாக சாஸ்திர விரோதமான அனுஷ்டானங்களை ஏற்படுத்திக்கொண்டும் பக்தியைச் செலுத்துவதாகச் சொல்லிவந்தால் ஈசுவரனுடைய கோபத்திற்குள்ளாவார்களேயொழிய உண்மையான பக்தியின் பலனை அடையமாட்டார்கள். வேதசாஸ்திரம் தன்னுடைய ஆஜ்ஞையென்றும், அதற்கு விரோதமாய் நடப்பவர் தன்னுடைய துரோஹியென்றும் ஈசுவரனே வெளிவிட்டுச் சொல்லியிருக்கின்றார். ஈசுவரத்துரோஹியாயிருப்பது ஈசுவர பக்தருக்கு லக்ஷணமாகாது.

இது நிற்க. ஜ்ஞானம் ஏற்படக்கூடிய வழிகளும் ஸ்திரீசூத்திராதிகளுக்குத தனியாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு வேதாத்யயனத்திலேயே அதிகாரமில்லாததினால், வேதத்தில் ஸர்வோத்தம பாகமாகிய உபநிஷத்துக்களைப் படித்துவர அவர்களுக்கு அதிகாரங்கிடையாது. உபநயனம் உள்ளவர்களுக்குததான். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஸாதனங்களை ஸம்பாதித்துக்கொண்டபின், குருமுகமாய் உபநிஷதது மூலமாய் பிரஹ்ம விசாரஞ்செய்ய அதிகாரமுண்டு. ஸ்திரீ சூத்திராதிகளுக்கும் ஜ்ஞானமேற்படுவதற்காக இதிஹாஸ—புராண—பிரகரணாதி கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை பிராஹ்மண முகமாய்க் கேட்டு பூர்ணமான ஜ்ஞானத்தை அடைய அவர்களுக்கு ஸாத்தியப்படும். வேதத்திலடங்கிய தத்துவங்கள் முழுமையும் மேற்கூறிய கிரந்தங்களிலடங்கியிருக்கின்றன. ஜ்ஞானப்பிராப்தியின் பொருட்டு அத்தத்துவங்களைத் தெரிந்துகொள்வதுதான் முக்கியம். ஆகையால், வேதோச்சாரணத்தில் அதிகாரமில்லாத

ஸ்திரீ சூத்திராதிகளிற் சிலர் வேதவாக்கியங்களையே உச்சரிப்போமென்று இக்காலத்தில் சொல்லிவருவது ஹடமேயொழிய ஜ்ஞானத்தின் பொருட்டல்ல வேதவாக்கிய மூலமாய் ஜ்ஞான விசாரஞ் செய்கின்ற சூத்திரர் சண்டாள—ஜன்மத்தை அடைவாரென்று சாஸ்திரம் தெளிவாய்ச் சொல்லுகின்றது. இப்படியே, சூத்திராதிகளுக்கு வேதவாக்கியத்தைச் சொல்லிக்கொடுக்கின்ற பிராஹ்மணனும் சண்டாளனுவானென்று சொல்லுகின்ற சாஸ்திர—விதிக்கு நந்தன் சரித்திரம் ஓர் உதாஹரணமாகும். மேற்கண்ட காரணங்களினுல் மற்றவர்களின் தர்மங்களைக் கைக்கொள்ளாமல் அவரவர்களுக்கு சாஸ்திரப்படி ஏற்பட்டிருக்கின்ற கர்ம-பக்தி-ஜ்ஞான—மார்க்கங்களின் வழியாகச்சென்று ஸத்-கதியைத் தேடிக்கொள்ளவேண்டியது எல்லோருடையவும் கடமையாகும்.

6. பிராஹ்மணனுக்கு ஜ்ஞானம் ஸுலபம்

இப்படி எல்லோருக்கும் கர்ம-பக்தி-ஜ்ஞான-ஸித்திகள் கைகூடுவது ஸாத்தியமானுலும், பிராஹ்மண— ஜன்மத்திற்குரிய வேத— சாஸ்திர- விதிகளின் பிரகாரம் பிராஹ்மணன் தவருமல் நடந்துவருகிறதாயிருந்தால், அவருக்கு அந்த ஸித்திகள் மற்ற ஜாதியார்களைவிட வெகு சீக்கிரத்தில் கைகூடத்தக்கவையென்றே வெளியாகின்றது. பிராஹ்மணன் மற்ற துவிஜர்களைப்போல் அத்யயனஞ் செய்வது மன்னியில் மற்றவர்களுக்கும் அத்யயனத்தைச் செய்துவைக்கிறபடியால் வேதம் பிராஹ்மணனுக்கு ஸ்வாதீனப்பட்டிருப்பதுபோல் மற்ற துவிஜர்களுக்கு ஸ்வாதீனப்படமாட்டாது. ஸம்பூர்ணமாய் அத்யயனஞ் செய்திருந்தபோதிலும், அத்யாபகராகவுமிருந்து மற்றவர்களுக்கும் சொல்லிவைத்தால்தான் அத்யயனஞ் செய்தது நிலைத்து ஸ்திரப்படுமென்பது அனுபவ-ஸித்தம். இதுபோலவே, கர்மாக்களையும் உபாஸனைகளையும் தான் செய்துவருவது மன்னியில் மற்றவர்களுக்கும் செய்துவைப்பதாலும், கர்மோபாஸனைகளின் ஸ்வரூபங்களை விவரிக்கின்ற சாஸ்திரங்களை தான் படிப்பது

மன்னியில் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுக்க அதிகாரத்தை வஹிப்பதாலும், கர்மோபாஸனைகளின் ஸ்வரூப-விஜ்ஞானத்திலும் நிஷ்டைகளிலும் பிராஹ்மணனுக்கு அதிகமான உறுதி ஏற்படக்கூடியது. இவ்விதமாகவே, ஜ்ஞானப்பிராப்தி-விஷயத்திலும் வேதாந்த-சாஸ்திராப்பியாஸத்தை தான் செய்வதுந்தவிர மற்றவர்களுக்கும் பிரவசனஞ்செய்து போதிப்பிக்கிற கடமையும் பிராஹ்மணனுக்கேயிருப்பதால், ஜ்ஞானமும் பிராஹ்மணனுக்கு எவ்வளவு உறுதிப்படுமோ அவ்வளவு மற்றவர்களுக்கு உறுதிப்படக்காரணமில்லை.

அன்றியும், தரித்திரனுக இருப்பதே பிராஹ்மணனுடைய பெருமை. சொத்தைச் சேர்த்துவைத்துப் பரிபாலனஞ்செய்கிற தொந்தரவுகூட பிராஹ்மணனுக்கு இருக்கக்கூடாதென்பது சாஸ்திரத்தின் கருத்து. ஐசுவரியம் அதிகமாக இருந்தால் பெரும்பாலும் புத்திக்கு மயக்கமேற்படும். ஐசுவரியமதமில்லாதவரின் புத்தி எப்போதும் கூர்மையாகவே இருக்கும். சொத்து இல்லாமையே பிராஹ்மணனுக்கு ஓர் உத்தம லக்ஷணமாகையாலும் மற்றக் காரணங்களினுலும், கை நீட்டி பிரதிக்கிரஹம் வாங்கும் அதிகாரமும் பிராஹ்மணனுக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்போதைக்கப்போது பிரதிக்கிரஹத்தில் கிடைப்பதைக்கொண்டு காலக்ஷேபஞ்செய்து திருப்தராக இருப்பது பிராஹ்மணனுக்கு அழகு. பிரதிக்கிரஹம் விசேஷமாய்க் கிடைககும்படியான யோக்கியதையாவது இச்சையாவது இல்லாத பிராஹ்மணனும் ஆஹாரத்திற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு தன்னுடைய மேலான கடமைகளிலிருந்து நழுவிப்போகக்கூடாதென்ற தாத்பரியத்துடன் எங்கும் இந்நாட்டில் பிராஹ்மணனுக்கு அன்னம் கிடைக்கும்படியான ஸௌகரியத்தின்பொருட்டு ஸத்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது மன்னியில் பொதுவாகவே பிராஹ்மணனுக்கு அன்னம் போட்டு அதிதி-ஸத்காரஞ் செய்வது கிருஹஸ்தர்களுக்கு அவசியமென்றும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுமிருக்கின்றது. இஹலோகக்

கவலை பிரஹ்மணனுக்குக் கூடாதென்பதே சாஸ்திரத்தின் கொள்கை. ராஜ்யத்தை பரிபாலிக்கவும் அவரவர்களின் தர்மங்களிலிருந்து ஜனங்கள் விலகிப்போகாமல் கண்டித்துப் பாது காக்கவும் க்ஷத்திரியர்கள் ஏற்பட்டிருந்திருக்கின்றார்கள். வியாபார-வியவஸாயங்களினால் தனத்தை ஸம்பாதித்து ஜனங்களின் நன்மையைக் கருதி ஸத்-விஷயங்களில் வினியோகப் படுத்துவதற்கு வைசியர்களிருக்கின்றார்கள். எல்லோருக்கும் அவசியமான கைங்கரியங்களைச் செய்து உபகரிக்கவும் கைத் தொழில்களை நடத்தவும் சூத்திராதிகளிருக்கின்றார்கள். பிராஹ்மணனுக்குத் தன்னுடையவும் மற்றவர்களுடையவும் பரலோக விஷயமான காரியங்களும் அக்காரியங்களுக்கு நேர் அனுகூலமான இஹலோக-காரியங்களும் மாத்திரம் முக்கியமாய் ஏற்பட்டிருக்கின்றன. இக்காரியங்களிலேயே எப்போதும் புத்தியைச்செலுத்தி முயற்சி செய்து வருகிறவருக்கு பரலோக-நன்மையின் பொருட்டு அப்பியாஸங்களும் ஜ்ஞானமும் சீக்கிரத்தில் பலப்படுமென்பதில் ஸந்தேஹமில்லை.

அன்றியும், க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர்கள் கர்மோபாஸனா-மார்க்கங்களை முழுமையும் விட்டுவிட்டு நிவிருத்தி-மார்க்கத்திலிறங்குவதற்கு சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. கர்ம-ஸன்னியாஸத்தைச் செய்வதற்கு பிராஹ்மணன் ஒருவனுக்குத்தான் அதிகாரஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரவிருத்தி-மார்க்கத்தை விட்டொழித்து ஸம்பூர்ணமாய் நிவிருத்தி-மார்க்கத்திலிறங்கி சிரவண-மனன-நிதித்தியாஸனங்களைச் செய்து அபரோக்ஷ-ஜ்ஞானததை லகுவாயடைவதற்குள்ள ஸௌகரியம் ஸன்னியாஸியைத்தவிர மற்றவர்களுக்குக் கிடையாது. இக்காரணம் ஒன்றினாலேயே ஸன்னியாஸாசிரமத்தில் அதிகாரம் பெற்றிருக்கின்ற பிராஹ்மணனுக்குத்தான் பிரஹ்மஜ்ஞானம் ஸுலபமாய் ஏற்படக்கூடுமென்று எண்ணலாம். எப்படி குடும்பக் கவலையும் ஆசௌசாதி-தோஷங்களும் ஸம்பந்தப்படாமலிருக்கின்ற பிரஹ்மசாரிக்குத்தான் வேதாத்யயனமும்

சாஸ்திராப்பியாஸமும் சீக்கிரத்தில் பூர்த்தியாகக்கூடுமோ, அப்படியே ஸகல பந்தங்களையும் ஸன்னியாஸத்தினால் விலக்கி விட்டு நிச்சிந்தையாய் சிரவணாதிகளைச் செய்தால்தான் சீக்கிரத்தில் ஜ்ஞான-ஸித்தியுமேற்படக்கூடும். இப்படிச் செய்வது சாஸ்திரப்படி பிராஹ்மணனுக்கு மாத்திரம் ஸாத்தியப்படக்கூடியதாகையாலும், மற்றவர்களுக்கு ஸன்னியாஸாசிரமத்தில் அதிகாரமில்லாததினாலும், இதில் முன் குறிப்பிட்ட பல் வேறு காரணங்களினாலும், பிராஹ்மணன் சாஸ்திர விதிப்படி முயற்சிகளைச்செய்துவந்தால் காலக்கிரமத்தில் பிரஹ்மஜ்ஞானியாவரென்றே உறுதியாய்ச் சொல்லலாம்.

7. பிராஹ்மணர் கடமை.

ஆகையால், பிராஹ்மண-ஜன்மத்தின் முக்கிய காரியம் பிரஹ்ம-ஜ்ஞானத்தை ஸம்பாதிப்பதுதானென்று ஆதியில் சொல்லப்பட்டது. அதை ஸம்பாதிப்பவர்தான் பிராஹ்மண-ஜன்மத்தை சரியாய் உபயோகப்படுத்திக்கொண்டவராவர். மற்றவர்கள் அதை வீண்படுத்தியவர்களென்றே சொல்ல வேண்டும். பிராஹ்மண-ஜன்மத்திற்குரிய முக்கிய பலனை அடைந்தவர்தான் முக்கிய-பிராஹ்மணனாவர். அப்பலனை அடைய யத்தினஞ்செய்யாதவர்களை சாஸ்திரம் பிருஹ்மண-ப்ருவர்களென்று, அதாவது, பிறவியினால் மாத்திரம் பிராஹ்மணர்களாகச்சொல்லவேண்டியதாயிருக்கிறதென்று சொல்லுகின்றது. அவர்கள் யோக்கியதையினால் பிராஹ்மணர்கள் அல்லவென்று தாத்பரியம். பிரஹ்ம-ஜ்ஞானியாவதே பிராஹ்மணனுடைய முக்கிய காரியமாகையால், பிரஹ்ம-ஜ்ஞானிதான் பிராஹ்மணனென்று வற்புறுத்தி வஜ்ரஸூசிகோபநிஷத் முதலான சுருதி-பாகங்களிலும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் பிரஹ்ம-ஜ்ஞானத்திற்கு வழிதேடாமல் வயிறு வளர்த்துக்கொண்டும், அனாவசியமாய் அதிகப்பணம் ஸம்பாதித்துக்

கொண்டும், சொத்து சேர்த்துக்கொண்டும், தனது தன தென்று பெண்டிர் பிள்ளைகளிடம் அதிகமான அபிமானத்தை வைத்து அஜ்ஞானத்தில் உழன்று ஸம்ஸாரபாசத்தில் நன்கு கட்டுண்டும், லௌகிக விஷயங்களிலேயே எப்போதும் புத்தியைச்செலுத்தி வீண்படுத்திக்கொண்டும், அந்தர்முகப் பார்வையேயில்லாமல் வீண் மோஹத்தையுண்டாக்குகின்ற வெளிப்பார்வையிலும் அல்பமும் அதோகதியைக் கொடுக்கக் கூடியதுமான விஷயபோகங்களிலும் ஜ்ஞானேந்திரிய-கர்மேந்திரியங்களைத் தாறுமாறாக உபயோகப்படுத்திக் கொண்டும், ஜாதிப்பெருமையையும் வெளி அந்தஸ்தையும் மாத்திரமுத்தேசித்து தான் பிராஹ்மணனென்று சொல்லிக் கொண்டும் இருப்பவரை பிராஹ்மணன் அல்லவென்றே சொல்லலாம். இவருடைய பிறவிப் பிராஹ்மண்யம் நல்லதின் பொருட்டு உபயோகப்படவில்லை. யாராவது காரியத்தை உத்தேசித்து புறப்பட்டுப் போகும்போது இவர் எதிரில் வந்தால் அப-சகுனமும், இவரைக் கொன்றவனுக்கு பிரஹ்ம-ஹத்தியும் ஏற்பட மாத்திரம் இவருடைய பிராஹ்மண்யம் வீர்யமுள்ளதேயல்லாமல் வேறு எவ்வகையிலும் இவருடைய பிராஹ்மண்யம் சக்தியுள்ள பிராஹ்மண்யமாகாது,

பிரஹ்ம.ஜ்ஞானத்தின் பிராப்தியின் பொருட்டே பிராஹ்மண-ஜன்மம் ஏற்பட்டிருப்பதால், அந்த ஜ்ஞானத்தை வெளிப்படுத்துவதும் அதன் மார்க்கத்தைத் துலக்கிக் காட்டுவதுமான வேதமே பிராஹ்மணனுடைய உண்மையான தனம். வேதத்தை அத்யயனஞ்செய்து அதிலடங்கிய தத்துவங்களை நன்றாய் அறிந்துகொண்டு, அதன்படி தவறாமல் தானும் நடந்துவருவதும் மற்றவர்களுக்கும் சரியாய் போதித்து அவர்களையும் அப்படியே நடந்துவரும்படி செய்வதுமே பிராஹ்மணனுடைய கடமைகள். ஸம்பூர்ணமாக வேதத்தை அத்யயனஞ்செய்வது மட்டும் போதாது.

அத்யயனத்தினல் தனக்கு ஸ்வாதீனப்பட்டிருக்கின்ற வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றதென்று தெரிந்துகொண்டால்தான் ஜ்ஞானேத்பத்தி ஏற்படும். அர்த்த-விஜ்ஞானமில்லாமல் வேதத்தை மனப்பாடமாக ஒப்பிக்கிறவரை ஸர்வோத்தமையான ஸ்திரீயை விவாஹஞ்செய்துகொண்ட நபும்ஸகனுக்கு ஒப்பாகச் சொல்லக்கூடும். தர்மப்பிரஜை உண்டாவதற்காக என்ற ஸங்கல்பத்துடன் விவாஹத்தைச் செய்துகொண்டாலும் நபும்ஸகனுக்கு ஆனந்த புரஸ்ஸரமாக புத்திரோத்பத்தி எப்படி உண்டாகமாட்டாதோ, அப்படியே அத்யயனத்தினல் வேதம் ஸ்வாதீனப்பட்டிருந்தும் அதன் மூலமாய் கிடைக்கவேண்டிய ஜ்ஞானனந்தம் உண்டாக இடமின்றிப் போய்விடும். எப்படி நபும்ஸகனுடைய ஸ்திரீயின் சுசுரூஷைகளினல் ஸாமான்ய நன்மைகளையும் ஸௌகரியங்களையும் அவன் அடையக்கூடுமோ, அப்படியே வேதாத்யயனத்தால் உண்டாகக்கூடிய ஸாமான்ய புண்யமும், உலகத்தில் கொஞ்சம் மரியாதையும் திரவ்விய-வரும்படியும் ஏற்படுமேயல்லாது, முக்கிய பலனுகிய பிரஹ்ம-ஜ்ஞானமும் மோக்ஷமும் எட்டாது. ஆகையால், வேதாத்யயனஞ் செய்வதுமன்னியில் அவசியமானவரையில் வேதத்திற்கு அங்கபூதமான சாஸ்திரங்களையும் அப்பியஸித்து, கர்மோபாஸன-தத்துவ விஷயங்களை நன்ருயறிந்துகொண்டு அவைகளுக்கு அநுகுணமாக ஆசரித்துக்கொண்டுவர வேண்டியதே பிராஹ்மணச் செய்கையாகும்.

அத்தியாயம் 5.

வேத மந்திர அனதிகாரிகள்

1. வேத மந்திரம்

முன் அத்தியாயத்தில் ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் வேத-மந்திர-ஜபங்களில் அதிகாரமில்லை என்ருேம். यज्ञानां जपयज्ञोऽस्मि என்று பகவான் கீதையில் சொல்லியிருப்பதால், ஜபம் முக்கிய யஜ்ஞமேயாகும். ஸ்திரீகளுக்கு தனியாகவாவது சூத்திரர்களுக்கு எவ்வகையிலாவது யஜ்ஞத்தில் அதிகாரமில்லை யென்பது சாஸ்திரப் பிரஸித்தம். யஜ்ஞம் முதலான விசேஷ கர்மாக்களில் யஜமான-ஸ்தானத்திலிருக்கின்ற பர்த்தாவின் ஸமீபத்திலேயே பத்னீ எப்போதுமிருந்துகொண்டிருப்பதால், மந்திரங்களைக் காதால் கேட்பதினுல் துவிஜ-ஸ்திரீகளுக்கு தோஷமில்லை. அன்றியும், யஜ்ஞங்களில் சிற்சில ஸமயங்களில் பத்னீயாலேயே சில மந்திரங்கள் சொல்லப்பட வேண்டுமென்று வேதத்திலேயே விதிக்கப்பட்டிருப்பதால், குறிப்பிட்ட மந்திரங் களை உச்சரிப்பதிலும் ஸ்திரீகளுக்கு தோஷமில்லை. இந்த விலக்கைத் தவிர வேறு எவ்விதத்திலும் ஸ்திரீகளுக்கு மந்திரோச்சாரணத்தில் அதிகாரமில்லையென்றே வேத-சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. சூத்திரர் களுக்கோ வேத-மந்திரங்களைக் காதால் கேட்பதற்குக்கூட அதிகாரமில்லை என்பதே சாஸ்திர-ஸித்தாந்தம். இப்படியிருக்க இக்கலி-காலத்தில் ஸ்திரீகளாலும் சூத்திரர்களாலும் சிவ-பஞ்சாக்ஷரீ முதலான மஹாமந்திரங்கள் ஜபிக்கப்பட்டு வருகின்றன.

பிரணவத்தை மாத்திரம் விலக்கி அவர்கள் ஜபஞ்செய்யலா மென்று சில சிஷ்டர்கள்கூட அபிப்பிராயப்படுகின்ருர்கள். மந்திரத்திற்குப் பிராண-ஸ்தானீயமாயிருப்பது பிரணவம். பிரணவத்தை விலக்கிவிட்டால், மந்திரத்திற்கு வீர்யமே போய்

விடும். தவிரவும், இவர்கள் சொல்லுகிறபடி மூலமந்திர-ஜபத்தில் பிரணவோச்சாரணமில்லாவிட்டாலும், திக்பந்தன-திக்விமோசனங்களைச் செய்யும்போது கடைசியில் பிரணவத்தையே உச்சரித்தாக வேண்டியதாயிருக்கிறதே. அப்பொழுது மாத்திரம் உச்சரிப்பதற்கு அதிகாரம் எப்படி ஏற்படும்? ஸ்திரீ-சூத்திரர்களுக்கு உபநயனமில்லாததினால், காயத்திரீ-மந்திரத்தையாவது, அதற்கு மூலமான வியாஹ்ருதிகளையாவது உச்சரிக்க நியாயமில்லை. வியாஹ்ருதிகள் காயத்திரியின் பீஜங்களென்பது பிரஸித்தம். ஸன்னியாஸ-காலத்தில் காயத்ரீ-விஸர்ஜனத்தைச் செய்யும்போது மூலபீஜங்களான மூன்று வியாஹ்ருதிகளில் காயத்திரீயை உபஸம்ஹாரஞ்செய்து அப்பால் அம்மூன்று வியாஹ்ருதிகளையும் அவைகளுக்கு மூல-பீஜமான பிரணவத்தில் அடங்கும்படி செய்விக்கிற பிரயோக-காரியம் தர்ம-சாஸ்திர-வித்வான்களுக்குத் தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட வியாஹ்ருதிகளின் உச்சாரணத்தில் ஸ்திரீ-சூத்திரர்களுக்கு அதிகாரமில்லையானால், இவர்கள் எப்படி திக்பந்தன-திக்விமோசனங்களைச் செய்யக்கூடும்?

ஸ்திரீகளுக்கு ஸ்வயமாயும், சூத்திரர்களுக்கு எவ்விதத்திலும், யஜ்ஞஞ்செய்ய அதிகாரமில்லையென்று முன்சொல்லப்பட்டது. ஜபமென்பது யஜ்ஞ-ரூபமாகையால், யஜ்ஞப்பிரயோக-மந்திரங்களே ஜபத்தில் அங்க-நியாஸங்களில் உபயோகப்படுகின்றன. இவைகளெல்லாம் விசேஷ மந்திரத்தன்மையுள்ளவையென்று வைதிகர்களுக்கு நன்றாய் தெரியவரும். உபநயனமேயில்லாத ஸ்திரீ-சூத்திரர்கள் இவைகளையுச்சரித்து அங்க-நியாஸஞ் செய்வது எப்படி நியாயமாகும்? இவர்களுக்கு யஜ்ஞாங்கபூதமான யஜ்ஞோபவீதமே கிடையாதாகையால், யஜ்ஞங்களுக்குள் உத்தம யஜ்ஞமாகிய ஜபத்தில் இவர்களுக்கு அதிகாரமில்லை யென்பதே நிச்சயம். சிலர் அங்க-நியாஸ-மந்திரங்களிலுள்ள விசேஷ மந்திரங்களை நீக்கிவிட்டு, அவைகளுக்குப் பதிலாக "नमः" என்று மாத்திரம்

ஸ்திரீ-சூத்திரர்கள் சொல்லிவரலாமென்றும், இப்படியே வியாஹ்ருதிகளையும் பிரணவத்தையும் நீக்கிவிட்டு திக்பந்தனுதி காலங்களில் திக்-தேவதைகளின் நாமங்களைச் சொல்லிவரலாமென்றும் அபிப்பிராயப்பட்டு, இவ்விதமாயுஞ் சிலர்களால் ஆசரிக்கப்பட்டு வருகிறது. இவ்விதஞ் செய்தால் வாஸ்தவ அங்க-நியாஸமாகுமென்றும், வாஸ்தவ பஞ்சாக்ஷராதி-ஜபமாகுமென்றும், எந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று அவர்கள்தான் சொல்லவேண்டும். மேற்கண்டவிதமன்னியில் வேறு சில விதமாகவும் நியாஸாதி-மந்திரங்களை மாற்றிச் சொல்லலாமென்று சில புராண-வாக்கியங்களிருப்பதாகச் சொல்லுகின்றனர்கள். இப்படிப்பட்ட புராண-வாக்கியங்கள் எம்மட்டில் பிரமாணமாக அங்கீகரிக்கப்படத் தகுந்தவை யென்ற விஷயம் பின்னுல் சொல்லப்படும்.

துவிஜர்களுக்கு, அதாவது, பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசியர்களுக்கு, அந்தந்த வர்ண-தாரதம்மியத்துடன், பிரஹ்மோபதேச-ஸம்ஸ்காரத்திஞலேயே மூன்றுவது நேத்திரம் உண்டாவதாகத் தெரியவருகிறது. இதனுலுமந்த ஸம்ஸ்காரத்திற்கு உபநயன-கர்ம என்ற பெயர் வந்தது. இந்த ஸம்ஸ்காரமில்லாத ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் மூன்றுவது நேத்திரமே கிடையாது. மேலும், இவர்களுக்கு வேத-விதிப்படி மந்திரத்துடன் கூடிய சௌள-ஸம்ஸ்காரமும் இல்லாதபடியால் சிகையுங் கிடையாது, கேசந்தானுண்டு. சிகையுமில்லாமல், மூன்றுவது நேத்திரமுமில்லாமல் அங்க-நியாஸஞ் செய்தால், அதற்கு என்ன பலனுண்டோ தெரியவில்லை.

2. மந்திரவத்தான ஸம்ஸ்காரம் அவசியம்.

சூத்திரர்களுக்கு வேதோக்தமான சௌளமாவது உபநயனமாவது இல்லாவிடினும், துவிஜ-ஸ்திரீகளுக்குச் சூடாகர்மாவும் உபநயன ஸ்தானத்தில் விவாஹமும் ஏற்பட்டிருப்பதால், ஏன்

துவிஜ-ஸ்திரீகள் மந்திரோச்சாரணஞ் செய்யக்கூடாதென்றுங் கேட்கலாம். ஸ்திரீகளுக்கு மந்திரமில்லாமலே பாவனையாக-கூடாகர்மஞ்செய்யப்படுகிறதேயொழிய வேதோக்த-மந்திரவத்தான கர்மாவினலுண்டாகக்கூடிய சிகை அவர்களுக்கு ஏற்படவில்லை. சூத்திரர்களுக்கும் மந்திரமன்னியில் லௌகிக-சிகை வைக்கப்படுகின்றது. இதெல்லாம் வைதிக-ஸம்ஸ்காரத்தாலுண்டானதும், வைதிக-கர்மாங்க பூதமுமான சிகையாகமாட்டாது, கேசமென்றுதான் சொல்லவேண்டும். துவிஜ-ஸ்திரீகளுக்குள் விதவைகளுக்கோ கேசம் பூராவும் எடுபட்டுப்போவதால் சிகையில்லையென்பது நிச்சயமே. இப்படியிருந்தும் விதவைகளுக்குத்தான் மந்திர-ஜபம் முக்கியமென்றும் கக்ஷி சொல்லுகின்றனர்கள்.

அன்றியும், ஸன்னியாஸிகளிலுள்ள பேதங்களில் சிகையை தரித்துவருகின்ற குடீசக-ஸன்னியாஸிக்கும் பஹூதக-ஸன்னியாஸிக்கும் மாத்திரம் வேதத்தில் மந்திர-ஜபாதிகாரம் கொடுபட்டிருக்கிறது. முண்டன மேற்பட்டிருக்கிறவரும் கர்ம-மார்க்கத்தைவிட்டுப் பூராவும் வெளியேறினவருமான பரமஹம்ஸ-ஸன்னியாஸிக்கு கர்மாங்க பூத-சிகையில்லாததினலும் மற்றும் பல காரணங்களினலும் மந்திர-ஜபாதிகாரம் வேதத்தில் சொல்லப்படவில்லை. அவருக்கு தியானதிகாரந்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல், இக்காலத்தில் பரமஹம்ஸாசிரமத்திற்குத் தகுதியில்லாதவர்களும் பரமஹம்ஸர்களாகிவிட்டதாக பாவனை செய்வதால், இவர்களுடைய ஆந்தர-யோக்கியதையை அனுஸரித்து இவர்களுக்கும் ஸம்பிரதாய-ரூபமாக மந்திர-ஜபங்கள் பெரியோர்களால் விதிக்கப்பட்டு நடந்தேறி வருகின்றன. யோக்கியதையில்லாதவருக்கு பரமஹம்ஸாசிரமத்தையேற்படுத்துவதும், பரமஹம்ஸரை மந்திர-ஜபஞ்செய்யும்படி விதிப்பதும் வேத-விருத்தந்தான். உண்மையான பரமஹம்ஸருக்கு மந்திர-ஜபங் கிடையாது. ஆனல் சிகையில்லாத பரமஹம்ஸர் ஜபஞ் செய்வதற்கும், மந்திர-ஜப

யோக்கியதைக்குள்ள ஸம்ஸ்காரமில்லாத ஸ்திரீகளும், மந்திர வத்தான எவ்வித ஸம்ஸ்காரமுமில்லாத சூத்திரர்களும் ஜபஞ் செய்வதற்கும் அதிக வித்தியாஸமுண்டு. முன்னுலேயே ஜபத்தில் அதிகாரத்தை அடைந்திருந்தவரே அப்பால் பரமஹம்ஸராக மேல்-ஸ்தானத்திற்குப் போயிருப்பதால், ஜபஞ் செய்வதினுல் அவருக்குப் பாபமாவது நரகப்பிராப்தியாவது ஏற்படாது. தவிரவும், ஸன்னியாஸ-காலத்தில் அவருடைய வெளிப்படையான சிகையும் யஞ்ஞோபவீதமும் விஸர்ஜனஞ் செய்யப்பட்டாலும், அவைகளுக்குப் பதிலாக அவர் ஜ்ஞான—ரூபமான ஆந்தர-சிகையையும் ஆந்தர-யஜ்ஞோபவீதத்தையும் தரித்து வருவதாகத்தான் ज्ञानशिखा ज्ञानयज्ञोपवीतिनः என்ற வாக்யம் சொல்லுகின்றது. பரமஹம்ஸர், தான் இருக்க வேண்டிய நிலையை விட்டு, கீழ்ப்பட்ட வெளிப்படையான அனுஷ்டான-பூஜா-ஜபாதிகளைக் கைக்கொண்டால், அவருக்கு வேதப்படி கிரமமாய்க் கிடைக்கவேண்டிய ஸர்வோத்தம பதவி கிடைக்காமல் கீழ்ப்பட்ட புண்ணிய-லோகவாஸந்தான் கிடைக்கக் கூடியது. எப்படியும் அவருக்கு இப்போதிருக்கிற ஸ்திதியை விட உயர்ந்த ஸ்திதிதான் கிடைக்கும். கீழான ஸ்திதிக்குப் போகமாட்டார். ஆகையால், பரமஹம்ஸரின் விஷயத்தில் அதிகக் கெடுதலில்லை. மந்திர-ஜபஞ் செய்கிற ஸ்திரீ-சூத்திரர்களோ வெனில், வேத-மந்திரத்தையே உச்சரிக்க அதிகாரம் அவர்களுக்கு எப்பொழுதும் கிடையாததினுல், அதை ஜபஞ் செய்தால் கீழான நரகத்திற்கேபோய் கஷ்டத்தை அனுபவிக்கும்படி நேரிடும்.

3. விவாஹம் உபநயனமாகிவிடாது

உபநயன—ஸ்தானத்தில் ஸ்திரீகளுக்கு விவாஹம் விதிக்கப்பட்டிருப்பதாக சாஸ்திரமே குறிப்பிடுவதினுல், விவாஹமாயிருந்தால் ஸ்திரீகளுக்கு உபநயனத்தின் பலன் பூராவும் வந்துவிட்டதென்று சொல்லக்கூடாது. உபநயன—ஸ்தானத்தில்

விவாஹமேற்பட்டிருப்பது வாஸ்தவமானாலும், உபநயனத்தின் பலன் வேறு, விவாஹத்தின் பலன் வேறு தான். இரண்டும் ஒன்ருக மாட்டாது. ஒன்ருகுமானுல், ஸ்திரீகள் வேதாத்யயனஞ் செய்யக் கூடாதென்று ஏன் விதிக்கப்பட வேண்டும்? அக்னிஹோத்திரஸ்தானத்தில் ஔபாஸனம் என்பதாகச் சொன்னுல், அக்னிஹோத்திரத்தின் பலனும் ஔபாஸனத்தின் பலனும் ஒன்றுதானென்று எப்படி சொல்லக்கூடாதோ, அப்படியே ஸ்திரீகளுக்கு உபநயன-ஸ்தானத்தில் விவாஹம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், உபநயனததாலேற்படக்கூடிய மூன்ருவது நேத்திரங்கூட ஸ்திரீகளுக்குண்டென்று சொல்ல முடியாது. பிரஹ்மோபதேசத்தால்தான் மூன்ருவது நேத்திரத்தின் உத்பத்தி ஸாத்தியப்படும். இது இக்கலியுகத்தில் ஸ்திரீகளுக்குக் கிடையாது. யுகாந்தரங்களில் ஸ்திரீகளுக்கும் உபநயனமிருந்ததாகவும், இவர்களுக்கு விசேஷ தர்ம-விதிகள் ஏற்பட்டிருந்ததாகவும் கிரந்தங்கள் மூலமாய் வெளியாகின்றது. இந்த விஷயம் வேறு. இவ்வித விசேஷ ஸம்ஸ்காரங்களும், விதிகளும், இவைகளைக் குறிப்பிடுகிற வேத-பாகங்களும் இக்கலியுகத்திற்குக் கிடையாது. அனந்தமாயிருக்கிற வேதங்கள் யாவற்றையும், அல்லது, பெரும்பாலுமாவது அத்தியயனஞ் செய்து அனுஸரித்து அனுஷ்டித்துவர இக்கலியில் ஜனங்களுக்கு சக்தியும் யோக்கியதையும் இராதென்பதையுத்தேசித்து ஸாக்ஷாத் விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீவேதவியாஸர் இக்காலத்திற்குரியதாய் லேசாயனுஷ்டிக்கக்கூடிய வேத-பாகங்களை மாத்திரமெடுத்து விபாகப்படுத்தி நான்கு வேதங்களாக வெளிப்படுத்தியிருக்கின்ருர். இந்த வேத-விதிகளின் படிக்கும் இவைகளை அனுஸரித்து பிரசாரத்திலிருக்கின்ற ஸ்மிருதிகளின் படிக்கும் இக்காலத்தில் ஸ்திரீகளுக்கு உபநயன-ஸம்ஸ்காரங் கிடையாது. இக்கலியுகத்திற்குள்ள வேத-சாஸ்திர-விதிகளின் பிரகாரம் வாஸ்தவ உபநயனமுள்ள துவிஜ-புருஷர்களுக்குத் தான் வேத-மந்திரோச்சாரணத்தில் அதிகாரமுண்டு. வேதத்திலடங்கிய மந்திரங்களும் மஹாவாக்கியங்களும் வேதத்தின்

ஸாரபூதமானதால், வேதாத்தியயனஞ் செய்ய யோக்கியதை யைக்கொடுக்கிற உபநயன-ஸம்ஸ்காரம் வேத-சாஸ்திரப்படி யாருக்குக் கிடையாதோ அவருக்கு அம் மந்திரங்களையும் வாக்கியங்களையும் உச்சரிப்பதற்காவது ஜபஞ் செய்வதற்காவது அதிகாரமில்லையென்பதே உண்மையான மத-ஸித்தாந்தம். துவிஜ-ஸ்திரீக்கு ஔபாஸனம் முதலான கர்மாக்களில் சில காலங்களில் தண்டுல-ஹோமாதி காரியங்களைச்செய்ய அதிகார மிருந்தபோதிலும், அக்காரியங்கள் மந்திரமில்லாமல் சரீரத்தால் செய்யப்பட வேண்டிய காரியங்களே யன்றி, வாக்கினுல் அக்காரியங்களுக்குரிய மந்திரங்களை உச்சரித்துச் செய்யப்பட வேண்டியவையல்ல.

ஸ்திரீ-சூத்திரர்களுக்கு வேத-மந்திரோச்சாரணத்தில் அதிகாரமில்லாமலிருந்தாலும், மந்திரத்தின் பதங்களின், அதாவது, வார்த்தைகளின் வரிசைக்கிரமத்தை மாற்றிவிட்டால் அவர்கள் உச்சரித்து ஜபஞ் செய்யலாமென்று சிலர்கள் அபிப்பிராயப்படுகின்றுர்கள். शिवाय नमः என்று மாற்றிவிட்டால், அவர்களுக்கு மந்திர-ஜபஞ்செய்யும் தோஷம் வராதென்று சொல்லுகின்றுர்கள். இந்த ஜபம் எதற்காகச் செய்யப்பட வேண்டும்? வார்த்தைகளின் மாறுதலினுல் வாக்கியத்தின் மந்திரத்தன்மையே நஷ்டமாய்ப் போய்விடுகின்றது. மந்திரத்தன்மையில்லாத வாக்கியத்திற்கு ஜபம் செய்யப்படக்கூடிய யோக்கியதையுங் கிடையாது. ஜபத்திற்கு யோக்கியமில்லாததை ஜபஞ்செய்யலாமென்று சொன்னுல், அதன் பிரயோஜன மென்ன? மந்திர-ஜபத்திற்குள்ள பலன் கிடைக்குமா? மேற்கண்ட அபிப்பிராயத்தையும் அனுஸரித்து கண்மூடித்தனமாய் ஆசரித்து வருகிறவர்களுமிருக்கின்றுர்கள். மேலும், शिवाय नमः என்பதாகச் சொல்லட்டுமென்று ஏற்படுத்தினுல், இதையே ஜப-ரூபமாய் அடுத்தடுத்து சீக்கிரத்தில் சொல்லிவந்தால் 'மரா', 'மரா', என்று ஜபித்துவந்தவனும் 'ராம', 'ராம', என்றே ஜபிக்கும்படி ஏற்பட்டதுபோலவே பஞ்சாக்ஷரத்தையே உச்சரித்ததாகத்தான் ஏற்படும். ஆகையால், மந்திர-வார்த்தை

களை முன்-பின்னாக மாற்றி ஜபஞ் செய்தால் தோஷமில்லை யென்று சொல்வதும் தவறே.

இப்படியாவது, பிரணவத்தையும் நீக்கி, நியாஸ-மந்திரங்களையும் மாற்றி, ஜபத்தின் யஜ்ஞமென்ற லக்ஷணத்தையும் போக்கடித்து, திக்பந்தன-திக்விமோசன-மந்திரங்களையும் வேறுபடுத்தி, மூல-மந்திரத்தின் பதங்களையே தாறுமாறாக மாற்றி அதற்கு மந்திரத்தன்மையே யில்லாமல் செய்து, ஸ்திரீ-சூத்திரர்கள் ஜபம் செய்யட்டுமென்று என்ன தர்ம-ஸங்கல்பமோ தெரியவில்லை. ஸ்திரீ-சூத்திரர்களுக்கு ஏதோ வாஸ்தவ மந்திரோபதேசஞ் செய்வதாய் பாவனையைக் காட்டி அவர்களை நம்பும்படி செய்வித்து, மந்திரமில்லாததைக் கொடுத்து மோசஞ் செய்வதைத் தவிர வேறல்ல. உபதேசமில்லாமலே शिवाय नमः என்று அவர்கள் சொல்லலாம். ஜப-நிபந்தனைகளும் அங்க-நியாஸம் கர-நியாஸம் முதலான வீண் ஆடம்பரங்களும் இல்லாமலே शिवाय नमः என்று சொல்லி ஈசுவரனை வணங்குவதாக மனஸில் பாவனையோடிருக்கலாம். ஆனால், முன் கண்ட காரணத்தினால், இதையே அவர்கள் அடுத்தடுத்துச்சொல்லி ஜபித்து வருவது மாத்திரம் கூடாது.

4. காலப்போக்கு.

கால-ரீதியை அனுஸரித்து எங்கும் சிரத்தையும் பக்தியும் குறைவுபட்டிருப்பதினால் ஸ்திரீ-சூத்திரர்களுக்கு வெறும் நாமோச்சாரணத்தில் திருப்தியாவது கௌரவ-புத்தியாவது பெரும்பாலும் இல்லாமலிருப்பதாலும், அவர்களுக்கு மந்திரமென்று சொன்னால்தான் இயற்கையாகவே பய-பக்தி-விசுவாஸம் ஏற்படக்கூடியதாய்க் காணப்படுவதினாலும், அவர்களுக்கு ஏதோ மந்திரோபதேசஞ்-செய்வதாய் காண்பித்து அவர்களுடைய மனதுகளை லோக-வியவஹாரங்களிலிருந்து திருப்பி தினந்தோறும் இரண்டு நாழிகையாவது ஆந்தரமான

ஈசுவரத் தியானத்தில் ஈடுபடும்படி செய்வித்தால்தான் அவர்களுக்கும் நல்லது, லோகத்திற்கும் க்ஷேமமென்றும், அதிலும் ஸ்திரீகளின் விஷயத்தில் அவர்களை ஏகாந்தமாய் உட்காரச் செய்து, ருத்திராக்ஷ-மாலையையாவது துளசிமணி-மாலையையாவது உருட்டிக்கொண்டிருக்கும்படி செய்வித்தால்தான் மனதுக்கு நாளடைவில் சாந்தியுண்டாகி, குடும்பங்களில் ஸ்திரீகளாலேற்படக்கூடிய பலவித வம்புகளும் கலகங்களும் குறைவுபடுமென்றும் அபிப்பிராயப்பட்டு மந்திரமில்லாத வாக்கியங்களானுலும் ஸ்திரீ-சூத்திரர்கள் ஜபிக்கட்டுமென்று முன்னேர்கள் ஏற்படுத்தியிருக்கலாம். கால-இயற்கைக்கு போக்குவிடுவதும் நல்ல காரியந்தான். ஆனல், இப்படிப் போக்குவிட்டு அனதிகாரிகளான ஸ்திரீ-சூத்திரர்களுக்கு ஜபத்தையேற்படுத்தியதினல் மேன்மேலும், நாளுக்குநாள் அதிகமாகவே, லோகத்தில் அனர்த்தங்கள் விருத்தியடைந்து வந்திருக்கின்றன. இவர்களுக்கு மந்திரோச்சாரண-ஜபங்களில் அதிகாரமுண்டென்று வியக்தமாய் ஒப்புக்கொண்டதாகவே ஆகிவிட்டபடியால், இவர்கள் வேறு (அதாவது, வாஸ்தவமான) மந்திரங்களை கைக்கொள்வதிலும் தோஷமில்லையென்பதாகவே மனேபாவமுண்டாகி, வேதத்தில் சொல்லிய மஹாமந்திரங்களையும் தாங்களே கண்டவர்களிடமிருந்து ஸம்பாதித்துக்கொண்டு ஜபஞ்செய்து தங்களுடைய பின்னுள்ள நரக-தண்டனையை உறுதிப்படுத்தி வந்திருக்கின்றனர்கள்.

மேலும், இக்காலத்தில் சாஸ்திரப்படி வேத-மந்திர-ஜபஞ்செய்யக்கூடிய பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசிய-ஜாதியார்களுக்குள், மற்றவர்களுக்கு மந்திரோபதேசஞ்செய்ய அதிகாரமில்லாத க்ஷத்திரிய-வைசியர்கள், தங்கள் ஜாதி-தர்மங்களிலிருந்து நழுவி, பெரும்பாலும் சூத்திரர்களைப்போலாகி விட்டபடியாலும், ஸ்வ-தர்மத்தை இன்னும் கொஞ்சம் பரிபாலித்து வந்திருக்கிற பிராஹ்மணனுக்கு மந்திரோபதேசஞ்செய்ய அதிகாரமிருந்து கொண்டிருப்பதாலும், முன் சொன்ன பிரகாரம் மந்திர-ஜபஞ்

செய்துவருகின்ற சூத்திரர்களும் தங்களுக்கு பிராஹ்மணனுக்கொப்பாக ஜபத்தில் அதிகாரமிருப்பதாக எண்ணிக்கொண்டது போல், மற்றவர்களுக்கு உபதேசிப்பதற்கும் தங்களுக்கு அதிகாரமுண்டென்ற தப்பான அபிப்பிராயங்கொண்டு, மற்றுமுள்ள சூத்திரர்களுக்குத் தாங்களே மந்திரங்களை உபதேசிக்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்குள்ளாகவே குருக்களென்பதாகவும் தேசிகரென்பதாகவும் பல பெயர்களுடன் குரு-ஸ்தானத்தை வஹிப்பவர்களும் உண்டானார்கள். இப்படி மந்திரங்களைத் தாங்களே ஜபித்து வரவும், மற்றவர்களுக்கு உபதேசஞ்செய்யவும் ஸாத்தியமென்று எண்ணிவிட்டபடியால், வேத-வாக்கியங்களையும் மந்திரங்களையுங்கண்டே தமிழ் முதலான தேசீய-பாஷைகளில் புஸ்தகங்களையுமெழுதத் தலைப்பட்டார்கள். வேத-வாக்கியங்களைக்கொண்டே விசாரஞ்செய்கின்ற சூத்திரர் சண்டாள-ஜன்மத்தையடைவாரென்று சாஸ்திரம் சொல்லுகின்றது. वेदाक्षरविचारेण शूद्रश्चण्डालतां व्रजेत् । சூத்திரர்களின் மேற்கண்ட சாஸ்திர-விருத்தமான செய்கைகளெல்லாவற்றுக்கும் திரவிய-பேராசை பிடித்த பிராஹ்மணாதமனே ஒத்தாசையாயிருந்திருக்கின்றான். இவ்விதமாக, சூத்திரர்களுக்குள்ளாகவே குருக்களும், சிஷியர்களும், புஸ்தகங்களுமேற்பட்ட பின்பு பிராஹ்மணனுடைய ஒத்தாசை காலக்கிரமத்தில் அவர்களுக்குத் தேவையில்லையென்ற எண்ணமும் வந்துவிட்டது.

5. சூத்திரர்களுக்கு ஸந்யாஸம் கிடையாது

தவிரவும், ஜகத்-குரு முதலானவர்களின் மடங்களைப் பார்த்து விட்டு, குரு-ஸ்தானத்திலிருந்து மந்திரோபதேசஞ் செய்பவர் மடாதிபதியாகவும் ஸன்னியாஸியாகவுமிருப்பதே மேன்மை யென்றெண்ணி, சூத்திரர்களும் தாங்களே சொந்தமாய் மந்திரோபதேசபீடங்களென்றே பெயரிட்டு மடங்களை ஸ்தாபித்துக்கொண்டும், பிராஹ்மணனுக்கேற்பட்டிருக்கிற ஸன்னியாஸாசிரமத்திற்குரிய காஷாய-வஸ்திரத்தைத் தரித்துக்

கொண்டும், ஹம்ஸ-ஸன்னியாஸியைப்போல் ஜடையை வளர்த்துக்கொண்டும், அல்லது பரமஹம்ஸ-ஸன்னியாஸியைப்போல் தலையை மொட்டை யடித்துக்கொண்டும், தாங்களே ஸன்னியாஸி-வேஷம் பூண்டு, கலியின் ஏவுதலினுல் மேலுக்கு மேலாக சாஸ்திர-நிபந்தனைகளை மீறி லோகத்தில் தர்மங்களைக் கெடுத்து நாசஞ்செய்யவும், குருடருக்கு வழி காட்டிய குருடர் போல் தாங்களும் தங்களை யண்டினவர்களும் அதோ-கதியை யடையவும் மார்க்கத்தைத் தேடிக்கொண்டு விட்டார்கள். இக்காலத்தில் சூத்திர-மடங்களிலும் வெளியிலும் காஷாய-வஸ்திரந் தரித்து பஹிரங்கமாய் ஸன்னியாஸியென்றே சொல்லிக்கொண்டுவரும் பண்டாரங்களையும், சாமிகளையும், சாதுக்களையும், நூற்றுக்கணக்காய்ப் பார்க்கலாம்.

சாஸ்திரத்திலோ, பிராஹ்மணனைத் தவிர மற்ற ஜாதியார்களுக்கு ஸன்னியாஸாசிரமம் கிடையாதென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஸன்னியாஸாசிரமம் கூடாதென்றால் வைராக்கியமாவது நிவிருத்தி-மார்க்கத்தில் இச்சையாவது பிரவேசமாவது கூடாதென்று தாத்பரியமல்ல. வைராக்கியத்தை அப்பியஸிக்கவேண்டியது எல்லோருடையவும் கடமைதான். எல்லோருக்கும் நிவிருத்தியிலேயே புத்தியிருக்கவேண்டியதும் அவசியந்தான். ஆனல், அவரவர்களின் ஜாதிக்குத் தக்கபடி நிவிருத்தி-மார்க்கம் தனித்தனியே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு விதிக்கப்பட்டிருக்கிற மார்க்கத்தில் மற்றவர் பிரவேசிப்பது கூடாது. லிங்கத்துடன் அதாவது, காஷாய-வஸ்திரம் முதலான அடையாளங்களுடன் ஏற்பட்டிருக்கின்ற ஸன்னியாஸ-மார்க்கம் பிராஹ்மணனுக்கு மாத்திரம் வேத-சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. மற்றவர்களுக்குக் கிடையாது.

मुखजानामयं धर्मो वैष्णवं लिङ्गधारणम् ।
बाहुजातोरुजातानां नायं धर्मो विधीयते ॥

க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர்களும் ஸ்திரீகளும் வைராக்கியத்தை ஸம்பூர்ணமாய்க் கைக்கொண்டு சாஸ்திரத்தில் குறிப்பிட்டபடி லிங்கமன்னியில் வீரமார்க்கத்தில் பிரவேசித்து சரீரத்தியாகத்தைச் செய்யலாம். இப்படியே திரௌபதியுடன் பாண்டவர்களும், திருதராஷ்டிரரும், விதுரரும், காந்தாரீ, குந்தீ, முதலானவர்களும் கடைசியில் மஹாப்பிரஸ்தான-ரூபமாய் வீரமார்க்கப்பிரவேசஞ் செய்திருக்கின்றார்கள். இந்த விஷயம் வேறு. ஸன்னியாஸ மென்ற நான்காவது ஆசிரமம் சூத்திராதிகளுக்குக் கிடையாதென்பதை மாத்திரமிங்குதெரிந்து கொண்டால் போதும். க்ஷத்திரியனாகிய அர்ச்சுனன் பாரத யுத்த-ஆரம்பத்தில் தான் ஸன்னியாஸியாய் போய் பிக்ஷையெடுப்பதே நல்லதென்று சொன்னதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் இப்படிச் செய்வது க்ஷத்திரியனுக்கு தர்மமல்ல வென்றும், மற்றவருடைய தர்மத்தைக் கைக்கொள்ளக்கூடாதென்றும் பலவிதமாய்ச் சொல்லி அர்ச்சுனனுக்கு உபதேசிக்கின்றார். க்ஷத்திரியனுக்கே யில்லாத ஸன்னியாஸமும் பிக்ஷையெடுத்துண்பதும் இக்காலத்தில் சூத்திரருக்கு எப்படி வந்ததென்று கலிபுருஷன்தான் சொல்ல வேண்டும். வேத-சாஸ்திரப்படி சூத்திரருக்கு கிருஹஸ்தாசிரமம் ஒன்று தானுண்டு. स्वदारवृत्तिरेवास्य भवति नाश्रमान्तरेषु प्राप्तिः வைசியருக்கு பிரஹ்மசரியம், கார்ஹஸ்தியம் இவ்விரண்டு ஆசிரமங்களுமுண்டு. க்ஷத்திரியருக்கு பிரஹ்மசரியம், கார்ஹஸ்தியம், வானப்பிரஸ்தம் இம்மூன்றுமுண்டு. பிராஹ்மணனுக்கு மாத்திரம் ஸன்னியாஸமுள்பட நான்கு ஆசிரமங்களுமுண்டு.

चत्वारो ब्राह्मणस्योक्ता आश्रमाः श्रुतिचोदिताः ।
क्षत्रियस्य त्रयः प्रोक्ता द्वावेको वैश्यशूद्रयोः ॥

நான்காவதான ஸன்னியாஸாசிரமத்திற்குத் தகுதியில்லாத ஜாதியைச் சேர்ந்தவன் ஸன்னியாஸிக்குள்ள லிங்கத்தை தரித்து பிக்ஷையெடுத்தால் அவன் கொடும்பாபியென்று

சாஸ்திரம் முறையிடுகின்றது. அவன் உண்மையான ஸன்னியாஸிகளின் பாபங்களை அபகரித்துக்கொண்டு நரகத்திற்குச் சென்று கஷ்டப்பட்டுவிட்டு பின்னுல் மிருகம் முதலிய கீழான ஜன்மத்தையடைவானென்று தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

अलिङ्गी लिङ्गवेषेण यो वृत्तिमुपजीवति ।
स लिङ्गिनां हरत्येनः तिर्यग्योनौ च जायते ॥

காஷாய-வஸ்திரத்தை பிராம்ஹணன் ஒருவன்தான் தரிக்கலாமென்றும், மற்றவர்களுக்கு தரிக்க அதிகாரமில்லையென்றும் சாஸ்திரம் குறிப்பிட்டுச் சொல்லுகின்றது.

काषायं ब्राह्मणस्योक्तं नान्यवर्णस्य कस्यचित् ।

சூத்திரர்களில் மிக்க சிரத்தையுடனும் தீவ்ரமான பக்தியுடனும்கூடிய அனேகர்கள் சாஸ்திர-விதிகளை அறிந்துகொள்ளாமலும், தாங்கள் எப்படியாவது இனி பிறப்பிறப்புத் துன்பக் கடலில் விழுந்து ஆழ்ந்து கிடக்காமல் கரையேற வேண்டுமென்றெண்ணியும், மேற்கண்டபடி மந்திரோபதேசங்களைப் பெற்றுக்கொண்டும், துறவி-வேஷத்திற்கு முதற்படியாக சிலர்கள் தலையை மொட்டையடித்துக்கொண்டு வெள்ளை வேஷ்டியை தரித்து "ஐயா" என்ற பெயரை வஹித்துக்கொண்டும், சிலர்கள் கடைப்படியாக காஷாய-வேஷ்டியையே தரித்து "சாமி"யென்றும், வடதேசத்தில் "ஸாது"வென்றும் பெயர்களை வஹித்துக்கொண்டும் பிக்ஷையெடுத்துக் காலக்ஷேபஞ்செய்து வருகின்றுர்கள். இவர்களைப் பார்த்து மற்றுஞ் சிலர்கள் மேற்கண்ட நல்ல எண்ணத்துடனேயே தாங்களும் தங்களுடைய குடும்பங்களைவிட்டு வெளியேறி துறவி-வேஷம் பூண்டுகொள்ள வேண்டுமென்ற உத்தேசங்கொண்டவர்களாகவும் இருக்கின்றுர்கள். இப்படிப்பட்டவர்களெல்லோருக்கும்

சாஸ்திர-விதிகளை வெளிப்படுத்தவேண்டியது அவசியம். கெடுதலென்று தெரிந்திருந்தால் இவர்கள் மந்திர-ஜபங்களைச் செய்வதிலாவது, துறவி-வேஷத்தைத் தரிப்பதிலாவது பிரவேசித்திருக்கமாட்டார்கள், இனி பிரவேசிக்கவும் மாட்டார்கள். ஏற்கனவே பிரவேசித்திருந்தாலும், மறுபடியும் சரியான கிருஹஸ்த-மார்க்கத்தில் திரும்பி வந்துசேரவும் கூடும். இவ்விருவித ஜனங்களின் சாசுவத-நன்மையைக்கருதி இங்கு கொஞ்சம் வெளியிடப்பட்டது.

இவர்கள் ஜடையை வளர்த்துக்கொண்டதினாலும், மொட்டையடித்துக்கொண்டதினாலும், காஷாய-வஸ்திரத்தை தரித்துக்கொண்டதினாலும், மந்திரங்களை ஜபிப்பதினாலும், உபதேசிப்பதினாலும் ஸன்னியாஸிகளாகிவிடமாட்டார்கள் கொடும்-பாபிகளேயாவார்கள். அவர்களுக்குள்ள கிருஹஸ்தா சிரமம் அவர்கள் ஒதுக்கி உதறித்தள்ளினாலும் அவர்களை விட்டுப்போகாது. வாஸ்தவத்தில் கிருஹஸ்தர்களாயிருக்கிற இவர்களுக்கு அன்ன-பிக்ஷையைப்போட்டால் பிக்ஷை போட்டவர்களுக்கும் பிக்ஷையை வாங்கி உண்பவருக்கும் பாபந் தான் பலனென்று சாஸ்திரஞ் சொல்லுகின்றது. இவர்கள் தங்களுக்குத் தகுதியில்லாத ஸன்னியாஸி வேஷத்தைக் கலைத்துவிட்டு தங்கள் தங்கள் கிருஹத்திலேயேயிருந்து கொண்டு வைராக்யத்துடனும் ஜ்ஞானத்துடனும் கூடியிருந்து தங்களுடைய ஸ்வ-தர்மத்தை நடத்திவருவதினால் எவ்வகையிலும் குறைவில்லை. இதுவே மேன்மை, இதுவே இவர்களுக்கு மோக்ஷ-ஸாதனமென்று இவர்கள் நன்ருய்த் தெரிந்து கொள்ளவேண்டியது மிக்க அவசியம்.

6. கலியின் மஹிமை

முன் சொன்ன விபரப்படியெல்லாம் இந்த ஆர்ய-தர்ம-நாட்டில் தர்ம-வியவஸ்தை கெடும்படியான காரணங்களில் முன் சொல்லியபடி மந்திரோபதேசஞ் செய்வதாய் பாவனை

செய்து கால-இயற்கைக்குப் போக்கு விட்டு இடங்கொடுத்ததில், அது மேன்மேலும் தைரியங்கொண்டு அட்டஹாஸஞ்செய்து தலைசுற்றி ஆடத் தொடங்கிவிட்டது இனி அடக்கினாலும் அடங்காதென்றே தோன்றுகிறது. ஸாக்ஷாத் பகவானே அவதாரமெடுத்து வந்து தர்ம-விரோதிகளை துவம்ஸஞ்செய்து அடக்கினால்தான் அடங்கலாம். பகவானே கீதையில் சொல்லி யிருக்கிறபடி அவர் கிலுப்தமாக ஒவ்வொரு சதுர்யுகமென்ற மஹாயுகத்தின் கடைசியிலும், அதாவது ஒவ்வொரு கலி-முடிவிலும், மற்றும் மிக்க அவசியமான காலங்களிலும் அவதார மெடுத்து அதர்ம-நாசத்தையும் தர்ம-ரக்ஷணையையும் செய்தே வருகின்றார்.

இது நிற்க. திரேதா-யுகத்தில் ஸ்ரீராம-ராஜ்யத்தில் ஒரு சூத்திரன் தன் ஜாதிக்குத் தகுதியில்லாத வானப்பிரஸ்தாசிரமத்தைக் கைக்கொண்டு யோகத்தையும் தபஸ்ஸையும் செய்து வந்ததினால் அந்த ராஜ்யத்தில் ஜனங்களுக்கு அகால-மரண முண்டாகத் தொடங்கியதால், கருணா-மூர்த்தியான ஸ்ரீராமர் அந்த சூத்திரனைக் கண்டுபிடித்து அவனை ஸம்ஹாரஞ் செய்த பின்பு முன்னால் அகால-மரணமடைந்தவனும் பிழைத்து மறு படியும் ராஜ்யத்தில் எல்லோரும் சுகித்திருந்தார்களென்று இதிஹாஸம் மூலமாய் வெளியாகின்றது. இக்கலி-காலத் திலோ ஸ்ரீராமருக்கொப்பான சக்கிரவர்த்தியுங்கிடையாதென்ப துடன் மேற்கண்ட சூத்திரனைப்போல் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விதி-வரம்பு மீறி அக்கிரமங்களைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். வேத-மந்திரங்களை ஜபிக் கிறார்கள். மற்றவர்களுக்கும் மந்திரோபதேசஞ் செய்கிறார்கள். ஸன்னியாஸி-வேஷத்தையும் கைக்கொண்டிருக்கிறார்கள். மடங் களையும் ஸ்தாபித்துக்கொண்டார்கள். வேத-வாக்கியங்களையும் உச்சரிக்கிறார்கள். யோகாப்பியாஸத்தையும் செய்ய ஆரம்பித் திருக்கிறார்கள். தர்ம-விஷயமாயும், யோக-விஷயமாயும், வேதாந்த தத்துவ-விஷயமாயும் தங்களுக்குத் தோன்றியவாறு

தூரர்த்தங்களைச் செய்துகொண்டு புஸ்தகங்களையுமெழுதி அச்சுப்போட்டுப் பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டுவிட்டார்கள். இவ்வளவும் சேர்ந்து இந்நாட்டில் நடந்துவரும்போது அகால-மரணங்களும் புதிது புதிதான கொடிய மரணாந்த-வியாதிகளும், சரியான காலங்களில் மழையில்லாமலிருப்பதும், அகாலங்களில் மழை பொழிந்து நாசப்படுத்துவதும், எங்கும் எப்போதும் பஞ்ச-காலமாகவேயிருப்பதும், ஜனங்களுக்குப் பொதுவாகவே வீடுகளிலும் வெளியிலும் சுகமேயில்லாமலிருப்பதும், ஜனங்களுக்குள்ளும் ஜாதிகளுக்குள்ளும் பரஸ்பரம் நம்பிக்கைக் குறைவும், த்வேஷமும், சச்சரவுகளுமிருப்பதும், ராஜாக்களுக்கும் பிரஜைகளுக்கும் பரஸ்பரம் நம்பிக்கைக் குறைவு ஏற்படுவதும், இவைபோன்ற மற்றுமுள்ள கெடுதல்களும் ஏராளமாக இக்காலத்தில் காணப்படுகின்றனவென்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. இவ்வளவு காணப்பட்டும் ஜனங்களுக்கு புத்தி வராமலிருப்பதும், தாங்கள் சுகித்திருப்பதாகவே பிரமம்கொண்டிருப்பதுந்தான் ஆச்சரியப்படத்தகுந்தது. இதுவும் கலி-மகிமைதான்.

ஸம்ஸாரக்கடலில் முழுகி கஷ்டப்படாமல் அதை விட்டுக் கரையேறுவதற்கு உபாயமாக ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற “ மதம் ” என்ற ஸாதனத்தையே கலிபுருஷன் தன்னுடைய விபரீத காரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்கிறான். சாஸ்திரத்தில் குறிப்பிட்ட பிரகாரம் தங்கள் தங்களுக்குரிய ஜாதி-வியவஸ்தைப்படிக்கும் ஆசிரம-தர்மப்படிக்கும் வரம்பு-தவறாமலிருந்துகொண்டு அவரவர்களின் ஸாதனங்களைக் கைக்கொண்டு எல்லோரும் கரையேற வழியிருக்க, சூத்திராதிகளை மற்றவர்களின் மத-ஸாதனங்களைக் கைக்கொள்ளச்செய்து அவர்களை துர்க்கதியில் வீழ்த்திவருகிற கலியின் சக்தி அபரிமிதந்தான். மெச்சத்தகுந்ததுதான். அறியாக் குழந்தைகளை ஹிம்ஸை செய்து கொன்றுவிட வேண்டுமென்று எண்ணுகிற பாபியானவன் எப்படி பிளவி முதலான கெட்ட

நோய்களைக் கீறி ஆற்றிப் போக்கடிப்பதற்காக அத்தொழிலில் அதிகாரம் பெற்ற விரண-சிகித்ஸகனிடமிருக்க வேண்டிய கூர்மையான இரும்பு-கத்திகளையெடுத்துக் குழந்தைகளிடங் கொடுத்து அககுழந்தைகள் அக்கத்திகளால் தங்கள் நாக்குகளை அறுத்துக்கொண்டும் கழுத்துகளை வெட்டிக்கொண்டும் மரிக்கும்படி செய்விக்கக்கூடுமோ, அப்படியே கலிபுருஷன் சாஸ்திரப் பிரகாரம் அதிகாரிகளின் வசத்திலிருந்து அவர்களுக்கும் அவர்களின் மூலமாய் லோகத்திற்கும் சிரேயஸ்ஸை உண்டாக்கக் கூடிய மந்திரங்களையும் ஸன்னியாஸி-தர்மங்களையும் அனதிகாரிகளான சூத்திராதிகளிடம் கொடுத்து அவைகளாலேயே அவர்கள் கெட்டு அதோ-கதியை அடையும்படி வெகுலேசாய்ச் செய்து வருகின்றான். இதெல்லாம் காலக்கொடுமையே.

அத்தியாயம் 6.

புராண வசனங்கள்

1. புராணத்தின் மதிப்பு.

மந்திர-ஜப-விஷயமாக சாஸ்திர-விரோதமாய்ச் செய்யப் படுகிற ஆசரணைகளுக்கு ஆதாரமாக அவ்வாசரணைகளை அனுமோதிக்கிறவர்கள் சில புராண-வசனங்களைக் குறிப்பிடு கின்றார்கள். புராணம் பிரமாணமல்லவென்று சொல்லவில்லை. ஆனால், சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமில்லாத பாகங்களைத் தான் பிரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டும். அனாதியான சுருதி ஒன்றுக்குத்தான் ஸ்வதந்திரமான பிராமாண்யமுண்டு. ஸ்மிருதிகளுக்கும் சுருதியை அனுஸரித்திருக்கிற வரையில் தான் பிராமாண்யம் ஒப்புக்கொள்ளப்படுகிறது. சுருதிக்கு விரோதமான ஸ்மிருதி-வாக்கியங்கூட தள்ளத்தகுந்ததுதான். இப்படியே, சுருதி ஸ்மிருதிகளுக்கு விருத்தமாய் புராணங்களில் கண்டிருப்பவைகளெல்லாம் தள்ளத்தகுந்தவைகளே. சுருதி ஒன்றுதான் அமானுஷமான, அதாவது, மனுஷியனால் ஏற்படுத் தப்படாத சாசுவதமான பிரமாணம். சுருதியில் ஒன்றையுஞ் சேர்ப்பதற்காவது, கழிப்பதற்காவது, மாற்றுவதற்காவது இட மில்லை. சாகைகள், ஒவ்வொரு சாகையிலுமுள்ள பிரச்னங்கள், பிரச்னங்களிலுள்ள மந்திரங்கள், மந்திரங்களிலுள்ள பதங்கள், பதங்களிலுள்ள வர்ணங்கள், அதாவது எழுத்துக்கள், இவை களின் மாத்திரைகள், இவையெல்லாம் ஆதி-காலம் முதல் கணக்கிடப்பட்டு கிலுப்தப்பட்டிருக்கின்றன. ஒரு அக்ஷரத்தை யாவது சேர்க்க, எடுக்க, மாற்ற முடியாது. ஆகையால், சுருதியின் பிராமாண்யம் எக்காலத்திலும் மாறாமல் ஸ்திரமா யுள்ள பிராமாண்யம். புராணங்களோ அப்படியல்ல. யார் யார் எந்த எந்த காலங்களில் ஆர்ய-மதமென்றே சொல்லிக் கொண்டு இப்பரதகண்டத்தில் புதிதான மத-ஸ்தாபனங்களைச்

செய்ய யத்தனித்திருக்கின்றார்களோ, அவரவர்களுடைய சிஷ்ய-பரம்பரையில் எல்லோரும் தங்களுக்குப் புராணங்களில் ஆதாரமிருப்பதாகவே சொல்லிவந்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்ன காலத்திற்கப்பால் அவர்கள் சொல்லியப்படி புராண-வாக்கியங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. பௌத்தர்கள், ஜைனர்கள் முதலானவர்கள் வேத-சாஸ்திர-மதத்தை விட்டுப் பூராவும் வெளியேறினவர்கள். வேத-சாஸ்திரப்படிக்குள்ள மதமென்றே சொல்லிக்கொண்டு இக்கலி-யுகத்தில் முதலில் சுருதி-விலக்காக ஸித்தாந்தத்தை ஏற்படுத்திக்கொண்டவர்கள் சைவ-ஸித்தாந்திகள். இவர்களால்தான் பஞ்சாக்ஷரத்தை யாரும் ஜபிக்கலாமென்று ஆதியில் சொல்லப்பட்டது. இவர்கள் சொல்லியபடி ஸ்காந்த-புராணத்தில் வாக்கியங்களும் கதைகளுமிருப்பதாகக் காட்டுகிறார்கள். ஸ்காந்த-புராணமோ மிகப் பெரிய கிரந்தம். பூரா ஸ்காந்தத்தையுஞ் சேர்த்துப் புஸ்தகமாகப் பார்த்தவர்கள் அபூர்வம். பூராவும் இன்னும் அச்சுப் போடப்படவில்லை. அச்சுக்கு வராத காலத்திலேயே மத-வியவஹாரமேற்பட்டிருந்தபடியால் எதை யெழுதி ஸ்காந்தமென்று சொன்னாலும் கேள்வி இருந்திருப்பதில்லை. ஸ்காந்த-புராணமே பிரமாணமல்லவென்று சொல்லவில்லை. அதிலும் பிரகிருத-விஷயத்தைப்பற்றி சில பாகங்கள் சுருதி ஸ்மிருதிகளையனுஸரித்தே இருக்கின்றன. அவைகளைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அதில் பிரணவ-கல்பத்திலடங்கிய பிரணவ-கீதையில் மந்திரங்களை ஜபிக்கிற ஸ்திரீகள் நரகத்திற்குப் போவதாக ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

मन्त्रजाप्यश्च नार्यश्च सर्वे निरयगामिनः ।

இந்த வாக்கியம் வேத-சாஸ்திரத்தை யனுஸரித்திருக்கின்றது. இது சரியான பிரமாணந்தான். இதற்கு விரோதமாய் பிரஹ்மோத்தர-கண்டம் முதலான இடங்களில் ஸ்திரீ-

சூத்திர-ஸங்கர-ஜாதியார்களுக்குக்கூட பஞ்சாக்ஷர-மந்திரத்தில் அதிகாரமுண்டென்று சொல்லிய வாக்கியங்களையும் கதைகளையும் கக்ஷியின் பேரில் ஏற்பட்டதாகத் தள்ளிவிட வேண்டியதுதான் நியாயம்.

2. விபரீத ஆசாரம்

சைவ-ஸித்தாந்தப் பிரகடன-காலத்தில் அந்த ஸித்தாந்திகளுக்கும் வேதத்தில் கொஞ்சம் பயம் பாக்கியிருந்ததால் பிரணவத்தையாவது ஸ்திரீ-சூத்திராதிகள் உச்சரிக்காமல் விலக்கவேண்டுமென்று வாக்கியங்களில் குறிப்பிட்டார்கள். ராமானுஜரின் காலத்தில் அந்த பயமும் தெளிந்துவிட்டது. வர்ணாசிரம-விதிகளை மீறி ராமானுஜர் தன்னுடைய பிராஹ்மண-குருவைவிட்டு வெளியேறி வேத-சாஸ்திரப்படி மற்ற யாருக்கும் உபதேசஞ்செய்யவாவது சொல்லவாவது எக்காலத்திலும் யோக்கியதையில்லாத ஒரு சூத்திரரை குருவாக அடைந்து வேதாந்தாப்பியாஸஞ் செய்ததாக ஸ்ரீ வைஷ்ணவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். சூத்திரரால் செய்துகொடுக்கப்பட்ட 1000த்துடன் கூடிய 4000 தமிழ் திருவாய்மொழிப் பிரபந்தத்தையும் ஸ்ரீவைஷ்ணவ பிராஹ்மணர்கள் பக்தி-சிரத்தையுடனும் நியமத்துடனும் வேதம்போல் எண்ணி பாராயணஞ்செய்து வருகிற விஷயம் பிரஸித்தமே. சூத்திர-வாக்கியத்திற்கு மதிப்பு எவ்வளவென்று வியக்தமாய் சாஸ்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

पण्डितस्यापि शूद्रस्य शास्त्रज्ञानरतस्य च ।
वचनं तस्य न ग्राह्यं शुनोच्छिष्टहविर्यथा ॥
श्वचर्मणि यथा क्षीरं अपेयं ब्रह्मवादिभिः ।
तथा शूद्रमुखाद्वाक्यं न श्रोतव्यं कदाचन ॥
शूद्रात् ज्ञानागमश्चापि ज्वलन्तमपि पातयेत् ॥

தவிரவும், திருதராஷ்டிர—மஹாராஜாவானவர் தனக்கு வேதாந்த— தத்துவோபதேசத்தைச் செய்யவேண்டுமென்று ஜ்ஞானியாகிய விதுரரைக் கேட்டுக்கொண்டபோது விதுரர், தான் பிறவியில் சூத்திரராயிருந்ததால், தான் சொல்வது நியாய மில்லையென்று வெளியிட்டு, ஸ்ரீ ஸநத்ஸுஜாதரை தியானித்துத் தருவித்து அந்த மஹரிஷியைக் கொண்டு உபதேசத்தைச் செய்வித்த விஷயம் பிரஸித்தமே. இக்கலி காலத்திலோ, விதுரருடைய பாத-தூளியை தரிப்பதற்குக்கூட யோக்கியதையில்லாத பல சூத்திராதிகள், பஹிரங்கமாகவே தங்களிடம் பலவிதமான குரு ஸ்தானங்களை ஆரோபித்துக் கொண்டு, நேரிலும் புஸ்தகங்களின் மூலமாகவும் தத்துவோப தேசத்தைச் செய்வதாய் பாவிக்கத் துணிந்துவிட்டார்கள். வேதாந்த - தத்துவோபதேசத்தைச் செய்ய ஸாதாரணமாய் பிராஹ்மணனுக்குத்தான் அதிகாரமுண்டென்றும், அது ஸம்பந்தமாக எந்த விஷயத்திலாவது பிராஹ்மணர்களுக் குள்ளாக உபதேசத்தைச் செய்யக்கூடியவரே இல்லாமலிருக்கு மானால் அவ்விஷய - ஸம்பந்தமாக மாத்திரம் க்ஷத்திரிய- துவிஜரிடமிருந்தும் உபதேசத்தைப் பெறலாமென்றும் வேத- சாஸ்திர-வாயிலாகத்தெரியவருகின்றதேயல்லாமல் உபநயனமே இல்லாத சூத்திராதிகள் நேராக வாக்கினாலாவது எழுத்து மூலமாகவாவது அவ்வித தத்துவோபதேசத்தைச் செய்யக் கூடுமென்று ஓரிடத்திலும் வெளியாகவில்லை. ஆனால், எவ்விதம் மாணாக்கர்களுக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் ஸாமான்யமாய் போதித்துக்கொள்ளக்கூடுமோ, அவ்விதம் சூத்திராதிகளும் தங்களுக்குள்ளாகவே பரஸ்பரம் ஸாதாரண தத்துவ - போதனைகளைச் செய்துகொள்ளலாம். எப்படியும், சூத்திரரின் மூலமாய் துவிஜர்கள் வேதாந்த - தத்துவ ஜ்ஞானத்தைப்பெறக்கூடாதென்பது ஸித்தம்.

மேலும் ராமானுஜர் மைசூர்-ராஜ்யத்தில் ஒருதேவாலயத்தில் சண்டாளர்களைப் பிரவேசிக்கும்படி செய்தார். அவர் செய்ததை

யனுஸரித்து இப்பவும் அவ்வாலயத்தில் வருஷத்தில் ஒரு தினத்தில் அப்படி சண்டாளாதி பஞ்சமர்கள் பிரவேசித்து வருவதாகவும், அதற்கு மறுதினத்தில் ஸம்ப்ரோக்ஷணம் நடந்துவருவதாகவும் தெரியவருகிறது. இப்படிக்கெல்லாம் வைதிக-வர்ணாசிரம-தர்ம-விதிகளை உல்லங்கனஞ்செய்து வரப்பட்டதை யனுஸரித்து ஸ்ரீ வைஷ்ணவர்களின் மதப்படி பிரணவத்துடன் கூடிய அஷ்டாக்ஷர-மந்திரத்தை சூத்திராதிகளுள்பட யாரும் ஜபிக்கலாமென்று துணிவாய் வெளியிடப்பட்டது. மந்திரங்களை எல்லோருக்கும் வியவஸ்தையன்னியில் வெளியிடாமல் ரகஸியமாய் வைத்திருக்கவேண்டுமென்ற சுருதி-விதியையும் குரு-வாக்கியத்தையும் மீறி ராமானுஜரே, சூத்திரர்கள், பஞ்சமர்கள் உள்பட ஸகல ஜனங்களும் கூட்டங் கூடிக் கேட்கவேண்டுமென்ற உத்தேசத்துடன் ஒரு கோபுரத்தின் மேல் ஏறி நின்றுகொண்டு அஷ்டாக்ஷர - மந்திரத்தை கெட்டியாய்ச் சொல்லி ஜனங்களுக்கெல்லாம் உபதேசித்ததாகவும், இந்த அக்கிரமச் செய்கை உயர்ந்த லோகோபகாரச் செய்கையென்றும் சில வைஷ்ணவர்கள் கௌரவமாய்ச் சொல்லிக்கொள்கிறார்கள்.

தவிரவும் வேதோக்தமான புண்ட்ரத்தையே நீக்கிவிட்டு, துர்வாஸஸ் ரிஷியின் சாபத்தினால் சிலர்களுக்கு மாத்திரம் காரணார்த்தமாயேற்பட்ட புராணோக்தமான யோனி-புண்ட்ரத்தை தரித்துவருகிறார்கள். ஆனால் ஸ்ரீவைஷ்ணவர்கள் இவ்விஷயமான புராண-கதையை ஒப்புக்கொள்கிறதில்லை. அவர்கள் தங்களுடைய புண்ட்ரத்தை ஸ்ரீ பாதங்களென்று சொல்லிக்கொள்கிறார்கள். அப்பாதங்களையே அவர்களால் பூஜை செய்யப்பட்டு வருகிற ஆலயாதிகளில் அவர்கள் பகவானுடைய நெற்றியிலும் ஏன் சாற்றுகிறார்களென்று கேட்டால் பதில் சொல்லுகிறதில்லை.

3. விபரீத சிரத்தை

துர்வாஸஸ்ஸின் சாபத்தால் எந்தக் குடும்பத்திற்கு அப்புண்ட்ரம் விதிக்கப்பட்டிருந்ததோ, அந்தக் குடும்பத்தில்

ராமானுஜர் ஜனித்து அப்புண்ட்ரம் அவருடைய குல-புண்ட்ர மாக ஏற்பட்டிருந்திருக்கலாம். அவர் தனியாய் மத-ஸ்தாபனஞ் செய்தபோது தன்னுடைய புண்ட்ரத்தையே தன் சிஷ்ய-கோடி களுக்கு அடையாளத்திற்காக விதித்திருக்கக்கூடும். இவ்வித மாய் இப்போது பிரஸித்தமான ஐயங்கார்-நாமம் ஸ்ரீவைஷ்ணவர் களுக்கு ஏற்பட்டதாகச் சொல்லக்கூடும். இப்பரதகண்டம் பூராவிலும் ஐயங்கார் பூஜை செய்யாத விஷ்ணு-ஆலயங்கள் எல்லாவற்றிலும் பகவானுக்கு வேதோக்தமான கோபீ-சந்தன-ஊர்த்துவ-புண்ட்ரந்தான் சாத்தப்பட்டு வருகிறது. ஐயங்கார் களைப் பார்த்துவிட்டு, அறியாமையால், விஷ்ணு-பக்தர்கள் ஐயங்கார்-நாமத்தைத்தான் தரிக்கவேண்டுமென்ற துரபிப் பிராயத்தின் பேரில் ஸ்மார்த்தர்களில் சிலர்களும் தங்களுக் குள்ள வேதோக்த-கோபீ-ஊர்த்துவ-புண்ட்ரத்தை விட்டுவிட்டு அப்புண்ட்ரத்தையே ஒருவிதமாய் தரித்து வருகிறார்கள். இப்படியே கொஞ்சங்கொஞ்சமாக மற்றுமுள்ள வைதிக ஆசரணைகளையும் அஜ்ஞானத்தால் மாற்றிக்கொண்டு வருகிறார்கள். காலக்கொடுமையால் காணப்படுகின்ற இவை யெல்லாவற்றுக்கும் புராண பிரமாண முண்டு.

கடைசியில் தனி-மத-ஸ்தாபனஞ்செய்த மத்துவரின் சிஷ்ய-கோடிகளும் சுருதி-விலக்கான தங்களுடைய புது ஸம்பிரதாயங் களுக்கும் புராணப்பிரமாணமிருப்பதாகவே சொல்லுகின்றார்கள். சுருதியில் சொல்லப்பட்ட ஊர்த்துவ-புண்ட்ரத்தையும் உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஆனால், சுருதிப்படி அத் துடன் பஸ்மோத்துளனத்தைச் செய்துகொள்ளாமல் முத்திரை களையும் அக்ஷதையினால் திலக-ரேகைகளையுஞ் சேர்த்து தரித்து வருகிறார்கள். இவர்கள் சுருதி-ஸ்மிருதிகளை விட புராணத் தையே முக்கியப் பிரமாணமாகக் கைக்கொண்டு சுருதி-ஸ்மிருதி களால் விதிக்கப்பட்டிருக்கிற நித்திய-நைமித்திக-கர்மாக்களை விட புராணோக்தமான காம்ய-விரதாதிகளில் அதிகப் பற்றுள்ளவர்களாய்க் காணப்படுகின்றார்கள். புராணோக்த

மான ஏகாதசீ-விரதத்திலும் துவாதசீ-பாரணையிலும் இவர்களுக்கிருக்கிற சிரத்தை சுருதி-ஸ்மிருதி-விஹிதமான ஸந்தியாவந்தனுதிகளில் காணப்படவில்லை. இவர்களுக்கு துவாதசீ-பாரணை - காலம் முக்கியமேயல்லாமல் ஸந்தியாவந்தன - மாத்தியாஹ்னிக - காலங்கள் முக்கியங்களல்ல. இதுவும் நியாயந்தானென்று சில புராண-வசனங்களைச் சொல்லி ஸாதிக்க யத்தனிக்கிறுர்கள். இந்தப்படி எல்லா மதஸ்தர்களும் அவரவர்களுக்குத் தக்க புராண - வாக்கியங்களிருப்பதாய் அச்சுப் புஸ்தகங்களையும் காட்டுகின்றுர்கள். இக்காலத்திலோ அச்சுப்போடுவது சுலபம். எந்த மதத்திற்கும் அச்சிடப்பட்ட புராண - புஸ்தகங்களுண்டு. ஒவ்வொரு க்ஷேத்திரத்திற்கும், தீர்த்தத்திற்கும் புராணமிருப்பதுபோல், ஒவ்வொரு கொள்கைக்கும் புராணமுண்டு.

பஞ்சாக்ஷரமில்லாத ஸ்திரீகளுக்கு சுத்தி போதாதென்றும், சிராத்தாதிகளுக்கு சமையல் செய்ய அவர்கள் யோக்கியர்கள் அல்லரென்றும் சொல்வதற்கும் புராண - வாக்கியங்களைக் காண்பிக்கின்றுர்கள். இப்படியே அஷ்டாக்ஷர-ஜபஞ்செய்யாத ஸ்திரீகளுக்கு சுத்தி கிடையாதென்று சொல்லுகிற வேறு புராண-வாக்கியங்களுமுண்டு. மேலும், சரீரத்தில் சூட்டு - முத்திரை போடப்பட்டிருந்தால் அதிக அசுத்தியே ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. தப்தாங்கியைப் பார்ப்பதும் தொடுவதும் தோஷமாகும். இதற்கு நேர் விரோதமாய், சில சைவர்களின் கொள்கைப்படி சூல - முத்திரையில்லாதவர்களும், ஸ்ரீ வைஷ்ணவ - மாத்துவர்களின் கொள்கைப்படி சங்கம், சக்கிரம் முதலான முத்திரைகளால் முத்திராதாரணம் செய்து கொள்ளாதவர்களும் அசுத்தர்களென்ற வசனங்களையும் அவரவர்களின் புராணங்களில் காட்டுகின்றுர்கள். புராணத்தை நம்பி ஸ்மார்த்த-ஸ்திரீகளும் பஞ்சாக்ஷரத்தை ஜபிக்கவேண்டுமானுல், அதை நம்பி பலவிதமான சூடுகளையும் ஸ்திரீகளுள்பட

ஸ்மார்த்தர்களெல்லோரும் போட்டுக்கொள்ள வேண்டியதும் அவசியமாகிவிடும்.

4. விபரீத அர்த்தங்கள்

ஸநாதனமான-வேத-சாஸ்திரங்களே முக்கியமென்று நம்பி ஆசரித்துக்கொண்டு வைதிக-ஸ்மார்த்தர்களாயிருப்பவர்களுக்கு சூட்டு - முத்திரை - அடையாளம் வேண்டியதில்லை. வைதிக-மதத்தை விட்டு வெளிப்பட்டவர்களுக்கு ஒரு அடையாளம் அங்கத்திலிருப்பதும் நல்லதுதான். ஒரு ஸன்னியாஸி வேதோக்தமான தன் ஸ்வ-தர்மத்தை விட்டு விலகிப்போனால் ஒருவித சூட்டு-முத்திரையினால் அங்கத்தில் அடையாளமிட்டு அந்த ஸன்னியாஸியை ராஜா தன் ராஜ்யத்தை விட்டு வெளியேற்ற வேண்டுமென்று சாஸ்திரஞ் சொல்லுகிறது.

पारिव्राज्यं गृहीत्वा तु यः स्वधर्मे न तिष्ठति ।
श्वपादेनाङ्कयित्वा तं राजा शीघ्रं प्रवासयेत् ॥

இக்காலத்திலோ இப்படிச் செய்வதற்கு ராஜா கிடையாது. சுருதி ஸ்மிருதி - மார்க்கத்திலிருந்து வெளியேறி, தாங்கள் ஸ்மார்த்தர்களே யல்லவென்று, அதாவது ஸ்மிருதியை அனுஷ்டிப்பவர்களே அல்லவென்று ஒப்புக்கொள்பவர்கள் தங்களைத் தாங்களே சூட்டு-முத்திரையால் அடையாளமிட்டுக் கொள்ளவேண்டுமென்பது ஈசுவர - ஸங்கல்பமாயிருக்கலாம்-ஹிந்து-மதத்தையே விட்டு பஹிரங்கமாய் வெளிப்பட்டவர்களுக்கு அடையாளம் அனுவசியம். அவர்கள் வேத-சாஸ்திர-மதத்தைச் சேர்ந்தவர்களல்லவென்று ஸ்பஷ்டமாய்த் தெரியக் கூடும். சைவ-வைஷ்ணவ-மாத்துவர்கள் தாங்கள் ஹிந்துக்களென்றும், சுருதி-ஸ்மிருதிகள் தங்களுக்கும் பிரமாணங்கள் தானென்றும் சொல்லிக்கொண்டு வேத-சாஸ்திரங்களுக்கு விரோதமான ஸம்பிரதாய-ஆசாரணைகளைக் கைக்கொண்டிருப்பதால், இவர்களுக்கு சரீரத்திலேயே அடையாளமிருப்பது நியாய

மென்றே சொல்லவேண்டும். ஈசுவர ஸங்கல்பம் நிஷ்காரணமா யுண்டாகாது. வைஷ்ணவ - மாத்துவர்களில் புருஷர்கள், ஸ்திரீகள் எல்லோரும் முத்திராதாரணஞ்செய்துகொள்கிறார்கள். வடதேசத்தில் சில இடங்களில் மாத்திரம் சைவர்களில் சில வகுப்பினர்கள் அபூர்வமாய் சூல முத்திரையை தரிப்பதாகத் தெரியவருகிறது. இத் தென்தேசத்தில் காணப்படவில்லை. வேதோக்தமான கர்மானுஷ்டானம், விரதங்கள், உபாஸனை, தபஸ் இவைகளால் நன்கு தப்தமாய், ஸ்புடஞ் செய்யப்பட்ட தங்கம்போல், சுத்தப்படுத்தப்பட்ட சரீரத்துடனும் மனதுடனு மிருப்பவர்கள்தான் உத்தம லோகத்தை அடைவார்களென்று சுருதியில் குறிப்பிடுகிற இடத்தில் "தப்தம்" என்ற பதத்திற்கு உடம்பில் சூடு போட்டுக்கொள்கிறதென்ற அர்த்தத்தைச் செய்து அஜ்ஞானத்தால் வைஷ்ணவ-மாத்துவர்கள் முத்திரா தாரணத்தை ஆசரித்துவருகிறார்கள். வேதத்தையும்ஸ்மிருதியை யும் தள்ளிவிட்டுத் தங்களுக்குத் தோன்றியவாறு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஸம்பிரதாயத்தையே பிரமாணமென்றெண்ணு கிறவர்களுக்கு வேத-வாக்கியமும் விபரீதமான அர்த்தத்தைத் தான் கொடுக்கும். அவர்களுடைய ஆசரணைகளும் வித்தியாஸ மாகத்தானிருக்கும். இவ்வித ஆசரணைகளுக்கும் புராண-ஆதாரங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இக்காலத்திலுள்ள புராணங்களைமாத்திரம் ஆதாரமாகக்கொண்டு அனுஷ்டானத்தை சீர்திருத்த யத்தனித்தால் ஒரு மார்க்கமும் நிச்சயமாகப் பிடிபடக்கூடியதல்ல. வைதிக-ஸ்மார்த்தர்கள் யாவரும் சுருதி-ஸ்மிருதிகளுக்குத்தான் முக்கியமாய் கட்டுப்பட்டவர்கள். அவர்களுக்கு முக்கியப் பிரமாணம் வேதமும் ஸ்மிருதியுந்தான். எந்த மட்டில் இவைகளுக்கு விரோதமன்னியில் புராணங்கள் உபயோகப்படுகின்றனவோ அம்மட்டில்தான் அவைகள் பிரமாணம். இதுதான் சாஸ்திர-ஸித்தாந்தம்.

5. சிஷ்டாசாரம்

மேற்சொன்ன மட்டில்தான் சிஷ்டாசாரமும் பிரமாணம். சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமான ஆசாரம் சிஷ்டாசாரமே யாகாது. இக்கலி-யுகத்தில் சிஷ்டாசாரமென்ற பிரமாண-விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் ஆலோசித்து அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டுமேயொழிய, சிஷ்டர்களென்று பெயர் வாங்கினவர்களின் ஆசரணைகளை யெல்லாம் கைப்பற்றிவிட்டால் அனர்த்தந்தான் விளையும். வாஸ்தவ சிஷ்டர் யார் என்பதைத் தீர்மானிப்பதே இக்காலத்தில் கஷ்டம். மாஸந்தோறும் ஆயிரக்கணக்காக ரூபாய் வரக்கூடிய பெரிய உத்தியோகத்திலிருந்துகொண்டு நவீன ஆசார-சீர்திருத்த-மயக்கத்தில் ஆழ்ந்து கிடப்பவர் விபூதியையும் பஞ்ச-கச்சத்தையும் தரித்துக்கொண்டுவிட்டால் பெரிய சிஷ்டராகிவிடுகிறார். அவருடைய பிதற்றலெல்லாம் வேத-வாக்கியமாகவும், அவர் வர்ணாசிரம-தர்மங்களை பேதித்துத் தாறுமாறாகச் செய்யும் தப்புக்காரியங்களெல்லாம் ஸர்வோத்தமமான தர்ம-காரியங்களாகவும் ஆகிவிடுகின்றன. இவ்விதமாகவே சிலர்கள் வியாகரணம், தர்க்கம், வேதாந்தம் இவைகளை ஒருவிதமாய் படித்துவிட்டு, தர்ம-சாஸ்திரத்தைப் பார்க்காமலே, தாங்களும் சாஸ்திர விருத்தமாய் நடந்துகொண்டு, மற்றவர்களுக்கும் அதர்மோபதேசத்தைச் செய்துவிடுகிறார்கள். இவ்வித வித்வான்களாலும் பெரும்பாலும் புரோஹிதர்களாலும சூத்திராதிகளின் குருஸ்தானத்தில் இன்னும் பாக்கியிருந்துகொண்டிருக்கிற சிலர்களாலும் விதி-வரம்பு-மீறி நடந்து வருகிற சில ஸன்னியாஸிகளாலும் அனேக ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் உத்கிருஷ்ட வேத மந்திரங்கள் உபதேசஞ் செய்யப்பட்டு, விபரீத-பாவனைகளும் தவறான ஆசரணைகளும் இந்நாட்டில் விருத்தியடைந்து வருகின்றன. இக்காலத்தில் சிஷ்டர்களென்று எவ்வளவு கியாதி பெற்றிருந்தாலும், சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமான வார்த்தையாவது நடவடிக்கையாவது அவர்களிடம் காணப்பட்டால் அது தள்ளத்தகுந்ததே.

6. வெகு நாள் பழக்கம்

வெகுகாலமாய் ஸ்திரீகள் பஞ்சாக்ஷராதி-மந்திர-ஜபங்களைச் செய்து வந்திருக்கிறார்களே என்று இப்பவும் அனேகர்களுக்குப் புத்தி-மயக்கமிருக்கலாம். புத்தியை நிதானப்படுத்திக்கொண்டு நன்றாய் ஆலோசித்து, சுருதி-ஸ்மிருதிகளை அனுஸரிப்பதே முக்கியமென்று தீர்மானித்து நடப்பதுதான் ஆஸ்திகர்களின் லக்ஷணம். சாஸ்திரத்திற்கு விரோதமென்று தெளிவாய் வெளியாகிற காரியம் நெடு நாளாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்ததினால் நியாயமான காரியமாகிவிடமாட்டாது. கொங்குநாடு முதலான சில பிரதேசங்களில் ஜ்ஞாபகத்திற்கெட்டாத காலம் முதல் பல தலைமுறையாய் பசுமாடுகளுக்கு மூக்குக்குத்தி அவைகளை நிலங்களை உழுவதற்கும் கபிலைத்தண்ணீர் இறைப்பதற்கும் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். பிராஹ்மண-வைதிக-சாஸ்திரஜ்ஞர்களின் நிலங்களிலும் பசுமாடுகளைக்கட்டி உழுது வருகிற கொடும்-பாபச் செய்கையை இப்பவும் சாகுபடி-காலங்களில் பார்க்கலாம். அவர்களைக்கேட்டால் முன்னோர்கள் காலம் முதல் இப்படி நடந்தேறி வந்திருப்பதால் நாம் என்ன செய்யக் கூடும், அதை நிறுத்துவது எப்படி ஸாத்தியப்படுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மற்றொரு உதாஹரணமெடுத்துக் கொள்வோம். வேதாகம-சாஸ்திரங்களை அனுஸரித்து வேத-மந்திரங்களையுச்சரித்து அதிகாரமுள்ளவரால் பூஜை நடந்தேறிவருகிற ஸாத்விக-மூர்த்திகளின் ஆலயங்களில் வேதத்தில் அதிகாரமுள்ள பிராஹ்மணாதிகள் தரிசனஞ் செய்யலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித ஆலயங்களில் பிராஹ்மணாதிகள் உபயோகப்படுத்திவருகிற ஸாத்விக-பதார்த்தங்களை தைவங்களுக்கு நைவேத்தியமாக அர்ப்பணஞ் செய்யலாம். இவ்விதமாகவே, மத்தியம் மாம்ஸம் முதலான தாமஸ-பதார்த்தங்களை உபயோகப்படுத்திவருகிற கீழ்-ஜாதியார்களும் தாங்கள்

உபயோகப்படுத்துவதை தேவதைகளுக்கு அர்ப்பணஞ் செய்யக் கூடிய ஸௌகரியத்தின் பொருட்டு தாமஸ-தேவதைகளின் ஆலயங்களேற்பட்டு வேத-மந்திரமன்னியில் சூத்திராதிகளால் பூஜை செய்யப்பட்டு வருகிறது. இவ்வித ஆலயங்களில் பிராஹ்மணன் போய் தரிசனம் முதலானது செய்யக் கூடாதென்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகிலும், பல கிராமங்களில் மேற்கண்டபடி சூத்திராதிகளால் பூஜை செய்யப்பட்டும், பிராணிகளைக்கொன்று மாம்ஸம் முதலானதுகள் நைவேத்தியஞ் செய்யப்பட்டும் வருகிற தாமஸ-குணம் பொருந்திய துர்-தேவதைகளின் ஆலயங்களுக்கும் சில பிராஹ்மணர்கள் போய் தரிசனஞ் செய்துகொண்டும், சிலர் ஆடு கோழி வாங்கிக்கொடுத்துப் பிரார்த்தனை செலுத்திக் கொண்டும், பூசாரி-கையிலிருந்து பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டும், வருகிறார்கள். பல தலைமுறையாய் இவ்வித ஆசரணை நடந்தேறி வருவதாய்த் தெரியவருவதினால் இந்தப் பெரும் அக்கிரமகாரியங்கூட தர்ம-காரியமாகிவிடக்கூடுமா? வெகுகாலமாக அக்கிரமத்தைச் செய்துவந்தால் பிராஹ்மண்யம் குறைந்தும் பாபம் உறுதிப்பட்டும் வருகிறதென்று மாத்திர மாகுமேயொழிய பாப-காரியம் புண்ணிய-காரியமாக மாறிவிட மாட்டாது.

முன் காலத்தில் சாஸ்திர-விருத்தச் செய்கைகளுக்குப் பல காரணங்களிருந்திருக்கலாம். அவை யெல்லாவற்றையும் நாம் கண்டுபிடிப்பது ஸாத்தியப்படாது. அக்காலத்தில் அவர்கள் பலவிதமாய் மோசமும் போயிருக்கலாம். சரி சரியல்லவென்று தெரிந்துகொள்வதற்கு நமக்கு சாஸ்திரந்தான் பிரமாணம். பகவானும் கீதையில்,

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।

என்றே சொல்லியிருக்கின்றார். முன்னோர்கள் அக்கிரமஞ் செய்தார்கள், அல்லது மோசம் போனார்களென்ற காரணத்தால் நாமும் கெட்டுப்போகவேண்டுமென்பது அவசியமில்லை.

சாஸ்திர-வாக்கியத்திலிருந்த அதிக விசுவாசத்தினுலும், மதாந்தரஸ்தர்கள் தங்கள் கொள்கைகளை அனுஸரித்து சாஸ்திரமென்று புஸ்தகங்களை வெளிப்படுத்தியிருக்கிற விபரத்தைத் தெரிந்துகொள்ளாமலும், இப்படியே பல மதாந்தரஸ்தர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாகப் பலவிதமாய் பிரஸித்தப்படுத்தி வந்திருக்கிற விஷயத்தையறியாமலும், தங்களுடைய கண்ணில்பட்ட ஏடே சாஸ்திரமென்றெண்ணி, அவர்கள் சில விஷயங்களில் மோசம் போயிருக்கலாம். இப்போது ஒன்றுக்கொன்று விருத்தமான பலவித ஆசரணை களும், கொள்கைகளும், புராண-புஸ்தகங்களுமிருக்கிற விபரம் நமக்கு நன்ருய்த்தெரியும். இவைகளெல்லாம் வாஸ்தவமா யிருக்க முடியாதென்றும் நமக்குத்தெரியும். சுருதி-ஸ்மிருதி களில் இவைகளுக்கு விரோதமான வாக்கியங்கள் காணப்படுகிற விஷயமும் தெரியும். விபரீதக்கொள்கைகளுக்குள்ள புஸ்தகங் களை அவரவர்கள் அச்சுப்போட்டு எல்லாம் வெளிவந்த பின்பு பரஸ்பரம் விருத்தமாயிருப்பதாலும், ஒருவர் குறிப்பிடுகிற புராண-ஆதாரத்தை மற்றவர் ஆக்ஷேபித்து ஒருவருக்கொருவர் சச்சரவு செய்துகொள்கிறதிலிருந்தும் நாம் வெகு ஸங்கதிகளைத் தெரிந்துகொள்ளக்கூடும். புதிதாய் எழுதியிருக்கக்கூடு மென்ற ஸந்தேஹமே முன்னேர்களுக்கு உண்டாகக்கூடிய தில்லை. ஆகையால் எங்கேயாவது ஒரு வசனமிருப்பதாகக் காணப்பட்டால், அதன் தத்துவத்தை விசாரிக்காமலே நிஷ்கபடி களான அவர்கள் ஆசரணைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள்.

7. வைதிக தர்மம்

பஞ்சாக்ஷரத்தாலாவது அஷ்டாக்ஷரத்தாலாவது ஸ்திரீ களுககு ஒரு காலத்திலும் சுத்தி ஏற்படக்கூடியதல்ல; வைதிக-ஸ்மார்த்த ஸம்ஸ்காரத்தால்தான் அவர்களுக்கு சுத்தி ஏற்படும். சுருதி-ஸ்மிருதிகளுக்கு விருத்தமான காரியம் எக்காலத்திலும் ஸம்ஸ்காரமாகாது, பாபந்தாகுகும். சுருதி - ஸ்மிருதிகளை கவனியாமல் தங்களுடைய தனித்தனி ஸம்பிரதாய-விதிகளை

பிரமாணமென்று எண்ணியிருக்கிற பின்ன - மதஸ்தர்கள் முத்திராதாரணத்தைச் செய்து கொண்டாலும் அவர்களுடைய ஸ்திரீகள் மந்திரங்களை ஜபித்தாலும், அவர்களுடைய செய்கை ஸநாதன-ஆர்யமத-வைதிக-ஸ்மார்த்தர்களுக்குப் பிரமாணமாக மாட்டாது. ஆர்ய-வைதிக-மதத்தை விட்டு வெளியேறினவர்களின் ஆசரணைகளை அம்மதத்திலேயே இருப்பவர்கள் கவனிக்கவும்கூடாது, அநுஸரிக்கவும்கூடாது. வீர - சைவர்களின் ஸ்திரீகள் பஞ்சாக்ஷரமில்லாவிட்டால் அசுத்தர்களாகவே பாவிக்கப்படட்டும். வீர-வைஷ்ணவ-ஸ்திரீகளும் அஷ்டாக்ஷரமில்லாவிடில் அசுத்தர்களாகவே பாவிக்கப்படட்டும். உண்மையான ஆர்யர்கள் வீர-சைவர்களுமல்ல, வீர-வைஷ்ணவர்களுமல்ல அவர்களுக்கு வேதத்தில் குறிப்பிட்ட தைவங்கள் எல்லாம் வணங்கத் தகுந்தவைதான். ஒவ்வொருவருக்கும் முக்கியமாய் ஒரு மூர்த்தியில் அதிக பக்தி ஏற்பட்டிருந்தபோதிலும், மற்ற மூர்த்திகளிலும் அவர்களுக்கு பக்தியுண்டு. பகவானுடைய விபூதிகளில் ஒன்றிலும் வாஸ்தவ வைதிகர்களுக்கு துவேஷமிருக்கலாகாது. இக்காரணம்பற்றியே வைதிக-ஸ்மார்த்தர்களின் பூஜாக்கிரமத்தில் சாஸ்திரப்படி பஞ்சாயதன-பூஜை விதிக்கப்பட்டிருக்கின்றது. அவரவர்களின் மனோ-பாவப்பிரகாரம் அவரவர்களின் முக்கிய உபாஸ்ய - தேவதைகளுக்கு மத்திய-ஸ்தானத்தைக் கொடுத்து, மற்ற தேவதைகளுக்கு பக்க-ஸ்தானங்களைக் கற்பித்திருக்கிறது. வைதிக-ஸ்மார்த்தர்களான அத்வைதிகளுக்கு எல்லா தைவங்களும் ஒன்றுதான். அமூர்த்தமாயுள்ள பரம-வஸ்துவான பிரஹ்மத்திற்கு எந்த மூர்த்தியும் விபூதியாகும். வியவஹார-ரீதியில் எல்லா தைவங்களும் வாஸ்தவந்தான். கொண்டாடத் தகுந்தவைதான். கொண்டாடுகிற ஜீவர்களாகிய நாமும் நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சமும் வாஸ்தவந்தான். உண்மையிலோ, அதாவது, பாரமார்த்திக-திருஷ்டியில், வார்க்கப்பட்டதும், அழியக்கூடியதும் மித்யைதான். ரூபமும்

சரீரமுமில்லாத பரம-ஆத்ம-வஸ்துவான பிரஹ்மத்திற்கு நெற்றியேயில்லாததினுல், விபூதியை நெற்றியில் தரிக்கிறவர் பரமாத்மாவா, அல்லது, நாமத்தை தரிக்கிறவர் பரமாத்மாவா என்ற கேள்வியாவது விசாரமாவது நமக்கு உண்டாவதற்கிடமே இல்லை. உபாஸனைக்காக மூர்த்திகளைக் கொண்டாடுகின்றேம். கர்மாநுஷ்டானத்தாலும் உபாஸனையாலும் சித்த-சுத்தியும் சித்தத்தின் ஐகாக்கிரியமும் ஸித்தித்துவிட்டால், அப்பால் ஜ்ஞானுப்யாஸ-காலத்தில் மூர்த்தியையும் தள்ளிவிடக் கூடியவர்களாயிருக்கிறேம். ஞானமென்றல் ஜீவப்பிரஹ்ம-ஏகத்வ-ஜ்ஞானம், இந்த ஜ்ஞானம் சைவ-வைஷ்ணவ-மாத்வாதி-மதாந்தரஸ்தர்கள் யாவருக்குங் கிடையாது, அவர்களுடைய உத்தேசத்திலுமில்லை. இந்த ஏகத்வ-ஜ்ஞானந்தான் மோக்ஷத்திற்கு நேர் ஸாதனம். இந்த ஜ்ஞானத்தை ஸம்பாதிப்பதுதான் நம் வைதிக-ஸ்மார்த்த-புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் முக்கியமான உத்தேசம்.

ஆர்ய-வர்ணுசிரம-வியவஸ்தையில் புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், இந்தப்படியே அந்தந்த வர்ணத்தார்களுக்கும், ஆசிரமஸ்தர்களுக்கும், நான்கு வர்ணங்களுக்கும் வெளிப்பட்ட ஹிந்துக்களான சண்டாளாதி பஞ்சமர்களுக்கும் தனித்தனியே தர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவரவர்களுக்குரிய தர்மங்களை அவரவர்கள் கிரமமாய் அனுஷ்டித்து வந்தால், மேன்மேலும் தடையின்றிச்சென்று மேற்கண்ட ஜ்ஞானத்தைக் கைக்கொள்ளலாம். வேத-சாஸ்திர விதிகளையனுஸரித்து நடந்து வந்தால்தான் ஜ்ஞானம் யாருக்கும் கைகூடும். மீறி நடந்தால் அது கைகூடாதென்பது திண்ணம். வேத-சாஸ்திரங்களினுல் அதிகாரங்கொடுபடாத மந்திர-ஜபாதி-காரியங்களில் ஸ்திரீ-சூத்திராதிகள் பிரவேசித்தால் அஜ்ஞானத்திலேயே உழன்று கிடக்கவேண்டியதுதான். ஆதலால் ஜ்ஞானத்திலும் மோக்ஷத்திலும் உத்தேசமிருந்தால் சுருதி-ஸ்மிருதிகளில் சொல்லியபடி ஆசரிப்பதே அவசியம்.

அத்தியாயம் 7

ஸ்திரீ சூத்திர தர்மம்

1. பதி சுசுரூஷை

ஸ்திரீகளும் சூத்திரர்களும் உத்தம பதவிக்கு வருவது மிக சுலபம். இதனாலேயே சில ரிஷிகள் கூட ஸ்திரீ-சூத்திர-ஜன்மங்கள் சில விஷயங்களில் சிலாக்கியமென்று வெளியிட்டிருக்கிறார்கள். சுமங்கலிகளான ஸ்திரீகள்ஜாக்கிரதையாய் பதிவிரதா - தர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டும், பதி-சுசுரூஷையைக் குறைவில்லாமல் சிரத்தையுடன் செய்து கொண்டும், எப்போதும் பகவந்-நாமாவை மனஸில் உச்சரித்துக் கொண்டும், பதி-ரூபமாகவே பகவான் இருப்பதாக தியானித்துக் கொண்டுமிருந்தால் ஜ்ஞானம் கிரமமாக உதித்துவிடும். சிவ-பரமாகவும், விஷ்ணு-பரமாகவும், தேவீ-பரமாகவும், மற்றும் பல தேவதா-பரங்களாகவும் ஏராளமான திவ்ய-நாமாக்களும் நாமாவளிகளும் வேத-சாஸ்திர-புராணங்களில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவைகளில் மனதுக்குப் பிடித்தமான எதை யாவது அவலம்பித்துக்கொண்டு நாமோச்சாரணத்துடன் தியானஞ் செய்துவரலாம். பதிவிரதா தர்மத்திற்கு மேல் உத்தமமாக ஸ்திரீகளுக்கு யாதொரு தர்மமுங்கிடையாது. பதி--சுசுரூஷைக்கு மேல் உத்தமமான கர்மாவும் கிடையாது. பதிவிரதா-தர்மத்தைக் கெடுத்துக்கொண்டு வேறு எவ்வளவு தர்மங்களைச் செய்தாலும் நிஷ்பலந்தான். வேதோக்தமான எல்லா நித்ய-நைமித்திக-கர்மாக்களையும் கிரமமாய்ச் செய்து வருகிற துவிஜ-புருஷனுக்கு எந்த பலன் கிடைக்கக்கூடுமோ அந்த பலன் ஸ்திரீகளுக்கு லேசாய் பதிவிரதா-தர்மத்தினாலும் பதி-சுசுரூஷையினாலும் கிடைத்துவிடுகின்றது. புருஷன் செய்து வருகிற புண்ணியத்தில் பாதி பாகம் பதிவிரதையான ஸ்திரீக்குக் கிடைத்துவிடுகிறது. அவருடைய பாபத்தில் இவளுக்கு பாகம் கிடையாது. ஸ்திரீயானவள் பாபங்

களைச் செய்யாமலிருக்கும்படியாகக் கண்டித்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு புருஷனுக்கிருக்கிறபடியால், ஸ்திரீ செய்யும் பாபங்களில் புருஷனுக்கு பாதி-பாகமுண்டு. ஸ்திரீயின் புண்ணியத்தில் புருஷனுக்கு பாகம் கிடையாது. இந்தப்படி எவ்விதத்திலும் ஸ்திரீகளுக்கு அநுகூலமாகவே சாஸ்திர-நிபந்தனைகள் காணப்படுவதால், ஸ்திரீ உத்தம கதியை அடைய வேண்டுமானால் பதிவிரதையாயிருந்து பர்த்தாவின் சுசுரூஷையைச் செய்து கொண்டிருந்தால் போதும். சித்த-சுத்தி ஏற்பட்டு விடும். இத்துடன் மேற்கண்டபடி நாமோச்சாரண-ஸஹிதம் தியானமுமிருந்தால் சித்தத்தின் ஐகாக்கிரியமும் உறுதிப்பட்டு ஈசுவரானுக்கிரஹத்தால் ஜ்ஞானப்பிராப்திக்கும் யோக்கியதை உண்டாகிவிடும். வேறு யாதொரு பிரயத்தினமும் ஸ்திரீகளுக்கு வேண்டியதில்லை.

மந்திர-ஜபம் முதலான அதிக காரியங்களெல்லாம் வீண் டம்பமும் பாபமுந்தான். புருஷனுடைய அனுமதியிருந்தால் தேவதா-பூஜையைச் செய்யலாம் தோஷமில்லை. ஆனால் வேத-மந்திரமன்னியில் பூஜையைச் செய்யவேண்டும். ஸ்திரீகள் பாண-லிங்கத்தையாவது ஸாளிக்கிராவத்தையாவது தொடக் கூடாது. உண்மையில் பதிவிரதா-தர்மத்திலும் பதி-சுசுரூஷையிலும் தீவ்ர-சிரத்தையுள்ள உத்தம ஸ்திரீக்குத் தனியான பூஜை அனாவசியம். பூஜையில் ஈசுவரனுக்கு எந்த உபசாரங்கள் செய்யப்படுகின்றனவோ அவைகளைக்காட்டிலும் அதிகமாகவும் உண்மையாகவும் உபசாரங்களைச் செய்து கொண்டாடக்கூடிய பிரத்தியக்ஷ-ஈசுவர-வடிவமான பர்த்தா இருக்கும்போது அவரை விட்டு விட்டுக் கல்லிலும் மண்ணிலும் லோஹத்திலும் ஈசுவர-பாவனையைச் செய்துகொண்டு பாவனாரூப-உபசாரங்களைச் செய்வதில் என்ன அதிக பலன் கிடைக்கக் கூடும்? உத்தம-பத்னிக்கு பர்த்தாவே குருவாகவும் ஈசுவரனாகவுமிருப்பதுந்தவிர, அவளுக்கு சில விசேஷ ஸௌகரியங்களும் அதிக அனுகூலங்களும் இயற்கையாகவே ஏற்பட்டிருக்கின்றன.

2. ஸம்பூர்ண பக்தி

பக்தி-சாஸ்திரத்தில் குறிப்பிட்ட எல்லாவிதமான பக்தியையும் ஒரு விதத்திலும் குறைவில்லாமல் தன் பர்த்தாவிடம் காட்ட சுமங்கலிகளுக்கு ஸௌகரியமும் அவகாசமும் இருப்பது போல் மற்றவர்களுக்கு விக்கிரஹாதிகளிடத்திலாவது மாதா-பிதாக்களிடத்திலாவது குருவிடத்திலாவது காட்ட இடமில்லை. இவ்விஷயத்தில் சுமங்கலிகள் மிகவும் தன்யைகளென்பதில் ஸந்தேஹமில்லை. எப்போதும் பர்த்தாவை பிரத்தியக்ஷமாக பார்த்துக்கொண்டிருக்கலாம் (दर्शनं) அவரையே மனஸிலும் வெளிப்படையாகவும் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருக்கலாம் (कीर्तनं) நமஸ்காரஞ்செய்யலாம் (वंदनं) அவர் பிரத்தியக்ஷமாயில்லாத காலங்களிலும் அவரையே ஸ்மரித்துக்கொண்டிருக்கலாம் (स्मरणं) அவர் நேரிலிருக்கும்போது அவருடைய சரீரத்திற்கு வேண்டிய அனுகூல காரியங்களைச் செய்யலாம். (पादसेवनं) ஸ்நானஞ் செய்துவைக்கலாம், உடம்பைத்துடைத்து சுத்தப்படுத்தலாம். சந்தனம் பூசியும், புஷ்பம் ஸமர்ப்பித்தும், அலங்கரித்தும் அன்னபானாதிகளை நேரில் கொடுத்தும் உபசரிக்கலாம் (अर्चनं) எவ்வகையிலும் தன் சரீரத்தினால் அவருக்கு எவ்வளவு ஊழியஞ் செய்யக்கூடுமோ அவ்வளவையும் கொஞ்சங்கூட தடையின்றிச் செய்யலாம் (दास्यं) ஸஹதர்மசாரிணியாயிருப்பதாலும், ஸ்திரீ-புருஷர்களுக்குள் ஏகத்வம் ஸித்தித்திருப்பதாலும், சில ஸமயங்களில் அவருக்கு ஸமானமான ஸ்தானம் தனக்கிருப்பதாகக் காட்டி அவரைத் தன் சினேகிதராகவே எண்ணி நடத்தலாம் (सख्यं) மித்ர - பாவத்தை முன்னிட்டு அவருக்கு அனுகூலமாக பிரணய - கலக - ரூபமாய் சண்டையும் போடலாம். பக்தியினால் ஸந்தோஷம் அதிகரித்துவிட்டால் அவரை ஆலிங்கனமே செய்து கொள்ளலாம். தன்னையும் தன் சரீரத்தையும் அவருக்கு அர்ப்பணம் செய்து அவருடைய இஷ்டம்போல் நடத்திக் கொள்ளட்டுமென்று

உறுதியாயிருக்கலாம். (आत्मनिवेदनं). பர்த்தாவைத்தவிர மற்ற யாரிடத்திலும் எவ்விடத்திலும் இப்படிக்கெல்லாம் ஸம்பூர்ணமாய் பக்தியைச்செலுத்த முடியாது. அன்றியும் पतिमेकादशं कृधि என்று சொல்லியபடி பர்த்தாவின் வார்த்தக-தசையில் அதாவது வயது முதிர்ந்த பருவத்தில். ஈசுவரனே குழந்தையைப் போலிருப்பதாகவும் பாவித்து அவரைக் காப்பாற்றி லாளனை செய்து வரலாம்.

ஸகல விதத்திலும் பூர்ணமாய் பக்தியைச் செலுத்தி ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேறுவதற்கு மார்க்கமிருக்கும் போது சுமங்கலிகளுக்கு வேறு ஸாதனங்கள் வேண்டியதேயில்லை. ஸாளிக்கிராவம் விகாரமாயிருந்தாலும் கோணலாயிருந்தாலும் அதன் வெளி-ரூபத்தைப் பாராட்டாமல் அதில் பகவானிருப்பதாகவே எண்ணிக் கண்ணில் ஒத்திக்கொண்டு அது எப்படி பூஜை செய்யப்பட்டு வருகிறதோ, அவ்விதமாகவே பிராரப்த-கர்ம-வசத்தால் தனக்குக் கிடைத்திருக்கிற பர்த்தா குரூபியானாலும், மூடராயிருந்தாலும், துற்குணியானாலும் அவருடைய சரீர-ரூபத்தையும் வெளிச்செய்கைகளையும் வக்ராதி-தோஷங்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், அவர் ஸாக்ஷாத் ஈசுவரர்தான் என்பதான உறுதி எந்த ஸ்திரீயின் புத்தியிலிருக்கிறதோ, அவளே தன்யை, அவளே உத்தமி, அவளே எல்லோராலும் கொண்டாடிப்பூஜிக்கப்படத்தகுந்தவள். இப்படிப்பட்ட உத்தமிக்கு மரணத்திற்குப் பின்பும் உத்தம-கதியே தவிர வேறல்லவென்பது நிச்சயம். உத்தமியான பதிவிரதைக்குத்தான் மேற்கண்ட ஸகலவிதமான பக்தியும் பொருந்தியிருக்கக்கூடியது. பதிவிரதா – தர்மத்தில் குறைவுண்டானால் ஒருவித பக்தியும் நிலைக்காது. இப்படி குறைவுள்ள ஸ்திரீகளுக்கு பூஜையினாலும் ஜபத்தாலும் விரதத்தினாலும் யாதொரு நன்மையும் உண்டாகக்கூடியதுமில்லை.

3. வேறு தர்மங்கள்

பர்த்தாவின் சுசுருஷையுடன் பர்த்தாவின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உபகாரமான காரியங்களைச் செய்துவர வேண்டியதும் தர்மம். பர்த்தா இறந்து போயிருந்தால் அவர் ரூபத்தையே ஈசுவர-ரூபமாகத்தியானித்தால், பதி உத்தம லோகத்திற்குப் போயிருந்தால் இவளும் அங்கேயே மரணத்திற்குப் பின்பு போய் அவருடன் சேர்ந்திருப்பாள். பதி வேறு எங்கேயாவது அதம - ஸ்தானத்திலிருந்தாலும் இவளுக்கு உத்தம-லோகப்பிராப்தியே கிடைக்கும். பகவானுடைய பூஜையையுஞ் செய்யலாம். வேத-மந்திரங்களை உச்சரிக்காமல் சுலோகங்களையும் ஸ்தோத்திரங்களையும் சொல்லலாம். வேத-மந்திரங்கள் கலந்த ஸஹஸ்ர-நாமம் முதலானதுகளைச் சொல்லக் கூடாது. ஸ்திரீகள் யாவரும் இதிஹாஸ-புராண-பிரகரண-கிரந்தங்களையும் பிராஹ்மண-முகமாய் கேட்கலாம். தானாக புராணாதிகளைப் படிப்பதைவிட வேத-சாஸ்திரங்களையறிந்த பிராஹ்மணனிடம் கேட்டால் ஸந்தேஹமில்லாத ஞானம் உண்டாகும். கேட்டுத்தெரிந்துகொள்வதுபோல் படித்தால் தெரிந்துகொள்ள முடியாது. சொல்லுகிறவரிடம் தன் ஸந்தேஹங்களை வெளியிட்டு அப்போதைக்கப்போது தெளிவை ஏற்படுத்திக்கொண்டு மேன்மேலும் கேட்டுக்கொண்டு போவதே உத்தமம். கேட்பதைத்தான் சாஸ்திரங்களில் முக்கியமாய்ச் சொல்லியிருக்கிறதேயொழிய படிப்பதற்கு முக்கியத் தன்மை கொடுபடவில்லை. உத்தமோத்தமமான ஆத்ம-வித்யையிலும், சிரவணத்திற்குத்தான் பிராதான்யம் கொடுபட்டிருக்கிறது. ஆகையால் மற்றவரிடமிருந்து கேட்பதென்றால் யாதொரு குறைவுமில்லை. கேட்டுத் தெரிந்து கொள்வதே விசேஷம். அன்றியும் இதிஹாஸ-புராண-பிரகரணங்களிலும் மத்தியில் சிலவிடங்களில் வேத - மந்திரங்களையே எழுதியிருப்பதால், கேட்டுத் தெரிந்துகொள்வதனால் அம்மந்திரங்களை உச்சரிக்கிற தோஷமும் வராது. சொல்லுகிறவரும் மந்திர-பாகங்களைப்

படிக்காமல் விலக்கிவிட்டு மற்றவைகளைப் படித்துச் சொல்வதற்கும் ஸௌகரியமுண்டு ஸ்திரீகள் தமிழ் முதலான தேசீய-பாஷைகளில் சாஸ்திரங்களையனுசரித்துத் தகுந்த அதிகாரிகளால் எழுதப்பட்டிருக்கிற புஸ்தகங்களையும் தானே படித்து வரலாம். அதிகாரமில்லாத கண்டவர்கள் விதிகளை மீறி சாஸ்திர-விருத்தமாய் எழுதியிருக்கிற புஸ்தகங்களைப் படித்துக்கெட்டுப்போகாமலும் தங்களைப்பாதுகாத்துககொள்ள வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட புஸ்தகங்கள் இக்காலத்தில் அதிகமாய் அச்சிட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

4. சூத்திர தர்மம்

சூத்திரர்களுக்கு மற்ற மூன்று ஜாதியார்களின் தர்ம-காரியங்களுக்குத் தங்களாலியன்றமட்டில் ஒத்தாசை செய்து கொண்டிருப்பதைத் தவிர ஸ்வயமாய் கர்ம அனுஷ்டானம் இடையாது.

शूद्रस्य द्विजशुश्रूषा परमो धर्म उच्यते ।
अन्यथा कुरुते किंचित्तद्भवेत्तस्य निष्फलम् ॥

இப்படி ஒத்தாசையான கைங்கரியங்களைச்செய்வதே சூத்திரர்களுக்கு ஸ்வ-தர்மம். இவர்களும் நாமோச்சாரணஞ் செய்து கொண்டு ஈசுவரனை தியானித்து வரலாம். மேற்கண்டபடி பூஜையையுஞ் செய்யலாம். இதிஹாஸ – புராண-பிரகரணங்களையும் பிராஹ்மண-முகமாய்க் கேட்கலாம். முன் சொல்லியபடி தேசீய-பாஷைகளிலுள்ள புஸ்தகங்களையும் படிக்கலாம். மேலும் அவர்களுக்கேற்பட்டிருக்கிற தொழில்களையும் கிரமமாய் நடத்திக்கொண்டு வரலாம். இக்காரியங்களே சூத்திரர்களின் நல்ல கதியின் பொருடடுப் போதுமானவை. இவர்களுக்கு கர்மம் வேறென்றும் விதிக்கப்படவில்லை. இப்பொழுது புது ஏற்பாட்டில் அனுஷ்டானமென்று சொல்லிக்கொண்டு செய்யப்படுகிற

மந்திர-ஜபங்களெல்லாம் பெரும் புண்ணியம்போன்ற கொடும் பாபமேயல்லாமல் வேறல்ல. இந்த அனுஷ்டானத்தின் உண்மையான பலன் இன்னதென்று அவரவர்களுக்கு மரணத்திற்குப் பின்புதான் தெரியவரும். இப்பொழுது தெரியாது. கௌரவமாகவே இப்போது தோன்றும். சூத்திரர்களுக்கு மிகவும் லகுவாயும், ஒருவித லௌகிக-ஸௌகரியத்திற்கும் குறைவன்னியிலும் இடைஞ்சலில்லாமலும், இவர்கள் நல்ல கதியையடையும் பொருட்டு சாஸ்திர—விதிகளேற்பட்டிருக்கும் போது, அவைகளை அனுஸரித்துக்கொண்டும், பக்தியையும் வைராக்கியத்தையும் பலப்படுத்திக்கொண்டுமிருந்து சிரமப்படாமல் உத்தம ஸ்தானத்தை அடைவதை விட்டு, தனக்குத் தகுதியில்லாத மந்திர–ஜபம் முதலான அதிக காரியங்களைச் செய்து இந்த லோகத்திலும் சிரமப்பட்டுக்கொண்டு, பின்னுலும் துர்க்கதியை அடைவதானல் இது மிகவும் வியஸனப்பட வேண்டிய விஷயந்தான்.

5. சாஸ்திர விரோதமானல் தள்ளத்தகுந்ததே.

இதுவரையில் சொல்லப்பட்ட ஸங்கதிகள் பூராவையும் நன்கு அறிந்திருந்தும் சில ஆஸ்திகர்களின் மனதுகளில் தெளிவு ஏற்படாமலிருக்கக்கூடும். புராணத்திலாவது ஸ்திரீ-சூத்திராதிகளுக்கு மந்திர-ஜபத்தில் அதிகாரமுண்டென்று வெளியாகிற விஷயம் வாஸ்தவந்தானே ; புராண-வாக்கியங்கள் வாஸ்தவமாயிருக்கட்டும் ; அல்லது, பின்னுல் சேர்க்கப்பட்டவைகளாயிருக்கட்டும் ! அந்த விசாரம் நமக்கு எதற்காக ? நாம் விசாரஞ்செய்து தீர்மானிக்கக்கூடிய விஷயமென்று தோன்றவில்லேயே ; சில பெரியோர்கள் போனவழியில் நாமும் போவதே சரியென்று திரும்பவும் நினேக்கலாம். இவர்களேத் யுத்தேசித்து ஒருவாறு மறுபடியும் சுருக்கமாய் இங்கு சொல்லப்படுகிறது.

மேற்கண்ட புராண-வாக்யங்களெல்லாம் வாஸ்தவ-புராண-வாக்கியங்களில்லேயென்ருவது, பின்னுல் சேர்க்கப் பட்டவைதா

னென்றுவது முடிவாய்த் தீர்மானிக்கும்படி நான் சொல்ல வில்லை. நமக்கு அவ்வாக்கியங்கள் எவ்வகையிலும் பிரமாணமே இல்லையென்றே வற்புறுத்துகிறேன் அவ்வாக்கியங்கள் உண்மையான புராண-வாக்கியங்களாகவேயிருக்கட்டும். வாஸ்தவ—புராண—வாக்கியங்களும் நமக்கேற்பட்டிருக்கிற சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமாயிருந்தால் பிரமாணமே இல்லை, தள்ளப்படவேண்டியவைதானென்பதே சாஸ்திரத்தில் ஸித்தாந்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஸ்திரீ-சூத்திரர்களுக்கு மந்திர-ஜபாதிகளில் அதிகாரமில்லையென்று சுருதி-ஸ்மிருதி-வாயிலாக வியக்தமாய்த் தெரியவரும்போது, புராணத்தில் பகவான் வியாஸராலேயே விபரீதமாய் எழுதப்பட்டிருந்தாலும், சாஸ்திரப்படி ஸ்ரீ வியாஸருடைய வாக்கையும் ஒதுக்கித் தள்ள வேண்டியதுதான் தர்மம். வேத-சாஸ்திர-விருத்தமான வாக்கியத்தை ஸாக்ஷாத் ஈசுவரனே ரூபமெடுத்து வந்து சொன்னாலும், அதை அனுஸரித்தால் பாபந்தானேற்படும், பாபத்திற்குள்ள தண்டனையைக் கட்டாயம் அனுபவிக்க வேண்டியதுதான். ஈசுவரன் சொல்லித்தானே செய்யப்பட்ட தென்று தர்மராஜா மன்னித்துவிடமாட்டார்.

ஸாக்ஷாத் ஈசுவரரும் ஸர்வ-ஜகத்-குருவுமான ஸ்ரீ கிருஷ்ண னுடைய வார்த்தைக்கு இணங்கி अश्वत्थामा हतः என்று யுதிஷ்டிரரால் சொல்லப்பட்ட வாக்கியம் உண்மை பேசு, பொய் சொல்லாதே என்ற சுருதி-வாக்கியங்களுக்கு விருத்தமாகையால் நரக-தரிசன ரூபமாகிய தண்டனையை யுதிஷ்டிரர் அனுபவிக்கும் படி ஏற்பட்டது. அவர் மனப்பூர்வமாய் பொய்சொல்ல இஷ்டமில்லாதவராகவும், அசுவத்தாமாவென்ற பெயருள்ள யானை யுத்தத்தில் மரணமடைந்ததை நினைத்துக்கொண்டு குஞ்ஜரः என்ற பதத்தையுஞ் சேர்த்துச் சொன்னவராகவுமிருந்ததால், பாபத்தின் பலன் நரக-தரிசனத்தோடு லேசாய் முடிந்தது. குஞ்சர-பதத்தைச் சேர்த்துச் சொல்லாமலிருந்தால் தண்டனை வெகு கடுமையாகவேயிருந்திருக்கக்கூடும். குஞ்சர-பதத்தின்

சப்தம் துரோணாசாரியாரின் காதில் விழாமலிருக்கும்படி மற்றவர்கள் செய்ததற்கு யுதிஷ்டிரர் ஜவாப்தாரியல்ல. எந்த மட்டில் அவர் ஜவாப்தாரியாயிருந்தாரோ, அந்த மட்டில் அவர் பாப-பலனை அனுபவித்தே தீரவேண்டியதாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சொல்லுக்கிணங்கி அவர் அவ்விதம் சொல்லும்படி நேரிட்டதென்று அவரை மன்னிக்கவில்லை. ஆதலால், சொல்லுகிறவர் யாராயிருந்தாலும், சொல்லப்படுகிற வார்த்தை வேத-சாஸ்திரங்களுக்கு ஒத்திருந்தால் மட்டிலும் அது அனுஸரிக்கப்படத்தகுந்தது. வேத-சாஸ்திரங்களுக்கு விரோதமான சில கக்ஷிகளைக்கைக்கொண்ட ஸாக்ஷாத் பிரஹ்மாவின் அவதாரமாகிய மண்டனமிச்ரருடைய வார்த்தைகளையும் கொள்கைகளையும் பகவத்பாத ஸ்ரீ சங்கராசாரிய-ஸ்வாமிகள் நிராகரித்துக் கண்டித்துவிட்ட ஸங்கதி எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்ரீ புத்தர் ஸாக்ஷாத் விஷ்ணுவின் அவதாரமென்று பெரும்பாலும் ஹிந்துக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தும், அவர் வெளியிட்ட வார்த்தைகளும் பிரசாரஞ் செய்த முக்கிய கொள்கைகளும் வேத-சாஸ்திரங்களுக்கு எதிரிடையாயிருந்தபடியால், அவைகளை தப்பென்று ஹிந்துக்கள் தள்ளி ஒதுக்கிவிட்டார்கள். பகவானுடைய வாக்கியமேயென்று மோஹித்து ஹிந்துக்கள் அதை அனுஸரித்து நடந்து மோசம் போயிருந்தால், நாமெல்லோரும் இப்போது வீணாக பௌத்தர்களாகவேயிருந்து வேத-மார்க்கத்தை விட்டுப் பூராவும் விலகிக்கெட்டுப் போயிருப்போம். இப்படி துற்கதி வராமலும், இப்பரத-கண்டத்தில் ஸ்திரமாய் வேர் ஊன்றி பிரசாரத்தையடையவொட்டாமல் காலத்தில் தகுந்த முயற்சிகளையெடுத்து பௌத்த-மதத்தை இந்நாட்டை விட்டு ஓடிப் போகும்படியாகவும், செய்த நம்மாசாரியர்களின் விஷயத்தில் ஹிந்துக்களில் எந்த வகுப்பினரும் நன்றி மறக்கலாகாது.

ஸ்ரீ புத்தர் முதலான அவதார-புருஷர்களின் வேத-சாஸ்திர-விருத்தமான வாக்கியங்களைப்போல் ஸ்ரீ வியாஸருடைய

வாக்கியங்களில் எவைகளாவது சுருதி-ஸ்மிருதி-விருத்த மென்று காணப்பட்டால் அவ்வாக்கியங்கள் தள்ளத்தகுந்தவை களே. ஆகையால், மேற்கண்ட விபரீத-புராண-வாக்கியங்கள் ஸ்ரீ வியாஸரால் சொல்லப்பட்ட உண்மையான புராண-வாக்யங் களாயிருந்தபோதிலும், அவைகளை அனுஸரித்து நடந்தால் பாபமே பலனுகி, நடப்பவர்கள் யம-தண்டனைக்குட்படுவார்க ளென்பதில் ஸந்தேஹமில்லை.

தவிரவும், முன் சொல்லியபடி யுகாந்தரங்களில் ஸ்திரீகளுக் கும் உபநயனுதி-ஸம்ஸ்காரமிருந்திருப்பதால், மந்திர-ஜபாதி களிலும் அக்காலங்களில் அவர்களுக்கு அதிகாரமிருந்திருக் கலாம். மஹரிஷி-துர்வாஸஸ்ஸின் புத்திரி இக்கலியுக-ஸ்திரீ யில்லையென்பது நிச்சயமே. இப்படிப்பட்ட யுகாந்தர-ஸ்திரீ களின் கதைகளை ஸ்ரீ வியாஸர் புராணங்களில் நிரூபித்திருக் கிறார். யுகாந்தர-விஷயமான புராண-நிரூபணங்களை இக்கலி யுகத்தில் பிரமாணமாக எண்ணி ஆசரிக்கக்கூடாதென்பது நம் வேத-சாஸ்திரங்களின் கொள்கை. ஸ்ரீ வியாஸர் அக்கிரம மாகவே புராணத்தில் எழுதியிருக்கிறாரென்று தீர்மானிக்க வேண்டியதவசியமில்லை. அவர் நிரூபித்திருக்கிற சில வரலாறுகள் மற்ற யுகங்களுக்குச் சரியாயிருந்தாலும் இக்கலி யுகத்திற்கு ஒவ்வாதென்பதை மாத்திரம் நாம் தெரிந்து கொண்டால் போதுமானது.

முன் குறிப்பிட்ட புராண-வாக்கியங்கள் வாஸ்தவ-புராண-வாக்கியங்களில்லாமல் பின்னுல் கக்ஷியின் பேரில் சேர்க்கப் பட்டவைகளானுல், அவைகள் தள்ளத்தகுந்தவைகள்தான் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபணையிராது.

6. சாஸ்திர பலமிருந்தால் பிரமாணம்

வாஸ்தவமோ, பொய்யோ, நமக்குத் தெரியாது, ஸ்காந்தம் முதலான புராண-வாக்கியப்படிக்கும் நடக்கவேண்டியதுதான் நியாயமென்று மறுபடியும் சொன்னுல், ஸ்காந்த-புராணத்தில்,

முன் சொல்லியபடி, மந்திர-ஜபஞ்செய்கிற ஸ்திரீகளுக்கு நரகப் பிராப்தியுண்டென்று சொல்லும் வாக்கியத்திற்கு சுருதி-ஸ்மிருதிகளின் பலமுமிருக்கிறது. அதைத்தான் ஆசரணைக்குக் கொண்டுவருவது நியாயம். இரண்டு விதமாய் விரோத-வாக்கியங்கள் ஒரே புராணத்தில் காணப்பட்டால், அவைகளில் எதை அனுஷ்டிக்கலாமென்று ஸந்தேஹம் வருங்கால் சுருதி-ஸ்மிருதி-பலம் எதற்குச் சேர்ந்திருக்கிறதோ அதையே ஆஸ்திகர்கள் கைக்கொள்வார்கள். அதை விலக்கி சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமான வாக்கியத்தைத்தான் பிடித்துக்கொள்வேனென்று சொல்லுகிறவர் ஆஸ்திகராவரோ? ஸாக்ஷாத் ஈசுவரனே

'श्रुतिस्मृती ममैवाज्ञे' 'आज्ञाच्छेदी मम द्रोही'

என்று சொல்லியிருப்பதால், அப்படி வீம்பாகச் சொல்லி விபரீதமாய் நடப்பவர் ஈசுவரத்ரோஹீயென்றே முடிவாகும். துவிஜ-ஸ்திரீகளுக்கேயில்லாத அதிகாரம் சூத்திரர்களுக்குக் கிடையாதென்பது ஆதியிலேயே குறிப்பிடப்பட்டது.

ஆகையால், மேற்சொல்லிய விபரீத-வாக்கியங்கள் உண்மையான புராண-வாக்கியங்களாயிருந்தாலும் சரி, அல்லது பொய்யான வாக்கியங்களாயிருந்தாலும் சரி, அல்லது ஸந்தேஹப்படக்கூடிய வாக்கியங்களாயிருந்தாலும் சரி, எப்படியிருந்தாலும், அவைகள் சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமாயிருப்பதால் அவைகளைத் தள்ளவேண்டியதுதான் நியாயமென்று ஏற்படுவதினால், ஸ்திரீ-சூத்திரர்களுக்கு வேத-மந்திர-ஜபங்களில் அதிகாரமில்லையென்பதும், அவர்களுக்கு பஞ்சாக்ஷராதி-மந்திரங்களை உபதேசிப்பது அதர்மமென்பதும், ஏற்கனவே உபதேசத்தைப் பெற்றிருந்தாலும் அவர்கள் அவைகளை ஜபஞ்செய்வது அனுசிதமென்பதும், உபதேசிக்கப்பட்ட மந்திரங்களை அவர்கள் பசுமாட்டின் காதில் சொல்லி, விட்டுவிடவேண்டியதுதான் கிரமமென்பதுமே நிச்சயம்.

அத்தியாயம் 8

பிராஹ்மண்ய ரக்ஷணம்

1. ருதுமதீ விவாஹம்

இவ்விதமாக வேதாத்யயனத்திலும் வேதமந்திர ஜபங்களிலும் அதிகாரம்பெற்று வேதோக்தமான கர்மோபாஸனைகளையனுஷ்டித்து வருவதுடன் ஜ்ஞானாப்பியாஸ முறைகளைக் கைக்கொண்டு அதன் மூலமாய் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கே முக்கிய அதிகாரியாக பிராஹ்மணன் இருந்துவருகையில், காலரீதியில் வெகுசீக்கிரத்தில் உலகத்தைவிட்டு பிராஹ்மண்யம் அநேகமாய் மறைந்து விடுமென்றே தோன்றுகிறது. இக்காலத்தில் உத்தம பிராஹ்மண்யம் அபூர்வமாயிருந்தபோதிலும், பிறவிப் பிராஹ்மண்யமாவது இருந்துகொண்டிருக்கின்றது. பிறவிப் பிராஹ்மண்யமிருந்தால்தான் அதின்பேரில் உத்தம பிராஹ்மண்யத்தை ஸம்பாதித்துக்கொள்ளக்கூடும். பிறவிப் பிராஹ்மண்யத்திற்கே குறைவு உண்டானால் உத்தம பிராஹ்மண்யம் உண்டாக இடமேயில்லை. கலிகாலக்கொடுமையினால், இப்போது பிறவிப் பிராஹ்மண்யத்திற்கே கெடுதலுண்டாகும்படியான கார்யங்கள் இந்நாட்டில் நடந்தேறிவருகின்றன. சாஸ்திரப்படி, பிராஹ்மண மாதாவிடத்தில் பிராஹ்மண பிதாவினால் ஜனிக்கப்பட்டவன் பிராஹ்மணன் என்று சொல்லப்படுகிறான். ஆகையால், மாதாவின் பிராஹ்மண்யமும் சுத்தமாயிருக்க வேண்டியது முக்கியம். ருது காலத்திற்கு முன்பாக விவாஹமாயிருப்பவள்தான் சரியான பிராஹ்மணீயாவள். விவாஹமில்லாமல் ருதுவாகிவிட்ட பிராஹ்மணப் பெண்ணை **விருஷளீ,** அதாவது, சூத்திர-ஸ்திரீக்கு ஸமானமானவள் என்றும், அவளை விவாஹம் செய்துகொள்கிறவன் விருஷளீபதி என்றும், சாஸ்திரத்தில் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 14 வயதுக்குள்ளாக பெண்களுக்கு விவாஹம் செய்யக்கூடாதென்று சட்டம் ஏற்பட்டுவிட்டபடியால்

அனேகமாய் எல்லா பிராஹ்மண ஸ்திரீகளும் விருஷளீகளாகவும், விவாஹமான பிராஹ்மண புருஷர்கள் விருஷளீ-பதிகளாகவுமிருக்கக் கூடியதால், சுத்தமான பிராஹ்மண்யத்திற்கும் அதன் மூலமாய் உலகத்தில் எல்லோருக்கு மேற்படக்கூடிய பார-லௌகிகமான நன்மைகளுக்கும் மரணாந்த-வியாதி வந்ததாகவே எண்ணவேண்டும்.

ருதுமதீ-விவாஹம் கூடாதென்று காட்டக்கூடிய சாஸ்திர-விஷயங்களையும் லௌகிக-வியவஹாரங்களையும் முழுமையும் இங்கு விவரிப்பதற்கு இடமில்லாததால், பிரகிருதத்திற்கு அவசியமான மட்டில் சில முக்கிய விவரங்கள் மாத்திரம் சுருக்கமாய்க் குறிப்பிட்டுக்காட்டப்படும். ருதுவாவதற்கு முன்பாகவே பெண்களுக்கு விவாஹமாக வேண்டுமென்ற கட்டாய விதி பிராஹ்மண ஜாதிக்கு மாத்திரமுள்ளது. மற்ற தானங்களைப் போல் கன்னிகாதானத்தையும் பெற்றுக்கொள்வதற்கு முக்கிய அதிகாரி பிராஹ்மணன் தான். சாஸ்திரப்படி கன்னிகாதான-ரூபமான விவாஹமே சிரேஷ்டமான விவாஹமாகையால், அதுவே சிரேஷ்டமான பிராஹ்மண-ஜாதியில் நடந்தேறிவர வேண்டுமென்பதே நியாயமாகும். அன்றியும், சாஸ்திரத்தின் கொள்கைப்படி புருஷர்களுடைய உபநயன-ஸ்தானத்தில் ஸ்திரீகளுக்கு விவாஹமேற்பட்டிருப்பதால், உபநயன-காலத்தை அநுஸரித்து விவாஹ-காலமும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 7 வயது முதல் புருஷனுக்கு நன்றாக விவரந்தெரிகிற காலமாகிய 16 வயது வரையில் பிராஹ்மணப் பையனுக்கு உபநயனம் செய்விக்கவேண்டுமென்று விதி இருப்பதுபோல், 7 வயது முதல் ஸ்திரீக்கு நன்றாய் விவரந்தெரிகிற காலமாகிய ருது-காலத்திற்குள் பிராஹ்மணப் பெண்ணுக்கு விவாஹஞ்செய்விக்கவேண்டுமென்று கட்டாய விதி ஏற்பட்டிருக்கிறது. அதிலும், உபநயன-விதியை அநுஸரித்து, ருது-காலம் ஸமீபிக்கிறவரையில் தாமஸிக்காமல் 7 வயதுக்கப்பால் கூடிய சீக்கிரத்தில் விவாஹத்தை நடத்துவதே முக்கியமென்றும் உறுதியாய்ச்

சொல்லப்பட்டுமிருக்கின்றது. உபநயனத்தில் குரு-சிஷ்ய பாவம் உண்டாவதுபோல் விவாஹத்தினுல் புருஷன் குருவாகவும் ஸ்திரீ சிஷ்யையாகவும் ஏற்படுகின்றூர்கள். விவாஹ-காலம் முதல் புருஷன் தன்னுடைய தர்ம-மார்க்கத்தில் ஸ்திரீயைத் தயார் செய்து கொண்டுவரவேண்டுமென்பது சாஸ்திரத்தின் கருத்து. பின்னுல் ருதுவான காலத்தில் ஆசார-விஷயத்தில் ஸ்திரீ எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்ற விவரத்தையும் புருஷனே ஸ்திரீக்கு முன்னுலேயே போதிக்கவேண்டுமென்றும் சாஸ்திரத்தில் துலங்குகின்றது. சாஸ்திரத்தின் நிபந்தனைகளை நன்ருய் கவனித்துப் பரிசோதித்துப் பார்த்தால் ருதுவான பின்பு பிராஹ்மணப் பெண்ணுக்கு விவாஹஞ் செய்விக்கக்கூடுமென்பதற்கு யாதொரு ஆதாரமுங் காணப்படவில்லை. எங்கும் ருதுவாவதற்கு முன்பாகவே செய்யவேண்டுமென்றே வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது. முன் சொல்லியபடி விவாஹத்திற்குமுன் ருதுவான பிராஹ்மணப் பெண்ணை சூத்திரப் பெண்ணுக்கு ஸமானமென்றும் சாஸ்திரம் வெளியிடுகின்றது.

2. ஸமாவேசனம்

ருதுமதீ-விவாஹத்தைப் போதிப்பிக்கின்ற நவீன சீர்திருத்தக்காரர்கள், தங்களுக்கு அநேகமாய் சாஸ்திர-நிபந்தனைகள் விரோதமாயிருந்தபோதிலும், **ஸமாவேசனக்கிரியை**—ஸம்பந்தமாய் தங்களுக்கு ஏதோ அனுகூல விஷயமிருப்பதாகச் சொல்லி வருகின்றூர்கள். உண்மையில், ஸமாவேசனமென்ருல் என்ன, அதைப்பற்றி சாஸ்திரத்தில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று தெரிந்துகொண்டவர் ருதுமதீ-விவாஹத்திற்கு அனுகூலமாக அதில் ஏதோ இருப்பதாகப் பிதற்றமாட்டார். பத்னீ ருதுவான பிறகு எப்போது நிஷேகம், அதாவது, கர்ப்பாதான காலம் குறிப்பிடப்படுகின்றதோ அதற்கு முன்பாக ஸ்திரீயும் புருஷனும் ஏகாந்தமாக ஒரேயிடத்தில் சில காலம் வரையில் இரவில் படுத்துக்கொண்டிருந்து

சரீர-புணர்ச்சியைப்பற்றி இருவரும் நினைக்காமலே இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுதான் ஸமாவேசனம். இப்படி நினைக்காமலிருந்து அப்பால் நிஷேக-ஸம்பந்தமுண்டாகும் பக்ஷத்தில் அதனால் பிறக்கும் ஜீவன் மஹானாக இருப்பானென்று சாஸ்திர மூலமாய் தெரிய வருகின்றது. இப்படி சரீர-ஸம்பந்தத்தில் நினைப்பேயில்லாமல் ஒரேயிடத்தில் படுத்துவருகின்ற காலம் ஜாஸ்தியாக இருந்தால் அப்பால் பிறப்பவரின் யோக்கியதையும் ஜாஸ்தியாயிருக்குமென்றும் சாஸ்திரம் வெளியிடுகின்றது. இப்படி மூன்று நாள் முதல் ஒரு வருஷம் வரையில் பல காலங்கள் ஸமாவேசனத்திற்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இப்படி ஸமாவேசனம் நடந்தால் காலத்தின் அளவுக்குத் தக்கபடி சுரோத்திரியர், ரிஷி, தேவர் முதலானவர்கூட பிறக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது ஜ்ஞானமில்லாமையும் காமவெறியும் அதிகரித்திருக்கின்ற இக்கலி-காலத்தில் மேற்கண்ட ஸமாவேசனக்கிரியையை விதிப்படி அனுஷ்டிப்பது ஸாத்தியமில்லையென்பது நிச்சயமே. ஆகிலும், பிராஹ்மணனுக்கு ஸமாவேசனம் விதிக்கப்பட்டிருப்பதால், அதம-பக்ஷமாகிய மூன்று நாள்-ஸமாவேசனத்தைச் செய்விப்பதாகச் சொல்லி எக்காலத்தில் ஸ்திரீ-புருஷர்கள் மேற்கண்டபடி தனிமையாக ஒன்றுசேர்ந்திருந்தாலும் சரீரப்புணர்ச்சி ஏற்படக்கூடியதில்லையோ அப்படிப்பட்ட காலமாகிய, அதாவது, ஸ்திரீ ருதுவாவதற்கு முன்-காலமாகிய விவாஹ-தினங்களிலேயே மந்திரவத்தாக ஸமாவேசனத்தை பாவனையாய் நடத்திவருகின்றார்கள். வாஸ்தவத்தில் ஸமாவேசனம் விவாஹ-பிரகரணத்தைச் சேர்ந்ததில்லை. அது கர்ப்பாதான-பிரகரணத்தைச் சேர்ந்ததென்று கல்பத்திலேயே நன்றாய் துலங்கும். இப்படி காலரீதியை அனுஸரித்து விவாஹ-தினங்களிலேயே நடத்திவருவதினால் விவாஹ-காலத்திற்கு முன்பாகவே ஸ்திரீ ருதுவாயிருக்கவேண்டுமென்று கண்மூடித்தனமாய் மேற்கண்ட சீர்திருத்தக்காரர்கள் கக்ஷி சொல்லுகின்றார்கள். விவாஹ-தினங்களுக்கும் ஸமாவேசன-தினங்

களுக்கும் சாஸ்திரப்படி யாதொரு ஸம்பந்தமுமில்லையென்று சங்கதி அவர்களுக்குத் தெரியவில்லை. மூன்று நாள்-ஸமாவேசன-விஷயமாய் அந்த மூன்று நாட்களும் விவாஹ-தினங்கள்தானென்று அவர்கள் சொல்வது வாஸ்தவமாயிருக்கக்கூடுமானல்' ஒரு மாஸம், மூன்று மாஸங்கள், ஆறு மாஸங்கள், ஒரு வருஷம் வரையில் ஸமாவேசனம் நடத்தப்படுமானல் அவ்வதிக-காலங்களை விவாஹ-நான்கு-தினங்களுக்குள் எப்படி அச்சீர்திருத்தக்காரர்கள் புகவிடச்செய்வார்களோ தெரியவில்லை. ஸமாவேசனக் கிரியையினல் தங்களுக்கு அனுகூலமிருப்பதாக அவர்கள் சொல்வது அறியாமையாலேற்பட்ட வீண் பிதற்றலே தவிர வேறல்ல. எவ்வகையிலும் ருதுமதீ-விவாஹத்திற்கு சாஸ்திரம் இடங்கொடுக்காது என்பதே உண்மை.

இதுபோலவே லௌகிக-யுக்திகளை கவனித்தாலும் ருதுமதீ-விவாஹம் நியாயமில்லையென்றே ஏற்படும். லௌகிக-விஷயங்களை இங்கெடுத்துச் சுருக்கமாய்ச் சொன்னலும் விரியுமாதலால் சொல்லக்கூடியதாயில்லை. பால்யத்திலேயே பெண்கள் விதவைகளாவதற்கு சாஸ்திரீய-விவாஹமே காரணமென்று சொல்லுகிறதும் ஆலோசனையின்பேரில் ஏற்பட்ட சொல்லல்ல. பள்ளிக்கூடங்களில் படித்துவருகின்ற சிறுபையன்களுக்கு சாஸ்திர-விரோதமாய் விவாஹஞ் செய்துவைப்பதே முக்கிய காரணமென்று சொல்லவேண்டும். எந்த விஷயத்தில் சாஸ்திர-நிபந்தனைகளுக்கு எதிரிடையாக நடந்துகொண்டு ஜனங்கள் அக்கிரமத்தைச் செய்து கஷ்டத்தைத் தருவித்துக்கொள்ளுகின்றார்களோ அவ்விஷயத்தில் அவசியமான சீர்திருத்தத்தைச் செய்யாமல் துர்-புத்தியினல் பிராஹ்மண்யத்தைக் கெடுப்பதற்கே முயலுகின்றார்கள். கலி-மஹிமையால் இவ்வித அக்கிரம முயற்சிகள் பலித்து அதிகமாக பிராஹ்மண்யத்திற்கு ஹானி ஏற்படுமென்றே சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

3. ஜன்மத்தை உபயோகப்படுத்து

இப்படியெல்லாம் பிராஹ்மண்யம் முழுவதும் நஷ்டமாய்ப் போவதற்கு முன்பாகவே ஏற்கனவேயிருக்கிற பிறவிப் பிராஹ்மண்யத்தை, அதாவது, ஜாதி-பிராஹ்மண்யத்தைக் கூடிய வரைவில் சரியாக உபயோகப்படுத்திக்கொண்டு பிரஹ்மஜ்ஞானத்தை ஸம்பாதிக்க வழிதேடி முக்கியப் பிராஹ்மணனாகி விட பிரயத்தினஞ்செய்ய வேண்டுமென்பது இக்காலத்திய ஒவ்வொரு பிராஹ்மணனுடையவும் இன்றியமையாத கடமை. இப்போதுள்ள பிறவியில் சுத்தர்களான ஜாதிப்பிராஹ்மணர்களே அவ்விஷயத்தில் சரியான பிரயத்தினத்தைச் செய்யாவிட்டால், இனி பிற்காலங்களில் ஏற்படப்போகின்ற பிறவிலேயே அசுத்தர்களான ஜாதிப்பிராஹ்மணர்கள் அவ்வித பிரயத்தினத்தைச் செய்யப்போகிறதில்லையென்பது நிச்சயம். இக்கலிகாலம் அதிகரித்து அதர்மம் அதிகமாக உறுதிப்பட்டிருக்கக்கூடிய வரப்போகிற காலங்களில் பிராஹ்மணஜன்மம் மறுபடியும் கிடைத்தாலும் அதுவும் வியர்த்தமாகவே போகுமென்பதும் நிச்சயமே. ஆகையால், இக்காலத்திலுள்ள பிராஹ்மணர்கள் நற்கதியை அடையவேண்டுமானால் இந்த ஜன்மத்திலேயே சாஸ்திரப்படிக்குள்ள சரியான யத்தினங்களைச் செய்தால்தான் அடையலாமென்பதையும், இல்லாவிடில் மாற்றக்கூடாத துர்க்கதியே ஏற்படுமென்பதையும் அவர்கள் மறக்கவே கூடாது.

கால-வசத்தினால் தங்களுக்குள்ள மோக்ஷ-மார்க்கத்தில் இச்சையில்லாமலும், மோக்ஷத்திற்கு ஸாதனமாயுள்ள தர்மாசரணைகளில் பிரவிருத்தியில்லாமலும், மிகவும் நிகிருஷ்டமான காம-பூர்த்தியிலும் அர்த்த-ஸம்பாதனத்திலும் பெரும்பாலும் புத்தியைச் செலுத்திவருகின்ற தத்கால-ஜாதி பிராஹ்மணர்களைப் பார்த்துவிட்டு, சூத்திராதிகளுக்குப் பொதுவாகவே பிராஹ்மணனைக் குறித்து மதிப்புக்குறைவும் மனசில் வெறுப்புமுண்டாகி, அவை நாளடைவில் அதிகரித்து வந்து பலவிடங்

களில் கடைசியில் பிரஹ்ம-துவேஷத்திலேயே பரிணமத்தை அடைந்திருக்கின்றன. இத்துவேஷத்தை முன்னிட்டுக் கொண்டே பிராஹ்மண-ஜாதியே கிடையாதென்று ஸ்தாபித்து விடவேண்டுமென்ற உத்தேசத்துடன் சிலர்கள் "பிரஹ்ம-ஜ்ஞானிதான் பிராஹ்மணன்" என்ற வசனத்தை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஒருவரும் பிறவியினால் பிராஹ்மணனாக மாட்டாரென்றும் பிரஹ்ம-ஜ்ஞானத்தையுடைய மனிதரே பிராஹ்மணனுவரென்றும் சொல்லிக்கொண்டும், இப்படியே குணங்களையும் கர்மாக்களையும் முன்னிட்டு சாதுர்வர்ண்யம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகின்ற கீதா-வாக்கியத்தையும் அவர்கள் தங்களுடைய கக்ஷிக்கு அனுகூலமென்று சொல்லிக் கொண்டும், புஸ்தகங்களில் எழுதி அச்சிட்டுப் பிரசாரப்படுத்தி ஸாமான்ய-ஜனங்களின் புத்திகளை மயங்கச்செய்தும் வருகின்றார்கள். உபநிஷத்து கீதை முதலியவைகளை அதிகார மில்லாதவர்கள் படித்தால் என்ன அனர்த்தங்கள் உலகத்தில் விளையக்கூடுமென்பதை நிதர்சனமாக இக்காலத்தில் இந் நாட்டில் பார்க்கலாம். துவேஷ-புத்தியினால் கெட்ட முயற்சி களைச்செய்கிறவர்களுக்கு உண்மையை எடுத்துக்காட்டுவதினால் அவர்கள் நன்மார்க்கத்தில் திரும்பிவரப்போகிறதில்லை. அவர் களின் வார்த்தைகளினாலும் முயற்சிகளினாலும் ஏமாந்து போயிருக்கிறவர்களும், ஏமாந்து போகக்கூடியவர்களும், நல்ல சித்தத்துடன் கூடியவர்களும், உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் கூடியவர்களுமான மற்ற ஜனங் களின் சாசுவத நன்மையையும் க்ஷேமத்தையும் கருதி இங்கு பின்னால் வாஸ்தவம் இன்னதென்று கொஞ்சம் வெளிப்படுத் தப்படுகின்றது. அநியாயமாய், கண்டவருடைய பேச்சை நம்பித் தங்களுக்கு அதோ-கதி ஏற்படக்கூடாதென்றும், தங்களுக்கு நற்கதியே வேண்டுமென்றும் விரும்புகின்ற நண்பர் களெல்லோரும் பின்சொல்லப்படுவதை நன்றாய் கவனித்து சாஸ்திர-விரோதமான அபிப்பிராயங்களிலிருந்தும் நடத்தையி

லிருந்தும் தங்களை விடுவித்துக்கொள்வது மிகவும் அவசிய மென்று அறிந்துகொள்ளவேண்டும்.

4. பிரஹ்ம-ஜ்ஞானி பிராஹ்மணன் என்றால் ?

பிரஹ்ம-ஜ்ஞானிதான் பிராஹ்மணன் என்ற வசனத்திஞல் ஜாதியில் பிராஹ்மணர்களில்லையென்று அர்த்தமில்லை. ஜாதி மாத்திரமிருந்தால் போதாது, யோக்கியதையே முக்கியமென்பது அதன் தாத்பர்யம். நன்றாய் ஓடுகிற குதிரையைப் பார்த்து விட்டு இதுதான் குதிரையென்று சொன்னால் ஓடாத குதிரைகள் வேறு மிருகங்களென்று சொன்னதாக அர்த்தமில்லை. புத்தி யுள்ள மனிதனைப்பார்த்து இவன்தான் மனிதனென்று சொல்லி, புத்தியில்லாதவனைப்பார்த்து இவன் மனிதனு வென்றும் கேட்டால், பின்சொல்லப்பட்டவனை ஜாதியில் மாடு என்று சொல்லக்கூடாது. ஜாதியில் மனிதன்தான், யோக் கியதையில் மாடுபோலிருக்கின்றான் என்பதுதான் அதற்கு அர்த்தம். இப்படியே பிரஹ்ம-ஜ்ஞானிதான் பிராஹ்மணன் என்றால், பிரஹ்ம-ஜ்ஞானிதான் உத்தம பிராஹ்மணன், மற்றவர்களெல்லோரும் பிராஹ்மண யோக்கியதையில்லாத மத்தியம அல்லது அதம-பிராஹ்மணர்களென்பதே அதற்கு அர்த்தமாகும். வேத-சாஸ்திர-வசனங்களுக்கு அர்த்தஞ் செய்வது எப்படியென்பதற்கும் சாஸ்திரமேற்பட்டிருக்கின்றது. வேத-சாஸ்திரங்களை கொஞ்சமேனும் அறியாத ஜனங்கள் அங்குமிங்கும் அறைகுறையாகப் பார்க்கப்பட்ட, அல்லது கேட்க்கப்பட்ட, சில வசனங்களை மாத்திரமெடுத்துக்கொண்டு, முன்-பின்-ஸம்பந்தங்களைத் தெரிந்து கொள்ளாமலும், ஸம்ஸ் கிருத-பாஷையின் ஜ்ஞானமேயில்லாமலும், சாஸ்திர-விரோத மான கக்ஷியிலிறங்கி அர்த்தஞ் செய்யத் தலைப்பட்டால் அவர் களுடைய தெளிவுபடாத புத்திகளில் விபரீதமான அர்த்தந்தான் தோன்றும்.

வேத-சாஸ்திர-வசனங்களுக்கு அர்த்தஞ் செய்வதானால் அவ்வசனங்களுக்கு பரஸ்பரம் விரோதமில்லாமலிருக்கும்படி அர்த்தஞ்செய்ய வேண்டுமென்று விதி சொல்லப்பட்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்டவர்களின் அர்த்தத்தையே சரியென்று ஏற்றுக்கொள்ளும் பக்ஷத்தில், அது நூற்றுக்கணக்கான மற்ற வசனங்களுக்கு விரோதப்படும். சில உதாஹரணங்களை கவனிப்போம். முன்சொல்லியபடி பிராஹ்மண-புருஷனுக்கு பிராஹ்மண-ஸ்திரீயிடத்தில் உண்டாகிறவன் பிராஹ்மணன் என்ற சாஸ்திர வசனத்தில் பிராஹ்மண-பதத்திற்கு மேற்கண்டவாதிகளின் கொள்கைப்படி பிரஹ்ம-ஜ்ஞானியென்று அர்த்தஞ்செய்தால், புருஷனும் ஸ்திரீயும் பிரஹ்ம-ஜ்ஞானிகளான பிற்பாடு இருவருக்கும் கீழான விஷயத்தில் புத்தி தோன்றி அப்பால் இருவரும் கூடி பிறந்தவன் என்று அர்த்தப்படுத்தவேண்டும். இப்படிச் செய்வது நியாயமாகுமா? அவ்விருவருக்கும் பிறந்தவர் பிராஹ்மணன் என்பதினால், அவ்வாதிகளின் கக்ஷிப்படி பிறந்தவரும் பிரஹ்ம-ஜ்ஞானியாகவே இருக்கவேண்டும். பிரஹ்ம-ஜ்ஞானிக்கு மறுபடியும் சரீர-கிரஹணமேயில்லையென்றும், விதேஹ-முக்தியேயுண்டென்றும் சொல்லுகின்ற சாஸ்திர-வசனங்களுக்கு எதிரிடையாக மாதாவினிடத்தில் பிரஹ்ம-ஜ்ஞானிக்கு கர்ப்ப-வாஸம் ஏற்படுவதாக அவ்வாதிகள் சொல்லுகின்றார்களா? இது நிற்க. பிராஹ்மண-சரீரத்திற்கு வேதத்தில் அனேக ஸம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் யாதொன்றும் சூத்திரருக்குக் கிடையாது. பிராஹ்மணனைத்தவிர மற்ற துவிஜர்களுக்கும் ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், சிற்சில விஷயங்களில் ஒவ்வொரு துவிஜருக்கும் தனித்தனியாக விதியும், பிராஹ்மணனுக்கு சில விஷயங்களில் விசேஷ-விதிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ஸம்ஸ்காரங்களில் இரண்டு ஸம்ஸ்காரங்கள் பிறவிக்கு முந்திய ஸம்ஸ்காரங்கள், அதாவது, கர்ப்பாதானமும், பும்ஸவனமும். பிறப்பதற்கு முன்பாகவே பிறக்கப்போகிறவன் பிரஹ்ம-ஜ்ஞானியென்று தெரிந்துகொண்டு

பிராஹ்மண-சரீரத்திற்குள்ள அவ்விரண்டு ஸம்ஸ்காரங்களேயும் செய்யக்கூடுமென்பது அவ்வாதிகளின் கக்ஷியா? பிறவிக்கு முன்பாகவே குறிப்பிட்ட காலங்களில் அவைகளைச் செய்ய வேண்டுமே. சாஸ்திரப்படி பிராஹ்மணக் குழந்தை பிறந்தவுடன் ஜாத-கர்ம என்ற ஸம்ஸ்காரஞ் செய்யவேண்டியிருக்கின்றது. பிறந்த தினத்திலேயே பிறந்தவன் பிரஹ்ம-ஜ்ஞானி யென்று தெரிந்தாலொழிய அந்த ஸம்ஸ்காரத்தைச் செய்வது எப்படி ஸாத்தியப்படும்? இப்படியே, குழந்தை பிறந்து சில தினங்களுக்குள்ளாகவும் மாஸங்களுக்குள்ளாகவும் சில ஸம்ஸ்காரங்களும், சில வருஷங்களுக்குள்ளாக சில ஸம்ஸ்காரங்களும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட வாதிகளின் கக்ஷிப்பிரகாரம் குழந்தை பிரஹ்ம-ஜ்ஞானிதானென்று நிச்சயம் பண்ணிக்கொண்டுதான் அந்த ஸம்ஸ்காரங்களை அந்தந்தக் காலங்களில் நடத்தவேண்டியதாயிருக்கும். மேலும், பிராஹ்மண-சிறுவனுக்கு 7 வயதுக்குமேல் 16 வயதுக்குள்ளாக உபநயனஞ் செய்விக்கவேண்டுமென்று சாஸ்திர-விதி இருப்பதில், பிரஹ்ம-ஜ்ஞானியான சிறுவனுக்கு உபநயனஞ் செய்து வைக்கவேண்டுமென்பது அர்த்தமா? பிரஹ்ம-ஜ்ஞானமே ஸித்தித்திருக்கின்றவனுக்கு உபநயனம் எதற்காக வேண்டும்? உபநயனத்திற்குப் பிறகு குரு-குலத்திலேயே வாஸஞ்செய்து கொண்டு வேதத்தையும் வேதாங்கங்களையும் அப்பியஸிக்க வேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகின்றதே. பிரஹ்ம-ஜ்ஞானியே அத்தியயனஞ்செய்ய வேண்டுமென்பதும் சாஸ்திரங்களைப் படிக்கவேண்டுமென்பதும் அவ்வாதிகளின் அபிப்பிராயமா? வித்வானுகிறவரையில் பிராஹ்மண-பிரஹ்மசாரியும் குருவின் பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருப்பதால், முன்னுலேயே பிரஹ்ம-ஜ்ஞானியாயிருக்கிறவன் அவித்வானுகவுமிருந்து அப்பால் வித்வானுகப் போகிறதாக தாத்பரியமா? பிரஹ்ம-ஜ்ஞானியாயிருப்பவனே அவ்வாதிகளின் கொள்கைப்படி பிரஹ்மசரியாசிரமத்தில்

பிரவேசிப்பதுபோல் அப்பால் கிருஹஸ்தாசிரமத்திலும் வானப் பிரஸ்தாசிரமத்திலும் பிரவேசிக்கக்கூடுமென்று சொல்லு கின்ருர்களா ? இப்படிப்பட்ட பிரவேசங்களின் உத்தேசம் என்ன ? அன்றியும், சுருதியில் பிராஹ்மணனுக்கு விவிதிஷா-ஸன்னியாஸம் விதிக்கப்பட்டிருக்கின்றதே. விவிதிஷா-ஸன்னியாஸமென்பதற்கு, ஜ்ஞானமில்லாத காரணத்தினுல் ஞானத்தில் இச்சையேற்பட்டு அதை ஸம்பாதிப்பதற்காகச் செய்துகொள்ளும் ஸன்யாஸம் என்பது அர்த்தம். இந்த ஸன்யாஸத்தைச் செய்துவிட்டு அப்பால் குருவிடமிருந்து கொண்டு வேதாந்த-சிரவணத்தைச் செய்யவேண்டுமென்று வேதம் விதித்திருக்கின்றது. பிரஹ்ம-ஜ்ஞானிக்கே அஜ்ஞான மேற்பட்டு, ஜ்ஞானம் வேண்டுமென்று அவர் இச்சித்து சிரவணத்தைச்செய்ய குருவிடம் வருகிறதாகச்சொல்லக்கூடுமா? மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கெல்லாம் அவ்வாதிகள் பதில் சொல்லக்கூடுமாஞல்தான் மேல் கேள்விகளைக் கேட்பது அவசியமாகும். ஒன்றுக்கும் பதில் சொல்லக்கூடாதவர்களை மேலும் கேள்விகளைக்கேட்டு தொந்தரவு செய்வதில் பிரயோஜன மில்லை. ஸாமான்ய-புத்தியில் ஏற்படக்கூடிய ஆலோசனைகூட இல்லாமலும், சாஸ்திரத்தைத் தெரிந்துகொள்ளாமலும், வேறு விதமாகவும் உண்மையைக் கிரமப்படி விசாரிக்காமலும், பிரஹ்ம-ஜ்ஞானிதான் பிராஹ்மணன், மற்றவர் பிராஹ்மண னில்லை என்று ஹடமாகச்சொல்லும் கக்ஷிக்கு மூலம் (ஆணிவேர்) அஜ்ஞான-இருளும் துவேஷ-புத்தியுமே தவிற வேறல்ல வென்பது ஸித்தம்.

5. குண கர்ம விபாகம்

இதைப்போலவே மனிதன் செய்து வருகின்ற கர்மாவையும் அவனுடைய குணத்தையும் பார்த்தே அவன் இன்ன ஜாதியைச் சேர்ந்தவனென்று சொல்லவேண்டுமேயல்லாமல் அவனுடைய பிறவியினுல் ஜாதியைக்குறிப்பிடக்கூடாதென்றும், ஆகையால்

ஒருவரும் பிறவியினால் பிராஹ்மணனாகமாட்டாரென்றும் கக்ஷி சொல்லுகின்றார்கள். இக்கக்ஷியை சரியென்று அங்கீகரித்தால் சாஸ்திர-நிபந்தனைகளுக்கு அர்த்தமேயில்லாமல் போய் விடுவதுந்தவிர தர்மங்களை ஆசரிப்பதும் ஸாத்தியப்படாமல் போகும். அந்தந்த ஜாதிகளுக்குத் தக்கபடி வெவ்வேறு ஆசரணைகள் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருப்பதால் யார் எந்த தர்மத்தை ஆசரிக்கலாமென்பது தெரிய மார்க்கமன்னியில் வியவஸ்தையற்று எல்லோரும் கெட்டுப்போகக்கூடியதாயு மிருக்கும். பிறவி முதல் மரணம் வரையில் குணமும் செய்கையும் ஒரே மாதிரியாக ஒரு மனிதனுக்கும் இருக்கமாட்டாது. ஒரே தினத்தில் ஒரே மனிதனுக்குப் பலவித குணங்களும் செய்கை களும் ஏற்படலாம். எந்த குணத்தை அல்லது செய்கையை உத்தேசித்து அவனுடைய ஜாதியைத் தீர்மானிப்பதென்பது கஷ்டப்படும். குணமும் செய்கையுமே ஜாதியைக் குறிப்பிடு மானால், ஒவ்வொரு தினத்திலும் ஒரே மனிதனுக்கு ஜாதி மாறிக்கொண்டிருக்கக்கூடியது. ஜாதியே மாறிக்கொண் டிருக்கும்போது, ஆசரிக்கவேண்டிய தர்மங்களும் மாறிக் கொண்டே யிருக்கவேண்டும். மேற்கண்டகொள்கைப்படி ஒரேமனிதன் ஒவ்வொரு தினத்திலும் நான்கு ஜாதிகளிலும் பலதடவை இருக்கலாம். இப்படிப்பட்டவனை ஸ்திரமாய் இன்ன ஜாதியைச் சேர்ந்தவனென்றுவது, இன்ன தர்மந்தான் இவனுக்கு ஸ்வ தர்மம் இன்னது பர தர்மம் என்றுவது சொல்வது ஸாத்தியப்படாது. ஸ்வதர்மத்தையே ஆசரிக்க வேண்டும் பர தர்மத்தை ஆசரிக்கக்கூடாதென்று சொல்லுகின்ற சாஸ்திர நிபந்தனைகளெல்லாம் வியர்த்தமே யாகும்.

அன்றியும், மனிதனுடைய குணம் முதலானது கொஞ்சம் வயது சென்றபிறகுதான் வெளியில் தெரியக்கூடியது. அது வரையில் அவன் விஷயமாக நடத்த வேண்டிய தர்ம காரியங்கள் இன்னவையென்று குறிப்பிட இடமன்னியில்

போய்விடும். முன் சொல்லியபடி தாயாரின் கர்ப்பத்தில் வருகின்ற காலம்முதல் ஜாதிக்கிரமப்படி சிலர்களுக்கு வைதிக ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டுமென்றும் சிலர்களுக்கு அவை கிடையாதென்றும் சாஸ்திரத்தில் துலங்குகின்றது. பின்னுல் வெளியாகக்கூடிய குணத்தையும் செய்கையையும் பார்த்து ஜாதியைத் தீர்மானிக்க வேண்டுமானுல், கர்ப்பத்திலும் சிசுபர்வத்திலும் பால்யாவஸ்தையிலும் துவிஜர்களுக்கு, அதிலும் முக்கியமாய் பிராஹ்மணர்களுக்கு, நடத்திவைக்கவேண்டிய ஸம்ஸ்காரங்களை நடத்துவது எப்படியோ தெரியவில்லை. சாஸ்திரப்படி துவிஜர்களுக்கு அந்தந்தக்காலங்களில் நடத்த வேண்டிய ஸம்ஸ்காரங்களை நடத்தாமலிருந்தாலும் தோஷமுண்டு, ஸம்ஸ்காரத்திற்குத் தகுதியில்லாத சூத்திராதிகளுக்கு ஸம்ஸ்காரத்தைச்செய்து வைத்தாலும் தோஷமுண்டு. வாதிகளின் கக்ஷியை ஏற்றுக்கொண்டால், ஆர்ய வைதிக மதமே தொலைந்துபோகக்கூடியதாயிருக்கும். சாஸ்திரங்களும் பிரயோஜனமில்லாமல்போகும். கர்மம், பக்தி, ஜ்ஞானம் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளேயல்லாமல் ஸத்கதிக்கு ஸாதனங்களாகமாட்டா. யார் எந்த கர்மத்தைச் செய்ய வேண்டும், எவ்விதமாக பக்தியைச் செலுத்தவேண்டும், எந்த மார்க்கமாய் ஜ்ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டும், என்பதெல்லாம் குறிப்பிட முடியாமலே போய்விடும்.

குண கர்ம விபாகத்தை முன்னிட்டே சாதுர்வாண்யம் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகின்ற கீதா வாக்கியத்தின் தாத்பரியமென்னவென்று உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் கேட்கக் கூடியவர்களுக்கு இனி சொல்லப்போகிற விஷயம் வெளியிடப் படுகின்றது. ஜாதி விஷயமான தத்துவங்கள் பூராவையும் விஸ்தாரமாய்ச் சர்ச்சைசெய்து ஸ்தாபிப்பதற்கு பிரகிருத விஷயம் இடங்கொடுக்காதாகையால் இங்கு அவசியமாகச் சொல்லவேண்டியதை மாத்திரம் சொல்லி நிறுத்திக்கொள்ளப்

படும். குண கர்ம விபாகத்தை முன்னிட்டே சாதுர்வர்ண்யம் ஏற்பட்டிருப்பது வாஸ்தவம். பள்ளிக்கூடங்களில் இன்ன இன்ன யோக்கியதையுள்ள மாணுக்கன்தான் இன்ன இன்ன வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவான் என்று விதியிருப்பது போல், முன்-ஜன்மங்களின் பயனாக எந்த குணம் தலையெடுத்திருக்கின்றதென்பதையும் அந்த ஜன்மங்களில் எந்த செய்கைகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்பதையும் நன்கு அறிந்துள்ள ஸர்வஜ்ஞுன ஈசுவரன் அவனவனுடைய குண கர்மத்திற்குத் தகுந்தபடி அந்தந்த ஜாதி வகுப்பில் ஜன்மத்தையேற்படுத்தி வைக்கின்றார். மேலும், எப்படி பள்ளிக்கூடத்தில் பிரதான உபாத்தியாயரால் பரீக்ஷிக்கப்பட்டு ஒரு பையன் ஒரு வகுப்பில் சேர்த்துககொள்ளப்பட்ட பின்பு அவ்வகுப்பிலிருந்து கொண்டே தன்னுடைய யோக்கியதையை அதிகப்படுத்திக் கொள்ளவோ குறைத்துக்கொள்ளவோ அவனுக்கு கொஞ்சம் ஸ்வாதந்திரியமிருக்கின்றதோ, அப்படியே ஒரு ஜாதியில் பிறவி ஏற்பட்டிருக்கின்ற மனிதனும் தன்னுடைய குணத்தையும் நடத்தையையும் அதிகமாய் சுத்தப்படுத்திக் கொள்ளவும் அல்லது கெடுத்துக்கொள்ளவும்கூடும். பகவான் கீதையில் குணகர்மமென்று சொன்னது நடப்பு ஜன்மத்தில் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டுமிருக்கக்கூடிய குண கர்மமல்ல. மேற்கண்ட கீதா வாக்கியத்திற்குப்பொதுவாய் குண கர்மங்களின் தாரதம்மியத்தை கவனித்து அவைகளை நான்கு விதங்களாக விபாகப்படுத்தி ஒவ்வொரு விதத்தையுடையவர் ஒவ்வொரு ஜாதியில் ஜன்மத்தை அடையவேண்டுமென்று ஈசுவரன் வியவஸ்தை செய்திருக்கின்றாரென்று அர்த்தம். எப்படி ஒரு வகுப்பில சேர்ததுக் கொள்ளப்பட்ட மாணுக்கன் தன்னுடைய யோககியதையை எவ்வளவு விருத்திசெய்து கொண்டாலும், அல்லது, கெடுத்துக்கொண்டாலும், வருஷமுடிவில் பரீக்ஷையின் பேரில் மேல் வகுப்புக்காவது கீழ் வகுப்புக்காவது அனுப்பப்படும் வரையில் அவனிருந்துகொண்டிருக்கின்ற வகுப்பைச் சேர்ந்த மாணுக்கனாகவே இருக்கின்றானே,

அவ்விதமே ஒரு ஜாதியில் பிறந்தவன் தன் ஜாதிக்குள்ள தர்மங்களை நன்ருக அனுஷ்டித்து வந்தாலும், அல்லது, அனுஷ்டிக்காமலே கெட்டுப்போனாலும் அவனுடைய நடப்பு ஜன்மத்திற்குரிய பிராரப்த காலத்தின் முடிவு வரையில் அவன் அந்த ஜாதியைச் சேர்ந்தவன் தான்.

6. ஸ்வதர்மம்

இப்படி பிறவியினல் ஒவ்வொருவருக்கும் ஜாதி இன்னதென்று நிச்சயப் பட்டிருப்பதினல்தான் எது ஸ்வதர்மம் எது அன்ய தர்மமென்று எல்லோரும் தெரிந்து கொண்டு சாஸ்திரத்தை அனுஸரித்து நடந்துவருவது ஸாத்தியப்படக் கூடியதாயிருக்கின்றது. நான்காவது வகுப்பில் சேர்க்கப் பட்டிருக்கின்ற மாணக்கன் நன்ருகப் படித்தாலும் படிக்கா விட்டாலும் அவனுக்கு தான் படிக்கவேண்டிய பாடம் இன்னதென்று குறிப்பிட்டுத் தெரியும். தன்னுடைய நான்காவது வகுப்புப்பாடத்தைப் படிக்காமல் ஆருவது வகுப்புப் பாடத்தைப் படிப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்தால் அவனுக்குக் கெடுதலே பயனும். தன் வகுப்புப்பாடத்தை நன்ருய்ப் படிக்கிறவன் தான் சிலாகிக்கப்படுவான். நான்காவது வகுப்பிலிருந்து கொண்டு சரியாய்ப்படிக்காமல் திரிந்து வருகின்ற மாணக்கனை அபேக்ஷித்துத் தன்பாடத்தை நன்கு படித்துவருகின்ற இரண்டாவது வகுப்பு மாணக்கன் உயர்ந்தவனென்றே சொல்ல வேண்டும். அந்நான்காவது வகுப்புப் பையன் எல்லோராலும் தூஷிக்கப்படுவான்; இரண்டாவது வகுப்புப்பையன் மெச்சப் படுவான். மரியாதையும் மரியாதைக் குறைவும் வகுப்புகளின் உயர்வு தாழ்வை பொருத்த தல்ல. இப்படியே ஜாதி எதுவா யிருந்தாலும் ஸ்வ தர்மத்தைச் சரியாய் அனுஷ்டிப்பவரே மெச்சப்படுவார். தர்மங்களுக்குள் உயர்வு தாழ்வுகளைப் பாராட்டக்கூடாது. எதுவாயிருந்தாலும் ஸ்வ தர்மந்தான் சிலாக்கியம். பார்வைக்கு உயர்ந்ததாயிருந்தாலும் நன்ருக

ஆசரிக்கக்கூடியதாயிருந்தாலும் அன்ய தர்மம் நிகிருஷ்டந்தான். ஸன்னியாஸஞ் செய்துகொண்டு பிக்ஷையெடுத்துண்பது பிராம்மணனுக்குத்தான் சிலாக்கியமேயொழிய மற்ற ஜாதியார் களுக்குக் கூடாதுதான். க்ஷத்திரியனாகிய அர்ச்சுனனுக்கு பிக்ஷை வாங்குவது ஸ்வ தர்மமில்லாததினால் கூடாதென்று ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்தார். இதில் முன் குறிப்பிட்ட வாதிகளின் கொள்கைப்படி நடப்பு ஜன்மத்தில் வெளியாகின்ற குணத்தினாலும் செய்கையினாலும் ஜாதியைக் குறிப்பிட வேண்டுமானால் அர்ச்சுனனை பிராஹ்மணனென்றே சொல்ல வேண்டிவரும். கீதையின் ஆரம்பத்தில் அர்ச்சுனன் சொல் வதையெல்லாம் கவனித்தால் பிராஹ்மணனுக்கு இருக்க வேண்டிய குணங்களில் அனேகம் அவனுக்குப் பொருந்தியிருந்த தென்பதில் ஸந்தேஹமில்லை. பிராணிகளை ஹிம்ஸிக்கக்கூடா தென்ற கருணை, பாபத்தில் பயம், ஐசுவர்யத்திலும் விஷய சுகங்களிலும் வெறுப்பு, ஸாவத்தியாகத்தில் புத்தி, பெரியோர் களிடத்திலும் குருக்களிடத்திலும் பக்தியும் விசுவாஸமும், சிறுவர்களிடத்தில் தயை, தர்மரக்ஷணையில் ஆவல், பொறுமை, ருஜுபாவம், ஆஸ்திக்யம், உலகத்தில் எல்லோரும் சுகிகளாகவே இருக்கவேண்டுமென்ற எண்ணம், இவை முதலான பிராஹ்மண குணங்கள் அர்ச்சுனனுடைய ஸ்வபாவத்திலிருந்ததாக ஸ்பஷ்டமாய்த் துலங்கியதையும், க்ஷத்திரியன் செய்யக்கூடாத காரியமாகிய வில்லையும் அம்பையும் விட்டெறிந்ததையும் பார்த்துங்கூட ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சுனனை பிராஹ்மணனாக எண்ணாமல் பிறவியின் காரணத்தினால் க்ஷத்திரியனாகவே பாவித்துத்தான் உபதேசித்தார். மேற்கண்ட வாதிகளில் அனேகர் கீதையைப் படிப்பதாகச் சொல்லிக்கொண்டு அதை சிலாகித்தும் வருகின்றார்கள். ஆனால், அதில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது, அதன் மூலமாய் என்ன தர்மங்கள் வெளியாகின்றன என்ற விவரங்கள் யாதொன்றையும் தெரிந்துகொள்ளாமலே மனம் போன போக்கெல்லாம் சாஸ்திர

விரோதமாய் பேசிக்கொண்டும் தர்ம விரோதமாய் நடந்து கொண்டும் வருகின்றூர்கள். இதெல்லாம் கலியின் காரியமே.

7- முயற்சி அவசியம்

ஆனல், கலியின் காரியமே, நாம் என்ன செய்யக்கூடு மென்று எண்ணி அதைரியப்படக்கூடாது. யுகம் கலியுகந் தான். நான்கு யுகங்களடங்கிய சதுர்யுகமென்ற மஹா யுகத்தை ஒரு தினத்திற்கு ஒப்பிட்டு அதில் கலியுகத்தை இரவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இரவில் எங்கும் இருட்டு இருந்துகொண்டுதானிருக்கும். கலியில் அனேகமாய் எங்கும் அஞ்ஞான-இருளாகிய மௌட்டியமும் அதனுலுண்டாகும் அக்கிரமச் செய்கைகளும் பிதற்றல்களும் உலகத்திலிருந்து கொண்டுதானிருக்கும். புத்தியுள்ள மனிதன் எப்படி இரவில் எங்கும் இருட்டு இருந்தபோதிலும் விளக்கை முன்னுல் வைத்துக்கொண்டு தனக்கு இருட்டில்லாமல் செய்துகொண்டு தான் செய்யவேண்டிய வேலையைச் செய்வானே, அப்படியே உலகம் முழுமையும் அஞ்ஞான-இருளடைந்து பெரும்பாலும் கண்மூடித்தனமாகவே ஜனங்கள் தர்ம-விரோதமாக நடந்து வந்தாலும் தனக்கு அந்த இருள் இல்லாமலிருக்கும்படியாக வேத-சாஸ்திர-பிரகாசத்தை முன்னிட்டு தனக்கு மோக்ஷமேற் படும்படியான மார்க்கத்தைத் தேடிக்கொள்ளக்கூடும். இருட்டாகிய இரவு-தோஷம் எப்படி விளக்குள்ளவருக்குக் கிடையாதோ, அப்படியே வேத-சாஸ்திர-மார்க்கத்தில் பிடிமான முள்ளவருக்குக் கலி-தோஷமும் கிடையாது.

அன்றியும், மற்ற யுகங்களை உத்தேசித்து ஒரு வகையில் கலியுகம் சிலாக்கியமென்றே எண்ணவேண்டும். இப்படியே சில ரிஷிகளும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றூர்கள். வேறு யுகங்களில் அதிக பிரயாஸையெடுத்து கால தாமஸத்தின் பேரில் ஸாதிக்கக்கூடியதைக் கொஞ்சப்பிரயாஸையினுல் இக்கலியில் லகுவாய் சீக்கிரத்தில் ஸாதிக்கலாம். ஆகையால்,

காலம் கலிகாலமேயென்று அதைரியப்படவேண்டாம். தவிரவும், உலகத்தில் வேறு யார் அதைரியப்பட்டாலும், நல்வழியில் செல்லக்கூடாமலிருந்தாலும், பிராஹ்மணன் ஒருக்காலும் அதைரியப்படக்கூடாது, நல்வழியைவிட்டு விலகவுங்கூடாது. பிராஹ்மண ஜன்மத்தின் முக்கிய உத்தேசமாகிய மோக்ஷ நிலையானது கால தேசாதிகளுக்கு அதீதமாயிருப்பதால், உண்மையான பிராஹ்மணன் கலிகாலமேயென்று அஞ்சக்கூடாது. எது நேர்ந்தாலும் நேரட்டுமென்று மனோதைரியத்துடன் தனக்குரிய தர்ம-மார்க்கத்திலேயே உறுதியாயிருந்து முயன்று வந்தால் நற்கதி ஏற்படாமல் போகமாட்டாது. இப்போதுள்ள பிராஹ்மணர்களின் முன்னோர்களெல்லோரும் அனாதி காலமாக மஹான்களாகவே இருந்திருக்கின்றனர்கள். அனாதி பரம்பரையாக ஒட்டி வந்திருக்கின்ற பிராஹ்மண்யம் இப்போது இரண்டொரு பரம்பரையில் க்ஷீண தசையை அடைந்திருந்த போதிலும் அதைச் சீர்திருத்திக்கொண்டு விடலாம். முயற்சி ஒன்றுதான் வேண்டியது. சரியானபடி முயன்றால் ஏன் இக்கால பிராஹ்மணர்களுக்கும் மோக்ஷம் கிடைக்காது? அவசியம் கிடைக்கும். ஸந்தேஹப்பட வேண்டாம். இப்படியே மற்ற ஜாதியார்களும் சாஸ்திரத்தை அனுஸரித்து விசேஷ முயற்சிகளைச் செய்துவந்தால் நற்கதியை அடைவார்களென்பதில் ஸந்தேஹமில்லை. நாயனார்களிலும் ஆழ்வார்களிலும் அனேகர்கள் இக்கலியுக-ஜன்மங்களிலேயே முயன்று மேற்சென்றவர்களாகக் காணப்படுகின்றனர்கள். ஆனால், இக்கலியில் தாமஸிக்காமல் சீக்கிரத்தில் முயற்சி செய்கிறவர்களுக்கு நிச்சயமாய் உத்தேசம் நிறைவேறக் கூடியது. கலி அதிகரித்துவிட்டால் முயற்சி-செய்யக்கூடிய சக்தியும் குறைந்துபோய்விடும். அதிலும் பிராஹ்மணன் வெகு ஜாக்கிரதையுடனிருந்து கூடிய சீக்கிரத்தில் முயற்சி செய்து ஸம்ஸார துக்கத்திலிருந்து தன்னைத் தப்பிவித்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். எப்படி இராக்காலத்தில் நாழிகை ஜாஸ்தியாகி பனியும் அதிகமாகச் சொரிந்து

நெருப்புப் பெட்டியிலுள்ள நெருப்புக்குச்சியைக் கிழித்தாலும் அது பத்தாமல் போய்விடுகின்றதோ, அப்படியே கலி அதிகரித்துவிட்டால் ஜாதிப்பிராஹ்மண்யம் கொஞ்சங்கூட உபயோகப்படாமலும் அதிக முயற்சியின் பேரில்கூட பிரஹ்ம ஜ்ஞானம் உதிக்க ஸாத்தியப்படாமலும் போய்விடும் பிரஹ்ம ஞானத்திற்காகவே பிராஹ்மண ஜன்மம் ஏற்பட்டிருக்கிற படியால் அந்த ஜ்ஞானமுண்டாகக்கூடாமலே போய்விட்டால் பிராஹ்மண ஜன்மம் கிடைத்தும் பிரயோஜனமில்லையென்றே முடிவாகும். ஆகையால், எல்லோருக்கும் கால தாமஸமன்னியில் தர்ம முயற்சியில் தைரியத்தையும் ஜ்ஞான மார்க்கத்தில் புத்தியையும் கொடுத்து கூடிய சீக்கிரத்தில் ஸம்ஸார துக்கக்கடலை விட்டுக் கரையேறும்படியான அனுக்கிரகத்தை ஸர்வேசுவரன் செய்வாராக !

அத்தியாயம் 9

விவாஹ ஸம்ஸ்காரம்

1. பார்வை பலவிதம்

பார்க்கப்பட்ட பொருள் ஒன்ருனலும் அதில் பலவித பார்வைகள் ஜனங்களுக்கு ஏற்படக்கூடும். அவரவரின் தனித் தனியான ஸ்திதிக்குத் தக்கவாறு பார்வை வேறுபடும். இன்று பிறந்த குழந்தையின் திருஷ்டியில் வஸ்துக்களுக்குள்ள பரஸ்பர-வித்தியாஸங்கள் புலப்படாமல், ஸகலமும் தன் கண்களைத் தொடுவதுபோல் அதற்குத் தோன்றும். ஸமீபம் தூரம் என்ற பேதப்பார்வையும் அக்குழந்தைக்கிராது. இப்படியே மற்றவர் களாலும் ஒரே வஸ்து பார்க்கப்பட்டபோதிலும், அந்த வஸ்து வின் ஸ்வரூபத்தை அறியாதவனுடையவும் அதை நன்கு அறிந்தவனுடையவும் பார்வை ஒன்ருகமாட்டாது. படித்து அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளக்கூடியவன் புஸ்தகத்தைப் பார்ப்பதற்கும் படிக்கத்தெரியாதவன் அப்புஸ்தகத்தைப் பார்ப் பதற்கும் வித்தியாஸமுண்டு. இருவருடைய பார்வையும் ஒரே விதமல்ல அன்றியும், அவரவரின் மனே-பாவனைக்கும் இச்சைக்கும் வாஸன-ஸ்வபாவங்களுக்கும் தக்க விதங்களில் பார்வைகளும் பேதப்படக்கூடியவை. திருஷ்டிக்கு விஷயமான சிறு ஆட்டுக்குட்டி ஒன்றேயானலும். அது விளையாடுவதற்கு யோக்கியமான பிராணியாக பாலகர்களால் பார்க்கப்படுகின்றது. அதை அழகுள்ள ஈசுவர-ஸ்ருஷ்டியாக மற்ருெருவர் பார்க்கின்ருர். தன்னைப்போல் அது ஒரு ஜீவனென்று எண்ணியும், இருவரும் ஈசுவரரிடமிருந்து உண்டாயிருப்பதால் அதன் பேரில் ஸஹோதர பாவத்தை பாராட்டியும், மற்ருெருவர் அதை அன்புடன் பார்த்துவருகின்ருர். ஈசுவரர் அந்தர்யா மியாக அதிலுமிருப்பதால் அதை ஈசுவரவடிவமாகவே மற்று

மொருவர் பக்தியுடன் பார்க்கின்றார். கர்ம கதி-விபரத்தில் ஞாபகமுள்ள மற்றொருவரால் அது அநியாயமாய் மனிதன் கையிலகப்பட்டுக் கொல்லப்படுவதற்காக பிறந்திருக்கின்ற பரிதபிக்கப்படவேண்டிய பிராணியாக பார்க்கப்படுகின்றது. வேறொருவன் அதில் மாம்ஸம் எவ்வளவு கிடைக்குமென்பதை கவனித்து அதை கொல்லப்படத்தகுந்ததாகவே பார்க்கின்றான். இத்தப்படி ஜனங்களுடைய ஜ்ஞானத்திலும் ஸ்வபாவத்திலு மிருந்துவருகின்ற வித்தியாஸங்களுக்கு அனுஸரணையாக ஒரே விஷயத்தில் பலவிதப் பார்வைகளுண்டாகலாம். ஆகையால், உலகத்தில் காணப்படுகின்ற பதார்த்தங்களும் நடந்து வருகின்ற நடவடிக்கைகளும் எல்லோராலும் ஒரே விதமாய் பார்க்கப்படுவதுபோல் சொல்லக்கூடாது. எல்லோருக்கும் ஒரேவிதப் பார்வை எவ்விஷயத்திலுமிருக்கக்கூடியதல்ல. ஒரே மனிதனிடத்திலும் ஒரே காலத்தில் வலது-கண்ணினால் பார்க்கப்படுவதும் இடது-கண்ணினால் பார்க்கப்படுவதும் கொஞ்சம் வெவ்வேறுதான். பார்க்கப்பட்ட வஸ்து ஒன்றாகவே யிருந்தபோதிலும், கண்களில் தென்படுகின்ற அதன் அம்சங்கள் முழுமையும் ஒன்றல்ல. சற்று கவனித்துப் பார்ப்பவர்களுக்கு இவ்விஷயம் துலங்கும். கண்களின் ஸ்தான வித்தியாஸத்தினால் எவ்விதம் வஸ்துக்களின் வெவ்வேறு அம்சங்கள் பார்க்கப்படுகின்றனவோ, அவ்விதமாகவே பல விதங்களில் வேறுபட்டுள்ள வாஸனு குண கர்மங்களுக் கொத்தபடி நானாப்பிரகாரமாய் பின்னப்பட்டிருக்கின்ற மனோ பாவனைகளுடன் கூடி தனித்தனி ஸ்தானங்களில் இருந்து வருகின்ற ஜீவர்களின் மனதுகளிலும் உலக விஷயங்களின் வெவ்வேறு அம்சங்கள், தோன்றக்கூடியவை. இந்தப்படி பலவாருகத் தோன்றுகின்ற அம்சங்களும் அனேகமாய் உண்மையில் அவைகள் உள்ளபடி தோன்றாமல் பார்க்கிறவர் களின் மேற்கண்ட விசேஷ மனோபாவனுபேதங்களினால் மாறுதலடைந்தே தோன்றும்

மேற்சொல்லியபடி பார்வை வித்தியாஸப் படக்கூடியது வாஸ்தவமானாலும், எவ்விதப் பார்வையும் உண்மையான பார்வையல்லவென்று எண்ணிவிடக்கூடாது. சிலது உண்மையான பார்வையாகவேயிருக்கலாம் ஓர் உதாஹரணமெடுத்துக் கொள்வோம். ரயில் வண்டியில் பிரயாணமாகப் போகும் போது ஒருவர் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு எதிர்பக்கத்திலுள்ள ஜன்னல் கொஞ்ச–நீலவர்ணக்கண்ணாடியால் மூடப் பட்டிருந்தால், அககண்ணாடியில் அவருக்குப்பின்புறமுள்ள மலை, மரம், செடி, கட்டிடம் வகையறுக்கள் விபரீதமாய் ஓடுவதாகக் காணப்படுகின்றன. இதெல்லாம் பிரதிபிம்பத் தோற்றமேயல்லாது வேறல்ல. எது வரையில் இப்பிரதிபிம்பத்தில் மனதை வைத்து அவர் பார்த்துக்கொண்டிருப்பாரோ அது வரையில் கண்ணாடியின் நிஜஸ்வரூபமாவது கண்ணாடிக்கப்பால் வாஸ்தவத்தில் அவருக்கெதிரிலிருக்கின்ற பதார்த்தங்களாவது அவருடைய பார்வைக்கு விஷயமாகக் கூடியவையல்ல. பார்க்கப்பட்டதெல்லாம் கேவலம் பிரதிபிம்பந்தானென்று எண்ணி கண்ணாடியை உற்றுப்பார்க்க ஆரம்பித்தால் பிரதிபிம்பங்கள் உடனே மறைந்து போவதுடன் கண்ணாடியின் நிஜத்தன்மையும் பார்வைக்கு நேர் விஷயமாகி விடும். அப்பால் கண்ணாடியையும் லக்ஷியமாக எண்ணாமல் அதன் மூலமாய் அதற்கு வெளியிலுள்ள வஸ்துக்களை பார்க்க உத்தேசித்து நன்றாக உற்றுப்பார்த்தால், கண்ணாடியும் பார்வையிலிருந்து விலகிப்போய், அதற்கப்பாலிருக்கின்றவைகளே நேராகப் பார்க்கப்பட்டவையாகும். எதிரில் கண்ணாடி ஜன்னலிருந்தாலும், கண் திறந்திருந்தாலும், மனது வேறு ஞாபகத்திலிருந்து கொண்டு கண்ணுடன் ஸம்பந்தப்படவில்லையானால், ஜன்னலாவது அதற்கப்பாலுள்ள வஸ்துக்களாவது அல்லது பிரதிபிம்பங்களாவது கண்ணுக்கு விஷயமாகா. அதெல்லாம் அவரால் பார்க்கப்பட்டதாக மற்றவர்களுக்குத் தோன்றினாலும், உண்மையில் பார்க்கப்பட்டதாக மாட்டாது. இவ்விதப்

பார்வையை முழுவதும் பொய்யான பார்வை யென்றே சொல்லலாம். பிரதிபிம்பத்தை மாத்திரம் ஸாக்ஷாத்கரிக்கின்ற பார்வையை மோஹப்பார்வை யென்று சொல்லவேண்டும். பார்க்கப்படுவது வெறும் தோற்றமே தவிர வாஸ்தவமில்லை யாதலால் இதுவும் உண்மையான பார்வையல்ல. இப்பிரதிபிம்பத்தோற்றத்தை கிரஹிக்கின்ற மோஹப்பார்வையை விலக்கிவிட்டு கொஞ்சம் முன் குறிப்பிட்ட பிரகாரம் உற்றுப் பார்ப்பதினால் கண்ணாடியே பார்வைக்கு விஷயமாகக்கூடிய தானாலும், இக்கண்ணாடிப் பார்வை நிலை நிற்கக்கூடிய பார்வையல்ல. இது க்ஷணங்கூட தங்கி நிற்கக்கூடாத பார்வையாதலால், கண்ணாடிக்கப்பால் உண்மையில் எதிரிலிருக்கின்ற வஸ்துக்களைப் பார்க்க யத்தனித்தாலொழிய கண்ணாடியாலுண்டாகின்ற பிரதிபிம்பங்களே மறுபடியும் தோன்றும். கண்ணாடியை ஒரு பொருட்டாக எண்ணாமல் அதற்கப்பாலுள்ள வாஸ்தவ விஷயங்களை நேரில் கிரஹிக்கின்ற பார்வையே உண்மையான பார்வையாகும். இவ்விதமாக பார்வை நான்கு விதமென்று சொல்லக்கூடும். அதாவது *1.* பார்வையேயில்லாத பார்வை, 2. மோஹப்பார்வை, 3. க்ஷணிகப்பார்வை, 4. உண்மைப்பார்வை. இவைகளில் *1, 3* லக்கபார்வைகள் வியவஹார யோக்கிய மில்லாத பார்வைகளாயிருப்பதால், அவைகளை நீக்கிவிட்டு, பொதுவாக பார்வையை மோஹப் பார்வையென்றும் உண்மைப்பார்வை யென்றும் மாத்திரம் இருவகைப்பட்டதாக பாவித்துக்கொள்ளலாம்.

2. தார்மிகப் பார்வை

எதுவரையில் மோஹப்பார்வையில் புத்தி சென்றுகொண்டிருக்கின்றதோ அதுவரையில் உண்மை துலங்க மாட்டாது. உண்மை துலங்கவேண்டுமானால், வெறும் தோற்றங்களில் ஸத்தியபுத்தியைச் செலுத்தாமல் அவைகள் நீங்கிவிடும்படியான முயற்சியைச் செய்யவேண்டும். தோற்றங்கள் நீங்கினால்

கமட்டில் போகாது. வாஸ்தவப் பொருள் துலங்கும்படிக்குள்ள விசேஷ யத்தினத்தையுஞ் செய்யவேண்டும். இவ்வித யத்தினத்தைச் செய்யாவிடில், முன்ஞல் மறைவடைந்த தோற்றங்கள் மறுபடியும் தோன்றிக்கொண்டேயிருக்கும். 'பொய்யான தோற்றங்கள் நீங்குவதற்கும், உண்மையான பொருள் விளங்குவதற்கும், செய்யப்படுகிற முயற்சிகளே உண்மைப்பார்வை முயற்சிகளாகும்' காணப்படுகின்றதும் அழியக்கூடியதுமான தோற்றங்களடங்கிய இப்பிரபஞ்சம் பூரா வும் மித்தியையென்றும், ஸகலத்திற்தும் அதிஷ்டானமாகிய ஆத்ம-வஸ்து ஒன்றுதான் உண்மைப் பொருளென்றும், அது ஸச்சிதானந்த-ரூபியென்றும், அதுவே நாமென்றும், வேதத் தின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. எப்படி முன் உதாஹரணத்தில் உண்மைப் பொருளை மறைத்துக்கொண்டும், உண்மையில்லாத தோற்றங்களை வெளிக்காட்டிக்கொண்டும் கண்ணுடி மனிதனை மோஹப்படுத்தி வருகின்றதோ, அப்படியே ஆத்மப்பொருளைக் காணவொட்டாமல் செய்துகொண்டும், மனதுடன் கூடிய இந்திரியங்களின் விஷயங்களாகிய மித்தியா பூதத் தோற்றங்களை தன்னிடத்தில் வெளிக்காட்டிக்கொண்டும் மாயையென்ற பிரகிருதி ஜீவனை பிரமிக்கச் செய்துவருகின்றது. எவ்விதம் பிரதிபிம்பங்களை ஒரு பொருட்டாகவே எண்ணுமலும், கண்ணுடியின் இருப்பையும் தன்மையையும் கவனிக்காமலும், நன்ருய் உற்றுப்பார்ப்பதான முயற்சியைச் செய்து எதிரிலுள்ள உண்மைப்பொருள்களை பார்க்கக்கூடுமோ, அவ்விதமாகவே கர்ம-பக்தி – ஜ்ஞானுப்பியாஸ – ரூபங்களான தகுந்த முயற்சி களின்பேரில் துச்சமான மித்தியாப் பிரபஞ்சத் தோற்றங்களை லக்ஷியஞ் செய்யாமல் தள்ளி ஒதுக்கியும் அத்தோற்றங்களுக் குக் காரணமான மாயையைக் கடந்தும், மாயாதீதமான உண்மைப் பொருளாகிய ஆத்ம வஸ்துவை ஸாக்ஷாத்கரித்துக் கொள்ளக்கூடும். இப்படி ஸாக்ஷாத்கரித்துக்கொள்வதுதான் முக்கியார்த்தத்தில் உண்மையான பார்வையாகும்;

இதற்கு ஸாதனமாயுள்ள மேற்கண்ட முயற்சிகள்தான் தர்ம-முயற்சிகளென்று சொல்லப்படுகின்றன. இந்த உண்மைப் பார்வையில் நோக்கங்கொண்டு உலக-திருச்ய-விஷயங்களை துச்சமாக பாவித்தும், ஆத்ம-ஸாக்ஷாத்காரத்திற்கு அனுகூல ஸாதனமாயிருக்கக்கூடிய விதமாகவே உலக-நடவடிக்கைகளை உபயோகப்படுத்தி நடந்துகொண்டும், அதற்கு முழுவதும் விரோதப்படக்கூடிய விபரீத நடவடிக்கைகளில் புத்தியைச் செல்லவிடாமல் தடுத்துக்கொண்டும், தர்ம-முயற்சிகளைச் செய்து வருவதே தார்மிகர்களின் முக்கிய காரியமாகும். இந்த உண்மைப் பார்வையில் உறுதியாயிருக்கின்ற நோக்கத்தையும் உண்மைப்பார்வையென்றே சொல்வதுண்டு, இதுவே தார்மிகப் பார்வை என்றும் சொல்லப்படுகின்றது. இவ்விதப் பார்வை தார்மிகர்களான ஹிந்துக்களைத்தவிர மற்ற யாருக்குங்கிடையாது. எங்கும் எல்லோரிடத்திலும் ஆத்மாவே உண்மைப்பொருளென்றும், அது ஒன்றேயல்லாமல் பலவல்லவென்றும், பிரபஞ்சத் தோற்றங்களுக்குக் காரணம் மித்தியாபூதமான மாயைதானென்றும், அம்மாயைக்கப்பால், அதாவது அதற்கு அதீதமாக ஆத்மா விளங்குகின்றதென்றும் ஹிந்துக்களல்லாதவர்களுக்குத் தெரியாதாகையால், அவர்களுக்கு உண்மைப் பார்வையேயில்லையென்பதும், பிரபஞ்சத் தோற்றங்களிலேயே ஸத்தியபுத்தியை வைத்து அவைகளிலேயே எப்போதும் நோக்கமுள்ளவர்களாயிருப்பதால் அவர்கள் மோஹப்பார்வையுள்ளவர்கள்தான் என்பதுமே நிச்சயம். அவரவர்களின் பார்வைக்குத் தக்கபடி அவரவர்களின் ஆசரணைகளும் வித்தியாஸப்படும். கண்ணுடியின் மீதுள்ள பிரதிபிம்பத்திலேயே ஸத்திய புத்தியுடன் திருஷ்டியுள்ளவர்களிடத்தில் கண்ணுடியின் ஸ்வரூபத்தையாவது கண்ணுடிக்கப்பாலுள்ள உண்மைப் பொருள்களையாவது தெரிந்துகொள்வதற்குள்ள முயற்சியே இருக்கமாட்டாது. பிரதிபிம்பத்தில் விபரீதமாய் போய்கொண்டிருக்கின்ற நேத்திர-விஷயப்போக்கை அனு

ஸரித்தே அவர்களின் திருஷ்டியும் சென்றுகொண்டிருக்கும். பிரதிபிம்பத் தோற்றங்களை விலக்கி உற்றுப்பார்க்கிற பிரயத்தினமே அவர்களிடமிராதாகையால், வாஸ்தவத்தில் உற்றுப் பார்ப்பவரின் திருஷ்டி தங்களுடைய திருஷ்டியைவிட வேறு என்பதும், தாங்கள் பார்த்துக்கொண்டிருப்பதை அவர் பார்க்க வில்லையென்பதும், அவர் பார்ப்பதை தாங்கள் பார்க்கவில்லை யென்பதுமான ஜ்ஞானமும் அவர்களுக்குக் கிடையாது. இதனாலேயே இப்பரத கண்டத்தில் இக்காலத்தில் ஹிந்துக் களின் ஆசாரணை விஷயமாக பலவித துர்-வியவஹாரங்களும், சச்சரவுகளும், தர்ம-விரோதமான கொடிய துர்ச்செய்கைகளும், அதிகமாய் மோஹப்பார்வையுள்ளவர்களிடம் காணப்படு கின்றன. சில முக்கிய உதாஹரணங்களை சற்று கவனிப்போம்.

3. மிலேச்சப்பார்வை

முன் காண்பிவித்த பிரகாரம் தார்மிகர்களே உண்மையான ஹிந்துக்களாயிருக்கிறபடியாலும், ஹிந்துவல்லாதவர் மிலேச்ச ரென்று கூறப்பட்டிருப்பதாலும், தார்மிகப்பார்வைக்கு எதிரிடையான மோஹப்பார்வையை மிலேச்சப்பார்வை யென்று இங்கு இப்பால் சொல்லிவரப்படும். இந்திரியங்களால் கிரஹிக்கப்படுவதே மிலேச்சப்பார்வையில் உண்மையென்று எண்ணப்பட்டிருப்பதால், இந்திரியத் தோற்றங்கள் வாஸ்த வத்தைத் துலக்கவில்லையென்றும், வாஸ்தவமும் ஸர்வா திஷ்டானப் பொருளுமான ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்துக் கொள்ளக்கூடிய யத்தினங்களே மனிதன் செய்யவேண்டிய காரியங்களென்றும், இவ்வித யத்தினங்களை யார் யார் எப்படிச் செய்தால் ஆத்ம தர்சனம் கிட்டுமென்றும், விபரமாய் போதித்து வருகின்ற சாஸ்திர வாக்கியங்களிலும் அவைகளை அனுஸரித்து வருபவர்களின் வார்த்தைகளிலும் மிலேச்சப் பார்வையுள்ளவர் களுக்கு விசுவாஸமில்லாமையும் துவேஷ-புத்தியும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலும்

அவர்களுக்கு "சாஸ்திரம்" என்ற சொல்லே கர்ண கடோரமாயிருக்கின்றது. சாஸ்திரங்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றனவென்று தெரிந்து கொள்ளக்கூடாத அஜ்ஞானிஸ்திதியிலிருந்து கொண்டே சிலர்கள் சாஸ்திரமெல்லாம் பிசகென்று மாத்திரம் பெருங்கூச்சலிட்டுக்கொண்டும், கண்ணில் பட்ட சாஸ்திர-புஸ்தகங்களைக் கொளுத்தி விடுவதான மூடச்செய்கையைச் செய்து கொண்டும் வருகின்றார்கள். சாஸ்திரத்தில் துவேஷபுத்தியிருந்தாலும் புஸ்தகங்களை நாசஞ்செய்தாலும் கெடுதலும் நஷ்டமும யாருக்கென்று அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. புஸ்தகங்கள் போய்விட்டால் சாஸ்திரம் போய்விடாது. தவிரவும் துவேஷ புத்தியுடன் கூடிய மிலேச்சப்பார்வையுள்ளவர்களின் வசத்தில் வரக்கூடிய சாஸ்திர புஸ்தகங்கள் நாசத்தை அடைவதே கோரத்தகுந்தது. உத்தம அதிகாரிகளால் படிக்கப்பட்டு அவர்கள் மூலமாய் ஸகல ஜனங்களையும் கடைத்தேறச் செய்து வைக்கக்கூடிய புஸ்தகங்கள் சந்தைக்கடைக்கு வந்து சீர் குலைந்து போகும்படி ஏற்பட்டால் அப்புஸ்தகங்களே இல்லாமல் போகும்படி செய்வதும் ஒருவிதத்தில் நன்மையென்றே சொல்ல வேண்டும். உண்மையான தார்மிகர்களின் உபயோகத்திலிருக்கின்ற புஸ்தகங்கள் மற்றவர்களுக்குக் கிடைக்கப் போகிறதில்லை. அப்படியே கிடைத்து சிலதுகள் பலாத்காரமாய் நாசப்படுத்தப்பட்டாலும், தார்மிகர்களின் புத்திகளில் ஸ்திரமாய் பற்றியிருக்கின்ற சாஸ்திரக்கொள்கைகளைக் கொளுத்திவிட முடியாது. இப்பூமியில் மூடத்தனமான துர்ச்செய்கைகள் எவ்வளவு நடந்தாலும், ஸகல சாஸ்திரங்களும் எந்த மூலகாரணத்திலிருந்து வெளிப்பட்டனவோ அவ்வீசுவரரை மிலேச்சப்பார்வையுள்ளவர்கள் நோக்கப்போகிறதுமில்லை நாசஞ்செய்யவும் முடியாது. ஆதலால், சாஸ்திரங்களுக்கு எக்காலத்திலும் கெடுதல் ஏற்படக்கூடியதல்ல. எந்தக் காலத்தில் சாஸ்திர-புஸ்தகங்கள் அபூர்வமாக பெரியோர்

களிடம் மாத்திரமிருந்து வந்தனவோ, அந்தக்காலத்தில்தான் சாஸ்திர-வாக்கியங்களில் விசுவாஸமும் அவைகளின் பிரகாரம் தவருமல் ஆசரணைகளும் ஜனங்களிடம விசேஷமாய் காணப் பட்டன. அச்சுப்போட்டுப் புஸ்தகங்கள் அதிகமாக வெளிப் பட்ட பின்பு அவைகளில் மதிப்பும், சிரத்தையும் குறைந்து போனதுடன் அவைகளை வாசிப்பவர்களும் அனுஸரித்து நடந்துவருபவர்களும் மிகவும் குறைந்துபோய்விட்டார்கள். ஆகையால், முன் சொல்லியபடி விபரீதக் கொள்கைகளையுடைய அனதிகாரிகளின் திருஷ்டியில் தென்படக்கூடிய சாஸ்திர புஸ்தகங்களெல்லாம் எவ்விதமாகவாவது நாசமடைவதும் முடிவில் அனுகூலந்தான்.

மிலேச்சப்பார்வை ஸ்திரப்பட்டுவிட்டவர்களுக்கு அப்பார்வை யில் விசேஷமாய் தேர்ச்சியடைந்தவர்களே மஹான்களாகக் காணப்படுவார்கள். இப்படிப்பட்ட மஹத்வத்தை சீக்கிரத்தில் அடைவதும் சுளுவாதலால், இப்பரத கண்டத்தில் எல்லா உள் நாடுகளிலும் ஏராளமாய் இம்மஹான்கள் தலையெடுத்து பெரும்பாலும் மற்ற ஜனங்களிடத்திலும் அதே பார்வையை விருத்தி செய்வித்து வருகின்றூர்கள் இந்தப்படி ஹிந்துக் களுக்குள்ளாகவே மிலேச்சப்பார்வை அதிகமாய் விருத்தி செய்யப்பட்டு வந்திருப்பதால், இங்கலீஷ்காரர் முதலான பிறவி மிலேச்சர்கள் ஹிந்து தார்மிகப்பார்வைக்கும் தங்களுடைய பார்வைக்கும வித்தியாஸமிருப்பதை அறிந்து கொள்ளாமலும், வித்தியாஸமிருப்பதாகக் கொஞ்சம் தெரிந்து கொண்டவர்கள் கூட தார்மிகப்பார்வையின் மேன்மையை விசாரித்துத் தெரிந்து கொள்ளாமலும், தார்மிகப்பார்வை சிலர்களிடந்தானிருக்கிற தென்ற பாவனையுடன் அதை அலக்ஷியஞ்செய்து கொண்டும், அப்பார்வைக்கும் சாஸ்திரப்படிக்குள்ள கொள்கைகளுக்கும் ஆசரணைகளுக்கும் போதுமான மதிப்பைக் கொடுக்காமலே நடந்து வருகின்றூர்கள். முன் கண்டபடி தார்மிகர்களின் ஸகல நடவடிக்கைகளிலும் மத ஸம்பந்தமிருந்து வருவதினுல்

இவர்களுக்கு மதமே முக்கியமாயிருக்கையில், மோஹப்பார்வை யுள்ளோர்களிடத்தில் "மத ஸம்பந்தம்" என்று சொன்னால் இதுவே அவர்களுக்கு பிராந்தி-விஷயமாகத் தோன்றுகிறது. ஹிந்து-மதத்தைத் தவிர உலகத்திலுள்ள மற்ற எல்லா மதங்களிலும் மிலேச்சப்பார்வையே உறுதிப்பட்டு வந்திருப்பதினாலும், முன் சொல்லிய உண்மைப்பார்வை-விபரமே அம்மதப்பிரவர்த்தகர்களுக்குக்கூட தெரிந்திருந்ததாக வெளியாகாததினாலும், ஹிந்து-தார்மிகர்களின் மதப்பார்வையும் தங்களுடைய மதப்பார்வைபோல்தானென்று மற்ற மதஸ்தர்கள் எண்ணிக்கொண்டும், மனித-நடவடிக்கைகளில் அவர்கள் எது சரியென்று எண்ணுகின்றார்களோ அதுவே ஹிந்துப் பார்வையிலும் சரியாயிருக்கவேண்டுமேயல்லாமல் சில விஷயங்களில் வேறு விதமாய் தார்மிகர்களால் எண்ணப்பட்டால் அது பிசகுதானென்று தீர்மானித்துக்கொண்டும், அனேகமாய் தர்மாசரணையிலிருந்து விலகிவிட்ட ஹிந்து பாஷண்டர்களுடன் ஒற்றுமையாயிருந்து தர்மங்கள் மேன்மேலும் கெடும்படியான காரியங்களை இப்பால் அதிகமாய்ச் செய்துவரத் தலைப்படுகிறார்கள். இவ்விதம் ஒற்றுமையாயிருப்பவர்களில் அனேகர்களும் அப்பாஷண்டர்களில் சிலர்களும்காலவசததினால் ராஜாங்கத்தை நடத்துபவர்களாகவுமிருப்பதால் இவ்வார்ய-தர்ம-தேசத்திலேயே தர்ம-நோக்க முள்ளோர்கள் ஒதுங்கியிருந்து பிழைக்கவேண்டியதாயிருக்கின்றது. தார்மிகர்கள் ஒதுங்கிப்போனாலும், அவர்களை அதர்ம கொள்கையுள்ளவர்கள் பின் தொடர்ந்து ஹிம்ஸை செய்வதற்குள்ள முயற்சிகளையுஞ் செய்து வருகின்றார்கள். அம்முயற்சிகளுக்கு ராஜாங்கத்தார்களே தப்பான சட்ட திட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு உதவி செய்து வரத்தொடங்கிவிட்டால், நீதியைக்கருதி ஈசுவரனைத் தவிர வேறு யாரிடம் தார்மிகர்கள் முறையிடக்கூடும்? அந்த நீதி எப்படிப்பட்டதென்பதை ஒரு முக்கிய விஷயமாகிய விவாஹத்தை உதாஹரித்துக் கொஞ்சம் வெளிப்படுத்துவோம்.

4. விவாஹத்தின் உத்தேசம்

காம - பூர்த்தியையும் லௌகிக - ஸௌகரியங்களையும் உத்தேசித்தே உலகமெங்கும் மிலேச்சப்பார்வையில் ஸ்திரீ-புருஷர்களுக்குள் விவாஹம் நடத்தப்பட்டு வருகின்றது. ஹிந்து-தார்மிகர்களுக்குள் நடத்தப்படுகின்ற விவாஹம் அப்படியல்ல. தார்மிகப் பார்வையில் மனித-ஜன்மத்தின் முக்கியமான உத்தேசம் திருச்ய-பிரபஞ்சத்திற்கும் அதன் காரணமான மாயைக்கும் அதீதமாயுள்ள ஆத்மப்பொருளை ஸாக்ஷாத்கரித்து பிரபஞ்ச-துக்கத்திலிருந்து விமோசனத்தை அடைந்து பேரானந்தத்தில் ஸ்திரமாயிருப்பதே. இவ்வித விமோசனமே பரம-புருஷார்த்தம். இதற்கு ஸாதனமாயிருக்கின்ற அவாந்தர-புருஷார்த்தம் தர்மம். தர்மத்தைக் கைக்கொள்வதினால் ஜ்ஞானமுண்டாகி ஸம்ஸார-பந்தத்திலிருந்து விமோசனம் ஸாதித்துக் கொள்ளப்படுகின்றது. முக்கியமாய் இவ்வித தர்ம-புருஷார்த்தம் புருஷன் ஸ்திரீ இருவர்களுக்கும் ஸித்திக்கும் பொருட்டே தார்மிகர்களுக்குள் விவாஹம் நடந்தேறி வருகின்றது. தர்ம-ஸித்தியே இவ்விவாஹத்தின் பிரதான உத்தேசம். காம-பூர்த்தியும் லௌகிக-ஸௌகரியங்களும் கீழான ஸாமான்ய பலன்களேயல்லாமல் முக்கிய உத்தேசங்களல்ல. காம-பூர்த்தியில் கொஞ்சங்கூட உத்தேசமில்லாமலே விவாஹத்தைச் செய்துகொள்ளலாம். ஜரத்காரு முதலான மஹான்களின் விவாஹங்களில் இவ்வுத்தேசமிருந்திருப்பதேயில்லையென்று வெளியாகின்றது. பின்னால் குறிப்பிடப் போகின்ற பிராஜாபத்யமென்று சொல்லப்பட்ட தார்மிக-விவாஹத்தின் கருத்து தர்மாசரணையைத் தவிர வேறல்லவென்றும் தெரியவருகின்றது. துவிஜ-புருஷர் உபநயன-காலத்தில் குருவை அடைந்து, பிரஹ்மோபதேசத்தைப் பெற்று தன் ஜன்மத்தின் முடிவான உத்தேசமென்ன, அதை ஸாத்தியப்படுத்திக் கொள்ளக்கூடிய மார்க்கம் எது, அம்மார்க்கத்தில் செல்லவேண்டியதற்குரிய ஸாதனங்கள் யாவை,

இந்த ஸாதனங்களைக் கைகூடச்செய்கின்ற உபாயங்கள் எவை, அவ்வுபாயங்களை உபயோகப்படுத்துவதற்குள்ள கிரமம் யாது, இதெல்லாவற்றையும் பிரஹ்மசரியாசிரமத்தில் நன்கு ஆராய்ச்சி செய்து தெரிந்துகொண்டு அப்பால், ஸமாவர்த்தனத்தினுல் அவ்வாசிரமத்தை முடித்துக்கொண்டு, தான் முன்னுல குரு-முகமாகவும் புஸ்தகங்களிலிருந்தும் தீர்மானமாய்த் தெரிந்துகொண்டிருக்கின்ற விஷயங்கள் பூராவையும் தன்னுடைய நேர் அனுபவத்திற்குக் கொண்டுவருவதற்காக தர்மாப்பியாசத்தின் பொருட்டு இரண்டாவது ஆசிரமமாகிய கார்ஹஸ்தியத்தில் விவாஹம் மூலமாய் பிரவேசிக்கின்ருர்.

சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட பிரவிருத்தி-நிவிருத்தி தர்மங்களுக்குள் முதலாவதாக அனுஷ்டிக்கப்படவேண்டிய பிரவிருத்தி-தர்மங்களின் அப்பியாஸங்கள் பெரும்பாலும் தர்ம-பத்னியின் ஒத்தாசையை அபேக்ஷிக்கிறவைகளாயிருக்கின்றன. புருஷனுல் மாத்திரம் அவைகள் பூர்த்தியாகக்கூடியவையல்ல. ஆதலால் விவாஹத்தினுல் ஒரு கன்னிகையை தன் பத்னியாகஸ்வீகரித்துக்கொண்டு, அவளுக்கு தர்ம-கைங்கரியத்தில் அப்பியாஸத்தை ஏற்படுத்திக்கொடுத்து அவளுடைய ஒத்தாசையின்பேரில் பிரவிருத்தி - தர்மங்களைச் செய்து வருகின்ருர். அவ்வொத்தாசைக்குப் பிரதிபலனுக அந்த தர்மாசரணைகளினுலுண்டாகின்ற புண்ணிய-பலன்களில் சரி-பாதி-பாகம் அந்த பத்னிக்கு ஸித்தித்துவிடுகின்றது. இவ்விதமாக தர்மாசரணைகளிலும் அவைகளின் பலன்களிலும் ஸ்திரீ-புருஷர்கள் ஸம-பாத்தியஸ்தர்களாக இருந்துகொண்டு பிரவிருத்தி-தர்மஸித்தியினுல் சித்த-சுத்தியையும் மேல் அபரோக்ஷாத்ம-ஜ்ஞானப் பிராப்தியின் பொருட்டு மற்றுமுள்ள ஸாதன-ஸம்பத்துக்களையும் கிரமமாகப் பெற்று, இருவரும் முடிவில் மோக்ஷத்தை அடைவதற்குள்ள உபாயத்தை ஸாதித்துக்கொள்கிருர்கள். புருஷனுக்கு ஒத்தாசையாக இருந்து வருவதே ஸ்திரீக்கு தர்மாசரணையே தவிர அவளுக்குத்

தனிமையான தர்ம-காரியங்கள் கிடையாது பெரும்பாலும் வேத-மந்திரங்களை உச்சரித்துக்கொண்டே தர்மாசரணை நடக்க வேண்டியதாயிருப்பதாலும், வேதோச்சாரணத்தில் துவிஜ-ஸ்திரீக்குங்கூட அதிகாரமில்லையாதலாலும், அவ்வித தர்மாசரணையில் நேராக அதிகாரியாயிருக்கின்ற துவிஜ-பர்த்தாவுக்கு உதவியாயிருப்பதே அவளுக்கு ஸ்வ-தர்மமாகும். இப்படியே வேதோச்சாரணத்தில் அதிகாரமில்லாத சூத்திரருக்கும் துவிஜர்களின் தர்மாசரணைகளுக்கு அனுகூலமாயிருந்து ஒத்தாசை செய்வதைத் தவிர தனியான கர்மாககள் கிடையாது. இந்தப்படி ஒத்தாசையாயிருக்கின்ற பர்த்தாவுக்கு கைங்கரியஞ் செய்வதே சூத்திர-ஸ்திரீக்கும் ஸ்வ-தர்மமாகும். இப்படிக்கெல்லாம் முக்கியமாய் பர்த்தாவின் தர்ம-காரியங்களுக்கு உதவி செய்து கிரமம் கிரமமாய் தர்ம-மோக்ஷங்களை ஸித்தித்துக்கொள்வதற்காகவே ஹிந்து-ஸ்திரீகளுக்கு விவாஹம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இதனுலேயே, விவாஹமான ஸ்திரீகள் தர்ம-பத்னிகளென்று சொல்லப்படுகின்றுர்கள். இவ்விதமாக, புருஷனுடைய அவசியமான தர்மாசரணைகளில் ஒத்தாசை செய்து வருவதற்கு பத்னீயும், ஸ்திரீக்கு தர்ம-பலன் ஸித்திக்கும் பொருட்டு பர்த்தாவும், விவாஹத்தினுல் ஒன்று சேர்த்துவிடப் படுகின்றுர்கள்.

இந்தப்பிரகாரம் தர்ம-ஸித்திக்காகவே விவாஹம் நடந்தேறி வருவதில், உலகத்தில் எந்நாளும் தர்மாசரணை பாரம்பரியக் கிரமமாக நடந்தேறிவரும்பொருட்டு தம்பதிகள் ஸந்ததி விருத்தியைச் செய்துவருவதும் முக்கியமென்று எண்ணப்பட்டு வந்திருக்கின்றது. ஸாமான்ய திருஷ்டியில் தர்மபரம்பரையின் அபிவிருத்தி உலக நன்மையின்பொருட்டு முக்கியமாயிருப்பதுடன் அது பிதுருக்களின் நன்மைக்கும் காரணமாயிருப்பதினுல், புத்திரோத்பத்தி அவசியமென்றும் வற்புறுத்தி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனுல் பரமார்த்தத்தில் மாத்திரம் திருஷ்டியுள்ளோர்களுக்கு அது அவசியமில்லை

யென்றும் தெளிவாய் வேதத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுமிருக்கின்றது. ஆகையால், ஸந்ததியையுண்டாக்குவது அவசியமா இல்லையாவென்பது அதிகாரி-தாரதம்மியத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம். அவசியமென்று ஏற்படுகிற இடத்திலும், தன்னுடையவும், பிதுருக்களுடையவும், உலகத்தினுடையவும் தர்ம-ஸம்பந்தமான நன்மையைக்கருதி புத்திரோத்பத்தி அவசியமென்று சொல்லப்பட்டதேயொழிய காம-பூர்த்தி-ஸம்பந்தமாகச் சொல்லப்பட்டதல்ல. காம-பூர்த்திக்காகச் செய்யப்படுகின்ற விவாஹம் தர்ம-விவாஹமே யாகமாட்டாது. அது சாஸ்திரத்தில் தூஷிக்கப்பட்டுமிருக்கின்றது. எவ்விதத்திலும் தார்மிகர்களுக்குள் தர்ம-ஸித்தியே விவாஹத்தின் முக்கிய உத்தேசமென்பதே உண்மை.

5. தர்மாப்பியாஸம்.

ஹிந்துக்களுக்குள் வேத-முறைப்படி ஜாதி-பேதங்கள் இருந்து வருவதில், பிராஹ்மணன் தர்மங்களை தான் ஆசரித்து வருவதுடன் மற்ற ஜாதியார்களுக்கும் தர்மங்களை உபதேசித்து அவர்களும் ஆசரித்துவரும்படி செய்யவேண்டிய பொறுப்பையும் அவர்களுக்கு தர்மாசரணையை நடத்திவைக்க வேண்டிய கடமையையும் வஹித்துவருகிறபடியாலும், இவ்வித ஸ்தானத்திலிருப்பவரிடம் தர்மாசரணை மிகவும் நன்றாயிருந்துவர வேண்டியதவசியமானதாலும், பிராஹ்மண-ஜாதியில் நடந்தேறி வருகின்ற விவாஹம் எப்போதும் தார்மிக-விவாஹமாகவே நடத்தப்படவேண்டியது முக்கியம். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட எட்டுவித விவாஹங்களில் உத்தமமும் கிரமமுமான விவாஹங்களாகிய பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், இந்நான்கு மாத்திரம் பிராஹ்மணனுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. காந்தர்வாதி கீழான நான்கு விவாஹங்களும் பிராஹ்மணனுக்கு நித்தியமென்றும், அவைகளை அவர் செய்யவே கூடாதென்றும் சாஸ்திரத்தில் வியக்தமாய் சொல்லப்

பட்டிருக்கின்றது. காந்தர்வாதி விவாஹங்கள் க்ஷத்திரியாதி மற்ற ஜாதியார்களுக்கு அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குள் நடந்தேறி வந்திருப்பதால் ஸ்திரீ ருதுவான பின்பும் விவாஹம் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. முக்கியமாய் பிராஹ்மண-ஜாதியில், விவாஹத்தினால் ஸ்திரீ புருஷனுடன் கூட தர்மாசரணையில் பிரவேசிப்பிவிக்கப் படுகின்றாள். பாணிக்கிரஹணகாலம் முதலே தர்ம-கைங்கரியத்தின் அப்பியாஸத்தில் புருஷனால் தயார் செய்யப்பட்டு வருகின்றாள். புருஷன் உபநயன காலத்தில் குருவை அடைந்து ஜ்ஞானப்பியாஸத்தில் பிரவேசிப்பதுபோல், ஸ்திரீ விவாஹ காலத்தில் புருஷனை குருவாக அடைந்து தர்மாப்பியாஸத்தில் பிரவேசிக்கிறாள். ஏற்கனவே புருஷன் பிரஹ்மசரியாசிரமத்தில் செய்யப்பட்ட ஜ்ஞானப்பியாஸத்தினால் வித்வானாயிருப்பதால், ஸ்திரீ தன்னுடைய தர்மாப்பியாஸ காலத்திலேயே சிறுகச் சிறுக புருஷனால் ஜ்ஞான விஷயத்திலும் அப்போதைக்கப் போது போதிப்பிவிக்கப்பட்டு தெளிவை ஏற்படுத்திக்கொள்ளக் கூடும். எப்படி புருஷனுடைய முன் பரோக்ஷ-தர்மஜ்ஞானம் பின்-தர்மாசரணையால் ஸ்வானுபவத்திற்குக் கொண்டுவரப் படுகின்றதோ, அப்படியே புருஷனுக்கு ஒத்தாசையாக நடத்தி வரப்படுகின்ற ஸ்திரீயின் தர்மாசரணைகளும் புருஷனுடைய வித்தியோபதேசங்களினால் தெளிவுபடுத்தப்படுகின்றன.

இயற்கையாகவே புருஷப் பிறவிக்கு ஜ்ஞானப்பிடிமானமும் (Intellectuality) ஸ்திரீ-பிறவிக்கு உணர்வுப்பிடிமானமும் (Emotionality) அதிகமாக ஏற்பட்டிருக்கிறபடியாலும், ஆரம்பத்தில் புருஷனுக்கு உபநயனத்தினால் ஜ்ஞானப்பியாசத்திலும் ஸதிரீக்கு விவாஹத்தினால் தர்மாப்பியாஸத்திலும், பிரவேசங்களைச் செய்து வைத்து, அப்பால் புருஷனுடைய ஜ்ஞானம் தர்மாப்பியாஸத்துடனும், ஸ்திரீயின் தர்மாப்பியாஸம் ஜ்ஞானத்துடனும், சேர்க்கப்பட்டு இவ்விரண்டும் சேர்ந்தே முக்கிய உண்மைப்பார்வைக்கு நேர் ஸாதனங்களாக அத்புதமாய் அமைக்கப்படுகின்றன.

புருஷனுடையவும் ஸ்திரீயுடையவும் இவ்வித கூட்டு அப்பியாஸங்கள் சில வருடங்கள் தொடர்ந்து நடந்து வந்தால்தான் இருவர்களுடைய ஸ்வபாவங்களிலும் ஒரே விதமான ஸம்ஸ்காரம் நாளடைவில் ஏற்பட்டு பலபடட்டுவரும். அதாவது இருவரும் அடிக்கடி தர்மங்களை சேர்ந்து ஆசரித்துக்கொண்டும் அந்த தர்ம-விஷயமான தத்துவங்களையும் மற்றுமுள்ள விததியைகளையும் புருஷனிடமிருந்து ஸ்திரீ கிரஹித்துத் தெரிந்து கொண்டும், பர்த்தாவிடம் பத்னீக்கு ஈசுவர பாவனையும் குருபக்தியும் ஸ்திரப்பட்டு அவள் சுச்ரூஷை செய்து கொண்டும், புருஷன் பத்னீயிடத்தில் சிஷ்ய பாவனையுடனும் விசுவாஸத்துடனுமிருந்து தன்னுடைய நல்வழியில் அவளுக்குத தேர்ச்சியை உண்டாக்கிக் கொண்டும் வந்தால் கூடிய சீக்கிரத்தில் இருவர்களிடத்திலும் ஒரே விதமான ஸ்வபாவங்களும், எண்ணங்களும், கொள்கைகளும் பலப்பட்டு வருவதுமல்லாமல் இருவர்களுக்குள்ளும் பரஸ்பரம் ஏகத்வ பாவனையும் உறுதிப்பட்டுக் கொண்டேவரும் இவ்வித ஏகத்வம் ஸ்திரீ ருதுவாவதற்கு முன்பாகவே ஸித்தித்து விடவேண்டியது மிக்க அவசியம். சரீரப்புணர்ச்சியில் ஜ்ஞாபகத்துடன் ஏற்படக்கூடியதாக மிலேசசக் கொள்கையில் சொல்லப்படுகின்ற ஏகத்வம் உண்மையான ஏகத்வமல்ல. அது நிலையற்றதும் அசுத்தமாயுமுள்ளது. அங்கு ஏகத்வ பாவனையென்பது மோஹத்தைத்தவிர வேறல்ல. உண்மையான ஏகத்வம் தார்மிக-தம்பதிகளுக்குள்ளேதான் ஏற்படக்கூடியது. ருதுவாகிறதற்கு முன்னுலேயே பெண்களுக்கு மேலே கண்ட படி மனேபாவனைகளும் விசேஷ யோககியதையும் உண்டாகிவிடக் கூடுமாவென்று ஸந்தேஹிக்கக்கூடியவர்கள் செம்மையாய் உஷஸ்தியுபாக்கியான-தத்வங்களை தெரிந்து கொண்டால் தெளிவை அடைந்து விடுவார்கள்.

6. க்ஷேத்திர சுத்தி

மேற்சொல்லியபடி உண்மையான ஏகத்வம் ஸித்தித்த பிறகுதான் நிஷேகத்தினுல் குல விருத்தியின் பொருட்டு

புருஷனிடமிருந்து ஸந்ததி பீஜத்தைப்பெற்றுக் கொள்வதற்கு பதனீ யோக்கியதை யுள்ளவளாகிறாள். அவள் ருதுவாவதற்கு முன்பாகவே இவ்வித யோக்கியதையை ஸம்பாதித்திருந்தால் தான் ருதுவான பிறகு முன் குறிப்பிட்ட சாஸதிரப்படிக்குள்ள ஸமாவேசனத்தை ஆசரிப்பதற்கும் அப்பால் நிஷேகத்தைச் செய்துகொள்வதற்கும் தகுதியுள்ளவளாகக் கூடும். ருது காலததிற்கு முன்னமேயே பர்த்தாவிடத்தில் தீவ்ரமான பக்தியும், தர்மாப்பியாஸத்தில் உறுதியான ஊக்கமும், மனஸில் களங்கமற்ற சுத்தியும் ஸித்தித்திருக்கிறவளுடன் தான் ருதுவானதற்க்கப்பால் ஸமாவேசனக்கிரியையை விதிப் படி நடத்த ஸாத்தியப்படக்கூடியது. தார்மிகர்களுக்கு ஸமா வேசனம் விதிக்கப்பட்டிருப்பதினாலேயே, பெண் ருதுவாவதற்கு வெகு காலத்திற்கு முன்னாலேயே, மேற்கண்ட மூவகை ஸித்தியின் பொருட்டு, விவாஹமாக வேண்டுமென்பதே நிச்சயம் மேலும், உலகத்தில் தார்மிக-விதை அபூர்வமான விதை-இவ் விதையை சுத்தப்படாத க்ஷேத்திரத்தில் விதைத்து வீண் படுத்த லாகாது. ஸாமான்ய சப்பாத்தி விதையை எங்கு எறிந்தாலும் அது உடனே வேர்பிடித்து வளர்ந்துவரும். உயர்ந்த விதை முளைக்கவேண்டுமானால், சில காலத்திற்கு முன்பாகவே நல்ல பூமியில் குழிவெட்டி, நல்ல மண் போட்டு, உரம் சேர்த்து காய வைத்து, பக்குவப்படுத்த வேண்டியதவசியம். இவ்வளவும் செய்து அப்பால் தகுந்த பருவகாலத்தில் அவ்விதையை ஊன்றினால் அது வேர்பிடித்து மரமாகவோ கொடியாகவோ ஓங்கி வளரும். இதுபோல், புருஷனும் தார்மிக ஸந்ததிக்குள்ள விதையை நிஷேகக்கிரியையினால் பத்னீயிடம் விதைப்பதற்கு சில வருஷங்களுக்கு முன்பாகவே அவளை கன்னிகை-பருவத்தில் பத்னீயாக அடைந்து அவளுடைய சரீரத்தையும் சித்தத்தையும் தன்னுடைய பலவித தர்மாசரணை காரியங்களினாலும் உபதேசங் களினாலும் கொஞ்சங்கொஞ்சமாக சுத்தப்படுத்தி சேராக்கிக் கொண்டும், தங்களிருவர்களுக்குள்ளும் பரஸ்பர உண்மையான

ஏகத்வத்தை ஏற்படுத்திக்கொண்டும் வருவதற்காகவே ருதுகாலம் வரையில் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ...டி புருஷன் 7-வயதுக்கப்பால் குருவை அடைந்து ப்ரஹ்மசாரியாகவேயிருந்து வித்தியாப்பியாஸத்தை பூர்த்திசெய்துகொள்கின்றானே, அப்படியே ஸ்திரீயும் 7-வயதுக்கப்பால் பர்த்தாவை அடைந்து ருதுவாவதற்கு முன்பாகவே தன் சுத்தியையும் தர்மாப்பியாஸத்தையும் உறுதிப்படுத்திக்கொள்கின்றாள். இப்படி தர்மாப்பியாஸம் முன்னாலேயே உறுதிப்பட்டிருந்தால் தான் அவள் ருதுவான காலம் முதல் தர்ம-க்ஷேத்திரமாயிருந்து தார்மிக-ஸந்ததி-பீஜத்தை தரிக்க யோக்கியையாயிருக்கக்கூடும். எல்லோருக்கும் 7-வயதில் பகுத்தறிவு ஆரம்பிப்பதால் ஸ்வபாவத்தில் புத்தி பல முள்ள (Intellectual) புருஷன் உபநயனத்தைச்செய்துகொண்டு பிரஹ்மாப்பியாஸத்தையும், உணர்வு பலமுள்ள (Emotional) ஸ்திரீ விவாஹத்தைச் செய்துகொண்டு தர்மாப்பியாஸத்தையும், அவ்வயதிலேயே அல்லது கூடிய சீக்கிரத்தில் தொடங்க வேண்டுமென்று கட்டாயமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்திரீயை உத்தேசித்து புருஷனிடம் புத்தி-பலமும், புருஷனை உத்தேசித்து ஸ்திரீயிடம் உணர்வு-சக்தியும், அதிகமென்பது மாறாத தத்துவம். அனேக ஸ்திரீகளிடம் புத்தி-கூர்மை விசேஷமாய், காணப்படலாம். ஆனால், இது தகுந்த ஸமயங்களில் அவர்களின் ஸ்வபாவ-ஸித்தமான உணர்வு-சக்தியினால் ஆழ்த்தப்பட்டுவிடக்கூடும். அவர்களின் புத்தி கூர்மையாயிருக்கலாமேயல்லாது, அது நிலைத்து நின்று சித்தத்தின் உணர்வுகளையும் அவைகளாலுண்டாகக்கூடிய விக்ஷேபங்களையும் எதிர்த்துத் தடுத்துவிடக்கூடிய பலம் அதற்குக் கிடையாது. யுத்தத்தில் சத்துருவை எதிர்த்து ஜயம்பெற வேண்டுமானால், பலமும் கூர்மையுமுள்ள பெரும் வாள் கத்தியால் ஓங்கி அடித்து நடத்தவேண்டிய காரியம். ஸமயத்தில் பின்னால் மடங்கிவிடக்கூடியதும் கூர்மை மாத்திரமுள்ளதும்

மான சிறு க்ஷௌரக்கத்தியினால் நடக்கமாட்டாது. புத்தி-பலம் புருஷனிடத்திலும், உணர்வு-பலந்தான் ஸ்திரீயிடத்திலுமிருக்கிற விஷயம் தத்துவ சாஸ்திரத்தினால் ஸந்தேஹமின்றி தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. மோக்ஷத்திற்கு அந்தரங்க ஸாதனமான ஜ்ஞான-ஸித்தியைப் பெறுவதற்கு புத்தி-பலம் அவசியம்; புத்தி-கூர்மை மாத்திரம் போதாது. புத்தி-பலம் வெகு ஜாஸ்தியாயிருந்துவிட்டால் கிருஹஸ்த-தர்மாசரணையில் பிரவேசிக்காமலே பிரஹ்மசரியத்திலிருந்தே மேலான நிவிருத்தி-மார்க்கங்களைத்தேடி அபரோக்ஷாத்ம-ஜ்ஞானத்தை ஸாதித்துக் கொள்ளலாம். இப்படிப்போல் உணர்வு-சக்தி வெகு ஜாஸ்தியாயிருப்பதினால் ஜ்ஞானத்தை ஸாதித்துக்கொள்ள முடியாது. அது அஜ்ஞானத்திலேயே முடிவாகும். புத்தி-பலத்தினால் அடக்கி சீர்படுத்தப்படாத உணர்வு-சக்தி அனர்த்தத்தையே விளைவிக்கும். இதனால்தான் ஸ்திரீகள் ஒவ்வொருவரும் ஜ்ஞானத்தைப்பெற்று நற்கதியை அடையும்பொருட்டு விவாஹஞ்செய்து கொள்ளவேண்டியதவசியமென்று சாஸ்திரத்தில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வித கட்டாயவிதி புருஷனுக்கு ஏற்படக்காரணமில்லை.

அத்தியாயம் 10

விவாஹ சட்டம்

தர்ம விபரீதம் 1.

இக்காலத்தில் பிரஹ்மசரியாசிரமத்தை சரியாக அனுஷ்டித்து வராமலும் தன்னை விதவானுகைச் செய்து கொள்ளாமலும் தான் விவாஹஞ் செய்துகொள்கிற கன்னிகையை தர்மாசரணையில் தேர்ச்சியடையும்படி செய்விக்க தனக்கு யோக்கியதையில்லாமலும், பெரும்பாலும் புருஷனல் விவாஹஞ்செய்யப்பட்டுவருவதால், சாஸ்திரப்படி விவாஹ தினத்திலேயே பத்னீ புருஷனுடைய கிருஹத்திற்குப் புறப்பட்டு போய் அங்கு அக்னி-கார்யாதி தர்மாசரணைகளுக்கு அனுஸரணையாக இருந்து வருவது அநேகமாய் நின்று போய் ருது காலத்திற்கப்பால் நிஷேகத்திற்தக் குறிப்பிடப்படுகின்ற தினம் வரையில் அவள் தன் பிறந்த வீட்டிலேயேயிருந்து வருகிறதான வழக்க மேற்பட்டிருக்கின்றது. ஆகிலும், ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருந்து விசேஷ ஹோமங்கள், ஔபாஸனம், ஸ்தாலீ பாகம் முதலான எந்த முக்கிய கர்மாக்கள் மிகவும் அவசியமாக நடத்தப்பட வேண்டியவைகளோ அக்கர்மாக்களை பர்த்தா இப்போதும் ஒருவிதமாய் பத்னீ யிருக்கின்ற இடத்திலேயே நடத்திக்கொண்டுதானிருக்கின்றார். இப்படி ஸ்திரீ பிறந்த வீட்டிலேயே யிருந்து கொண்டும், அங்கேயே அவசியமான தர்மங்கள் புருஷனல் நடந்தேறிக்கொண்டும் வருவதினலேயே விவாஹத்தின் முக்கிய உத்தேசம் தர்மாசரணையே தவிர சரீர-ஸம்பந்தமில்லையென்பது வியக்தமாய் துலங்கும். நிஷேக-காலம் முதல்தான் ஸ்திரீ-புருஷர்களுக்குள் சரீர ஸம்பந்த மிருக்கலாம் விவாஹம் ஸ்திரீயின் சுத்திக்காக ஏற்பட்டிருக்கிற வைதிக-ஸம்ஸ்காரம். நிஷேக மென்ற கர்ப்பாதானக்கிரியை பின்னல் வரப்போகிற ஸந்ததியின் சுத்திக்காக ஏற்படுகிற வைதிக-

ஸம்ஸ்காரம். தார்மிகர்களுக்குள் பத்னீ ருதுவானபின்பு ருது கால-ஸம்பந்தமான தோஷங்களை நிவிருத்தி செய்யும் பொருட்டு ருதுசாந்திக்கும் அதற்கப்பால் நிஷேகத்திற்கும் நாள் குறிப்பிடப்பட்டு அவ்விசேஷங்கள் பஹிரங்கமாய் நடத்தப்படுவதால் அக்காலம் வரையில் தம்பதிகளுக்குள் சரீரப்புணர்ச்சி இராதென்பதும் இருக்கக்கூடாதென்பதும் ஸித்தமே.

விவாஹம் வேறு, நிஷேகம் வேறு, என்பதையும், விவாஹத்தினால் மாத்திரம் சரீரப்புணர்ச்சியிருக்கக்கூடியதில்லையென்பதையும், அறிந்துகொள்ளாமல் மிலேச்சப்பார்வையுள்ளோர்கள், அப்பார்வையில் விவாஹமென்பதற்கு சரீரப்புணர்ச்சியிலேயே தாத்பரியமிருப்பதை முன்னிட்டு, தார்மிகர்கள் நடத்தி வருகிற விவாஹத்தினால் சிறு கன்னிகைகளுக்கும் அவர்களின் பர்த்தாக்களுக்கும் சரீர ஸம்பந்தமிருக்கக் கூடுமென்று மூடத்தனமாக எண்ணிக்கொண்டும், பெண்கள் 14-வயதுக்கு மேல் விவாஹஞ்செய்து கொள்வதுதான் நியாயமென்று பிதற்றிக் கொண்டும், தார்மிகர்களின் ஸர்வோத்தமமான தர்மாசரணைகளைக்கெடுத்து விடவும் ராஜாங்க-சட்டமூலமாக தார்மிகர்களை ஹிம்ஸை செய்யவும் தலைப்படுகிறார்கள். ராஜாங்கத்தார்களுக்கு அப்படிப்பட்ட சட்டத்தை ஏற்படுத்துவதற்கு அதிகாரமேயில்லை. ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்ற சட்டம் சட்டமேயாகாது ஹிந்துக்களின் திருஷ்டியில் ராஜாவுக்குள்ள உத்தம அதிகாரமெல்லாம் விஷ்ணுப் பிரதிநிதிஸ்தானத்தில் உண்டாயிருக்கின்றது. விஷ்ணுவின் நேர் ஆஜ்ஞா ரூபங்களாகிய சுருதி-ஸ்மிருதிகளுக்கு எதிரிடையாக ராஜாங்கத்தார் சட்டத்தையுண்டு பண்ணினால் அந்தப்பிரதிநிதிஸ்தானத்திற்குக் குறைவுண்டாவதே பலனேயல்லாமல், அச்சட்டத்திற்கு சட்டத்தன்மை ஸித்தித்துவிடமாட்டாது. ஈசுவர சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் மனித ராஜாங்கத்திற்கு சட்டமேற்படுத்த அதிகாரமுண்டு. அவைகளை மீறிச்செய்யப்பட்டது எவ்வகையிலும் ஊர்ஜிதத்திற்கு வரக்கூடிய சட்டமேயில்லை.

அச்சட்டத்தை ஆதாரமாக பாவித்துத் தார்மிகர்களுக்கு எவ்வித ஹிம்ஸை அல்லது தீங்கு ஏற்பட்டாலும் அதற்கு ராஜாங்கமும் முடிவில் ஜவாப்தாரி என்பதை ராஜாங்கத்தார்கள் உறுதியாய் அறிந்துகொள்ளவேண்டும். தார்மிகர்களின் பார்வையில் தர்மம் பெரியதே தவிர ராஜாங்கத்தார்களின் கட்டாயத்திற்காக அவர்கள் அதர்மத்தில் பிரவேசிக்கக்கூடியவர்களில்லை.

2. அதர்மம் செய்ய நிர்பந்தம்.

ருதுவாவதற்கு முன்பாக விவாஹமானுல் உடனே சரீரப் புணர்ச்சியுமிருக்கலாமென்று மேற்கண்டபடி கண்மூடித்தனமாய் எண்ணிக்கொண்டு ருது-காலத்திற்கு முன்னுலேயே கன்னிகைகளுக்கு அவசியமாய் நடத்தவேண்டிய சாஸ்திர-விதிப்படிக்குள்ள ஸம்ஸ்காரத்தை நடத்தவொட்டாமல் செய்வதற்கு யாருக்கும் அதிகாரங் கிடையாது. விவாஹம் ஒன்றுதான் ஸ்திரீகளுக்கு வேதோக்த-மந்திரங்களினுல் நடத்தப்படவேண்டிய ஸம்ஸ்காரம். இந்த ஒரு ஸம்ஸ்காரங்கூட சாஸ்திரத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களுக்கு நடத்தக்கூடாவிடில் அவர்களுடைய ஜன்மமே வீணுகப்போய்விடும். உண்மையான தார்மிகர்கள் இதற்கு இடங்கொடுக்கவே மாட்டார்கள். ருதுவாகிற காலம் வரையில் சரீரப்புணர்ச்சியே இருக்கக்கூடாதென்பதற்கும் இருக்கமாட்டாதென்பதற்கும் ஏகோபித்து எல்லா தார்மிகர்களும் சம்மதித்திருப்பார்கள். இதுவே அவர்களின் கொள்கை. இதுவே சாஸ்திர-ஸம்மதம். ருது காலத்திற்கு முன்பாக பெண்கள் விவாஹ ஸம்ஸ்காரத்தினுலும் அப்பாலுள்ள தர்மாசரணைகளினுலும் முன் சொல்லியபடி தர்மபத்னீகளாகும்படியாகத் தயார்செய்யப்பட்டு வருவதை தார்மிகர்கள் நிறுத்திவிடவேண்டுமென்று யார் சொன்னுலும் இது நடக்கக்கூடாத விஷயம். சாஸ்திரத்திற்கு நேர் எதிரிடையாக நடந்து பாபிகளாகிவிடவேண்டுமென்றும், இல்லாவிடில் ஜயிலுக்குப் போகவேண்டுமென்றும், அபராதம் செலுத்த

வேண்டுமென்றும் சொல்வது எவ்விதத்தில் நியாயமாகுமோ தெரியவில்லை. தர்மத்தை அறியக்கூடிய ராஜா இருந்தால் தர்மத்திற்கு விரோதமாக நடப்போர்களை தண்டிப்பது நியாய மாகும். தர்மத்தை அறியக்கூடாத ராஜாங்க விஷயத்தில் தர்மவிரோதிகளை தண்டிக்காமலிருப்பது நடக்கக்கூடிய தானாலும், தர்மத்தை சாஸ்திர-விதிப்படி, அனாதிகாலமாக நடத்திவந்திருக்கிற பிரசாரம், ஆசரித்து வருவதற்காக தார் மிகர்களை தண்டிப்பதானால் ஜெயிலுக்கு ஜெயில்தன்மையே நஷ்டமாகிவிடுமென்பதும், அவர்களிடமிருந்து அபராதம் வசூலிப்பதானால் அது தப்பான அபகரிப்பேயாகுமென்பதுமே நிச்சயம். தர்மத்தைத் தெரிந்து கொள்ளாதவர்கள் மற்றவர் களை அதர்மத்தைச் செய்யச்சொல்லி கட்டாயப்படுத்தினாலும், அவ்வதர்மத்தைச் செய்தால் அது கொடிய பாபமேயல்லாமல் நியாயமான காரியமாகிவிட மாட்டாது. உண்மையில் தார்மிகர் களாயில்லாமல், மேற்கண்ட போலிச்சட்டத்தை ஒரு முகாந்திர மாக வைத்து தர்ம விரோதமாக நடந்துவரக்கூடியவர்களைப் பற்றி வியவஹாரமேயில்லை. அவர்களின் அதர்ம நடத்தை பிரமாணமாகக்கூடியதுமல்ல. வாஸ்தவத்தில் தார்மிகர்களா யிருப்பவர்களின் விஷயத்தில், அச்சட்டமிருப்பதினால் அவர்களுடைய தர்மாசரணை கொஞ்சமேனும் மாறிப்போகவே மாட்டாதென்பது இங்கு உறுதியாகச் சொல்லப்படுகின்றது.

3. தர்மஹானியைக் கெடுக்கும்

இக்காலத்தில் புருஷனுக்கு விவாஹத்திற்கு முன் சரியான பிரஹ்மசரியமும் வித்யாப்யாஸமுமில்லாமலும் ஸ்திரீக்கு ருதுவாவதற்கு முன்பாக தர்மானுஸரணையில் சாஸ்திரப்படிக் குள்ள சரியான அப்பியாஸம் ஏற்படக்கூடாமலுமிருந்து வருவதினால், ஏன் ருதுவானபிறகே விவாஹத்தைச் செய்யக் கூடாதென்று சிலர் கேட்கலாம். பர்த்தா வித்வானாக இருந்து அவரால் பத்னீக்கு ருதுகாலத்திற்கு முன்பாக செய்து வைக்கப்

படவேண்டிய பூராநன்மைகளும் உண்டாகக் கூடாமலிருப்பது வாஸ்தவமானாலும், இக்காலத்திலும் சில முக்கிய நன்மைகள் பத்னீக்கு ஏற்பட்டு விடுகின்றனவென்பதில் ஸந்தேஹமில்லை. சரியான காலத்தில் செய்யப்பட்ட விவாஹமாகிய வேதோக்த ஸம்ஸ்காரத்தினால் அவளுக்கு சுத்தி ஸித்தித்து விடுகிறது. முன் குறிப்பிட்ட சில பிரதான தர்மாசரணைகளிலும் மற்றும் பித்ருகாரியாதிகளிலும் பர்த்தாவுடன் கூடவே அனுஸரணையாக இருந்து நடத்தி வருவதினால் தர்ம-ஸித்தியும் கொஞ்சமுண்டாகி விடுகின்றது. தவிரவும் முன் சொல்லியபடி விவாஹமில்லாமல் ருதுவாகிவிட்ட பிராஹ்மணப்பெண் சாஸ்திரப் பிரகாரம் விருஷளீ, அதாவது சூத்திரப்பெண்ணுக்கு ஸமானமாகிவிடுகிறபடியால், சாஸ்திரத்தில் குறிப்பிட்ட காலத்திலேயே பிராஹ்மணப் பெண்ணுக்கு விவாஹத்தை நடத்துவதினால் அவளுக்கு சூத்திரத்தன்மை வந்துவிடாமலும் அவளுடைய பரம்பரையின் பிராஹ்மண்யத்திற்கு ஹானியுண்டாகாமலும் காப்பாற்றப்படுகின்றது. அன்றியும், ருதுவாவதற்கு முன்பாகவே தன்னுடைய பர்த்தா இன்னாரென்று நிச்சயப்பட்டுவிடுவதால், அவர் விஷயத்திலேயே ஜ்ஞாபகம் சென்று கொண்டும், அவரே தன்னை இஹ-லோகத்திலும் பர-லோகத்தில் நற்கதியின் பொருட்டும் பாதுகாத்து ரக்ஷிக்கிறவரென்று எண்ணிக்கொண்டுமிருப்பதால், பின்னால் ருதுவான பிறகும் அப்பர்த்தாவின் ஜ்ஞாபகமே தொடர்ந்து பலப்பட்டுவருமே தவிர வேறுவிதமான ஆலோசனைக்கு இடமிராது. மேலும், மேற்சொல்லியபடி உலகத்தில் பெரும்பாலும் ஜனங்கள் கலிகாலக் கொடுமையினால் சாஸ்திர-விரோதமாக நடந்து வருவதை காரணமாக வைத்து, ஒருவரும் சாஸ்திரத்தை நன்றாக அனுஸரித்து நடந்து வரக்கூடாதென்று சொல்வது எவ்வகையிலும் நியாயமாகாது.

சாஸ்திர-வாக்கியங்களில் உறுதியான நம்பிக்கையும், தர்மாசரணையில் தீவ்ரமான ஊக்கமும், சோம்பல் முதலான

தோஷங்களில்லாமையும், இந்திரியப் போக்குகளுக்கு இடங் கொடுக்காமல் மனஸை அடக்கி நல்வழியிலேயே செல்லும்படி செய்வதும், அதர்ம-ஸஹவாஸங்களை தாக்ஷிண்யமின்றி விலக்குவதும், வெகு அபூர்வமாய் இக்காலத்தில் சிலர்களிடம் தான் காணக்கூடுமேயல்லாமல் ஸாதாரணமாய் காண முடியாது. இவ்வித அபூர்வமான சில தார்மிகர்களையும் மற்றவர்களைப்போல் கெட்டுப்போய் விடும்படி செய்வது ராஜாங்கத்தார்களுக்கு தர்மமல்ல. கலி மஹிமையினுல் தர்ம-விரோதிகளுக்கே உலகப்பார்வையில் ஏற்றமிருந்து வந்த போதிலும், தார்மிகர்களேயில்லாமல் பூராவும் உலகத்தைவிட்டு மறைந்து போகும்படி செய்துவிடக்கூடாது. எப்படி ராஜாங்கத்தார்களே அபூர்வமான பதார்த்தங்கள் அழிந்து போகாமல் அவைகளை ம்யூஸியத்தில் வைத்து பந்தோபஸ்து செய்தும், அபூர்வமான பிராணிகள் நசித்துப்போகாமல் அவைகளை பார்க்கில் வைத்து ஸம்ரக்ஷணை செய்தும் வருகின்றார்களோ அப்படியே இக்காலத்தில் வெகு அபூர்வமாயிருக்கக் கூடிய தார்மிகர்களையும், மற்றவர்களுடைய தொந்தரவுகளினுல் அவர்கள் ஸ்வ-தர்மங்களிலிருந்து நழுவி விழுந்து கெட்டுப்போகாமலிருக்கும்படி, பாதுகாத்து வருவதும் ராஜாங்கத்தார்களின் கடமையாகும்.

காலவசத்தினுல் அவர்களுக்கு இப்படிப் பாதுகாப்பதில் புத்தி உண்டாகாமல்போனுலும், அவர்களே தர்ம விரோதமான சட்டங்களையும் தப்பிதமான நடவடிக்கைகளையும் ஏற்படுத்திக் கொண்டு தார்மிகர்களையும் ஸநாதனமான தர்ம-மார்க்கத்தையும் கெடுத்துவிடாமலிருந்தாலே போதுமானது. மத-ஸம்பந்தத்தில் பிரவேசிப்பதாக உத்தேசமில்லையென்றும் ஜனங்களின் சரீர-ஸம்பந்தமான லௌகிக (Social) நன்மையைக் கருதி மாத்திரம் சட்டத்தை ஏற்படுத்துவதாகவும் ராஜாங்கத்தார் சொல்லிவந்திருக்கிறபடியால், சரீர-ஸம்பந்த விஷயமாக ஏதாவது நிபந்தனைகளை ஒருக்கால் ஏற்படுத்தலாமென்று

எண்ணக்கூடுமே தவிர, கேவல வைதிக-ஸம்ஸ்காரமும், அதாவது முழுவதும் மத ஸம்பந்தப்பட்டதும், சரீரப் புணர்ச்சி விஷயமே கொஞ்சங்கூட ஸம்பந்தப்படக்கூடாததும், புருஷர் களின் உபநயன-ஸ்தானத்தில் ஸ்திரீகளுக்கு தர்ம-மோக்ஷ-ஸித்திகளின் பொருட்டு விதிக்கப்பட்டிருக்கிறதுமான விவாஹ-விஷயத்தில் பிரவேசித்து அதைக்கெடுப்பது ராஜாங்க-நிலமைக்கு முற்றிலும் தகாத காரியம். மிலேச்சப்பார்வை யுள்ளோர்களால் எது விவாஹமென்று எண்ணப்படுகின்றதோ அந்த ஸ்தானத்தில் தார்மிகர்களுக்குள் நிஷேகக்கிரியைதான் நடத்தப்படுகின்றதேயல்லாமல் விவாஹமல்ல. "விவாஹம்" என்ற வார்த்தை பொதுவாயிருப்பது பற்றியே விபரீதஜ்ஞானம் ராஜாங்கத்தார்களுக்கு உண்டாயிருக்கக்கூடும். தார்மிக-விவாஹத்திற்கு ஒப்பாக ஹிந்துவல்லாதவர்களால் யாதொரு விசேஷமும் நடத்தப்படவில்லையென்றும், அது அவர்களின் விவாஹம் போலாகாதென்றும், அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது மிக்க அவசியம். எப்படி புருஷன் ஸ்திரீ-ஸங்கத்தைச் செய்துகொள்ளக்கூடிய வயது வருவதற்கு முன் பாகவே பால்யத்தில் ஆரம்பித்து சரீர-மனப்பயிற்சிகளைச் செய்துகொள்ளவேண்டுமோ அப்படியே ஸ்திரீயும் ருதுவாகி நிஷேகத்தினால் புருஷ-ஸங்கம் தனக்கு ஏற்படுவதற்கு முன் பாகவே பால்யத்தில் ஆரம்பித்து சரீர-மனதுகளின் சுத்திகளை யும் தர்மாசரணையில் தேர்ச்சியையும் ஸம்பாதித்துக் கொள் வதற்காகவே தார்மிக-விவாஹம் நடக்கிறதென்று ராஜாங்கத் தார்கள் அறிந்துகொள்ளவேண்டும். முடிவில் முன் சொல்லப் பட்ட முக்கிய உண்மைப் பார்வையின் ஸித்தியும் இவ்விவாஹத் தின் பலனாகும். பிறவியிலாவது கொள்கையிலாவது ஹிந்துக் களல்லாதவர்கள் தங்களுடைய மிலேச்சப்பார்வையை விலக்கிக் கொண்டு உண்மைப் பார்வைக்கு வழிதேடுவதற்கு சக்தர்களா யில்லாமல் போனாலும், உலகத்தில் ஒருவருக்கும் வேதப் படிக்குள்ள உண்மைப்பார்வையே இருக்கமாட்டாதென்பது, அது ஸித்திப்பதற்குள்ள மார்க்கத்தில் ஒருவரும் யத்தினஞ்

செய்யக்கூடாதென்றுவது, சொல்வது புத்தியுள்ளோர்களுக்கு அழகில்லே. பிறவிக்குருடருக்கு வெளிச்சம் தெரியவில்லே யானுல் வெளிச்சமே கிடையாதென்றுவது வெளிச்சத்தைப் பார்ப்பவரே கிடையாதென்றுவது அக்குருடர் சொன்னுல், அவ் வார்த்தைக்கு மதிப்புங்கிடையாது, அவ்வார்த்தைக்கு இணங்கி அதற்கு அனுகுணமாக கண்ணுள்ளோர் நடக்கப் போகிறது மில்லே.

4. அனுமரணம் கட்டாயமில்லே

வெகுகாலத்திற்கு முன்பாக ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் களின் ஆளுகையில் ஸதீ-விஷயமாகவும் விதவைகளின் புனர் விவாஹ-விஷயமாகவும் இரண்டு சட்டங்களேற்பட்டன. அச் சட்டங்களும் நியாயமில்லேயானுலும் அவைகளால் தார்மிகர் களுக்கு அதிகக்கெடுதல் உண்டாகிவிடவில்லே. இங்கு முதலில் ஸதீ-விஷயத்தையெடுத்துக்கொள்வோம். ஸ்திரீக்கு பர்த்தா வுடன் அனுமரணம் அவசியமென்று சாஸ்திரத்தில் விதிக்கப் படவில்லே. அது அவள் இஷ்டத்தைப் பொறுத்தது. அனு மரணம் ஏற்படாத ஸ்திரீக்கு பாபமாவது உலகத்தில் மதிப்புக் குறைவாவது கிடையாது. பாண்டு மஹாராஜாவுடன் அனு கமனஞ்செய்ய வேண்டுமென்று குந்தி, மாத்ரீ இரண்டு ஸ்திரீ களும் ஒருவருக்கொருவர் போட்டி செய்ததில், மாத்ரீயின் சரீர-ஸங்கமே பர்த்தாவின் மரணத்திற்குக் காரணமாயிருந்ததுபற்றி மாத்ரீயே செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டதின் பேரில் அவள் மாத்திரம் செய்தாள். அதனுல் குந்தீ-தேவிக்கு யாதொரு குறைவும் வந்துவிடவில்லே. முன் கண்டபடி உண்மையான ஏகத்வம் ஹிந்து-தம்பதிகளுக்குள் ஏற்படுவதால், பர்த்தாவின் காலம் சென்றவுடன் தன்னுடைய காலமும் சென்றுவிட்ட தாகவே பத்னீ எண்ணிக்கொண்டு பர்த்தாவுக்குப் பின்பு ஜீவித் திருக்கின்ற தன் சரீரத்தை துரும்பாக பாவித்து மனப்பூர்வமாய் தியாகஞ் செய்யத் துணிந்துவிடுகிருள். இப்படித் துணிவுடன் கூடிய ஸ்திரீயும் அனுகமனம் செய்துவிடாமலிருக்கும்படி

மற்றவர்கள் கூடியவரையில் அவளுக்கு போதிப்பிவிக்க வேண்டுமென்றே சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வித போதனையை கவனிக்காமல் அவள் எப்படியாவது சரீரத் தியாகத்தைச் செய்தே விடுவாளென்று உறுதியாய் தோன்றும் பக்ஷத்தில் அவள் செய்கின்ற தியாகம் துர்-மரண ரூபமாயில்லாமல் சாஸ்திர-முறைப்படி ஸத்-கதியின் பொருட்டே இருக்கட்டுமென்று, அதாவது, அவளுடைய ஸத்.கதிக்கு துர்-மரணத்தினுல் கெடுதலுண்டாகக் கூடாதென்று மாத்திரம் உத்தேசங்கொண்டு அனுமரண-விதானப்படி ஸதியால் அனுகமனம் செய்யப்படுவதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேற்கண்ட ஸதீ-விஷயமான சட்டம் ஏற்பட்டதினுல் சாஸ்திர-விதானப்படி அனுமரணம் நடக்காமல் நின்றுவிட்டதே தவிர, அனுமரணமே நின்றுபோய்விடவில்லை. முன் காலங்களிலும் அனுமரணம் மிகவும் அபூர்வமாகத்தான் நடந்து வந்தது. இப்போதும் சில சமயங்களில் அது நடந்து வருவதாக பத்திரிகைகள் மூலமாய் அடிக்கடி வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனுல், இக்காலத்தில் அச்சட்டமிருந்து வருவதால் பஹிரங்கமாய் அனுமரணம் நடக்கக்கூடாததுபற்றி, அது பல விதங்களில் துர்-மரண-ரூபமாகவே நடந்துவந்து ஸதீகளின் நற்கதி விஷயத்தில் இடைஞ்சலேற்பட்டிருக்கிறதைத் தவிர வேறல்ல. ஆகிலும், அனுமரணம் சாஸ்திரப்படி சட்டாயமில்லாததால் அது-விஷயமாக தார்மிகர்கள் விசேஷ முயற்சியெடுத்துக்கொண்டு அச்சட்டம் ரத்தாகும்படி செய்யவில்லை. அச்சட்டத்தை அனுஸரித்து அனுகமனத்தைச் செய்யாமலிருந்தால் தோஷமில்லை.

இப்போது விவாஹ-விஷயமாக ஏற்பட்டிருக்கிற சட்டம் அப்படியல்ல. இச்சட்டத்தையனுஸரித்து பிராஹ்மணப் பெண் ருதுவாகி விடக்கூடிய காலமாகிய 14-வயது வரையில் விவாஹத்தைச் செய்து வைக்காவிட்டால் பிதாவும் பாபியாகி விடுகின்றார், அப்பெண்ணும் சூத்திரப்பெண்ணுக்கு துல்யமாகி

விடுகின்ருள், இதனுல் அந்த பிதாவின் குலமும் ருதுவானபின் விவாஹத்தைச் செய்து கொள்கிற பர்த்தாவின், அதாவது, அப்பெண்ணின் குலமும் இரண்டும் கெட்டுப்போய் விடுகின்றன; உலகத்தில் உண்மையான பிராஹ்மண்யத்திற்கும் அதன் மூலமாய் ஆர்ய-மதத்திற்குமே நாசமேற்பட்டு விடக்கூடியதாயிருக்கின்றது. இனி மத விஷயத்தில் ராஜாங்கத்தார்கள் பிரவேசிக்க மாட்டார்களென்ற விக்டோரியா மஹாராணியின் 1858-ம் வருஷத்திய பிரதிஜ்ஞைக்கு இச்சட்டம் நேர் விரோதமாயிருக்கிறது. 1830-ம் வருஷத்தில் ஸதீ விஷயசட்டமும் 1856-ம் வருஷத்தில் விதவைகளின் புனர் விவாஹ-விஷய சட்டமும் மேற்கண்டபடி ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்களால் ஏற்படுத்தப்பட்டவைகளேயன்றி ராஜாவின் அல்லது ராணியின் நேர் ஆளுகையில் ஏற்பட்டவையல்ல. அன்றியும், அவைகளால், முன் சொல்லியதும் பின்னுல் சொல்லப்போகிறதுமான முகாந்திரங்களினுல், விசேஷமாய் தர்மத்தை நாசப்படுத்தக்கூடிய கெடுதல் உண்டாகவில்லை. ஆகையால், அவ்விரண்டு சட்டங்களும் பின்னுல் உறுதிப்பட்டு வந்திருப்பதையும் தார்மிகர்கள் உபேக்ஷிசெய்து ஆக்ஷேபிக்கவில்லை. ஆர்ய-மதத்தையே அழித்து விடக்கூடியதாயிருக்கின்ற இப்போதுள்ள விவாஹ-விஷய சட்டமோவெனில் மிகவும் விபரீதமாயுள்ளது. இது ராஜாங்க சட்டபுஸ்தகத்தில் காணப்படுகிறவரையில் ராஜாங்கத்தார்கள் விக்டோரியா மஹாராணிக்கும் ஈசுவரருக்கும் த்ரோஹஞ்செய்வதாகவே ஏற்படுவதுந்தவிர இது ராஜநீதிக்கே மாறக்கூடாத பெரிய களங்கமாகவேயிருந்து வரும்.

5. விவாஹ ஸம்பந்தம் சாசுவதம்

இப்பால் கொஞ்சம் விதவைகளின் புனர் விவாஹ விஷயத்தையும் சுருக்கமாய் கவனிப்போம். முன் காண்பிக்கப்பட்டபடி தார்மிகஸ்த்ரீ புருஷர்களுக்குள்ளாக ஏகத்வம்

உறுதியாக ஏற்பட்டிருப்பதில், பர்த்தாவின் ஆயுள் முடிவானவுடன் ஸ்திரீகள் சரீரத்தியாகத்தைச் செய்துவிட தைரியமில்லாமலே அனேகமாயிருக்கக்கூடியதால், இவர்கள் தங்களுடைய பாக்கி ஆயுள் நாள்களில் தீவ்ரமான விரக்தியுடனிருந்து கொண்டும், இறந்து போன பர்த்தாரூபத்தையே ஈசுவர வடிவமாக தியானித்துக் கொண்டும் பர்த்தா காட்டியிருக்கக்கூடிய, அல்லது, அப்பால் தார்மிகர்களான பெரியோர்கள் குறிப்பிடுகின்ற, வழியிலேயே பக்தியைச் செலுத்திக் கொண்டும் ஜ்ஞானுப்பியாஸத்தைச் செய்து கொண்டும், பர்த்தாவின் சுசுரூஷைக்குப்பதிலாக குடும்பத்திலுள்ளோர்களுக்கு உபகார-காரியங்களைச் செய்து கொண்டுமிருந்தால் மரணத்திற்குப்பின்பு ஸர்வோத்தம கதியை அடைந்து விடுவார்கள், அல்லது, உயர்ந்த லோகங்களுக்குப் போய் தங்கள் தங்களுடைய பர்த்தாவுடன் சேர்ந்து சுகித்திருப்பார்கள். ஹிந்து-தார்மிகக் கொள்கையில் விவாஹமென்பது இப்பூலோகத்தில் நடப்பு-ஜன்மத்தில் மாத்திரம் ஸ்திரீ-புருஷர்களைச் சேர்த்துவைப்பதான காரியமல்ல. விவாஹச்சேர்க்கை தர்ம-ஸம்பந்தமான சாசுவதச் சேர்க்கை. முன்-ஜன்மங்களில் ஏற்பட்டிருந்த சேர்க்கையை அனுஸரித்தே நடப்பு ஜன்மத்திலும் சேர்க்கை யுண்டாகின்றது. முன்-ஜன்மங்களில் பரஸ்பரம் சேர்க்கையிருந்திருப்பதுண்டாவென்று ஜாதகங்களை ஒற்றுப்பார்ப்பதினுல் கண்டு பிடிக்கக்கூடியதாயுமிருக்கின்றது. புருஷன் மரணத்தை அடைந்துவிட்டால், விவாஹ-ஸம்பந்தம் விட்டுப்போகாது. பின்னுல் வரப்போகிற ஜன்மங்களிலும் அந்த ஸம்பந்தம் தொடர்ந்தே வரும். தம்பதி இருவர்களும் ஒழுங்காயிருந்து வந்தால், இருவர்களும் அல்லது ஒருவர் மோக்ஷமடைகிற வரையில் ஸம்பந்தம் நீங்கிப்போகாது புருஷன் முன்னுடியே மோக்ஷமார்க்கத்தில் பிரவேசித்து ஸ்திரீக்கு அம்மார்க்கம் பிடிபடக்கூடாமலிருந்தால் இவளுக்கு மறு-ஜன்மத்தில் புருஷத்வம் கிடைத்து அப்பால் மேல் மேலும் நற்கதியின் பொருட்டு அப்பியாஸங்கள் செய்யப்பட்டுவரும்.

முன்-ஜன்மங்களாவது பின்ஜன்மங்களாவது உண்டென்ற விபரமே தெரியாத மிலேச்சமதஸ்தர்களிடம் நடந்தேறி வருகின்ற விவாஹத்தில் தற்கால சரீரஸம்பந்தத்திற்கு மேலான உத்தேசமே கிடையாது. ஆகையால், அவர்களுக்குள் புருஷன் மரணமடைந்து விட்டால், ஸ்திரீ ஸ்வதந்திரையாக வேறு புருஷனை விவாஹஞ்செய்து கொள்ளக் கூடுமென்று ஏற்பட்டு இருக்கின்றது. ஆர்யர்களுக்குள் மரணத்தினால் புருஷன் வெளியேறிப்போனாலும், இப்பிரிவு தாத்காலிகப்பிரிவுதான் என்றும், ஸ்திரீ அந்த புருஷனை மறுபடியும் சேர்ந்து விடுவாளென்றும். வியக்தமாய் தெரியவருவதால், அப்படி மறுபடியும் சேர்ந்து விடக்கூடிய காலம் வரையில் ஸ்திரீ வைராக்கியத்துடனிருந்து வருகிறாள். எப்படி பர்த்தா தன்னுடைய ஊரை விட்டு வெளிப் பிரதேசங்களுக்குப் போயிருந்தால், அவருடன் மறுபடியும் சேர்ந்திருக்கிற வரையில் பத்னீ விரக்தியுடன் ஒழுங்காகவே யிருந்து வருவாளோ, அப்படியே தார்மிக-விதவைகளின்ஸ்திதியென்று அறிந்து கொள்ளவேண்டும். தார்மிகப்பார்வையில் பர்த்தா அயலூருக்குப் போவதற்கும் பரலோகம் போவதற்கும் அதிக வித்தியாஸமில்லை. அயலூருக்கு சாசுவதமாய் போயிருக்கிற பர்த்தாவை பின்னால் எப்படி பத்னீ அவ்வூருக்குப்போய் அடையக்கூடுமோ, அப்படியே விதவையாகிவிட்டவளும் தன்னுடைய மரணத்திற்கப்பால் பதிலோகம் போய் பர்த்தாவுடன் வாழ்ந்து வருவாள். ஒருக்கால் கர்மகதியில் புருஷன் கெட்ட நிலையிலிருந்துவிட்டால், பதிவிரதையான ஸ்திரீக்கு உயர்ந்த லோகபதவியே கிடைத்து சுகித்திருந்து அப்பால் பர்த்தாவுக்கு நல்ல ஸ்திதியேற்படும் போது அவரிடம் போய்ச் சேருவாள். ஆகையால், முன் சொன்னபடி, தார்மிகப் பார்வையில் விவாஹ ஸம்பந்தம் மரணத்தினால் விட்டுப் போய்விடக்கூடிய ஸம்பந்தமல்ல.

விதவைக்கும் பர்த்தா இருக்கிறார். ஆனால் அவர் வேறு உலகத்திலிருக்கிறார். பர்த்தா ஊரைவிட்டு வெளியூருக்குப்

போய்விட்டால் பெண்சாதி வேறு விவாஹஞ் செய்துகொள்வது எப்படி நியாயமில்லையோ, அப்படியே விதவையும் வேறு பர்த்தாவை அடையக்கூடாது. எவ்விதம் இந்த உலகத்திலேயே கர்ம-வசத்தினுல் பர்த்தா வேறு தேசத்திற்குப் போயிருப்பதினுலாவது தண்டனையடைந்து ஜெயிலுக்கு அல்லது துவீபாந்தரத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதினுலாவது ஸ்திரீ-புருஷர்களுக்குள் நீடித்த பிரிவு ஏற்பட்டு ஸ்திரீ கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பது பாபத்தின் பலனென்று எண்ணப்படுகிறதோ அவ்விதமாகவே பால்யத்திலேயே விதவையாகப்போய் இப்பிறவி வாழ்நாள் பூராவும் புருஷ-வியோகத்தினுல் கஷ்டமேற்படுவதும் மஹத்தான பாபத்தின் பலனுகும். இவ்வுலகில் பர்த்தா இருக்கும்போது வேறு விவாஹஞ் செய்துகொண்டால் ஸ்திரீயும் புதப்புருஷனும் ஸர்க்கார்-தண்டனைக்குள்ளாவது போலவே, பரலோகம் போயிருக்கின்ற பர்த்தாவையுடைய புனர்-விவாஹஞ்செய்துகொள்கின்ற விதவையும் அவளை மணம்-புரிகின்ற பாபியும் ஈசுவரருடைய கடுந்தண்டனைக்குள்ளாவார்கள். இரண்டாவது பர்த்தாவுடன் சேருகின்ற விதவை பர-புருஷ-ஸங்கமாகிய மஹா பாபத்தையும், அவளுடன் சேருகின்ற புது பர்த்தாவும் பர-ஸ்த்ரீ-கமனமாகிய மஹா பாபத்தையுமே அடைந்து அதற்குள்ள கொடிய தண்டனையை இருவர்களும் பின்னுல் அனுபவிப்பார்கள்.

6, ஸ்திரீகளுக்கு விவாஹம் அவசியம்

இங்கு ஓர் ஸந்தேஹமுண்டாகலாம். தார்மிகப்பார்வையில் விவாஹத்தினுல் ஸ்திரீ-புருஷர்களுக்கு சாசுவத-ஸம்பந்த மேற்படுகிறதென்ற காரணத்தினுல் விதவை புனர்-விவாஹஞ் செய்துகொள்ளக்கூடாதென்று சொல்வதுபோல், பத்னீ இறந்துபோனுல் புருஷனும் வேறு விவாஹஞ்செய்துகொள்ளக்கூடாதென்று ஏன் விதிக்கப்படவில்லையென்று கேட்கக்கூடும். இக்கேள்விக்குப் பதிலாக "பத்னீ உயிருடனிருக்கும்போதே

பர்த்தா வேறு ஸ்திரீயையும் விவாஹஞ் செய்துகொள்ளக் கூடியதால் பத்னீ இறந்துபோன பின்பு செய்து கொள்வதில் குற்றமில்லை "யென்று சொல்லக்கூடியதாயிருப்பதில் மற்றொரு கேள்விக்குமிடமுண்டாகின்றது. அதாவது. ஒரு தடவை விவாஹமான ஸ்திரீ வேறு பர்த்தாவை எக்காலத்திலும் அடையக்கூடாதென்று சொல்வதுபோல், புருஷனும் இரண்டாவது பத்னீயை எக்காலத்திலும் விவாஹஞ் செய்து கொள்வதும் தப்பென்று ஏன் சொல்லக்கூடாதென்று ஆக்ஷேபிக்கலாம் ஸ்தூல-திருஷ்டியில் இது நியாயமான ஆக்ஷேபணை தான். ஆகிலும், சில நுட்பமான காரணங்களினால் ஒரு ஸ்திரீயைக்காட்டிலும் அதிகமாக, அதாவது, பல ஸ்திரீகளைக் கூட புருஷன் விவாஹ-மூலமாய் ஸ்வீகரித்துக்கொள்ளலா மென்று சாஸ்திரம் இடங்கொடுத்திருக்கின்றது. இப்படி இடங்கொடுத்திருந்தபோதிலும், தர்மப்பார்வையில் முதலாவது ஸ்திரீக்கே பிரதானத்தன்மை சாஸ்திரத்தில் கொடுபட்டிருப்பது மல்லாமல், காமத்தை முன்னிட்டு இரண்டாவது ஸ்திரீயை விவாஹஞ் செய்துகொள்பவனை தூஷித்துமிருக்கின்றது. ஆயினும், மேற்கண்டபடி கொஞ்சம் சாஸ்திரமே இடங்கொடுத்ததின் காரணங்களையும் சற்று விசாரிப்போம். இவ்விசாரணையிலேயே விதவைகளின் புனர்-விவாஹம் கூடாதென்பதும் வெளியாகும். முன் விவரித்தபடி புருஷனுக்கு புத்தி-பலமும் ஸ்திரீக்கு உணர்வு-பலமும் இருந்துவருவதில் மோக்ஷத்தை உத்தேசித்து தர்ம-ஸித்தியின் பொருட்டும் ஜ்ஞானப் பிராப்தியின் பொருட்டும் ஒவ்வொரு ஸ்திரீயும் விவாஹத்தினால் பதியை அடைய வேண்டியது அவசியமாயிருக்கின்றது. இந்தப்படி கட்டாயமாக ஒவ்வொரு புருஷனும் பத்னீயை அடையவேண்டுமென்று விதியில்லையென்றும் முன் குறிப்பிடப் பட்டது. புருஷன் ஸ்வதந்திரனாக பிரஹ்மசாரியாகவேயிருந்து ஜ்ஞானாப்பியாஸத்தைச் செய்துகொண்டு பூரா-வாழ்-நாள்களை யும் கழிக்கலாம். அல்லது, பிராஹ்மண-பிரஹ்மசாரி

ஸன்னியாஸியாகவும் போகலாம். விவாஹத்தைச் செய்து கொண்டு பத்னீயைக் காப்பாற்றி குடும்ப-பாரத்தை வஹிக்கக் கூடிய சக்தியேயில்லாத புருஷனும் விவாஹமில்லாமலே ஆயுள் பூராவுமிருக்கலாம். இவ்விதமாக புருஷர்களுக்குள்ளாக அனேகர்களுக்கு விவாஹம் ஏற்படாமலேயிருக்கக்கூடும். ஸ்திரீகளின் விஷயத்திலோ, அவர்களுடைய சுத்திக்காகவும் ஸத்கதியின் பொருட்டும் விவாஹத்தைத்தவிர வேறு வைதிக-ஸம்ஸ்காரமே கிடையாதாகையால், விவாஹமில்லாமல் ஒரு ஸ்திரீயுமிருப்பதற்கில்லை.

அத்தியாயம் II

விவாஹ சட்டம் (2)

1. லௌகிக நியாயம்

இப்பரத கண்டத்தில் சுருதி-ஸ்மிருதிகளை அனுஸரித்து நடந்துவரவேண்டியவர்களான ஹிந்துக்கள் 20 கோடி ஜனங்களிருப்பதாக சுமாராய் வைத்துக்கொள்வோம். அனேகமாய் ஸென்ஸஸ்-கணக்குகளினால் புருஷர்களைவிட ஸ்திரீகளின் எண்ணிக்கை கொஞ்சம் அதிகமாக வெளியானபோதிலும், இங்கு ஆலோசனையின் பொருட்டு ஸ்திரீகளுடையவும் புருஷர்களுடையவும் எண்ணிக்கை ஸமமாகவேயிருப்பதாக பாவித்துக்கொள்வோம். இப்படி 10 கோடி புருஷர்களும் 10 கோடி ஸ்திரீகளும் ஹிந்துக்களுக்குள்ளிருந்துவருவதில், அந்த 10 கோடி புருஷர்களில் மேற்கண்ட பல காரணங்களினால் ஒரு கோடி புருஷர்கள் விவாஹமில்லாமலேயிருந்துவிடக்கூடுமென்று உத்தேசமாய் குறிப்பிட்டுக்கொள்வோம். முன்காட்டியபடி 10 கோடி ஸ்திரீகளுக்கும் விவாஹம் அவசியம் நடக்கவேண்டியதாயிருப்பதால், விவாஹஞ்செய்துகொள்ளக்கூடிய 9 கோடி புருஷர்களுக்குள்ளாகவே 10 கோடி ஸ்திரீகளுக்கும் விவாஹம் நடக்கவேண்டியதாயிருக்கிறது. சில புருஷர்களாவது ஒரு ஸ்திரீக்கு மேல் அதிக ஸ்திரீகளை விவாஹஞ்செய்துகொண்டாலொழிய எல்லா ஸ்திரீகளுக்கும் விவாஹம் ஏற்படுவது ஸாத்தியப்படமாட்டாது. அதாவது கிருஸ்துவர்களுக்குள்ளிருப்பதுபோல் ஒவ்வொரு புருஷனுக்கும் ஒவ்வொரு ஸ்திரீதான் இருக்கலாமென்றால், 9 கோடி புருஷர்களுக்கும் 9 கோடி ஸ்திரீகள் விவாஹஞ்செய்யப்பட்டு பாக்கியுள்ள ஒரு கோடி ஸ்திரீகளுக்கு விவாஹமே செய்யக்கூடாத துர்க்கதி ஏற்பட்டுவிடும். ஆகையால், ஸகல ஸ்திரீகளுக்கும் விவாஹம் நடந்து அவர்கள் விவாஹத்தினாலேற்படக்கூடிய ஸம்ஸ்கார

சுத்தியையும், பரம்பராபிவிருத்தியையும், தர்ம-ஸித்தியையும், ஜ்ஞானபபிராப்தியையும், முடிவில் நற்கதியையும் அடையும் பொருட்டே, அவர்கள் பேரிலுள்ள கருணையினால் சாஸ்திரத்தில் புருஷன் பல ஸ்திரீகளை விவாஹஞ் செய்துகொள்ளலாமென்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வித அனுமதி இருப்பதினாற்றான் ஹிந்துக்களுக்குள் விவாஹமாக வேண்டிய ஸகல ஸ்திரீகளுக்கும் சிரமத்தின் பேரிலாவது விவாஹம் நடந்து வந்துகொண்டிருக்கிறது. இவ்வித அனுமதியில்லாத கிறிஸ்துவ தேசங்களிலும் ஜன-வகுப்புகளிலும் ஏராளமாய் ஸ்திரீகள் விவாஹத்திற்கு இடமில்லாமலேயிருந்து கஷ்டப்பட்டு வருகிற விஷயம் அத்தேச-புஸ்தகங்கள் பத்திரிகைகள் மூலமாய் நன்றாக வெளியாகின்றது. இப்பெரும் கஷ்டம் ஹிந்துக்களுக்குள் ஏற்படவில்லை.

மேலும் புருஷன் பல ஸ்திரீகளை கல்யாணஞ் செய்து கொள்வதினால் அவருடைய தர்மாசரணைக்காவது, பத்னீகளின் தர்ம-ஸித்திக்காவது, பரம்பரா-தர்மம் காப்பாற்றப்படுவதற்காவது யாதொரு குறைவுமுண்டாகாது. அவருடைய ஸ்திதி பல புருஷர்களைக் கொண்ட ஸ்திரீயின் கெட்ட ஸ்திதியைப் போலாகாது. பல ஸ்திரீகள் விவாஹஞ்செய்யப்பட்டாலும், அவ்விவாஹங்களினால் புருஷனுடைய குடும்பத்தில் ஸ்திரீகள் எல்லோரும் சேர்ந்துவிடுகின்றார்கள். பிராஹ்மணனாயிருந்தால் அவருடைய கோத்திரமே எல்லா ஸ்திரீகளுக்கும் வந்துவிடுகின்றது. ஸ்திரீகள் எவ்வளவு பெயர்களானாலும், எல்லோரிடத்திலும் பிறக்கிற குழந்தைகளுக்கும் பிதா இன்னாரென்றும் குடும்ப-தர்மம் இன்னதுதானென்றும், நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. பல புருஷர்களை ஸ்வீகரித்திருக்கிற ஸ்திரீயின் குழந்தைகளுக்கு பிதா இன்னாரென்றாவது ஸ்வ-தர்மம் எதென்றாவது சொல்வதற்கு இடமில்லை. தவிரவும், குடும்பங்களின் அபிவிருத்தியை, அல்லது ராஜ்யத்தின் ஜனாபி

விருத்தியை கவனித்தால் ஒரு புருஷனுக்கு பல ஸ்திரீகளிருப்பதுதான் அனுகூலமேயொழிய ஒரு ஸ்திரீக்கு பல புருஷர்களிருப்பது உபயோகப்படாது.

ஒரே புருஷன் பத்து ஸ்திரீகளிடத்தில் ஒரே வருஷத்தில் பத்து குழந்தைகளை ஜனிப்பிக்கக்கூடும். ஒரே ஸ்திரீக்கு நூறு புருஷர்களிருந்தாலும் அவள் ஒரு வருஷத்தில் ஒரு குழந்தைக்கு மேல் பெறக்கூடியவளல்ல

அன்றியும், யாரிடம் சரீர-பலமும் புத்தி-பலமும் மற்றவரை அடக்கும், தன்மையும் ஸ்வபாவத்தில் இருக்கக்கூடியவைகளோ அவர் ஒருவராகவும் அடக்கப்படவேண்டியவர்கள் பலராகவுமிருப்பதுதான் கிரமம். புருஷனுக்கு சரீர பலமும் புத்தி பலமுமிருப்பதாலும், ஸ்வபாவத்திலேயே அபலையாயிருக்கின்ற ஸ்திரீயானவள் புருஷனால் காப்பாற்றப்படவேண்டியவளான தாலும், நற்கதியின் பொருட்டு புத்தி-பல முள்ளவரே உணர்வு-பல முள்ளோரை அடக்கி வருவது அவசியமும் நியாயமுமாயிருப்பதாலும், புருஷன் ஒருவராகவும் ஸ்திரீகள் பலர்களாகவும் இருப்பது தோஷமில்லை. மேலும் விவாஹத் தினல் புருஷன் குருவாகவும் பத்னீ சிஷ்யையாகவும் ஏற்படுவதில், பல சிஷ்யர்கள் ஒரே குருவுக்கு இருக்கக்கூடிய தாலும், பல குருக்களை அண்டிய ஒரு சிஷ்யனுக்கு நற்கதியின் பொருட்டு அப்பியாஸ-மார்க்கம் கிலுப்தப்படக் கூடாததாலும், ஒரு புருஷனுக்கு பல பத்னீகளிருப்பது தப்பாகமாட்டாது. ஆகையால், ஸ்திரீகளின் ஹிதத்தையுத்தேசித்தும் உலகத்தின் நன்மையைக்கருதியும் சாஸ்திரம் சில குறிப்பிட்ட ஸந்தர்ப்பங்களில் பல ஸ்திரீகளை புருஷன் விவாஹஞ்செய்து கொள்ளலாமென்று இடங்கொடுத்திருக்கின்றது. குறிப்பிட்ட ஸந்தர்ப்பங்களைத் தவிரமற்றதுகளில் அப்படி விவாஹஞ் செய்வது நியாயமில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விதமாக, ஒரு பத்னி இருக்கும் போதே வேறு ஸ்திரீகளையும் விவாஹஞ் செய்து கொள்வதற்கு புருஷனுக்கு அதிகாரமிருப்பதால் பத்னீ இறந்து போன பின்பு அவர் வேறு பத்னியை ஸ்வீகரிட்பதில் ஆக்ஷேபணையிருக்கக்கூடியதல்ல. ஆதலால், முன் அத்தியாயத்தில் குறிப்பிட்ட ஸந்தேஹத்திற்கும் கேள்விக்கும் இடமேயில்லை. எல்லா ஸ்திரீகளுக்கும் ஒரு தடவை விவாஹம் ஏற்படுவது ஸாத்தியப்படுவதற்காகவே புருஷர்கள் தகுந்தகாரணமிருந்தால் அதிக ஸ்திரீகளை கல்யாணஞ்செய்து கொள்ளலாமென்று போக்கு விட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. முன் சொல்லியபடி இப்படி போக்கு விட்டிருப்பதினுல்தான் எல்லா ஸ்திரீகளுக்கும் சாஸ்திர-விதிப்படி கொஞ்சம் சிரமப்பட்டாவது ஹிந்துக்களுக்குள் விவாஹம் நடந்தேறிவருகிறது. ஆகையால், விவாஹ-விஷயத்தில் ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு அவசாசத்திற்கு மேலாக இரண்டாவது அவகாசம் கொடுப்பதற்கேயில்லை.

2. கன்யைகளின் கதி

ஸ்திரீகள் விதவைகளான பிறகும் புனர்-விவாஹஞ் செய்யத் தலைப்பட்டு விட்டால் அப்பட்டில் விவாஹமாகாத பெண்களுக்கு பர்த்தாவே கிடைக்க மார்க்கமில்லாமல் போய் விடும். அதாவது, முன்குறிப்பிட்ட 9 கோடி புருஷர்களுக்குள்ளாக 10 கோடி ஸ்திரீகளுக்கு விவாஹமாகவேண்டியிருப்பதால் ஏற்கனவே சிரமத்தின் பேரிலேயே ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு தடவை விவாஹம் நடத்தப்பட்டு வருவதில், விதவைகளும் புனர்-விவாஹம் பண்ணிக்கொள்வதனுல், 10 கோடி ஸ்திரீகளில் புனர்-விவாஹஞ்செய்து கொள்ளக்கூடிய ஒரு கோடி ஸ்திரீகளுக்கு நபர் ஒன்றுக்கு இரண்டு பர்த்தாக்களும் (அதிகமாகவும் ஏற்படக்கூடும்) மற்றவர்களுக்கு ஒவ்வொரு பர்த்தாவுமாக 11 கோடி பர்த்தாக்களை 9 கோடி புருஷர்களில் தயார் செய்ய வேண்டியதாயிருக்கும். இது

சிரமத்தின் பேரில் கூட நடக்கக்கூடாத விஷயமாதலால், ஒரு கோடி கன்யாப் பெண்களுக்கு ஒரு தடவை கூட விவாஹத்திற்கு இடமன்னியில் போய்விடும். இது மிகவும் வியஸனப்படவேண்டிய விஷயம். ஆகையால், புனர்-விவாஹஞ்செய்து கொள்கின்ற ஒவ்வொரு ஸதிரீயும் அவளை மணம்புரிகின்ற ஒவ்வொரு புருஷனும் விவாஹமாகாத பெண்களுக்கு துரோஹஞ்செய்பவர்களாகவே ஏற்படுகின்றார்கள். விதவையாகப்போன ஸ்திரீயைப்பார்த்து விட்டு பரிதாபத்தின் பேரில் அவளை ஸ்வீகரித்துக் கொள்கிறவன் அவனுடைய அச்செய்கையினால் விவாஹமேயாகாத ஒரு பெண்ணுக்கு பர்த்தாவே கிடைக்கவொட்டாமல் தான் செய்வதாகத் தெரிந்து கொண்டு அப்பெண்பேரில் பரிதாபப்படுகிறதில்லை. விதவையின்பேரில் அவனுக்குண்டாகின்ற பரிதாபத்திற்குக் காரணம் மோஹமேயல்லாது அது ஆலோசனையின் பேரிலுண்டான உண்மையான பரிதாபமல்ல. விதவையை மணம்புரிகின்ற ஒவ்வொருவனும் இப்படி கன்யாப் பெண்களுக்கு துரோஹகரமான கொடுந்துர்ச் செய்கையைச் செய்து வருவதுந்தவிர அவ்விதவையையும் தன்னையும் தன் குலத்தையும் கெடுத்து அதோ கதியில் வீழ்த்தி விடுகிறான். சாஸ்திரத்தை கவனிக்காத ராஜாவும் முன் சொல்லிய லௌகிக நியாயத்தை மாத்திரம் கருதி, அதாவது, ராஜ்யத்திலுள்ள ஸகல பெண்களுடையவும் நன்மையை உத்தேசித்து நீதி செலுத்துகிறதாயிருந்தாலும், விதவைகளின் புனர்-விவாஹத்திற்கு இடங்கொடுக்கக்கூடாது. ஒவ்வொரு புனர்-விவாஹமும் கன்யாப்பெண்களுக்கு விரோதமான துர்ச்செய்கையே யென்று ராஜா அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். பெரும்பாலும் இவ்வித துர்ச்செய்கைக்கு இடங்கொடுப்பதினால்தான் மிலேச்ச-ராஜ்யங்களில் விவாஹமில்லாமலே ஜீவகாலம் பூராவையும் பல விதமாய் செலவழித்து வருகிற கணக்கிலடங்காத ஸ்திரீகளை எப்போதும் பார்க்கலாம். இவ்வித துர்ச்செய்கைக்கு இடங்கொடுப்பதற்கு முன்குறிப்பிட்ட

படி மோஹந்தான் காரணம்; அதாவது, ஓங்கி வளர்ந்து மோஹப்படுத்திவருகின்ற விதவையைப்பார்த்து மயங்கி நிற்கின்ற மூடனுடைய கலங்கிய புத்தியில் சிறு கன்யாப் பெண்களுடைய கதி விஷயமான ஆலோசனை உதிக்கிறதே யில்லை.

3. கர்மகதி

மேற்கண்ட பல காரணங்களினால் பெண்களுக்கு ருது வாவதற்கு முன்பாகவே விவாஹஞ் செய்யப்படவேண்டு மென்பதும், விதவைகளின் புனர்-விவாஹம் கூடாதென்பதும் நிச்சயப்படுத்தப்பட்டாலும், 7 வயதுக்குமேல் ருதுவாகிற கால மாகிய 14வது வயது வரையில் பெண்களுக்கு விவாஹம் நடக்காமலிருந்துவிட்டால், 14 வயதுக்குள்ளாக பெண்கள் விதவைகளாகிவிட மாட்டார்களென்ற உறுதி இருப்பதால், இப்படி விவாஹம் நடக்காமலிருப்பதே பெரும் அனுகூல மில்லையாவென்று மறுபடியும் சிலர்கள் கேட்கக்கூடும். இவ் விஷய-ஸம்பந்தமான தத்துவத்தை சரியானபடி ஆராய்ச்சி செய்து பார்க்காமலிருப்பதினாலேயே திரும்பத்திரும்பவும் வெகு பெயர்களின் ஸாமான்ய புத்திகளில் பால்ய-விவாஹம் பெண்களுக்குக் கூடாதென்ற எண்ணம் உறுதியடைந்து வந்திருக்கின்றது. இப்படி எண்ணுவதற்கு நேர் காரணம் கர்ம-கதி-விபரத்தையும் ஜன்மத்தின் உத்தேசங்களையும் அறியாமலிருப்பதேயாகும். முன் சொல்லியபடி பிராரப்த-கர்ம-பலத்தை அனுபவிப்பதும் நற்கதிக்கு வழி தேடுவதும் மனித-ஜன்மத்தின் முக்கிய உத்தேசங்கள். ஒரு ஜீவன் பிறக்கும் போதே அக்காலம் முதல் எவ்வளவு காலம் வரையில் ஜீவித்திருக்கவேண்டுமென்பதும், ஜீவன-காலத்தில் பிராரப்த-கர்ம-பலத்தின் ரூபங்களாகிய சுகம் துக்கம் இவ்விரண்டும் எவ்வளவு அனுபவிக்கப்படவேண்டுமென்பதும் நிச்சயப்பட்டிருக்கின்றன. பிராரப்தமென்பது இருவகை, அதாவது, 1. ஸப்பிரதிபந்த-

பிராரப்தம், 2. அப்பிரதிபந்த-பிராரப்தம். இவ்விரண்டில் ஸப்பிரதிபந்தப் பிராரப்தத்திஞல் உண்டாகக்கூடிய துக்கங்களை சாஸ்திரத்தில் குறிப்பிட்ட பிராயச்சித்த-பரிஹார-காரியங்களிஞல் விலக்கிவிடக்கூடும். அப்பிரதிபந்தப்பிராரப்த-கர்ம பலன்களாகிய சுகங்களையாவது துக்கங்களையாவது எவ்வகையிலும் தடுக்க முடியாது, அவைகள் கட்டாயமாக ஏற்பட்டே தீரும். இப்படியே ஸப்பிரதிபந்தப் பிராரப்த-பலனும் அதற்குரிய பிராயச்சித்தாதி-கர்மாக்களைச் செய்யாவிடில் வந்தேதீரும். அவரவர்களுடைய ஜாதகங்களை நன்ருய் பரிசோதித்துப் பார்ப்பதிஞல் இருவகை பிராரப்த-கர்மங்களின் விபரமும் முன்ஞலேயே தெரியககூடியது. இப்படித் தெரிந்துகொண்டு ஸப்பிரதிபந்தப்பிராரப்த-விஷயமான கெடுதல்கள் நேரிடாமல் அவைகளை நீக்கிக்கொள்ளலாம்.

ருதுவாவதற்கு முன்பாகவே பால்யத்தில் விதவையாவது முன் சொன்னபடி பெரும் கெட்ட பிராரப்த-கர்ம-பலன். இப்படிப்பட்ட கர்மம் எந்தப் பெண்ணுக்காவது இருப்பதாக ஜாதகத்தில் தூலங்கிஞல் அதை விலக்குவதற்குள்ள பிரயத்தினத்தைச் செய்யவேண்டியது பிதாவுடையவும், விவாஹத்திற்குப் பின்பு பர்த்தாவுடையவும், கடமையாகும். இப்படிச் செய்ய அவர்களுக்கு புத்தியுண்டாகாவிட்டாலும், அல்லது, செய்தும் பலிக்காமல் வைதவ்யம் ஏற்பட்டுவிட்டாலும் அதை அப்பிரதிபந்தப்பிராரப்தமாகவே, அல்லது அதுபோலவே, எண்ணிக்கொண்டு பொறுமையுடன் ஸஹித்துவரவேண்டியதைத்தவிர வேறென்றும் செய்வதற்கில்லை. இப்படிப்பட்ட வைதவ்யத்திற்குக் காரணம் மேலே குறிப்பிட்டபடி முன்-ஜன்மங்களில் செய்யப்பட்டிருந்த மிகவும் கொடூரமான பாப-கர்மாவே தவிர பால்ய-விவாஹம் காரணமல்ல. பால்ய-விவாஹம் ஏற்பட்டவர்களுக்கெல்லாம் பால்யத்திலேயே வைதவ்யம் வந்துவிடவில்லை. பால்ய-விவாஹம் நடக்காவிட்டால் பால்யத்திலேயே வைதவ்யம்வர இடமேயில்லையென்று

நினைத்து அவ்விவாஹம் கூடாதென்று சொல்லக்கூடாது. சாப்பிடும்போது ஆஹாரத்தில் விஷமிருந்து விட்டால் மரணம் வருமேயென்றுத்தேசித்து ஒருவரும் சாப்பிடவே கூடாதென்று சொல்லலாமா? ரயிலேறிப்போனல் சில ஸமயங்களில் பாலம் உடைந்துபோய் ஜனங்களுக்கு அபாயம் வருகிறதேயென்று எண்ணி ரயிலில் போகவே கூடாதென்று சொல்வது சரியாகுமா? அவசியமாக நடத்திவரவேண்டிய விஷயத்திலும் தைவ-வசத்தினல், அதாவது, பூர்வ-கர்மத்தின் பலனக, எப்போதாவது யாருக்காவது நேரிடக்கூடிய கெடுதல்கள் நேரிட்டுக்கொண்டு தானிருக்கும். முன் விவரிக்கப்பட்ட அனேக ஹேதுக்களினல் தார்மிகர்களுக்குள் பெண்களுக்கு பால்ய-விவாஹம் அவசியம் நடத்தப்பட வேண்டியதுதானென்று தீர்மானமாக ஏற்படுவதில், விசேஷ முன்-ஜன்ம-காரணங்களினல் சிலர்களுக்கு அனர்த்தமுண்டாகலாமென்று எண்ணிக்கொண்டு அதை நடத்தாமல் எல்லா தார்மிக-ஸ்திரீகளையும், ஆர்ய-தர்மத்தையும் தார்மிக-பரம்பரையையும், உலகத்தின் நன்மையையும் கெடுத்து விடவேண்டுமென்று சொல்வது எவ்விதத்திலும் நியாயமாகாது.

அன்றியும், உண்மையான தத்துவத்தை நன்ருக விசாரித்தால், ருதுவாவதற்கு முன்பாகவே விதவையாகிவிட்ட பெண்ணையுத்தேசித்து ருதுவாகிக் கொஞ்சம் புருஷ-ஸங்கத்தை அனுபவித்திருக்கின்ற பெண் விதவையாவதில்தான் அதிக கஷ்டமேற்படுகின்றது. வைதவ்ய முண்டாவதினல் ருதுவாகிறதற்கு முன்னலேயே விரக்தி-மார்க்கத்தில் இறங்கி பரலோக-நன்மையின் பொருட்டு பக்தி-ஜ்ஞானப்பியாஸங்களைச் செய்துவர ஆரம்பித்துவிட்டவர்களுக்கு அதிகமாக துக்கமும் கஷ்டமும் மனஸில் தோன்றமாட்டாது. அப்பெண்களைப் பார்க்கிறவர்களும் உலகச்சிற்றின்பங்களில் பழக்கமுள்ளவர்களுமான மற்ற பாமர-ஜனங்களுக்குத்தான் அப்பெண்களின் விஷயத்தில் அதிகமாக பரிதாபமுண்டாகக்கூடியது. எப்படி

விசேஷ-பூர்வ-புண்ணிய-வசத்தினல் அதி-பால்யத்திலேயே ஸன்னியாஸத்தைப் பெற்றுக்கொண்ட பிரஹ்மசாரியைப் பார்த்து பாமர-ஜனங்கள் பரிதாபப்பட்டாலும், அவர் தன்னுடைய ஆசிரமத்திற்குரியதும் ஸத்-கதிக்கனுகூலமுமான அப்பியாஸங்களையே செய்துகொண்டு இந்திரிய-விஷய-சுகங்களில் மனஸைச் செலுத்தாமலும் செலுத்த அவகாசமில்லாமலுமிருந்து வந்து பின்னல் எல்லோராலும் கொண்டாடத்தகுந்த மஹானுகிவிடுகின்ருரோ, அப்படியே விசேஷ-பூர்வ-பாபவசத்தினுல் விதவையாகிவிட்ட ருதுவாகாத பெண்ணும் விரக்தியுடனும் பக்தியுடனுமிருந்துவந்து மற்ற ஸ்திரீகளை அபேக்ஷித்து வெகு லெகுவாய் உயர்ந்த பதவியை அடைந்துவிடக் கூடும். ருதுவான பிறகு விதவையாகப்போவதைவிட ருதுவாவதற்கு முன் விதவையாகிவிடுவது அதிக கஷ்டமென்று நினைப்பது அறியாமையேயாகும். ஆகையால், முன் சொல்லியபடி நியாயமாய் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு தடவை விவாஹம் நடத்திவைக்க வேண்டிய தவசியம். இப்படி நடத்திவைக்கப்பட்ட பின்பு பலமான பிராரப்த-துஷ்கர்ம-வசத்தினுல் வைதவ்யம் வந்துவிட்டால், அதை பொறுத்துக்கொண்டும், வைராக்கியத்துடனிருந்து பரலோக-நன்மைக்காக ஏகாந்தமாய் விசேஷ யத்தினங்களைச் செய்யும்பொருட்டு தனக்கு இந்நிலைமை வந்திருப்பதாக எண்ணிக்கொண்டும், அதை அனுகூல விஷயமாக உபயோகப்படுத்திக்கொள்வதே உத்தமியான தார்மிக-ஸ்திரீயின் லக்ஷணமாகும்.

மிலேச்சப்பார்வையே பலப்பட்டிருந்த சில லௌகிகர்கள் முதன்மையாயிருந்து முன்னல் சொல்லியபடி விதவைகளின் புனர்-விவாஹ விஷயமான சட்டம் ஏற்படும்படி செய்தார்கள். ஆனல், அச்சட்டத்தினல் புனர்-விவாஹத்தின் பொருட்டு ஸர்க்காரின் அனுமதியிருப்பதாக மட்டும் காண்பிவிக்கப்பட்டதேயொழிய புனர்-விவாஹம் கட்டாயமாய் செய்யப்பட வேண்டுமென்ற விதி ஏற்படாததினல், தார்மிகர்களுக்கு

அதிலும் விசேஷ கெடுதல் உண்டாகவில்லை. அச்சட்டமும் முக்கியமாய் பிராஹ்மணர்களை உத்தேசித்தே செய்யப்பட்டது. இப்படி 1856-ம் வருஷத்தில் சட்டமேற்பட்டும் அது முதல் நாளது வரையில் பிராஹ்மணர்களுக்குள் எவ்வளவு புனர்-விவாஹங்கள் நடந்திருக்கின்றனவென்று கணக்குப்பார்த்து சற்று ஆலோசித்தால் தற்கால ஆசார-சீர்திருத்தக்காரர்களும், அச்சட்டத்திற்காக பெரும் முயற்சியெடுத்துக்கொண்டவர்கள் உயிருடனிருந்தால் அவர்களும், மிகவும் வெட்கபடைவார்களென்பதில் ஸந்தேஹமில்லை, எப்போதாவது மிச்க அபூர்வமாக விதவைகளை பணம்-புரிந்தவர்களும் சாஸ்திர-வாஸனையேயில்லாத மிலேச்சக் கல்விப் பார்வையுள்ளவர்களேயல்லாமல் மற்றவர்களல்ல. அச்சட்டத்தினால் தார்மிகர்களின் ஸ்திதியாவது அசாரணைகளாவது அணுவளவும் மாறிப்போகவில்லை. ஆகையால், முன் குறிப்பிட்டபடி அது விஷயமாகவும் தார்மிகர்கள் முயற்சியெடுத்து அதை ரத்துச் செய்வித்துக்கொள்ளவில்லை.

4. உறுதி வேண்டும்

இக்காலத்தில் 14 வயதைக் குறிப்பிட்டு விவாஹ விஷயமாகச் செய்யப்பட்டிருக்கிற சட்டம் மிகவும் அனர்த்தத்தையே விளைவிக்கக்கூடியது. உண்மையான ஆர்யர்களாகிய தார்மிகர்களின் பார்வையில் விவாஹத்திற்கு எவ்வளவு முக்கியத் தன்மையிருக்கிறதென்று ராஜாங்கத்தார்கள் தெரிந்து கொண்டதாகத் தோன்றவில்லை. தர்ம-சாஸ்திரத்தை அனுஸரித்துச் செய்யப்பட்ட விவாஹந்தான் தர்ம-விவாஹமாகும். தர்ம-விவாஹத்தினால்தான் தர்ம-பத்னீ ஏற்படுகிறாள். பத்னீ தர்ம-பத்னீயாயிருந்தால்தான் புருஷன் பிரவிருத்தி-தர்மாசரணைகளைச் செய்யக்கூடும். கிருஹஸ்தாசிரமம் முக்கியமாய் பிரவிருத்தி - தர்மாசரணைகளுக்காகவே ஏற்பட்டிருக்கின்றது. சாஸ்திரப்படிக்குள்ள விவாஹத்தைச் செய்துகொண்டு கிரம

மாக தர்மங்களை ஆசரித்துவருகின்ற கிருஹஸ்தரின் ஆதரவின் பேரில் மற்ற ஆசிரமங்களின் இருப்பும் சுத்தத்தன்மையும் பொறுத்து நிற்கின்றன. அதர்ம-விவாஹத்திஞல் கிருஹஸ்த ஆசிரமம் கெட்டுப்போய்விட்டால், மற்ற ஆசிரமங்களும் கெட்டு நாசத்தை அடைந்துவிடக்கூடியவை. மேற்கண்ட சட்டத்தை அனுஸரிக்கும் பக்ஷத்தில், அநேகமாய் 14வது வயதில் இவ்வுஷ்ண தேசத்திலுள்ள பிராஹ்மணப் பெண்கள் ருதுவாகி விடக்கூடியதால், சாஸ்திர-விரோதமாக விருஷளீயை மணம் புரிவதுமன்னியில், விவாஹத்துடன் தொடர்ந்தே நிஷேக முகூர்த்தத்தையும் நடத்தும்படி ஏற்படும். முன் பலவாருக அவசியமென்று காட்டியபடி க்ஷேத்திரம் பரிசுத்தப்பட அவகாச மில்லாமலே ஏற்கனவே கெட்ட ஸ்திதியை அடைந்து விருஷளீயாயிருப்பவளுடன் சரீரப்புணர்ச்சிக்காக விவாஹம் நடப்பதாகவே முடிவாகும். தர்மாசரணைகளிலும், சுத்தமான தர்ம-பரம்பரை உண்டாவதிலும், ஆர்ய-மதம் நீடித்து நின்று மனிதனுக்கு நற்கதியின் பொருட்டு ஹிதத்தைச் செய்து வருவதிலும் சிரத்தையுள்ள தார்மிகர்கள் அச்சட்டப்படிக்குள்ள அதர்ம-விவாஹத்தை நடத்திக்கொண்டு அதோ-கதியை அடையவேண்டுமென்ருல் இது ஒருக்காலத்திலும் நியாய மில்லாத விஷயம்.

ஆகையால், அச்சட்டம் உடனே ரத்துச்செய்யப்படா விட்டால், அதை மீறியே தார்மிகர்களுக்குள் எப்போதும் விவாஹம் நடந்தேறிவரும். விவாஹங்களிஞல் ஜெயிலுக்குப் போவதும் அபராதங் கொடுப்பதும் அவர்களுக்குள் அவசிய மான ஸங்கதிகளாகவே ஸஹஜமாய் ஏற்பட்டுவிடும். உண்மை யில் குற்றவாளியாயிருந்து ஜெயிலுக்குப்போய் அதனுல் துரா சாரங்களும் கர்ம-லோபங்களும் உண்டாஞல் அந்த பாபங்கள் குற்றவாளியை அடையும். தர்மத்தை ஆசரிப்பதற்காக அநியாயமாய் விபரீதச் சட்டத்தை அனுஸரித்து ஜெயிலுக்கு அனுப்பப்பட்டு பாபங்கள் ஏற்பட்டால் அவை ராஜாவையும்

அச்சட்டத்திற்குக் காரண-பூதர்களாயிருந்தவர்களையுந்தான் அடையக்கூடியவை. ஜெயிலுக்குப் போனவர்களுக்கு அந்த பாப-ஸம்பந்தமே இருக்கமாட்டாது. ஆகையால், தார்மிகர்களுக்கு ஜெயில்-வாஸத்தினுல் அதிக தோஷமேற்படாது. அபராத-விஷயத்திலும், கல்யாணங்களில் விசேஷமாக அதிகச் செலவுகளைச் செய்யாமல் நிறுத்திக்கொண்டு ஸர்க்காருக்கு வீண்-தண்டமாகத் தொகை செலுத்தப்பட்டுவரும். தார்மிகரே வலுவில் அபராதத்தைச் செலுத்தாமல் ஸர்க்காரே பலாத்காரமாக வசூலித்துக்கொள்ளும்படி செய்வதும் வழக்கத்திற்கு வந்துவிடக்கூடும்.

இப்படியே அடிக்கடி ஜெயிலுக்குப் போய்க்கொண்டும் அபராதம் வசூலிக்கப்பட்டும் வந்தால் நாளடைவில் சில தார்மிகர்களின் குடும்பங்கள் தரித்திர-தசையை அடைந்துவிடலாம். ஆனுல், பிராஹ்மண-விஷயத்தில், தரித்திரனுகிவிட்டால் அவருக்கு யாதொரு குறைவுமில்லை. சொத்தில்லாமையே பிராஹ்மணனுக்கு உத்தம லக்ஷணமென்று முன்னுல் விவரிக்கப்பட்டுமிருக்கின்றது. தரித்திர-தசையை அடைந்த பிறகு ஸர்க்கார் அபராதம் வசூலிக்க இடமேயில்லாமல் நின்றுபோகக் கூடியது. அபராதம் செலுத்தாததினுல் அதிகமாய் சில மாஸங்கள் ஜெயிலிலிருக்கும்படி நேரிடுவதையும் தார்மிகர்கள் லக்ஷியஞ்செய்யப் போகிறதுமில்லை.

இது நிற்க. விவாஹத்தை நடத்திவைக்கின்ற உபாத்தியாயர்களுக்கும் தண்டனையுண்டென்று இவ்விபரீதச் சட்டத்தில் கண்டிருப்பதால், இனி பிராஹ்மணர்களுக்குள் எல்லோரும் கிரமப்படி அல்லது அவசியமான மட்டிலாவது, வேதாத்தியயனத்தைச் செய்துகொண்டு அந்தந்த கிருஹஸ்தர்களே தங்களுடைய ஸந்ததிகளின் விவாஹங்களை நடத்திவைக்கும்படியான யோக்கியதையை ஸம்பாதித்துக்கொண்டு விடுவது முக்கியமென்றே ஏற்பட்டுவிட்டது. அனேக தார்மிக-வீடு

களில் உபாத்தியாயத்தை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய புரோஹிதரை எங்கும் விவாஹத்தை நடத்திக்கொடுக்கும்படி சொல்வது நியாயமில்லை. அவரே எல்லோருக்கும் நடத்தி வைப்பதும் ஸாத்தியப்படாது. அவர் ஒப்புக்கொண்டு கொஞ்சம் நடத்திவைத்தாலும், அவர் அடிக்கடி ஜெயிலிலிருக்கும்படி நேரிடுமேயல்லாது உபாத்தியாயத் தொழில் ஒழுங்காக நடக்காது. ஆதலால், மிலேச்சக் கல்வியிலும் விசேஷப்பற்றுதலுள்ள தார்மிகர்களும் அக்கல்வியை பெரும்பாலும் விட்டொழித்து வேதாத்தியயனத்தைச் செய்து ஸ்வ-கர்மாசரணைகளை கிரமமாய் நடத்திக்கொண்டிருக்கும்படியான காலம் வந்துவிட்டதென்று சொல்லவேண்டியதாயிருக்கின்றது.

இப்படி தர்மத்திலேயே உறுதியாய் நின்றுகொண்டு, காலக்கொடுமையால் தங்களுக்குண்டாகின்ற அஸௌகரியங்களையும் கஷ்டங்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமலே இருந்துவருகின்ற தார்மிகர்கள் முழுவதும் நசித்துப்போய் விடும்படி ஈசுவரர் செய்துவிடமாட்டாரென்பது நிச்சயமே. இவ்விதமாக ஸகல விபரீத அதர்மப்பிரவாஹ-வேகத்தையும் அலக்ஷியஞ்செய்து எதிர்த்து நீந்தி ஸம்ஸார-துக்கத்திலிருந்து கரையேறுகின்ற தார்மிகர்களின் ஸந்ததிகளே இக்கலியுகக் கடைசியில் மிஞ்சி தர்ம-மூர்த்திகளாக விளங்குவார்கள். அதர்மக்கொள்கை தடித்துப்போய் அட்டஹாஸஞ்செய்து வருபவர்களெல்லோரும் அக்காலத்தில் இருந்த இடமே தெரியாமல் முன் சொல்லியபடி அழிந்துபோய்விடுவார்கள் அழிவில்லாமல் ஸ்திரமாய் எந்நாளுமுள்ளவர்கள் தார்மிகர்களே தவிர மற்றவர்களல்ல. தார்மிகர்களைப் பூராவும் கெடுத்துவிடும்படியான எந்தக் காரியமும் முடிவில் பலிக்கமாட்டாதென்பதே ஸத்யம். அப்படி கெடுத்துவிடுவதான உத்தேசத்துடன் செய்யப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியும் பெரும் பாபமேயாகும். ஏதோ ஜனங்களுக்கு நன்மை செய்வதாக மோஹங்கொண்டு தர்ம-விரோதமான சட்டமேற்படும்படி முயற்சித்து

வந்தவர்களெல்லோரும் விவேகமில்லாமையால் கொடும்-பாபத்தையே செய்து வந்திருக்கின்றார்கள். இப்பெரும் பாபத்திலிருந்து இவர்களுக்குக் கொஞ்சமாவது விடுதலையுண்டாக வேண்டுமானால் இவர்களும் இனியாவது நல்வழியில் திரும்பி தார்மிகர்களுடன் ஒற்றுமையாயிருந்து அச்சட்டம் உடனே ரத்தாகி விடும்படியான பிரயத்தினததைச் செய்யவேண்டிய தவசியம். அறியாமையால் அகக்ரம-வழியில் இறங்கி தகுதியில்லாத காரியத்தைச் செய்தவர்கள் அப்பால் நன்-மார்க்கத்தில் பிரவேசித்து தங்களுடைய முன் அக்கிரம-காரியத்தினால் தீங்கு விளையாமல் செய்துகொள்வதே புத்தியுள்ளோர்களுக்கு லக்ஷணமேயல்லாமல், முன் கெட்ட வழியில் தங்களுக்கு ஏற்பட்ட வீண்-வீம்பை மேன்மேலும் கொண்டுசெலுத்துவது அவர்களுக்கு அழகுமல்ல, ஹிதமுமல்ல, பெருந்தன்மையும் ஆகாது.

5. ஆபத் தர்மம்

இவ்வித விபரீதச் சட்டம் உடனே பூராவும் ரத்தாக வேண்டியதே ராஜாங்கததாரகளுள்பட எல்லோருக்கும் நன்மையாகும். ஒருக்கால் டலர்களின் அதர்மக்கொள்கைகளினால் அது பூராவும் ரத்தாகககூடாமலிருந்தாலும், அதிலுள்ள கிரிமினல்-தண்டனை-விஷயமான பாகத்தையாவது நீக்கிவிடச்செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இந்த பாகத்தை உடனே நீக்காவிட்டால், ராஜாங்கததின் தண்டனை-சக்திக்கே மதிப்புக் கெட்டுப்போய், தண்டனையை தண்டனையாகவே ஜனங்கள் எண்ணாமலிருந்துவிடும்படி நேரிடும். இது ராஜாங்கத்திற்கு கௌரவக்குறைவேயன்றி மேன்மையல்ல. இனி அதிகமாகச் சொல்வது அனாவசியமாகும். தங்களுடைய தத்கால-நிலைமையில் ராஜ்ய-தந்திர (Politics) விஷயமாக ஒன்றிலும் தலையிடாதவர்களுங்கூட, ஜனங்களின் தர்ம-நாசத்திலும் அதோ-கதியிலும் முடிவடையக்கூடிய ராஜாங்கச் செய்கைகளை ஆக்ஷே

பித்து, உண்மையைத் துலக்கிக்காட்டவேண்டியதாக ஆபத்-தர்மம் ஏற்பட்டுவிடுகின்றது. தவிரவும், இப்படி உண்மையை வெளிப்படுத்துவதின் மூலமாய் கொடிய அனர்த்தங்களைத் தடுக்க யத்தனிப்பது ராஜ்ய-தந்திரத்தில் பிரவேசித்ததாக மாட்டாது.

விவாஹச் சட்டம் ராஜ்யதந்திர-நன்மையைக் கருதி ராஜாங்கத்தினால் ஸ்வயமாய் நிர்மாணஞ் செய்யப்பட்டதல்ல. இது ஏதோ ஜனங்களின் கோரிக்கையின்பேரில் செய்யப்பட்ட சட்டமாகவே காட்டப்பட்டிருக்கின்றது. இந்தியா-சட்ட-ஸபையில் ஆசார-சீர்திருத்தக்காரர்களின் (Social Reformers) யத்னத்தின்பேரில் சட்ட-மசோதா ஒரு விதமாய் கொண்டுவரப்பட்டது. அது விஷயமாக ஜனங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்காக என்பதாக சில கம்மிஷன்-விசாரணை நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. ஆதியில் சட்டப்படிக்குள்ள அனுமதியின்பேரில் கொண்டுவரப்பட்ட மசோதா போதாதென்றெண்ணி அவ்வனுமதிக்கு மாறுதலாகவும், சட்டப்படி அதிகாரமில்லாமலும், அம்மசோதாவில் கண்டிருந்த 12 வயதை 14 ஆக அதிகப்படுத்தி விடுவதற்கும், அதில் காணுமலிருந்த கிரிமினல் தண்டனைக்குள்ள விபரத்தையும் சேர்த்துவிடுவதற்கும் ஆசார-சீர்திருத்தக்காரர்களுக்கு நியாய-விரோதமான ஒரு அவகாசம் இவ்விசாரணையினால் கொடுபட்டதாக முடிவாயிற்றேயொழிய, தார்மிகர்களின் எதிரிடையான அபிப்பிராயத்திற்கு நியாயப்படிக்குள்ள மதிப்பைக் கொடுத்ததாக வெளியாகவில்லை. அனேகமாய் மேற்கண்ட விசாரணை-நடவடிக்கைகளில் மிலேச்சக் கல்வியில் தேர்ந்திருக்கின்ற சில பிரதான லௌகிகர்களின் அபிப்பிராயம் மாத்திரம் தேடப்பட்டதேயல்லாமல் உண்மையான ஹிந்துக்களின் அபிப்பிராயம் லக்ஷியஞ்செய்யப்படவுமில்லை, தெரிந்துகொள்ளப்படவுமில்லை. இந்தப்படி விசாரிக்கப்பட்டவர்களுக்குள் தார்மிகப்பார்வையுள்ளவர்கள் மிகவும் ஸ்வல்பமாகவும் மிலேச்சப்பார்வை

யுள்ளோர்களே அதிகமாகவுமிருந்ததால், அம்மெஜாரிட்டியார்களுடைய அபிப்பிராயத்தையே ஜனங்களின் அபிப்பிராயமென்று பாவித்துக்கொண்டு சட்டமேற்படும்படியான மேல்-காரியங்கள் நடத்தப்பட்டன. அன்றியும், ஜனங்களுக்குள்ளாகவே மெஜாரிடியார்களின் அபிப்பிராயம் சட்டத்திற்கு அனுகூலமாயிருப்பதாகச் சொல்வதை வாஸ்தவமென்று வைத்துக்கொண்டாலுங்கூட, மெஜாரிடியார்களின் கொள்கையை அனுஸரித்து மைனாரிடியார்களாகிய தார்மிகர்களின் தர்மாசரணையைக் கெடுத்துவிடலாமாவென்று கவர்ன்மெண்டார் ஆலோசிக்கத் தவறிவிட்டார்கள்.

6, வீண் ஸமாதானம்

சட்ட-மசோதாவில் கண்ட விஷயம் மத-ஸம்பந்தப்பட்டதென்ற காரணத்தினாலேயே அது-விஷயமாய் கம்மிஷன்-விசாரணை-நடவடிக்கைகள் செய்யப்பட்டனவென்பது நிச்சயம். அப்பால் ராஜாங்கத்தார் வெளியிட்டபடி கேவல சரீர-ஸம்பந்தமான லௌகிக (Social) நன்மையைக் கருதியே சட்டம் ஏற்பட்டதென்பது உண்மையாயிருக்கக்கூடுமானால் கம்மிஷன் நியமிப்பதற்காவது விசாரணை செய்வதற்காவது காரணமே இருந்திருப்பதில்லை. மசோதாவில் கண்ட 12 வயதுக்கு முன்பாக ஸ்திரீயிடம் புருஷனுக்கு ஸங்கம் கூடாதென்பதற்கு முன்னமேயே அனாவசியமாகச் சட்டம் ஏற்பட்டிருக்கின்றது. அதுவுமல்லாமல், ஸ்திரீ ருதுவாவதற்கு முன்பாக புருஷ-ஸங்கம் ஏற்பட்டால் அது கெடுதல்தானென்பதைத் தெரிந்துகொள்ள கம்மிஷனும் வேண்டாம். விசாரணையும் வேண்டாம். இவ்வித விஷயங்களைப்பற்றி விசாரணை செய்யப்படவுமில்லை. மைனாரிடியைச் சேர்ந்தவர்களானாலும் சில ஜனங்களுடைய அபிப்பிராயம் வேறுபட்டிருந்தால் மதவிஷயத்தில் ராஜாங்கத்தார்கள் பிரவேசிப்பதற்கு இடமில்லையென்று தெரிந்துகொண்டதின் பேரில் இச்சட்டத்திற்கு மத-ஸம்பந்தமில்லையென்று வீண்-

ஸமாதானம் சொல்லப்படுகிறதேயல்லாமல், உண்மையில் சட்ட மசோதா ஸபைக்கு வந்தது முதல் அதை மத-ஸம்பந்தப்பட்டதாக எண்ணியே கவர்ன்மெண்டாராலும் மற்றவர்களாலும் ஸகல நடவடிக்கைகளும் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன தவிரவும் கேவல-சரீர-ஸம்பந்தமான லௌகிக-நன்மையை மாத்திரம் கருதி மதாசரணை-விஷயத்தில் பிரவேசித்து சட்டத்தை ஏற்படுத்த ராஜாங்கத்தார்களுக்கு எவ்விதத்திலும் அதிகாரமில்லை. ஹிந்து-விவாஹம் லௌகிக-ஒப்பந்தமில்லையென்றும் அது பூராவும் மத-ஸம்பந்தமான வைதிக - ஸம்ஸ்காரமென்றும் (Religious Sacrament) ராஜாங்கத்தார்களுக்கு ஸ்பஷ்டமாய் தெரிந்திருக்கக்கூடும். மெயின் முதலான இங்கிலீஷ்காரர் களாலேயே ஹிந்து-லா-புஸ்தகங்களில் இது வியக்தப்படுத்தப் பட்டும் ராஜாங்கத்தின் ஸகல நியாய ஸ்தலங்களிலும் நெடு நாளாகவே நன்ருக ஊர்ஜிதப்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றது. இவ்விதமான வைதிக-ஸம்ஸ்காரமாகிய விவாஹத்திற்கும் கேவல சரீரப்புணர்ச்சிக்கும் நேர்-ஸம்பந்தமே கிடையாதென்று முன் பலவாருகக் காட்டப்பட்டிருக்கின்ற விபரங்களும் அனேக மாய் தெரிந்திருக்கக்கூடியவை. அன்றியும் மேற்சொல்லியபடி மத-ஸம்பந்தப்பட்ட விஷயத்தில் சில சரீர-காரியங்கள் உண்மையில் நடந்தேறிவருகிறதாயிருக்கக்கூடிய விஷயங் களிலும் ராஜாங்கத்தார்கள் பிரவேசிப்பது நியாயமாகாது. மஹம்மதியர்களுக்குள் ஆண்-குழந்தைகளுக்கும் பாலகர் களுக்கும் மத-ஸம்பந்தமாகவே சுன்னத் (Circumcission) விசேஷம் நடத்தப்பட்டு வருவதில், அது அக்கிரமமான சரீர-ஹிம்ஸையென்று சொல்லிக்கொண்டு சட்ட-ஸபையிலுள்ள மஹம்மதீயர்களில்லாத மெஜாரிடி மெம்பர்கள் ஒன்று சேர்ந்து இனி சுன்னத்-காரியம் நடக்கவே கூடாது, நடத்திஞல் தண்டனையேற்படுமென்று சட்டத்தை உண்டாக்கிவைத்து விட்டால், மைனரிடியார்களாகிய இத்தேச-மஹம்மதீயர்கள் அச்சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அக்காரியத்தைச் செய்யாமல்

நிறுத்திவிடுவார்களா ? மாட்டார்கள். இப்படியிருக்கையில் வாஸ்தவத்தில் சரீர–ஸம்பந்தத்திற்கே இடமில்லாமலிருக்கின்ற ஹிந்து – வைதிக – விவாஹ – விஷயத்தில் தார்மிகர்கள் மைனரிடியைச் சேர்ந்தவர்களானாலும் பிரகிருத விவாஹ–சட்டத்திற்குட்பட்டு அவர்களுடைய உத்தமமான தர்மாசாரங்களைக் கெடுத்துக்கொண்டுவிடுவார்களா ? மாட்டார்களென்றே உறுதியாய் ராஜாங்கத்தார்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7. தார்மிகர் கடமை

ஆகையால் சட்டம் முடிவில் ஏற்பட்டிருக்கிற நிலைமையில் சட்டசபையில் அதன் பிரவேசத்திற்குள்ள சட்ட-ஸம்பந்தமான முன் அனுமதியே அதற்கு உண்டாகாததினால், அது செல்லக் கூடியதேயில்லை என்பதுடன், அது உண்மையில் மத-ஸம்பந்தமான தென்றே வியக்தமாயிருப்பதாலும், அது விக்டோரியா மஹாராணியின் பிரதிஜ்ஞைக்கு முற்றிலும் விரோதப் படுவதாலும், யாரை முக்கியமாய் உத்தேசித்து, அதாவது, யாருடைய நன்மைக்கென்று இச்சட்டம் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட தார்மிகர்களின் கொள்கைக்கு எதிரிடையாக அது செல்லக்கூடாததாலும், தார்மிகர்களின் அனுஷ்டானத்திற்காகவே உத்தேசிக்கப்பட்ட சட்டத்தை தார்மிகரில்லாதவர்கள் கூடி நிர்மாணஞ் செய்வதற்கு அதிகாரமே யில்லாததினாலும், இச்சட்டம் ஏற்பட்டு விட்டதாக சொல்லப்பட்டாலுங்கூட, அது தார்மிகர்களின் சாசுவதமான நன்மைகளைக் கெடுத்து அவர்களையும் அவர்களுடைய பின்-ஸந்ததிகளையும் துர்கதியில் தள்ளிவிடக்கூடியதாயிருப்பதால் அதை அனுஸரித்து அவர்கள் நடந்து வருவது ஸாத்தியப் படக்கூடாமலிருப்பதாலும், ராஜாங்கத்தார்கள் எவ்வகையிலாவது இச்சட்டத்தை மேன்மேலும் அது அனர்த்தங்களை விளைவிக்க வொட்டாமல், உடனே ரத்துசெய்து விடவேண்டு

மென்பதே ஸித்தம். இப்படி ரத்தாகும்படியாக லௌகிக ஸாமர்த்தியத்துடன் கூடிய தார்மிக - கிருஹஸ்தர்கள் எல்லோரும் ஏகோபித்து, ஈசுவரர்-பேரிலேயே பொறுப்பை வைத்து, விசேஷப் பிரயத்தினங்களை இனி கால-தாமதமன்னி யில் சீக்கிரத்தில் செய்யவேண்டியதவசியம்-

---

அத்யாயம் 12

தர்ம ரக்ஷணம்

1. ஹிந்து மதத்தின் உத்தேசம்

இக்கலியுகம் இரவுயுகமென்றும், இதில் தர்ம-ஜ்ஞான-விஷயமான இருளே எங்குமிருக்குமென்றும், வேத-சாஸ்திர பிரகாசத்தை முன்னிட்டு தனக்கு இருளில்லாமல் செய்து கொண்டு, நற்கதி ஏற்படும்படியான முயற்சிகளைச் செய்ய வேண்டியதே புத்தியுள்ள மனிதனுடைய காரியமென்றும் முன் 8வது அத்தியாயக் கடைசியில் காண்பிக்கப்பட்டது. வேத-சாஸ்திரத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற தத்துவ-விபரங்களைத் தெரிந்து கொள்வதும் அவைகளுக்கு அனுகுண மாகவே நடந்து வந்து குறிப்பிட்ட அப்பியாஸங்களைச் செய்து தனக்கு ஆத்மானுபூதியை ஏற்படுத்திக்கொள்வதும் உண்மை யான ஹிந்துவின் கடமையாகும். மோக்ஷமே ஹிந்துவுக்கு முக்கிய புருஷார்த்தமாகவும், தர்மம் அதற்கு நெருங்கிய ஸாதனமான புருஷார்த்தமாகவுமிருப்பதில், தர்ம-மோக்ஷங்கள் ஸித்திக்கும் பொருட்டுள்ள யத்தினத்திலேயே ஒவ்வொரு ஹிந்துவும் இருந்து வரவேண்டியதவசியம். ஹிந்துக்கொள்கை யின் பிரகாரம் மற்ற இரண்டு புருஷார்த்தங்களாகிய அர்த்தமும் காமமும் எது வரையில் தர்மத்திற்கு அனுகூலமாயிருக்கக் கூடியவைகளோ அம்மட்டில்தான் அவைகளின் புருஷார்த்தத் தன்மை ஒப்புக்கொள்ளப்படுகின்றது. தர்மத்திற்கு ஸாதன மாயிருக்கக்கூடாத அர்த்தமாவது காமமாவது புருஷார்த்தமே ஆகமாட்டாது. ஹிந்துக்களல்லாதவர்களுக்கு மோக்ஷஸ்வருபம் இன்னதென்றே தெரியாது. மோக்ஷத்திற்கு ஸாதனமாகிய தர்ம-புருஷார்த்தம் அடையத்தகுந்ததென்ற விபரமும் அவர் களுக்குத் தெரியமாட்டாது. தர்ம-மோக்ஷங்களுக்கு ஸம்பந்த மன்னியிலிருந்து வருகின்ற ஸாமான்ய அர்த்த-காமங்களையே அவர்கள் புருஷார்த்தங்களென்று எண்ணிக்கொண்டு இவை

களை ஸம்பாதிப்பதிலேயே பெரும்பாலும் முயற்சியுள்ளவர்களா யிருக்கின்றார்கள். இவ்வித மற்ற மதஸ்தர்களும் கடவுள் உண்டென்றும் கடவுளிருக்கிற உயர்ந்த உலகத்திற்குப் போய் அங்கு சுகித்திருக்கலாமென்றும் சொன்ன போதிலும், அப்படி உயர்ந்த உலக-சுகங்களில் விருப்பமும் காமமேயாகுமாதலாலும், கடவுளுடன் ஏகத்வ-ஸித்திரூபமான மோக்ஷமும் அதற்கு ஸாதன-ரூபமான தர்மமும் அவர்களுடைய உத்தேசத்தில் இல்லையாதலாலும், அர்த்த-காமங்களுக்கு மேலான புருஷார்த்தமே அவர்களுக்குக் கிடையாதென்பதே ஸித்தம். இப்படி ஹிந்துவுடையவும் ஹிந்துவல்லாதவருடையவும் முடிவான உத்தேசங்கள் வெவ்வேறு என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். முடிவான உத்தேசங்கள் வேறு பட்டிருக்குங்கால், அவைகளைத்தேடும் மார்க்கங்களும் அவைகளுக்கு ஸம்பந்தமான ஸாதனங்களும் வேறு பட்டேயிருக்குமென்பது நிச்சயம். ஆகையால், ஹிந்துக்களின் வேத-சாஸ்திர-விதிகள் மற்ற தேசங்களெங்குமில்லாதவிதமாய் தனியாயிருக்கின்றனவென்பதும் நியாயந்தான்.

தூங்குகிற காலந்தவிர மற்ற எல்லாக்காலங்களிலும் இடை விடாமல் ஸாதாரண மனிதனால் மனஸினாலும், வாக்கினாலும், சரீரத்தினாலும் செய்யப்படுகின்ற ஒவ்வொரு கர்மாவும், அது நல்லதானாலும் கெடுதலானாலும், அதன் பயனை தகுந்த காலத்தில் பின்னால் கொடுக்குமென்ற தத்துவத்தையும், இக் கர்மாக்கள் விருத்தியாகிச் சேர்ந்துகொண்டேயிருந்து ஸஞ்சிதம் என்று சொல்லப்பட்டுவருவதில் இவைகளில் குறிப்பிட்ட பிராரப்தமென்ற சிலவற்றின் பலன்களை அனுபவிப்பதற்காக ஜன்மம் அப்போதைக்கப்போது ஏற்படுகிறதென்ற விபரத்தை யும், அறிந்துகொள்ளாமலே ஹிந்துக்களல்லாத ஜனங்கள் உலகத்திலிருந்து வருகின்றார்கள். ஹிந்துப்பார்வையில் ஒவ்வொரு மனிதனுடைய ஜன்மத்திலும் முக்கியமாய் அடியிற் கண்ட நான்குவித காரியங்கள் செய்யப்படவேண்டியவை :—

1. பிராரப்த-கர்ம-பலத்தை அனுபவிப்பது.

2. கர்ம – பந்தத்திலிருந்து விடுதலையை அதாவது மோக்ஷத்தை அடைவதற்குள்ள பிரயத்தினங்களைச்செய்வது.

3 அப்பிரயத்தினங்களைச் செய்யக்கூடாவிடில், கெட்ட-ஸஞ்சித-கர்மாக்கள் தொலைவதற்கும் நல்ல-ஸஞ்சித-கர்மாக்கள் விருத்தியாவதற்கும் வழி தேடுவது.

4. இனி புதிதான (ஆகாமி) கெட்ட-கர்மாவாவது ஏற்படாமலிருக்கும் விதமாக நடந்துவருவது

இவைகளில் முதலாவதான பிராரப்த - கர்ம - பலத்தின் அனுபவம் கட்டாயமாய் நடந்தே தீரும். இதற்காக மனிதன் விசேஷ முயற்சியைச் செய்யவேண்டியதில்லை. மேற்கண்ட 2, 3, 4, லக்க காரியங்கள்தான் மனிதனால் முயற்சியின் பேரில் செய்யப்பட வேண்டியவைகள். கர்ம - கதி - விபரத்தையே அறியாத ஹிந்துக்களல்லாதவர்களுக்கு இம்மூன்று லக்க காரியங்களிலும் மனப்பூர்வமாய் பிரவிருத்தியே கிடையாது. எப்படியும் மேலே குறிப்பிட்டபடி கட்டாயமாயுண்டாகக்கூடிய பிராரப்தானுபவ - விஷயமாகவே அவர்கள் பெரும்பாலும் முயற்சியுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஹிந்துக்களின் கொள்கையில் எந்த விஷயத்தில் கொஞ்சமேனும் கவலைப்படவேண்டிய காரணமே கிடையாதோ, அந்த விஷயத்தில் மற்றவர்கள் அதிகமாய் கவலைப்படுவதுமன்னியில், மனித - ஜன்மத்தில் முக்கியமாய்ச் செய்யப்படவேண்டிய மேற்கண்ட 2, 3, 4, லக்க காரியங்களே ஹிந்துக்களின் காரியங்களாயிருக்குங்கால், அவைகள் உண்டென்ற விபரமே தெரியக்கூடாத அஞ்ஞான-ஸ்திதியில் ஹிந்துக்களல்லாத மற்ற இவ்வுலக-ஜனங்கள் பூராவுமிருந்து வருகின்றார்கள். மேற்சொல்லிய 1 முதல் 4 வரையுள்ள லக்கங்களில் முதலாவது லக்கம் மாத்திரம் விசேஷமாக மத-ஸம்பந்தமில்லாதது. மற்ற

மூன்றும் மத-ஸம்பந்தமான காரியங்களே இம்மூன்றுமே மேற்கண்டபடி ஹிந்துப் பார்வையில் பிரதான-காரியங்களாயிருப்பதுபற்றி, ஹிந்துக்களின் உலக-நடவடிக்கை பூராவும் மத-ஸம்பந்தமானதாகவே ஏற்பட்டிருக்கின்றது. தாய் வயிற்றில் வருகிற கர்ப்பாதான-காலம் முதல் ச்மசானம் போய்ச் சேருகிற மரண-காலம் வரையில் ஹிந்துவுடைய ஒவ்வொரு காரியத்திலும் மத-ஸம்பந்தமிருந்தேதீரும். ஹிந்துவின் அபிப்பிராயத்தில் மதம் ஸம்பந்தப்படாத காரியம் மனுஷ்ய காரியமேயில்லை. கேவல லௌகிக-காரியம் பசு-பக்ஷிமிருகாதிகளின் காரியத்திற்கு ஒப்பாகும். இவ்விதமாக, ஹிந்துக்களுக்கும் மற்றவர்களுக்கும் முக்கிய கொள்கைகளிலும, முடிவான உத்தேசங்களிலும், கைக்கொள்ளவேண்டிய அப்பியாஸங்களிலும், ஏராளமான வேறுபாடுகளிருந்து வருவதினுல், ஹிந்து-சாஸ்திர-விதிகளின் அருமையையாவது அவைகளை அனுஸரித்து நடந்துவரக்கூடியவர்களின் யோக்கியதையையாவது நன்ருக அறிந்துகொள்ள மற்ற மதஸ்தர்களுக்கு சக்தியிருக்க மாட்டாது தங்களுடைய கொள்கைகளும் செய்கைகளுமே சரியென்றும், ஹிந்து-சாஸ்திரமெல்லாம் தப்பென்றுமே அவர்களுடைய இருளடைந்த அறியா புத்திகளில் எப்போதும் தோன்றிக்கொண்டேயிருக்கும். அவர்கள் பேரில் குற்றஞ் சொல்வதற்கில்லை.

2. அதைர்யம் வேண்டாம்

ஹிந்துக்களல்லாதவர்கள் மிலேச்சர்களென்று பொதுவாய் சொல்லப்படுகின்றார்கள். இக்கலியுகம் பிறந்த பிறகுதான் நாளடைவில் மிலேச்சக்கொள்கைகள் கொஞ்சங்கொஞ்சமாக இத்தேசத்தில் பிரவேசித்து இங்கெங்கும் கலியிருள் பரவும்படி செய்தன. இத்தேசத்தை முன் எப்போதும் பாதுகாத்து வந்தவர்களும் விசேஷ-தர்ம-ரக்ஷணையில் ஊக்கமுள்ளவர்களுமான க்ஷத்திரிய-வீரர்கள் அப்பாலுமிருந்திருப்பார்களேயானுல்,

மிலேச்சர்களின் அதிகாரத்திற்காவது மிலேச்சக்கொள்கைகளுக்காவது இத்தேசத்தில் பிரவேசிக்க முடிந்திருக்கமாட்டாது. கலியின் பிரவேசத்திற்கு இடங்கொடுக்க உத்தேசங்கொண்டே பகவான் ஸ்ரீ கிருஷ்ணாவதார-ரூபமாகவும் மற்றும் பலவிதங்களிலும் ஒற்றுமையாயிருந்து துவாபர-யுகக்கடைசியில் மஹாபாரத-யுத்தத்தில் க்ஷத்திரியர்களான அநேக யுத்த-வீரர்களும் மடிந்துபோகும்படிக்கும், பாக்கியிருந்த யாதவர்களும் வேறு விதமாக மடியும் படிக்கும், பாண்டவாதிகளும் பின்னால் மஹா பிரஸ்தானஞ் செய்துவிடும்படிக்கும், இவ்விதமாக இத்தேசம் பூராவும் அனாதையாய் துறந்து கிடக்கும்படிக்கும், செய்துவிட்டதின்பேரில், அப்பால் மிலேச்சர்கள் காலக்கிரமத்தில் மெல்ல மெல்லப் பிரவேசித்து இப்பரதகண்டத்தை வியாபிததுக் கொண்டார்கள். அஸ்திர-சஸ்திரங்களில் தேர்ச்சியுள்ள ஒரு தகுந்த க்ஷத்திரிய-வீரன் இந்நாட்டில் பாக்கி இருந்தாலும் மிலேச்சர்களால் இப்படி வியாபித்துக்கொள்ள முடியாது. அதாவது, ஈசுவரரே காலரூபியாகயிருந்திருக்கவில்லையானால், கலியிருள் அதிகமாகத் தடிக்க இடமில்லாமல் போயிருக்கும்.

இப்படி ஈசுவரர் காலரூபியாயிருந்தாலும், ஜீவர்கள் இவ்விருளை விலக்கிகொண்டு நன்மார்க்கத்தில் வேலைசெய்யும்படியாகஏற்கனவே வேத-சாஸ்திரங்களைக் கொடுத்திருப்பதுமல்லாமல் எப்பொழுதுமே ஸஜ்ஜனங்களை பாதுகாப்பவரும் அவரேயாதலால், இவ்விருளை கவனிக்காமலே நல்வழியிற்சென்று நடப்பு-ஜன்மத்தைக் கிருதார்த்தப்படுத்திக்கொள்வதற்கும் இடமேற்பட்டிருக்கின்றது. இவ்வித விபரீத காலத்திலும் தர்ம-மார்க்கத்தில் முயலுவோர் எவரோ அவரை சீக்கிரத்தில் கைதூக்கிவிட்டு நற்கதியில் சேர்ப்பிவிக்கவும் அவ்வீசுவரரே தயாராகவுமிருக்கின்றார். ஆகையால், கலிகாலமேயென்று கொஞ்சங்கூட அஞ்சாமல் சாஸ்திர-வழியில் பிரயத்தினங்களைச் செய்துவருவதே உண்மையான ஹிந்துக்களின் முக்கிய காரியம். இக்காலத்தில் விபரீத-மார்க்கத்திலிருப்பவர்கள் வெகு

பெயர்களேயென்று யோசிக்கவும் வேண்டாம். அனேகமாய் ஜனங்கள் கூட்டங்கூட்டமாக காலவேகத்தை அநுஸரித்தே விபரீத மார்க்கங்களில் சென்று பெரும் ஸம்ஸாரக்கடலில் விழுந்து ஆழ்ந்து கிடப்பார்கள். இப்படிக்கன்னியில் தனக்குள்ள ஸ்வல்ப பலத்தையும் ஸ்வாதந்திரியத்தையும் நல்வழியில் உபயோகப்படுத்தி ஈசுவரர் பேரிலேயே பாரத்தை வைத்துக் காலத்திற்கு எதிரிடையாக நீந்திபோக யத்தனிப்பவரை ஈசுவரர் கைவிடமாட்டார். அவரே நன்முயற்சியுள்ளோரைக் கரை கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார். பெருவெள்ளத்தில் எதிர்த்து நீந்திக் கரைசேர்பவர்கள் ஸ்வல்பமாகத்தானிருக்கக் கூடும். இப்படி சாஸ்திர-மார்க்கத்தில் யத்தனிப்பவருக்கு தர்மமும் ஈசுவரானுக்கிரகமுந்தான் பலமேயொழிய ஆள்கூட்டம் பலமாகாது.

3. யுக தர்மம்

கலிக்கு விரோதமாக தர்ம-வழியில் முயலுவோர்களுக்கு ஈசுவரர் அநுகூலமாகவே கருணை புரிந்தக் கூடுமானால் அவரே கலியின் பிரவேசத்திற்கும் எப்படி ஒத்தாசையாயிருந்திருக்கலாமென்று நினைக்கலாம். இப்படி ஒத்தாசையாயிருந்ததற்கும் அவருடைய கருணை தான் காரணம். இந்த உண்மையையும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். புண்ணிய-பாப-ரூபமான கர்மாக்கள் பூராவும் மனித-ஜன்மத்தில் தான் நடத்தப்படுகின்றன. மனிதனுக்கு கர்மாவினால் ஏற்படக்கூடிய கீழான மிருகாதி-ஸ்தானங்களும் மேலான தேவாதி-ஸ்தானங்களும் கர்ம-பலன்களை மாத்திரம் அநுபவிக்கவேண்டிய போக-ஸ்தானங்களேயன்றி புதிதாகக் கர்மாக்கள் செய்யப்படக்கூடிய ஸ்தானங்கள் அல்ல. ஆகையால், ஒவ்வொரு ஜீவனும் நல்ல கர்மாக்களைச்செய்து சித்த சுத்தியைப் பெற்று நற்கதியை அடையவேண்டுமானால் மனித-ஜன்மத்தில் தான் கர்மாக்களைச் செய்யக்கூடியதாயிருக்கின்றது. மற்ற மேல்-கீழ் - போக - ஸ்தானங்களுக்குப்போயிருக்கின்ற ஜீவர்கள்

எல்லோரும் அந்தந்த ஸ்தானங்களில் அவரவர்களுக்குள்ள சுக-துக்க-போகங்களை அனுபவித்து முடிந்தவுடன் மறுபடியும் மனித-ஜன்மத்திற்கே திரும்பி வந்து தங்கள் தங்களுடைய பூர்வ வாஸனா-கர்மாக்களுக்குத் தக்கபடி மறுபடியும் கர்மாக்களைச்செய்து வருகின்றார்கள். இப்படி திரும்பவும் மனித-ஜன்மத்தை அடைபவர்கள் அப்பூர்வவாஸனாகர்மாக்களுக்கு ஒத்ததான அதாவது அனுகூலமான தேசத்திலும் காலத்திலும் ஜன-வகுப்புகளிலும் தனித்தனியே பிறவியை அடைவார்கள். அஜ்ஞானமும் அதர்மமும் மிகுதியாய் ஸ்வபாவத்தில் குடிகொண்டிருக்கின்ற ஜீவன் அவ்விரண்டும் அதிகரித்திருக்கக்கூடிய காலத்தில் ஜன்மத்தை அடைந்தால் தான் தன்னுடைய ஸ்வபாவத்திற்கு அனுஸரணையாக நடந்து வர முடியும். ஸ்வபாவ குணங்களை வெளிக்காட்டக்கூடாத காலத்தில் தன்னுடைய செய்கையே ஸாத்தியப்படக்கூடியதில்லை. இருளடர்ந்த இரவில் ஓடி ஆடித்திரிந்து அட்டஹாஸஞ் செய்யக்கூடிய பிசாச-ராக்ஷஸர்களும், துஷ்ட மிருகங்களும், பாம்பு, எலி, கோட்டான் வௌவால் முதலான பிராணிகளும் வெளிச்சமுள்ள பகலில் அனேகமாய் வெளிக்கிளம்புகிறதில்லை. பகலில் இவைகள் அடங்கி ஒடுக்கித் தென்படாமலே இருக்கின்றன. இவைகளின் ஸ்வபாவச் செய்கைகளுக்கு இருள் அவசியம். வெளிச்சத்தில் வேலை செய்யக்கூடிய ஜீவர்களுக்கு பகலும் இருட்டில் வேலை செய்யக்கூடிய ஜீவர்களுக்கு இரவும் இயற்கையாகவே ஏற்பட்டிருப்பது போல், அஜ்ஞான-இருளும் அதர்மச்செய்கைகளும் அதிகரித்திருக்கக்கூடிய ஜீவர்களின் ஸ்வபாவ-நடத்தைகளுக்கு இடங்கொடுத்துப்போக்குவிட உத்தேசங்கொண்டே ஈசுவரரால் அந்த ஜீவர்கள் பேரிலுள்ள கருணையினால் மஹாயுகத்தில் ஒரு சிறு பாகமாகக் கலியுகமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்கலியுகத்தில்தான் மிகுதியான துஷ்ட-ஸ்வபாவமும் மூடத்தனமும் உள்ள ஜீவர்கள் மனித-ஜன்மங்களை யெடுத்துத் தங்களுடைய ஸ்திதிக்குத் தகுதியான கர்மாக்களையுஞ் செய்து கர்ம-பல-போகங்களையும்

மனித-ரூபத்தில் அனுபவிப்பார்கள். இவர்களில் அனேகர் கொஞ்சம் குறைவுள்ள அதர்மங்கலந்த மற்ற யுகங்களில் மனிதர்களாயிருப்பது சிரமப்படும். அவரவர்களின் முன்னுள்ள பாப-கர்மங்களுக்குத் தக்கபடி மற்ற யுகங்களில் மிருகம், பக்ஷி முதலான பிராணிகளாக அல்லது மரம், புல், பூண்டு ரூபமாக இருந்து வருவார்கள். கலியுகத்தில்தான் அவர் களுடைய மூடத்தனத்துடன் சேர்ந்த கெட்ட ஸ்வபாவங் களுக்குத் தக்கவிதங்களில் மனித-ரூபத்தில் அவர்கள் பூராவும் நடந்துவரகூடியது. இவ்விதம் நடந்துவரும்போதும் கொடிய கெட்ட செய்கைகளை மறுபடியும் ஜாஸ்தியாய் செய்யக்கூடிய தால், இவர்கள் இக்கலியுக-மத்தியிலும் மேற்கண்ட கீழான ஜன்மங்களை அடிக்கடி அடையக்கூடும்.

இவ்வித ஜீவர்களும் விசேஷப் பிரயாஸையின்பேரில் நல்வழியில் திரும்புவதற்கும் இந்த யுகத்தில் இடமுண்டு. இக்கலியில் அதர்மம் முக்கால பங்காகவும் தர்மம் கால் பங்காகவுமிருப்பதால், பல ஜனங்கள் போய்க்கொண்டிருக்கிற கெட்ட மார்க்கங்களில் போகாமல் சிலர் மாத்திரம் சென்று கொண்டிருக்கிற தர்ம-மார்க்கத்தில் செல்வதற்குள்ள விசேஷ பிரயத்தினங்களைச் செய்பவர்களுக்கு நற்கதியும் ஏற்படும். இப்படி நல்வழியில் திரும்பி நற்கதியடையவேண்டிய பிரயத்தினங்களை மனித-ஜன்மத்திலேயே செய்யவேண்டியதா யிருப்பதினால்தான் கொடிய துஷ்ட-ஸ்வபாவமுள்ள ஜீவர்களும் அவர்களுக்கு உசிதமான காலத்தில் மனித-ஜன்மத்தை அடைந்து அவ்வித யத்தினங்களைச் செய்து கரையேறும் பொருட்டு அவர்களுடைய ஸ்வபாவத்திற்குத் தகுந்த விதமாய் கருணா-மூர்த்தியான ஈசுவரரால் கலிப்பிரவேசத்திற்குள்ள அனுகூலகாரியங்களும் முன் குறிப்பிட்டபடி செய்யப்பட்டன.

அஜ்ஞானமும் கெட்ட ஸ்வபாவமும் மிக்க அதிகமாயிருந் தாலும் அதிக நற்குணக்கலப்புமுள்ளவர்களான ஜீவர்கள் அவரவர்களின் நற்குண - தாரதம்மியத்திற்குத் தக்கபடி

திரேதா-யுகத்திலும் துவாபர-யுகத்திலும் மனித-ஜன்மங்களை அடையக்கூடும். அதர்மத்துடன் கூடியிருக்கின்ற ஜீவர்கள் கிருத-யுகத்தில் மாத்திரம் மனித-ஜன்மத்தை அடையவே முடியாது. அந்த யுகத்தில் தர்மமே பூராவும், அதாவது, நான்கு பாதங்களுடனும் இவ்வுலகத்தில் விளங்கக்கூடியதால், அதர்ம-ஸ்வபாவமுள்ள ஜீவர்கள் அந்த யுகத்தில் அவரவர்களின் பூர்வ-கர்மாக்களுக்கு ஒத்தபடி மனித-ஜன்மமில்லாமல் வேறு ஜன்மங்களிலாவது வேறு உலகங்களிலாவது இருந்து வருவார்கள். ஸாமான்ய-விசேஷ-தர்மங்கள் பூராவுமடங்கியதும் ஈசுவரரின் ஆஜ்ஞா-ரூபங்களுமாகிய சுருதி-ஸ்மிருதி-விதிகள் கொஞ்சங்கூடதவராமல் இப்பூலோகத்தில் இப்பரதகண்டத்தில் மனிதர்களால் கிருதயுகத்தில்தான் அனுஷ்டிக்கப்பட்டு வரும். இப்பரதகண்டந்தவிர மற்ற தேசங்கள் யாவும் அந்த யுகத்தில் சில பாகங்கள் ஸமுத்திரத்தினால் மூடப்பட்டும், மற்ற பாகங்கள் மனிதனைத் தவிர மற்றப் பிராணிகளாலேயே வியாபிக்கப்பட்டு அவைகளின் போக-பூமியாகவுமிருந்துவரும். இப்படி யாவதற்குள்ள காரியங்களுக்கு ஈசுவரரே ஸ்ரீ கல்கியவதார-ரூபமாக ஒத்தாசையாக இருந்து இவ்வுலகமெங்கும் இக்கலியுக முடிவு காலத்தில் அதர்மம் கலந்த ஸ்வபாவத்துடன் கூடிய மனிதர்களே யில்லாமல் செய்தும், உத்தம தார்மிகர்களான சில மனிதர்கள் மாத்திரம் இப்பரதகண்டத்தில் குறிப்பிட்ட புண்ணிய-தீரத்தில் வஸித்து வந்து பின் வரப்போகிற தர்ம-யுகத்திற்குள்ள மனித-ஸந்ததிகளுக்கு மூல-காரணர்களாய் இருக்கும்படி ஏற்படுத்தியும், ஈசுவரர் காலரூபியாகவே அப்பொழுதும் விளங்குவார்.

யுகங்களுக்கு மத்தியிலுள்ள ஸந்தியா-காலங்களுள்பட 43,80,000 வருஷங்கள் அடங்கிய மஹாயுகத்தில் 10ல் 4 பங்கு காலம் கிருதயுக-காலம், 3 பங்கு காலம் திரேதாயுக-காலம், 2 பங்கு காலம் துவாபரயுக-காலம், 1 பங்கு காலம் கலியுக-காலம் தர்மமே பூர்ணமாயிருக்கின்ற கிருதயுகம் முடிவானதற்கப்பால்

திரேதா யுகத்தில் கால் பங்கு அதர்மமும் முக்கால் பங்கு தர்மமுமாக இருப்பதில், அவ்வதர்மத்தின் தூண்டுதலினால் விசேஷ-தர்மங்களிலிருந்து சிலர்கள் நழுவிப்போய் இப்பரத கண்டத்தைவிட்டு வெளியேறி மற்ற பிரதேசங்களை கொஞ்சங் கொஞ்சமாக வியாபித்துவருவார்கள். இக்காலங்களில் இவர்களிடம் ஸாமான்ய-தர்மங்கள் தானிருந்துவரும். பரதகண்டத்தில் ஸாமான்ய-விசேஷ-தர்மங்கள் திரேதாயுகத்தில் முக்கால் பங்கும், துவாபரயுகத்தில் அரைப்பங்கும், இருப்பதுபோல் வெளிப்பிரதேசங்களிலும் ஜனங்களிடத்தில் இப்பங்கு வீதப்படியே ஸாமான்ய-தர்மம் காணப்படும். இவ்விதமாகவே கலியுகத்தில் கால்பங்கு தர்மமும் முக்கால் பங்கு அதர்மமும் எங்சம் காணப்படும். இந்தப்படி அதர்மம் அதிகமாவதோடு, அதர்மம் மிகுந்த மனிதர்களும் நாளடைவில் அதிகரித்து வருவார்கள்.

4. தாய் நாடு

கிருதயுகத்தில் தர்மமே குடிகொண்ட தர்ம-மூர்த்திகளான ஸ்வல்ப ஜனங்கள் இப்பூலோகத்திலிருப்பார்கள். அவர்கள் தங்கியிருப்பதற்கு இப்பரதகண்டமே போதுமானது. வெளிப்பிரதேசங்களில் மனிதன் குடியேறிப்போவதற்கு அவசியமேயில்லை, அதர்மமும் காலக்கிரமத்தில் அதிகரிப்பதினால்தான் பலவித ஸ்வபாவமுள்ள ஜீவர்களும் மனித-ஜன்மத்தை அடைந்து ஜனங்களின் கூட்டம் ஜாஸ்தியாகி வெளியிடங்களுக்குக் குடியேறிப்போகும்படி புத்தியுண்டாகின்றது. இப்படி வெளியிடங்களுக்குப்போய் ஸாமான்ய தர்மங்களை மாத்திரம் கைக்கொண்டும், அர்த்த-காமங்களையே புருஷார்த்தங்களாக எண்ணிக்கொண்டும், மத-ஸம்பந்தமில்லாமலே லௌகிக-நாகரீகங்களை மாத்திரம் விருத்தி செய்துகொண்டுமிருக்கின்ற மனித-வாழ்க்கைக்கெல்லாம் முன் குறிப்பிட்டபடி கலியுகக் கடைசியில் ஏகதேசமான மஹாயுகப் பிரளயத்தினாலும் வேறு விதங்களினாலும், முடிவு ஏற்பட்டுவிடும். இவ்விதமாகவே,

இவ்வுலகத்தில் மற்ற தேசங்கள் யாவற்றிலும் ஒவ்வொரு மஹாயுகத்திலும் கிருதயுகத்தில் சில பாகங்கள் முன்னுலேயே ஸமுத்திரத்தினுல் வியாபிக்கப்பட்டும், மற்றவைகளில் மனிதர்களேயில்லாமலும், திரேதா-துவாபர-கலியுகங்களில் கொஞ்சங் கொஞ்சமாக ஸமுத்திரம் பின் வாங்கி தேசங்கள் விஸ்தாரப் பட்டும, மனிதர்கள் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வந்தும், கலியின் முடிவில் மறுபடியும் மனிதப் பூண்டே யில்லாமல் காலி செய்யப்பட்டும் வரும். மத ஸம்பந்தத்துடன் கூடிய நாகரீகத்தையுடைய இப்பரதகண்ட மனித-வாழ்க்கை ஒன்று தான் எந்நாளும் அழிவின்றி இப்பூலோகமுள்ளவரையில் நிலை நின்று வரக்கூடியது காலங்களுக்குத் தக்கபடி பல தேசங் களும், தேசஸ்தர்களும், நாகரீகங்களும், மதங்களும், புதிது புதிதாக உண்டாகியும் அழிந்துகொண்டுமிருக்கின்ற உலக-விசித்திரங்களை ஸாக்ஷியாக நின்று பார்த்துக்கொண்டு ஒன்றிலும் பற்றுதலில்லாமலும், ஒன்றினுலும் பயமாவது மோஹமாவது ஏற்படாமலும், எக்காலமும் ஸ்திரமாயிருந்து வருகிறதுமல்லாமல், தர்ம-மோக்ஷ-ஸாதனமானதும், ஸநாதனமானதும், அருமையானதுமான நாகரீகத்துடன் கூடியுமிருக்கின்ற இப்பரதகண்ட-நாடே உலகத்தில் எல்லோருக்கும் தாய்-தேசமென்பதையும் யாரும், அதிலும் ஹிந்துக்கள் எக்காரணத்தினுலும் மறக்கக்கூடாது.

5. விசேஷ தர்மம்

பொதுவாக, இப்பரதகண்டத்தை கர்ம-பூமியென்றும் மற்ற தேசங்களை போக-பூமிகளென்றும் சொல்வதுண்டு. இங்கு கர்ம மென்றால் வர்ணுசிரம-தர்மங்களடங்கிய விசேஷ-தர்மமென்று அர்த்தம். ஸாமான்ய-தர்மங்கள் மற்ற தேசங்களிலுமுள்ளவை தான். ஸாமான்ய-தர்மத்தினுல் (ordinary mortality) மனிதனுக்கு மனிதத்தன்மை மாத்திரம் ஸித்திக்கின்றது. ஸாமான்ய தர்மத்தைக்கூட கைக்கொள்ளாதவன் இரண்டு காலுடன்

கூடிய மிருகமேயாவன். மனிதன் ஸம்ஸார-துக்கங்களைக் கடந்து மேலான தன்னுடைய வாஸ்தவ-ஸ்தானத்திற்குப் போகவேண்டுமானால், ஸாமான்ய-தர்மத்துடன் விசேஷ-தர்மத்தையும் ஆசரித்து வரவேண்டிய தவசியமாயிருப்பதாலும் அந்த மேலான ஆத்ம-ஸ்தானத்திற்குப்போவதே மனித-ஜன்மத்தின் உத்தேசமானதாலும், ஸாமான்ய - தர்மத்தை மாத்திரம் ஆசரித்துக்கொண்டு விசேஷ-வர்ணாசிரம-தர்மத்தை ஆசரிக்காமலிருப்பவனை கர்மானுஷ்டாதா என்றாவது தார்மிகனென்றாவது சொல்லுகிறதில்லை. இந்தியா என்ற இப்பரத கண்டத்திற்கு வெளிப்பட்ட தேசங்களில் விசேஷ-தர்மங்களுக்கே மார்க்கமில்லாத காரணத்தினாலும், ஹிந்துக்கள் ஸாமான்ய-தர்மத்தை மாத்திரம் போதுமான கர்மமென்று எண்ணாமலிருப்பதினாலும், மற்ற தேசங்கள் கர்ம-பூமிகள் இல்லை யென்றும், போகபூமிகளே யென்றும் சொல்லப்பட்டு வருகின்றனவென்று அறிந்துகொள்ளவேண்டும். ஸம்ஸாரமாகிய ஆழமுள்ள ஜலத்தில் கீழே அமிழ்ந்துபோய் மூச்சு-முட்டி கஷ்டப்படாமல் மேலே மிதந்திருக்கும்படியாக மாத்திரம் செய்துகொள்ள ஸாமான்ய-தர்மம் உபயோகப்படும் கரைபோய்ச் சேருவதற்கு ஸாமான்ய-தர்மம் மாத்திரம் போதாது. கரையை அடையவேண்டுமானால் நீஞ்சிப்போக வேண்டியதவசியம். காலதோஷத்தினால் ஜலத்திற்கு விபரீத-வேகம் ஏற்பட்டுவிட்டால், எதிர்த்து நீஞ்சிப்போவதும் அவசியமாகும். இக்கலி-காலத்தில் இவ்வித விபரீத-வேகம் வெகு ஜாஸ்தியாயிருப்பதால், விசேஷப்பிரயாசையெடுத்து அதிகமான அதர்ம-வேகத்திற்கு எதிரிடையாக நீஞ்சினாலொழிய நற்கதி ஏற்படமாட்டாது. பொய் சொல்லாமலும், திருடாமலும், வேறு கெட்ட செய்கைகளைச் செய்யாமலுமிருந்தால், அதாவது, ஸாமான்ய-தர்மங்களை ஆசரித்து வந்தால், நற்கதி கிடைத்துவிடுமென்று புதுப்படிப்புள்ள ஹிந்துக்களில் அனேகர்கள் புலம்பிக்கொண்டு விசேஷ வர்ணாசிரம தர்மாசரணையில் பிரவிருத்தியேயில்லாமல்

பாஷண்டர்களாயிருந்துவருகின்றார்கள். விசேஷ யத்தினங்களைச் செய்யாமல் பெரும் காவேரிப் பிரவாஹத்தில் மத்தியில் மிதந்திருக்க மாத்திரம் தெரிந்துகொண்டால் ஸமுத்திரந்தான் போய்சேரலாமென்பதையும் கரைபோய்ச் சேருவது ஸாத்தியப்படாதென்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. அவர்களின் தப்புக்கொள்கையே நாளுக்குநாள் விருத்தியடைந்து இந்நாடெங்கும் விசேஷ.தர்மாசரணை மிகவும் குறைந்து கொண்டே வருகின்றது.

6. விபரீதக்கல்வி

இதற்கெல்லாம் ஒரு முக்கிய காரணம் ஸநாதனமான ஆர்ய-வித்தியாப்பியாஸக்கிரமமே மறைவடைந்தும், மிலேச்சப் படிப்பு வழிகளிலேயே எல்லோருக்கும் குழந்தைப்பர்வம் முதல் அப்பியாஸம் உறுதிப்பட்டு மிருந்திருப்பதேயாகும். இவ்வித அப்பியாஸமுள்ளவர்களே காலகிரமத்தில் பெரியோர்களாகி இவர்களாலேயே பின்னுள்ள சிறுவர்கள் எல்லோரும் மிலேச்சக் கல்வி வழியிலேயே தயார் செய்யப்பட்டும் வருகின்றார்கள். உண்மையான சாஸ்திரீய மார்க்கஸ்தர்களுக்கும், அவர்களின் கொள்கைகளுக்கும் வார்த்தைகளுக்கும் மதிப்புக்குறைவே அதிகரித்தும் வருகின்றது. பெரும்பாலும் ஜனங்கள் தாங்கள் கரையேறுமலே பெரும் ஸம்ஸாரக்கடலிலேயே விழுந்து கிடக்கும்படியான ஸ்திதியையே தங்களுக்கு ஸ்திரப்படுத்திக் கொண்டுவருகின்றார்கள். பிராசீனமான ஆர்ய-வித்யாப்பியாஸ மார்க்கத்தில் சிறுவர்களை திருப்பிவிட்டாலொழிய எல்லோருக்கும் துற்கதிதானென்பதே நிச்சயம். ஆனால் கால வசத்தினால் இந்த அபிப்பிராயத்தை வெகு பேர்கள் சரி என்று ஒப்புக்கொள்ளாமல் கண்மூடித்தனமாகவே ஒருவர் சென்ற வழியில் மற்றவர் சென்றுகொண்டே அனர்த்தக் குழியில் விழுந்து கெட்டுப்போவார்கள். சரியென்று ஒப்புக் கொள்கிறவர்களுக்குள்ளும் அனேகமாய் மற்றவர்கள்

எல்லோருக்கும் போதித்து அவர்களும் நல்வழியில் திரும்பிய பின்புதான் தாங்கள் அந்த வழியில் போவதென்ற எண்ணம் சிலர்களிடமிருந்து வருகின்றது இதுவும் சரியன்று. நல்லது என்று தனக்குத் தென்படுகின்ற மார்க்கத்தில் தான் உடனே திரும்பிப்போய்க்கொண்டே கூடியவரையில் மற்றவர்களையும் அந்த வழியில் திருப்புவதற்கு யத்தினஞ்செய்வதுதான் புத்திசாலியின் லக்ஷணம். பெரும்வெள்ளத்தில் வேகத்துடன் தள்ளி அடித்துக்கொண்டு போகப் டுகின்ற ஸகலஜனங்களும் திரும்பிய பிறகுதான் தான் ஜலத்தை எதிர்த்து நீஞ்சிக் கரையைப்பார்த்துப் போகவேண்டுமென்று காலதாமதஞ் செய்தால் தன்னுடைய உத்தேசம் நிறைவேருமலே போய் விடும்.

மற்ற எல்லா விஷயங்களிலும் போலவே, முக்கியமாய் வித்யாப்பியாஸ-விஷயத்திலும் இத்தேசத்தில் முதலில் நல்வழியில் திரும்பிச்செல்லவேண்டியவர் பிராஹ்மணர்தான். கால-தோஷத்தினுல் இவர் தாஞகவே திரும்பமாட்டாரென்று உத்தேசித்தே ஈசுவரர் இவர் கட்டாயத்தின் பேரிலாவது திரும்பட்டுமென்று பலவிதமாய் இக்காலத்தில் அனுக்கிரஹஞ் செய்திருக்கின்ருரென்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. எங்கும் பிராஹ்மணனுக்கு லௌகிக உத்தியோகங் கொடுப்பதைக் குறைத்துவருவதே பிராஹ்மணனுக்கு ஒரு அனுகூல-விஷயமென்றே தெரிந்துகொள்ளவேண்டும். இக் காலத்திய ஆங்கிலேய-பள்ளிக்கூடங்கள் மூலமாய் ஏற்படு கின்ற விபரீதக்கல்வியே பிராஹ்மணனைக்கெடுத்து வருகின்றது. அந்தப்பள்ளிக்கூடங்களில் படித்துவருகிற பையன்களை தூண்டிக்கேட்டு பரீக்ஷித்தால், விபரந்தெரியாமல் பிதற்றிவருகின்ற உபாத்தியாயர்கள் மூலமாகவும், தாறு மாருன தப்புவிபரங்களைக் கண்டெழுதப்பட்டிருக்கின்ற புஸ்தகங்கள் மூலமாகவும், அந்தப் பையன்களின் தெளிவு படாத மனதுகளில் ஏறிப்பற்றியிருக்கின்ற விபரீதக்-

கொள்கைகள் ஏராளமாய் வெளியாகும். ஸ்வல்பகாலம் முன் வரையில் ஆங்கிலேயப் பள்ளிக்கூடங்களில் கெடுதல்கள் இவ்வளவு அதிகமாக இருந்ததில்லை. இப்போது சில வருஷங்களாகத்தான் வெகு ஜாஸ்தியாக விபரீதக்கொள்கைகள் அங்கு காணப்படுகின்றன. அனேகமாய் உபாத்தியாயர் களிடம் பையன்களுக்கு அதிக மதிப்பு இருக்கக்கூடியதால், மற்றவர்கள் அப்பையன்களின் தப்பான எண்ணங்களை இக் காலத்தில் சீர்திருத்த யத்தனித்தாலும் அனேகமாய் பிரயோஜனப்படுகிறதில்லை. பொறுமையுடன் நிதானித்துக் கேட்டு குணகுணங்களை ஆராய்ச்சி செய்து தெரிந்து கொள்வதற்கே இக்காலத்திய பையன்களில் அனேகர்களுக்கு யோக்கியதையில்லாமல் போய்விடுகின்றது. அவர்களுடைய புத்திகளில் ஒருவித அவஸரமும், பதட்டமும், பிடிவாதமும் அதிகமாய்க் காணப்படுவதால் மற்றவர் என்ன விபரங்களை யெடுத்துச்சொல்லுகிறாரென்று மனஸில் வாங்கிக்கொள்ளக் கூடிய சக்தியும் அவர்களிடம் குறைந்து விடுகின்றது. இப்படியே நாளுக்கு நாள் மிகுதியாக ஹிந்துக்கள் விபரீதக் கல்வியினால் கெட்டுப்போய்க்கொண்டு வருகின்றார்கள்.

7. ஆஸ்திகர் கடமை

காலவேற்றுமையினால் இது நடக்கக்கூடியதானாலும், சிலர் களாவது ஆர்ய-தர்ம-மார்க்கத்திலிருந்துவரும்படி செய்வது ஆஸ்திகர்களின் கடமையாகும். இக்காலத்திலும் ஆஸ்திக-மதத்தில் சிரத்தையுள்ளோர்கள் சிலர்களிருப்பதால் இவர்கள் தங்களைச்சேர்ந்த பையன்களையாவது ஸநாதன-வித்யாப்பியாஸ கிரமத்தில் சேர்த்துவைத்து அவர்கள் நற்கதிக்கு வரும்படி செய்துவரவேண்டியது அவசியம். பெரு வெள்ளத்தில் தன் ஸமீபத்தில் போய்க்கொண்டிருக்கிறவர்களையாவது கை கொடுத்து இழுத்துத் தன் வழியில் திரும்பும்படி செய்வது பெரும் தர்மமாகும். தன் வறுதிக்குட்பட்டிருந்தும் திரும்பிவர

மறுதளிக்கின்ற பாலகரை பலாத்காரமாய் அடித்தும் திருப்பலாம், தோஷமில்லை. தன்னால் இழுக்கக்கூடாமல் வெகு தூரத்தில் வெகு பேர்கள் பிரவாஹத்தில் அகப்பட்டு விபரீத-மார்க்கங்களில் போய்க்கொண்டிருக்கிறார்களேயென்று துக்கப் படுவதில் பயனில்லை. தன்னால் முடிந்தமட்டில் மற்றவர் களையும் நன்மார்க்கத்தில் திருப்புவதாக உத்தேசங்கொண்டு இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு விசேஷ-தர்மசிந்தனையுள்ளவரும் பிரயாசையெடுத்துக்கொண்டால் வெகு பேர்கள் கடைத்தேறக் க்கூடும். ஆகிலும், கரையேற மார்க்கமில்லாமலே அதிகப் பேர்கள் கால-வசத்தினால் ஸம்ஸாரச் சுழல்களில் அகப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டுதானிருப்பார்கள். இது தடுக்கப்படக் கூடாத விஷயம்.

ஜ்ஞானமுண்டானாலொழிய ஸம்ஸார-துக்கத்திலிருந்து விடுதலை ஏற்படமாட்டாது. இருளடர்ந்த இரவு யுகமாகிய இக்கலியில் அபூர்வமாக எங்கேயாவது சில இடங்களில்தான் வேத-சாஸ்திரத்தின் மூலமாய் பிரகாசிக்கின்ற ஜ்ஞான-தீபம் விளங்குமேயல்லாமல் எங்குமுள்ள இருட்டுப் பூராவும் போகக் கூடியதாக ஸகல இடங்களிலும் தீபங்களைக் காணமுடியாது. ஒருவர் தானிருக்கிற இடத்தில் தீபத்தை வைத்துக்கொண்டு தனக்கு இருட்டில்லாமல் செய்துகொள்ளலாம்; அல்லது, தன் வீடு பூராவையும் பிரகாசப்படுத்திக்கொள்ளலாம். பெரிய பிரபுவாயிருந்தால் தன்னுடைய பட்டணத்தையே, எங்கும் மின்சார-தீபப்பிரகாசத்தினால், ஜ்யோதிர்மயமாகச் செய்து கொள்ளலாம். இவ்வளவுதான் ஸாத்தியப்படுமேயன்றி அமாவாஸை-இரவில் தேசம் பூராவையும் பிரகாசிப்பிவிக்கக் கூடிய யத்தினம் நடக்கமாட்டாது. யத்தனித்தாலும், இருட்டுள்ள இடங்கள்தான் வெகு அதிகமாயிருக்கும். இப்படியே, இக்கலியுகத்தில் முன்-யுகங்களைப்போல் இத்தேசமெங்கும் அதிகமாக ஆர்ய-தர்மம் விளங்கும்படி செய்யவேண்டுமென்று எண்ணுவதிலும் பிரயத்தினஞ்செய்வதிலும் பிரயோஜனமில்லை.

இக்காலத்தில் தர்ம-விஷயமாக அவரவர்களின் தனித்தனி யான யத்தினங்கள்தான் பலிக்கக்கூடியவை, ஸமுதாய-யத்தினங்கள் பலிக்கக்கூடியவையல்ல. அதர்மக்கொள்கைகளைப் பிரசாரப்படுத்தக்கூடிய ஸமுதாய-யத்தினங்களுக்கு இது மிகவும் அனுகூலமான காலம். தர்ம-விரோதமாக கொஞ்சம் சொல்வதற்குள்ளாக அச்சொல் எங்கும் பரவி ஜனங்கள் அங்கீகரித்துப் பிடித்துக்கொண்டு உடனே ஆசரணைக்குக் கொண்டு வந்துவிடுவார்கள். சாஸ்திரப்படிக்குள்ள தர்மத்தை அனுஸரித்து இரவும் பகலும் கத்தினாலும் அநேகமாய் காது கொடுத்துக் கேட்பவர்களே தென்படமாட்டார்கள். இதெல்லாம் காலத்தின் காரியம். ஆகையால், ஆர்ய-தர்மப் பிரசாரத்தில் உத்தேசமுள்ளவர்கள் தங்களுடைய வறுதிக்குட்பட்டவர்களிடமும் தங்களுடைய வாக்கை ஆதரிக்கக்கூடியவர்களிடத்திலும் சொல்லி கொஞ்சங் கொஞ்சமாக ஜனங்களை நல்வழியில் திரும்பச் செய்யலாமே தவிர, பெருங்கூட்டங்களைச் சேர்த்து வைத்தாவது ஸபைகளை ஏற்படுத்தியாவது பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டால் வீண்-காரியமேயாகும்.

அத்யாயம் 13

ஆசாரம்

1. கூட்டத்தின் மதிப்பு

எக்காலத்திலும் ஸாமான்யமான லௌகிகப் பிரவிருத்தி களுக்கு ஸபைகளும் ஜனக்கூட்டங்களும் பிரயோஜனப்படக் கூடியவைகள் எந்த விஷயத்தில் வெகு ஜனங்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு ஆசரணைக்குக்கொண்டு வரலாமோ அந்த விஷயத்தில்தான் பொது ஜனக்கூட்டங்கள் உபயோகமுள்ளவையாகும். எந்த விஷயத்தில் பெரும்பாலும் ஜனங்களுக்கு அறிவு இல்லாமலிருந்து வருகின்றதோ அவ் விஷய-ஸம்பந்தமாக ஜனக்கூட்டத்தைச் சேர்த்து நடத்தக் கூடிய காரியம் யாதொன்றுமே இல்லை. ரத்தினத்தின் மதிப்பும் தோஷமில்லாமையும் தெரியவேண்டுமானால், ரத்தின பரீக்ஷையில் தேர்ந்தவரிடம் போய் அவர் ஒருவர் சொல்வதை சரியென்று அங்கீகரிக்கவேண்டுமேயல்லாமல் ஊர்க்கூட்டங் கூட்டிவைத்து ஊரார்களில் மெஜாரிடியார்களின் அபிப்பிராயப்படி ரத்தினத்திற்கு மதிப்புப்போடுவது உண்டா, அல்லது, அது தோஷமுள்ளது இல்லையென்று தீர்மானிப்பதுண்டா? ஒருக்கால் ஒரு ரத்தின-பரீக்ஷைக்காரரிடம் நம்பிக்கையில்லையானால் மற்றொரு ரத்தின-பரீக்ஷகரிடமே போய்க் கேட்கவேண்டுமேயொழிய ரத்தினம் இன்னதென்றே தெரியாதவரிடம் போய் ரத்தினத்தைக் காட்டிக் கேட்பது வழக்கமில்லை. வியாதி இன்னதென்று தெரிய வேண்டுமானாலும் வியாதியைப்போக்கடிக்க வேண்டுமானாலும் வைத்தியரிடம் கேட்கவேண்டும். சட்டம் தெரியவேண்டு மானால் லாயரைத்தேடிப்போகவேண்டும். இதுபோல், தர்மம் இன்னதென்று தெரியவேண்டுமானால் தர்ம-சாஸ்திரத்தைத் தெரிந்துகொண்டிருக்கின்ற பெரியோரைக்கேட்டுத் தெரிந்து

கொள்ளவேண்டும். இந்தப் பெரியோரின் அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் பதினாயிரம் பெயர்கள் அபிப்பிராயப்பட்டாலும் இவ்வெத-ஜன-அபிப்பிராயம் தள்ளத்தகுந்ததே யொழிய ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல.

एकोऽपि वेदविद्धर्मं यं व्यवस्येद् द्विजोत्तमः ।
स विज्ञेयः परो धर्मो नाज्ञानामुदितोऽयुतैः ॥

இக்கலிகால மஹிமையால், இந்த ஸாமான்ய கிரமங்கூட மாறிப் போய் தர்மாதர்ம விஷயங்களையும் தீர்மானிக்கவும், தர்மங்களை மாற்றவும், பொது ஜனங்களுக்கு அதிகாரமிருப்பதுபோல் பல பெரிய லௌகிக-ஸ்தானங்களிலிருப்போரும் மற்றவர்களும் அடிக்கடி பிதற்றிக்கொண்டு வருகின்றூர்கள். அதர்மம் மிகுந்த கலிகால ஜனக்கூட்டத்தின் தீர்மானத்திற்கு தர்ம-விதிகளை இழுத்துக் கொண்டு வந்து நிறுத்திவிட்டால், அவைகளின் கதி என்ன ஆகுமென்பது ஒருவருக்கும் சொல்லித்தெரியவேண்டியதில்லை. சாஸ்திர ஜ்ஞானக்கண்ணில்லாமல் குருட்டுத்தனமே பிரதானமாயிருந்து தர்ம-விரோதிகளே பெரும்பாலும் அதிகரித்திருக்கக்கூடிய ஸபையிலும், திரௌபதியைப் போல், தர்ம-தேவதைக்கு யாதொரு ஹானியும் கெடுதலும் முடிவில் ஏற்படக்கூடியதில்லையானாலும், தர்ம தேவதையைக் காப்பாற்றுகின்ற பரமாத்மா எப்பொழுதும் விழிப்புடனேயிருக்கிறாரென்பதும் ஸத்தியமானாலும், தத்காலத்தில் வெளிப்பார்வையில் சிற்சில தொந்தரவுகளும் துக்கங்களும், அதனால் தர்மதேவதையின் உக்கிரமான சபதமும் ஏற்படக்கூடியவைகளே. இவ்விதத் தொந்தரவுகளுக்கும் துக்கங்களுக்கும் காரணபூதர்களாயிருப்பவர்களின் துர் கதிகளும் காலாந்தரத்தில் தெரியக்கூடியவைதான். தர்ம தேவதையின் சபதம் வீண்-போகமாட்டாது.

2. விபரீதச்சட்டங்கள்

அன்றியும், அறிவில்லாத ஜனங்கள் நாளுக்குநாள் அதிகமாக அதர்மத்தைக் கைக்கொள்வதுடன் ஸர்க்காரின் சட்டதிட்டம் மூலமாகவும் அதர்மத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும் யத்தனித்து வருகின்றார்கள். ஜனங்கள் அவரவர்களின் தனித்தனி மதஸம்பந்தமான தர்மங்களை அவரவர்கள் அநுஷ்டித்து வருவதில் விபரீதக் கொள்கைகளை உடைய மற்றவர்களால் அவர்களுக்கு இடைஞ்சலாவது கெடுதலாவது ஏற்படாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ராஜாவைச் சேர்ந்தது. இது ராஜாவின் முக்கிய கடமைகளில் ஒன்று. அந்த தர்மங்களை மாற்றுவதற்காவது, ஒருவருடைய தர்மத்தை மற்றவருக்கு ஏற்படுத்துவதற்காவது, தர்மாதர்மங்களை தீர்மானிப்பதற்காவது ராஜாவுக்கு அதிகாரமில்லை. இப்படியிருக்க இத்தேசத்தில் 1857-ம் வருஷம் வரையில் நேரான பிரிடிஷ்-ராஜாங்க ஆளுகையில்லாமல் கம்பெனியார்களின் ஆளுகை நெடுநாள் நடந்து வந்ததில், ஆர்ய-தர்மத்தில் சிரத்தையில்லாத பல நாஸ்திக-கல்பர்களின் தூண்டுதலின்பேரில் 1830-ம் வருஷத்தில் ஸதீ விஷயமாகவும் 1856-ம் வருஷத்தில் விதவைகளின் புனர்-விவாஹ-விஷயமாகவும் சில சட்டங்களேற்பட்டன. அப்பால் விக்டோரியா மஹாராணியின் நேர் ஆளுகை ஏற்பட்டவுடனே இவ்விபரங்களை அறிந்துகொண்டு இனி மத-விஷயத்தில் ராஜாங்கத்தார்கள் பிரவேசிக்கமாட்டார்களென்று பிரஸித்தி பத்திரிகை மூலமாக அம்மஹாராணியின் உறுதியான வாக்கு 1858ம் வருஷத்தில் அளிக்கப்பட்டது. இந்த அருமையான வாக்கு நெடுநாளாக பெரும்பாலும் காப்பாற்றப்பட்டு வந்தது. இப்பால் சில காலங்களாக மறுபடியும் கலியின் ஜாஸ்தி ஏவுதலுக்குட்பட்டு பல தர்ம-விரோதிகள் அஞ்ஞானி-ஜன-கூட்டங்களிலும் லௌகிக-சட்ட-ஸபைகளிலும் ஆர்ய-விவாஹம் முதலியவை ஸம்பந்தமான பெரும் வைதிக-தர்மங்களைக் கெடுத்துவிட அடிக்கடி பலமாய் முயல்கின்றார்கள்.

ஹிந்துக்கொள்கையில் விவாஹம் வைதிக-ஸம்ஸ்காரமென்றும், லௌகிக ஒப்பந்தமில்லையென்றும், நன்றாகத்தெரிந்து கொண்டே இவ்வித விபரீத முயற்சிகளைச் செய்து வருகின்றார்கள். விவாஹத்தை லௌகிக-ஒப்பந்தமாகவே ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற மகம்மதீயர்கள் பார்ஸீகர்கள் கூட இவ்வித சட்டங்கள் தங்களுடைய மதங்களுக்கும் ஆசாரணைகளுக்கும் கொஞ்சம் விரோதப்படக் கூடியதால் அவைகள் தங்களுக்கு வேண்டியதில்லையென்று ஆக்ஷேபிக்கும்போது ஹிந்துவாயிருப்போர்களே இவ்வித விபரீதச் சட்டங்கள் வேண்டுமென்று போராடினால், இவர்களுக்கு மத-விசுவாஸமே இல்லையென்றும், இவர்கள் மானவமானத்திற்கு அஞ்சலே இல்லை என்றும், தங்களுடைய மரியாதையைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ளக்கூடியவர்களில்லையென்றும், கலியால் தூண்டப்பட்ட அதர்ம-நோக்கங்களே இவர்களிடம் குடிகொண்டு இவர்களைக்கெடுத்து வருகிறதென்றுமே சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. பிரிடிஷ்-ராஜாங்கம் இவ்விஷயத்தில் ஒழுங்காகவே இருந்து தர்ம-விரோதமான சட்டங்களை ஏற்படுத்தாமலிருந்தபோதிலும், தங்களுடைய தலைகளில் தாங்களே மண்ணை வாரிப்போட்டுக்கொள்வதுபோல் ஜனங்களே தாங்கள் கெட்டுப்போகும்படியான வழியில் ராஜாங்கத்தைக் கட்டாயப்படுத்தி சட்டங்கள் ஏற்படும்படி செய்து விடுகின்றார்கள். ஆகிலும், பெரிய சக்கிரவர்த்தி-ஸ்தானத்திலிருக்கின்ற ராஜா கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. ஹிந்துக்கள் எல்லோரும் ஏகோபித்து ஒற்றுமையாகயிருந்து அவ்விபரீதச் சட்டங்களை ஏற்படுத்தச் சொன்னால் ஒருக்கால் ஏற்படுத்தலாமென்று எண்ணக்கூடும். நியாயமாய் பார்த்தால், மத-விதிகளின் விஷயத்தில் இப்படிச் செய்வதற்கும் முன் குறிப்பிட்டபடி ராஜாவுக்கு அதிகாரங்கிடையாது. மேலும், மேற்கண்ட விபரீதச் சட்டங்களுக்கு ஒரு காலத்திலும் ஹிந்துக்கள் ஏகோபித்து எல்லோரும் ஒற்றுமையாயிருக்கக்கூடியது

யில்லை. சில ஆஸ்திகர்களாவது ஆக்ஷேபித்துக்கொண்டே யிருப்பார்கள். இவ்வித ஆக்ஷேபணைக்கு எதிரிடையாகவும், ஆஸ்திகர்களையும் தர்ம-விரோதிகளின் வழியில் நடந்துவரும் படியாகக் கட்டாயப்படுத்துகிற விதமாகவும், சட்டம் நிர்மாணம் செய்ய நியாயமேயில்லையென்பதையும், தர்மாதர்ம-விஷயமான தீர்மானம் முன்சொல்லியபடி ஜனங்களுடைய மெஜாரிடியார் களின் அபிப்பிராயத்தைப் பொறுத்ததில்லையென்பதையும், கவர்ன்மெண்டார் ஜ்ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்தால் போதும்.

ஆனால், ஸர்க்கார் மூலமாக விபரீதச் சட்டங்கள் ஏற்படக் கூடாமலிருந்துவிட்டால், ஜனங்கள் ஒழுங்காக இருந்து வருவார்களென்று சொல்வதற்கே இல்லை. பெரும்பாலும் ஜனங்கள் காலதோஷத்தினால் தங்களுடைய அதர்மக்கொள்கை களையே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து விடுவார் களென்றே தோன்றுகின்றது. இவர்களுடைய தர்ம-விரோத மான ஆசரணைகளுக்கு ஒரு பக்க-பலமாக சட்டங்களுமிருந் தால் நல்லதென்று எண்ணுகின்றார்களேயொழிய அச்சட்டங் களேற்பட்டால்தான் தங்களுடைய கொள்கைகளை ஆசரணைக்குக் கொண்டுவருகிறதென்ற எண்ணத்துடன் கக்ஷி செய்யவில்லை. தர்ம-ரூபமான ஈசுவரருடைய அழியக் கூடாத சட்டத்தையே ஒதுக்கிவைத்துவிடுகின்ற ஜனங்கள் மனித-ராஜாங்க-சட்டத்தைப் பெரியதாக பாவித்துக் கட்டுப் படக் கூடியவர்களில்லை. கால-வேகத்தினால் ஸமுத்திரத்தை நோக்கி இழுக்கப்பட்டு பிரவாஹத்தில் போய் கொண்டிருப் பவர்களுக்கு ஜலப்போக்கை அனுஸரித்து கொஞ்சம் காற்றும் வீசியடித்தால் எப்படியோ, அப்படி சட்டமும் அவர்களுடைய போக்குக்குக் கொஞ்சம் உபயோகப்படக் கூடியதேயல்லாமல் அதுவே முக்கியமல்ல. காற்று இல்லாவிட்டாலும், ஜல-வேகம் அவர்களை இழுத்துப் போய்க்கொண்டுதானிருக்கும்.

3. தார்மிகர் கடமை

நெடு நாளாக மத-ஸம்பந்தமாகவே ஹிந்துக்கள் என்ற பெயர் இத்தேசவாஸிகளுக்கிருப்பதாக எண்ணப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், இப்போது மேற்கண்ட பல விதங்களில் ஹிந்துக்களுக்குள்ளாகவே பெரும்பாலும் ஜனங்கள் தர்ம-மார்க்கத்திலிருந்து விலகிப்போய் பேருக்குமாத்திரம் தங்களை ஹிந்துக்களென்று சொல்லிவருகின்றார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக கிரீஸ் முதலான மேற்கு தேசத்து யவனுதிகள் ஸிந்து-தீரத்திலும் அதற்கிப்பாலுள்ள தேசத்திலுமிருந்திருக்கின்ற ஜனங்களை ஸிந்துக்கள்-ஹிந்துக்கள் என்று அழைத்தார்கள். இதை அனுஸரித்து ஹிந்துக்கள் என்ற பெயர் ஸ்திரமாக ஏற்பட்டது. ஆகையால், உண்மையில் இது தீரத்தை ஒட்டி வந்த பெயரேயல்லாமல் மதத்தை அனுஸரித்து வந்த பெயரல்ல. இந்தப்படியே இக்காலத்திலும் மத-ஸம்பந்த மில்லாமலே ஹிந்துக்கள் என்ற பெயர் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதாகவே எண்ணவேண்டியதாயிருக்கின்றது. புதிதாய் ஸமீப காலங்களில் உண்டாகியிருக்கின்ற பௌத்த-மதம், ஜைன-மதம், மகம்மதீய-மதம், கிருஸ்துவ-மதம், ஸொராஸ்ட்ரிய-மதம் முதலானதுகளில் பிரவேசிக்காதவர்களும் இந்த இந்தியா தேச-வாஸிகளுமாயிருப்பவர்களைப் பொதுவாக இந்துக்கள் என்று சொல்வதாகவே உறுதிப்பட்டுவருகின்றது. வேத-சாஸ்திர-தர்மங்களுக்கு நேர் எதிரிடையாகவே நடந்துகொண்டும் தங்களுடைய மார்க்கங்களிலேயே மற்றவர்களையும் சேரும்படி செய்துகொண்டுமிருப்பவர்கள்கூட தங்களை ஹிந்துக்களென்றே சொல்லிக்கொள்கின்றார்கள். கால-ரீதியில் வெகு ஜனக்கூட்டம் அவர்களின் மார்க்கங்களிலேயேயிருக்கக்கூடியதால், தேசத்தை ஒட்டிய பொதுப்பெயராகவே ஹிந்துக்கள் என்ற பெயர் அவர்களுக்கும் இருக்கட்டுமென்றும், தர்ம-புருஷார்த்தத்தைக் கைக்கொண்டு மோக்ஷத்தின் பொருட்டு ஆஸ்திகராயிருந்து வேத-சாஸ்திர-மார்க்கத்தில் முயற்சி

போருக்கு தர்மீ, அல்லது தார்மிகர், என்ற தனிப்பெயர் இனி இருப்பதே சரியென்றும், தோன்றுகிறது.

ஆஸ்திகர்களை இப்படிப் பிரித்துத் தனிப்படுத்தி விட்டால், இவர்களின் நபர்-எண்ணிக்கை மிகவும் குறைந்து விடுமென்றும், எண்ணிக்கைக் குறைவினால் பலக்குறைவும் மதிப்புக் குறைவும் ஏற்படலாமென்றும் சிலர்கள் தப்பாக நினைக்கக் கூடும். இக்கலி-காலத்தில் உத்தம புருஷார்த்தமாகிய மோக்ஷத்திலேயே உண்மையாக உத்தேசங்கொண்டு அதற்காக தர்ம-மார்க்கங்களில் பாடுபடுகின்றவர்கள் ஸ்வல்பமாகத்தான் இருக்கக்கூடும் தர்ம-மோக்ஷங்களில் உத்தேசமேயில்லாமல் விபரீதவழியிற் சென்றுகொண்டிருப்பவர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு தன்னுடைய மதத்தில் ஆள்-கூட்டம் ஜாஸ்தியாக இருக்கிறதென்று மேலுக்குச் சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. நபர்கள் கொஞ்சமாயிருந்தாலும் சுத்தத்தன்மைதான் பெரியது. வீண் கூட்டம் பெரியதாகமாட்டாது இக்கலியுகாந்தத்திலும் சுத்தர்களாயிருக்கின்ற சில ஆஸ்திகர்கள்தான் மிஞ்சப்போகின்றார்கள் அசுத்தமான பெருங்கூட்டமெல்லாம் அழிந்துபோகப்போகிற தென்பதாகவே வெளியாகின்றது. மதிப்பும், பலமும் ஸ்திரத்தன்மையும் குணத்தினாலும் யோக்கியதையினாலும் ஏற்படக்கூடியவைகளேயொழிய ஜாஸ்தி நபர் கூட்டத்தினாலல்ல. ஆகையால், இனி உண்மையான தார்மிகர்கள் எல்லோரும் அஸத் ஸஹவாஸங்களிலிருந்து தங்களை பூராவும் விடுவித்துக்கொண்டு ஒதுங்கியிருந்து தங்களுடைய தர்ம-காரியங்களை கவனித்து நடத்திவருவதே நல்லது. இப்படிச்செய்தாலன்றி இக்காலத்தில் சரியான தர்ம-காரியங்கள் ஸாத்தியப்படக் கூடியவையல்ல. தாக்ஷிண்யத்தினாலாவது பந்து-முறையில் அபிமானத்தினாலாவது அஸத் ஸஹவாஸம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறவரையில் தர்மம் கெட்டுப்போய்க்கொண்டேயிருக்கும். தர்மம் ஸித்திக்கவேண்டுமானால் அதார்மிக கோஷ்டியைவிட்டு

விலகியே தீரவேண்டும். இப்படி விலக தைரியமில்லாதவர்கள் அதார்மிகப்பெருங்கூட்டத்திலேயே யிருந்து வரட்டும். தைரியத்துடன் விலகி தார்மிகராகவேயிருப்பவர் அதார்மிகர்களுடன் எவ்வித நெருங்கிய ஸம்பந்தத்தையும் வைத்துக்கொள்ளக் கூடாது. ஆஹாராதிகளையும் விவாஹம் முதலான ஸம்பந்தங்களையும் தார்மிகர்களுக்குள்ளாகவே நடத்திக்கொள்ளவேண்டியதும் அவசியமாகும்.

4. விபரீத வேஷம்

இக்காலத்தில் அனேகமாய் அதர்ம-நடத்தையில் விசேக்ஷபயமாவது லஜ்ஜையாவது இல்லாமலே ஜனங்கள் நடந்து வருவதால், அதார்மிகர்களிடமிருந்து தார்மிகர்களை பிரித்து எடுப்பது மிகவும் சுலபம் வெளிப்பார்வையிலிருந்தும், நடத்தையிலிருந்தும் இன்னார் தார்மிகர், இன்னார் அதார்மிகரென்று அனேகமாய் கண்டுபிடிக்கலாம். வெளிப்பார்வையும் வார்த்தைகளும் சிலர்களின் விஷயத்தில் அவர்களுடைய உண்மையான உள்-ஸ்வபாவத்திற்கு எதிரிடையாகவுமிருக்கக் கூடும். இப்படி எதிரிடையாயிருக்கூடியது நடத்தையினால் தான் வெளியாகலாம். வெளித்தோற்றம், வார்த்தை, நடத்தை இம்மூன்றிலும் ஒற்றுமையாக தார்மிகத்தன்மை யாரிடத்தில் வெளியாகின்றதோ அவர் தார்மிகர்தான் என்பதில் ஸந்தேஹமில்லை. இப்படியே அம்மூன்றிலும் ஒரே விதமாக தர்ம-விரோதத்தன்மை யாரிடம் வெளியாகின்றதோ அவர் தார்மிகரல்லவென்பதும் நிச்சயமே. எவரிடத்தில் அம்மூன்றும் ஒற்றுமையில்லாமல் சிலதில் தார்மிக-லக்ஷணமும் சிலதில் அதார்மிக-லக்ஷணமும் வெளியாகின்றதோ அவரை இருகக்ஷியிலும் சேர்க்காமல், எந்த விஷயத்தில் அவரிடம் அதார்மிகத்தன்மை காணப்படுகின்றதோ அந்த விஷயத்தில் அவரை சீர்திருத்தக்கூடுமானால் அப்படியே செய்து அவரை தார்மிககோஷ்டியில் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

உண்மையில் சிலர்கள் அந்தரங்கத்தில் வேத-சாஸ்திரங்களில் உறுதியான நம்பிக்கையுள்ள கிருஹஸ்தர்களாகவே இருந்துகொண்டு அவைகளில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளாமலும் கெட்ட ஸஹவாஸத்தினாலும் விபரீத வேஷத்தை தரித்துவருவார்கள். சிலர்கள் தார்மிகர்களைப்போலவே மேல்வேஷத்தை ஒழுங்காக வைத்துக்கொண்டு ஆசரணை-விஷயத்தில் சாஸ்திர-விதிகளை அறியாமல் தனக்குத்தோன்றியபடி பேசிக்கொண்டும் நடந்துகொண்டும் வருவார்கள். வேத-சாஸ்திரங்களில் நம்பிக்கை இல்லாமலே சிலர்கள் தங்களுக்கு சுற்றத்தார்களால் லௌகிக-அஸௌகரியங்கள் உண்டாகக்கூடாதென்று எண்ணி மேல் வேஷத்தை மாத்திரம் சரியாக தரித்துக்கொண்டு அந்தரங்கத்தில் விராத்தியர்களாகவேயிருப்பார்கள். வேத-சாஸ்திர-வாக்கியங்களில் நம்பிக்கையில்லாதவர்களிடம் அந்த நம்பிக்கையை உண்டாக்கிவைப்பது மிகவும் சிரமமான காரியம். அவர்களுடைய புத்திகளின் போக்கை அனுஸரித்து அவர்களின் மனசுகளில் படும்படியான யுக்திகளைச்சொல்லி அவர்களை திருப்பக்கூடுமானால்தான் அவர்கள் நல்வழிக்கு வரக்கூடும்? அந்த நம்பிக்கை அந்தரங்கத்திலிருந்துங்கூட தப்பாகப் பிதற்றிக்கொண்டும் விபரீத-வேஷத்தை தரித்துக்கொண்டிருப்பவர்களை கொஞ்சம் லேசுவாய் திருப்பிவிடலாம். இரண்டொரு உதாஹரணங்களையெடுத்துக்கொள்வோம்.

5. வெளிச்சின்னங்கள்

சிலர்களுக்கு ஸநாதன—ஆர்ய-மதமே உத்தமமென்ற எண்ணமிருந்துகொண்டிருக்கின்றது. அவர்களிடம் ஸ்வதேசாபிமானமும் விசேஷமாய் காணப்படுன்றது. மோக்ஷந்தான் பரம-புருஷார்த்தமென்று சொல்லப்படுகின்ற வார்த்தையிலும் விசுவாஸமிருக்கின்றது. ஈசுவர-பக்தியும் அவர்களிடத்திலிருப்பதாக வெளியாகின்றது. இவ்வளவும் சேர்ந்திருந்தும்

மேல்-பார்வை விபரீதமாக இருந்து வரக்கூடும். தர்ம-கர்மாங்கபூதமானதும் சௌளமென்ற வேதோக்த-ஸம்ஸ்காரத்தினல் வைக்கப்பட்டிருந்ததுமான குடுமியை இப்படிப்பட்டவர்கள் ஏன் கத்திரித்துக்கொள்ளவேண்டும் என்று அவர்களைக் கேட்டால் ஸௌகரியத்தின் பொருட்டென்று சொல்லுகின்றார்கள். கேசத்தை கத்தரித்து விடுவதினல் ஏற்படக்கூடிய இவ்வித ஸௌகர்யத்தை அவர்கள் அன்புடன் நடத்திவருகின்ற பெண் ஜாதிகளுக்குச்செய்து வைக்கிறதில்லை. உண்மையில் ஸௌகர்யமாவது இருக்கிறதோவென்று கவனித்தால், அதுவுமில்லையென்றே வெளியாகும். தலை ரோமத்தை கத்திரித்துக்கொள்கிறவர் முகக்ஷவரத்தை அடிக்கடி செய்து கொள்ளும்படியான தொந்தரவிற்கு உட்படவேண்டியதாயிருக்கின்றது. அனேகர்கள் தலையில் முன் புறத்தில் மாத்திரம் கொஞ்சம் அதிகமாக ரோமத்தை வைத்துக்கொண்டு, அடிக்கடி விசேஷ-எண்ணெய் தடவி வகுடுஎடுத்து வாரிவிட்டுத் தடவிக்கொண்டேயிருக்கிற சிரமத்தைப் பார்த்தால் ஸௌகர்யத்தின் பொருட்டு இப்படிச் செய்கின்றார்கள் என்று சொல்வதற்கில்லை. இங்கிலீஷ்காரர் முதலான மிலேச்ச-மதாந்தரஸ்தர்களை பார்த்துவிட்டு குடுமியில்லாமல் உருண்டைத்தலையுடன் இருப்பதுதான் அழகென்று பிரமைகொண்டு சிகையை அப்புறப்படுத்துகின்றார்கள். இப்படிப்பட்டவரால் தன் முன்புற-ரோமம் ஒழுங்காயிருப்பதிலும், தன் முகம் அழகாயிருக்கிறதென்ற பாவனையிலுமே பாமர-ஸ்திரீகளைப்போல் அதிக காலம் செலவழிக்கப்பட்டுவருகிறதென்றே சொல்வதற்குக் காரணம் அடிக்கடி துலங்குகின்றது. ஒரு சிறு காற்றடித்து முன் ரோமம் கொஞ்சம் கலைந்து விட்டால் துக்கப்பட்டு அதை உடனே சீர்திருத்திக்கொள்கின்றார்.

இவ்வித பிரயாசையினல் இவருடைய முகம் அழகாயிருப்பதாவது வாஸ்தவமோ? அதுவுமில்லை. இவருடைய முகம் அழகாயிருக்கிறதென்ற பாவனை மற்றவர்களை உத்தேசித்தே

யொழிய தன்னை உத்தேசித்தல்ல. மற்றவர்கள் தன்னைப் பார்த்து அழகாயிருப்பதாக எண்ணிக்கொள்ளவேண்டு மென்பதே இவருடைய முக்கிய உத்தேசம், இவருடைய ஆஸ்திக சுற்றத்தார்கள் இவரைப்பார்த்த மாத்திரத்தில் இவர் பேரில் வெறுப்பை அடைகின்றார்களேயல்லாமல் ஸந்தோஷப்படுகின்ற வர்கள் கிடையாது சிகையில்லாமல் தலையைக்கத்தரித்துக் கொண்டு முக க்ஷௌரத்தை மாத்திரம் செய்துகொண்டவரின் முகம் வஸ்திரத்தினால் மூடிக்கொள்ளப்படாத தலையுடன் கூடிய த்விஜ-விதவையின் முகத்தைப்போலவே காண்கின்றதே தவிர அது அழகுள்ளதாகத் தோன்றவில்லை.

அன்றியும், சிகையில்லாமல் செய்யப்பட்ட ஸந்தியா வந்தனம் முதலான ஸகல கர்மங்களும் தேவ-பித்ரு காரியங் களும் வியர்த்தமே யாகும். கர்மங்களைச்செய்து அவைகளின் பிரயோஜனத்தை அடையவேண்டுமானால் அவைகளுக்கு சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட வெளிப்படையான நிபந்தனை களையும் அனுஸரித்து நடந்தால் தான் அந்த பிரயோஜனம் கைகூடும். வெளி வேஷம் முக்கிய மில்லையென்று சொல்லப் படுவது தப்பு. ஒருவித உத்தியோகமுள்ளவருக்கு ராஜாங்க விதிப்படி ஒரு வித வேஷம் குறிப்பிடப்பட்டிருக்குமானால், அவ்வேஷத்தை தரித்துக்கொண்டு அந்த உத்தியோக காரியத் தைச் செய்தால்தான் சம்பளம் கிடைக்கும். போலீஸ்காரர் அவருடைய வேலைக்குள்ள உடுப்புகளைப் போட்டுக்கொள்ள மறுதளித்தால் வேலை போய்விடும். ஒரு அட்வொகேட் அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற சட்டையையாவது தலைப்பாகை யையாவது கௌனையாவது தரித்துக்கொள்ளாமல் கோர்ட்டில் பேச ஆரம்பித்தால் இவருடைய பேச்சை ஜட்ஜ் கேட்க்கப்போவ தில்லை. பேச்சுத்தானே முக்கிய மென்று சொல்வதில் உப யோகமில்லை. இவர் வாங்கிய பீஸ்தொகையை வாபஸ் கொடுத்து விடவேண்டியதுதான். ஆகையால், மேல்-வேஷம் அனாவசியமென்று சொல்வது அறியாமையே யாகும். அவரவர்

களுக்கு வர்ணாசிரம-கிரமப்படி சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்ற விதங்களில் சிகை, வஸ்திரம், புண்ட்ரம், யஜ்ஞோபவீதம், முதலானதுகளை தரித்துவர வேண்டியது மிக்க அவசியம்.

மோக்ஷத்தில் உத்தேசங்கொண்டு வர்ணாசிரம-விசேஷ-தர்ம-மார்க்கத்திலிருப்போர்களை மற்ற இவ்வுலக-ஜனங்களிடமிருந்து பிரித்துக் காண்பிக்கும் பொருட்டு சிகையும் புண்ட்ரமும், இவ்விசேஷ-தார்மிகர்களுக்குள்ளாகவே துவிஜர்களை சூத்ராதிகளிடமிருந்து பிரித்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டு யஜ்ஞோபவீதமும், துவிஜர்களுக்குள் பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசியர்களை தனித்தனியே பிரத்தியேகப்படுத்தித் தெரிந்து கொள்வதற்காக யஜ்ஞோபவீத-திரவியத்திலும் (substance of which it is made) வஸ்திர-தாரணத்திலும் சில குறிப்பிட்ட வித்யாசங்களும், இந்தப்படியே பிரஹ்மசர்ய-கிருஹஸ்த-வானப்பிரஸ்த-ஸன்னியாஸங்களாகிய நான்கு ஆசிரமங்களிலுள்ளவர்களை தனித்தனியாக மேல்-பார்வையிலேயே குறிப்பிட்டுத் தெரிந்துகொள்ளும்படியான ஸௌகரியத்திற்காக வெவ்வேறு விதமான வஸ்திர-தாரணம் முதலான வெளிப்படையான அடையாளங்களும், இப்படியே ஸ்திரீகளின் விஷயத்தில் சில வெளி-சின்னங்களும், ஜனங்களின் நன்மைக்காகவே வேத-சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளை மீறி நடக்கக்கூடாதென்றும், மீறி நடப்போர்கள் பாபிகளாகி தண்டனைக்குள்ளாவார்களென்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டுமிருக்கிறது. அவ்விதிகளை அதிக்கிரமிப்பதினால் ஜனங்களுக்குள் எவ்வளவு ஸந்தேஹங்களும், அஸௌகரியங்களும், கஷ்டங்களும் ஏற்படுமென்பது கொஞ்சம் ஆலோசனையுள்ளோர்களுக்கு நன்கு புலப்படும். வட-அமெரிக்காகண்டத்தில் சில ஸ்டேட்களில் விவாஹமான புருஷர்களெல்லோரும் கைவிரலில் மோதிரத்தை தரித்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்றும், மோதிரமில்லாமல் காணப்படுபவர் கிரிமினல்-தண்டனைக்குள்ளாவார் என்றும் சட்டமேற்பட்டிருக்கிற விஷயம் சிலர்

களுக்குத் தெரியவரலாம் இந்த சட்டத்திற்குள்ள வீர்யங்கூட சாசுவதமான சாஸ்திர-விதிகளுக்கு இல்லாமல் போகா தென்பதை ஆஸ்திகர்கள் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

6. வஸ்த்ர தாரணம்

உத்தர-கர்ணாடக-தேசத்திலும் மஹாராஷ்டிர-தேசத்திலும் எந்தக்காலத்தில் பிரம்மசாரிக்கு ஸாதாரணமாய் விவாஹமாகக் கூடியதோ அந்தக்காலம் அதிக்கிரமித்துப் போய்விட்டால், அப்பால் விதி-முறையில் பிரம்மசாரி தரிக்கவேண்டியபடி வஸ்திரத்தை தரித்துவர லஜ்ஜைபட்டுக்கொண்டு பஞ்சகச்சத் துடன் அனேகர்கள் வஸ்திரந்தரித்து வருகிறார்கள். அதாவது விவாஹ-வயது வந்தும் விவாஹமில்லாமலிருப்பதில் லஜ்ஜை யுடன் வெளிப்பார்வைக்காக வஸ்திர-தாரணத்தை மாற்றிக் கொள்கின்றார்கள். இதுவும் தப்புதான். ஆகிலும், பிரகிருத-விஷயத்தில் இத்தென்தேசத்தில் அநேகர்களுக்கு இயற்கையா யுண்டாகக்கூடிய லஜ்ஜைகூட உண்டாகாமலும் தர்மத்தைக் கெடுத்துக்கொண்டும் பல ஜனங்கள் இருக்கிறார்கள் என்று காட்டுவதற்காக இவ்விபரம் இவ்விடத்தில் சொல்லப்பட்டது. விவாஹமாகியிருந்தும், பெண்ஜாதி-ஸந்ததிகளுடன் கூடவே யிருந்துகொண்டும், 40, 50 வயதுள்ள ஜாதிப் பிராஹ்மணர்கள் கூட கொஞ்சமும் லஜ்ஜையில்லாமலும், சாஸ்திர-விதிகளுக்கு நேர் விரோதமாகவும், தங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களென்ற ஜ்ஞாபகமே யில்லாமலும் அல்லது மற்றவர்களின் அபிப்பிராயங்களை உதாஸீனஞ்செய்தும் பஹிரங்கமாய் தட்டாடை கட்டிக்கொண்டு வீட்டிலிருப்பதுமல்லாமல் வெளியிலும் ஜனங்களுக்கு மத்தியில் வந்து தங்களுடைய கோலத்தை வெளிப்படுத்துகின்றார்கள். இவர்களைப் பார்த்தவர்கள் இவர்களைப்பற்றி லஜ்ஜையும் ஜுகுப்ஸையும் அடைகின்றார்களேயன்றி, இவர்களுடைய தடித்துப்போயிருக்கிற, அல்லது மரத்துப்போயிருக்கிற, புத்திகளில் கொஞ்சங்கூட

லஜ்ஜை ஏற்படுவதில்லை. இக்கோலததுடனேயே ஆலயங்களுக்கும் ஈச்வர-தர்சனத்திற்காக வந்துவிடுகின்றார்கள். ஈச்வருடைய ஆஜ்ஞா-ரூபங்களாகிய ஸ்மிருதி - கட்டளைகளை பேதித்துக்கொண்டே ஈச்வாரின் முன்னிலையில்வந்து நின்றால் ஆலயத்தில் ஈச்வரர் இருக்கிறாரென்ற புத்தியே இவர்களுக்கு இல்லை யென்பதே நிச்சயம் லௌகிக-உத்யோக-முறையில் இவர்களுடைய மேல்-அதிகாரி ஒருவித சட்டத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்கு நேர் எதிரிடையாக நடந்துகொண்டே அந்த அதிகாரியின் முன்பாக இவர்கள் வருகிறதில்லை ஈச்வரரின் கட்டளை விஷயத்தில் இவர்கள் விந்நியாஸமாய் நடந்து வருவதினால் இவர்களுடைய உண்மையான ஈசுவர-பக்தி எவ்வளவென்பதும், இவர்களுடைய விராத்தியத்தன்மை எம்மட்டில் விருத்தியடைந்திருக்கிறதென்பதுமே வெளியாகின்றன.

சாஸ்திரத்தில் குறிப்பிட்டபடி கச்சத்தை தரித்துக்கொள்ளாத கிருஹஸ்தர்கள் நக்னர்களென்றே சொல்லப்படுகின்றார்கள். நக்னத்வ-தோஷத்திற்குள்ள பலனையே காலத்தில் அனுபவிப்பார்கள். இவர்கள் செய்துவருகிறதாகச்சொல்லுகிற ஸகல கர்மாக்களும் உபாஸனைகளும் வீண்-காரியங்களேயாகும். இப்படியே விவாஹமாயிருக்கின்ற சிறுவர்களும் தட்டாடை கட்டிக்கொள்வது பிசகு. பள்ளிக்கூடத்தில் படித்து வருகிற பையனுக்கு கச்சத்தை தரிப்பதில் வெட்கமிருந்தால், விவாஹஞ் செய்துகொள்வதிலும் வெட்கமிருக்கவேண்டியதுண்டு. படித்து வரவேண்டிய காலத்தில் லஜ்ஜையில்லாமல் விவாஹத்தைச் செய்துகொண்டதுபோல் லஜ்ஜையை விட்டொழித்து கச்சத்தையும் தரித்துக்கொள்வதும் அவசியமாகும். தட்டாடை கட்டிக்கொண்டால் ஸௌகரியமாயிருப்பதுபோல் சிலர்கள் சொல்வது உண்டு. வாஸ்தவத்தில், கச்சத்தை தரித்துக்கொள்வதில் இருக்கிற ஸௌகரியம் தட்டாடையில் கிடையாது. தட்டாடையுடன் வேகமாய் நடப்பதே சிரமப்படும். அதிகமாக அடிபட்டு வேஷ்டியும் சீக்கிரத்தில் கிழிந்துபோகும். ஸௌகரியத்துடன்

கூடவே கச்சத்தை தரிக்கவேண்டிய கிருஹஸ்தர் தட்டாடை கட்டிக்கொள்வது யோக்கியமேயில்லை பாபமேயாகும். எந்தெந்த ஆசிரமத்திற்கு எந்தெந்த விதமாக வஸ்திர-தாரணம் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றதோ, அது ஸௌகரியமானாலும் அஸௌகரியமானாலும், அவ்விதமாகவே தரித்துவர வேண்டும் அதில் சோம்பலாவது லஜ்ஜையாவது கூடாது. சாஸ்திரத்தை அனுஸரித்து நடப்பதில் லஜ்ஜை இருப்பது நியாயமே இல்லை. சாஸ்திரத்திற்கு விரோதமாக நடப்பதில் தான் லஜ்ஜைப்படுவது நியாயமும் அவசியமுமாகும்.

வாஸ்தவத்தில் வேத-சாஸ்திரங்களில் கொஞ்சங்கூட விசுவாஸமேயில்லாமல் தார்மிகத்தன்மை முழுவதும் நசித்துப் போயிருக்கிற ஸ்வபாவத்துடன் கூடியவர்கள் சிகா-புண்ட்ரங்களில்லாமலும் வஸ்திரத்தை தாறுமாறாகத் தரித்துக்கொண்டுமிருந்தால் அவர்களிடம் தர்மத்தைச் சொல்லி அவர்களைச் சீர்திருத்த யத்தனிப்பது வீண்-பிரயாஸையைத்தவிர வேறல்ல. அவர்களுடைய ஆந்தரமான விராத்தியத்தன்மை மாறக்கூடாமலிருக்கும்போது, அவர்களுடைய வெளிவேஷத்தை மாத்திரம் மாற்றச் சொல்வதும் தப்புதான். அந்தரங்கத்தில் அதார்மிகர்களாயிருப்போர்கள் எல்லோரும் வெளிப்பார்வையிலும் அதார்மிகர்களாகவே இருக்கவேண்டுமென்பதே கோரத்தகுந்தது. முன்காலங்களில் ஆர்யர்களுக்குள் தர்ம-விருத்தமாக நடப்பவனுக்கு கடுந்தண்டனையை விதிப்பதானல், அவனுடைய சிகையை எடுத்து விடுகிறதுண்டு. இக்காலத்திலும் இது ஒரு விதமாய் நடத்தப்பட்டு வருகிறது. அதார்மிகர்கள், அவர்களுடைய உள் ஸ்வபாவத்திற்குத் தக்கபடி, இவ்வித தண்டனையை தாங்களே தங்களுக்கு விதித்துக்கொள்கிறார்களென்பதும் அனுமோதிக்கத் தகுந்ததே. உள்ளும் புறமும் ஒரேவிதமாயிருப்பதே நல்லது. இதுவே இருகக்ஷிக்காரர்களுக்கும் அனுகூலம். அதிகமான மனஸ்தாபங்களுக்கும் இடம் இராது.

ஆனால், இவ்வித அதார்மிகர்கள் கிட்ட நெருங்காமலிருக்கும்படி தார்மிகர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டியது முக்கியம். எவ்வளவு ஸமீப பந்துவானாலும் ஜ்ஞாதியானாலும் ஒருவருக்கொருவர் ஸஹவாஸம் ஏற்படாமலிருக்கக்கூடிய விதமாகவே நடந்துவரவேண்டும். இவ்விஷயத்தில் தாக்ஷிண்யம் பாராட்டி தார்மிகர்கள் கெட்டுப்போகலாகாது. வர்ணாச்ரமதர்மங்களை அனுஷ்டிக்கும்படியான மஹாபாக்கியத்துடன் கிடைத்திருக்கிற நடப்பு-ஜன்மத்தை வீண்படுத்திக்கொள்ளக்கூடாது. இவ்வித ஜன்மம் கிடைப்பது அரிது. மற்ற ஜன்மங்கள் ஸாதாரணமாய் எப்போதும் கிடைக்கலாம். அதாவது, வர்ணாச்ரம-தர்ம-வியவஸ்தையில்லாத ஜனக்கூட்டங்கள் உலகமெங்குமிருக்கின்றன ; அவைகளின் மத்தியில் ஜன்மங்கள் சுலபமாய் கிடைக்கக்கூடியவை. வர்ணாச்ரம-விபாகங்களடங்கியதும், ஸாக்ஷாத் ஈசுவரரால் ஏற்படுத்தப்பட்டதும், மோக்ஷானந்தப்பிராப்திக்கே மனிதர்களைத் தயார் செய்துவிடக்கூடியதும், இவ்வுலகத்தில் வேறெங்குமில்லாததுமான இந்த ஆர்ய-விசேஷ-தர்மாப்பியாஸ-மஹாவித்தியாசாலையில் நடப்பு-ஜன்மத்தில் சேர்க்கப்பட்டிருப்பதே பெரும் பூர்வ-புண்ணியத்தின் பலன். இவ்வித உத்தம ஜன்மத்தை சரியாய் பிரயோஜனப்படுத்திக்கொண்டு நற்கதி அடையவேண்டியது முக்கியமேயொழிய, சரீர ஸம்பந்தத்தினால் ஏற்படக்கூடிய அஸத்ஸஹவாஸத்தை முன்னிட்டு இவ்வுத்தம ஜன்மத்தை வியர்த்தப்படுத்திக்கொள்வது முட்டாள்தனமேயாகும்.

7. ஸ்வதேசப்பற்று

உண்மையில் மேற்கண்டபடி அதார்மிகர்களாயில்லாமல், முன் சொல்லியபடி ஸ்வதேசாபிமானமும், மதாபிமானமும், பெருந்தன்மையுங்கூடிய ஸ்வபாவமுள்ளவர்கள் தங்களுடைய மாமூலான சொந்த வெளிவேஷங்களை மாற்றிக்கொள்வது நிந்திக்கப்படத்தகுந்தது. கொஞ்சம் அஸௌகரியமாயிருந்தாலுங்கூட தன் சொந்த வேஷத்தை விட்டுவிட்டு அன்ய-

மதஸ்தர்களுடைய வேஷத்தை கைக்கொள்வது தனக்கே மரியாதையில்லை. இங்கலீஷ்காரர்கள் இத்தேசத்திற்கு 150 வருஷத்திற்கு முன்பாகவே வந்திருந்தும், அவர்களுடைய உடை இந்த உஷ்ண தேசத்தில் அஸௌகரியமென்றே அவர்களுக்கு அனுபவத்துடன் தெரிந்தும், அவர்கள்கூட அதை மாற்றிக்கொள்ளவில்லை. மதாபிமானமுள்ள ஹிந்துக்களிலும் அனேகர்கள் தாங்கள் ஹிந்துத்தன்மையை கெட்டியாக பிடித்துக்கொண்டிப்பதுபோல அர்த்தமாகும்படியாக எதற்கும் நேஷனலிடியை (Nationality) காப்பாற்ற வேண்டுமென்று வாயினால் மாத்திரம் ஆங்கில வார்த்தையை திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்களே தவிர, அவர்களுடைய வேஷமும் நடத்தையும் மதாபிமானத்துடன் கலந்த ஹிந்துத் தன்மைக்கு நேர் எதிரிடையாகவே காணப்படுகின்றன. மத-ஸம்பந்தமில்லாமலே முன் குறிப்பிட்டபடி தேச-ஸம்பந்தத்தை மாத்திரம் பாராட்டித தங்களை ஹிந்துக்களென்று சொல்லி வருவார்களேயானால் அவர்களுடைய நடத்தை எப்படியிருந்தாலும் அது வியவஹார-விஷயமாகமாட்டாது. மதத்தினாலேயே தங்களை ஹிந்துக்களென்று அவர்கள் பெரும்பாலும் சொல்லிக்கொண்டிருப்பதால் அவர்களுடைய நடத்தையை ஆக்ஷேபிக்கவேண்டியதாயிருக்கின்றது.

ஹிந்துக்கள் என்ற ஸ்தானத்திலேயே ஒழுங்காக நடத்தக்கூடிய காரியங்களில்கூட ஹிந்துத்தன்மையைக் காட்டாமல் ஜனங்கள் விபரீதமாய் ஆசரித்து வருகின்றார்கள். ஒரு சிறு உதாஹரணத்தையெடுத்துக்கொள்வோம். இப்பரதகண்டம் பூராவிலும் எங்கும் ஹிந்துக்களால் கலியுக வருஷக்கணக்கையே ஏன் ஆசரணைக்குக்கொண்டுவராமல் கிருஸ்து பிறந்து இவ்வளவு வருஷமாயிற்றென்பதையே ஸகல காரியங்களிலும் குறிப்பிடவேண்டும்? ராஜா கிருஸ்துவராக இருப்பதால், ஸர்க்கார் நடவடிக்கை ஸம்பந்தப்பட்டமட்டில் கிருஸ்து-வருஷமே பழக்கத்திலிருந்து வருவதில் ஆக்ஷேபணையில்லை.

ஸர்க்கார் ஸம்பந்தமில்லாமல், ஹிந்துக்களுக்குள்ளாகவேயுள்ள சொந்த வேறு ஸகல நடவடிக்கைகளிலும் A. D. 1929 என்று வருஷத்தைக் குறிப்பிடுவதை விட்டுவிட்டு, கலி 5030 என்று ஏன் குறிப்பிடக்கூடாதோ தெரியவில்லை. கலியுக-வருஷக் கணக்கு இப்பரதகண்டம் பூராவிலும் எல்லா ஹிந்துக்களுக்கும் தெரியக்கூடியது. பசலி, கொல்லம் ஆண்டு சாலீவாஹன சகாப்தம் முதலானவைகள்தான் சில இடங்களில் மாத்திரம் பிரசாரமுள்ளவை கலியுகக்கணக்கு எங்கும் எல்லோருக்கும் பொதுவானதாலும், அதை உபயோகப்படுத்துவதினாலேயே இத்தேசத்தின் மேன்மையும் இத்தேசஸ்தர்களின் நீடித்த வாழ்க்கையும் ஜனங்களின் ஞாபகத்திலிருந்துவரக்கூடிய தாகையாலும், அதைத் தள்ளிவிட்டு கிருஸ்து-வருஷத்தை சொந்தக்காரியங்களில் உபயோகப்படுத்துவது ஹிந்துக்களின் மரியாதைக்கு மிகவும் குறைவையே காட்டுமாதலாலும், இனி யாவது ஹிந்துக்கள் இத்தேசமெங்கும் கலிவருஷத்தையே உபயோகப்படுத்திவருவதே அவசியமென்று தோன்றுகிறது. புதிதாய்க் கட்டப்பட்ட, அல்லது, புதுப்பிவிக்கப்பட்ட சில ஹிந்து தேவாலயங்களில்கூட அக்கட்டிடத்தின், அல்லது, சீர்திருத்தலின் காலத்தைக் குறிப்பிடுவதற்காக கிருஸ்துவ வருஷத்தையே கல்லில் கீறி வைத்திருக்கின்றார்கள். இது கொஞ்சங்கூட ஆலோசனையில்லாமலே செய்யப்பட்ட அக்கிரம காரியம். இதுநிற்க.

வெளிப்பார்வையினாலேயே ஹிந்துக்களை மற்றவர்களிட மிருந்தும் ஹிந்துக்களுக்குள் அவரவர்களின் தனி ஸ்திதி யையும் பிரித்துக்காட்டுவதற்காக முன் குறிப்பிட்டபடி சிகை, புண்ட்ரம், யஜ்ஞோபவீதம், ஒருவித வஸ்திர-தாரணம் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. உபயோகமற்ற லௌகிக-ஸங்கங்களில் ஸம்பந்தமிருப்பதைக் காட்டக்கூடிய லாக்கெட்டு களும் பாட்ஜ்களும் கொடிகளும் அவசியம் தரிக்கப்படவேண்டிய வைதானென்று எண்ணிவருகின்ற ஜனங்களுக்கு வைதிக-

மதஸம்பந்தமிருக்கக்கூடியதைக் காட்டக்கூடிய வெளிப்படையான அடையாளங்கள் மாத்திரம் அனுவசியமென்று தோன்றுவதே கலிபுருஷனுடைய காரியம். இவ்வடையாளங்களை தரித்து வருவதே அவர்களுக்குப் பெருமை யென்பதையும், இவ்வடையாளங்களில்லாமலிருப்பது குறைவைக் காட்டுமென்பதையும், அவர்கள் மறந்துவிட்டார்கள். வாஸ்தவத்தில் தார்மிக-ஹிந்துவாக இருந்து சாஸ்திரப்படிக்குள்ள வர்ணாசிரம-தர்மங்களை அனுஷ்டிக்கவேண்டுமானால் இவ்வடையாளங்கள் அவசியங்களே. தமக்கு ஏற்பட்ட தர்மங்களை அனுஷ்டிக்காமலும் அடையாளங்களை தரிக்காமலுமிருப்பவர் உண்மையில், அதாவது மத-ஸம்பந்தத்தில், ஹிந்துவே ஆகமாட்டார். உண்மையில் ஹிந்துவாக இல்லாதவர் ஹிந்துத் தன்மையை ஒரு பொருட்டாக எண்ணியதுபோல் ஹிந்து "நாஷனலிடி" முக்கிய விஷயமென்று அடிக்கடி சொல்லிவருதற்கு அர்த்தமே இல்லை. அதாவது, வெளிப்படையான ஹிந்து-அடையாளங்களில்லாமலும், ஆந்தரமான ஹிந்து-தர்மங்களில்லாமலும், வாக்கினாலும் தர்ம-விரோதமாகப் பேசிக்கொண்டும், தாங்கள் ஹிந்துக்கள்தானென்று சொல்லிவந்தால், இவர்கள் உண்மையான ஹிந்து கோஷ்டியை விட்டு வெளியேறினவர்களென்றுதான் ஏற்படும்.

அத்யாயம் 14

வைதிகமதம்

1. விபரீத ஸங்கங்கள்

கொஞ்சம் மதாபிமானமிருப்பவர்களும் அளைதமீறி வெளியேறிப்போவதற்கு இக்காலத்தில் பலவித காரணங்கள் கலிபுருஷனுல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கலியுகம் பிறக்கும் வரையில் ஹிந்துக்களுக்குள் விசேஷ-வர்ணாசிரம-தர்மாசரணை விஷயத்தில் பேதங்கள் ஏற்பட்டதேயில்லை. இக்கலி பிறந்த பிறகுதான் நாளடைவில் சைவ-வைஷ்ணவ-மாத்வாதிபேதங்கள் உண்டாகி, தர்மாசரணையிலேயே கொஞ்சங் கொஞ்சம் சுருதி-ஸ்மிருதிகளுக்கு விரோதமாக வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகிலும், அப் பேதங்களினுல் வர்ணாசிரம-தர்மங்களுக்குப் பூரணவும் ஹானி யுண்டாகவில்லை. எல்லோரும் வர்ணாசிரம-தர்மங்களை அனுஷ்டிப்பதாகச் சொல்லிக்கொண்டே சில வித்தியாஸங்களை கற்பித்து வந்தார்கள். இப்பால் கொஞ்சகாலமாக பல ஜனங்கள் ஹிந்து மதத்திலேயே இருப்பதாக வெளிக்காட்டிக்கொண்டு, எப்படி அந்த மதத்திற்கு முக்கிய விசேஷ—தர்மங்களாகிய வர்ணாசிரம—தர்மங்கள் முழுமையும் ஆசரிக்கப்படாமலே விலக்கப்பட்டுப் போகக்கூடுமோ, அப்படியே கலிபுருஷனுடைய ஏவுதலினுல் ஆர்ய-ஸமாஜமென்றும், பிரஹ்ம-ஸமாஜமென்றும், ஆசாரச் சீர்திருத்தச் சங்கமென்றும், பிரஹ்ம—ஜ்ஞான—ஸபையென்றும், ராமகிருஷ்ண-மிஷன் என்றும், சுத்தி-ஸபையென்றும், பஞ்சமர்களைத் தூக்கிவிடுகின்ற மிஷன் என்றும் நானுவித பெயர்களுடன் பிரமையை உண்டாக்கக்கூடிய பல கூட்டங்களையேற்படுத்திக்கொண்டு அவைகள் மூலமாய் அனேக ஆஸ்திகர்களின் சாஸ்திர-ஆராய்ச்சியுள்ள புத்திகளை மயங்கச்செய்து வந்திருக்கின்றார்கள். இக் கூட்டங்கள் யாவும் சுருதி—

ஸ்மிருதிகளை முக்கிய ஆதாரமாகக்கொள்ளாமல் எப்போதும் மாறிக் கொண்டிருக்கக்கூடிய மனிதனுடைய யுக்திகளையே முக்கிய ஆதாரமாக ஏற்படுத்திக்கொண்டு பெரும்பாலும் தர்ம-விரோதமான கொள்கைகளிலும் நடைகளிலும் மனிதனை இறங்கச்செய்து கெடுத்துவந்திருக்கின்றன. [சுருதி-ஸ்மிருதிகளை அனுஸரிக்காத யத்தினங்கள் எக்காலத்திலும் தர்மங்களாகா; அவைகளை அனுஸரிக்காத மனிதனும் தார்மிகனாகமாட்டான்.

श्रुतिस्तु वेदो विज्ञेयो धर्मशास्त्रं तु वै स्मृतिः ।
ते सर्वार्थेष्वमीमांस्ये ताभ्यां धर्मो हि निर्बभौ ॥

योऽवमन्येत ते मूले हेतुशास्त्राश्रयाद् द्विजः ।
स साधुभिर्बहिष्कार्यो नास्तिको वेदनिन्दकः ॥

மேற்கண்ட கூட்டங்களில் அகப்பட்டுக்கொண்டு வெகுபெயர்கள், அதிலும் முக்கியமாய் பிராஹ்மணர்கள், மீட்கப்படாமலே தார்மிகமார்க்கத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். சிலர்கள் மாத்திரம் அவைகளின் உண்மையான நிலைகளை சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு காலத்தில் அவைகளை விட்டு வெளியேறி தப்பித்துக்கொள்கிறார்கள். இப்படி தப்பித்துக் கொண்டவர்களிலும் சிலர்களுடைய விஷயத்தில் முன்—ஸம்பந்த—வாஸனை கொஞ்சங் கொஞ்சம் அவர்களுடைய மனசுகளில் கெட்டியாகப் பற்றியிருப்பதாகவும் வெளியாகின்றது. பிராஹ்மணனல்லாத ஹிந்துக்கள் வேறு விதமாகவும் தர்ம—மார்க்கத்திலிருந்து விலகிக் கெட்டுப்போகும் பொருட்டு பிரஹ்மத்வேஷத்தை முன்னிட்ட கூட்டங்களும் இப்பால் ஏற்பட்டு தர்ம—விரோதமாய்ப் பலவிதங்களில் அனேகர்கள் நடந்து வருகின்றார்கள்-

2. ப்ரஹ்மத்வேஷம்

முன் சொல்லியபடி பிராஹ்மணர்களில் அனேகர்கள் தர்ம-மார்க்கத்திலிருந்து விலகிப்போயிருப்பதினாலேயே நாளடைவில் பிராஹ்மணனிடத்தில் துவேஷ புத்தி மற்ற ஜாதியார்களில் பலர்களுக்கு உண்டாகி இத்தேசத்தில், முக்கியமாய் இத் தென்னாட்டில், அனர்த்தங்கள் விருத்தியடைந்து வருகின்றன. இவ்வித துவேஷம் பிராஹ்மண விஷயத்தில் மாத்திரம் நிற்காமல் வேத-சாஸ்திரங்களுக்கும் ஸம்ஸ்கிருத-பாஷைக்குமே விரோதமாகவும் பெருகச் செய்யப்பட்டு வந்திருக்கின்றது. மனிதனிடத்தில் ஜ்ஞானத்பத்திக்கு எவையெல்லாம் உபயோகப்படக்கூடியவைகளோ அவைகள் மூலமாய் நன்மையை அடைந்து கரையேற வொட்டாமல் செய்யும் பொருட்டே கலிபுருஷன் விபரீத எண்ணங்களை மனிதர்களிடத்தில் உண்டாக்கி வருகின்றான். ஜ்ஞானம் உதிக்கவேண்டுமானால் ஜகத்பிதா-ஸ்தானத்திலிருக்கிற ஸர்வேசுவரராகிய வேத-புருஷனுடைய ஆஜ்ஞா-ரூபங்களான சாஸ்திரங்களில் விசுவாஸமும், வேதசாஸ்திரங்கள் எந்த ஆதி-தேவ-தாய்-பாஷையின் கர்பத்தில் அந்த ஜகத் பிதாவினால் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வித ஸம்ஸ்கிருத-வாணியிடத்தில் மதிப்பும், எந்த குரு மூலமாக வேத-சாஸ்திரங்களிலடங்கிய தத்துவங்கள் பூராவையும் நன்றாகத் தெரிந்துகொண்டு நற்கதியை அடையக் கூடுமோ அப்படிப்பட்ட பிராஹ்மணனிடத்தில் அன்பும், முக்தியின் பொருட்டு அவசியமானவை. மாதா, பிதா, ஆசாரியர் இம் மூவர்களிடத்திலும் பக்தியுள்ளோருக்குத்தான் நற்கதியுண்டு. பிராஹ்மணத்தன்மையிலிருந்து நழுவிக் கெட்டுப்போயிருக்கிறவர்களைக்குறித்து திருப்திக் குறைவாவது மனவருத்தமாவது ஏற்படுவது நியாயந்தான். இந்த மனவருத்தத்தை கிரமமான மார்க்கத்தில் அவர்களிடம் செலுத்தலாமேயொழிய அவர்களுடைய ஜாதியின் பேரிலாவது, அவர்கள் எந்த சாஸ்திரங்களை அனுஸரித்து நடந்துவரத் தவறிவிட்டாரோ அவைகளின்

பேரிலாவது, அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்ற பாஷையின் பேரிலாவது, கோபத்தைச் செலுத்தி துவேஷிப்பது நியாயமல்ல. தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்ற ஒரு மாணாக்கன் அப்பள்ளிக்கூடத்தின் விதிகளை பேதித்துக்கொண்டும், பாடங்களைப் படிக்காமலும், திரிந்துகொண்டிருந்தால், அவனை தூஷித்துக் கண்டிக்கச் செய்யலாமேயல்லாது பள்ளிக்கூட – விதிகளையாவது, தமிழ் – பாஷையையாவது, உபாத்தியாயர்களையாவது தூஷிப்பது கிரமமாகமாட்டாது.

3. ஸம்ஸ்கிருதமும் தமிழும்

அன்றியும், ஸம்ஸ்கிருதத்தையே அவமதித்துவிட்டால் தமிழ்-பாஷையே நற்கதிக்கு உபயோகப்படக்கூடாமல் கெட்டுப் போய்விடக்கூடியதாகும். ஸம்ஸ்கிருதத்தின் ஜ்ஞானமேயில்லாமலிருப்பவருக்கு இவ்வுண்மை தெரியமாட்டாது. இரண்டு பாஷைகளையும் அறிந்துகொண்டவருக்கு உண்மை வியக்தமாய்த தெரியவரும். மதம், தர்மம், தத்துவம் இவைகள் விஷயமாக தமிழ்-புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பதில் எல்லாம் ஸம்ஸ்கிருத வார்த்தைகளே உபயோகப்பட்டிருக்கின்றன. ஸம்ஸ்கிருத பதங்களை உபயோகப்படுத்தாமல் இம் மூன்று விபரங்களையும் தமிழில் வெளிப்படுத்த முடியாது. ஸாதாரணமாய் மனிதன் இவ்வுலகத்தில் நடத்தக்கூடிய அல்லது தெரிந்துகொள்ளக்கூடிய லௌகிக காரியங்களுக்கும் விஷயங்களுக்குமுள்ள வார்த்தைகள் தான் தமிழிலிருக்கின்றன. ஸ்ரீ அகஸ்தியர் தமிழைப் பிரசாரப்படுத்தியதின் உத்தேசமே இத்தென்தேசத்திலுள்ள ஸாமான்ய ஜனங்களின் நன்மையைக் கருதியே தவிர வேறல்ல. இத்தென்தேசத்தில் எப்போதும் அநாதியாயுள்ள திராவிட எழுத்து (லிபி) கிரந்தந்தான். இப் பரத கண்டத்தில் மற்ற எல்லா தேசங்களிலுமுள்ள எழுத்துக்களைப்போல் கிரந்த எழுத்துக்களும் ஸம்ஸ்கிருத, அதாவது தேவநாகர-எழுத்து-வரிசைக்கிரமப்படியே பூர்ணமாய் ஏற்

பட்டிருந்திருக்கின்றன. இத்தென்தேசத்திலும், மற்ற தேசங்களைப்போலவே எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஸ்வல்ப பெயர்களாயிருந்தமையால், ஸ்ரீ அகஸ்தியர் ஸாமான்ய ஜனங்களின் பேரில் மிக்க கருணைகொண்டு, அவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கவிதமாகவும், லகுவாயும், கொஞ்சமாயுமுள்ள எழுத்து வரிசையை சிற்சில மாறுதலுடன் கிரந்தத்திலிருந்தே தனியாக எடுத்துக்கொடுத்து எல்லோருக்கும் லகுவாய் எழுதப்படிக்கக் கூடிய தன்மையை உண்டாக்கி வைத்தார். அப்பால் ஸாமான்ய லௌகிக விஷயங்களுக்கு நடப்பு-பாஷைக்காக தமிழ் எழுத்துக்களும், மேலான சாஸ்திர விஷயங்களுக்கு எப்போதும்போல் கிரந்த எழுத்துக்களும் உபயோகப்படுத்தி வரப்பட்டன.

இப்படிக்கிருக்கையில், லகுவான தமிழ் எழுத்துக்களில் ஜனங்களுக்கு விசேஷ பழக்கமும், கிரந்த எழுத்துக்களில் பழக்கக்குறைவும் அதிகப்பட்டுவந்து பிறகு கிரந்தத்திலேயே எழுதப்படவேண்டிய ஸம்ஸ்கிருத பதங்களைத் தமிழிலேயே எழுத ஆரம்பித்ததில் தமிழ் எழுத்துக்கள் ஸ்வல்பமாகையால் ஸம்ஸ்கிருத பதங்களின் ரூபங்கள் கெட்டுப்போகும்படி ஏற்பட்டது. ஸம்ஸ்கிருதத்தில் க, ச, ட, த, ப, சப்தங்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வித உள் வர்கங்களிருப்பதில் தமிழில் ஒரே விதமாயிருப்பதாலும், ம, ஷ, ஸ, ஹ. விஸர்க்கம், ஸம்யுக்தாக்ஷரங்கள் முதலியன தமிழில் கிடையாதாகையாலும், ஸம்ஸ்கிருத பதங்களின் ரூபங்கள் முறிவுபட்டும் விகாரப்பட்டும் போய் தமிழில் சேர்த்து எழுதப்பட்டு வந்தன. தமிழ் எழுத்து உண்டானதினால், மற்ற தேசங்களைவிட இத்தென்தேசத்தில் அதிகப்பெயர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியுமென்ற அனுகூல்யமேற்பட்டது வாஸ்தவமானாலும், ஜனங்களின் புத்தி ஹீனத்தன்மையினாலும் சோம்பேரித் தனத்தினாலும் ஸம்ஸ்கிருத-வார்த்தைகளின் விஷயத்தில் கெடுதலே அதிகமாயுண்டாயிற்று. தமிழினால் ஸம்ஸ்கிருத - வார்த்தைகளுக்கு

எவ்வளவு குரூபங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு இப்பரதகண்டத்திலுள்ள மற்ற பாஷைகளினால் உண்டாக வில்லை. இதனால்தான், அதாவது, முறிவுபட்ட அல்லது குரூபப்பட்ட ஸம்ஸ்கிருத பதங்கள் அபசப்தங்களாயிருப்பதில் அவைகளை உச்சரிப்பது சாஸ்திரப்படி தோஷமாகுமாகையால், தமிழில் எழுதப்பட்ட புஸ்தகங்களுக்கு பாராயணஞ் செய்யப் படக்கூடிய யோக்கியதை இல்லாமலிருந்துகொண்டிருக் கின்றது ஸம்ஸ்கிருத-பதங்களை தாறுமாறாகக் கண்டெழுதப் பட்டிருக்கின்ற தமிழ்ப் புஸ்தகங்களைப் படிப்பதும் படிக்கக் கேட்பதும் ஸம்ஸ்கிருதம் தெரிந்தவருக்கு கர்ண-கடோரமாகவே இருக்கும். ஸம்ஸ்கிருதமே தெரியாதவர் உத்ஸாஹத்துடன் தமிழ்பாடல்களை சொல்லிக்கொண்டிருக்கும்போது கேட்டு வருகின்ற மேற்கண்டவர் பரிதாபத்தை அடைகின்றாரே யல்லாமல் ஸந்தோஷப்படுகிறதில்லை. ஸம்ஸ்கிருத பதங்களை கிரந்தத்திலேயே எழுதிச் சேர்த்து ஸம்ஸ்கிருதமும் தமிழும் தெரிந்தவர் தமிழ்ப்பாடல்களை படிக்கிறதாயிருந்தால் அது எல்லோருக்கும் உண்மையான ஆனந்தத்தை கொடுக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. இப்படிப்பட்ட மணிப்பிரவாளப் புஸ்தகங்கள் முன் காலங்களில் நிரம்ப எழுதப்பட்டுவந்தன.

இது நிற்க மேற்கண்டபடி அபசப்தங்களிருந்தபோதிலும், ஸம்ஸ்கிருதத்தை பூராவும் தெரிந்துகொள்ளக்கூடாதவருக்கு தமிழ்-புஸ்தகங்களின் மூலமாய் கொஞ்சமாவது இப்போது தர்மம், மதம், தத்துவமிவ் விஷயங்கள் தெரியக்கூடியவைகளா யிருக்கின்றன. இக்காலத்திய துர்ககூஷிக்கு மதிப்புக்கொடுத்து ஸம்ஸ்கிருதத்தையே உபயோகப்படுத்த வேண்டியதில்லை யென்று எண்ணுபவர்கள் தமிழ்-புத்தகங்களிலுள்ள ஸம்ஸ் கிருத-பதங்களை யெல்லாம் நீக்கிவிடவேண்டியதே அவசியமா யேற்படும். இப்படி நீக்கப்பட்ட பதங்களுக்கு தமிழில் பிரதி-பதங்களே கிடையாதாகையால், நற்கதியின் பொருட்டு தமிழ்-புத்தகங்கள் பிரயோஜனப்பட மார்க்கமில்லாமலே போய்விடும்.

கர்மம், பக்தி, ஜ்ஞானம் இவைகளை கைக்கொள்ளவும் முடியாது. தெய்வங்களுக்குப் பெயர்களே தமிழில் கிடையாது. தேவாரம், திருவாசகம் முதலான நூல்களின் பெயர்களே ஸம்ஸ்கிருத-பதங்களடங்கிய பெயர்கள்தான். ஸம்ஸ்கிருத - பதங்களை யெல்லாம் நீக்கியான பின்பு தமிழ் எந்த ஸ்திதியில் காணப்படுமோ அப்படியே இத்தமிழை மாத்திரம் உபயோகப்படுத்தி வருகின்ற மனிதனும் மேற்செல்ல வழி தெரியாமல் தாழ்ந்த ஸ்திதியிலேயே யிருந்துவரும்படி யேற்படும்.

பெரும்பாலும் தமிழர்களுடைய தனித்தனிப் பெயர்களும் ஸம்ஸ்கிருத-பதங்களாலேயே அமைந்திருப்பதால், மேற்கண்டவர்கள் தங்களுடைய பெயர்களையே மாற்றிக்கொள்ள வேண்டியதாயுமிருக்கும் ஸம்ஸ்கிருதத்தை அவமதிக்கும் பொருட்டு இப்பாலுண்டாயிருக்கின்ற சங்கங்கள் யாவற்றுடையவும் பெயர்களிலும் நடவடிக்கைகளிலும் ஸம்ஸ்கிருத பதங்களே காணப்படுகின்றன. இதெல்லாம் ஸம்ஸ்கிருத-ஜ்ஞானமேயில்லாதவர்களால் செய்யப்படுகின்ற துர்க்ஷணங்களின் வைலக்ஷண்யத்தைத்தவிர வேறல்ல.

உண்மையில் நற்கதியில் உத்தேசமுள்ளோருக்கு ஸம்ஸ்கிருதத்தின் பேரில் வெறுப்பு இருக்கலாகாது முன் காலத்திய உயர்ந்த தமிழ் புஸ்தகங்கள் யாவற்றிலும் அவைகளுக்கு வேத-சாஸ்திரங்களே மூல ஆதாரங்களென்று தெளிவாய் சொல்லப்பட்டிருப்பது மன்னியில், ஸம்ஸ்கிருதத்திற்கும் வர்ணாச்சிரம-தர்மங்களுக்கும் பிராஹ்மணனுக்கும் விசேஷ மதிப்பே காண்பிக்கப்பட்டுமிருக்கின்றது. ஆகையால் இக்காலத்திய மேற்கண்ட துவேஷ-புத்திக்கு இடங்கொடுக்காமல் நல்வழியிற்சென்று வருவதே எல்லோருக்கும் ஹிதமாகும்.

4. தேவ பாஷை

மேலும், ஸம்ஸ்கிருத-பாஷையின் மேன்மையை உள்ளபடி தெரிந்துகொண்டவருக்கு துவேஷ-புத்தி ஒருக்காலமும்

ஏற்படக்கூடியதல்ல. ஸம்ஸ்கிருதம் இப்பூலோக பாஷையே யில்லை. இப்பூலோக பாஷைகளின் பெயர்கள் தேசங்களின் பெயர்களை ஒட்டியாவது ஜனங்களின் பெயர்களை அனுஸரித்தாவது உண்டாயிருக்கின்றன மஹாராஷ்ட்ர தேசத்தில் வழங்குகின்ற பாஷையின் பெயர் மஹாராஷ்ட்ரம்; கர்ணாடக-தேச-பாஷை கர்ணாடகம்; பிரஞ்ச்க்காரர்களின் பாஷை பிரஞ்ச்; இங்க்லீஷ்காரர்களின் பாஷை இங்க்லீஷ்; இப்படியே இத்தென் திராவிட தேச பாஷை தமிழ், ஸம்ஸ்கிருதத்தில் द्राविड என்பது பிராகிருதத்தில் दमिळ என்றிருப்பதில், தமிழில் द कार மில்லாததினால் அது தமிழ் என்ற ரூபத்தை அடைந்திருக்கின்றது. ஸம்ஸ்கிருதம் என்ற பெயர் மாத்திரம் இப்பூலோக தேசங்களுக்காவது ஜனங்களுக்காவது எவ்வகையிலும் ஸம்பந்தப்படாத பெயர். "ஸம்ஸ்கிருதம்" என்றால் 'நன்றாக பரிஷ்காரஞ் செய்யப்பட்டது" என்று அர்த்தம். ரத்தினத்தை நுட்பமாகக் கடைசல் பிடித்து அதன் வக்கிராதி தோஷங்களை அப்புறப்படுத்துவதுபோல், வாக்கினால் உச்சரிக்கப்படக்கூடிய அக்ஷர சப்தங்களில் அசுத்தமானதும், மந்திரங்களுக்கு உபயோகப்படக்கூடாததும், வீர்யமில்லாததுமான சப்தங்களை விலக்கிவிட்டு மந்திர-பீஜாக்ஷரங்களாகிய 51 சுத்தாக்ஷரங்களில் அடங்கச் செய்விக்கப்பட்ட சப்தங்களைக்கொண்டு ஸம்ஸ்கிருத பாஷை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது தேவபாஷை; மனித பாஷையல்ல. இதுவே ஸ்வர்க்கம், ஸத்யலோகம், வைகுண்டம், கைலாஸம் இவ்வுத்தம லோகங்களில் தேவர்களால் பேசப்பட்டு வருகின்றது. ஆகையால், இதற்கு கைர்வாணீ என்றும் பெயருண்டு. கீர்வாணர் என்றால் தேவர். கீர்வாணரால் பேசப்படுவது கைர்வாணீ. இந்த பாஷையே தேவ-நகரங்களில் வழங்கிவருவதால் இதன் அக்ஷரம் "தேவ நாகர-அக்ஷர்ம்" என்று சொல்லப்படுகின்றது. இந்த அக்ஷரத்திற்கு "பால பிந்து" (फालबिन्दु) என்றும் பெயருண்டு. ஜீவனுடைய நெற்றியில் இந்த அக்ஷரத்தினாலேயே பிராரப்த-கர்ம

புலானுபவ-விபரம் எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லப்படு கின்றது. பால (फाल) என்றால் நெற்றி, பிந்து (बिन्दु) என்றால் அக்ஷரம். பாலபிந்து என்பதைத்தான் சில ஜனங்கள் கொச்சையாக பாளபந்து என்றும் பாலபந்து என்றும் சொல்லிவரு கின்றார்கள்.

ஸம்ஸ்கிருதம் தேவர்களுக்குள் நடப்பு பாஷையென்று எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்வித தேவபாஷை வேதத்தின் மூலமாக பூலோகத்திற்கு வரும்படி ஏற்பட்டது. கல்பாரம்பத்தில் மனித-ஸ்ருஷ்டியானவுடன், மனிதர்களுக்கு வேதப்படிக்குள்ள கல்வியை ஏற்படுத்தியும், எல்லோருக்கும் வேதக் கல்வியை போதிப்பிவிசகும்படியான கடமையை பிராஹ்மணனுக்கு விதித்தும், பிராஹ்மணனை பூலோகத்தில் தேவப் பிரதிநிதியாக பாவித்தும், பிராஹ்மணன் "பூதேவர்" என்ற பெயருடன் ஸம்ஸ்கிருத பாஷையை தன்னுடைய நடப்பு பாஷையாகவே உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்று ஏற் படுத்தியும் ஸம்ஸ்கிருதம் மூலமாய் மனிதர்களுக்கு உயர்ந்த நற்கதியைக் கொடுக்கக்கூடிய மேலான மத-தர்மாசரணைகளும் தத்துவவிசார-காரியங்களும் ஸர்வேசுவரரால் விதிக்கப்பட்டன.

நாளடைவில் அதர்ம-மிகுதியினால் பிராஹ்மணர்களாலும் ஸம்ஸ்கிருதம் பேசப்படாமல் அனேகமாய் நின்றுபோய் விட்டது. இக்காரணம் பற்றி, அறியாமையால் இப் பாஷையையே இறந்துபோன பாஷை (Dead language) என்று வெகு பெயர்கள் நினைக்கின்றார்கள். பிராஹ்மணன் தன் னுடைய பூதேவத்தன்மையிலிருந்து விலகியிருக்கிறானென்று மாத்திரம் சொல்லலாமேயொழிய, ஸம்ஸ்கிருதத்தை இறந்து போனதாக எண்ணுவது நியாயமல்ல. இப்போதும் எக்காலத் திலும் தேவர்களால் ஸம்ஸ்கிருதம் நடப்பு பாஷையாகவே பேசப்பட்டுவருகின்றது. இப்பூலோகத்தில் இக்காலத்திலும் ஸம்ஸ்கிருதத்தில் தங்கு தடையின்றி சுத்தமாய் பேசிவருகின்ற பெரியோர்கள் இன்னும் வெகு பெயர்களிருந்து வருகின்றார்கள்.

ஸம்ஸ்கிருதம் இப்பூலோக பாஷையாக எக்காலத்திலுமிருந்திருப்பதில்லையாகையால் இதற்கு பூலோகத்தில் மரணம் ஏற்படக்கூடியதுமல்ல.

அன்றியும், இது ஏதோ வடக்கேயிருந்து வந்திருப்பதுபோல் இத் தென்தேசத்தில் பல ஜனங்கள் நினைத்துக்கொண்டு, இதை நெடுநாளாக "வடமொழி" என்று சொல்லி வந்திருப்பதும் அறிவில்லாமையின் காரியமே. ஸம்ஸ்கிருதம் இப்பூலோக பாஷையேயில்லாத நிலைமையில் வடமொழியுமல்ல தென்மொழியுமல்ல. இப்பரதகண்டத்தில் பஞ்ஜாபீ, ஹிந்துஸ்தானீ, பங்காளீ முதலானவைகள்தான் வடமொழிகளாகும் இப்படியே குஜராடீ, மஹாராஷ்ட்ரம், கர்ணாடகம் முதலானவை மேற்கு மொழிகளாகும். ஓரியா, தெலுங்கு வகையரு கிழக்கு மொழிகளாகும். இதுபோல் தமிழ் மலையாளம் இவைகளை தென்மொழி யென்கலாம் ஸம்ஸ்கிருதத்தை வடமொழியென்று சொல்வது தவறு. இவ்விந்தியாவில வடதேசங்களிலுள்ளவர்கள் இத்தென்தேசத்தில்தான் ஸம்ஸ்கிருதஞ்ஞானம் அதிகமாயிருப்பதாகவும், இதுவே ஸம்ஸ்கிருதத்திற்கு இருப்பிடமென்றும், இதனுல்தான் முக்கியமான வேதாந்த மதப்பிரவர்த்தகர்கள் எல்லோரும் இத்தென்தேசத்திலேயே ஆவிர்பவித்தார்களென்றும் எண்ணுகின்றார்கள். தென்தேசத்திலுள்ளவர்கள் ஸம்ஸ்கிருதம் வடதேசத்திலிருந்து வந்ததாகவும் அது வடமொழியென்றும் எண்ணுகின்றார்கள். இதெல்லாம் காலவைசித்திரியமே.

ஸம்ஸ்கிருதம் தேவமொழியாகையால், யாருக்கு ஈசுவராதி தேவர்களிடத்தில் பக்தி யிருந்து வருகின்றதோ அவருக்கு ஸம்ஸ்கிருதத்தின்பேரில் வெறுப்பு இருக்கக்கூடாது. வெறுப்பு உண்டானல், அது நல்லதின் பொருட்டாகாது. வெறுப்பில்லாமல் கிரமமாயிருந்துவருகின்றவர்கள் அவரவர்களின் நிலைமைக்கும் சக்திக்கும் தக்கபடி ஸம்ஸ்கிருத பாஷையின் ஜ்ஞானத்தை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டியதுமவசியம்.

அவர்கள் தமிழ்-புஸ்தகங்களைப் படித்து வரும்போது அப-சப்தங்கள் ஏற்படாமலிருக்கும் பொருட்டும் அவ்விதஜ்ஞானம் முக்கியம். இவ்வுலக பாஷைகளின் பதங்களைப்போல் ஸம்ஸ்கிருத பதங்களையும் எப்படி உச்சரித்தாலும் பாதகமில்லையென்று சொல்லக்கூடாது. ஸம்ஸ்கிருத-அக்ஷரங்கள் யாவும் முன் குறிப்பிட்டபடி உயர்ந்த மந்திர-பீஜாக்ஷரங்களாயிருப்பதால், அவைகளின் உச்சரிப்பில் மாறுதலேற்பட்டாலும், அவைகளின் சேர்க்கையாலுண்டாகின்ற வார்த்தைகளைத் தப்பாக உச்சரித்தாலும், தோஷமுண்டென்று சாஸ்திர மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

5. கலியிலும் தார்மிகர்

முன்சொல்லிய விபரங்கள் பூராவையும் கவனத்துடன் சேர்த்துப் பார்த்து ஆலோசித்து, பலவிதமாய் தார்மிகத் தன்மையிலிருந்து விலகிக் கெட்டுப்போயிருக்கின்ற ஜாதி-பிராஹ்மணர்களையும் விபரீதக் கல்வியினாலும் கொள்கைகளினாலும் பிரஹ்மத்வேஷ-கோஷ்டியில் சேர்ந்தும் கெட்டுப்போயிருக்கின்ற மற்ற ஜாதியார்களையும் நீக்கி கணக்கிட்டுப் பார்த்தால், இக்காலத்தில் பிராஹ்மணர்களுக்குள்ளும் பிராஹ்மணரல்லாதவர்களுக்குள்ளும் உண்மையான தார்மிகர்கள் வெகு ஸ்வல்பமாகத்தானிருக்கக் கூடுமென்றே துலங்கும். இங்கு ஓர் ஸந்தேஹமேற்படக்கூடும். மேற் சொல்லியபடி அபூர்வமாகவாவது உண்மையான தார்மிகர்கள் அதர்மம் மிகுந்த இக்கலிகாலத்தில் இருக்கக் கூடுமா? எப்படி துஷ்டர்களும் மூடர்களும் கலியில்தான் மனிதஜன்மங்களை எடுக்கக் கூடியவர்களோ, அப்படியே உண்மையில் தார்மிகர்களாய் இருப்பவர்கள் மற்ற தர்ம-யுகங்களில் ஜன்மங்களை அடையலாமேயொழிய இந்தப் பாப-யுகத்தில் அவர்களுக்கு பூலோகத்தில் ஜன்மங்கள் நியாயமாய் ஏற்படுவதற்கில்லையே? வாஸ்தவத்தில் இச்சங்கைக்கு இடமில்லை. கலியுகத்திலும்

தர்மம் முழுவதும் மறைவடைந்துவிடவில்லை. கால்பங்கு தர்மம் இருந்துகொண்டுதானிருக்கின்றது. அதர்மமே இல்லாத கிருதயுகத்தில் அதார்மிகர்களுக்கு மனித-ஜன்மத்திற்கு அவகாசமில்லை என்பதுபோல், கால்பங்கு - தர்மத்துடன் கூடிய கலியுகத்தில் தார்மிகர்களுக்கு ஜன்மமுண்டாகாதென்று சொல்வதற்கில்லை. உலகத்தை ஒழுங்குபடுத்தித் தாங்குவதே தர்மந்தான். தர்மமேயில்லாத காலத்தில் உலகமும் இருக்க மாட்டாது. ஆகையால், தார்மிகர்கள் எக்காலத்திலுமிருந்து வருவார்கள் தவிரவும், கலியுகத்தில் தார்மிகர்களில்லையானால் அதார்மிகர்கள் இதில் மனித-ஜன்மமெடுப்பதிலும் பிரயோஜன மில்லாமல் போய்விடும். துஷ்டத்தனமும் மூடத்தனமும் எவ்வளவு அதிகமாயிருந்தபோதிலும், அதார்மிகர்களை மெல்ல மெல்ல நல்வழியில் திருப்பி அவர்களும் நற்கதியை அடையும்படி செய்யக்கூடியவர்கள் தார்மிகர்கள்தான். முன் சொல்லியபடி, இவ்விதம் நற்கதியை அடைவதற்கு அவகாசங்கொடுப்பதற் காகவே அதார்மிகர்களுக்கு மனித-ஜன்மம் ஏற்படும் பொருட்டு இக்கலிகாலம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், அதார்மிகர்களின் நன்மையை உத்தேசித்தும் இக்கலியில் தார்மிகர்கள் ஸ்வல்பமாகவாவது பூலோகத்திலிருக்க வேண்டியதவசியம்.

அன்றியும், இக்காலத்தில் யார் தார்மிகரென்று சொல்லப் படுகின்றாரோ அவர் ஸம்பூர்ண-தார்மிகராக மாட்டார். சில அம்சங்களிலாவது குறைவு இருந்துகொண்டு தானிருக்கக் கூடியது. கிருதயுகத்திலுள்ள தார்மிகரைப்போல் யாரையும் கலியுகத்தில் பார்க்க முடியாது. ஸகல விதத்திலும் சக்தரான கிருதயுக-தார்மிகரிடம் அதர்மச் செய்கையே யில்லாமலிருப்ப துடன் தர்மச்செய்கைகளும் ஸம்பூர்ணமாய் காணப்படும். அல்ப-சக்தரான கலியுக-தார்மிகரிடம் அதர்மச்செய்கையே இருக்கமாட்டாதென்பது வாஸ்தவமானாலும் தர்மச் செய்கைகள் ஸம்பூர்ணமாயில்லாமல் கால - தேச - வர்த்தமானங்களுக்கும்

தன்னுடைய ஸ்வல்ப சக்திக்கும் அனுகுணமாகவே மிதமாய்க் காணப்படும். மேலும், தார்மிகரின் தார்மிகத்தன்மை ஸ்திரப்படும் பொருட்டும அவருக்கு கலியுகத்திலும் ஜன்மம் கொடுபடக்கூடும். தர்ம-காரியங்களுக்கு விசேஷ ஸௌகரியமுள்ள மற்ற யுகங்களில் தர்மங்களை அப்பியஸித்து வந்த தார்மிகரை விசேஷ அஸௌகரியத்துடன்கூடிய கலியுகத்திலும் ஜன்மமெடுக்கும்படி செய்து அவருடைய தார்மிகத்தன்மை பரீக்ஷை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்படுகின்றது. இந்தப்படி தார்மிகர்களுக்கு இக்கலியுககாலம் பரீக்ஷா-காலமென்றும் எண்ணப்படலாம். தவிரவும், இச்காலத்தில் தார்மிகராக இருப்பவர் மற்ற யுகங்களில் தர்மாசரணைகளைச் செய்து, அவை பூர்த்தியாகாமல் அரை-குறையாகவேயிருந்த காரணத்தினால் அவைகளை பூர்த்தி செய்து, சித்த-சுத்தி முதலானதை பூர்ணமாயடைந்து, மோக்ஷத்தின்பொருட்டு மேல்-ஞான-மார்க்கத்தை அவலம்பிப்பதற்காகவும் இக்கலியுகத்தில் ஜன்மத்தை பெற்றிருக்கலாம். அன்றியும், சிலர்கள் உத்தம ஆதிகாரிக-புருஷர்களாகவேயிருந்து உலகத்திலுள்ள பாமர-ஜனங்களைக் கரையேற்றிவிடுவதற்காகவே அவதரித்து ஜனங்களுக்கு மத்தியில் தார்மிகர்களாக விளங்கவுங்கூடும்.

6. நம் மதம் அநாதி

எப்படி முன்சொல்லிய பிரகாரம், தர்மமே இல்லாத காலத்தில் உலகமே இருக்கமாட்டாதோ, அப்படியே மனிதனுடைய தர்மாசரணைகளை திட்டப்படுத்தியும் ஒழுங்குபடுத்தியும் வரக்கூடிய மதமே இல்லாத காலத்தில் மனித-ஜன்மமும் இருக்கக்கூடியதல்ல. மோக்ஷமடைய வழி தேடுவதே மனித-ஜன்மத்தின் முக்கிய உத்தேசமாகையால், மோக்ஷ மார்க்கத்தில் செல்வதற்கு ஸாதனமான மதம் என்பது மனித-ஸ்ருஷ்டி-காலத்திலேயே ஸித்தமாயிருக்கவேண்டியதவசியம். ஒவ்வொரு கல்பாரம்பத்திலும் பூர்வகல்ப-கர்மானுஸாரியாக மனித-

ஸ்ருஷ்டி ஏற்படுவதாலும், கல்பங்களின் தொடர்ச்சி அநாதியா யுள்ளதாகையாலும், மனித-ஸ்ருஷ்டிக்கும் ஆதி கிடையாது. ஆகையால், அநாதிகாலமாய் ஸித்தமாயிருந்துவந்திருக்கின்ற மதந்தான் வாஸ்தவமான மதமாகும். நேற்று பிறந்து நாளை நாசமடைகின்ற மதங்கள் மதங்களே ஆகா. சரியான கணிதப் படி சுமார் 196 கோடி வருஷங்களுக்கு முன்பாக பிரஹ்மாவின் நடப்பு-தைனந்தின-கல்பாரம்பத்தில் மனித-ஸ்ருஷ்டி ஏற்பட்ட தாக வெளியாகின்றது.

ஹிந்து-மதத்தைத் தவிர உலகத்திலுள்ள மற்ற மதங்கள் யாவற்றும் குறிப்பிட்ட ஸமீப காலங்களில் உண்டாயிருப்ப தாகவே அம்மதஸ்தர்களால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. 2000, 2500 வருஷங்களுக்குள்ளாக பிறந்திருப்பதாகச் சொல்லப் படுகின்ற மதங்கள் உண்மையான மதங்களாயிருக்கக்கூடு மானால், அக்காலங்களுக்கு முன்னாலுள்ள அனேக கோடி வருஷங்களடங்கிய பூர்வ காலங்களில் கடவுள் மனிதனுடைய நற்கதியின் விஷயமாக என்ன ஏற்பாடு செய்திருந்தாரென்று அந்த மதவாதிகள் நிரூபிக்கவேண்டியதாயிருக்கும். முன்னால் வேறு மதங்கள் இருந்து மறைந்து போனதாக அவர்கள் சொல்லும் பக்ஷத்தில், அவ்வேறு மதங்களையும் உண்மையான மதங்களென்றே அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களாவென்றும், அவைகள் கடவுளுடைய உண்மையான மதங்களாயிருந்தால் ஏன் நாசமடைந்தனவென்றும், எக்காலமும் ஊர்ஜிதத்திலிருந்து வரக்கூடிய மதத்தை ஸ்தாபித்துவைக்க கடவுளுக்கு சக்தி இல்லையாவென்றும், ஏற்படக்கூடிய கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியதாயுமிருக்கும். மேற்கண்ட முன் மதங்கள் வாஸ்தவ மதங்களல்லவென்பதும், தங்களுடைய இப்பாலுண்டான மதங்கள்தான் உண்மையானவை என்பதுமே அவர்களுடைய கக்ஷியானால், அவர்களுடைய மதங்கள் ஏற்பட்ட காலங்களுக்கு முன்னால் கடவுள் மனிதர்களை கவனிக்கத் தவறிவிட்டாரென்றே சொல்லுகின்றார்களா?

அப்படியானால், முன்-காலங்களிலிருந்த மனிதர்களின் மரணங்களுக்குப் பின்பு அவர்களின் கதி என்ன ஆயிற்றென்றும் அம்மத-வாதிகள் சொல்லவேண்டியதுண்டு.

நன்றாக ஆராய்ச்சி செய்தால், மேற்கண்டபடி அனாதிகால ஸித்தமாயிருந்திருப்பதே உண்மையான மதத்தின் ஒரு முக்கிய லக்ஷணமென்றே வெளியாகும். எவ்விதம் கடவுள் அனாதியோ, மனிதப்பிறவியும் அநாதியோ, அவ்விதம் மனிதர்களின் நன்மைக்காக கடவுளால் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப் படுகின்ற மதமும் அனாதியாகவே இருக்க வேண்டுமென்பதே நிச்சயம். மத்திய-காலங்களில் சிற்சில மஹா புருஷர்களாகிய மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்கள் உண்மையான மதங்களாகக் கூடியவையல்ல. அம்மதங்களால் பரலோக-விஷயமான சில ஸாமான்ய நன்மைகள் மனிதர்களுக்கு உண்டாகக்கூடுமானாலும், முக்கிய புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அவைகள் மூலமாய் எவ்விதத்திலும் ஸாதித்துக்கொள்ள முடியாது. இவ்வுலகத்தில் ஹிந்து-மதம் ஒன்றுதான் அனாதி-காலமாயிருந்துவந்திருப்பதாகவும், வேதம் என்ற சுருதி ஒன்றுதான் மனிதனால் ஏற்படுத்தப்படாததும் மோக்ஷ-மார்க்கத்தை வெளிப்படுத்துவதும் அனாதி-ஸித்தமான ஈசுவர-வாக்காகவும் இருப்பதாகவும் துலக்கப்பட்டிருக்கின்றது.

7. மற்ற மதங்களின் உபயோகம்

அன்றியும், உண்மையான மதம் ஒன்றாகவே இருக்கக் கூடியதால், அவ்வித மதப்பார்வையில் வேறு மதங்களிருப்பதற்காவது, அவ்வேறு மதங்களிலிருந்து ஜனங்களைத் திருப்புவதற்குள்ள யத்தனத்தைச் செய்வதற்காவது காரணமே இருக்கமாட்டாது. இதனால்தான் அனாதியான ஹிந்து மதத்தில் மற்ற மதங்களிலிருந்து யாரையும் திருப்புவதான காரியத்திற்கே இடம் கொடுக்கப்படவில்லை ஹிந்துப் பார்வையில் உலகமெங்கும் ஒரே மதந்தான் உள்ளது; அது

ஆர்ய-வைதிக-மதத்தைத் தவிர வேறல்ல. இம்மதத்தில் அடங்கிய ஸாமான்ய-தர்மங்கள் விசேஷ-தர்மங்கள் இவ்விரண்டுக்குள்ளாக ஹிந்துக்களல்லாதவர்களால் ஸாமான்ய-தர்மங்கள் மாத்திரம் ஆசரிக்கப்பட்டு வருகின்றன. தார்மிக-ஹிந்துக்களால் அவ்விருவகை தர்மங்களும் அனுஷ்டிக்கப் படுகின்றன. நடப்பு-ஜன்மத்தில் ஹிந்துவல்லாதவருடைய மதத்தை ஸாமான்ய-தர்மங்கள் மாத்திர மடங்கிய மிலேச்ச மதமென்று சொல்லியபோதிலும், இது ஹிந்து-மதத்திற்கு வெளிப்பட்டதான தனி மதமாகிவிடமாட்டாது. உண்மையில், ஹிந்து-மதத்தில் அடங்கிய தர்மங்களுக்குள் அகப்படாத தர்மங்களே உலகத்தில் எங்கும் எந்த மதத்திலும் கிடையாது. அதாவது ஸற்கதியை அடைய ஸாதனமென்று எதெல்லாம் உலகத்தில் மற்றவர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அதெல்லாம் ஏற்கனவே ஹிந்து சாஸ்திரங்களின் மூலமாய் வியக்தமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகையால், உலகத்திலுள்ள மற்ற எல்லா மதங்களும் ஒரு விதத்தில் ஹிந்து-ஆர்ய-மதத்திற்குள் அடங்கியவைகளென்றே சொல்ல வேண்டும். முன் குறிப்பிட்டபடி உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் ஹிந்து-ஆர்ய-பரம்பரையைச் சேர்ந்தவர்களே யானாலும், இங்கு சொல்லியபடி எல்லோருடைய உண்மையான மதமும் ஆர்ய-வைதிக-மதமேயல்லாது வேறல்ல வென்பதும் வாஸ்தவமானாலும், ஹிந்துக்களுக்குள் விசேஷ-தர்மங்கள் காப்பாற்றப்பட்டு அவைகளின் ஆசரணைகளும் நடந்தேறி வந்திருப்பதால், ஹிந்துக்கள் மற்றவர்களைவிட தனி ஸ்தானத்திலுள்ளவர்களென்றே எண்ணவேண்டும். முன்னாலேயே விவரித்த பிரகாரம், ஸாமான்ய-தர்மங்களின் ஆசரணை யினால்தான் மனிதனுக்கு மனிதத்தன்மை, அதாவது, உயர்ந்த ஜீவத்தன்மை ஸித்திக்கக்கூடியதால், இவ்வித ஸித்தியின் பொருட்டு மிலேச்ச-மதங்களும் உபயோகமுள்ளவை தானென்பதில் தடை இல்லை.

ஆனால், ஸாமான்ய-தர்மங்களால் மாத்திரம் மனிதன் தன்னுடைய நிஜமான ஸச்சிதானந்த மோக்ஷ-ஸ்வரூபமாகிய ஆத்மத்தன்மையை அடையவே முடியாது. மோக்ஷ-புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொள்ளும் பொருட்டு ஹிந்து விசேஷ-தர்மங்களையும் கைக்கொள்ளவேண்டுமானால், அதற்காக பிரத்யேகமாய் ஏற்பட்டிருக்கின்ற ஹிந்து-ஜன-வகுப்புகளில் சேர்க்கப்பட்டபின்புதான் அவைகளைக் கைக்கொள்ளக்கூடும். எப்படி விசேஷ – வித்யாப்பயிற்சிக்காக ஏற்பட்டிருக்கின்ற உயர்ந்த வித்யாசாலையில் முக்கிய உபாத்தியாயர் சில குறிப்பிட்ட யோக்கியதையுள்ள மாணுக்கர்களை மாத்திரம் அவரவர்களின் நிலைமைக்குத் தக்கபடி அந்தந்த வகுப்புகளில் சேர்த்து வைப்பாரோ, அப்படியே ஈசுவரர் அவரவர்களுக்கு அனுகூலமான தார்மிக-ஹிந்து-ஜன-வகுப்புகளுக்குள் பிறவியைக் கொடுத்து சில குறிப்பிட்ட ஜீவர்களை இவ்வார்ய மஹாவித்யாசாலையில் தனித்தனியான விசேஷ-தர்மாப்பியாஸ மார்க்கங்களில் சேர்த்து வைக்கின்றார். இப்படிப் பிறவியை ஏற்படுத்துவது ஈசுவரருடைய செய்கையே தவிர மனித காரியமல்ல. பள்ளிக்கூட-வகுப்புகளில் பையன்களைச் சேர்த்து வைக்கிற காரியம் உபாத்தியாயரின் காரியமே தவிர பையன்களாலேயே செய்யப்படக்கூடிய காரியமல்ல. ஆகையால், ஹிந்து வல்லாதவரை ஹிந்துவாகச்செய்ய மனிதனுக்கு அதிகாரமில்லை. புனர்-ஜன்ம-விபரத்தையும் பிறவியின் காரணங்களையும் அறியக்கூடாத ஜனங்களின் மனதுகளில் இவ்வுண்மை பதியக்கூடியதல்ல. விசேஷ-தர்மங்களின் அப்பியாஸத்தில் உத்தேசமில்லாத மிலேச்ச-மதஸ்தர்களுக்கும், ஏற்கனவே ஹிந்துக்களாயிருந்தும் அவ்வுத்தேசம் நசித்துப் போனவர்களுக்கும், மேற்கண்டபடி தார்மிக-வகுப்புகளில் ஜன்மம் ஏற்படமாட்டாது. இவர்கள் ஸாமான்ய - தர்மாசரணைக்கு மாத்திரம் தகுதியுள்ள மனித-கோஷ்டிகளில்தான் பின்னால் ஜன்மங்களை அடையக்கூடும். ஸாமான்ய-தர்மாப்

பியாஸ—பலத்தினுல் விசேஷ—தர்மாப்பியாஸத்தில் நோக்கம் ஏற்பட்டிருக்கின்ற உத்தம ஜீவ-மாணுக்கர்களே தார்மிக-மஹாவித்யாசாலேக்கு அனுப்பி உபகரித்து வருகின்ற (Feeder) ஸ்தானத்தில் மற்ற மதங்கள் உலகத்திலிருந்து வருவதாகவும் சொல்லலாம். எப்படி ஸர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற கவர்ன்மெண்டு-காலேஜுக்கு பிரைவேட்டாக ஏற்படுத்தி நடத்திவரப்படுகின்ற சில்லரைப் பள்ளிக்கூடங்கள் உபகரித்து வருகின்றனவோ (As Feeders) அப்படியே உலகத்திலுள்ள மற்ற மதங்கள் மனிதர்களாலேயே உண்டாக்கப்பட்டிருந்தபோதிலும், அவைகள் ஆர்ய-மதத்திற்கே உபகாரிகளாகவுமிருக்கக்கூடும்.

எவ்விதம் ஸாமான்ய கீழ்—பள்ளிக்கூடங்களில் மேலான முக்கிய வித்யைகள் போதிப்பிவிக்கப்படாமலிருந்தபோதிலும், அப்பள்ளிக்கூடங்களும் வித்யாசாலேகள் என்றே சொல்லப் படுகின்றனவோ, அவ்விதமாகவே முக்கிய புருஷார்த்தமாகிய மோக்ஷமாவது அதற்கு நெருங்கிய ஸாதனமாயுள்ள விசேஷ—தர்மங்களாவது மனிதனுல் ஏற்படுத்தப்பட்ட மதங்களினுல் ஸாதித்துக்கொள்ளப்படக்கூடாமலிருந்தபோதிலும் அவைகளும் மதங்கள் என்றே உலகத்தில் வியவஹரிக்கப்படுகின்றன. சில காலங்களில் கீழ் வித்யாசாலேகளிலிருந்து மாணுக்கர்கள் பிரதான வித்யாசாலேக்கு அனுப்பப்படாமலிருப்பதுடன், பிரதான வித்யாசாலேயிலுள்ள மாணுக்கர்களுக்குள்ளாகவே அனேகர்கள் அவ்வித்யாசாலேயில் தங்கி நிற்க யோக்கியதை இல்லாமல் அதை விட்டு வெளியேறிப்போய்விடவும் கூடும். இப்படி தங்களுடைய யோக்கியதைக் குறைவினுல் வெகு பெயர்கள் வெளியேறிப்போயும், சிலர்கள் மாத்திரம் தங்கியும், புதிதாக மாணுக்கர்கள் வந்து சேராமலும், இருப்பதினுல் அவ் வுயர்ந்த வித்யாசாலேக்கு யாதொரு மதிப்புக் குறைவும் வந்துவிடமாட்டாது. இது போலுள்ள ஸ்திதி இக்கலியுகத்தில் தார்மிக — வைதிக — மதத்திற்கு வந்திருப்பதாகச் சொல்ல

வேண்டும். உண்மையான தார்மிகர்கள் வெகு ஸ்வல்பமாயிருந்து வருகிற காரணத்தினால் அவர்களுக்காவது ஆர்ய-மதத்திற்காவது யாதொரு மதிப்புக் குறைவும் வந்துவிட்டதாக எண்ணக்கூடாது. இக்கலியுகக் கடைசி காலம் வரையில் நாளடைவில் தார்மிகர்களின் எண்ணிக்கை வரவர குறைந்து கொண்டுதானிருக்கும். இது இயற்கையாகவே காலத்தின் கார்யமாக நடந்துவரும்.

அத்யாயம் 15

ஆத்மதத்வம்

1. கர்ம பேதங்கள்

மனிதனால் மனப்பூர்வமாய்ச் செய்யப்படும் எவ்வித கார்யங்களையுமே கர்மா என்று சொல்லலாம். அவைகளில் ஆஹார விஹாராதி கர்மாக்கள் மனுஷ்யன் உள்பட எல்லா பிராணிகளிடத்திலும் காணப்படும் ஸாமான்ய கர்மாக்களேயாகும். மற்றப் பிராணிகளிடமில்லாத விவேகம் என்றதோர் அம்சம் மனுஷ்யனிடம் இருப்பதால் அந்த ஸாமான்ய கர்மாக்களைத் தவிர, எது செய்யலாம் எது செய்யக்கூடாது என்று தீர்மானித்துச் செய்யும் கர்மாக்கள் அவனிடமிருக்கும். ஆனால் இவை உலக வாழ்க்கைக்கு உபயோகப்படுமேயொழிய, இந்த சரீரத்தை தவிர ஆத்மா என்று ஒன்று உண்டு என்ருவது, உலக வாழ்க்கைக்கே ஸாதனமாக நம்மால் அறியமுடியாத கர்மாக்கள் உண்டு என்ருவது, இதற்கு மேலாக வேறு லோகங்களும் இதைத்தவிர்த்து வேறு பிறவிகளும் உண்டு என்ருவது, அவைகளையடையக்கூடிய கர்மாக்கள் உண்டு என்ருவது, அவ்வித கர்மாக்களையும் அவைகளின் பலன்களையும் போதிக்கக்கூடிய வேதம் ஒன்று உண்டு என்ருவது, அப்பலன்களைக் கொடுப்பதற்கும் இவ்வுலகமுள்பட எல்லா உலகங்களையும் உண்டுபண்ணி பரிபாலனம் செய்ய ஈசுவரன் என்ற ஒருவர் இருக்கிருர் என்ருவது, அவ்வீசுவரனை எப்படி வழிபடுவது என்ருவது, வாஸ்தவத்தில் ஆத்மா ஸகல கர்மாக்களிலும் ஸம்பந்தப்படாத தத்வம் என்ருவது, அத்தத்வத்தை அறிந்து கொள்ள என்ன ஸாதனமென்ருவது, அறிந்துகொள்வதற்கு ஸாமான்ய கர்மாக்கள் போதாது. அதனல் மனுஷ்யனுக்கு விசேஷ கர்மாக்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் வேதத்தை ஒப்புக்கொண்டோ, ஒப்புக்கொள்ளாமலோ, இருப்

பவர் இருவர்களிடத்திலும் ஐஹிக ஸுக ஸாதனமாக சில கர்மாக்களும் துக்கஸாதனமாக சில கர்மாக்களும் இருந்துவரும். வேதத்தையே நம்பிப் பிரவிருத்திப்பவர்களிடமும் அநித்ய மான விஷய ஸுகத்தை யபேக்ஷிக்கிறவர்கள் செய்யும் கர்மாக்கள் காம்ய கர்மாக்களாகும். அவைகளிலும் இப் பொழுதே அனுபவிக்க நினைக்கும் திருஷ்ட பலன்களை யுடையவை ஐஹிகமேயாகும். ஜன்மாந்தரத்திலேயோ லோகாந் தரத்திலேயோ எதிர்பார்க்கும் அதிருஷ்டபலன்களைக் கொடுக்கக் கூடிய கர்மாக்கள் ஆமுஷ்மிகமாகும். ஆத்மதத்வஜ்ஞானம் மூலமாய் மோக்ஷத்தில் கொண்டுபோய் விடக்கூடிய கர்மாக்கள் பிரவிருத்திதர்மமென்றும் நிவிருத்தி தர்மமென்று மிருவகைப் படும். ஜ்ஞானம் ஏற்படுவதற்கு மிகவும் தடித்தப்பிரதிபந்த மாயிருக்கும் மலதோஷமென்கிற பாபங்களைப் போக்கடிக்க நித்ய நைமித்திக கர்மாக்கள் உபயோகப்படுகின்றன. இவை பிரவிருத்தி தர்மம் எனப்படும். ஜ்ஞானத்தை ஏற்படவிட்டாமல் செய்து வரும் விக்ஷேபதோஷம் என்கிற மனதின் சாஞ் சல்யத்தை நிவிருத்தி செய்து மனதை ஏகாக்கிரப்படுத்துவதும் ஒருவாறு பிரவிருத்தி தர்மமாகவே இருந்தபோதிலும் அது மனதை உலகத்திலிருந்து இழுத்து விடக்கூடியதால் நிவிருத்தி தர்மமாகவும் அதை பாவிக்கலாம். பல விக்ஷேப தோஷங்கள் ஸத்கர்மானுஷ்டானத்திலும் ஸகுண உபாஸனையாலும் நிவிருத்தியாலும் கூட, ஸம்சயமன்னியில் ஸ்திரமாய் ஜ்ஞானம் ஏற்படுவதற்காக சிரவணம், மனனம் நிதித்யாஸனம் என்ற உத்தமமான நிவிருத்தி தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டியதாயிருக்கிறது.

2 ஜ்ஞான ஸாதனம்

ஸர்வோத்தமமான ஆத்ம – தத்துவத்தைக் காதினால் குருவிடமிருந்து கிரஹித்து புத்தியில் உட்கொள்வது சிரவணம். இப்படி குருவிடமிருந்து சிரவணம் மூலமாய் கிரஹிக்கப்

பட்ட தத்துவத்தைப்பற்றி அடிக்கடி ஆலோசித்துப் பரிசீலனை செய்து அது ஸம்பந்தமாய் மனதில் உதிக்கக்கூடிய ஸந்தேஹங்களை அப்போதைக்கப்போது குருமுகமாகவும் வேறு விதங்களிலும் நிவிருத்தி செய்துகொண்டு தத்துவ-விஷயமான பரோக்ஷ-ஜ்ஞானத்தை உறுதிப்படுத்திக்கொள்வது மனனம். இப்படி மனனத்தினல் ஸந்தேஹமின்றி ஸ்திரப்படுத்திக் கொள்ளப்பட்ட பரோக்ஷமான தத்துவ — ஜ்ஞானத்தை அபரோக்ஷமாகச்செய்து ஸ்வானுபூதிக்குக் கொண்டுவரும் பொருட்டு, அதையே இடைவிடாமல் தைல-தாரைபோல் தியானித்துக்கொண்டிருப்பது நிதித்யாஸனமாகும் இதையே நிற்குணோபாஸனமென்றும் சொல்வதுண்டு, சிரவண-மனன காலத்திலும் குருவிடமிருந்து கேட்பதிலும் புஸ்தகத்தைப் பார்த்துபடிப்பதிலும் சுரோத்ரேந்திரியத்திற்கும் நேத்திரேந்திரியத்திற்கும் வாக்காகிய கர்மேந்திரியத்திற்குங்கூட சில வேளைகளில் பிரவிருத்தி இருக்கக் கூடியதானாலும், இதெல்லாம் முக்கியமில்லையாதலாலும், ஸர்வ-ஸங்க-கர்ம-பரித்தியாகத்தைச் செய்து விட்டே சிரவண-மனன-நிதித்தியாஸன ரூப-ஜ்ஞானுப்யாஸங்களைச் செய்வதே முக்கிய பக்ஷமாகையாலும், சிரவணுதிகளின் நேர் உத்தேசமே நைஷ்கர்ம்ய-ஸித்தியானதினலும், இவைகளுக்கு நிவிருத்தி-தர்மங்கள் என்ற பெயர் உசிதந்தான். சிரவண —மனனங்களின் பேரில் கிரமமாயேற்பட்ட நிதித்தியாஸனத்தின் பூர்த்தியினல், ஆவரண-தோஷமென்ற அஜ்ஞானம் நீக்கப்பட்டும், ஜீவத்வம் மறைவடைந்தும் ஸமாதிநிலைத்தும், அபரோக்ஷாத்ம ஜ்ஞானனந்தானுபவமே ஸித்தித்து விடுகின்றது. இந்த ஸித்தியே தர்ம — புருஷார்த்தத்தின் முடிவான பலன்.

மேற்சொல்லிய விபாகங்கள் இதன் அடுத்த பக்கத்தில் கண்ட கொடிவழி மூலமாகவும் வியக்தப்படுத்தப்படுகின்றன. அதில் குறிப்பிட்ட—கிரமமான ஸாமான்யச் செய்கைகளினல் உத்தம ஜீவத்வம் மனிதனுல் ஸாதித்துக்கொள்ளப்படக்கூடும்.

இவ்வுத்தம ஜீவத்வமே மிலேச்ச – மதஸ்தர்களுடையவும் துவைத-வாதிகளாக இருந்துவருகின்ற சில ஹிந்துக்களுடையவும் முடிவான உத்தேசம். மேற்கண்ட ஸாமான்ய-செய்கைகளுடன் சேர்ந்த பிரவிருத்தி-நிவிருத்திதர்ம-ரூபமான விசேஷச் செய்கைகளினுல் சுத்த-ஸச்சிதானந்த-ஆத்மத்வமே அனுபூதியில் உறுதிப்படுத்திக்கொள்ளப்படுகின்றது. ஹிந்து-துவைத-வாதிகளும் இவ்விசேஷ-தர்மச்செய்கைகளை ஒருவிதமாய்ச்செய்துவந்தபோதிலும், அவர்களுடைய உத்தேசமும் மனோபாவனைகளும் வேறுபட்டு விட்டதால், அச்செய்கைகள் ஆத்மத்வ-ஸித்தியில் முடிவடையக் கூடியவையல்ல. ஜீவத்வப் பிடிமானமிருக்கும் வரையில் ஸ்வாத்மானுபூதி விளங்க மாட்டாது. இது நிற்க. எவ்வகையிலும் இக்கொடிவழியில் கண்ட விசேஷ-தர்மச்செய்கைகள் ஹிந்துக்களுக்கு மாத்திர மேற்பட்டிருக்கின்றன. அதில் காட்டிய மற்ற ஸாமான்ய-விசேஷச்செய்கைகள் யாவற்றும் ஹிந்துக்களிடத்திலும் ஹிந்துவல்லாதவர்களிடத்திலும் பொதுவாகவே காணப்படுகின்றன.



கர்மா
ஸாமான்யம்
விசேஷம்
ப்ராணி ஸாமான்யம்
மனுஷ்ய ஸாமான்யம்
லௌகிகம்
வைதிகம்
ஆஹாராதி (Instinctive)
க்ரமம் (Moral)
அக்ரமம் (Immoral)
காம்யம்
நிஷித்தம்
காம்யம்
மோக்ஷ ஸாதனம்
ஐஹிகம்
ஆமுஷ்மிகம்
ப்ரவிருத்தி தர்மம்
நிவிருத்தி தர்மம்
இஷ்டம்
பூர்த்தம்
நித்யம்
நைமித்திகம்
ஸகுண உபாஸனம்
சிரவண, மனன, நிதித்யாஸனம்
ஸ்வர்க்க ஸாதனம்
மலதோஷ நிவிருத்தி
விக்ஷேபதோஷ நிவிருத்தி
ஆவரண தோஷ நிவிருத்தி

3 ஜ்ஞானியின் நிலை

மல-விக்ஷேப ஆவரணங்களாகிய தோஷங்கள் மூன்றையும் அப்புறப்படுத்தியும், ஜீவத்வ-நிலைமையை விட்டொழித்தும், சுத்தமான ஆத்மத்வ-நிலைமையில் நிற்போர் ஜ்ஞானீ என்று கூறப்படுகின்றார். மேலான ஜீவன்முக்த — ஸ்தானங்களை அடையாத ஜ்ஞானி வ்யுத்தானமென்ற வெளிப்பார்வைகாலத்தில் முன்-ஸமாதி-காலத்திய ஆத்மாநந்தானுபவத்தின் தெளிவான ஜ்ஞாபகத்தினால் திருச்யப்பிரபஞ்சத் தோற்றங்களிற் ஸத்ய-புத்தி கொஞ்சமேனுமில்லாமல் அவைகளை லக்ஷியஞ் செய்யாமலேயிருந்துவருவார். அவைகள் ஸ்வப்நத் தோற்றங்களைப் போலவே அவரால் எண்ணப்பட்டுவரும். அதாவது, எப்படி ஸாதாரண மனிதன் நித்திரையை விட்டு விழித்துக் கொண்ட பிறகு தன்னுடைய முன்-ஸ்வப்ந-காக்ஷிகளெல்லாம் பொய்யென்று தெரிந்துகொண்டிருக்கின்றானோ, அப்படியே ஜ்ஞானியும் பிரபஞ்சத் தோற்றங்கள் யாவும் மித்யையென்று அத்தோற்றக்காலத்திலேயே அறிந்துகொண்டிருக்கின்றார்.

எவ்விதம் விழிப்பதற்கு முன்பாக நித்திரையென்ற தூக்க—காலத்தில் ஸ்வப்நத்தோற்றங்கள் உண்மையாகவே காணப்படுகின்றனவோ, அவ்விதமே ஜ்ஞானமேற்படுவதற்கு முன்பாக அவித்யையென்ற அஜ்ஞான காலத்தில் திருச்யப் பிரபஞ்சத் தோற்றங்களும் வாஸ்தவமென்றே எண்ணப்படுகின்றன. அதாவது, நித்திரா—மோஹத்தினால் ஸ்வப்நப்பிரபஞ்சம் ஸத்யமாகத் தோன்றுவதுபோலவே, அவித்யா-மோஹத்தினால் ஜாக்கிரத்-பிரபஞ்சமும் ஸத்யமாகவே தோன்றுகின்றது. ஜாக்கிரத்-காலத்திலுள்ள ஜீவனென்ற சிதாபாஸனே ஸ்வப்ந-காலத்தில் இருவகைப்பட்டு ஸ்வப்ந-ஜீவனாகவும் ஸ்வப்நப் பிரபஞ்சமாகவும் பிரிந்திருப்பதுபோல் காணப்படுகின்றான். அதாவது, ஜாக்கிரத்-அவஸ்தையில் காண்பான் (திருக்)எவனோ அவனே நித்திரை மூலமாய் ஸ்வப்நாவஸ்தையில் உண்டான

தன்னுடைய முக்கியாம்சப்பிரதிபிம்பத்தினல் ஸ்வப்ந-காண்பானகவும், தன்னுடைய மனேவாஸனு-சக்தியினல் காணப்படுகிறவைகளடங்கிய ஸ்வப்ந-ஜகத்தாகவும், இருவிதமாகத் தோன்றுகின்ருன், இப்படி தானே இரண்டுபட்டிருப்பது போல் காணப்படுவதான ஜ்ஞானம் அவித்யைக்கும் நித்திரா-மோஹத்திற்கும் கட்டுப்பட்டிருக்கின்ற அச்சிதாபாஸனுக்கு அப்பொழுது கிடையாது. முன்-அனுபவமில்லாமல் பின்னல் ஜ்ஞாபகமிருக்க முடியாதாகையாலும், ஜாக்கிரத் காலத்தில் சிதாபாஸனுக்கு பூர்வ-ஸ்வப்நானுபவம் ஜ்ஞாபகத்திலிருப்பதாலும் ஸ்வப்ந-ஜீவன் இருந்ததையும் ஸ்வப்ந-ஜகத்து காணப்பட்டதையும் அந்த ஸ்வப்ந-காலத்தில் சிதாபாஸன் பார்த்துக்கொண்டிருந்தானென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனல், அக்காலத்தில் பார்த்துக்கொண்டிருக்கின்ற ஸாக்ஷியாகத் தன்னைத் தெரிந்துகொள்ளாமலும், தன்னுடைய ஜாக்கிரத்-ஜீவத் தன்மையை மறந்தும், தன்னுடைய ஏகதேசப் பிரதிபிம்பாம்சமாகிய ஸ்வப்ந-ஜீவனையே தானென்று அபிமானித்தும், இந்த அபிமானத்தினல் ஸ்வப்ந-ஜீவனுடன் ஏகத்வத்தை ஸம்பாதித்துக்கொண்டும், ஸ்வப்ந-சுக-துக்கங்களை தானே அனுபவிப்பதாக சிதாபாஸன் மோஹங்கொண்டிருக்கின்ருன். நித்திரையிலிருந்து தனக்கு விடுதலை ஏற்பட்ட பின்புதான் ஸ்வப்ந-காலத்திய நிலைமைகளுடையவும் அனுபவங்களுடையவும் மித்யாத்வம் சிதாபாஸனுக்கு விளங்குகின்றது. நித்திரை நிவிருத்தியாகும் ஸமயத்தில் ஸ்வப்ந-ஜீவன் தன்னுடைய தாத்காலிகமும் தோற்றம் மாத்திரமுமான தனி நிலைமையை விட்டுவிட்டு தன் நிஜஸ்வரூபியான சிதாபாஸனுடன் ஒன்ருகி விடுகின்ருன், ஸ்வப்நப்பிரபஞ்சமும் மறைந்துபோய் விடுகின்றது.

எப்படி ஸ்வப்ந-ஜீவன் தன் ஸ்திதிக்குக் காரணமான நித்திரையிலிருந்துகொண்டு ஸ்திரமாயுள்ள தன் நிஜ-ஸ்வரூபமான சிதாபாஸத்தன்மையை அறியாமலிருந்துவருகின்ருனே,

அப்படியே சிதாபாஸனும் தன் ஸ்திதிக்குக் காரணமான அவித்யையிலிருந்துகொண்டு ஸ்திரமாயுள்ள தன் நிஜ ஸ்வரூபமான ஆத்மத்தன்மையை அறியாமலிருந்துவருகின்றான். அவித்யை நிவிருத்தியாகிவிட்டால், சிதாபாஸன் தன்னுடைய தாத்காலிக-ஜீவத்தோற்ற-நிலைமையை விட்டுவிட்டு தனக்கு அதிஷ்டான பூதமான ஆத்மாவுடன் ஒன்றாகிவிடுகின்றான். திருச்யப் பிரபஞ்சமும் அப்போது அது இருந்த இடமே தெரியாமல் மறைந்துபோய் விடுகின்றது. அவித்யைக்குட்பட்டிருக்கின்ற சிதாபாஸன் நித்ரா-காலத்தில் தன்னுடைய நிலையற்ற பிரதிபிம்பாம்சமாகிய ஸ்வப்ந-ஜீவனுடன் ஏகீபாவத்தை அடைந்து தன்னை மறந்து நிற்பதுபோல் மாயாதீதனாகிய ஆத்மா தன்னை மறந்து சிதாபாஸனாகவே ஆகிவிடுகிறதில்லை. சிதாபாஸனுக்கு தன்னுடைய ஸாக்ஷி-நிலைமை தெரியாமலே ஸ்வப்ந-ஸ்திதிகளும் அனுபவங்களும் விஷயமாகின்றன. ஆத்மாவுக்கோவெனில் ஸாக்ஷி-நிலைமையில் சிதாபாஸனுடைய ஸ்திதிகளும் அனுபவங்களும் பிரத்தியக்ஷமாகின்றன. சுத்தமான ஆத்மத்வ-ஸ்தானத்திலேயே கேவல ஸாக்ஷியாக மாத்திரமிருந்து வருகின்ற-ஜ்ஞானிக்கு சிதாபாஸ நிலைமைக்குரிய பிராரப்த-சுக-துக்க-போகானுபவங்கள் விஷயங்களான போதிலும், அவைகள் அவரை பந்தப்படுத்தக்கூடியவையல்ல. அந்தக்கரணப்பிரதி பிம்பரூப-சைதன்யமாக மாத்திரமிருக்கின்ற சிதாபாஸத்தோற்றத்தில் ஜ்ஞானிக்கு 'தான்' என்ற அபிமானம் கிடையாது. ஆகையால், சிதாபாஸனுடைய காரியங்களையும் போகங்களையும் ஒரு பொருட்டாகவே எண்ணாமல் ஜ்ஞானி எப்போதும் ஆத்மதருப்தராக இருக்கின்றார். வ்யுத்தான தசையிலிருக்கிற ஜ்ஞானியின் திருஷ்டியில் ஜகத் இருப்பதாகத் தோன்றியபோதிலும், அவர் அத்தோற்றத்தை மேலே கண்டபடி ஸ்வப்நத்தோற்றம்போல் பாவித்து உதாஸீனஞ்செய்துவிடுகின்றார்.

4. ஸ்வப்ந திருஷ்டாந்தம்

மேற்சொல்லிய ஸ்வப்ந திருஷ்டாந்தத்தினுல் அத்வைதக் கொள்கை அஸம்பாவிதமில்லையென்று துலங்கும். ஆத்மா ஒன்றே உண்மைப்பொருளானுல், எப்படி அதுவே காண்பாஞகிய திருக்ரூப-ஜீவனுகவும், காணப்படுகின்றதாகிய திருச்யரூப-ஜகத்தாகவும், இருவிதமாகப் பிரிந்து காணப்படலாமென்று ஆக்ஷேபணை செய்யப்படுமானுல், அவ்வாக்ஷேபணையைக் கண்டிக்க ஸ்வப்ந-திருஷ்டாந்தம உபயோகப்படும். ஸ்வப்நத்தைக் காண்கிற மனிதனுடைய ஸ்தூல-சரீரம் ஒரே இடத்தில் படுத்திருக்கின்றது. அது வேறு எங்கும் போகவில்லை. ஸ்வப்ந-ஜீவனே பெரும் மலைகள், வனந்தரங்கள் பட்டணங்கள், தேசங்கள் எல்லாவற்றையும், இது போல் தன்னைத்தவிர வேறு ஜீவர்கள் ஏராளமாயிருப்பதையும் ஸ்வப்நத்தில் பார்க்கின்றுன். இவ்வித மலை முதலானவை அவனுடைய மனதுக்குள்ளாகவே பார்க்கப்படுகின்றன. அனேகமாய் ஸ்வப்நங்களில் காணப்படுகின்ற தோற்றங்கள் பூராவும் பாஹ்யபிரபஞ்சத்தோற்றங்களைப்போல் எல்லா விஷயத்திலும் ஒரே விதமாகக் காணப்படவில்லை. கொஞ்சம் வித்தியாஸமாகவே காணப்படுகின்றன. ஆகையால், ஸ்வப்ந-காலத்தில் தன் சரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறிப்போய் வருவதாகச் சொல்வதற்கில்லை. ஸ்வப்நத்தில் காணப்பட்ட தேசமும் ஜாக்கிரத்-காலத்தில் காணப்பட்ட தேசமும் ஒரே விதமாக இருக்கக்கூடிய விஷயத்திலும், இரவில் ஸ்வப்நம் காணும்போது அத்தேசத்தில் தான் பகலில் ஸஞ்சரித்து வருவதாகத் தோற்ற முண்டாகின்றது. தவிரவும், ஸ்வப்ந-ஜீவன் வாஸ்தவத்தில் அவ்வெளிதேசத்திற்கு ஸ்வப்ந-காலத்தில் வந்திருந்ததாக அத்தேசத்திலுள்ளவர்கள் சொல்வதுமில்லை. அன்றியும், ஜீவ-சிதாபாஸன் அந்தக்கரண-விசிஷ்டனுனபடியால், சரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறிப்போகவேண்டுமானுல் அந்தக்கரணம் பூராவும் சரீரத்தை விட்டு வெளியேறிப் போகவேண்டும். பஞ்சப்

பிராணன்களும் அந்தக்கரணத்துடன் சேர்ந்தவைகளாயிருப்பதால், அவைகளும் வெளியே போகவேண்டும் அவைகள் வெளிப்பட்டுவிட்டால் சரீரம் பிணத்திற்கு ஸமானந்தானாகும். மூச்சு விடுதல் வாங்குதல், ரத்த-ஓட்டம், ஜீர்ண-காரியம் முதலான எவ்விதப் பிராணசேஷ்டைகளும் சரீரத்திலிருக்க மாட்டா. அமருக-ராஜாவின் சரீரத்தில் பிரவேசிப்பதற்காக ஸ்ரீ பகவத்பாத ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் தன் சரீரத்தை விட்டு வெளியேறிப்போனபோது அச்சரீரம் பிணம்போலவே ஆயிற்றென்பது வெகு பெயர்களுக்குத் தெரிந்த விஷயம். ஸ்வப்ந-காலத்திலோ தூங்கும் மனிதனுடைய சரீரத்தில் பிராணன்களுடைய சேஷ்டைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆதலால், அக்காலத்தில் சரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறிப் போவதில்லை யென்பதே உறுதி. ஆகிலும், விஸ்தாரமான வெளிப்பிரபஞ்சம் ஸ்வப்னத்தில் காணப்படுகின்றது. இந்த ஸ்வப்நப்பிரபஞ்சம் மனோ-வாஸனா-சக்தியினால் மனதுக்குள்ளாகவே ஜீவ-கர்மானுஸாரியாக ஈசுவரப் பிரேரணையின்பேரில் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றதென்று தான் சொல்லவேண்டும். படுத்துக்கிடக்கிற ஸ்தூல-தேஹத்திலேயே ஸ்வப்நப்பிரபஞ்சத்தைப் பார்ப்பதாகச் சொல்ல முடியாது. அந்த தேஹத்திலாவது அதன் நுட்பமான நாடிகளிலாவது பெரிய மலைகளும் தேசங்களுமில்லையென்பது திண்ணமே. ஸ்வப்நத்துடன் கூடிய நித்திரையிலும் பாஹ்யமான இந்திரியங்கள் யாவும் அடங்கி வேலை செய்யக்கூடாமலிருப்பதாலும், மனது மாத்திரம் ஸ்வப்நத்தில் வேலை செய்து வருவதாலும், மனோ—விசிஷ்டனும் வாஸனா—மயனுமான சிதாபாஸனே முன் சொல்லியபடி ஸ்வப்ந-ஜீவனாகவும் ஸ்வப்ந-ஜகத்தாகவும் இருவிதமாக விளங்குகின்றானென்பதே நிச்சயம்.

எப்படி இவ்விதமாக ஜாக்கிரத்கால-காண்பானாகிய ஜீவ-சிதாபாஸன் ஒருவனே ஸ்வப்ந-காலத்தில் காண்பானாகிய ஸ்வப்ந-ஜீவனாகவும் காணப்படுகின்றதாகிய ஸ்வப்ந-ஜகத்தாக

வும் விளங்குகின்ருனே, அப்படியே உண்மையில் எப்போதும் ஒன்ருக இருந்துவருகின்ற ஆத்மாவும் வியாவஹாரிக-அவஸ்தா-தசையில் ஜீவ-சிதாபாஸனுகவும் திருச்யப் பிரபஞ்சமாகவும் விளங்குவதாகச் சொல்லப்படுவது யுக்தி-விரோதமில்லை யென்றே வெளியாகும். ஆனுல், யுக்தி விரோதமில்லாமல் சொல்லப்படுவதெல்லாம கட்டாயமாக உண்மையாகவே யிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. மேற்கண்ட ஸ்வப்ந திருஷ்டாந்தத்திஞல் அத்வைதக்கொள்கைக்கு யுக்தியின் அனுசரணையும் ஏற்பட்டிருப்பதாக மாத்திரம் சொல்லக்கூடுமே தவிர யுக்தியினுலேயே அக்கொள்கை ஸ்தாபிக்கப்பட்டிருப்பது போல் சொல்லக்கூடாது. ஆத்மா ஒன்றுதான் உள்ளது, மற்றதெல்லாம் தாத்காலிகத்தோற்றமே தவிற ஸத்தியமல்லவென்பது வியாவஹாரிக-தசையைக்கடந்து உண்மையான ஆத்மத்வ நிலையிலிருப்பவருக்குத்தான் தெரியக்கூடுமே அல்லாது, அவித்யைக்குட்பட்ட ஸ்தானத்திலிருப்பவரால் அவ்வுண்மையை எவ்வித யுக்தியினுலும் கண்டுபிடிப்பதாவது ஸ்தாபிப்பதாவது ஸாத்தியப்படமாட்டாது. அதாவது, பரிமிதமான ஜீவ-புத்தியினுல் அபரிமிதமான அகண்டாத்மாவின் தத்துவத்தைப் பூர்ணமாக அறிவது எவ்வகையிலும் ஸாத்தியமில்லை. அது ஈசுவரவாக்காகிய சுருதியின் மஹாவாக்கியங்களால் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி சுருதியால் வெளியாகியிருக்கின்ற தத்வம் யுக்தி-விரோதமில்லை யென்பதற்கு ஜீவத்வ நிலையிலிருக்கின்ற மனிதன் மேற்குறிப்பிட்டபடி ஸ்வப்ந திருஷ்டாந்தத்தை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இம்மட்டில்தான் இவ்விஷயத்தில் அத்திருஷ்டாந்தம் உபயோகமுள்ளதாகும்.

5 ஜகத்தின் தோற்றம்

ஸ்வப்ந-திருஷ்டாந்தத்தில் ஒரு பெரும் கேள்விக்கிடமுண்டு. ஸ்வப்நம் கலைந்தவுடன் ஸ்வப்ந-ஜீவன் ஜாக்கிரஜ்ஜீவனுடன் ஏகீ-பாவத்தையடைவதுமல்லாமல் ஸ்வப்ந-ஜகத்து முழுவதும்

மறைந்துவிடுகின்றது ஸ்வப்நத்தில் காணப்பட்ட மற்ற ஜீவர்களும் இருந்த இடம் தெரியாமல் போய்விடுகின்றார்கள். ஜாக்கிரத்கால-அனுபவங்களும் இப்படியே மித்யை யென்று சொல்லியது வாஸ்தவமானால் ஒரு ஜீவனுக்கு மோக்ஷமேற்படும் போது திருச்யப் பிரபஞ்சம் பூராவும் லயமாவதுமதவிர மற்ற ஜீவர்களும் மறைவடைய வேண்டுமேயென்று கேட்கலாம். உண்மையிலோ ஒருவன் ஜ்ஞானத்தைப்பெற்று மோக்ஷமடைவதாகச் சொல்லப்படுங்காலத்தில் மற்றவர்களின் ஸ்திதிகளிலாவது இவர்களுக்குள்ள பிரபஞ்சத் தோற்றங் களிலாவது வித்தியாஸம் யாதொன்றும் ஏற்படுகிறதில்லை. இப்படிக்கிருக்கையில் ஸ்வப்ந-திருஷ்டாந்தம் எவ்விதம் சரியாகக்கூடும்? இந்த ஸந்தேஹம் நிவிருத்தியாகவேண்டு மானால் யதார்த்த-தத்துவத்தை கொஞ்சம் விபரமாய் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். உண்மையில், ஜாக்கிரத்-அனுபவங்கள் ஸ்வப்ந-அனுபவங்களைப்போல் மித்யைதான். ஆகிலும், ஒரு ஜீவனுக்கு முக்தி ஸித்தித்தால் **அவன் ஸம்பந்தப் பட்ட மட்டில்தான்** பிரபஞ்சமும் மற்ற ஜீவர்களும் மறைவடைவார்களே யல்லாமல், இம்மற்ற ஜீவர்களின் பார்வையில் இம்மறைவுண்டாகாதென்பதே வாஸ்தவம். எந்த மனிதனுடைய நித்திரையில் ஸ்வப்நப்பிரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றதோ, அவனைவிட்டு நித்திரை விலகிவிட்டால் ஸ்வப்பனத்தில் காணப்பட்ட ஸகலமும் பாக்கியின்றி மறைந்துவிடும். இப்படிக்கன்னியில் அவனுடையநித்திரையும் ஸ்வப்நமும் தொடர்ந்தே நடந்துவரும்போது அந்த ஸ்வப்நத்தில் காணப்பட்ட மற்றொரு ஜீவன் அந்த ஸ்வப்நப்பிரபஞ்சத்தி லிருந்து தான் தப்பித்துககொள்ளும்படியான காரியங்களைச் செய்வதாகச் சொல்லி முயற்சித்து மறைந்துபோய்விடக்கூடு மானால் அதனால் அந்த ஸ்வப்நத்தில் காணப்பட்ட மற்ற ஜீவர்களாவது பிரபஞ்சமாவது மறைந்துவிடக் கூடியதல்ல.

அவித்யைக்குட்பட்டிருக்கின்ற ஜீவனாகிய மனிதனுடைய ஸ்வப்ந-திருச்யம் போல், ஜாக்கிரத்-திருச்யம் பூராவும் ஒரே

ஜீவனுடைய மனோ-வாஸனா-காரியமல்ல. இது மாயா பதியாய் இருக்கின்ற ஸமஷ்டி-ரூபியான ஈசுவரருடைய ஸங்கல்பத்தினால் ஏற்பட்டுள்ளது. எதுவரையில் இப்படி மாயையை ஸ்வீகரிப்பதின் மூலமாய் ஜகத்து தோன்றிக்கொண்டிருக்க வேண்டுமென்று ஈசுவரருடைய ஸங்கல்பம் செய்யப்பட்டிருக்குமோ, அதுவரையில் அது தோன்றிக்கொண்டேயிருக்கும். இதைத்தான் கல்ப மென்று சொல்லுகிறது. ஜீவனுடைய நித்திரை நீங்கிவிட்டால் ஸ்வப்ந-திருச்யம் முழுவதும் நீங்கிவிடுவதுபோல், ஈசுவரன் தன் ஸ்வாதீனத்திலிருக்கின்ற மாயையை உபஸம்ஹாரஞ்சொய்து விட்டால் திருச்யப்பிரபஞ்சம் பூராவும் லயமடைந்து **பிரளயம்** ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஆகையால், ஸ்வப்ந திருஷ்டாந்தத்தில் சொல்லப்பட்டதுபோல், கல்ப மத்தியில் எந்த ஜீவனாவது தனக்கு அவித்யையின் நிவிருத்தி யுண்டாகும்படியான யத்தினங்களைச்செய்து தன் ஜீவத்வ நிலையை விட்டொழித்து மாயாதீதமான ஆத்மத்வ-நிலையிலேயே யிருக்கும்படி செய்துகொண்டால் அந்த ஜீவன் ஸம்பந்தப்பட்டமட்டில் திருச்யப் பிரபஞ்சம் பூராவும் அங்கு தோன்றும் மற்ற எல்லா ஜீவர்களும் பார்வைக்கு விஷயமாகாமல் மறைந்துவிடக்கூடும். ஒரு விதத்தில் இப்பிரபஞ்சத் தோற்றங்கள் யாவற்றும் ஈசுவரஸ்வப்நத்தோற்றங்களென்று சொல்லலாம். ஆனால், ஜீவன் நித்திரையினால் மயங்கி தன் நிலை தவறியிருப்பது போல், ஈசுவரன் மாயையினால் மயங்கிப் போவதுமில்லை, நிலை தவறி நிற்பதுமில்லை.

ஈசுவரன் ஸ்வதந்திரராக மாயையைக்கைகொள்வதற்குக் காரணமே ஜீவர்களுடைய கர்மங்கள்தான். ஜீவர்கள் அவரவர்களின் கர்ம பலன்களை அனுபவிப்பதற்காகவே ஜகத்காரியங்கள் நடந்து வரும்படியாக மாயாவியாயிருந்து ஈசுவரன் ஸகலத்தையும் செய்விக்கின்றார். மாயாவி ஸ்தானத்திலிருக்கின்ற, அதாவது மாயை மூலமாய் பிரதிபிம்பித்துப்பிரகாசிக்கின்ற, பிரஹ்ம சைதன்யமாகிய ஈசுவரனையும் சிதாபாஸனென்று சொல்லக்கூடும். ஆனால், அவர் ஸகல ஜீவர்களுக்கும் ஜகத்

துக்கும் பொதுவாயுள்ள ஸமஷ்டிசிதாபாஸன். அவனுடைய மாயா ஸ்வீகரணத்தினால் ஸ்வப்நம் போல் உண்டாகித்தோன்றி வருகின்ற திருச்யப் பிரபஞ்சத்தில் நாம் ஜீவர்களெல்லோரும் தோன்றிக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய தனித்தனியான யத்தினங்களினால் முன்சொல்லியபடி இப்பிரபஞ்ச-ஸம்ஸாரக் கட்டிலிருந்து நாம் விடுதலையடைந்து விடலாம். இப்படி விடுதலையடையாதவர்கள் நடப்பு கல்பத்திலும் பின்வரும் கல்பங்களிலும் பலவிதமான ஜன்மங்களையெடுத்து நானாப்பிரகாரமாகத் தோன்றிக்கொண்டேயிருந்து சுக துக்கங்களை அனுபவித்து வருவார்கள். பிரஹ்மம், ஈசுவரன், ஜீவன், ஜகத்து இந்நான்கின் தத்துவங்களை கொஞ்சம் விபரமாய் தெரிந்து கொள்ளும் பொருட்டும், முன் குறிப்பிட்ட ஸந்தேஹம் முழுவதும் நிவிருத்தியாகும் பொருட்டும், இப்பால் ஒரு ஸ்தூல-திருஷ்டாந்தத்தை யெடுத்துக்கொண்டு சற்று சோதித்துப் பார்ப்போம்.

6. ஆகாச திருஷ்டாந்தம்

ஓர் குளமிருப்பதாக மனஸில் பாவித்துக்கொள்ளவேண்டும் இக்குளத்தில் மூன்று அடி ஜலம் இருக்கின்றது. குளத்தின் மத்தியில் மூன்றடி உயரமுள்ள பலவித பாத்திரங்கள் ஜலத்திற்குள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பாத்திரங்களிலும் ஜலம் பூர்ணமாயிருக்கின்றது. பாத்திரங்களின் மேல்வாய்-மட்டங்களும் குளத்தின் ஜலமட்டமும் ஸமமாயிருக்கின்றன. குளத்திற்கு மேலுள்ள ஆகாசம் குள-ஜலத்திலும் பாத்திரங்களிலுள்ள ஜலத்திலும் பிரதிபிம்பித்துத் தோன்றுகின்றன. வெட்டவெளியாகிய ஆகாசம் பிரதிபிம்பிக்குமாவென்று ஸந்தேஹப்படவேண்டாம். குளத்தின் அருகாமையிலுள்ள தென்னமரங்கள் ஜலத்தில் பிரதிபிம்பிக்கும்போதும் மனிதனுடைய உருவம் பிரதிபிம்பிக்கும்போதும் இரண்டின் உயர-தாரதம்யமும் பிரதிபிம்பத்தில் காணப்படுகின்றது. இப்படியே 20 அடி உயரத்தில் பரந்துபோகின்ற பக்ஷியின் பிரதிபிம்பத்

தைக் காட்டிலும் 200 அடி உயரத்தில் பரந்து போகின்ற பக்ஷியின் பிரதிபிம்பம் வித்யாஸமாகவே தோன்றுகின்றது. அதாவது, பார்க்கப்படக்கூடிய வஸ்துக்கள் ஜலத்தில் பிரதிபிம்பிப்பதுமல்லாமல் அவைகளொன்றுக்கொன்றுள்ள இடைவெளியான ஆகாசமும் (Space) அதில் பிரதிபிம்பிக்கின்றதென்பதில் ஸந்தேஹமில்லை. இந்தப்படி குள-ஜலத்திலும் பாத்திரங்களிலுள்ள ஜலத்திலும் பிரதிபிம்பித்துக் காணப்படுகின்ற ஆகாசம் வாஸ்தவ ஆகாசமல்ல; அது வெறும் தோற்றமே. உண்மையில் குளத்திலும், பாத்திரங்களிலும், ஜலத்திலும், எங்கும் ஊடுருவி வியாபித்திருக்கின்ற ஆகாசம் வாஸ்தவ ஆகாசம் குளம் பூராவும் ஆகாசத்தில் பிரதிஷ்டையை அடைந்திருக்கின்றது. ஆகாசத்தினால் ஏற்பட்டிருக்கின்ற இடைவெளியில்தான் (in Space) குளம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், சுருதியினால் வெளியிடப்பட்டிருக்கிற பிரகாரம், ஆகாச-தத்துவத்திலிருந்தே வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவீ தத்துவங்கள் கிரமமாயுண்டாயிருப்பதால், ஆகாச-தத்துவமே குள-ரூபமாகவும் பாத்திரங்கள்-ரூபமாகவும் ஜல-ரூபமாகவும் காணப்படுகின்றதென்றே சொல்லவேண்டும். மண்ணால் செங்கலும், மண்-செங்கல்களால் அறைகளும் அறைகளால் வீடும் அமைக்கப்பட்டிருந்தால், மண்ணே வீடு-ரூபமாகத் தோன்றுகின்றதென்பதே வாஸ்தவம். மண்ணில்லாவிடில் அவ்வீடும் இராது. இதுபோல், ஆகாச-தத்துவமில்லாவிடில் பஞ்சபூத-மயமான மேற்கண்ட மற்றவைகளும் இல்லாமல் போய்விடும். இவ்விதமாக குளம் முதலானதே ஆகாச-காரியமாயிருப்பதால் ஸகலமும் ஆகாச-மயமேயாகும். இந்தப்படி குளத்திற்கு இடங்கொடுத்திருக்கின்றதும், அதற்கும் அதிலுள்ளவைகள் யாவற்றிற்கும் மூல-உபாதான-காரணமாக இருந்துவருகின்றதுமான ஆகாசமே உண்மையான வியாபக-ஆகாசம்.' அதாவது, இதுவே உள்ளும் புறமும் எங்கும் வியாபித்திருக்கின்ற ஆகாசம். இப்பிரகாரமாக, இரண்டுவித ஆகாசம் குளத்திலும் பாத்திரங்களிலும் இருக்கின்றது, ஒன்று வெறும்

தோற்றமாகிய பிரதிபிம்ப-ஆகாசம், மற்றொன்று வாஸ்தவமான வியாபக-ஆகாசம். மேலே சொல்லியபடி, வியாபக-ஆகாசமில்லாவிடில் குளம் முதலானது இருக்கமுடியாது. இவை இல்லாவிடினும் வியாபக-ஆகாசமிருக்கும். இப்படியே, பிரதிபிம்ப-ஆகாசத்தின் ஸ்திதியும் வியாபக-ஆகாசத்தை பொருத்திருக்கின்றது. பிரதிபிம்ப-ஆகாசம் இல்லாவிட்டாலும் வியாபக-ஆகாசமிருக்கும். இந்த ஸ்திதியில் "குள-ஆகாசம்" என்று சொன்னால் குளவியாபக-ஆகாசம் என்றாவது குளப்-பிரதிபிம்ப-ஆகாசம் என்றாவது, அல்லது இரண்டும் சேர்ந்து என்றாவது அர்த்தமாகும். இவ்விதமாகவே, "பாத்திர-ஆகாசம்" என்று சொல்லும்போதும் மூவகையாகவும் அர்த்தமாகும். இப்பால் அடியிற்கண்டபடி உபமானங்களை பாவித்துக்கொள்வோம் :—

ஆகாசம்=பிரஹ்மம் (சுத்தாத்மா)
குளம்=ஜகத்து (ஸமஷ்டி ஈசுவர–சரீரம்),
பாத்திரம்= வியஷ்டி ஜீவ–சரீரம்.
ஜலம்=அந்தக்கரணம்.
ஆகாசப்பிரதிபிம்பம்=சிதாபாஸன்.

குள ஆகாசம், அதாவது குள–வியாபக–ஆகாசம் (பிரஹ்மம்)+குளப்பிரதிபிம்ப–ஆகாசம் (ஸமஷ்டி சிதாபாஸன்) இரண்டும் சேர்ந்து } = ஈசுவரன்.

பாத்திர–ஆகாசம், அதாவது பாத்திர–வியாபாக-ஆகாசம் (பிரஹ்மம்) + பாத்திரப்பிரதிபிம்ப–ஆகாசம் (வியஷ்டி சிதாபாஸன்) இரண்டும் சேர்ந்து } = ஜீவன்.

ஆகாசத்திலேயே குளம் உண்டாகியும் இருந்தும் வருவது போல், ஒவ்வொரு கல்பத்திலும் காணப்படுகின்ற ஜகத்தும் பிரஹ்மத்திலேயே உண்டாகி அதிலேயே பிரதிஷ்டையை

அடைந்திருக்கின்றது. எவ்விதம் குளத்துக்கு வெளியிலும் ஆகாசமிருக்கின்றதோ, அவ்விதமே ஜகத்துக்கு வெளியிலும் பிரஹ்மம் உண்டு. அதாவது, ஜகத்துக்கு அதீதமாயுள்ளதும் பிரஹ்மந்தானென்று தாத்பரியம். பிரளய-காலத்தில் ஜகத்து ஈசுவர-மாயையில் லயமாகிவிடுகின்றது.

7. ஜீவ ஈசுவரபேதம்

ஸச்சிதாநந்த-ரூபியான பிரஹ்மத்திற்கு அபின்னமாயிருக்கின்ற திரிகுணாத்மகமான மாயாசக்தியில் ஸத்வ குணப் பிரதான மாயாசக்தி மூலமாய் பிரகாசிக்கின்ற பிரஹ்ம சைதன்யம் ஈசுவரனென்றும், ரஜோ குணப்பிரதான-மாயையாகிய அவித்யை மூலமாய் விளங்குகின்ற பிரஹ்ம சைதன்யம் ஜீவனென்றும், தமோ குணப்பிரதான-மாயையாகிய தாமஸீ மூலமாய் காணப்படுகின்ற பிரஹ்ம சைதன்யம் பிரகிருதியென்றும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதில் ஸத்வ குண மாயை ஸமஷ்டி-அந்தக்கரண-ரூபமாகவும், அவித்யை வியஷ்டி அந்தக்கரண-ரூபமாகவும், பரிணமப்பட்டபின்புதான் ஈசுவரனும் ஜீவனும் வியக்தமாய் பிரகாசிப்பதாகத் தெரியவருவதால், அதாவது, ஸமஷ்டி-அந்தக்கரணம் லயமாயிருக்குங்காலமாகிய பிரளயத்திலும், வியஷ்டி-அந்தக்கரணம் லயமாயிருக்கின்ற ஸுஷுப்தி-காலத்திலும், முறையே ஈசுவரனும் ஜீவனும் இருந்து வருவது வாஸ்தவமானாலும், அவர்களுக்கு அப்போது பிரகாசமிருப்பதாக வியாவஹாரிக ரீதியில் சொல்ல இடமில்லாததை முன்னிட்டு, மேற்கண்ட உபமானத்தில் ஜலமாகிய அந்தக்கரணத்தையே பிரதிபிம்பகாரணமாகக் குறிப்பிட்டிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டும். பிரதிபிம்பத்தன்மையாகிய சிதாபாஸத்தன்மையில் ஸமஷ்டி-சிதாபாஸனாகிய ஈசுவரனும் வியஷ்டி-சிதாபாஸனாகிய ஜீவனும் வெவ்வேறுதான், இருவர்களும் ஒன்றாகமாட்டார்கள். ஈசுவரத்வம் ஜீவத்வம் இரண்டும் சிதாபாஸத்தன்மையை ஒட்டியே ஏற்பட்டிருக்கின்றன. குளப்பிரதிபிம்ப-ஆகாசமும் பாத்திரப்

பிரதிபிம்ப-ஆகாசமும் ஒன்ருகமாட்டாது. ஆயினும், குளத்திலும் பாத்திரங்களிலும் வியாபக-ஆகாசம் ஒன்ருகவேயிருக்கின்றது. இதுபோல் ஈசுவர-ஜீவர்களிடமும் அதிஷ்டான பூதமான பிரஹ்மம் ஒன்ருகவேயிருப்பதால்,பிரஹ்மத்வ-பார்வையில் ஈசுவரனும் ஜீவனும் ஒன்றே தவிர வெவ்வேறல்ல. [இங்கு திருஷ்டாந்தத்தில் பஞ்ச-பூதங்களில் ஒன்ருகிய ஆகாசத்தை அவயவமுள்ளதாகச்சொல்லக்கூடியதாலும்,இக்காரணத்திஞல் பாத்திரத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிற வியாபக-ஆகாசம் குள வியாபக-ஆகாசத்தின் ஒருபாகமென்று சொல்லக்கூடியதாலும், குளத்திலும் பாத்திரங்களிலுமுள்ள வியாபக-ஆகாசம் ஒன்று தான் என்று சொல்லியிருப்பதை ஆக்ஷேபிக்க இடமிருந்த போதிலும், தார்ஷ்டாந்தத்தில் பிரஹ்மம் அவயவமில்லாததாகவும் அகண்டமாகவும் பிரிக்கப்படக்கூடாததாகவும் இருப்பதாக சுருதி மூலமாய் தெரியவருவதால், இந்த ஆக்ஷேபணை தார்ஷ்டாந்தத்தில் இருக்கக்கூடியதல்லவென்பது ஜ்ஞாபகத்திலிருக்கவேண்டும்.] ஈசுவரனிடமும் ஜீவர்களிடமும் எங்கும் ஒரே பிரஹ்மம் ஸம்பூர்ணமாயிருக்கின்றதென்பதே உண்மை.

8. பந்தம்–மோக்ஷம்–ஜீவனுக்கே

மேலும், ஒரு பாத்திரத்தில் பிரதிபிம்பித்திருக்கிற ஆகாசத்திற்கு அப்பாத்திரத்தின் மாறுதலினுலும், அதிலுள்ள ஜலத்தின் கலக்கம் அசைவுதல் முதலானதாலும் வேறுபாடுகள் ஏற்படக்கூடும். இவ்வித வேறுபாடுகள் அந்தந்த பாத்திரங்களின் ஸ்தான-பேதங்களினுலும் மேல்-வாய்களின் ஆகிருதி பேதங்களினுலும் ஒவ்வொரு பாத்திரத்திலும் தனித்தனி விதமாகவே காணப்படலாம். இவ்வேறுபாடுகளின் சம்பந்தம் எங்கும் பொதுவாயிருக்கிற வாஸ்தவமான வியாபக-ஆகாசத்திற்குக் கிடையாது. பந்தம், மோக்ஷம் இரண்டும் ஜீவ (வியஷ்டி) - சிதாபாஸனுக்குத்தான் ஏற்பட்டிருக்கின்றன. மோக்ஷமென்ருல் ஜீவனுக்கு ஸம்ஸாரஹேதுவான ஜீவத்தன்மையைக் கொடுத்திருக்கின்ற சிதாபாஸத்வம், அதாவது,

கேவல ஆத்மப்பிரதிபிம்பத்தன்மை நீங்கிப்போய் சுத்தாத்மத்வம் (பிரஹ்மத்வம்) மிஞ்சி நிற்பதென்று அர்த்தம். பிரதிபிம்பத்திற்கு ஸாதனங்களாகயிருப்பவை நீங்கிப்போனால் பிரதிபிம்பமும் நீங்கிவிடும். அந்தக்காரணமும் அதன் காரணமாகிய அவித்யையும் இல்லாமல் போய்விட்டால் சிதாபாஸத் தோற்றமும் இருக்கமாட்டாது. முன் குறிப்பிட்டபடி ஒவ்வொரு பாத்திரத்திலும் தனித்தனியாகவே பிரதிபிம்ப-ஆகாசத்தின் வேறுபாடுகள் இருப்பதுபோல், ஒவ்வொரு சரீரத்திலும் தனித்தனி வேறுபாடுகளுடன் கூடிய ஜீவசிதாபாஸன் இருந்து வருவதில் ஒரு ஜீவனுடைய சிதாபாஸத்வம் மறைந்துபோனால் மற்ற ஜீவர்களின் சிதாபாஸத்வம் மறைவடைந்து விடாது எப்படி சிதாபாஸத்தன்மையில் ஈசுவரனும் ஜீவனும் வெவ்வேறென்று சொல்லப்பட்டதோ, அப்படியே அத்தன்மையில் ஜீவர்களும் பரஸ்பரம் வெவ்வேறுதான். எவ்விதம் குளத்தில் உள்ள பாத்திரங்களில் ஒரு பாத்திரம் உடைந்துபோய் அந்த பாத்திரத்தில் காணப்பட்ட ஆகாசப்பிரதிபிம்பம் மறைந்து விட்டதனால் அக்குளத்திலுள்ள மற்ற பாத்திரங்களில் காணப்படுகின்ற ஆகாசப் பிரதிபிம்பங்களுக்கு மாறுதல் வந்து விடாதோ, அவ்விதமாகவே ஒரு ஜீவனுக்கு மோக்ஷம் ஏற்பட்டால் மற்ற ஜீவர்களுக்கும் மோக்ஷம் வந்துவிடமாட்டாது குளமே அழிந்துபோனால்தான் அதிலுள்ள எல்லா பிரதிபிம்பாகாசங்களும் போய்விடும். இதுபோல் தாத்காலிகமான மஹாப்பிரளயத்தில்தான் ஸகலஜீவத்தோற்றங்களும் தாத்காலிகமாக மறைவடைந்து ஈசுவர மாயையில் அடங்கிவிடக்கூடும். மற்றக் காலங்களில், அதாவது, கல்ப-காலங்களில் அந்தந்த ஜீவர்களுடைய பந்தங்களும் மோக்ஷங்களும் தனித்தனிதான் ஆகையால் ஸ்வப்ந-திருஷ்டாந்தத்தை முன்னிட்டு ஒரு ஜீவனுக்கு முக்தி யேற்படுங்காலத்தில் திருச்யப் பிரபஞ்சம் முழுவதும் லயமாவது மன்னியில் மற்ற எல்லா ஜீவர்களும் மறைந்துபோக வேண்டுமேயென்று சங்கித்தது சரியல்லவென்பது ஸித்தம்.

அத்யாயம் 16

விபரீத வாதங்கள்

1. சிதாபாஸன்

ஜாக்கிரத்திருச்யப் பிரபஞ்சத்தோற்றங்களை ஒரு விதத்தில் ஈசுவரனுடைய ஸ்வப்நத்தோற்றங்களாக பாவித்துககொள்ளலாம் என்று முன் சொல்லப்பட்டது. அதாவது, எப்படி ஸ்வப்நத் தோற்றங்கள் உண்மையில்லையோ, அப்படியே ஸகல ஜகத் தோற்றங்களும் வாஸ்தவமில்லையென்று தெரிந்துகொண்டே ஸாக்ஷி-நிலைமையில் ஈசுவரன் பார்த்துக்கொண்டிருக்கிறுன் ஈசுவரனுடைய பார்வையும் ஜ்ஞானியுடைய பார்வையும் ஒரே விதமென்று சொல்லலாம். இப்பார்வை சிதாபாஸப்பார்வையல்ல ஈசுவரனிடத்திலும் ஜ்ஞானத்தை அடைந்திருக்கின்ற ஜீவனிடத்திலும் சிதாபாஸத்தன்மையும் கூடவே யிருப்பதாக எண்ணப்பட்டபோதிலும, எப்போதும் சிதாபாஸத்தன்மை ஈசுவரனுக்கு ஸ்வாதீனப் பட்டு அடங்கியிருப்பதாலும் ஜ்ஞானியாயிருக்கின்ற ஜீவனுடைய சிதாபாஸத்தன்மை ஜ்ஞானுக்னியால் கொளுத்தப்பட்டு வீர்யமில்லாமல் போய்விட்ட படியாலும், இருவர்களுடைய திருஷ்டியும் சிதாபாஸ-திருஷ்டி யல்ல அது ஸாக்ஷி-மாத்திர-திருஷ்டியே, அதாவது, ஆத்ம-திருஷ்டியேயாகும். ஈசுவரன் எப்படியோ, அப்படியே ஜ்ஞானியும் எப்பொதும் ஆத்மதத்வ-நிலையிலேயே உள்ளவர். இப்படி ஆத்மதத்வ-நிலையிலிருக்கின்ற ஜ்ஞானியின் ஸ்திதி வேறு, ஜீவத்வ-நிலையிலிருந்து கொண்டு ஜ்ஞானத்திற்காக பாடுபடுகின்ற தார்மிகரின் ஸ்திதி வேறு. அதாவது, ஜ்ஞானீ ஆத்மாவே தவிர வேறல்ல; தார்மிகரோவெனில் சிதாபாஸனே. எப்படி நித்திரையில் இரண்டுபட்டுள்ள சிதாபாஸனுடைய ஏகதேசப்பிரதிபிம்பாம்சமாக ஸ்வப்ந-ஜீவன் விளங்குகின்றுனே, அப்படியே அவித்யை மூலமாக பின்னப்பட்ட ஆத்மப்பிரதபிம் பாம்சமாக சிதாபாஸன் விளங்குகிறுன். ராஜா தூங்கும் போது

துஸ்-ஸ்வப்நமேற்பட்டு தாரித்திரிய-கஷ்டங்களை அனுபவிப்பதாக ராஜ ஜீவாம்சமாகிய ஸ்வப்ந-ஜீவன் எண்ணிக்கொண்டிருக்கையில் அவனிடம் அந்த ஸ்வப்நத்திலேயே யாராவது மஹாபுருஷன் வந்து "நீ உண்மையில் மஹாராஜாவே யல்லாமல் தரித்திரனல்ல; நித்திராமோஹத்தினுல் உன்னிடம் தாரித்திரிய-கஷ்டம் வந்திருப்பதுபோல் தோன்றுகின்றது; நித்திரை விலகிவிட்டால் உனக்கு ஸ்வதஸ்-ஸித்தமான மஹாராஜத்தன்மை தானுகவே விளங்கும் நித்திரையை விலக்கும் உபாயம் இதுவே" என்று சொல்லி உபாயத்தை அந்த ஜீவனுக்கு வெளிப்படுத்தியதின்பேரில் அவன் அவ்வுபாயத்தைக் கைக்கொண்டு ஆசரித்து வருவான் அவ்விதமாகவே தார்மிக-சிதாபாஸனும் குரு-வேதாதி-ஆப்த-வாக்கியங்களில் நம்பிக்கையை வைத்து தன்னுடைய அவித்யையை விலக்கிவிடுவதற்கும், தனக்கு அதிஷ்டானமாகிய சுத்தாத்மாவுடன் ஏகீ-பாவத்தை அடைந்து ஸச்சிதானந்த-ஸ்வரூபியாகவேயிருந்து வருவதற்கும் உபாயமாக தர்ம-யத்தினங்களைச் செய்து வருவதாக எண்ணவேண்டும். இவ்விசயத்தினங்களினுல் அவித்யையாகிய மஹா-நித்திரை விலகிப் போய் விட்டால், அந்த தார்மிகருடைய ஜீவத்வமாகிய பிரதி பிம்பத்தன்மையும் நீங்கி கேவலாகண்டாத்ம-ஸ்வரூபியாகவே அவர் மிஞ்சி நின்றுவிடுவார். ஸாமான்ய ஸ்வப்ந-மத்தியில் விழிப்புண்டாகி ஸ்வப்ந-கஷ்டங்கள் வாஸ்தவமில்லை யென்று தெரிந்துகொண்ட பிறகும் அந்த ஸ்வப்ந-வாஸனையினுல் அதுவே கொஞ்சம் தொடர்ந்து காணப்படுவதுபோலும் தோன்றக்கூடும். இப்படித் தொடர்ந்து தோன்றுங்காலத்தில் தன்னுடைய நிஜ-ஸ்வரூபஜ்ஞானமும் கூடவேயிருந்துவருவதினுல் அத்தோற்றங்களால் துக்கமுண்டாகாமலிருந்துவிடும். இப்படி விழிப்புடன் கூடியும் ஸ்வப்ந-துக்கமில்லாமலுமிருக்கிறவன் ஜாக்கிரத்-ஜீவனேயல்லாமல் ஸ்வப்ந-ஜீவனல்ல. இதுபோல், அவித்யை நீங்கி ஸம்ஸார-துக்கங்களும் மனதைவிட்டு விலகிப்போய் ஆனந்தானுபவத்துடன் கூடியிருக்கிற ஜ்ஞானீ

ஆத்மாவேயல்லாமல் சிதாபாஸனல்ல நித்திரை நீங்குவதற்கு முன்பாக மூன் சொல்லியபடி நித்திரையை விலக்க யத்னிப்பவன் ஸ்வப்ந-ஜீவனே தவிர ஜாக்கிரத்-ஜீவனில்லையென்றது போல, அவித்யா-நிவிருத்தியின் பொருட்டு சாஸ்திர-விஹிதமான தர்ம-மார்க்கங்களில் பிரயத்தினங்களைச் செய்துவருகின்ற தார்மிகரும் சிதாபாஸனே தவிர சுத்தாத்மா அல்ல.

2. சிதாபாஸ மறைவு ஆத்மநாசமல்ல

இங்கு ஓர் சங்கை உண்டாகக்கூடும். நித்திரையிலிருந்து விழிப்பு ஏற்பட்டவுடன் ஸ்வப்ந-ஜீவனும் ஸ்வப்ந-ஜகத்தும் மறைந்துபோய்விடுவதுபோல், ஜ்ஞானத்தின் உத்பத்தியினால், அதாவது அவித்யை விலக்கப்பட்டுவிட்டால் அதில் பிரதிபிம்பித்திருந்த ஜீவனும் நஷ்டமாகவே போய்விடுவதாகத் தெரியவருவதால், ஜ்ஞானத்தினால் தன்னுடைய ஹானியே உண்டாகக்கூடியதாக தார்மிகரும் எண்ணக்கூடும். அதாவது ஜ்ஞானத்தின் பொருட்டு யத்தினஞ்செய்பவரும் சிதாபாஸ-ரூபியுமான தார்மிகர் ஜ்ஞானமேற்பட்ட பின்பு மறைந்துவிடுகிறாரென்றும் அப்போதுள்ள ஜ்ஞானீ சிதாபாஸனல்லவென்றும் ஆத்மாவேயென்றும் சொன்னால், ஸ்வ-நாசமே ஜ்ஞானத்தின் பலனென்றுதானே வெளியாகிறதென்று கேட்கலாம். இவ்விடத்தில் பின் சொல்லப்படுவதை அறிந்துகொள்ளவேண்டும். ஆத்மா வேறு சிதாபாஸன் வேறு என்று சொல்லுவதினால், ஆத்மத்வ-ஸம்பந்தமில்லாமலே சிதாபாஸன் தனியாயிருப்பதாக அர்த்தமில்லை. இப்படித் தனிப்பட்டிருக்கவும் முடியாது. ஜாக்கிரத்-ஜீவன் வேறு அவனுடைய அம்சந்தான் ஸ்வப்ந-ஜீவன் என்றால் ஜாக்கிரத்-ஜீவனில்லாமல் ஸ்வப்ந-ஜீவன் இருக்கலாமென்று சொல்லக்கூடாது. சந்திரன் வேறு கண்ணாடியில் தோன்றுகிற சந்திரப்பிரதிபிம்பம் வேறு என்றால் சந்திரனுடைய இருப்பும் ஸான்னித்தியமும் இல்லாமலே பிரதிபிம்பத்தின் இருப்பு இருக்கலாமென்று எண்ணக்கூடாது. ஸ்வப்ந-ஜீவனுடைய இருப்பு ஜாக்கிரத்-

ஜீவனுடைய இருப்பைப்பொருத்து கிற்கின்றது. கண்ணுடியி லுள்ள பிரதிபிம்பத்தின் இருப்பு சந்திரனுடைய இருப்பைப் பொருத் திருககின்றது. இவைகளுக்கு ஸ்வதந்திரமான தனி யிருப்புக கிடையாது இப்படியே சிதாபாஸனுடைய இருப்பும் ஆத்மாவின் இருப்பைச் சார்ந்தேயிருக்கின்றது. தவிரவும் சந்திர-பிம்பப்பிரதிபிம்ப-திருஷ்டாந்தத்திற்கும் ஆத்ம - சிதா பாஸ-விஷயத்திற்கும் ஒரு பெரும் வித்தியாஸமிருப்பதையும் கவனிக்கவேண்டும் சந்திரன் கண்ணுடிக்கு வெளியில் வெகு தூரத்திலிருக்கின்றது. சந்திரனுடைய ஸான்னித்தியம் கண்ணுடிக்கு ஏற்படாமலுமிருந்துவிடக்கூடும் இப்படி ஸான்னித்தியம் இல்லாவிடில் பிரதிபிம்பமும் இல்லாமல் போய் விடும். அதாவது, கண்ணுடியிருந்தும் சந்திரனுமிருந்துங்கூட பிரதிபிம்பம் ஏற்படாமலிருக்கலாம். ஆத்மாவுக்கும் சிதா பாஸனுக்குமுள்ள ஸம்பந்த-விஷயம் இப்படியல்ல ஸகலத் திற்கும் அதிஷ்டான-வஸ்துவாகவே ஆத்மா இருப்பதால், அவித்யையும் அவித்யா-விசிஷ்டனுகிய ஜீவனும் ஆத்மாவிடத் திலேயே தோன்றுவதாகத்தான் சொல்லவேண்டும் வாஸ்தவத் தில் ஜீவ-சிதாபாஸன் பிரதி பிம்ப-மாத்திரனேயானுலும், அப் பிரதிபிம்பம் ஏற்படுகிற இடத்தில் கூட பிரஹ்மமும் (வியாபக-ஆகாசத்தைப்போல்) ஸ்வதஸ்-ஸித்தமாக எப்போதும் இருந்து கொண்டிருப்பதாலும், இந்த வியாபக-வஸ்து இல்லாமல் பிரதி பிம்பத்திற்கே அவகாசமுண்டாகக்கூடாததாலும், வியாபக-வஸ்துவின் இருப்பும் பிரதிபிம்பத்தின் இருப்புடன் சேர்ந்தே யிருக்கின்றது பெரும் அக்னிக்குழியின் மத்தியில் ஒரு சிறு சக்கிராகாரமான இரும்புத்துண்டு கிடந்தால், அந்த துண்டு இரும்பில் பிரகாசிக்கின்ற அக்னியும் சக்கிராகாரமாகத் தோன்று வதுபோல், ஸர்வாதிஷ்டானப் பொருளாகிய ஆத்மாவும் அதிலேயே யிருப்பதாகத் தோன்றுகின்ற அவித்யையின் மூல மாய் பிரகாசிக்கும்போது அவித்யையின் வக்கிராதிகளுட னேயே யிருக்கிற சிதாபாஸனுகக் காணப்படுகிருன். ஆகை யால், சிதாபாஸன் ஆத்மாவுக்கு வெளிப்பட்டவனல்ல. ஆத்

மத்வ-ஸம்பந்தமில்லாமல் சிதாபாஸனுக்கு இருப்பே இருக்க முடியாது. எப்படி பாத்திர-ஜலத்தில் பிரதிபிம்பித்துக் காணப்படுகின்ற ஆகாசத்தோற்றத்திலும் உண்மையான பாத்திரஜல-வியாபக-ஆகாசம் கூடவே இருந்துகொண்டிருக்கின்றதோ, அப்படியே சிதாபாஸனிடத்திலும் வாஸ்தவமான அதிஷ்டான-ஆத்மத்தன்மை சேர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது அதிலும், இரும்பின் சக்கிராகாரத் தன்மை பிரதானமாய் சோபிப்பதுபோல், ஆத்மத்வம் அடங்கி நிற்பது போலிருந்து அவித்யா-விசிஷ்டத்வமே, அதாவது ஜீவத்வமே, மேலிட்டுக் காணப்படுவதால், சிதாபாஸன் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது. மேலான நிவிருத்தி தர்மாசரணையினுல் ஜ்ஞானுப்பியாஸம் பலித்து விடுவதின் பேரில் சிதாபாஸத் தன்மைக்கு ஹானி ஏற்பட்டால் உண்மையில் ஸ்வரூபபூதமான ஆத்மத்தன்மைக்குக் குறைவு வந்து விடாது ஆகையால், ஜ்ஞானம் ஏற்பட்டபின்பு ஆத்மாவே ஜ்ஞானரூபியாக விளங்குகிருன், சிதாபாஸன் மறைந்து விடுகிருன், என்று சொல்வதினுல் ஸ்வ-நாசமே ஏற்படுமோவென்ற ஸந்தேஹத்திற்கும் பயத்திற்கும் கொஞ்சமேனும் காரணமில்லையென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

3. வேதப்பிராமாண்யம்

இவ்விதமாக ஆத்மாவை சிதாபாஸனுகத் தோன்றும்படிச் செய்த அவித்யை நிவிருத்தியானவுடன் அவ்வாத்மாவே அகண்டமான அத்விதீயமான பிரஹ்மமாக விளங்குகிருர். இந்த தத்வத்தை அறிந்துகொள்ளாமல் சிதாபாஸனே பிரஹ்மம் என்று அத்வைதிகள் சொல்வதாக நினைத்துக்கொண்டு மற்றவர்கள் அத்வைத ஸித்தாந்தத்தை ஆக்ஷேபிக்கிருர்கள். அதிலும் முக்கியமாக த்வைதவாதிகள் அந்த ஸித்தாந்தம் என்னவென்று தெரிந்துகொள்ளப் பிரயத்தினம் செய்யாமல், அந்த ஸித்தாந்தமறிந்த வித்வான்களுடன் சர்ச்சை செய்யத் தயாரில்லாமல், ஸாமான்ய ஜனங்களை வைத்துக்கொண்டு

வெகு ஆர்பாட்டத்துடன் தங்கள் ஆக்ஷேபணைகளை வெளியிடு கிறார்கள். அதைக்கேட்டு அந்த ஜனங்கள் ஏமாந்து போய் தத்வ விஷயத்தில் மனக்குழப்பம் ஏற்படக்கூடியதை நினைத்து அவ்வாக்ஷேபணைகள் யாதொன்றும் நிலைக்கதக்கதில்லை யென்பதை எடுத்துக்காட்டவேண்டிய பொருப்பு தார்மிகர் களான அத்வைதிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயம் முக்கியமாய் உபநிஷத்வாக்கிய ஸம்பந்தமாகவேயிருப்பதால் அதையறியக்கூடிய தக்க அதிகாரிகளிடமே சொல்வதுதான் ந்யாயமான போதிலும் மேலே கண்டபடி ஏமாறக்கூடிய ஸாமான்ய ஜனங்களின் நன்மையை உத்தேசித்து அவ்வாக் கியங்களின் தாத்பர்யத்தையும் வெளியிடுவது ஆபத-தர்மம் என்ற முறையில் சொல்லப்படுகிறது.

முதலாவதாக, "ப்ரத்யக்ஷப்பிரமாணம், அனுமானப் பிரமாணம், வேதத்தின் கர்ம காண்ட பாகங்கள், ஸ்ருஷ்டியை அறிவிக்கக்கூடிய உபநிஷத்பாகங்கள், உபாஸனைகளை நிரூபிக்கும் உபநிஷத்பாகங்கள், இவை யாவும் ஜீவ ப்ரஹ்ம ஏகத்வத்திற்கு விரோதப்படுகின்றன ஏதோ "தத் த்வம் அஸி" முதலான ஏழு எட்டு வாக்கியங்கள் ஏகத்வத்திற்கு ஆதாரமாயிருக்கின்றனவென்று அத்வைதிகளால் சொல்லப் படுகின்றது. அனந்தமான வேத வாக்யங்களில் பேதம் சொல்லப்பட்டிருக்கும்போது, அதற்கு விரோதமான அபேதத்தை ஏழெட்டு வாக்கியங்கள் சொல்லுமென்பது அஸம்பாவிதமே. பேதவாக்கியங்கள் அதிகமாயிருப்பதால் அவைகளுக்குத்தான் பிராபல்யம்" என்கிறார்கள். வேதத்தின் பிராமாண்யத்தை நன்கு அறிந்தவர்கள் இவ்விதம் சொல்ல மாட்டார்கள்.

கடவுள்வேறு, ஜீவன்வேறு, ஜகத் வாஸ்தவம் என்பதான கொள்கைகளையுடைய த்வைதமதங்கள் இவ்வுலகமெங்குமிருக் கின்றன. மஹம்மதியமதம், கிருஸ்தவமதம், முதலானவைகள் வேதப்பிராமாண்யத்தை ஒப்புக்கொள்ளாமலே இவ்விதக்

கொள்கைகளைக் கைக்கொண்டிருப்பதும்தவிர, மனிதன் கடவுளிடம் பக்தியைச்செலுத்தி குறிப்பிட்ட மார்க்கங்களில் நடந்துகொண்டு நற்கதியை அடையவேண்டுமென்று உபதேசிக்கின்றன. அம்மதாசரணைகளை அனுஷ்டித்து அநேகர் உத்தமமான பதங்களை அடைந்திருப்பதாகச் சொல்வதையும் நாம் மறுதளிக்கக் காரணமில்லை. ஆகையால் உத்தமபதங்களை அடைய வேதம் அவசியமில்லையென்றே ஏற்படும். வாஸ்தவத்தில், எவ்விஷயம் பிரத்யக்ஷம், அனுமானம், லௌகிகசப்தம், ஆகிற பிரமாணங்களால் அறிந்துகொள்ள முடியாதோ அதை போதிப்பதனுல்தான் வேதத்திற்கு பிராமாண்யம் என்று ஸகல வைதிகர்களும் ஒப்புக்கொண்ட விஷயம். ஜீவ-பிரஹ்ம-ஐக்கியமோ, அந்த தத்வத்தை ஸாக்ஷாத்கரிப்பதற்கு வேண்டிய மார்க்கங்களோ வேறு எவ்விதப் பிரமாணங்களினுலும் அறியத்தகுந்தவையல்ல. அவ்வைக்ய ரூபமான மோக்ஷ புருஷார்த்தத்தையும் ஸாதன ரூபமான தர்ம புருஷார்த்தத்தையும் போதிக்கவேதான் வேதம் ஏற்பட்டிருக்கிறது. மனிதர்களுக்குள் பெரும்பாலும் ஸ்தூல—ஸூக்ஷ்ம-சரீரங்களிலேயே தான் என்ற புத்தி பலவாருக ஸ்திரப்பட்டு, சித்தம் அதிகமாக அசுத்தத்துடனும் சாஞ்சல்யத்துடனும் கூடியிருப்பதால், தர்மங்களுக்குள், அதிகமாக அசுத்தியை நீக்கிக்கொள்வதற்காக பலவித ஸத்-கர்ம-ரூபங்களாகவும், சிலவைகள் சாஞ்சல்யத்தை நிவிருத்தி செய்வதற்காக உபாஸன ரூபங்களாகவும், இவ்விரண்டு ஸாதனங்களின் அனுஷ்டானத்தினுல் சுத்தமாயும் நிச்சலமாயுமுள்ள சித்தத்தோடு கூடிய மேலதிகாரிகளுக்கு மாத்திரம் உபயோகப்படக்கூடிய சிரவண-மனன-நிதித்யாஸன ரூபங்களாகவும், ஏற்பட்டிருக்கின்றன. இதனுல்தான் வேதத்தில் கர்மகாண்டம் மிகப்பெரியதாகவும், உபாஸனுகாண்டம் சிறியதாகவும், ஞானகாண்டம் மிகச்சிறியதாகவும், காணப்படுகின்றன.

மிகவும் கீழ்ப்பட்ட அதிகாரி முதல் மிகவும் மேலான அதிகாரிவரையுள்ள எல்லா மனிதர்களும் அவரவர்களுக்கு

உசிதமான தர்மங்களைக் கைப்பற்றிக்கொண்டு முடிவில் ஸம்ஸாரதுக்கத்திலிருந்து கரையேறவேண்டுமென்ற உபதேசத்தின்பேரிலேயே வேதம் பலவித அப்யாஸங்களைக் குறிப்பிட்டிருக்கின்றது. உத்தமாதிகாரிகளுக்கு ஏற்பட்ட அத்வைத போதகங்களான வாக்கியங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கும். ஒவ்வொரு வேத சாகையிலும் கடைசி பாகமான உபநிஷத்துக்கள் மொத்தம் 1180 உண்டு. ஆனால் தத்காலம் பிரசாரத்திலிருப்பது ஸாதாரணமாக முக்திகோபநிஷத்தில் கண்ட 108 தான். உபநிஷத் என்றாலே ரஹஸ்யம் என்பது பிரஸித்தம். ரஹஸ்யம் எப்பொழுதும் சுருக்கமாக தக்க அதிகாரிகளுக்கு மாத்திரம்தான் வெளியிடப்படும். சுருக்கமாயிருந்தாலும் அவைகளை மஹாவாக்கியமென்றே வியவஹரிக்கப்படுகிறது. வெகு ஜனங்களுக்குத் தேவைப்படும் அரிசி, உப்பு, புளி, மிளகாய்வற்றல் முதலான சாமான்கள் பலசரக்குக் கடையில் எல்லோருக்கும் தெரியும்படியாகவும் அதிகமாகவும் வைக்கப்பட்டிருக்கும். சிலர்களுக்கு மாத்திரம் தேவைப்படும் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், முதலான உயர்ந்த ஸாமான்களை அவ்விதம் வைப்பதில்லை. பலசரக்கு கடைகள், ஜவுளிகடைகள், கரிகாய்க் கடைகள் ஏராளமாயிருக்கையில், ரத்தினவியாபாரக் கடைகள் மிகவும் ஸ்வல்பமாகத்தானிருக்கும். பந்தோபஸ்தாக ஸ்வல்பமாக வைத்திருப்பதினால் அப்பதார்த்தங்களுக்கு மதிப்பு குறைந்து விடுமா? அவைகளுக்கு மதிப்பு அதிகமாயிருப்பதினாலேயே அவ்விதம் வைக்கப் பட்டிருக்கின்றன. இதே நியாயப்படிதான் உத்தமமான ஞானத்தை போதிக்கக்கூடிய அத்வைத பரமான வாக்கியங்கள் குறைவாக இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

உத்தமமான ஞானத்தையடைய யோக்யதை ஸம்பாதிக்கும் வரை பிரபஞ்சம் ஸத்தியமென்ற பாவனையேயிருந்து வருமாதலால், அந்த தசையில் ஸாமான்யமாகத் தோன்றுகிற பேதத்தை அனுவதித்தே வேத வாக்கியங்கள்

பிரவிருத்தித்திருப்பது நியாயமேயாகும். இவ்வித அனுவாதத்தினால் பேதம் ஸத்தியம்தான் என்று ஏற்பட்டு விடாது. தவிரவும், பிரத்யக்ஷாதி ஸித்தமான பேதத்தை அனுவதிக்கும் வேதவாக்யங்களுக்கு ஸ்வயம் பிராமாண்யம் கிடையாதென்பதே சாஸ்திர மரியாதை. ஜகத்திலுள்ள ஜீவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சரீராதிகளில் "தான்" என்ற பாவனையுடனேயேயிருந்து வருகிறபடியால் பேதம் தோன்றுவதால், ஸ்தூலசரீரத்திலுள்ள இந்த பாவனையை குறைத்து வருவதற்காக காயிகமான கர்மாக்களும், அந்தக்கரணத்திலுள்ள இந்த பாவனையை குறைத்து வருவதற்காக உபாஸனைகளும்விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாவனையிருக்கும் வரை பேதமிருந்தே தீருமானதினால் அப்பேதப்போக்குக்கு இடம் கொடுத்தேதான் இவ்விருவித விதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. உபாஸனமார்க்கத்திலும் மேலானபடிக்கு ஏறினவர்கள் உபாஸ்யத்தை தனக்கு வேறுபட்டதாக பாவிககக்கூடாதென்றும் அப்படி பாவித்தால் பசுவிற்கு ஸமானம் என்றும் உபாஸ்யதேவதையும் தானும் ஒன்று என்ற பாவனையுடன் தான் உபாஸிக்கவேண்டுமென்றும் சொல்லியிருப்பதால், உபாஸனைக்கும் பரமதாத்பர்யம் அபேதத்தில்தான் என்பது நன்கு தெரிகிறது. அஞ்ஞான தசையிலிருப்பவர்களை உத்தேசித்து பேதத்தை அனுவதித்து, ஞானமார்க்கத்திலுள்ளவர்களை உத்தேசித்து அபேதத்தைச் சொல்லும் வேதம் எவ்விதத்திலும் முரண்படக்கூடியதில்லை. ஒரே அதிகாரிக்கு ஒரே காலத்தில் பேதபரமாயும் அத்வைத பரமாயும் வேதம் போதிக்குமானால் தான் விரோதமிருக்கும். வெவ்வேறு அதிகாரிகளை உத்தேசித்தே ஏற்பட்டிருப்பதால் பரஸ்பர விரோதம் என்று சொல்வதற்கு இடமேயில்லை. கர்ம காண்டத்திலேயே உபநயனமான பிராஹ்மணன் எக்காலத்திலும் சிகாயக்ஞோபவீதங்களில்லாமலிருக்கக் கூடாதென்று பல முறை வற்புறுத்தின வேதமே ஸன்னியாஸகாலத்தில் அவைகளை விஸர்ஜனம் செய்யவேண்டுமென்று விதித்திருப்பது

விரோதமாகுமா ? ஸ்ருஷ்டிவாக்யங்கள் யாவும் ஸ்ருஷ்டிக்கப் படும் ஆகாசமுதலான ஸகல கார்ய வஸ்துக்களும் பிரஹ்ம மாகிற காரணத்திலிருந்தே ஏற்பட்டிருப்பதால், வாஸ்தவத்தில் பிரஹ்மத்தைத்தவிர வேறில்லையென்ற அபேதத்த்வத்தையே போதிக்கின்றன. இவ்விதமாக நன்கு கவனித்துப்பார்த்தால் அத்வைத போதம்தான் வேதத்தின் பரமதாத்பர்ய மென்பது தெரியவரும்.

4. லக்ஷணை

மேலும் "அத்வைத மதத்திற்கு ஸ்பஷ்டமான பிரமாணங் கள் வேதத்தில் கிடையாது. முக்கிய விருத்தியால் சொல்ல முடியாததனாலேயே லக்ஷணாவிருத்தியை அங்கீகரிக்க வேண்டுமென்று அத்வைதிகள் ஒப்புக்கொள்கிறார்கள் அவ் விதம் அங்கீகரிப்பதில் அனந்தமான தோஷங்கள் ஏற்படும். வேறு எங்கேயாவது ஏகத்வம் முக்கிய விருத்தியால் போதிக்கப்பட்டிருந்தால் இங்கே லக்ஷணாவிருத்தியை ஆசிரயிக்கலாம். அப்படி எங்கேயும் முக்கிய விருத்தியால் சொல்லப்படவேயில்லை" என்றும் ஆக்ஷேபிக்கிறார்கள் அவர்கள் உதாஹரிக்கிற நான்கு மஹாவாக்கியங்களாகிய "பிரஹ்மமாக நீ இருக்கிறாய், "நான் பிரஹ்மமாக இருக்கிறேன்," "இந்த ஆத்மா பிரஹ்மம்," "அறிவே பிரஹ்மம்" என்பவைகளில் எந்த விஷயத்தில் ஸ்பஷ்டத்தன்மை குறைந்திருக்கிறதென்று தெரியவில்லை. இதை விட ஸ்பஷ்டமாக எப்படித்தான் வேதம் சொல்லமுடியும் ?

இரண்டாக வியவஹரிக்கப்படும் பதார்த்தங்களுக்குள் ஏகத்வத்தை சொல்லவேண்டுமானால் லக்ஷ்யார்த்தத்தைத்தான் அங்கீகரிக்கமுடியும். "மைஸூரில் இருந்த ஸ்வாமிகளே கும்பகோணத்தில் வாதம் செய்த ஸ்வாமிகள்" என்று சொன்னால் ஸ்பஷ்டமில்லையா ? "மைஸூரில்" என்பதையும் "இருந்த" என்பதையும் ஒரு பக்கத்தில் விட்டு விட்டு, அப்படியே "கும்பகோணத்தில்" என்பதையும் "வாதம்

செய்த" என்பதையும் மற்றொரு பக்கத்தில் விட்டு விட்டு, மீதமுள்ள "ஸ்வாமிகள்" ஒருவரே யென்ற ஞானம் ஏற்படும் போது, லக்ஷணாவிருத்திதானல்லவா அப்படியேதான் ஜீவனிடமுள்ள பரிச்சின்னத்வம் அல்பக்ஞத்வம் முதலான அம்சங்களையும் ஈசுவரனிடமுள்ள வியாபகத்வம், ஸர்வக்ஞத்வம் முதலான அம்சங்களையும் விட்டு விட்டு, இரண்டு தத்வங்களிலும் பிரகாசிக்கும் சைதன்யம் ஒன்றே என்பதில் என்ன தோஷம்? "அனந்தமான தோஷங்கள்" என்பதற்கு பிரஸக்தியேயில்லை. தவிரவும் "ஸ்ரீ கிருஷ்ணர்தான் பரப் பிரஹ்மம்" என்று த்வைதிகள் சொல்கிறார்களே? அங்கே ஏகத்வம் ஸித்திப்பதும் லக்ஷணாவிருத்தியால்தான் என்பதில் ஸந்தேகமில்லை. முக்கியவிருத்தியால் தான் ஸித்திக்கிறதென்று சொன்னால் தேவகீ கர்ப்பவாஸம், ஜனனம், சைசவம் முதலான அவஸ்தைகள், பிரஹ்மசர்யாதி ஆசிரமங்கள், பலவித லீலைகள், தூதனாயிருத்தல், ஸாரதியாயிருத்தல், கடைசியில் சரீரதியாகம், இவைகளையெல்லாம், பிரஹ்மத்திற்கே லக்ஷணமாகச் சொல்லும்படி ஏற்படும், அப்படி யாரும் சொல்வது கிடையாது. இவ்வம்சங்களையெல்லாம் ஒதுக்கி வைத்து ஸ்ரீகிருஷ்ணரிடமுள்ள அகண்ட ஸச்சித் ஆனந்த ஸ்வரூபம்தான் பிரஹ்மம் என்று சொன்னால், லக்ஷணா விருத்தியினால்தானே சொல்லவேண்டும்? அப்படிச்சொல்வதினால், ஸ்பஷ்டத்தன்மைக்கு என்ன குறைவு? அப்படியேதான் ஜீவ பிரஹ்ம ஐக்கிய பிரதிபாதக வாக்கியங்களும். ஆத்ம தத்வம் மனோவாக்குகளுக்கு அதீதமென்று சொல்லும்போது அதுவேறு எங்கேயாவது வாச்யார்த்தமாக இருந்திருக்கவேண்டுமென்று வாதிப்பது அர்த்தமற்றது. பிரஹ்மம் வாச்யமில்லை என்ற காரணத்தினால், ஜீவனிடமிருக்கிற ஆத்மா அந்த வாச்சியமில்லாத பிரஹ்மம்தான், வேறு அல்ல, என்ற ஏகத்வம் கூட வாச்யமில்லையென்று ஆகுமா? மின்சாரம் வாஸ்தவத்தில் ரூபமற்று எங்கும் வியாபித்திருந்தும் தனித்து விவரிக்கக்கூடாதது என்பது ஸத்யம். அதனால் நம் கண்முன்புக்குத்தோன்றும் தீபத்திலிருப்பது அந்த

விவரிக்கக்கூடாத மின்சாரம் தான் வேறு அல்ல, என்று சொல்வது முடியாத கார்யமாகுமா? பிரஹ்மம் வேறு எங்கே யாவது வாச்யமாயிருந்தால், அங்குள்ள வாசக சப்தத்தையே உபயோகிக்கலாமே? லக்ஷணை க்கு அவசிய மேற்பட்டதே வேறு எங்கேயும் அது வாச்சியமில்லை என்ற காரணத்தினுலேயே. அப்படியிருக்க, அதற்கு உபமானம் சொல்லு, அனுமானம் சொல்லு என்றுல் அது எவ்வித பிரமாணத்திற்கும் விஷய மாகக்கூடிய பிரமேயம் அல்லவென்பதை மறந்தே கேட்பதாகும்.

"அபேத வாக்கியங்கள் அகண்ட விருத்தியால் பிரஹ் மத்தை போதிக்கு மென்பது அத்வைதிகளின் மதம். அப்படி யானுல், தத்த்வம் அஸி முதலான ஸகல மஹாவாக்கியங்களுக் கும் பிரஹ்மம் பிரஹ்மம் என்று மாத்திரம் அர்த்தமாகுமே யல்லாது ஜீவனும் பிரஹ்மமும் அபின்னர்களென்று அர்த்த மாகக்கூடியதில்லை" என்றதோர் விசேஷமாயுள்ள ஆக்ஷேபணையைச் சொல்கிறுர்கள். அவர்கள் அபிப்பிராயம், தத் என்றுலும் பிரஹ்மம், த்வம் என்றுலும் பிரஹ்மம், என்று லக்ஷணையால் சொன்னுல் "பிரஹ்மம் பிரஹ்மம்" என்றுதானே ஆகும் என்பது மண்ணினுல் புலியைப்போல் ஒரு பொம்மை வைத்திருந்தால் ஒருவன் பார்த்து பிரமித்து பயப்படும்போது மற்ருெருவன் "இது மண்" என்று அதை சுட்டிக்காட்டுகிருன், புலியின் தோற்றம், பயங்கரத்தன்மை இவைகள் மண்ணுகாது. ஆகையால் அவன் சொல்லில் "இது" என்பது மண் தானே? அப்படியானுல் அவன் சொல்வது "மண் மண்" என்றுதானே ஆகும்? என்பதுபோலவே இந்த ஆக்ஷேபணை அர்த்தமற்றது. வெளிப்பார்வைக்குப் புலியாய் தோன்றுகிறது எதுவோ அது மண்ணைத்தவிர வேறல்லவென்பதே சொல்பவனின் தாத்பர்யம். அப்படியே ஜீவனுகத் தோன்றுகிறவன் வாஸ்தவத்தில் பிரஹ்மத்தைத்தவிர வேறில்லை என்பதே மஹாவாக்கியங்களின் தாத்பர்யம்.

5. விபரீத கல்பனை

(1) மஹாவாக்கியங்களுக்கே விபரீதார்த்தங்களை கல்பித்துக்கொள்ளவும் சிலர் துணிகிறார்கள். "தத் (அது) த்வம் (நீ) அஸி (இருக்கிறாய்)" அதாவது "நீ அதுவாய் இருக்கிறாய்" என்று நேராகவே அர்த்தமிருக்கையில் "அது" என்றால் "அதினால்" என்றும் "இருக்கிறாய்" என்றால் "உண்டாயிருக்கிறாய்" என்றும் அர்த்தம் செய்கிறார்கள். தத் என்ற பதம் முதல் வேற்றுமையல்ல, மூன்றாம் வேற்றுமையிலும் மற்றும் வேற்றுமைகளிலும் தத் என்றே பிரயோகம் செய்ய வியாகரண சாஸ்திரம் இடம் கொடுக்கிறதென்கிறார்கள். "அதினால்" என்று அர்த்தம் செய்ய என்ன அவசியமென்று கேட்டால் "உண்டாயிருக்கிறாய்" என்றால் "எதினால்" என்று கேட்கும்படியேற்படுகிறதல்லவா என்கிறார்கள். "இருக்கிறாய்" என்பதற்கு "உண்டாயிருக்கிறாய்" என்று அர்த்தம் செய்ய என்ன அவசியமென்று கேட்டால் "அதினால்" என்று இருப்பதினால் என்கிறார்கள். ஆக தத் பதத்தின் அர்த்த மாறுதலினால் அஸி பதத்திற்கு அர்த்த மாறுதலும், அஸி பதத்தின் அர்த்த மாறுதலினால் தத் பதத்திற்கு அர்த்த மாறுதலும் அவசியம் என்றாகிறது. ருஜுவான அர்த்தங்களை விட்டு விட்டு வேறு அர்த்தங்களை கல்பிப்பது அறிஞர்களுக்கு உசிதமில்லை. தவிரவும், இவ்வுபதேசம் ஏற்கனவே வித்வானாயிருக்கிற சுவேதகேதுவுக்கு செய்யப்பட்டது. அவருக்கு ஜகத் ஈசுவரனால் செய்யப்பட்டதென்று முன்னமே தெரியாதா? அவருக்கு தெரிந்திருக்கும் விஷயத்தை வறபுறுத்தி ஒன்பது தடவை உபதேசிப்பதில் அர்த்தம் என்ன? எதையறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாக ஆகுமோ என்று உபநிஷத் ஆரம்பித்திருக்கையில், "பிரஹ்மத்தினால் நீ உண்டாக்கப்பட்டாய்" என்று உபதேசம் செய்தால் எல்லாம் அறியப்பட்டதாக எப்படி ஆகும்? வீணாக கக்ஷிகட்டிக்கொண்டு நேரான அர்த்தத்தை விட்டு துரர்த்தம் செய்வது கொஞ்சமேனும் உசிதமாகாது.

இத்துடன் நிற்காமல் स आत्मा तत्त्वमसि என்றிருப்பதில் स आत्मा अतत् त्वं असि என்று கூட பதங்களைபிரிக்கலாமென்று தைர்யமாய் சொல்கிறார்கள். சுவேதகேது எப்பொழுதாவது தன்னை பிரஹ்மம் என்று நினைத்துக்கொண்டிருந்தாலல்லவா அவனைப்பார்த்து "நீ பிரஹ்மம் அல்ல" என்று உபதேசிக்க வேண்டும்? ஸாமான்ய மனிதன்கூட தான் வேறு, தன்னால் உபாஸிக்கப்படுகின்ற பரமாத்மா வேறு, என்றே தெரிந்து கொண்டிருப்பதால், "நீ பி ர ஹ் ம ம் இல்லை" என்று உபதேசிக்க என்ன அவசியம்? இவ்வுபதேசத்தினால் சிஷ்யனுக்கு முன்னால் தெரியாத எந்த விஷயம் உபதேசிக்கப் படுகிறது? தவிரவும், தான் பிரஹ்மம் இல்லையென்று அறிந்து விட்டால், எல்லாம் அறிந்துவிட்டதாக எப்படி ஆகும்? இவ் வாக்யத்தையே எடுத்துக்கொண்டு சுகரஹஸ்யோபநிஷத், பைங்களோபநிஷத் முதலான உபநிஷத்துக்களில் வியக்த மாகவே தத் த்வம் அஸி என்று பதம் பிரித்து விவரித்துக் காட்டியிருக்கும்போது, வேதவிருத்தமாயும் ஸம்பிரதாய விருத்த மாயும் பத விபாகம் செய்வது ஆஸ்திகர்களுக்கு ஏற்றதில்லை.

(2) अहं ब्रह्मास्मि "நான் பிரஹ்மம்" என்று பிரஹ்மம் தன்னைப்பற்றி சொல்லிக் கொண்டதே தவிர ஜீவனுக்கு ஏற்பட்ட வாக்கியமில்லை என்கிறார்கள். முதலில் பிரஹ்மம் தான் அவ்விதம் சொல்லிக்கொண்டதென்பது வாஸ்தவம். ஆனால் அடுத்த வாக்யங்களில் அப்படியே தேவர்களும் ரிஷிகளும் மனுஷ்யர்களும் அறிந்து ஸர்வாத்மபாவத்தையடைந் தார்களென்றுசொல்லி வாமதேவருடைய அனுபவத்தை காட்டி "ஆகையால் இப்பொழுதும் எவனொருவன் நான் பிரஹ்மமாயிருக் கிறேன் என்று அறிகிறானோ அவன் எல்லாமாக ஆகிவிடுகிறான்" तदिदमप्येतर्हि य एवं वेद अहं ब्रह्मास्मि इति स इदं सर्वं भवति என்று வியக்தமாக உபநிஷத் உபதேசிக்கிறது. இந்த பின் வாக்கியங்கள் பிரஹ்மம் சொல்லிக்கொண்டதில்லை. அவைகள் ஜீவர்களை உத்தேசித்தே வேதம் சொல்லும் வாக்கியங்கள்.

பிரஹ்மம் சொன்ன வாக்கியமாகவே வைத்துக் கொண்டால், பிரஹ்மம் தன்னைப்பற்றி சொல்லிக்கொண்ட விஷயத்தை மனுஷியன் தெரிந்துகொண்டால் அவனுக்கு ஸர்வாத்மபாவம் எப்படி வரமுடியும்? ராஜா தன்னை ராஜா வென்று சொல்லிக்கொண்டதாகத் தெரிந்துகொண்ட பிச்சைக் காரன் எப்படி ராஜாவாகிவிடமுடியும்? உண்மையில் ராஜபுதர னுகவே இருப்பவன் அக்ஞானத்தினுல் தன்னை பிச்சைக் காரனுக எண்ணிக்கொண்டிருந்தால் அவன் ஆப்தனுடைய உபதேசத்தினுல் தன்னையே ராஜாவென்று அறிந்துகொண்டு ராஜாவாகிவிடலாம். இதுபோல் உண்மையில் பிரஹ்மஸ்வரூபி யாகவேயிருந்தும் அக்ஞானத்தினுல் தன்னை ஜீவன் என்று எண்ணிக்கொண்டிருப்பவன் பரம ஆப்தவாக்கியமாகிய உப நிஷத்தின் உபதேசத்தினுல், தான் பிரஹ்மமாக இருப்பதைத் தெரிந்துகொண்டு பிரஹ்மமாகவே நின்றுவிடலாம். இம்மஹா வாக்கியத்தை அனுஸந்தானம் செய்யக்கூடிய மந்திரமாக பைங்களோபநிஷத், தேஜோபிந்தூபநிஷத் முதலிய உபநிஷத்து களில் கண்டிருப்பதால், அதில் கண்ட "நான்" என்பது அனு ஸந்தானம் செய்கின்ற ஜீவனையே குறிப்பிடுமே யொழிய பிரஹ்மத்தை நேராக குறிப்பிடாது என்பது திண்ணம். மேலும், இவ்வாக்கியமிருக்கிற பிருஹதாரண்யக உபநிஷத்தின் பின் பாகங்களில் आत्मानं चेत् विजानीयात् अयमस्मीति पूरुषः, ब्रह्मैव सन् ब्रह्माप्येति முதலான வாக்கியங்களால யாஜ்ஞவல்க்யர் ஜனக மஹாராஜனுக்கு உபதேசித்திருக்கும் வாக்கியங்களும் ஜீவ-பிரஹ்ம ஐக்கியத்தையே போதிக்கின்றன என்பதில் ஸந்தேகமில்லை. இவ்விதம் எவ்வகையிலும் இம்மஹா வாக்கியத்தின் தாத்பர்யத்தை மாற்றிவிட யத்தனிப்பது வீணே தான்.

(3) ஐதரேய உபநிஷத்திலுள்ள மஹாவாக்கியமான प्रज्ञानं ब्रह्म "அறிவே ப்ரஹ்மம்" என்பதை "ஞானஸ்வரூபியான பிரஹ்மம் பூர்ணம்" என்று அர்த்தம் செய்கிறுர்கள். அவ்வுபநிஷத்தின்

ஆரம்பம் முதல் ஜீவனுடைய அந்தக்கரணவிருத்திகளில் பிரகாசிக்கிற அறிவு ஸ்வரூபத்தையே பிரக்ஞானம் என்ற பதத்தினல் குறிப்பிட்டிருக்கையில் அதற்கு "பிரஹ்மம்" என்று அர்த்தம் சொல்லி, "பிரஹ்மம் என்று வியக்தமாய் கண்டிருக்கும் பதத்திற்கு "பூர்ணம்" என்று அர்த்தம் சொல்வதற்கு எவ்வித நியாயமும் கிடையாது. தவிரவும், பிரஹ்மத்திற்கு வேறாகவே ஜகத்தும் ஜீவனும் இருப்பதாகச் சொல்லும் த்வைதிகளின் கொள்கைப்படி பிரஹ்மத்திற்கு பூர்ணமாயிருக்கும் தன்மை ஸித்திக்கக்கூடியதேயில்லை. ஜீவனிடமுள்ள பிரக்ஞான (அறிவு) தத்வத்தைக் குறிப்பிட்டு அதினலேயே அது பிரஹ்மம் என்றுதான் இவ்வாக்கியம் உபதேசிக்கிறது.

(4) நான்காவது மஹாவாக்கியமான अयं आत्मा ब्रह्म "இந்த ஆத்மா பிரஹ்மம்" என்றவிடத்திலும் "இந்த ப்ரஹ்மம் பூர்ணம்" என்று அர்த்தம் செய்கிறார்கள். இதற்கு ஒட்டிய அடுத்த முன் வாக்கியத்தில் सर्वं हि एतत् ब्रह्म " இது எல்லாம் பிரஹ்மம்" என்கிறபோது அங்கேயுள்ள 'பிரஹ்மம்" என்ற பதத்திற்கும் "பூர்ணம்" என்றே அர்த்தமா? "இது" என்கிற ஜகத்தை பூர்ணம் என்று சொல்ல முடியுமா? அந்த வாக்கியத்தில் பிரஹ்மம் என்றால் பிரஹ்மம்தான், அடுத்த வாக்கியத்தில் மாத்திரம் பிரஹ்மம் என்றால் பூர்ணம் என்றால் நியாயமாகுமா? தவிரவும் இம்மஹாவாக்கியத்திலும் 'இந்த" என்ற வார்த்தையிருப்பதால் சுட்டிக்காட்டக்கூடிய ஜீவாத்மாவைத்தான் குறிப்பிடக்கூடியதேயல்லாமல் வாக்குக்கும் மனஸிற்கும் எட்டாத பிரஹ்மத்தை எப்படி குறிப்பிடக்கூடும்? மேலும் இதே ஆத்மா நான்கு அவஸ்தைகளுடன் கூடியது सोऽयमात्मा चतुष्पात् என்று எடுத்துக்கொண்டு, ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரீயம், ஆகிய நான்கு அவஸ்தைகளை வர்ணித்திருக்கிற முறையில் இங்கு கண்டிருக்கும் ஆத்மா ஜீவன்தான் என்று தெளிவாய்த் தெரிகிறது. இந்த நான்கு அவஸ்தைகள்

பிரஹ்மத்திற்கு உண்டா? முதல் மூன்று அவஸ்தா பேதங்களால் ஜீவாத்மாவென்று வியவஹரிக்கப்படும் ஆத்மாவே அவஸ்தா பேதங்களற்ற நான்காவது அவஸ்தையில் பிரஹ்மம் என்று உபநிஷத் போதிக்கிறது. ஆத்மா என்பதற்கு பிரஹ்மம் என்றும், பிரஹ்மம் என்பதற்கு பூர்ணம் என்றும் அர்த்தம் செய்ய வழியேயில்லை. முன்சொல்லியபடி த்வைதிகளின் பிரஹ்மம் பூர்ணமாகவுமிருக்க முடியாது.

இவ்விதமாக நான்கு மஹாவாக்கியங்களும் ஜீவ-பிரஹ்ம ஐக்கியத்தையே போதிக்கின்றனவென்பதும் வேறுவிதமாக அர்த்தம் செய்யமுடியாதென்பதும் ஸ்பஷ்டமாக ஏற்படுகிறபடியால் த்வைத வாதத்திற்கு எவ்வித வழியும் கிடையாது.

6. ஆஸுரப் பிரதிநிதி

“பிரபஞ்சம் மித்யையென்று சொல்லிக்கொண்டு, நானே பிரஹ்மம் என்று மித்யோபாஸனையைச் செய்பவன் கோரமான அதோகதியை அடைவானென்று பிரமாணங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது” என்று ஒருவாதம் சொல்கிறார்கள் அவ்விதப் பிரமாணம் யாதொன்றும் கிடையாதென்பதுடன், பிரபஞ்சம் மித்யைதான் என்றும், நானே பிரஹ்மம் என்று பாவித்து வருபவனை ஸர்வோத்க்ருஷ்ட ஸத்கதிக்குப் பாத்திரன் என்றும், ஏராளமாகப் பிரமாணங்கள் இருக்கின்றன. உதாஹரணமாக, இந்த பிரபஞ்சத்திற்கு ஸத்தை கிடையாது; நானே பிரஹ்மம் என்கிற மந்திரத்தினால் ஜனனமரணத்திலிருந்து விடுதலையடைவார்கள்,

इदं प्रपञ्चं नास्त्येव नोत्पन्नं न स्थितं क्वचित् ।
असदेव सदा सर्वं असदेव भवोद्भवम् ॥

अहं ब्रह्मास्मि मन्त्रोऽयं द्वैतदुःखं विनाशयेत् ।
अहं ब्रह्मास्मि मन्त्रोऽयं सर्वांस्तान् मोक्षयिष्यति ॥

ब्रह्मैव सर्वं नान्योऽस्ति तदहं तदहं तथा ।
जीव एव सदा ब्रह्म सच्चिदानन्दमस्म्यहम् ॥

என்றெல்லாம் தேஜோபிந்தூபநிஷத்தில் விஸ்தாரமாக சொல்லப்பட்டிருக்கிறது. "பிரபஞ்சம் மித்யை" என்றால் அதில் நாமரூபாத்மகமாகவும் அழிவுள்ளதாகவும் வெறும் தோற்றமாத்திரமாகவும் இருப்பதெல்லாம் ஸத்தியமல்ல வென்றும், இதெல்லாவற்றுக்கும் அதிஷ்டானமாயிருக்கிற பிரஹ்மப்பொருள் ஒன்றுதான் முக்காலத்திலும் ஸத்தியமென்றும் தாத்பர்யம். இதையேதான் आत्मैवेदं सर्वं "இதெல்லாம் ஆத்மாதான்," ब्रह्मैवेदं सर्वं "இதெல்லாம் பிரஹ்மம் தான்," सर्वं खल्विदं ब्रह्म "இதெல்லாம பிரஹ்மம் தானே," सर्वं ह्येतद्ब्रह्म "இதெல்லாம் பிரஹ்மம் தானே" முதலான ஏராளமான வேத வாக்கியங்கள் போதிக்கின்றன. இவ்வாக்கியங்களின் அனுஸந்தானம் செய்பவர்களுக்கு பரமபுருஷார்த்தமான மோக்ஷமே பலனாயிருக்கையில், இவர்களுக்கு அதோகதி யென்று சொல்வதே அபசாரமாகும்.

ஸ்ரீ பகவத்கீதை 16வது அத்தியாயத்தில் அதோகதி யடைவதாகச்சொல்லப்பட்டிருக்கிற ஆஸுரப்பிரகிருதியுள்ளவர்களை பகவான் வர்ணித்திருப்பதில் சில பதங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அவை அங்கு எந்த அர்த்தங்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை வெளிக்காட்டாமல் அவை அத்வைதிகளுக்குப் பொருந்தக் கூடியவையென்று வாதிக்கவும் துணிகிறார்கள். அவ்வாஸுரஸ்வபாவமுள்ளவர்கள் ஜகத்தில் ஆத்மாவென்ற ஸத்யப்பொருள் யாதொன்றும் கிடையாதென்றும் தர்மாதர்ம ரூபமான வியவஸ்தை கிடையாதென்றும் ஜகத்தை யாளும் ஈசுவரன் என்றொருவர் கிடையாதென்றும் சொல்வதை பகவான்,

असत्यमप्रतिष्ठं ते जगदाहुरनीश्वरम् ॥

என்று குறிப்பிட்டிருக்கிறார். ஜகத் சோற்றமாயிருந்தபோதிலும் அதற்கதிஷ்டானமாயிருந்துகொண்டு ஜகத்திற்கும் வியாவஹாரிக ஸத்தையைக் கொடுத்துக் கொண்டு பாரமார்த்திக ஸத்தியமான பிரஹ்மம் இருந்து வருகிறதென்றும், வியாவஹாரிக ஜகத் தர்மாதர்ம ரூப நியமனத்திற்குக் கட்டுப்பட்டே பிரதிஷ்டையடைந்திருக்கிறதென்றும், அவ்விதம் நியமனம் செய்து ஆண்டுவரும் ஈசுவரனே ஜகந்நியந்தாவென்றும் வியக்தமாய்ச்சொல்லும் அத்வைதிகளை மேல்கண்ட நாஸ்திக வாதிகளின் கோஷ்டியில் சேர்ப்பது எவ்விதத்திலும் பொருத்தமாகாது. மேலும் "இந்த சத்ருவை கொன்றுவிட்டேன், மற்றவர்களையும் கொன்றுவிடுவேன், நான் வல்லமையுள்ளவன், போகத்துடன் கூடினவன், எனக்கு எல்லாம் ஸித்திதருக்கிறது, நானே பலிஷ்டன், ஸுகமாயுள்ளவன்"

असौ मया हतः शत्रुः हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान् सुखी ॥

என்று மார்தட்டிப் பேசுகிறவனை ஆஸுரன் என்று பகவான் சொல்லியிருப்பதை அத்வைதிகளுக்கு அன்வயப்படுத்த நினைப்பது மிகவும் தகாத காரியம். ஈசுவரனே கிடையாதென்று சொல்கிறவன் தன்னை ஈசுவரன் என்று எப்படி சொல்லிக்கொள்ள முடியும்? அவன் "ஈசுவரன்" என்ற சப்தத்தை வல்லமையுள்ளவன் என்ற அர்த்தத்திலேயேதான் உபயோகப்படுத்த முடியும்? அத்வைதிகள் शिवोऽहं, ब्रह्मैवाहं என்ற சப்தங்களை பிரயோகிக்கும் அர்த்தத்தில் அவன் உபயோகிக்க முடியாது.

சாந்தோக்ய உபநிஷத்தில் "பிரஹ்மம் எதில் பிரதிஷ்டையடைந்திருக்கிறது?" என்ற கேள்விக்குப்பதில் "தன் மஹிமையிலேயே, அல்லது தன் மஹிமையிலுமில்லை" स भगवः कस्मिन् प्रतिष्ठित इति । स्वे महिम्नीति । अथवा न महिम्नीति । என்றிருப்பதால் ஈசுவரனுக்கு பிரதிஷ்டா வஸ்து வேறு கிடையா

தென்கிறது. ஈசுவரனைப்போலவே ஜகத்தும் பாரமார்த்திக ஸத்தியமென்று சொல்கிற த்வைதிகள் ஜகத்திற்கு தனித்தே பிரதிஷ்டையிருப்பதாகச் சொல்கிறபடியால் ஜகததை வேறு பிரதிஷ்டா வஸ்துவற்றதென்றே சொல்வதாகிறபடியால் அவர்களையே கீதா வாக்கியதத்திற்கு விஷயமென்றுகூட சொல்லலாம் அப்படியே பிரஹ்மத்தின் தாதாத்மியத்தை பிரபஞ்சத்திற்கு ஒப்புக்கொள்ளாத த்வைதிகள்தான் ஜகத்தை அநீசுவரம் "ஈசுவரனற்றது" என்று சொன்னதாக ஆகும். எவ்விதத்திலும் ஜகத் ஈசுவரனிடத்திலேயே பிரதிஷ்டையடைந்திருப்பதாகச் சொல்லும் அத்வைதிகளை அப்டதங்கள் குறிப்பிட முடியாது. தங்களுடைய விசித்திரமான கொள்கைக்கு வேத சாஸ்திரங்களின் யாதொரு ஆதாரத்தையும் காணுமலிருக்கும் காரணத்தினுலேயே வேறுபோக்கன்னியில் கீதையில் ஏதோ ஆதாரமிருப்பதுபோல் காட்டிககொள்வதற்காக மேலேகண்ட விதங்களில் த்வைதிகள் துரர்த்தங்களைச் செய்யும்படி ஏற்பட்டு விட்டதைத்தவிர வேறல்ல.

7. மனுஸ்மிருதி

"அத்வைத மதம் புதிது. வேறு எந்த மதாசார்யாரும் அத்வைதத்தை சொல்லவில்லை. மன்வாதிகள் அனுஷ்டித்து வந்தது த்வைதம் தான்" என்று ஆக்ஷேபிப்பவர்களுக்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர் அத்வைத மதத்தை புதிதாக ஏற்படுத்தினுரென்று கருத்து. அனுதியான வேதத்தினுல் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிற அத்வைத தத்வத்தை யாவரும் தெளிவாய் அறிந்து கொள்ளும்படி எடுத்துக்காட்டினுரே தவிர அவர் எதையும் புதிதாக ஏற்படுத்தவில்லை. அத்வைத மதத்தின் ஆசார்யபரம்பரையில் நாராயணர். பிரஹ்மா, வசிஷ்டர், சக்தி பராசரர், வியாஸர், சுகர் கௌடபாதர், கோவிந்தபாதர் இவர்களெல்லாம் சங்கரபகவத்பாதருக்கு முன் இருந்தவர்கள். அவர்கள் யாவரும் அத்வைதிகளே. கிருஸ்துவமதம் கிரைஸ்ட் உண்டு பண்ணினதாலும், மஹமதிய மதம் மஹமத் உண்டு

பண்ணினதாலும், எப்படி அவர்கள் பெயரையொட்டியே விய வஹரிக்கப்படுகிறதோ, அப்படியே சங்கரர் ஏற்படுத்தியிருந்தால் அத்வைதிகளுக்கு "சாங்கரர்கள்" என்ற பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும். அவர்கள் வைதிகர் என்றும் ஸ்மார்த்தர் என்றுமே வியவஹரிக்கப்படுவதால் அவர்கள் மதம் சுருதிஸ்மிருதிகளிலேயே கண்டிருக்கிற மதம் என்பது தெளிவு. த்வைதிகள் தங்களை மாத்வர் என்றும் தங்கள் மதத்தை மத்வமதம் என்றும் சொல்லிக்கொள்வதினுல் அவர்கள் மதம் மத்வாசார்யரால புதிதாக ஏற்படுத்தப்பட்டது என்று ஸ்பஷ்டமாகிறது. ஸ்ரீசங்கரருக்கு வெகு நூற்றுண்டுகளுக்குப்பின் வந்த மத்வாச்சார்யார் ஸ்ரீசங்காரின் மதத்தைப் புதிது என்பது விசித்திரமே.

தவிரவும் மனு மாந்தாதாதிகள் அனுஷ்டித்து வந்தது த்வைதமதான் என்று எந்த பிரமாணத்தை வைத்துக்கொண்டு சொல்கிருர்களோ தெரியவில்லை. ஸகல மனுஷ்பர்களும், முக்கியமாய் எல்லா அரசர்களுமே, மனுவை பின்பற்றியே நடந்து வந்திருக்கிருர்களென்பது பிரஸித்தம், அம்மனுவினுல் சொல்லப்பட்ட மனுஸ்மிருதி 12-வது அத்யாயத்தில்,

सर्वभूतेषु चात्मानं सर्वभूतानि चात्मनि ।
समं पश्यन् आत्मयाजी स्वाराज्यमधिगच्छति ॥

"எவர் ஸகல பூதங்களிடத்திலும் ஆத்மாவை, இப்படியே ஆத்மாவிடத்தில் ஸகல பூதங்களையும், சமமாக பார்க்கின்றுரோ அந்த ஆத்மஜ்ஞானி ஸ்வாராஜ்யமென்ற மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைகின்ருர்" என்றும்,

सर्वमात्मनि संपश्येत् सच्चासच्च समाहितः ।
सर्वं ह्यात्मनि संपश्यन् नाधर्मे कुरुते मनः ॥

"கண்ணுக்குப் புலப்படுகின்றதும் புலப்படாததுமான ஸகலத்தையும் ஆத்மாவிடத்தில் இருப்பதாக யோகத்தினுல்

பார்க்கவேண்டும். எவர் இவ்விதம் ஆத்மாவில் எல்லாவற்றை யும் பார்க்கின்ருரோ அவர் அதர்மத்தில் மனதை செலுத்த மாட்டார்" என்றும்,

एवं यः सर्वभूतेषु पश्यत्यात्मानमात्मना ।
स सर्वसमतामेत्य ब्रह्माभ्येति परं पदम् ॥

"இவ்விதமாக எவர் ஸகல பூதங்களிடத்திலும் ஆத்மாவை மனஸினல் பாரக்கின்ருரோ அவர் ஸர்வ ஸமதையை (ஸகலத் துடன் ஸமானத்தன்மையை) பெற்று மேலான பதவியான பிரஹ்மத்தை (மோக்ஷத்தை) அடைகிருர்" என்றும், மற்றும் சுலோகங்களாலும் மனுவின் கொள்கை அத்வைதக்கொள்கை தான் என்பது தெளிவாய் வெளியாகிறது. மனு முதலானவர் கள் கர்மாக்களையும் உபாஸனைகளையும் செய்து வந்ததினல் மாத்திரம் அவர்களுடைய ஆந்தரமான கொள்கை வேறுவித மென்று நினைக்க இடமில்லை. ஸ்ரீகிருஷ்ண பகவான் பாஹ்ய மாக சிவபூஜை செய்துவந்ததாக மஹாபாரதம் சாந்திபர்வம் 341வது அத்யாயம், அனுசாஸனபர்வம் 161வது அத்யாயம் முதலான இடங்களில் தெரிகிறது. அவரே,

यद्यहं नार्चयेयं वै ईशानं वरदं शिवम् ।
आत्मानं नार्चयेत् कश्चित् इति मे भावितात्मनः ॥

न हि विष्णुः प्रणमति कस्मैचिद्वि बुधाय च ।
ऋते आत्मानमेवेति ततो रुद्रं भजाम्यहम् ॥

தன் ஆத்மாவான சிவனை அர்ச்சித்து வருகிறேன் என்று சொல்லியிருக்கிறபடி, மனு மாந்தாதா முதலானவர்களும் பாஹ்ய பூஜை செய்திருந்தால் அத்வைதக்கொள்கைக்கு விரோத மாகாது

" அத்வைத தத்வத்தை ஒப்புககொண்டால் கர்மானுஷ்டானம் பொருநதுவதில்லை. ஜீவனே நிஷ்கிரிய பிரஹ்மமாகையால் அவனுககு கிரியையே பொருந்தமாட்டாது" என்று ஒரு ஆக்ஷேபணை செய்கிருர்கள். ஜீவனுடைய வாஸ்தவ ஸ்வரூபம் நிஷ்கிரியமான பிரஹ்மம்தான் என்று நம்பி அதை அனுபவத்திற்குக்கொண்டு வர பிரயத்தினம் செய்பவர்களும் அத்வைத தத்வத்தை ஒப்புககொண்ட அத்வைதிகள்தான். ஆனல் அவர்களுக்கு அந்த தத்வம் இன்னும் அனுபவத்திற்கு வராமல் பிரயத்தினதசையிலேயே அவர்கள் இருப்பதால் அந்த அனுபவம் ஏற்படுவதற்கு ஸாதனமாக சாஸ்திரத்தில் விதிக்கப் பட்டிருக்கிற கர்மாக்களையும் உபாஸனைகளையும் அவர்கள் அனுஷ்டித்துத்தான் வருவார்கள், அவ்வனுபவம் திடமாக ஏற்பட்டு சரீராதிகளில் " தான் " என்ற பாவனை பூராவும் அற்றுப்போனவர்களிடம் ஸாதனரூபமானகர்மாவும் உபாஸனையும்அவசியமில்லையென்பது வாஸ்தவம். இவ்விதமாக அதிகாரி தாரதம்யத்தை அறிந்து கொள்ளாமல், பொதுவாக அத்வைதிகளுக்கே கர்மானுஷ்டானம் பொருந்தாது என்று சொல்வது உசிதமேயில்லை அத்வைதக்கொள்கையுள்ளவர்களையும் அத்வைத ஸாக்ஷாத்காரமுள்ளவர்களையும் வித்யாசப்படுத்தாமல் செய்யும் ஆக்ஷேபணை அஸம்பத்தமேயாகும்.

" அத்வைத மதம் வைதிக மதமில்லை. அது பௌத்த மதமே தவிர வேறல்ல " என்று ஒரு பெரிய அபவாதம் கல்பிக்கவும் பார்க்கிருர்கள். வாஸ்தவத்தில் கவனித்துப் பார்த்தால், த்வைதிகள்தான் அவைதிகர்கள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரியவரும். வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களால் பாதிக்கப்படாமலிருந்தால் தான் பிராமாண்யமுள்ளவை யென்று அவர்கள் சொல்வதால், பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்குதான் பிராமாண்யம் ஸித்திக்கின்றதேயல்லாமல் வேதத்திற்கு பிராமாண்யம் ஸித்திக்க மாட்டாது- செருப்புக்குத் தகுந்தபடி காலை வெட்டிக்கொள்வது

போல், பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்கு அனுசரணையாக இருக்கவேண்டுமென்று வேதவாக்கியங்களை இஷ்டம்போல் பிரித்து தாறுமாறான அர்த்தங்களைச் சொல்லிவரும் த்வைதிகள்தான் எவ்விதத்திலும் வைதிகர் ஆகமாட்டார்கள். பிரத்யக்ஷாதி பிரமாணங்களினால் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களைபோதிப்பதினாலேயே வேதத்திற்கு பிராமாண்யமென்றும் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்கு விஷயமாகாததாய் வேத மஹாவாக்கியங்களினால் மாத்திரம் வெளியிடப்பட்டிருக்கும் அத்வைததத்வத்தை, வாக்கியங்களில் எவ்வித கூட்டல் கழித்தலாவது துரர்த்தமாவது செய்யாமல், உள்ளபடியே அர்த்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும், அந்த அத்வைத தத்வத்தை ஸாக்ஷாத்கரிப்பதற்கு பரம்பரா ஸாதனங்களாக கர்மாக்களையும் உபாஸனைகளையும் நேர்ஸாதனமாக ஞானத்தையும் போதிக்கும் ஸகலவேதபாகங்களும் பிராமாண்யமுள்ளதென்றும் எடுத்துக் காட்டுகிற அத்வைதிகளை அவைதிகர் என்பது மிகவும் ஸாஹஸம்.

மேலும், அத்வைதமதம் பௌத்தமதமேயென்று சொல்கிறவர்களுக்கு இரண்டு மதங்களும் தெரியாதென்றே சொல்ல வேண்டும். பௌத்தர்கள் எப்பொழுதும் அத்வைதிகளையே தங்கள் விரோதியாக பாவித்து வந்திருக்கிறார்கள். பௌத்த மதத்தை இப்பரத கண்டத்திலிருந்து ஓடிப்போகும்படி விரட்டியடித்தது அத்வைதமதமேயல்லாது த்வைதமதமல்ல. அவ்விதம் ஸ்ரீ கௌடபாதாசார்யாரும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாரும் விரட்டாமலிருந்தால், நம்நாடே பௌத்தமத நாடாக இருக்கும். புத்தி தத்வத்திற்கு மேல் வேறுதத்வம் கிடையாதென்கிற பௌத்தரும் புத்திக்கெல்லாம் அதீதமாய் ஸ்வயம் பிரகாசமாயிருக்கும் ஆத்மதத்வத்தை விளக்கிக்காட்டும் அத்வைதியும் ஒன்று என்றால், சங்கராபரணம் பாடும்போது இந்த காம்போதி ராகம் நன்றாயிருக்கின்றதென்று சொல்வது போலவேயாகும். ஸ்ரீ சங்கரபகவத்பாதர் தன் பாஷ்யத்திலேயே பௌத்தக்

கொள்கைகளை பலவாருகக் கண்டித்திருக்கிற விஷயம் பிரஸித்தமே. இப்படியிருந்தும் அத்வைத மதத்தை பௌத்தமதமென்று என்ன தைர்யத்துடன் சொல்கிருர்களோ தெரியவில்லை. வேதத்திற்கு மேலாக பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்கு பிராமாண்யம் கொடுக்கிற த்வைதிகளை வேண்டுமானுல் சார்வாகர் என்று சொன்ஞல் பொருத்தமாகும். த்வைத மதத்தைக் கண்டிப்பது இங்கு உத்தேசமில்லை. அத்வைதமத விஷயமாய் அவர்கள் சொல்லும் தூஷணைகள் ஆதாரமற்றவை யென்று மாத்திரம் தெளிவுபடுத்த உத்தேசமானதால் மற்ற எந்த மதத்தைப்பற்றியும் இங்கு விஸ்தரித்து அதிலுள்ள தோஷங்களை வெளிப்படுத்த அவசியமில்லை.

மேலேகண்ட பிரகாரமாக அத்வைத ஸித்தாந்தத்தின் பேரில் ஆரோபணம் செய்யப்படும் எவ்வித தூஷணமும் நிலைக்கத்தக்கதில்லையென்று ஏற்படுவதால், ஆஸ்திகர்கள் வேதாந்தப்பிரதிபாத்யமான ஜீவ-பிரஹ்ம ஐக்கிய தத்வத்தில் திடமான விசுவாஸத்துடன் வேதவிஹிதமான ஸாதனங்களைக் கைக்கொண்டு ஞானநிலையை அடைந்து பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையடைய வேண்டியதே தங்கள் கடமை யென்பதை உணர்வார்கள்.

அத்யாயம் 17

அவதாரங்கள்

1. அத்வைதிகளில் தாரதம்யம்

அத்வைதக் கொள்கையை ஒப்புக்கொள்பவர் யாரும் அத்வைதியென்று சொல்லப்பட்டபோதிலும் அவர்களுக்குள் தாரதம்யமுண்டு. சிலர் மற்றவர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்கி ஒப்புக்கொள்ளலாம்; சிலர் மனப்பூர்வமாகவே ஒப்புக்கொள்ளலாம். மனப்பூர்வமாயிருப்பதும் சிரத்தையால் மாத்திரம் ஏற்படலாம்; அல்லது அனுபவத்தினால் ஏற்படலாம். சிரத்தையுள்ளவர்களும் வெறும் நம்பிக்கையுடன் நிறுத்திவிட்டு அவசியமான பிரவிருத்தியில் இறங்காமலிருக்கலாம்; அல்லது ஸாதனங்களைத் தெரிந்துகொண்டு பிரயத்தினம் செய்பவராக இருக்கலாம். அந்த பிரவிருத்தியும் அடிப்படையான கர்ம-உபாஸனா ரூபமாக இருக்கலாம்; அல்லது அதற்கு மேல்படியான ஸன்னியாஸபுரஸ்ஸரமான ஞானமார்க்கத்தில் இருக்கலாம். அத்வைதானுபவமும் விசேஷமாக ஸமாதி காலத்தில் உள்ளதாகவும் அல்லது எப்பொழுதுமே உள்ளதாகவும் இருக்கலாம். இந்த தாரதம்யத்தை அடியில் கண்டபடி காட்டலாம்:-

- அத்வைதிகள்
  - மேலெழுந்தவாரியாக
  - புத்திபூர்வகமாக
    - சிரத்தையினால்
      - ஸாதன அனுஷ்டானம் இல்லாமல்
      - ஸாதன அனுஷ்டானத்துடன்
        - கர்ம உபாஸனை
        - ஞானமார்க்கம்
    - அனுபவத்தினால்
      - ஸாதாரண பிரஹ்மவித்துக்கள்
      - ஜீவன் முக்தர்கள்

ஸாமான்ய ஜனங்களுக்குள் சரீரமேதான் "தான்" என்ற எண்ணம் பெரும்பாலும் இருந்துவரும். சரீராதிகளுக்கு விலக்ஷணமாயுள்ளது தான் ஆத்ம தத்வம் என்கிற எண்ணம், பூர்வபுண்ணியவசத்தால் அத்வைதிகளின் குடும்பத்தில் பிறக்கின்றவர்களுக்கு மேலெழுந்தவாரியாக ஏற்படலாம். பிறந்த காலம் முதல் அத்வைத தத்வமே வாஸ்தவமென்று அடிக்கடிக் கேட்டு புத்தியில் பதிந்துவிடும். சொல்பவரிடமுள்ள நம்பிக்கையினுல் இவ்விதம் ஏற்படுமேதவிர, தன்சொந்த அனுபவத்தினுல் தெரிந்துகொண்டதில்லை. அனுபவம் ஏற்பட வேண்டுமென்று பிரயத்தினம் செய்யாமலேயே அநேகர் இருந்துவிடுவார்கள். அத்வைதம்உயர்ந்ததென்று நம்பி வாயினுல்மாத்திரம் சொல்லி கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு தன்சரீரத்திலுள்ள நான் என்கிற எண்ணம் நிவிர்த்தியாகாது. அவ்வெண்ணம் ஸத்கர்மாக்களைச் செய்து செய்து கொஞ்சம்கொஞ்சமாய் குறைந்து வரவேண்டும். அப்போதும் சரீரத்திலுள்ள ஆத்மபாவம் விலகினுலும், மனஸில் ஆத்மபாவம் இருந்தேதீரும், சரீரத்திலும் "என்னுடையது" என்ற எண்ணம் இருந்துவரும். சரீரத்தில் "தனது" என்ற புத்தியும் விலகவேண்டுமானுல், அம்மனஸ் ஆத்மாவின் கருவியே என்றஎண்ணம் வரவேண்டும். இதற்காகவே ஸத்கர்மானுஷ்டானமும் உபாஸனையும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையனுஷ்டிக்கும் போது மனஸை 'தான்' என்று பாவிக்காத போதிலும் 'தனது' என்ற பாவனையிருந்தே தீரும். இப்படியுள்ளவர்கள் அத்வைதக் கொள்கையுள்ளவர்களாக இருந்தபோதிலும் நெடுநாளாக கணக்கிலடங்காத முன்ஜன்மங்களிலிருந்து தொடர்ந்து வந்திருக்கின்ற த்வைத பார்வையும் த்வைதவாஸனைகளும் அவைகளையொட்டின கார்யங்களும் உடனே விலகிவிடமாட்டா. சில வருஷங்களாக சீட்டாடுகிறதென்ற பழக்கமுள்ளவனுக்கு பின்னல் சீட்டாடுவதை நிறுத்திவிடுவது தான் நல்லதென்ற எண்ணம் உறுதியாய் ஏற்பட்ட போதிலும் பூர்வவாஸனு

பலத்தினால் இழுக்கப்பட்டவனைப் உடனே நிறுத்த முடியா மலிருப்பான். அப்படியே அத்வைதவிஷயமான அபிப்பிரா யமும் நம்பிக்கையும் உறுதியாயிருந்த போதிலும், பெரியோர் களிடத்திலும் சாஸ்திர வாக்கியத்திலும் பிராமாண்ய புத்தியும் விசுவாஸமும் இருந்த போதிலும், நீடித்த முன்னுள்ள த்வைத வாஸனை பலத்தால் தடுக்கப்பட்டு த்வைத நிலையிலேயே இருந்து வருவார்கள். இவ்வித நிலையிருக்கிறவரையில் கர்மானுஷ் டானம் நிற்காது, நிறுத்தவும் கூடாது. வேதத்தில் அடங்கிய அதிரஹஸ்யமான மஹாவாக்கியங்கள் எவர்களை உத்தேசித்து வெளியிடப்பட்டிருக்கின்றனவோ அவர்களுக்குமாத்திரம் அவை உபயோகப்படக் கூடியவைகளேயல்லாது மற்றவர்களுக்கு அல்ல, சரீரத்தில் அல்லது மனஸில் "தான்" என்றோ "தனது" என்றோ எண்ணமுள்ளவர்களிடம் "நீ பிரஹ்மம்" என்று சொன்னால், சரீரத்தையோ மனஸையோ தான் பிரஹ்மம் என்று விபரீதமாய் எண்ணிவிடுவான். வாக்கியம் ஆப்த வாக்கியமானாலும், அது எல்லோருக்கும் ஒரேவிதமாக ஸம்பந்தப்படக் கூடிய வாக்கியமல்ல, எல்லோருக்கும் வெளியிடக்கூடிய வாக்கியமுமல்ல. அத்வைதக் கொள்கையில் நம்பிக்கையுள்ள இவர்கள் அத்வைத நிலையை ஸாதிப்பதற்கு ஸாதனமான பிரவிருத்தி தர்ம மார்க்கத்திலிருந்துவரும்போது அனுபவமேற்படாததினால் முக்கியமான அத்வைதிகளாக ஆக மாட்டார்களென்பது வாஸ்தவமேயானாலும் இவர்களும் அந் நிலையில் நம்பிக்கை வைத்துப் பிரயத்தினம் செய்கிறவர்களானதினால் அத்வைதிகள் என்று சொல்வது பிசகில்லை.

மனதைத் "தனது" என்று நினைப்பதும் சுத்தமான ஆத்மாவில்லை. அந்தக்கரணமாகிறகண்ணாடியில் பிரதிபலிக்கிற ஆத்மாவின் பிரதிபிம்பம்தான் அந்தக்கரணத்துடன் ஸம்பந்தப் பட்டதாகத் தோன்றும். இந்த பிரதிபிம்பத்தை "சித்-ஆபாஸன்" என்கிறோம். மனஸில் "தனது" என்று புத்தி வைப்பது இந்த சிதாபாஸனேயாவன். ஆகையால் அப்பொழுது

"தான்" என்பது இந்த சிதாபாஸன் தான். சுத்தமான ஆத்மா ஸாக்ஷியாக மாத்திரமிருப்பதால், அதில் "தான்" "தனது" என்ற பாவனைகளுக்கு இடமேயில்லை. இவ்விரண்டு பாவனைகளும் சிதாபாஸனையே சேர்ந்தவை. இவ்விரண்டு பாவனைகளும் சுத்தமான ஆத்மதத்வத்தை தெரியவொட்டாமல் தடுத்துக் கொண்டிருக்கிறபடியால் அவைகளை நீக்கிவிடுவதற்குள்ள அப்யாஸங்களை செய்துவரும் போதே சுத்த-ஆத்ம-விக்ஞானத்திற்கு ஸாதனமாகிய நிவிருத்தி மார்க்கத்தைச் சேர்ந்த சிரவண மனனாதிகளையும் செய்துவரவேண்டும். 'தனது' என்பதைப் போக்கடிக்காமல் 'தான்' என்பதையே போக்கடிக்கக் கூடிய யத்தினங்களைச்செய்து "தான்" என்பதையும் அதன் மூலமாய் "தனது" என்பதையும் விலக்கிவிடலாம். அல்லது, முதலில் "தனது" என்பதை போக்கடித்து விட்டு "தான்" என்பதை பாக்கியன்னியில் போக்கடிக்கவும் யததினம் செய்யலாம். முதலாவது விதத்தில் யத்னிப்பவர் கர்ம-உபாஸனா-ரூபமான பிரவிருத்தி தர்ம மார்க்கத்திலிருந்து கொண்டே குரு-மூலமாக வேதாந்த-சிரவணாதிகளை செய்பவராவர். இவர்களுக்கு "தனது" என்கிற பாவனையிருந்தே வருவதால் அது குறைவதற்காக கர்ம-உபாஸனைகளை அனுஷ்டிக்க வேண்டியதுண்டு. இவர்களையும் பூர்ணமாக அத்வைதிகள் என்று சொல்ல முடியாது. "தனது" என்பதைப் பூராவையும் விட்டு "தான்" என்பதை மாத்திரம் போக்கடிக்க ஸாதனமாக ஸன்யாஸத்தினால் ஸர்வஸங்கங்களையும் ஸர்வ கர்மங்களையும் பரித்யாகம் செய்து ஜீவ-பிரஹ்ம ஏகத்வ-ஞானாப்பியாஸத்தில் மாத்திரமிருந்து வருபவர்களை ஸந்தேஹமன்னியில் அத்வைதிகள் என்று சொல்லலாம். அப்படியே அவ்வப்யாஸத்தின் பலனாக ஆத்ம-தத்வ-ஸாக்ஷாத்கார மடைந்த பிரஹ்ம வித்துக்களும் அதற்கும் மேலாக ஸகலவித வாஸனைகளையும் க்ஷயம் செய்து மனோவிருத்தியற்று பிரஹ்மத்திலேயே நிலைத்திருக்கும் ஜீவன் முக்தர்களும் பரிபூர்ணமான அத்வைதிகள். இவர்கள் விஷயத்

தில் கர்மாவோ உபாஸனேயோ பொருந்தாது என்பது வாஸ்தவம். சில ஞானிகள் இவைகளைச்செய்து வந்திருப்பதாகத் தெரிகிறதே என்று கேட்கலாம் ஞானிகளுக்கு இருவித தசையுண்டு, ஒன்று ஸமாதி தசை, மற்றொன்று வியுத்தானம் அதாவது வெளித்தோற்றமுள்ள தசை, ஸமாதி தசையில் கர்மானுஷ்டானத்திற்கு இடமேயில்லை. அப்படியே வெளிப் பார்வையற்ற ஞான நிஷ்டர்களான ஜீவன் முக்தர்களிடமும் கர்மா இருக்க முடியாது. வெளித் தோற்றமுள்ள ஞானிகளுக்கு தோன்றுவது ஸத்தியமில்லையென்ற உணர்வு இருந்து வந்தபோதிலும் தோற்றம் இருந்து வருவதால், மற்ற ஜீவர்களின் ஹிதத்தை உத்தேசித்து அதாவது லோக ஸங்கிரஹத்தின் பொருட்டு, வர்ணாசிரமங்களுக்கு உசிதமான கர்மானுஷ்டானத்தைச் செய்து வருவதாகக் காட்டிக் கொள்வார்கள். அவ்வனுஷ்டானத்தினால் அவர்களுக்கு ஆகவேண்டியது யாதொன்றும் கிடையாது. தனக்கு அடையப்படாததாகவோ அடைய வேண்டியதாகவோ யாதொன்றும் கிடையாதபோதிலும் லோக சங்கிரஹத்தின் பொருட்டு தானும கர்மாவை செய்துவருவதாக ஸ்ரீ கிருஷ்ணபகவானே சொல்லவில்லையா? பிரஹ்மமாயிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணனே இவ்விதம் செய்யலாமானால், பிரஹ்ம வித்துக்கள் மாத்திரம் செய்யக்கூடாதா? உண்மையில், லோகஸங்கிரஹார்த்தம் செய்வது கர்மாவே யாகாது. அவர்களுக்கு "தான்" என்ற பாவனை அற்றுவிட்டபடியாலும் அவர்களுக்கு கர்மாவினால் ஸாதிக்க வேண்டியது யாதொன்றும இல்லாததினாலும் அது கர்மமே யாகாது. இவ்விதமாக விஷயவிபாகம் செய்து அறிந்து கொள்ள வேண்டியதை விட்டு, பொதுவாக அத்வைத தத்வத்தை ஒப்புக் கொண்டால் கர்மானுஷ்டானம் பொருந்தாது என்று வாதிப்பது கொஞ்சமேனும் நியாயமில்லை. ஆனாலும் அந்த தத்வம் என்னவென்று தெரிந்துகொள்ளக்கூட சக்தியற்றவர்களும் மனமில்லாதவர்களும் அதை அனுபவத்திற்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஸாதனங்களைக்

கைப்பற்றுதவர்களும் அதை யொப்புக்கொள்ளாததில் ஆச்சரிய மில்லை. இவர்கள் ஒப்புக்கொள்ளாததினால் அத்வைதமதத்திற்கு எவ்வித ஹானியுமில்லை. இதற்காக அத்வைதிகள் அவர்களை த்வேஷிப்பதும் கிடையாது.

2. எந்த மதமும் அத்வைதத்திற்கு விரோதமில்லை.

திருவனந்தபுரத்திலிருந்து புறப்படுகின்ற எக்ஸ்பிரஸ் ரயில்வே வண்டி மதராஸ் போய்த்தான் ஸ்திரமாய் நிற்கும். மதராஸ் போய்ச் சேருவதே அதன் முடிவான உத்தேசம். ஆனால் அதில் காணப்படுகின்ற பிரயாணிகள் எல்லோரும் மதராஸ் போகிறவர்களாகவே யிருப்பார்களென்று சொல்லு வதற்கில்லை. மதுரை, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், முதலான பல விடங்களில் சிலர் இறங்கி விடக்கூடும். அவரவர்களின் தனித்தனியான உத்தேசங்களை அனுஸரித்தே அவரவர்கள் சீட்டு வாங்கியிருப்பதால் அங்கந்த உத்தேசப்படி இறங்கி விடுவார்கள். ஆனால், மதராஸ்போகிறவரும் மதுரைக்குப் போகிறவரும் மதுரை ஸ்டேஷன் வரையில் ஒரேவண்டியில் காணப்படுவார்கள். இதுபோலவே, அத்வைதமதம் கைவல்ய மோக்ஷஸித்தி வரையில் மனிதனைக் கூட்டிக்கொண்டு போவதற்காக ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், மனிதர்களின் தனித்தனியான யோக்யதாதாரதம்யங்களுக்கு அனுகுணமாக சில அவாந்தரஸ்தானங்களையே தங்களுக்கு முடிவான ஸ்தானங் களாக எண்ணிக்கொண்டு சிலர் ஆங்காங்கு நின்றுவிடுவார் கள். முன் சொல்லியபடி, ஹிந்துக்களைத் தவிர உலகத்திலுள்ள ஜனங்கள் யாவரும் வேதத்தில் அடங்கிய ஸாமான்ய தர்மா சரணைகளைக் கைக்கொண்டு உத்தம மனிதத்தன்மையை மாத்திரம் ஸித்தித்துக் கொடுக்கக்கூடிய மார்க்கங்களில் இருந்து வருகிறார்கள். வேதத்தில் அடங்கிய விசேஷதர்மங் களைக் கைக்கொண்டிருக்கிற ஹிந்துக்களுள் வெகுபெயர்கள் ஸத்கர்மானுஷ்டான பரர்களாக மாத்திரம் இருந்துகொண்டு, சில குறிப்பிட்ட லோகங்களுக்குள்ளாகவே போக்குவரத்துடன்

அடிக்கடி ஜனன மரண துக்கங்களுக்கு உட்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய ஸ்திதியிலேயே காணப்படுகிறார்கள். சிலர்கள் கர்மானுஷ்டான பரர்களாகவும் உபாஸனா பரர்களாகவுமிருந்துகொண்டு, சில உத்தமமான லோகங்களில் ஸுகித்திருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் கர்மோபாஸனைகளால் ஏற்படக்கூடிய அவ்வித பலன்களை இச்சிக்காமலே, அவைகளை சித்த சுத்திக்காகவும் சித்தம் ஒருமைப்படுவதற்காகவும் மாத்திரம் விதிப்படி அனுஷ்டித்துக்கொண்டு, காலக்கிரமத்தில் ஜ்ஞானாப்பியாஸ மார்க்கத்தில் பிரவேசிக்க உத்தேசமுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்றும் சிலர் பிரவிருத்தி தர்ம மார்க்கத்திலிருந்துகொண்டே ஜ்ஞானாப்பியாஸத்தையும் செய்து வருகிறார்கள். இன்னம் சிலர் வேதத்தில் ஜ்ஞான காண்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் நிவிருத்தி தர்மமார்க்கத்திலேயே பிரவேசித்து ஜ்ஞானாப்பியாஸங்களை செய்து வருகிறார்கள். இவ்விதம் பலவிதமாக இருப்பவர்கள் எல்லோரும் ஸநாதன மதத்தில் உள்ளவர்கள்தான். அவர்களில் சிலர் தாங்கள் தாங்கள் நிலைமைகளை தனித்தனியான மதங்களுக்குரிய நிலைமைகளாக பாவித்துக்கொண்டு அம்மதங்களுக்குத் தனித்தனிப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.

மதுரைக்குப் போக உத்தேசித்திருக்கிற ஒரு பாலகன் தான் ஏறியிருக்கும் வண்டியை மதுரைக்குப் போகிற வண்டியாகவே பாவிப்பான். அதே வண்டியிலிருக்கிற மற்றொரு பாலகன் தான் போகவேண்டிய திருச்சிராப்பள்ளிக்குப்போகிற வண்டியாக பாவிப்பான் இவ்விதமாய் வேறுபட்டுள்ள பாவனைகளையுடைய பாலகர்களுக்குள் அவ்வண்டியைப் பற்றி வீண் தர்க்கங்களும் கலஹங்களும் ஏற்படவும் கூடும். வண்டி உண்மையில் எதுவரையில் போகுமென்ற விவரத்தைத் தெரிந்திருப்பவர் இவ்விதத் தர்க்கங்களிலும் கலஹங்களிலும் ஸம்பந்தப்படவே மாட்டார். ஆனால் அப்பாலகர்கள் ஒருவருக்

கொருவர் அடிதடி செய்துகொண்டு கஷ்டப்படாமல் இருக்கும் பொருட்டு, அந்த வண்டி அவர்களால் குறிப்பிடப்பட்ட இரண்டு ஊர்களுக்கும் போகிற வண்டிதான் என்று இந்த நண்பர் சொல்லி அவர்களுக்குள்ளாக ஸமாதானத்தை உண்டாக்கி வைக்கக்கூடும். அல்லது, இப்படி இவர் ஸமாதானம் செய்து வைக்கப் பார்த்ததிலிருந்தே, தனித்தனி பாவனையில் ஆககிரஹம் கொண்டிருக்கிற அவ்விரு பாலகர்களுமே இவரை விரோதியாகவே எண்ணவும் கூடும். இவ்விதமாகவே, தனிப்பட்டிருக்கிற அந்தந்த பின்னப் பார்வையில் மாத்திரம் அப்பியாஸ முள்ளவர்களுக்குத்தான் அத்வைதமதம் வேறுபட்ட விபரீத மதமென்று தோன்றுமே தவிர, அத்வைதப் பார்வையில் ஸகல மதங்களும் அந்தந்த ஸ்தானங்களில் சரியென்றே தோன்றக்கூடியவை, தற்காலத்தில் மதுரைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் போகிறவர்களாக அப்பாலசர்கள் இருந்தபோதிலும், அவர்களுடைய போக்குகள் மதராஸை நோக்கிய போக்குகளாகவே யிருப்பதால் அவர்களுடைய தற்காலப்போக்கும் மதராஸை ஸமீபமாகச் செய்கிற போக்குகளே தவிர, மதராஸை தூரப்படுத்தக் கூடிய போக்குகளல்ல. இப்படியே எல்லா மற்ற மதாசரணைகளும் அத்வைத மதத்திற்கு அனுகூல ஆசரணைகளேயாகும். மிலேச்ச மதஸ்தர்கள் ஹிந்து மதத்தை தங்களுக்கு ஸம்பந்தப்படாத வேறு மதமாக பாவித்து துவேஷித்து வருவது போலவே, ஹிந்து மதத்திற்குள்ளும் சில த்வைதவாதிகள் அத்வைதத்தை தூஷித்து வருகிறார்கள். அவ்வித துவேஷ பாவம் அத்வைதிகளுக்கு கிடையாதபடியால் மற்றவர்களிடம் ஸஹோதர பாவனையுடன் அவர்களை கொஞ்சம் கொஞ்சமாக மேல் நிலைமைகளுக்குத் தூக்கி விடும்படியான யத்தினங்களை தங்களால் இயன்ற மட்டும் செய்து வர வேண்டியதே அவர்கள் தர்மமாகும்.

3. ஸாமான்ய தர்மம்

அப்படியே ஆத்மத்வ-நிலையிலேயே யிருந்து வருகின்ற ஜ்ஞானியின் உண்மையான ஸ்திதியை அஜ்ஞானிகள் அறிந்து

கொள்ள சக்தர்களல்ல. இப்படியே ஸாமான்ய-தர்மங்கள் விசேஷ-தர்மங்கள் இவ்விரண்டையும் ஆசரித்துவருகின்ற தார்மிகரின் ஸ்திதியை ஸாமான்ய-தர்மங்களை மாத்திரம் ஆசரித்துவருபவரால் நன்கு தெரிந்துகொள்ளமுடியாது. இது போலவே, ஸாமான்ய-தர்மங்களைக்கூட கைக்கொள்ளாமல் மிருகத்திற்கு ஸமானமாயிருந்துவருகிறவன் ஸாமான்ய-தர்மங்களை மாத்திரம் ஆசரித்து வருபவருடைய யோக்கியதையைக் கூட அறிந்து கொள்ள சக்தனாக மாட்டான். இப்படிப்பட்ட பலவித சக்திக்குறைவுகளினாலேயே மனிதர்களுக்குள் கொள்கைகளின் விஷயமாக ஒருவருக்கொருவர் அடிக்கடி வீண் வாதங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அவரவர்களின் நிலைமை இன்னதென்று தெரிந்துகொண்டுவிட்டால், மனிதர்களுக்குள் காணப்படுகின்ற துர்க்கக்ஷிகள் அனேகமாய் மறைந்து விடக்கூடியவை. ஸாமான்ய-தர்மங்கூட (Ordinary Morality) உண்டென்ற விபரமே தெரியாத காட்டு-மனிதனிடம் "மற்றவருக்கு தீங்கு செய்யக்கூடாது" என்று சொன்னால் இது சரியென்று அவனுடைய புத்தியில் ஏறமாட்டாது. சொல்லுகிறவர் ஏதோ பிதற்றுகிறார் என்றுதான் அவனுடைய மனஸில் படும். மனித-மாம்ஸத்தையே தின்று வருகிற ஒருவனிடம் "நீ உன் பெண்சாதியையே கொன்று தின்னலாமா?" என்று ஒரு கிருஸ்துவப்பாதிரி கேட்டதற்கு அவன் "ஏன், பெண்சாதியின் மாமிஸமானால் ருசிக்குறைவுண்டா?" என்று பதில் கேட்டதாக ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி மிருகப்பிராயமாயுள்ள மனிதர்களிடம் மிகவும் கீழான ஸாமான்ய-தர்மாசரணையைக்கூட ஏற்படுத்துவது சிரமமான காரியம். இவ்விஷயத்தில் ஆப்பிரிக்கா அமெரிக்கா கண்டங்களில் கீழ்-ஜனங்களை சீர்திருத்துவதற்காக கிருஸ்துவப் பாதிரிகள் எடுத்துக் கொண்டிருக்கிற அபரிமிதமான சிரமம் மிகவும் மெச்சத் தகுந்தது கீழ்படிகளிலிருந்து வருகிற ஜனங்களிடம் மேலான ஸாமான்ய-தர்மங்களையே போதிப்பது பிரயோஜனப்படாது.

அந்தந்த ஜனங்களின் தத்கால-நிலைமைக்கு அடுத்த மேல் படிக்கு ஸம்பந்தப்பட்ட தர்மங்களை யெடுத்துச்சொல்லி உபதேசித்தால்தான் அவர்கள் அவைகளை சிரமப்பட்டுத் தெரிந்துகொண்டு ஆசரணைக்குக் கொண்டுவரக்கூடும்.

இப்பரத-கண்டத்தைத் தவிர மற்ற எல்லா தேசங்களிலும் ஸாமான்ய-தர்மங்களே குறைவுபட்டுப் போயிருப்பதால், அங்கு அவ்வித தர்மங்களையே ஊர்ஜிதத்திற்குககொண்டு வரும்பொருட்டு அந்தந்த தேசங்களுக்கும் ஜனங்களின் நிலைமைகளுக்கும் தக்க விதங்களில பலவாறாக மதங்கள் உண்டாகி வந்திருக்கின்றன. ஸ்ரீ புத்தர், கிருஸ்து முதலான மதப்பிரவர்த்தகர்கள் ஸாமான்ய-தர்மங்களின் ஜ்ஞானத்திலும் ஆசரணையிலும் உத்தமத் தேர்ச்சியுள்ளவர்கள். ஸாமான்ய-தர்மங்களுக்குமேல் வேறு தர்மங்கள் உண்டென்ற விபரத்தை அறியக்கூடாத தாழ்ந்த ஸ்திதியிலிருப்பவர்களுக்கு பௌத்த-மதம், கிருஸ்துவ-மதம் முதலானதுகளில் உறுதியாய் பற்றுதல் ஏற்படுமென்பதில் ஸந்தேஹமில்லை. அம்மதப்பிரவர்த்தகர்களின் வரலாறுகளைக் கேட்டால் ஸாமான்ய-தர்மங்களே அவர்கள்-ரூபமாய் உருவெடுத்து வந்ததாகவே வெளியாகும். பெரும்பாலும் இவ்வித மஹான்களுடைய மதப் பிரவிருத்திகளில் உலகத்தில் ஹிந்துவல்லாதவர்களுடைய உத்தம-ஜீவத்தன்மை பொருந்து நிற்கின்றது. இவ்வுத்தம ஜீவத்தன்மையை (Soul perfection) அடைவதே அவர்களுக்கு நற்கதி (Salvation) என்று சொல்லப்படுகின்றது. முன் விவரித்திருக்கிற பிரகாரம் ஸாமான்ய-தர்மங்களின் ஆசரணையினால்தான் மனிதனுக்கு மனிதத்தன்மையே ஸித்திக்கின்றது.

ஆனால், இந்த ஆசரணையினால் மாத்திரம் மோக்ஷத்தை அடைவது, அதாவது, ஜீவத்தன்மையை விலக்கிக்கொண்டு ஆத்மத்தன்மையிலேயே யிருந்து வருவது ஸாத்தியப்படமாட்டாது. இவ்வித மோக்ஷத்தை அடைய வேண்டுமானால்

ஸாமான்ய-தர்மங்களுடன் கூட மோக்ஷத்திற்கு ஸாதனங்களென்று வேதத்தில் குறிப்பிடப்பட்ட விசேஷ-தர்மங்களையும் ஆசரித்துவரவேண்டும் முன் பல தடவை காட்டியபடி ஹிந்துக்களுக்குள் தான் விசேஷ-தர்மங்கள் நடந்தேறி வருகின்றன. அனாதியான ஹிந்து-மதத்தில் இவ்விசேஷ-தர்மங்களிருந்து வருவதைப் பார்த்துவிட்டு உலகத்திலுள்ள புது-மதங்களிலும் அனுஷ்டானங்கள், பூஜைகள், ஜபங்கள் உபவாஸங்கள், விரதங்கள் முதலான சிற்சில ஆசாரணைகளை ஒரு விதமாய் ஜனங்கள் சொந்தமாய் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். மனிதனாலேயே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இவ்விசேஷ ஆசாரணைகள் அதற்குள்ள ஸாமான்ய நன்மைகளைக் கொடுக்கக்கூடியவைகளானாலும், அவைகள் மோக்ஷத்திற்கு ஸாதனமான விசேஷ-தர்மங்களாகிவிடமாட்டா. உண்மையான மோக்ஷ-ஸ்வரூபம் எந்த வேதத்தினால் மாத்திரம் வெளியிடப்பட்டிருக்கின்றதோ அவ்வேதத்திலேயே அந்த மோக்ஷத்தை அடைய ஸாதனங்களென்று எவை வெளியிடப்பட்டிருக்கின்றனவோ அவை தான் விசேஷ-தர்மங்களாகக் கூடியவைகள். வர்ணாசிரம-தர்மங்கள் இவ்விசேஷ-தர்மங்களில் முக்கியமானவை. மோக்ஷமே ஹிந்துக்களுக்கு பரம-புருஷார்த்தமா யிருக்கிறபடியாலும், மோக்ஷந்தான் பரம-புருஷார்த்தமென்ற விபரமே மற்றவர்களுக்குத் தெரியாததினாலும், மேற்சொல்லியபடி விசேஷ-தர்மங்கள் ஹிந்துக்களைத் தவிர மற்றவர்களுக்குக் கிடையாதென்பதே உண்மை. ஆகையால், ஹிந்துக்களுக்குள் ஸாமான்ய-தர்மம் விசேஷ-தர்மம் இரண்டும் யாரால் கிரமப்படி ஆசரிக்கப்பட்டு வருகின்றனவோ அவரே தார்மிகராவர். விசேஷ-தர்மத்தைக் கைக்கொள்ளாமல் பாஷண்டராயிருந்துகொண்டு ஸாமான்ய-தர்மத்தை மாத்திரம் ஆசரிப்பவர் ஹிந்துப்பார்வையில் மிகவும் கீழான ஸ்திதியிலுள்ளவர் விசேஷ-தர்மத்துடன் சேர்ந்த ஸாமான்ய-தர்மத்திற்குத்தான் ஹிந்துக்களுக்குள் மதிப்புண்டு.

4. புத்தரின் நோக்கம்

ஸாமான்ய-தர்மத்துடன் சேராத விசேஷ-தர்மமும் நிந்திக்கப்படத்தகுந்தது. ஸாமான்ய-தர்மத்தினுல் மனிதத் தன்மை ஸித்தித்திருந்தால்தான், அதன்பேரில் விசேஷ-தர்மத்தினுல் காலக்கிரமத்தில் சுத்தாத்மத்தன்மையை ஸாதித்துக் கொள்ளலாம். முன் காட்டியபடி ஸாமான்ய-தர்மாசரணையினுல் ஸம்ஸாரப் பிரவாஹத்தில் கீழே ஆழ்ந்து போகாமல் நீர்-மட்டத்தில் மிதந்திருக்கத் தெரிந்துகொண்டிருந்தால் தான் அதன் பேரில் விசேஷப்பிரயத்தினங்களால் நீஞ்சிப்போய் கரையேறி ஸம்ஸாரத்திலிருந்து மோசனத்தை அடையலாம். ஜலத்திற்குள் முழுகி மூச்சு முட்டிப்போகாமல் மேலே மிதந்திருக்கவே தெரிந்துகொள்ளாதவருக்கு நீஞ்சிப்போவது எப்படி ஸாத்தியப்படாத விஷயமோ, அப்படியே ஸாமான்ய-தர்மத்தைக் கைக்கொள்ளாதவர் விசேஷ-தர்மத்தை மாத்திரம் ஆசரித்து நற்கதியை அடையவே முடியாது. விசேஷ-தர்மத்துடன் சேராத ஸாமான்ய-தர்மத்திற்காவது மனிதத்தன்மை ஸித்திக்கிறதான நன்மையாவது பலனுகக்கூடும். ஸாமான்ய-தர்மத்துடன் சேராத விசேஷ-தர்மத்திற்கு யாதொரு வீர்யமுங் கிடையாது. இக்கலியுகம் பிறந்த பிறகு, இப்பரதகண்டத்தில் பல விடங்களில் அனேக கர்மடர்கள் சில விசேஷ-தர்மாசரணைகளில் மாத்திரம் புத்தியைச் செலுத்திக்கொண்டு வைராக்கியம், பூததயை முதலான ஸாமான்யதர்மாசரணைகளிலிருந்து விலகியிருந்தபடியால், ஸ்ரீ புத்தர் அவதரித்து ஸாமான்ய-தர்மங்களே ஆசரிக்கப்படவேண்டியவையென்று உபதேசித்தார். ஸாமான்ய-தர்மங்களிலிருந்து விலகிப்போய் இருவித தர்மங்களையும் கெடுத்துக் கொள்வதைவிட விசேஷ-தர்மங்களை விட்டுவிட்டு ஸாமான்ய-தர்மங்களையாவது ஜனங்கள் கைக்கொள்ளட்டுமென்று உத்தேசித்து ஸ்ரீ புத்தர் விசேஷ-தர்மங்களைக் கண்டித்துக்கொண்டும், ஸாமான்ய தர்மங்களே முக்கியமென்று வற்புறுத்திக்கொண்டும் ஜனங்களை ஸாமான்ய-தர்ம-

மார்க்கத்தில் மறுபடியும் ஸ்தாபித்தார் இக்காரியம் ஒருவிதத்தில் ஆர்ய-மதத்திற்கு அனுகூலமாயிருந்தபடியால் ஸ்ரீ புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகவே ஹிந்துக்கள் பாவித்தார்கள். ஆகிலும், ஸ்ரீ புத்தர் விசேஷ-தர்மங்களைக் கூடாதென்று கண்டித்தது வேத-விருத்தமாகையால், அவர் மற்றும் சில விஷயங்களிலும் சுருதிககு எதிரிடையாக ஸ்தாபிக்க யத்தனித்த பௌத்த-மதத்தை ஹிந்துக்கள் ஒப்புக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டார்கள் பௌத்த-மதம் இப்பரதகண்டத்தில் வேர் பிடித்துத் தங்கியிருக்க முடியாமல் போனாலும், அது சைனா, பர்மா, ஸயாம், போர்ணியோ, ஜப்பான் முதலான வெளி-தேசங்களில் பரவி அங்கு வேர் பிடித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றது. ஹிந்து-தார்மிகர்களுக்குள்ளாக விசேஷ-தர்மங்களுடன் எப்போதும் சேர்ந்திருக்கவேண்டிய ஸாமான்ய-தர்மங்களுக்கு உஜ்ஜீவனமும், ஸாமான்ய-தர்மாசரணைக்கு மாத்திரம் அதிகாரிகளான ஜனங்கள் அடங்கிய வெளி-தேசங்களில் ஒரு மத-ரூபமாக ஸாமான்ய-தர்மங்களின் உறுதியான ஸ்தாபனமுமே ஸ்ரீ புத்தரின் உத்தேசமாயிருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது.

பகவானுடைய அவதாரமென்பது வாஸ்தவமாயிருக்கக் கூடுமானல் ஸ்ரீ புத்தரே விசேஷ தர்மங்களைக் கண்டிக்கலாமா வென்று ஆச்சரியப்படவேண்டாம். ஒரு விஷயத்தை வற்புறுத்திச் சொல்லும்போது அதற்கு அன்யமாயிருப்பதைக் கண்டிப்பதும் அவ்வற்புறுத்தலில் தாத்பரியமாகுமேயல்லாது மற்றதின் கண்டனத்தில் தாத்பரியமாகாது. யோகசாஸ்திரத்தில் யமம் நியமம் என்று முதல் இரண்டு அங்கஸாதனங்கள் சொல்லப்பட்டிருப்பதில், யமம் இல்லாமல் நியமம் பிரயோஜனப்படாதாகையால், நியமத்தை ஆசரிக்காமல் விட்டுவிடலாம், யமத்தை விடக்கூடாது என்று கண்டிருப்பதற்கு யமத்தின் முக்கியத்தன்மையில் தாத்பரியமேயல்லாமல் நியமத்தின் விஸர்ஜனத்தில் தாத்பரியமாகாது. இப்படியே, ஸ்ரீ குமாரில

பட்டர் ஸாக்ஷாத் ஞான-பண்டிதரான ஸுப்ரம்மண்யருடைய அவதாரமாகவே யிருந்தபோதிலும், அவர் அவதரித்த காலத்தில் பௌத்த-மதப்பிரசாரத்தினால் ஸத்-கர்ம மார்க்கம் ஆசரிக்கப் படாமல் கெட்டுப்போயிருந்ததில் அம் மார்க்கத்தை மறுபடியும் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு ஜ்ஞானமார்க்கமாகிய நிவிருத்தி-தர்ம-மார்க்கத்தையே அவர் சுருதிக்கு எதிரிடையாகக் கண்டித்திருப்பதாகவும் தெரியவருகின்றது. ஆகையால், ஜனங்களின் தத்கால-ரீதியை உத்தேசித்து சில விஷயங்களில் ஸாதாரண மனிதப்பார்வையில் சாஸ்திர-விருத்தமான பிரசாரங்கள் செய்யப்பட்டிருந்ததாகக் காணப்பட்ட போதிலும், பிரசாரஞ் செய்தவரிடம் பகவதம்சம் பொருந்தியிருக்கலாமென்றே எண்ண வேண்டியதாயிருக்கின்றது. பகவானுடைய காரியங்களின் உண்மையான தத்துவம் அவருக்குத் தான் நன்கு தெரியுமே யல்லாது, அதை பூர்ணமாய் கண்டுபிடித்துவிடுவது மனிதனுக்கு ஸாத்தியப்படக்கூடாத விஷயம். பகவானுடைய மேலான தத்துவப்பார்வையும் மனிதனுடைய கீழான வெளிப்பார்வையும் ஒன்றாகக்கூடியதல்ல. மேற்கண்ட விபரத்தினால், சாஸ்திர- விரோதமாக பிரசாரங்களைச் செய்துவந்திருக்கிறவர்கள் எல்லோரும் பகவதம்சங்களாயிருக்கலாமென்றும் சொன்னதாக எண்ணிவிடக் கூடாது.

தர்ம-விபரங்கள் யாவற்றையும் நன்றாகப் பரிசீலனஞ்செய்து பார்த்தால், முன் குறிப்பிட்டபடி ஸாமான்ய-தர்மம் விசேஷ-தர்மம் இரண்டும் சேர்ந்தே மோக்ஷ-புருஷார்த்தத்திற்கு ஸாதனமாகின்றனவென்பதாகவே தீர்மானமாய்த் தெரியவரும். முடிவில் மோக்ஷத்திலேயே உத்தேசங் கொண்டிருக்கிறவரும், இருவகை -தர்மங்களையும் கைக்கொண்டிருப்பவருமான ஹிந்து-தார்மிகருடைய ஆசரணைகளின் பெருமையை சரியானபடி மதிப்பதற்கு ஸாமான்ய-தர்மத்தில் மாத்திரம் பற்றுதலுள்ள மற்ற மதஸ்தர்களுக்கு ஸாமர்த்தியம் அனேகமாயிருக்க

மாட்டாது. விசேஷ-தர்மத்தின் உத்தேசமும் அவசியத் தன்மையும் அம்மதஸ்தர்களுக்குத் தெரியாதாகையால், அவ்வித தர்மத்தை அநாவசியமென்றும் தப்பென்றுங்கூட கண்டிப்பதிலேயே அவர்களுடைய புத்தி பிரவர்த்தித்துக்கொண்டிருக்கும். இது ஸஹஜந்தான். எப்படி மற்ற மதஸ்தர்களால் ஸாமான்ய-தர்மத்தின் அவதார-மூர்த்திகளான ஸ்ரீ புத்தர், கிருஸ்து முதலானவர்கள் விசேஷமாய் கொண்டாடப்படுகின்றார்களோ, அப்படியே ஸாமான்ய-தர்மங்கள் விசேஷ-தர்மங்கள் இவ்விருவகை தர்மங்களின் அவதார-மூர்த்திகளான ஸ்ரீ ராமர், யுதிஷ்டிரர் முதலானவர்கள் ஹிந்து-தார்மிகர்களால் அதிகமாய்க் கொண்டாடப்படுகின்றார்கள். உலகத்தில் முக்கியமாய் பிரவிருத்தி-தர்மத்தை நன்கு ஆசரித்துக் காட்டுவதற்காகவே ஸ்ரீ மஹாவிஷ்ணு தன்னுடைய அம்சத்தினல் ஸ்ரீ ராமராக அவதரித்தார். ஸ்ரீ ராமரே தார்மிகர்களால் தீவ்ரமாய் உபாஸிக்கப்படத்தகுந்த திவ்யோத்தம-மூர்த்தி. இப்படியே ஸாக்ஷாத் ஜ்ஞான-மூர்த்தியான பரமசிவன் ஷண்மத-ஸ்தாபனாசார்ய-ஜகத்குரு-பகவத்பாத-ஸ்ரீ சங்கராசாரிய-ரூபமாக அவதரித்து, நிவிருத்தி-தர்மங்களின் முக்கியத்தன்மையையும், பிரகாரங்களையும், நிவிருத்தி-தர்மங்களால் ஸாதித்துக்கொள்ளப்படக்கூடிய உத்தமோத்தம பிரஹ்ம-ஞானத்தின் மேன்மையையும் எடுத்துக்காட்டிக்கொண்டும், அந்த ஜ்ஞானம் கிருதோபாஸகர்களுக்கு சீக்கிரத்தில் ஸித்திக்கக்கூடியதால், அக்காலத்தில் ஜனங்களின் உபாஸனைகளில் காணப்பட்ட வேத-விருத்தமான ஆசரணைகளை நீக்கச்செய்து அவ்வுபாஸனைகளை சுத்தப்படுத்திக்கொடுத்துக் கொண்டும், உலகத்தில் ஜ்ஞான-மார்க்கத்தை உறுதியாய் ஸ்தாபித்தது ஜகத்-பிரஸித்தமே.

5. ஞானிகளின் ஆசரணை

ஜ்ஞானத்திற்கும் ஜ்ஞானத்தின் மூலமாய் மோக்ஷத்திற்கும் பிரவிருத்தி-நிவிருத்தி-தர்மங்கள் யாவும் ஸாதன-ரூபங்கள். தார்மிகர்கள் அப்பியாஸிகள். ஜ்ஞானிகளும் ஜீவன்

முக்தர்களும் கரையேறியவர்கள். வித்யையை ஸம்பாதிப்பதற்காக வித்யாசாலையிலிருந்து அப்பியஸிப்பவர்களைப்போல் ஜ்ஞானமோக்ஷங்களை ஸாதித்துக் கொள்வதற்காக தர்மாப்பியாஸத்தில் உழைப்பவர்கள் தார்மிகர்கள். எவ்விதம் வித்யை பூர்த்தியாகி வித்யாசாலையை விட்டு வெளியேறுகிற காலம் வரையில் வித்யாசாலையின் விதி-நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டிருந்தே வித்யாப்பியாஸங்களைச்செய்யவேண்டுமோ, அவ்விதமாகவே ஜ்ஞானத்தின் ஸித்தி-பரியந்தம் தர்ம-சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட விதி-நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டுக்கொண்டிருந்தே தார்மிகர் தர்மாப்பியாஸங்களைச் செய்துவரவேண்டும். வித்யை பூர்த்தியாகி மாணுக்கத் தன்மையைக் கடந்து மேற்சென்றுவிட்டவரை அவ்வித்யாசாலையின் விதி-நிஷேதங்கள் எப்படிக் கட்டுப்படுத்தமாட்டாவோ, அப்படியே ஜ்ஞானிகளும் ஜீவன் முக்தர்களும் தர்ம-சாஸ்திர-விதி-நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டவர்களில்லை. ஆகிலும், தார்மிகர்களுக்கு குரு-ஸ்தானத்திலிருப்பவர் கொஞ்சம் கட்டுப்பட்டிருப்பதாக நடந்துவர வேண்டியதுண்டு. அதாவது, வித்யாசாலையில் மாணுக்கர்களைக்கட்டுப்படுத்துகிற விதி-நிஷேதங்கள் பூராவும் உபாத்தியாயர்களைக் கட்டுப்படுத்தமாட்டா; உபாத்தியாயர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சில விதி-நிஷேதங்களும் அவ்வித்யாசாலையை விட்டு வெளியேறிப்போய் ஸ்வதந்திரமாயிருந்துவருகின்ற வித்துவான்களை கட்டுப்படுத்தக்கூடியவையல்ல. இப்படியே, ஆத்ம-ஜ்ஞானுப்யாஸிகள் நடந்துவர வேண்டிய பிரகாரங்களுக்கும் குரு-ஸ்தானத்திலிருப்பவர்களான ஜ்ஞானிகள் நடந்துவரவேண்டிய பிரகாரங்களுக்கும் வித்தியாஸமிருக்கக்கூடும். இவ்வித பிரகாரங்கள் யாதொன்றுக்கும் ஸம்பந்தப்படாமலும் கட்டுப்படாமலும் ஸ்வதந்திரராகவே பிரஹ்மநிஷ்டர் இருந்துவருவார். இவருடைய பார்வையில் தானுகிய ஆத்மாவைத் தவிர இரண்டாவதுக்கே இருப்பில்லை யாகையால் மேற்கண்டபடி குரு-ஸ்தானத்திலிருப்பவருடைய லோக-ஸங்கிரஹ-

காரியங்கூட இவரிடமிருக்கமாட்டாது. இவர் முற்றிலும் தர்மாதர்மங்களுக்கு வெளிப்பட்டவர். அத்விதீயமான அகண்டாத்மஸ்தானத்திலேயே யிருப்பவரைக் கட்டுப்படுத்தக் கூடியது யாதொன்றுமே யில்லை. இவ்வித ஸ்தானத்தி லிருப்பவர் ஸாக்ஷாத் பிரஹ்மமே யல்லாமல் வேறல்ல. இப்படிப் பட்டவரிடமும் ஏதாவது ஆசரணைகள் தோன்றக்கூடுமானால் அவை ஸகுணப் பிரஹ்மமான ஈசுவரனுடைய ஆசரணைகளுக் கொப்பாகும். அவ்வித ஆசரணைகளுக்கு தர்மாதர்மஸம்பந்தமே யிருக்கமாட்டாது. இவை அதீதமானவை.

ஸாமான்ய மனுஷிய ராஜாங்கத்தில்கூட சட்டத்திற்குக் கட்டுப்படாத செய்கைகள் (Acts of State) சட்டங்களுக்கு உத்பத்தி-ஸ்தானமாகிய ராஜாவிடம் இருக்கலாமென்று சொல்லுங்கால், ஸகல தர்மங்களுக்கும் மூல-காரணமாகிய பரமாத்மா-விஷயத்தில் கேட்பானேன்? இவ்விதமாய் தர்மா தர்மங்களுக்கெல்லாம் அதீதமாயிருக்கக்கூடிய ஆசரணைகள் எவ்விதமான ஆசரணைகளாயிருக்கலாமென்பதும் உலகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சென்ற துவாபரயுகத்தில் பகவான் பரமாத்மாவே ஸ்ரீ கிருஷ்ணனாக பூர்ணவதாரஞ்செய்து கேவலம் மண்ணைத்தின்னும் அஜ்ஞ-ஸ்தானம் முதல் சுத்தப் பிரஹ்ம-ஸ்தானம் வரையில், அதாவது, சிசுஸ்தானம், பாலக-ஸ்தானம், பிரஹ்மசர்ய-கார்ஹஸ்த்ய-ஸம்பந்தமாயுள்ள நானாவித தார்மிக-ஸ்தானங்கள், ஜ்ஞானி-ஸ்தானம், ஜீவன்முக்த-ஸ்தானம், குரு-ஸ்தானம், ஈசுவர-ஸ்தானம் இவைகளெல்லா வற்றிலுமிருந்துகொண்டு, அந்தந்த ஸ்தானங்களுக்குரிய விதங்களில் நன்கு உலகத்தில் ஆசரித்துக்காட்டியிருக்கின்றார்.

இந்த பூர்ணவதாரத்தின் மஹிமையையும் ரஹஸ்யங்களை யும் உள்ளபடி தெரிந்துகொள்ள தார்மிகர்களுக்கே சிரமப்படும். இப்படியிருக்க, தார்மிகர்களின் நிலைமையைக்கூட சரியானபடி அறிந்துகொள்ள சக்தியற்றிருக்கின்ற அதார்மிகர்களான நாஸ்திகர்களும் மிலேச்சர்களும் ஸ்ரீ கிருஷ்ணன் சுத்தாத்ம-

ஸ்தானத்திலிருந்து நடத்திக் காட்டியிருக்கின்ற செய்கைகளின் தத்துவத்தை எப்படித் தெரிந்துகொள்ளக்கூடும்? ஸ்ரீ கிருஷ்ணன் மேற்கண்டபடி ஸகலஸ்தானங்களிலும் எவ்விதமான அத்புத-ஆசரணைகளை நடத்திக்காட்டியிருக்கின்றாரென்று சுருக்கிச் சொல்லக்கூட இங்கு அவகாசமில்லாததால், அவருடைய செய்கைகளில் எது மூடர்களால் விசேஷமாய் தூஷிக்கப்பட்டுவருகின்றதோ அதை மாத்திரம் உதாஹரணத்திற்கு எடுத்துக்கொண்டு அத்தூஷணையின் அநீதித் தன்மையையும் பகவானுடைய செய்கையின் தத்துவத்தையும் கொஞ்சம் வெளிப்படுத்துவோம்.

6. ஸ்ரீ கிருஷ்ணர்

அநேகம் பாகவதர்கள் நெடு நாளாக ஸ்ரீ கிருஷ்ணனை ஜார-சோர-சிகாமணி யென்று நிந்தா-ஸ்துதி செய்துவந்திருப்பதையும் பகவானை ஜாரனாகவே பாவித்து கோபிகா-ஸ்திரீகள் அவருடன் கிரீடித்ததாக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருப்பதையும் முன்னிட்டு ஸ்ரீ கிருஷ்ணன் உண்மையில் ஜாரனாகவே நடந்துவந்திருக்கிறாரென்று சில நாஸ்திகர்கள் அவரை தூஷிக்கின்றார்கள். அதி-பால்யாவஸ்தையில் வெண்ணெய், பால், தயிர்களை அவர் திருடினாரென்பது ஒருக்கால் பெரும் குற்றமாகாமல் போனாலும், அவர் கோபிகா-ஸ்திரீகளுடன் கிரீடித்தது அக்கிரமந்தானென்றும், இப்படி கெட்ட நடையுடன் கூடியிருந்தவரை தைவமாகக்கொண்டாடுகின்ற மதம் மதமேயாகாதென்றும், கிருஸ்துவின் உத்தமமான நடத்தைகளில் இப்படி எவ்வகையிலும் குற்றஞ் சொல்வதற்கு இடமேயில்லாததால் கிருஸ்துவ-மதமே உண்மையான மதமென்றும் சொல்லிக்கொண்டு கிருஸ்துவப்பாதிரிகள் கிருஸ்துவப் பள்ளிக்கூடங்களில் படித்துவருகின்ற ஹிந்து-மாணாக்கர்களின் அறியாப் புத்திகளை அடிக்கடி கலக்கிக்கொண்டுவந்திருக்கின்றார்கள். ஹிந்துப்பையன்களின் வீடுகளில் மத-விஷயமான சரியான போதனைகளை முன்னாலேயே அவர்களுக்குச் செய்யத்தவறி

விட்டதுமன்னியில், அந்தப் பையன்களை கிருஸ்துவப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி மேற்சொல்லியபடி பாதிரிகளின் தப்பிதமான அபிப்ராயங்களுக்கும் உபதேசங்களுக்கும் அப் பையன்கள் வசப்பட்டுவிடும்படியாக ஹிந்துப்பெரியோர்கள் ஆலோசனையில்லாமல் செய்துவந்திருப்பதின் பலனைப் பெரும் பாலும் அவர்களும் அனுபவித்துக் கொண்டுதான் வருகின்றார்கள். ஆகிலும், கால-வசத்தினுல் அவர்களில் அனேகர்களுக்கு இன்னும் சரியான புத்தி வந்ததாகத் தெரியவில்லை. இது நிற்க

ஸ்ரீ கிருஷ்ணன் பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட செய்கை வாஸ்தவத்தில் தர்மச்செய்கையுமல்ல, அதர்மச்செய்கையுமல்ல. சட்டத்திற்குள் அகப்படாத ஸ்வதந்திரமான ராஜச்செய்கை (Act of State) யைப்போல், அது தர்மாதர்மங்களுக்கு அதீதமானதும் ஆத்ம-நிலைமையில்மாத்திரம் ஏற்படக்கூடியதுமான அன்யாதிருச-ஸ்வதந்திரச் செய்கை. இதெப்படி யென்பது பின்னுல் வெளியாகும். தர்மாதர்மங்களுக்கு அதீதமான செய்கைகளை உலகத்தில் செய்து காட்டவேண்டுமானுல் அதிகாரி, காலம், நிமித்தம் இம்மூன்றிலும் அவ்வித அதீதத் தன்மை பொருந்தியிருக்கவேண்டும். அச்செய்கைகளைச் செய்பக்கூடிய அதிகாரி அகண்டாத்ம-ஸ்தானத்தில் உறுதி யடைந்திருக்கவேண்டும். அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்தானங்கள் யாவும் தர்மாதர்மங்களுக்கு உட்பட்ட ஸ்தானங்கள். அகண்டாத்மப் பிராப்திக்கு ஸாதனமாக தர்மம் அவலம்பிக்கப் படுகின்றது. எதை ஸாதித்துக்கொள்ளவேண்டுமோ, அது ஏற்கனவே ஸித்தித்திருந்தால் ஸாதனத்தைக் கைக்கொள்ள வேண்டியதில்லை. ஆகையால், அனுபவத்தில் யாருக்கு ஆத்மப்பிராப்தி ஸ்வதஸ்-ஸித்தமாயிருக்கின்றதோ அந்த ஆத்மவான்தான் தர்மாதர்மங்களுக்கு அதீதராயுள்ளவர். ஸாக்ஷாத் பரமாத்மாவே ஸ்ரீ கிருஷ்ண-ரூபியாக அவதரித்திருந்ததால், ஸ்ரீ கிருஷ்ணன் அவ்வித அதீதர்தான் என்பதில் ஸந்தேஹமில்லை.

அவர் அவதரித்த க்ஷணம் முதல் ஒவ்வொரு அவசரத்திலும் பகவானே அவரென்பது ஸ்பஷ்டமாய் காட்டப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ ராமாவதாரத்தில் போல் பர-தத்துவம் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் மறைக்கப்படவேயில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மாதான் என்று வியக்தமாய் எல்லோருக்கும் தெரியும்படியாகவே அவர் நடந்து வந்திருக்கிறார். எந்த கிரந்தம் மூலமாய் அவர் கோபீகைகளுடன் கிரீடித்தாரென்று தெரியவருகின்றதோ அதிலேயே அவர் பரமாத்மாதானென்று சொல்லப்பட்டிருப்பதையும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அந்த கிரந்தத்தில் கண்டிருப்பதில் ஒரு பாகத்தை ஒப்புக்கொள்வேன் மற்ற பாகங்களை ஒப்புக்கொள்ள மாட்டேனென்று சொல்வது வியவஹாரத்திற்கு உசிதமாகாது அவதார-காலத்தில் உலகத்திலுள்ள பெரியோர்கள் எல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனை பகவானாகவே தெரிந்துகொண்டு அப்படியே அவரை நடத்தி வந்திருக்கிறார்கள். ஸர்வோத்தம தேவரிஷி ஸ்ரீ நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனை தர்சிப்பதற்காகவே துவாரகைக்கு வந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய அத்புதமான கிருஹஸ்த-தர்மாசரணைகளைப்பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கின்றார். ஸகலலோக ஸ்ருஷ்டி-கர்த்தராகிய ஸாக்ஷாத் சதுர்முகப்பிரம்மாவே ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து தன்னுடைய அபராதங்களை க்ஷமிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்டுக் கொண்டிருக்கின்றார். இவ்விஷயத்தில் அதிகமாய் விவரிப்பது அவசியமில்லை. எக்காலமும் உலகப்பற்றுதலே இல்லாதிருந்தவரும் ஜீவன்முக்தர்களுக்குள் ஸர்வ-சிரேஷ்டருமான ஸ்ரீ சுகப்பிரஹ்மமே ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மாவே யென்றும் அவருடைய சரித்திரத்தைக் கேட்பதே மோக்ஷ-ஸாதனமென்றும் நிச்சயமாய் வெளிப்படுத்தியிருக்கும்போது, யார் மறுதளிக்கக்கூடும்? ஆகையால், ஸர்வாத்ம-ரூபியான ஸ்ரீ கிருஷ்ணன் தர்மாதர்மங்களுக்கு அதீதமாயிருக்கக்கூடிய காரியங்களைச் செய்வதற்கு ஸர்வோத்தம அதிகாரிதான் என்பதில் ஸந்தேஹத்திற்கு இடமேயில்லை.

ஜீவர்களாயிருந்து அபரோக்ஷாத்ம-ஸாக்ஷாத்கார-ஜ்ஞானத்தை அடைந்திருப்பவர்களே ஆவ்வித காரியங்களைச் செய்வார்களேயானாலுங்கூட புண்ய-பாபங்கள் ஏற்படாதென்று சுருதி-வாயிலாக வியக்தமாய் தெரியவரும்போது, பரமாத்மா-விஷயத்தில் சொல்லவும் வேண்டுமோ? ஜ்ஞானிகளும் பரமாத்மாவும் அவ்வித அதீதமான காரியங்களை அனுவசியமாகவாவது ஜகத்தின் நன்மையின் பொருட்டில்லாமலாவது ஒருக்காலமும் செய்யமாட்டார்களென்று ஆஸ்திகர்கள் உறுதியாய் நம்ப வேண்டும். நம்முடைய கீழான தார்மிகப்பார்வையில் எவ்விஷயத்திற்கும் அதிகாரி-விமர்சனத்தைச் செய்வது வழக்கத்திற்கு வந்திருப்பதால், நாம் பிரகிருத விஷயத்தில் பகவானையும் மேற்கண்டபடி 'அதிகாரி' என்று சொல்கிறோமே யொழிய, அவர் உண்மையில் அதிகாரி ஸ்தானத்திற்கு நிரம்பவும் மேலான ஸ்வதந்திர-ஸ்தானத்திலுள்ளவர். அவர் அதிகாரிதானு என்று வியவஹரித்துத் தீர்மானிக்க யத்தனிப்பதே அபசாரமாகும்.

இனி இரண்டாவதாக ஆலோசிக்கப்படவேண்டிய "காலம்" என்ற விஷயத்தை எடுத்துக் கொள்வோம். காலாதீதரான ஸாக்ஷாத் பகவானாகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஸம்பந்தப்பட்டமட்டில் கால-நிபந்தனையை உண்மையில் கவனிக்க வேண்டியதேயில்லை. ஆகிலும், தான் க்ஷத்திரிய-மனித-ரூபங்கொண்ட காரணத்தினுல், அவர் கால-வியவஸ்தையையும் அனுசரித்தே நடத்திக்காட்டியிருக்கின்றார். ஸாதாரணமாய் மனிதனுக்கு நல்லது-கெட்டது என்ற விவேசனசக்தி 7-வயதுக்கு மேல்தான் உண்டாவதாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அவரவர்களின் நிலமைக்குத்தக்கப்படி 16-வயதுக்கு மேல் அந்த சக்தி பரிபூர்ணமாகின்றது. இதனாலேயே இக்காலத்திய கிரிமினல்-சட்ட-நடவடிக்கைகளிலும் 7-வயது வரையில் செய்யப்பட்ட எச்செய்கையும் குற்றமாகாதென்றும், 7-வயதுக்கப்பாலும் பால்யாவஸ்தையில் செய்யப்பட்ட செய்கைகளை கொடுங்குற்றங்களாக பாவிக்காமலும் அவைகளுக்குக்

கடுந்தண்டனைகளை விதிக்காமலும் பால்ய-குற்றவாளிகளுக்கு ஸர்க்காரே நல்வழிப்பயிற்சியை யுண்டாக்கிவைக்கவேண்டு மென்றும் நியாயமுறை யேற்பட்டிருக்கின்றது. இப்படியே, தர்ம-விஷயத்திலும் 7-வயதுக்கு மேல்தான் தர்மாதர்ம-விவே சனத்துடன் தர்மத்தை ஆசரித்துவர யோக்கியதை உண்டா கின்றதென்றும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதனால்தான் துவிஜ-புருஷர்களுக்கு 7-வயதுக்கப்பால் உபநயனம் விதிக்கப் பட்டிருக்கின்றது. விவேசனாரம்ப-காலம் முதல் விவேசன-பரிபூர்த்தி-காலத்திற்குள்ளாக உபநயனத்தை கட்டாயம் நடத்தித் தீரவேண்டும். பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசிய-ஜாதி களின் தாரதம்மியத்திற்கு ஏற்றபடி விவேசன-ஆரம்பத்தின் காலங்களும் வேறுபடுகின்றன. இக்காரணத்தினால் ஸாதாரண மாய் பிராஹ்மணனுக்கு8-வதுவயது முதலும், க்ஷத்திரியனுக்கு 11-வது வயது முதலும் வைசியனுக்கு 12-வது வயது முதலும், உபநயனம் நடத்தப்படவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக் கின்றது. இப்படி விவேசன-ஆரம்ப-காலம் வேறுபடுவதற்கு அனுகுணமாக விவேசன-பூர்த்தி-காலமும் வேறுபடக்கூடு மாதலால், பிராஹ்மண-க்ஷத்திரிய-வைசியர்களுக்குள் உபநய னத்தின் கடைசி காலமும் முறையே 16, 22, 24-வது வயது களென்று சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிராஹ்மணப் பையன்கள் விஷயமாக 8-வது வயதுக்குள் எப்படியோ, அப்படியே க்ஷத்திரியர்களுக்குள் உபநயன-ஆரம்ப-காலமாகிய 11-வது வயதுக்குள்ளாக பையன்களுக்கு தர்மாதர்ம-விவேசனமிராதென்றும் அவர்கள் அவ்வயது வரை யில் தர்மாசரணைகளுக்கு யோக்கியர்களல்லவென்றும் ஏற்பட் டிருப்பதால், 11-வது வயதுக்குள்ளாக க்ஷத்திரியப் பையனால் செய்யப்படுகின்ற எவ்வித காரியமும் தர்மமுமாகாது அதர்மமு மாகாது என்பதே ஸித்தம்.

ஸர்வஜ்ஞனான ஸ்ரீ கிருஷ்ணன் அவருடைய அவதார-காலத்தில் முன் ஸ்ரீ ராமாவதார-காலத்திய தண்டகாரண்ய-

வாஸிகளில் அனேகர்கள் அவரவர்களுடைய கர்ம-கதிப் பிர காரம் கோபிகா-ஸ்திரீகளாக ஜன்மங்களை எடுத்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் தன்னுடைய முன்-வாக்குப்படி ஆலிங்கன-சுகத்தை விரும்புவார்களென்றும், அந்த சுகத்தை அவர் களுக்குக்கொடுத்தே தீரவேண்டுமென்றும், இப்படி தான் செய்வது தன்னுடைய உபநயன-வயது வந்ததற்கப்பால், அதாவது, உலகப்பார்வையில் தர்மாதர்ம-விவேசன-காலம் வந்ததற்கப்பால், நியாயமாகத் தோன்றாதென்றும், நிச்சயமாய் தெரிந்துகொண்டவராதலால், அதி-பால்ய-ஸ்தானத்தில் தானி ருக்கும்போதே கோபிகா-ஸ்திரீகளின் கோரிக்கையை நிறை வேற்றிக்கொடுத்துவிட்டால் உலகத்தார்களின் தர்ம-திருஷ்டி யிலும் குற்றமாகாதென்று எண்ணியே தன்னுடைய அதி-பால்யாவஸ்தையிலேயே (ஏழு-வயதிலேயே) அந்த ஸ்திரீ களுடன் கிரீடித்தார், அதாவது விளையாடினார். அப்பால் இவருக்கு உபநயன-காலம் வருவதற்கு முன்பாகவே இவர் கோ-குலத்தை விட்டு தன்னுடைய சொந்த குலத்திற்குப் போய் விட்டார். அதற்குப் பிறகு இவர் கோ-குலத்திற்கு வரவுமில்லை, கோபிகா-ஸ்திரீகளை பார்க்கவுமில்லை. இந்தப்படி அதி-பால்யா வஸ்தையில் கோபிகைகளுடன் விளையாடியதை குற்றமாகு மென்று எப்படிச் சொல்லக் கூடுமோ தெரியவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் உண்மையில் தர்மாதர்மங்களுக்கு அதீதமான காரியங்களை எந்த வயதிலும் செய்யத் தகுதியுள்ளவராயிருந்த போதிலும், மேற்கண்டபடி உலகத்தில் சாஸ்திரப்படிக்குள்ள தர்ம-மரியாதைக்கு விரோதமாக தான் நடத்தக்கூடாதென்று உத்தேசித்தே, உலக-திருஷ்டியில் எந்த வயதில் அந்தக் காரியங்களைச் செய்தால் குற்றமாகத் தோன்றமாட்டாதோ அவ்வயதிலேயே அவைகளை நடத்திக் காட்டினார்.

அத்யாயம் 18

பகவானின் லீலை

1. லீலைக்கு நிமித்தம்

ஸ்ரீ கிருஷ்ணன் இப்படி நடத்திக் காட்டிய காரியங்கள் இன்னவையென்றும் இவைகளை ஏன் நடத்திக் காண்பிக்க வேண்டுமென்றும் இதன்மேல் "நிமித்தம்" என்ற மூன்றாவது விஷயத்தை எடுத்துக்கொண்டு பரியாலோசனை செய்வோம். முதலில் ஒரு ஆக்ஷேபணை செய்யப்படக்கூடும். யௌவன-புருஷனுக்குள்ள விஷய-போக-சக்தியே இருக்கக் கூடாததும் களங்கமற்ற மனோ-விருத்திகளுடன் கூடியதுமான அதி-பால்யாவஸ்தையிலுள்ள பாலகன் பர-ஸ்திரீகளுடன் எப்படி விளையாடினாலும் குற்றமில்லையென்பது நியாயந்தான். ஸ்ரீ கிருஷ்ணனோவெனில் ஸாதாரண மனிதனல்ல, அவர் பகவானென்றே ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆகையால், அவருடைய சரீரம் பார்வைக்கு பால-சரீரமாயிருந்தபோதிலும் அதிலிருந்திருக்கிற சக்தி ஸாதாரண பாலகனுடைய சக்தி போலல்ல, அது அபரிமிதமான பகவத்-சக்தியே. இப்படிக் கிருக்கையில் பர-ஸ்திரீகளுடன் ஸர்வ—சக்தனான ஸ்ரீ கிருஷ்ணனுடைய விளையாட்டு எப்படி நியாயமாகுமென்று ஆக்ஷேபிக்கலாம். ஸ்ரீ கிருஷ்ணனை ஸர்வ-சக்தனான பகவானென்று ஒப்புக்கொண்டுவிடும் பக்ஷத்தில், இனி சொல்லப்போகிற நியாயங்களும் சரியென்றே ஆக்ஷேபகருடைய புத்தியில் பதிந்துவிடக்கூடும்.

பூர்வம் தண்டகாரண்ய-வாஸிகளாயிருந்து கர-தூஷணாதி 14000 ராக்ஷஸ-வீரர்களை ஒருவராகவே யுத்தத்தில் எதிர்த்து ஸம்ஹாரஞ்செய்த ஸ்ரீ ராமரை அலிங்கனஞ் செய்யப் பிரியப்பட்டவர்களில் அனேகர்கள் முன்சொல்லியபடி கோபிகா-ஸ்திரீகளாக ஜனித்திருப்பதையே ஸ்ரீ கிருஷ்ணனுடைய

செய்கைக்கு முக்கிய நிமித்தமாகச் சொல்லவேண்டும். இவ்விடத்தில் ஒரு கேள்வி ஏற்படலாம். தண்டகாரண்ய-வாஸிகளுக்கு தான் முன்னால் கொடுத்திருந்த வாக்கை பரிபாலனஞ் செய்யவேண்டுமானால், அவர்களெல்லோரையும் தன்னுடைய பிந்திய அவதார-காலத்தில் பகவான் தன் பத்னீகளாகச் செய்துகொண்டு ஆலிங்கன-சுகத்தைக் கொடுப்பதே சரியாகுமே தவிர, அவர்களை பர-ஸ்திரீகளாகச் செய்து அப்பால் அவர்களை ஆலிங்கனஞ் செய்து கொள்வதானால் அது எப்படி கிரமமாகுமென்று கேட்கலாம். இங்கு தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ஜீவர்களுக்கு பின்-ஜன்மங்கள் ஏற்படுகிற பிரகாரங்களும் இப்பின்-ஜன்மங்களில் அவர்களுக்கும் மற்ற ஜீவர்களுக்கும் விவாஹாதி-ஸம்பந்தங்களினால் உண்டாகின்ற சேர்க்கைகளும் அவரவர்களின் சொந்த பூர்வ-கர்ம-வைசித்திரியங்களைப் பொருத்திருக்கின்றன. எவ்விதத்திலும் அந்த கர்மங்களுக்கு கொஞ்சமேனும் மாறுதலாக பகவான் வேறு விதமான ஜன்மங்களையாவது ஸம்பந்தங்களையாவது ஏற்படுத்துகிறதேயில்லை; இப்படி ஏற்படுத்துவது நியாயமுமல்ல தண்டகாரண்ய-வாஸிகளின் கர்ம-கதிப் பிரகாரமாகவும் அவர்களுக்கேற்பட்டிருந்த மனோ-பாவனைப்பிரகாரமாகவும் அவரவர்களுக்குத் தகுந்த ஸ்தானங்களுக்குரிய ஜன்மங்களும் சேர்க்கைகளும் ஸ்ரீ கிருஷ்ணாவதார-காலத்தில் ஏற்பட்டன. அவ்வித கர்ம-மனோ-பாவனானுஸாரியாக மேற்கண்ட தண்டகாரண்ய-வாஸிகளுக்குள்ளாக எவர்களுக்கு பகவானுடைய பத்னீ-ஸ்தானங்களை கிடைக்கக்கூடியதாயிருந்தனவோ அவர்களெல்லோரும் பின்னால் பகவானுக்கு பத்னீகளாகவே ஏற்பட்டார்கள். இவ்விதமானவர்களில் அனேகர்கள் கர்ம-கதிப்படி ராஜகன்னிகைகளாக ஜனித்து நரகாஸுரனுடைய காராக்கிருஹ-ஹிம்ஸைக்குட்பட்டிருந்த ஸ்திதியில் ஏராளமாயிருந்ததினாலேயே பகவான் 16000 ஸ்திரீகளுக்கு அதிகமாகவே விவாஹஞ் செய்து கொள்ளும்படி நேர்ந்தது. இந்தப்பெரும் பத்னீ-கோஷ்டியில்

சேரக்கூடாதவர்களும் அன்யர்களுக்கு பத்னீகளாயிருந்துங் கொண்டே பகவானுடைய ஆலிங்கன-சுகத்தையும் அடைய வேண்டுமென்ற விதமான விசித்திர-கர்ம-கதியுள்ளவர்களும், இதுபோல் தங்களுக்கு விவாஹம் ஏற்படாமலிருந்தும் பகவானுக்கு பத்னீகளாகும்படியான விசேஷ புண்ய-கர்ம மில்லாதவர்களுமான இவ்விருவகை தண்டகாரண்ய-வாஸிகள் எல்லோரும் கோபிகா-ஸ்தரீகளாக ஜனித்திருந்தார்கள். ஆகை யால், மேலே குறிப்பிட்ட ஆக்ஷேபணை சரியன்று. பூர்வ—கர்மத்தினுல் கோபிகா-ஸ்திரீயாகவும் ஜனித்து பகவானை விவாஹமே செய்துகொள்ளும்படியான விசேஷ பாக்கியத் துடனுங் கூடியவள் ராதா ஒருத்தியென்றே வெளியாகின்றது. இப்பால் மற்ற கோபிகைகளின், அதிலும் அவர்களுக்குள் பர—ஸ்திரீகளாயிருந்தவர்களின், விஷயத்தை சோதிப்போம்.

2. கோபிகளின் மனேபாவம்.

இங்கு முக்கியமாய் அடியிற்சண்டவைகள் கவனிக்கப் படவேண்டியவைகள் :-

(1) குறிப்பிட்ட கோ-குலங்களிலிருந்த புருஷர்கள் ஸ்திரீகள் எல்லோருக்கும் ஸ்ரீ கிருஷ்ணன் பகவான்தான் என்று அனுபவத்துடன் நிச்சயமாய் தெரியும். ஆனுல், நிர் குண-பரப்ரஹ்ம-ஸ்வரூப-ஜ்ஞானம் கோபிகைகளுக்கு இல்லா திருந்ததால், அவரை மனித-ரூபியான பரமாத்மாவாக மாத்திரம் எண்ணினர்கள்.

(2) பகவானுடைய அங்க-ஸ்பர்சமும் அவருடன் நெருங்கிய பலவித லீலைகளும் கோபிகா-ஸ்திரீகளுக்கு ஏற் பட்டனவே யொழிய, கீழான விஷய-ஸங்க-போகம், அதாவது, சரீரப்புணர்ச்சி நடந்திருப்பதேயில்லை.

(3) பகவானுடைய அங்க-ஸ்பர்சத்தாலேயே ஸ்திரீ களுக்கு தாத்காலிகமாக பேரானந்தமே (பிரஹ்மானந்தமே) ஏற்பட்டுவிட்டதாலும், விஷயானந்தங்கள் யாவும் பேரானந்

த்தில் அடக்கமாதலாலும், ஸ்திரீகள் தங்களுக்கு அந்த அங்க-ஸ்பர்ச-காலத்தில் ஸகல விஷயானந்தங்களும் அனுபவத்தில் ஸித்தித்துவிட்டதாகவே எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

(4) பின் சொல்லப்போகிறபடி பகவானை தங்களுடைய ஜாரன் என்றே அந்த ஸ்திரீகள் எண்ணியிருந்த போதிலும், இந்த எண்ணத்தினாலாவது பகவானுடைய அங்க-ஸ்பர்சத்தாலாவது அந்த ஸ்திரீகளுக்கு பாபம் ஏற்படவுமில்லை, பகவானுக்கு தோஷம் வந்துவிடவுமில்லை.

(5) பகவானும் தன்னிடம் வந்த ஸ்திரீகளை வரக்கூடாதென்று உறுதியாய் தடுத்துவிடக் கூடாத ஸ்திதியிலிருந்திருக்கிறார்; தடுத்திருக்கிறதாயிருந்தால் அதுவே அவருடைய பரமாத்மத்தன்மைக்கு விரோதப்பட்டிருக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் சரீரம் பிராகிருத-பௌதிக-சரீரமல்ல. இந்த விஷயம் ஒரு விதத்தில் அவருடைய அவதார-காலத்திலேயே வியக்தமாயிற்று. அவருடைய சுத்த-மாயா-சக்தியே ஸச்வாம்சப்பிரதானமாயிருந்து கொண்டு அதன் ஏகாம்சத்தினால்அப்ராகிருத-திவ்ய-மங்கள-விக்கிரஹ-ரூபமாகப் பிரகாசித்தது. அதன் ரூப-லாவண்யமும் அன்யாதிருசமாயிருந்த விபரம் உலகப் பிரஸித்தமே. இவ்வித விக்கிரஹத்தின் ஸ்பர்சம் எந்த ஜீவனுக்காவது கிடைத்தால் அந்த ஸ்பர்ச-காலத்தில், அப்ராகிருத-சுத்த-ஸத்வ-மாயைக்கும் ஜீவனுடைய பிராகிருதமான அசுத்தக் கலப்புடன் கூடிய ராஜஸ-அவித்யைக்குமுள்ள பரஸ்பர-விரோதத்தினாலும், சுத்த-மாயையின் பலாதிக்கியத்தினாலும், அந்த ஜீவனிடமிருக்கிற அவித்யை உடனே ஒதுக்கித் தள்ளப்பட்டும், அவனால் ஜீவத்வமே அக்காலத்தில் மறைவடைந்தும், ஸ்வ-ஸ்வரூபமான ஆத்மானந்தமே விளங்கும். இந்தக் காரணத்தினால்தான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய குழந்தைப் பருவத்தில் அவரை எடுத்துக்கொண்டு போனவர்களுக்

கெல்லாம் தங்களுக்கு இன்னதென்றே தெரியாத ஆனந்தக் களிப்புண்டானதாகத் தெரியவருகின்றது. அவர்களுக்குள் யார் யார் எந்தெந்த ஸ்திதியிலிருந்தார்களோ அந்தந்த ஸ்திதிக்குத் தகுந்த விதங்களில் அவர்களிடம் பூர்ணமாய் ஆனந்தானுபவம் விளங்கிற்று. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வெளியில் வந்து விளையாடுகிற பருவமாகிய பால்யாவஸ்தை வந்த பிறகு அவரைத் தொட்டு அவருடன் விளையாடுவதற்கு அனேகர்களுக்கு அவகாசம் அதிகமாகவே உண்டாயிற்று.

இப்படி விளையாடி வந்தவர்களுக்குள்ளிருக்கக்கூடிய ருதுமதிகளான கோபிகைப் பெண்களுக்கு அவர்களுடைய மனஸ்-ஸ்வபாவங்களுக்குத் தக்கபடி பகவத்-ஸ்பரிசத்தினுல் உண்டான பேரானந்தத்தில் புருஷ-ஸங்க-சுகங்கூட அடங்கியிருந்ததாகவே அவர்களுக்கு தோன்றிற்று. இந்த ஸங்கதி கோபிகா-ஸ்திரீகளுக்குள் சீக்கிரத்தில் பரவி, அவர்கள் எல்லோரும் பாலகராயிருந்த ஸ்ரீ கிருஷ்ணனைத் தேடி அடிக்கடி அவரிடம் நெருங்கி வந்து க்ரீடிக்கும்படி யேற்பட்டது. அங்க-ஸ்பர்சத்தினுல் தங்களுக்கு அபரிமிதமான சுகம் உண்டாவதாகத் தெரிந்துகொண்ட பிறகு அவரை தங்களுடைய ஜாரனுகவே பாவித்தும் வந்திருக்கலாம். இப்படி அவர்கள் பாவித்து வந்தபோதிலும், ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா என்ற ஜ்ஞானமும் அவர்களிடம் கூடவேயிருந்து வந்திருக்கின்றது. அதாவது, பர-புருஷன் என்ற ஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடம் ஜார-புத்தியை வைக்காமல், தாங்கள் உள்பட ஸகலர்களுக்கும் ஆத்ம-ஸ்வரூபி என்ற ஸ்தானத்திலேயே அவரை தங்களுடைய ஜாரனுக எண்ணியிருப்பார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா தான் என்று எண்ணிக்கொண்டே அவரிடம் எந்த உத்தேசத்தினுலாவது வருபவர்களுக்கு தோஷமுண்டாகுமாவென்று ஆலோசிக்கவேண்டியதுண்டு. காம-பூர்த்தியை உத்தேசித்து பகவானிடம் பக்தியைச் செலுத்திவந்தவர்களுக்கும் துற்கதி ஏற்படமாட்டாது. நல்லதானுலும் கெட்டதானுலும் எக்காரணத்

தினுலாவது பரமாத்மாவையே நிரந்தரமாக தியானித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நற்கதியே கிடைக்குமென்று வெளியாகின்றது. ஸ்ரீ கிருஷ்ணனை எப்போதும் தூஷித்துக் கொண்டேயிருந்த சிசுபாலனுக்கு நற்கதி கிடைக்கவில்லையா? இதற்கு பகவானுடைய ஜ்ஞாபகம் தொடர்ந்திருந்ததே காரணம். துவேஷத்தினுல் பகவானை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பவனுக்கு நற்கதி யுண்டாகுமானுல், பிரேமையினுல் அவரையே தியானித்து வந்த கோபிகா-ஸ்திரீகளுக்கு ஏன் நற்கதி கிடைத்திராது? எப்போது கிருஷ்ணன் தங்களுக்கு அந்தர்யாமியாயிருக்கிற பரமாத்மாவே யென்று உறுதியான ஜ்ஞானம் அந்த ஸ்திரீகளிடமிருந்ததோ, அப்போது அவரிடம் அவர்கள் சென்றதற்கு தோஷம் ஏற்படாது. தன்னிடத்திலேயே தான் செல்வது தோஷமாகுமா? ஸ்ரீகிருஷ்ணனை பரமாத்மாவாகத்தெரிந்துகொள்ளாமல் மனித-ஜாரனுக மாத்திரம் பாவித்து அவரிடம் சென்றிருப்பார்களே யானுல் அவர்களுக்கும் தோஷமேற்பட்டிருக்கும், ஸ்ரீகிருஷ்ணனும் அவர்களுடைய கண்களில் தென்பட்டிருக்க மாட்டார். ஸ்ரீ கிருஷ்ணன் பரமாத்மா வென்ற ஜ்ஞானத்துடனும் அவர்கள் அவரிடம் விளையாடிக்கொண்டிருக்கும் போதே எப்போதாவது அந்த ஜ்ஞானம் குறைவடைந்து அவரை பெரும்பாலும் மனித-ஜாரனைப்போலவே பாவித்து கிரமத்தை மீறி அவர்கள் நடந்துவர ஆரம்பித்த ஸமயங்களில் அவர்களுடைய பார்வையிலிருந்து அவர் மறைந்துவிட்டதாகவே கிரந்தத்தில் வெளிப்படுத்தப்பட்டுமிருக்கின்றது.

அன்றியும், உலகத்தில் பத்னீ தன் பர்த்தாவைக் கொண்டாடவேண்டியதின் முக்கியகாரணம் பர்த்தா பரமாத்ம-ஸ்தானத்திலிருக்கிறுரென்பதே. வைதிக-விவாஹத்தில் வரன் பரமாத்ம-ஸ்தானத்திலேயே வதூவின் பிதாவால் பூஜை செய்யப்படுகிற விஷயம் எல்லோருக்கும் தெரியும். வர-ரூபியான பரமாத்மாவுக்கே கன்னிகை தானஞ்செய்யப்படுகின்றுள்.

ஸர்வ-ஜகத்தையும் தாங்கி வருகின்ற பரமாத்மாவே எல்லோருக்கும் உண்மையான பர்த்தா (தாங்குபவர்). பரமாத்மாவின் பிரதிநிதியாகவே உலகத்திலுள்ள ஸாதாரண பர்த்தா விளங்குகின்றார். பர்த்தாவிடத்தில் எப்போதும் பத்னிக்கு பரமாத்ம-புத்தியிருக்க வேண்டியது அவசியம். ஸாக்ஷாத் பரமாத்மாவே ஸ்ரீ கிருஷ்ண-ரூபியாக அவதரித்த போது, அவரிடம் சென்றதும் பர்த்தாவிடம் சென்றதாகவே ஆகும். தவிரவும், பரமாத்மாவிடம் செல்வதே ஜன்ம-ஸாபல்ய மென்று சாஸ்திரம் மூலமாய் விடக்தப்பட்டிருப்பதால், எவ்விதமாகவாவது பரமாத்மாவிடம் செல்வதற்கு அவகாசம் உண்டாகுமானால், மற்ற எல்லா ஸங்கங்களையும், அபிமானங்களையும், மானாவமானங்களையும் உதறித் தள்ளி விட்டு அவரிடம் செல்வதே உத்தம தர்மமாகும். இவ்விஷயத்தில் பிதா, பர்த்தா, ஸஹோதரர், புத்திரர், சிறுகுழந்தை முதலான யாரையும் உதாஸினஞ் செய்து விடலா மென்றே உறுதியாய்த் தெரிய வருகின்றது. இப்படியே கோபிகா-ஸ்திரீகள் ஆசரித்துங் காட்டியிருக்கின்றார்கள். ஆகையால் அந்த ஸ்திரீகள் ஸ்ரீ கிருஷ்ணனிடம் சென்றது குற்றமேயாகாது.

3. பகவானின் நிலை

இனி ஸ்ரீ கிருஷ்ணன் ஸம்பந்தப்பட்ட மட்டில் மேற் சொல்லிய விஷயத்தை கவனிப்போம். அவர் ஒருக் காலமும் கோபிகைகளை கிரீடைக்காக அழைத்ததில்லை. அவர்கள் தன்னிடம் வந்தபிறகும் ஒவ்வொரு ஸமயத்திலும் அவர்களுக்கு ஸாதாரண தர்மங்களை போதித்து அவரவர்களின் வீடுகளுக்குத் திரும்பிப் போகும்படியாகவே உபதேசித்திருக்கின்றார். இப்படி உபதேசிக்கப்பட்டும் அவர்கள் திரும்பிப் போகாமல் அவர்களுடைய பக்தியின் உறுதியும் குடும்ப-ஸம்பந்தங்களில் பற்றுதலில்லாமையும் நன்கு வெளிக்காட்டப்பட்ட பின்புதான் அவர்களுடைய வரவை ஒப்புக்கொண்டு கிரீடித்திருக்கின்றார். உண்மையில் பகவானிடம் வந்து சேர்ந்த

வர்களை அவர் நிராகரிக்கவே முடியாது. "என்னை அடைந்தவர்களை நான் கைவிட மாட்டேன்" என்றும், "எந்நாளும் அவர்களுக்கு துர்கதி ஏற்படாது" என்றும் சொல்லப்பட்டிருக்கின்ற பகவத்-வாக்கியங்கள் பொய்யாக மாட்டா. அவித்யா-மோஹத்தினால் பரமாத்ம-நினைவேயில்லாமலும் அவர் உண்டென்பதையே ஒப்புக்கொள்ளாமலுமிருப்பவர்கள் அவரை நிராகரித்தல் ரூபமான ஆத்ம-ஹநந - தோஷத்திற்கு பாத்தியப் பட்டிருக்கலாமே யொழிய, பரமாத்மா இருக்கிறார் என்ற உறுதியான ஜ்ஞான மேற்பட்டு அவரை ஸாக்ஷாத்கரித்துக் கொண்டவர்களை பரமாத்மா தள்ளிவிட முடியாது. அவர்களும் ஸ்வ-ஸ்வரூபியான அவரை விட்டு விலகவும் முடியாது. தன்னையே விட்டு தான் எப்படி தள்ளப் படக்கூடும் அல்லது விலகக்கூடும்? ஆகையால், ஸ்ரீ கிருஷ்ணன் கோபிகைகளின் வரவை முடிவில் சரியென்று ஒப்புக்கொண்டே தீர வேண்டியதாயிற்று, இப்படி அவர்களுடைய வரவை அங்கீகரித்து அப்பால் அவர் அவர்களுடன் கிரீடித்து வந்ததிலும் சரீரப்புணர்ச்சி ஏற்பட்டு விடவில்லை. முன்-அவதாரத்தில் ஆலிங்கனந்தான் பிரதிஜ்ஞை செய்யப்பட்டதே யல்லாது ஸம்போக-ரூபமான சரீரப்புணர்ச்சியல்ல. இப்புணர்ச்சி ஏற்படாமலே இப்புணர்ச்சியாலுண்டாகக் கூடிய ஆனந்தத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானதும் உண்மையானதுமான பிரஹ்மானந்தத்தையே அவர்கள் அந்தக் கிரீடைகளில் அனுபவித்ததால், சரீரப்புணர்ச்சி-விஷயமான தனி விருத்தியே அந்தக் கிரீடா-காலங்களில் அவர்களுடைய மனசுகளில் உதிக்கவில்லை. இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணன் அத்யத்புதமாகவும் ஸாமான்ய மனிதப்பார்வையிற்கூட குற்றந் தோன்ற இடமில்லாமலும் கோபிகைகளுடன் ராஸக்கிரீடை முதலான பாலக்கிரீடைகளைச் செய்துவந்தார்.

உலகத்தில் மிகவும் அரிதான நித்தியப் பிரஹ்மசாரித்தன்மை ஸ்ரீ கிருஷ்ணனுக்கே இருந்ததாக பின்னால் வெளி

யானதைக் கொண்டும், அவர் ஸம்பந்தப்பட்ட மட்டில் அக்கிரீடைகள் யாவற்றும் காம-ஸம்பந்தமே யில்லாத மிக்க பரிசுத்தமானதும் அவைகளில் சேர்ந்தவர்களுக்கெல்லாம், அவர்களிடமிருந்த அசுத்தத்தன்மையைப் போக்கடித்து, நற்கதியைக் கொடுத்து வந்ததுமான லோகோத்தரக் கிரீடைகளென்பதே நிச்சயம். அவாப்த-ஸமஸ்த-காமனுகிய பகவானுக்கு அந்தக் கிரீடைகளினுல் ஆகவேண்டியதாக ஒன்றுமே இருந்திருக்கக் கூடியதில்லை. கோபிகைகளின் மஹத்தான பூர்வ-புண்ணியங்களே அவைகளுக்கு முக்கிய ஹேது. கர்ம-பல-தாதாவாகிய ஸ்ரீ கிருஷ்ண-ரூபியான பரமாத்மா அந்தக் கிரீடைகள் மூலமாய் கோபிகைகளுக்கு கர்ம-கதியில் உண்டாக வேண்டிய விசேஷ ஆனந்தானுபவத்தை அவர்களுக்குக் கொடுக்காமலிருந்திருக்கவே முடியாது. அக்கிரீடைகளில் ஏதாவது அசுத்தத் தன்மை அல்லது அக்கிரமத் தன்மை கொஞ்சமாகிலும் ஸம்பந்தப்பட்டிருக்குமானுல், அக்கிரீடா-சரித்திரங்களேயே மஹா பாவனங்களென்றும் அவைகளேக் கேட்பவர்களுக்கே நற்கதி யேற்படுமென்றும் ஸ்ரீ சுகரே அபிப்ராயப்பட்டிருக்க மாட்டார்.

ஸ்ரீ கிருஷ்ண-விஷயத்தில் எவ்வகையிலும் தோஷ மேற்பட மாட்டாதென்பது வாஸ்தவமானுலும், கோபிகைகள் ஸம்பந்தப்பட்டமட்டில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் பரமாத்ம-புத்தியுடன் கூட ஜார-புத்தியையும் அவர்கள் வைத்தது தப்புத்தானே யென்று மறுபடியும் கேட்டால் மேலே கொஞ்சம் சொல்கின்ருேம். ஸ்ரீ கிருஷ்ணன் தங்களுக்கு அந்தர்யாமியான பகவானே யென்று அவர்கள் எண்ணியிருந்தது உறுதியே. ஆகிலும், அவர்கள் அவரை ஜாரனென்றும் எண்ணியதால் அவருடன் ஏகத்வ-பாவனேயை தங்களுக்கு ஸ்திரப்படுத்திக் கொள்ளாமல், அவர் புமான், தாங்கள் ஸ்திரீகள், அவர் வேறு, தாங்கள் வேறு, என்பதான துவைத-பாவனேயை தங்களுடைய பக்தியில் கலந்துகொண்டிருந்தார்களென்று வெளியாகின்றது;

அதாவது, அவர்களின் மனசுகளில் சுத்தாத்வைத-பாவனை உண்டாகவில்லையென்று ஏற்படுகின்றது. ஆகையால், அவர்களுடைய பக்தி எவ்வளவு தீவ்ரமாயிருந்த போதிலும் அது அபர-பக்தி தான் ஆகும். அபர-பக்தியின் பலனாக வைகுண்ட-வாஸம் கிடைத்து காலாந்தரத்தில் மறுபடியும் பூலோகத்தில் ஜன்மத்தை அடையும்படி நேரிடும். இவ்விஷயம் பொதுவாக பின்னால் குறிப்பிடப்படும். கோபிகைகளின் ஸ்திதியை அபேக்ஷித்து, ஸ்ரீ கிருஷ்ணனை விவாஹமே செய்து கொண்ட ஸ்திரீகளின் நிலமை உயர்ந்தது. விவாஹத்தினால் முன் கண்டபடி சாஸ்திரப் பிரகாரம் ஸ்திரீ-புமான்களுக்குள் உண்மையான ஏகத்வம் ஏற்பட்டு ஸ்திரப்பட்டுவிடக் கூடியதால், இவ்வித ஸ்திரீகளுக்கு பர-பக்தி உறுதிப்பட்டு கிரம-முக்தியாவது அல்லது ஏகத்வ-ஸாக்ஷாத்கார ஜ்ஞானமே ஸித்தித்துகைவல்ய-முக்தியேயாவது நிச்சயமாய் ஏற்ப்பட்டிருக்கும். ஆகையால், கோபிகா-ஸ்திரீகளுக்கு மேற்கண்டபடி ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஜார-புத்தியுமிருந்தால் அம்மட்டில் அவர்களுக்கு நற்கதி-தாரதம்மிய-விஷயத்தில் குறைவுதான் இருந்திருக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. முன் சொல்லிய பல காரணங்களினால் ஸ்ரீ கிருஷ்ணன் ஜாரனல்லவென்பது தெளிவாய் தெரியக் கூடும்.

எங்கும் மூடத்தனமும் தப்புப்பிதற்றல்களும் அதர்மச் செய்கைகளும் மிகுந்திருக்கிற இக்கொடிய காலத்தில் புத்தியில்லாதவர்கள் துரர்த்தஞ் செய்து தாங்களும் கெட்டு மற்றவர்களையும் கெடுத்துவிடக் கூடிய விதத்தில் பகவத்-பக்தர்கள் முன் குறிப்பிட்டபடி பகவானை ஜார-சோரனென்று நிந்தா-ஸ்துதி செய்வதை இனிமேலாவது நிறுத்திவிட்டால் எல்லோருக்கும் நன்மையுண்டு. பகவானுடைய திவ்ய-கல்யாண-குணங்கள் அனந்தமாயிருக்கும்போது அவைகளை குறிப்பிட்டே அவரை ஸ்துதி செய்வதுதான் உத்தமமாகும். ஸ்ரீபாகவதத்தை செம்மையாய்ப் படித்துப்பார்த்தவர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ணன்

ஜாரனென்றும் சோரனென்றும் தூரபிப்பிராயமாவது துர்-புத்தியாவது ஒருக்காலமும் உண்டாகாது. அந்த மஹாகிரந்தத்தைப் பார்க்காமலும், பார்க்க யோக்கியதை யில்லாமலுமிருப்பவர்கள் தான் மற்றவர்களிடமிருந்து ஏதோ சில வார்த்தைகளையும் தப்பிதமான-நிருபண-ஸ்துதிகளையும் கேட்டுவிட்டு பிதற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய பரமாத்ம-ஸ்தானத்திற்குரிய விசேஷச் செய்கைகளின் மஹிமைகளை உள்ளபடி தெரிந்து கொண்டவர்கள் அவைகளை ஸாதாரணச் செய்கைகளாக பாவித்து விளையாட்டாக நிந்தா-ஸ்துதிக்கு உபயோகப்படுத்திக் கொள்வது முற்றிலும் தகாத செய்கை. ஆகையால், பாகவதர்களே இந்த விஷயத்தில் இனி ஜாக்கிரதையுடனிருக்கவேண்டியதவசியம்.

4. விஹித கர்மா

மேலே விவரித்த பிரகாரம் ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண-பரமாத்மாவே தர்ம-சாஸ்திர-நிபந்தனைகளுக்கு இணங்கியும் அவைகளுக்கு விரோதமில்லாமலும் தன்னுடைய தர்மாதர்மாதீதமான காரியங்களைக்கூட நடத்திக் காட்டியிருப்பதினால், கேவலம் தார்மிக-ஸ்தானத்திலிருப்போர்கள் அந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டே எப்போதும் நடந்துவர வேண்டுமென்பதே உறுதிப்படுத்தப்படுகின்றது. தர்ம-சாஸ்திர-நிபந்தனைகளை மீறி நடப்போர்களுக்கு ஜ்ஞானப் பிராப்தியின் பொருட்டுள்ள ஸாதன-ஸம்பத்துக்கள் ஸித்திக்கவே மாட்டா. அதிலும், பிரவிருத்தி-தர்ம-மார்க்கங்களிலிருப்போர்கள் வெகு ஜாக்கிரதையுடனிருந்து அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நித்திய-நைமித்திக-கர்மாக்களையும் உபாஸனைகளையும் சிரத்தையுடன் விதிப்பிரகாரம் செய்து கொண்டு வந்தால் தான் சித்த-சுத்தியும் சித்தத்தின் ஐகாக்கிரியமும் ஸித்தித்து பகவத்-கிருபையால் நிவிருத்தி-தர்ம-மார்க்கப் பிரவேசத்திற்கு யோக்கியதை உண்டாகக்கூடும். பகவதாஜ்ஞா ரூபங்களாகிய சுருதி-ஸ்மிருதிகளை அனுசரித்து நடப்பதே பகவானுடைய கிருபைக்கு

ஹேதுவாகும். அவருடைய ஆஜ்ஞைகளை மீறி நடந்து கொண்டே அவருடைய கிருபையைத் தேடுவதான எந்த காரியமும் ஸித்தி-பெருதென்பதே உண்மை.

இக்காலத்தில் சிலர்கள் தங்களை பாகவதர்களென்று அல்லது யோகிகளென்று சொல்லிக் கொண்டு அவர்களுக்கு வர்ணாசிரம-கிரமப்படி ஏற்பட்டிருக்கின்ற நித்திய-நைமித்திக-கர்மங்களை ஒழுங்காகச் செய்துவராமல், பகவானை எப்போதும் நாம-ஸங்கீர்த்தனங்களால் பஜனை செய்து, அல்லது யோகாப்பியாஸஞ் செய்து கொண்டிருந்தால் போது மென்ற எண்ணங் கொண்டிருக்கின்ருர்கள். இது சரியன்று. பகவந்-நாம-ஸங்கீர்த்தனம் யோகாப்பியாஸம் இவைகள் உத்தம காரியங்கள்தான். ஆனால், இவை நித்திய-நைமித்திக-கர்மாசரணை யுடன் சேர்ந்திருந்தால் தான் பலவத்தாகும். ஓர் உதாஹரண மெடுத்துக் கொள்வோம். ஒரு பிதாவுக்கு மூன்று குமாரர் களிருக்கின்ருர்கள். இரண்டாவது குமாரன் பிதாவிடமே எப்போதுமிருந்து அவரைப் பார்த்துக் கொண்டும் "அப்பா! அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டும் கொஞ்சி விளையாடிக் கொண்டுமிருக்கிருன். எப்போதாவது அவனிடம் பிதா ஒரு காரியத்தைச் சொல்லி "அதைச் செய்" என்ருல் அவன் செய்கிறதில்லை. இப்படி பிதாவின் சொல்லை மீறி நடந்தாலும் அவன் பிதாவை விட்டு விலகுகிறதில்லை. "அப்பா! அப்பா" என்று சொல்லி வருவதை நிறுத்துகிறது மில்லை. மூன்ருவது குமாரன் பிதாவின் ஸமீபம் வருகிறதே யில்லை. அப்பா அப்பாவென்று கூப்பிட்டுத் தொந்தரவு செய்கிறதுமில்லை. ஆனால், அவனைக் கூப்பிட்டுக் குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய வேண்டுமென்று எப்போது ஆஜ்ஞை செய்தாலும் அந்தக் காரியத்தை அவன் உடனே செய்து முடித்து விட்டே மற்ற வேலைகளை கவனிப்பான். இவ்விருவர் களுக்குள் எந்தக்குமாரன் பேரில் பிதாவுக்கு அன்பும் கிருபை யும் அதிகமாயிருக்கக் கூடியவை? தன்னுடைய கட்டளைப்படி

நடந்து வருகின்ற மூன்றுவது பையன் பேரில்தான் அவருக்குப் பிரியம் அதிகமாயிருக்கும். இதுபோல், பகவானுடைய ஆஜ்ஞா-ரூபங்களாகிய சுருதி-ஸ்மிருதி-விதிகளின்படி ஆசரிக்கப்பட்டு வரவேண்டிய கர்மங்களை நன்ருகச் செய்துவராமல், அவருடைய தியானத்தைச் செய்துகொண்டிருப்பவர் அல்லது நாமங்களைச் சொல்லிக் கொண்டிருப்பவர் பேரில் அவருக்கு கிருபை உண்டாகக்கூடியதல்ல. யோகாப்பியாஸம் நாம-ஸங்கீர்த்தனம் இவைகளைச் செய்யாமலிருந்த போதிலும் சாஸ்திர-விஹிதமான கர்மங்களை ஒழுங்காய்ச் செய்துவருகிறவர் பேரில் தான் பகவத்-கிருபை வாஸ்தவத்தில் ஏற்படும்.

குறிப்பிட்ட கர்மங்களை கிரமமாய்ச் செய்துகொண்டும், யோகாப்பியாஸ-நாம-ஸங்கீர்த்தனங்களினுல் பகவானை தியானித்துக்கொண்டும் பஜித்துக்கொண்டுமிருப்போர் மேற்கண்ட இருவர்களையும்விட மிகவும் உத்தமரென்பதில் தடையில்லை. இவர்-விஷயத்தில் அதிகமாகவே பகவத்-கிருபை வெகு சீக்கிரத்தில் உண்டாகுமென்பது நிச்சயமே. மேலே சொல்லிய உதாஹரணத்தில் கண்ட இரண்டு குமாரர்களையும் அபேக்ஷித்த, பிதாவிடமே யிருந்து கொண்டும், அவரை பஜித்துக்கொண்டும், பிதாவின் ஆஜ்ஞைகளையும் உடனுக்குடன் தவராமல் சிரத்தையாய் நடத்திக்கொண்டும் வருகின்ற முதலாவது குமாரனிடம் அந்த பிதாவுக்கு வெகு அதிகமாகவே திருப்தி யிருக்குமென்பது நியாயந்தான். ஆகையால் பகவத்-கிருபையிலும் தங்களுடைய நற்கதியிலும் உத்தேசமுள்ள பகவத்-பக்தர்கள் யோகிகள் எல்லோரும் சாஸ்திர-விஹிதமான வர்ணுசிரம-தர்மங்களைக் கைவிடாமல் செம்மையாய்ச் செய்துவரவேண்டும்.

5. கர்மத்தியாகம்

தகுந்த அதிகாரிகளாயிருப்பவர்கள் ஸர்வ-கர்மங்களையும் ஸன்னியாஸத்தினுல் விஸர்ஜனஞ்செய்துவிட்டு பரமாத்மத்

தியானபரர்களாகவேயிருந்து வருவதற்கும் சாஸ்திரம் இடங் கொடுத்திருக்கின்றது. இந்தப்படி சாஸ்திர-விதியை அனுஸரித்து கர்ம-பரித்தியாகத்தைச் செய்வதும் ஸர்வோத்தம காரியந்தான். இவ்விதமாக சாஸ்திரீயத்தியாகத்தைச் செய்யக் கூடாதவர்கள் கர்மத்தியாகத்தை ஒருக்காலமும் செய்யவே கூடாது; செய்தால் பாஷண்டர்களாகி ஈசுவர-தண்டனைக் குள்ளாவார்கள். வர்ணாசிரமிகளான பிரவிருத்தி-தார்மிகர்கள் யாவரும், ராஜாவுக்குள்ளடங்கிய உத்தியோகஸ்தர்களைப்போல், பகவதாஜ்ஞையால் தனித்தனியே குறிப்பிட்ட கர்ம-ஸ்தானங் களில் அமர்ந்தவர்கள். எவ்விதம், லௌகிக உத்தியோகத்தி லிருப்பவருக்கு வேலை செய்ய முடியாவிட்டாலும், வேலை போதுமென்ற புத்தியுண்டானாலும், ஸர்க்கார் விதிப்படிக்குள்ள ராஜீனாமாவைக் கொடுத்துவிட்டு வேலையின் தொந்தாவிலிருந்து நீங்கிக்கொள்ளலாமோ, அவ்விதமாகவே பிரவிருத்தி-தார்மிக-ஸ்தானத்திலிருப்பவருக்கு வைராக்கியத்தினாலும் வித்யா-பலத் தினாலும் கர்மத்தியாகத்தில் புத்தியுண்டானால், நிவிருத்தி-தர்ம-விதிப்படிக்குள்ள ஸன்னியாஸத்தைக் கிரமமாய்ச் செய்து கொண்டு கர்ம-மார்க்கத்திலிருந்து விலகிக்கொள்ளலாம். இப்படிக்கன்னியில், தான் வர்ணாசிரமக்கட்டுப்பாடுகளைக் கடந்த பகவத்-பக்தன் அல்லது யோகீசுவரன் என்று சொல்லிக் கொண்டு கர்மத்திலிருந்து நழுவிப்போய்விட்டால், பிரஷ்டத் தனந்தான் பலனைக்கும். விதிப்படிக்குள்ள ராஜீனாமாவைக் கொடுக்காமல் ஸர்க்கார்-உத்தியோகஸ்த்தர் தனக்கு ஏற்பட் டிருக்கிற வேலையைச் செய்யாமல் நிறுத்திவிட்டால், இராஜாவின் கோபத்திற்கும் தண்டனைக்குந்தான் உள்ளாவர்.

6. கர்மாவே அஸ்திவாரம்

பகவத்-பக்தர்கள் என்றுவது, அல்லது யோகிகள் என்றுவது தனி வகுப்புகள் கிடையாது. பக்தி, யோகம் இரண்டும் எல்லா வர்ண-தர்மங்களிலும் ஆசிரம தர்மங்களிலும் பலவிதமாய்ச்சேர்ந்தே ஸம்பந்தப்பட்டிருக்கின்றன. வர்ணாசிரம-

விதிகளை பேதித்துக்கொண்டு உபாஸனைகளையாவது யோகாப்பியாசங்களையாவது செய்துவரலாமென்று சாஸ்திரம் கொஞ்சங்கூட இடங்கொடுக்கவே இல்லை. பக்தியும் யோகமும் ஜ்ஞான-ஸாதனங்கள். ஸகல ஜ்ஞான-ஸாதனங்களுக்குள்ளும் ஸத்-கர்மானுஷ்டானம் அடிப்படையான (Foundation) முக்கிய ஸாதனம். அடிப்படையை பலப்படுத்திக்கொள்ளாமல் மேல்-ஸாதனங்களைத் தேடுவது உபயோகப்படாது ஜ்ஞானத்திலும் மோக்ஷத்திலும் உத்தேசமுள்ள பிரவிருத்தி-தர்ம மார்க்கஸ்தர்கள் தங்களுக்கு அவசியமாய்த் தேவையாயிருக்கின்ற சித்த-சுத்திக்கு ஹேதுவானதும் யோக-பக்திகளுடன் சேர்ந்திருக்கின்றதுமான ஸத் கர்மத்தை விட்டுவிட்டு, தனியாக பக்தி-மார்க்கத்திலாவது ஹடயோக-மார்க்கத்திலாவது பிரவேசிக்கமாட்டார்கள். இப்படிப் பிரவேசிப்பவர் எவரோ, அவருக்கு ஜ்ஞான-மோக்ஷங்களில் உத்தேசமில்லை யென்பதும் ஹடயோக-பக்திகளினல் ஏற்படக்கூடியதாக எண்ணப்படுகின்ற சில அவாந்தர பலன்களாகிய தீர்க்காயுஸ், சரீர-பலம், ஆரோக்கியம், அணிமாதி-ஸித்திகள், ஐச்வர்ய-விருத்தி, ஸந்ததி-விருத்தி முதலானவைகளையே அவர் முக்கிய பலன்களாக உத்தேசித்திருக்கின்ருரென்பதுமே நிச்சயம். இவ்வித பலன்கள் காமங்களே யல்லாமல் வேறல்ல. காமங்களிலேயே நோக்கங்கொண்டு செய்யப்படுகின்ற பக்தியாவது யோகமாவது உண்மையான பக்தியுமாகாது, யோகமுமாகாது.

அன்றியும், நித்திய-நைமித்திக-கர்மங்களை ஒழுங்காய்ச் செய்து வருபவருக்குத்தான் காம்ய-கர்மங்களும் பலவத்தாகக் கூடியவை. அதாவது, நித்திய-நைமித்திக-கர்மங்களிலிருந்து நழுவிப் போயிருக்கிறவருடைய காம்ய-கர்மங்களும் பலிக்கக் கூடியவை யல்ல. ஆகையால், அவரவர்களின் தனித் தனியான உத்தேசம் எதுவாயிருந்த போதிலும், பிரவிருத்தி-தர்ம-மார்க்கத்திலிருக்கின்றவர்களும் நிவிருத்தி-தர்ம-மார்க்கத்தில் முன் சொல்லிய பிரகாரம் சாஸ்த்ரோக்த-விதிப்படி ஸன்னி

யாஸஞ் செய்து பிரவேசிக்காமலிருப்பவர்களுமான எல்லோருக்கும் ஸத்-கர்மானுஷ்டானம் மிக்க அவசியமென்பதே ஸித்தம் இங்கு மற்றொரு விஷயமும் கவனிக்கப்பட வேண்டியதுண்டு. பகதியில் யாருக்கும் அதிகாரமிருக்கின்றது. துவிஜரானாலும், சூத்திரரானாலும், பஞ்சமரானாலும் யாரும் அவரவருக்குரிய சாஸ்திரசகிரமப்படி பக்தி-மார்க்கத்தில் ஈடுபட்டு நற்கதியைத் தேடிககொள்ளலாம். ஹடயோகம் இப்படியல்ல. இது முக்கியமாய் வானப்பிரஸ்தாசிரமத்திற்குரியது. சாஸ்திரப் பிரகாரம் வானப்பரஸ்தாசிரமத்தில் பிரவேசிக்க அதிகாரியாயிருக்கின்ற பிராஹ்மண-க்ஷத்திரியர்களுக்குத் தான் அந்த யோகாப்பியாஸத்தை (அதுவும் குரு-முகமாய்) செய்துவர அதிகாரமுண்டு. மற்றவர்களால் அப்பியஸிக்கப்பட்டால், அது உலகத்திலுள்ள மூட ஜனங்களை மோஹிக்கச் செய்ய மாத்திரம் உபயோகப்படுமே யல்லாது உண்மையான நன்மையின் பொருட்டு ஏற்படாதென்பதையும், முடிவில் அனர்த்தமே அதற்குப் பலனாகு மென்பதையும் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

அத்தியாயம் 19

ரூப கல்பனை

1. நிற்குணோபாஸனம்

ஸாமான்ய அர்த்தத்தில் "உபாஸனம்" என்பது சித்த-விக்ஷேபத்துடன் கூடிய ஜீவனுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது. சித்தம் நாநாப்பிரகாரமாக பலவிடங்களிற் சென்று அலைந்து கொண்டிருப்பதை நிறுத்தி உபசாந்தியடையும் பொருட்டு, அதை சாந்தாத்ம-ஸ்வரூபியான பிரஹ்மம் என்ற பரம்-பொருளின் ஸமீபத்திலேயே யிருந்துவரும்படி செய்விப்பது உபாஸனமாகும். இந்த அர்த்தத்துடன் கூடிய உபாஸனம் என்ற பதம் துவைத-நிலைமையில் பக்தியால் செய்யப்படுகின்ற காரியத்தைத் தான் குறிப்பிடக் கூடியது. பரம்-பொருளாகிய நிர்குணப்-பிரஹ்ம-வஸ்து இரண்டற்றதாகவும் அகண்டமாகவுமிருப்பதினால், "அதின் ஸமீபத்திலிருப்பது" என்று சொல்லப்படுகின்ற வார்த்தைகளுக்கே அர்த்தங்கிடையாது. அதாவது, சுத்தப் பிரஹ்மம் உபாஸன-விஷயமாயிருக்க முடியாது. ஆகிலும், குணக்கட்டுக்குட்பட்டிருக்கின்ற உபாஸகனாகிய ஜீவன் தன்னுடைய ஜீவத்தன்மையே மித்யையென்றும், தான் உண்மையில் நிர்குணப் பிரஹ்மமே யென்றும் நிரந்தரமாக மனஸினால் பாவித்துக் கொண்டிருப்பதே நிர்குணோபாஸனமென்று கூறப்படுகின்றது. அதாவது, நிர்குணப் பிரஹ்மமாகவே எப்போதும் இருந்து வருகின்ற தன்னுடைய நிஜ-ஸ்வரூபத்திலேயே ஸ்திரமாய் தான் இருப்பதான பாவனை பலப்பட்டுத் தொடர்ந்திருப்பதே இந்த நிர்குணோபாஸனமாகும். இதுவே அத்வைத-பிரஹ்மானுபூதிக்கு மிகவும் அந்தரங்க-ஸாதனமாகிய நிதித்தியாஸனமென்ற ஜ்ஞானப்பியாஸம். இது கேவலம் மனோ-பாவனா-ரூபமாயிருப்பதாலும், தான் பிரஹ்மமாகவே யிருப்பதான நேர் அனுபூதி-ரூபமாயில்லாது

தாலும், இதை பிரஹ்மத்திற்கு அருகாமையில் இருப்புப்போல் வர்ணித்து, இதற்கு நிர்குணோபாஸனமென்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றதென்று தெரிந்துகொள்ளவேண்டும். அல்லது "ஸமீபத்தில் இருத்தல்" என்பதற்கு "அதி-ஸமீபத்தில், அதாவது ஒன்ருகவே இருத்தல்" என்றும் விசேஷார்த்தம் செய்யப்படலாம். இந்த நிற்குணோபாஸனம் பலப்பட்டுவிட்டால் மனோவிருத்திகள் அடங்கி, ஸமாதி ஏற்பட்டு, அதில் அபரோக்ஷாத்ம-ஜ்ஞானம் விளங்கி, அப்பால் கைவல்ய-மோக்ஷமே ஸித்தித்துவிடுகின்றது. இவ்வித மோக்ஷ-ஸித்தியே நிற்குணோபாஸனத்தின் நேர் உத்தேசம்.

மோக்ஷத்தை புருஷார்த்தமாகக் கொள்ளாத ஹிந்து வல்லாதவர்களிடம் நிற்குணோபாஸனம் இருக்கக்கூடியதல்ல. ஆகையால் தர்ம-மோக்ஷங்கள் எப்படி உலகத்தில் ஹிந்துக்களுக்கு மாத்திரம் புருஷார்த்தங்களாயிருக்கின்றனவோ, அப்படியே மேலான நிதித்தியாஸனமென்ற நிற்குணோபாஸனமும் ஹிந்துக்களுக்கு மாத்திரமுள்ளது. மற்ற மதஸ்தர்களால் மத-ஸம்பந்தமாய்ச் செய்யப்படுகின்ற தியானுதிகள் யாவற்றும் (Meditation, Contemplation etc.) துவைத-பாவனையுடன், மோக்ஷத்தில் உத்தேசமில்லாமல் செய்யப்படுவதால் உபாசனங்கள் ஆகமாட்டா. இப்படியிருந்தும், இவைகளையும் ஸகுணோபாஸனங்களென்று வெகு பெயர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப்படி சொல்லிவருவதற்கு முக்கிய காரணம் இப்பால் கலியுகத்தில் ஹிந்துக்களுக்குள்ளாகவே வெகு ஜனங்கள் மேலான அத்வைதக்கொள்கையிலிருந்து நழுவிப் போய், கீழான துவைத-நோக்கங்களையே தங்களுக்குப் பலவாருக ஸ்திரப்படுத்திக்கொண்டேயிருந்தும் கைவல்ய-மோக்ஷத்தில் உத்தேசமில்லாமலேயிருந்தும், ஸகுணப் பிரம்ம லோகங்களுக்குப் போவதையே மோக்ஷமென்று எண்ணி அதற்குத் தகுந்த விதங்களில் பக்தி-மார்க்கத்தில் ஈடுபட்டிருந்தும் வந்திருப்பதேயாகும்.

இப்படி ஹிந்துக்களுக்குள்ளாகவே அனேகர்களுக்கு துவைத-புத்தி ஸ்திரப்பட்டிருந்தபோதிலும், பிரஹ்மமாகிய பரமாத்மாவே ஏகமான ஸத்தியப்பொருளென்றும், அவர் ஸர்வ-வியாபீ, அதாவது அவர் இல்லாத இடமே (வஸ்துவே) கிடையாதென்றும், ஸகல ஜகத்தும் அவரிடத்திலேயே பிரதிஷ்டையை அடைந்து விளங்குகின்றதென்றும், அதாவது அவரே ஜகத்-காரண-வஸ்து, அவர் இல்லாவிடில் ஜகத் இருக்க மாட்டாதென்றும் அவரே ஸகல ஜீவர்களின் ஹிருதயங்களிலும் ஸச்சிதானந்த ஸ்வரூபியாய் பிரகாசிக்கின்ற ஆத்மா, அவரே நான் (ஜீவாத்மா), நானே அவர், காணப்பட்டதும் காணப்படாததுமான ஸகலமும் அவரே, காலதேச-பதார்த்தங்களுக்கு அதீதமாயுள்ளதும் அவரே, அவர் அரூபி, வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவர் என்றுமுள்ள அத்வைத-பரங்களான பரமாத்ம-தத்துவங்களை வெளிப்படுத்திய வேத-வாக்கியங்களையும் அவர்கள் உச்சரித்துக்கொண்டும், தங்களுடைய துவைதக்கொள்கைக்கு அநுகுணமாக அவ்வாக்கியங்களுக்கே அர்த்தங்களைச்செய்துவிடுவதாய் வீணாக சிரமப்பட்டுக் கொண்டும் வந்திருக்கின்றார்கள்.

மேற்கண்ட தத்துவங்கள் இந்தப்பிரகாரம் துவைத-நோக்கத்துடன் கூடிய ஹிந்துக்களிடம் மாத்திரம் நிற்காமல், நாளடைவில் இவ்விந்தியாவுக்கு ஸமீபத்திலிருக்கின்ற வெளிப் பிரதேசங்களிலுள்ள ஹிந்துவல்லாதவர்களுக்கும் கொஞ்சங் கொஞ்சமாக இத்தேச-வாஸிகள் மூலமாக வெளிப்படுத்தப் பட்டிருந்ததால், இந்த ஆசியா-கண்டத்திலேயே உண்டாகியும் இவ்வுலகில் மற்ற கண்டங்களிலும் வியாபித்து வந்திருக்கின்றதுமான புது மதாந்தரங்களுக்கு ஸம்பந்தப்பட்ட புஸ்தகங்களிலும் இத்தத்துவங்கள் ஒருவிதமாய் கண்டெழுதப்பட்டும் வந்திருக்கின்றன. ஆனால், அத்தத்துவங்கள் உண்மையாயிருக்குமானால் அவைகள் அந்த மதாந்தரஸ்தர்களுடைய துவைதக் கொள்கைக்கு விரோதப்படுமே யென்று

ஆலோசனே அவர்களிடம் பூர்ணமாய் இருந்திருப்பதில்லை யென்றும் வெளியாகின்றது. அவர்களும் ஹிந்து-துவைத-வாதிகளைப் போலவே அந்த தத்துவங்களுக்கு ஏதோ ஒருவிதமாக அர்த்தங்களைக் கற்பிக்க யத்தனித்தும் வருகின்றார்கள். இது நிற்க. ஹிந்துவல்லாதவர்களுள்பட எல்லா துவைத-வாதிகளும் தங்கள் தங்களுடைய தியானாதிகளை மேற்கண்டபடி கடவுளின் உபாஸனங்கள் தானென்றும், தாங்கள் உத்தேசித்திருக்கின்ற பரலோகப்பிராப்தியும் அதிலேற்படுகின்ற சுக-லாபங்களுமே மனிதனுக்கு நற்கதியாகுமென்றும் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், அவர்களில் யாருக்கும் முன் சொல்லிய நிர்குணோபாஸனம் கிடையாதென்பதும், அது கைவல்ய-மோக்ஷத்தின் பொருட்டு ஜ்ஞான-மார்க்கத்திலிருந்து வருகின்ற அத்வைதியான உத்தம தார்மிக ஹிந்துவுக்கு தான் உண்டென்பதும் நிச்சயமே

2. ரூபத்தின் அவசியம்

வாஸ்தவத்தில் நிர்குணமாயும், ஏகமாயும், அகண்டமாயும், அரூபியாயும், அவாங்மனஸ-கோசரமாயும் சுத்த-ஸச்சிதானந்த-ஸ்வரூபியாயுமுள்ள பிரஹ்மப் பொருள், "ஸமீபத்தில் இருப்பது" என்ற ஸாமான்ய அர்த்தத்தில், உபாஸனத்திற்கு விஷயமாக வேண்டுமானல், உபாஸகனுடைய கீழான அல்ப-நிலைமைக்குத்தக்கபடி அப்பொருளுக்கு குணங்களைக்கற்பித்து அவனுடைய மனதுக்கு புலப்படக்கூடிய விதமாக அதைஇறக்கி வைத்துக்கொள்ள வேண்டியதவசியமாகும். சரீரத்திற்கும் கிஞ்சிஜ்ஞத்வாதி-அல்ப-குணங்களுக்கும் உபாஸகன் கட்டுப்பட்டு நிற்பதுபோல், பரமாத்மாவை ஒரு ரூபத்திற்கும் ஸர்வஜ்ஞத்வாதி-மஹா-குணங்களுக்கும் கட்டுப்பட்டிருப்பது போல் செய்து கொண்ட பிறகுதான் அவருடைய ஸமீபத்திலிருப்பதான பாவனையுடன் அவரை உபாஸித்து வருவது ஸாத்தியப்படக்கூடும். அவருடைய ஸமீபத்திலிருப்பதென்றால், உபாஸகன் இந்திரியங்களுடன் கூடிய தன் மனதுக்கு அவரையே

விஷயமாகச் செய்துகொள்வதென்று அர்த்தம். உபாஸன மென்பது முக்கியமாய் மனதின் காரியமேயானாலும், ஸாதாரண மனிதனுடைய மனதினால் பாவிக்கப்படக் கூடிய விஷயங்கள் பெரும்பாலும் இந்திரிய-விஷயங்களாயிருக்கிறபடியால் கண், காது முதலான ஜ்ஞானேந்திரியங்களை பரமாத்மாவின் விக்கிரஹ-தர்சனம், கல்யாண-குண-சிரவணம் முதலானவை களில் சேர்ப்பித்துக் கொண்டும், வாக், கை, கால் முதலான கர்மேந்திரியங்களை அவருடைய ஸ்தோத்திர-ஸங்கீர்த்தன-அர்ச்சன-பிரதக்ஷிணாதி-காரியங்களில் நியமித்துக் கொண்டும், மனதை அவருடைய ஸ்வரூபத்தியானத்திலிருக்கும்படி செய்ய வேண்டும். அதாவது, இந்திரியங்களின் ஸ்வபாவங்களுக்குத் தக்கபடி, அவைகளுக்கு நல்வழியில் போக்கு விட்டுக்கொண்டே மனதை உபாஸனத்தில் ஸ்திரப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்படிப் போக்குவிடாமல் இந்திரியங்களைக் கட்டிப் போட்டு விட்டு மனதினால் மாத்திரம் தியானஞ் செய்துவரு வதற்குப் பெரும்பாலும் ஜனங்களுக்கு சக்தி யிருக்கமாட்டாது. அநேகமாய் இவர்களுடைய மனதுகள் இந்திரியங்களுக்கு அனு ஸாரியாகவேயிருக்கக்கூடியவை. இவர்கள் பலாத்காரமாக இந் திரியங்களை அடக்கி பகவத்-தியானத்தில் புத்தியைச் செலுத்த யத்தனித்தாலும், இவ்வித தியானத்தில் தங்களுடைய இந் திரிய-விஷயமாகவே பகவத்-ஸ்வரூபமும் காணப்படுவதுந் தவிர இந்திரிய-விஷயங்கள் ஸம்பந்தமாகவே மனோ-ராஜ்யங் களும் உபாஸன-காலத்திலேயே விஸ்தாரமாய் பெருகச்செய்யப் பட்டு மனோ-விக்ஷேபம் அதிகமாகி விடவுங்கூடும். கட்டுக் கடங்காத இந்திரியங்களின் போக்குகளை அனுசரித்து மனது சஞ்சலப்படுவதைக் குறைத்து விடுவதற்காகவே ஆரம்ப-அப்பி யாஸத்தில் உபாஸகருக்கு பாஹ்ய (ஸ்தூல)-பூஜை அவசிய மென்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. முதலில் வெளிப் பூஜாதிகளில் அப்பியாஸங்களைச் செய்யாமல் பகவத்-தியா னத்தைச் செய்ய யத்தனிப்பவர்களின் மனதுகள் அவர்களுக்கு

வசப்படாமல் தியான-காலத்திலேயே ஊர்-சுற்றிக் கொண்டிருப்பது வெகு பெயர்களுக்கு அனுபவ-சித்தம் இந்திரியங்களின் வியாபாரங்களுக்கும் கொஞ்சம் போக்குவிட்டு அவைகள் பூராவும் பகவத்-கைங்கர்யாதிகளில் மாத்திரம் வினியோகப்படும்படி செய்து, அப்பால் மனதை பகவத்-ஸ்வரூபத் தியானத்தில் ஈடுபடும்படி செய்ய யத்தனிப்பதே கிரமமான மார்க்கம்.

இந்தப் பிரகாரம் அப்பியாஸிகளுடைய வெளி-இந்திரியங்களுக்கும் பகவத்-கைங்கர்ய-கார்யம் ஏற்படவேண்டியதாயிருப்பதால், அவ்வித கைங்கர்யத்திற்கு பாத்திரரான பகவானுக்கும் ஒரு வெளிப்படையான ஸ்தூல-ரூபத்தைக் கற்பிக்கவேண்டியதும் அவசியமாயிருக்கின்றது.

உண்மையில் அரூபியான பரமாத்மாவுக்கு இப்படி ஸ்தூல-ரூபத்தைக் கற்பிக்கலாமாவென்று சங்கைப்பட வேண்டாம். அவருக்கு எல்லாவித ரூபங்களும் பொருந்தக்கூடியவைதான். இது பின்னல் தெளிவுபடுத்தப்படும். அன்றியும், எவ்விதமான ரூப-கல்பனத்தைச் செய்தாலும் பரமாத்மாவுக்குக் குறைவு வந்துவிடமாட்டாது. உபாஸகரின் கீழான ஸ்தானத்திற்குத் தகுந்த விதமாக பரமாத்மா தணிந்திருந்து பக்தியால் செய்யப்பட்ட அல்பமான கைங்கர்யங்களைப் பெற்றுக்கொண்டுவிட்டதினல் அவருடைய மேன்மைக்கு ஹானியில்லை. பெரும் சக்கிரவர்த்தி ஸ்தானத்திலிருப்பவர் தன்னிடம் அன்புடன் ஒரு சிறு குழந்தை ஒரு அல்பமான கற்கண்டுத் துண்டைக் கொடுக்கவந்தால், அதை அவர் வணங்கிக் குனிந்து பெற்றுக்கொண்டுவிட்டால் அவருடைய உயர்ந்த ஸ்தானத்திற்குக் குறைவு உண்டாகிவிடாது. இப்படி அவரைத் தணியும்படி செய்வதினல் அக்குழந்தையின் செய்கை தவறுமல்ல குழந்தையின் தாழ்ந்த நிலைமையை உத்தேசித்து அவர் வணங்கித் தணியும்படி ஏற்படுகின்றது. இப்படி அவர் தணிந்து நிற்பது குழந்தையின் ஸந்தோஷத்தின்பொருட்டு அவசியமாக இருக்கின்றது. அவருக்கு அதினல் நஷ்டமுமில்லை, லாபமுமில்லை.

3. கல்பனை வஸ்துவை பாதிக்காது

ஆனால் சிலர்கள் அடியிற்கண்டபடி எண்ணக்கூடும். குழந்தையின் உயரத்திற்குத் தக்கபடி சக்கிரவர்த்தி குனிந்து கொண்டு குழந்தையை ஆதரித்து ஸந்தோஷிக்கச்செய்வது அவருக்குத் தகாத காரியமல்ல; இது அவருடைய மனித-இயற்கைக்கு விரோதமாகமாட்டாது. ஸ்தூல-விஷயங்களில் பெரும்பாலும் பற்றுதலுடன் எப்போதும் வெளி-முகப்பட்டிருக்கின்ற இந்திரியங்களுக்கு விஷயமாகக்கூடிய ஸ்தூல-ரூபத்தை பரமாத்மாவுக்குக் கற்பிக்கிறதாயிருந்தால் இது அவருடைய அரூபி-ஸ்வரூபத்திற்கு விரோதப்படுமேயென்றும், இப்படி பரமாத்மாவின் இயற்கைக்கு விரோதமாகக் கற்பிக்கப்பட்ட ரூபத்தில் அவர் இருப்பதாக பாவிப்பதும் நியாயமில்லையே யென்றும் கேட்கலாம். சற்று கவனித்துப் பார்த்தால், ஸ்தூல-ரூப-கல்பனத்தினால் பரமாத்ம-ஸ்வரூபத்திற்கு விரோதம் ஏற்படவில்லை யென்றே வெளியாகும். பரமாத்மா உண்மையில் அரூபீ என்பதில் ஸந்தேஹமில்லை. ஆகிலும், அவரிடம் ஸ்தூல-ரூப-கல்பனம் ஸாத்தியப்படக்கூடும். ஸாமான்யமாய் இவ்வுலகத்தில் எங்கும் வியாபித்திருக்கின்ற மின்சாரத்திற்கு (Electricity) ரூபமில்லை யென்றே சொல்லலாம். ஓர் வளைவுள்ள கம்பியில் (Spiral wire) ஸம்பந்தப்பட்டு ஜ்யோதிர்-மயமாய் பிரகாசித்தால், கம்பியின் வளைவுத் தன்மையை மின்சாரத்தில் ஆரோபித்து மின்சாரமே வளைந்திருப்பதாக பாவிக்கப்படலாம். அதாவது, ரூபவத்தான பதார்த்த-ஸம்பந்தத்தினால் அரூபவத்தான தத்துவத்தில் ரூபவத்வ-கல்பனம் ஏற்படக்கூடும். தவிரவும், அரூபவத்தான மின்சாரத்தில் ரூபவத்தான கம்பி இருப்பதாகச் சொல்லக்கூடாமலிருந்த போதிலும், ரூபவத்தான கம்பியில் அரூபவத்தான மின்சாரம் இருப்பதாகச் சொல்லலாம். இப்படியே, அரூபியான பரமாத்மாவிடத்தில் ஸ்தூல-விக்கிரஹம் இருப்பதாகச் சொல்வதற்கில்லையானாலும், ரூபவத்தான ஸ்தூல-

விக்கிரஹத்தில் அரூபியான பரமாத்மா இருக்கக்கூடுமென்றே சொல்லவேண்டும். அதாவது, அரூபியான தத்துவத்தில் ரூபவத்தான வஸ்து இருப்பதாகச் சொன்னால் தான் விரோதம் ஏற்படும். அத்தத்துவத்தில் அவ்வித வஸ்துவின் தோற்றம் இருப்பதாக எண்ணப்படக் கூடுமேயல்லாது, அவ்வஸ்துவே அதிலிருப்பது போல் சொல்லக் கூடாது. ரூபவத்தாயிருக்கின்ற வஸ்துவில் அரூபியாயிருக்கின்ற தத்துவத்தின் ஸம்பந்தமிருக்கலாம், இதில் விரோதமில்லை. ஆகையால், அரூபியும் ஸர்வ-வியாபியுமான பரமாத்மாவின் ஸம்பந்தம் ஸ்தூல-விக்கிரஹாதிகளில் இருப்பது அவருடைய இயற்கையான ஸ்வரூபத்திற்கு விரோதமாகாது. கம்பியின் வளைவுத்தன்மை அக்கம்பியிலுள்ள மின்சாரத்திற்கே ஆரோபிக்கப்படுவது போல், விக்கிரஹத்திலுள்ள பரமாத்மாவும் விக்கிரஹ-ரூபியாகவே இருப்பதாக பாவிககப்படலாம்.

4. ஸர்வ வியாபீ

மேலும், பரமாத்மாவின் ஸர்வ-வியாபித்தன்மை எங்கும் பரிபூர்ணமாயுள்ளது. ஸ்தூல-ரூபத்துடன் கூடிய வஸ்துக்களிலும் ஸம்பூர்ணமாய் பரமாத்ம-ஸம்பந்தம் இல்லாமலிருப்பதற்கில்லை. வேதத்தினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அரூபங்களாகவும் ரூப-ஸஹிதங்களாகவுமிருக்கிற ஸகல வஸ்துக்களிலும் பரமாத்மா இருக்கிறாரென்பது, அதாவது, மனது முதலான ஸூக்ஷ்ம-வஸ்துக்களிலும் கல் முதலான ஸ்தூல-பதார்த்தங்களிலும் எங்கும் அவர் இருந்து வருகிறாரென்பது நிச்சயமாதலால், ஸ்தூலாதி ஸகல ரூபங்களும் அவருக்குப் பொருந்தக்கூடியவை தான். அவர் "ஏகர்", என்றும் "அகண்டர்" என்றும் சொல்லப்பட்டிருப்பதால், அவர் ஒரு வஸ்துவில் அதிகமாயிருக்கிறாரென்றுவது மற்றதில் குறைவாயிருக்கிறாரென்றுவது சொல்வதற்கில்லை. எக்காலமும் நிரவயவராகவும் பிரிக்கப்படத்தகாதவராகவுமிருக்கின்ற அகண்ட-பரமாத்மா எல்லாவிடங்களிலும், ஒவ்வொரு

வஸ்துவிலும், முன் சொல்லியபடி பரிபூர்ணமாய் இருப்பதாகவே அறிந்துகொள்ளவேண்டும்.

இப்படி ஒரேவிதமாக எங்கும் பரமாத்மா நிறைந்திருப்பது வாஸ்தவமாயிருக்கையில், அவர் ஹிருதயம், ப்ரூ-மத்தியம், அர்ச்சை, மாதா, பிதா, குரு, பர்த்தா, அக்னி, ஸூர்யன், அதிதி, யதி முதலான சில இடங்களில் மாத்திரம் பிரகாசிப்பதாகவும், மற்ற இடங்களில் பிரகாசிக்கவில்லை போலும் உலகத்தில் வியவஹாரம் இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதமாக சாஸ்திரத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவர் பிரகாசிக்கின்ற இடங்கள் அவருடைய உபலப்தி-ஸ்தானங்களென்று சொல்லப்படுகின்றன. பொதுவாகவே ஜீவர்களுடைய பார்வைகளின் சக்திக் குறைவை உத்தேசித்து அவ்வித உடலப்தியிருக்கக்கூடாத ஸ்தானங்களாக பெரும்பாலும் உலகத்திலுள்ள பதார்த்தங்கள் சொல்லப்படுகின்றனவே யொழிய, உண்மையில் உபலப்தி-ஸ்தானங்களில்லாத வஸ்துக்களாவது இடங்களாவது எங்கும் எக்காலத்திலும் கிடையாது. ஸூர்யன் கண்ணாடியிலும் ஜலத்திலும் மாத்திரம் ஸ்பஷ்டமாய் பிரதிபிம்பித்துத் தோன்றினாலும், மற்ற பதார்த்தங்களிலும் ஒருவிதமாய் விளங்கிக்கொண்டே யிருப்பதுபோல், பரமாத்மாவும் எங்கும் எப்போதும் பிரகாசித்துக்கொண்டே யிருக்கின்றார்.

அந்தப் பிரகாசத்தைப் பார்ப்பதற்கு ஜீவர்களால் உபயோகப்படுத்த வேண்டிய புத்தியாகிய கருவி அனேகமாய் கூர்மையாயில்லாமல் மழுங்கி மந்தமாய் போயிருப்பதே பிரகாசமில்லையென்று சொல்வதற்குக் காரணமாகும். கருவியை சுத்தப்படுத்திக்கொண்டு நன்றாகப் பார்க்கிறதென்ற "ஸம்யக்-தர்சன" அப்பியாசத்தை பலப்படுத்திக் கொண்டவருக்கு ஸகல வஸ்துக்களும் பரமாத்மாவின் உபலப்தி-ஸ்தானங்கள் தான். ஸ்ரீ பிரஹ்லாதருக்கு ஸ்தம்பங்கூட உபலப்தி-ஸ்தானமாகவில்லையா? இவ்வித ஸம்யக் தர்சனம் யாருக்கு நன்கு ஸித்தித்து எங்கும் பிரஹ்ம-தர்சனமிருந்து வருகின்றதோ

அவரே, முக்யபக்ஷ-ஸமதர்சியாவார். உத்தம ஸமதர்சன மில்லாத அஜ்ஞானிகளான அப்பியாஸகர்கள் எல்லோருக்கும்-அவரவர்களின் நிலைமைக்குத் தக்க விதமாய் உடலப்தி-ஸ்தானம், மற்றவை யென்ற வித்தியாஸப்பார்வை இருந்து கொண்டுதானிருக்கும். இவர்களுக்குள் எவர்களுக்கு புத்தி சக்தி மிகவும் குறைவாயிருக்கின்றதோ அவர்களுக்கு வியக்தமாய் கண்களுக்குப் புலப்படக் கூடிய ஸ்தூல-விக்கிரஹங்களில் தான் பகவான் இருப்பதாகவும் மற்ற இடங்களில் இல்லை போலும் கூடத் தோன்றக்கூடும் प्रतिमास्वल्पबुद्धीनां.

5. ரூபமில்லாமல் தியானம் கிடையாது

பரமாத்மாவின் உபாஸனத்தில் ஸ்தூல-ரூப-கல்பனம் அவசியமென்றும், ஸகல ரூபங்களிலும் அவரே பிரகாசிக்கிறரென்றும் சொல்லப்பட்ட விஷயத்தில் மறுபடியும் சிலர்களுக்கு ஸந்தேஹம் உதிக்கலாம். வாஸ்தவத்தில் அரூபியாயிருக்கின்ற பொருளை எல்லோரும் அரூபியாகவே உபாஸிப்பது உத்தம மில்லையா ? கீழ்-ஸ்திதிகளிலுள்ள அல்ப-புத்திகளுடன் கூடிய அதிகாரிகளுக்கு ஸ்தூல-ரூபத்தின் மூலமாய் ஆராதனம் அவசியமென்று சொல்லப்பட்டது உண்மையாயிருக்கக் கூடுமானல், அவ்வித கீழான அதிகாரிகள் ஹிந்துக்களுக்குள் மாத்திரம் இருப்பதாகவும், ஹிந்துவல்லாதவர்கள் எல்லோரும் மேலான அதிகாரிகளென்றும் தாத்பரியமா ? அப்படியில்லாவிடில் மஹம்மதீய-கிருஸ்துவ-மதங்களிலுள்ள ஸகல ஜனங்களும் பாஹ்யமான ஸ்தூல-ரூபத்தை அவலம்பிக்காமலே கடவுளை உபாஸித்து வருகின்ற விஷயம் எப்படி ஸாத்தியப் பட்டிருக்கக்கூடும் ? அவர்கள் விக்கிரஹாராதனம் கூடாதென்று கண்டித்துவந்திருப்பதினுலேயே அவர்கள் எல்லோரும் விக்கிரஹாராதனத்தைச் செய்துவருகின்ற ஹிந்துக்களைவிட வெகு மேலானவர்களென்று ஏன் அபிப்பிராயப்படக்கூடாது ? யதார்த்தத்தை உள்ளபடி தெரிந்துகொண்டுவிட்டால், இவ்வித ஸம்சயம் உடனே நிவிருத்தியாகிவிடும். ஆதியில் வேதத்தினுல்

வெளியிடப்பட்ட "அரூபீ, ஸர்வ-வியாபீ, ஸர்வ-ஹிருதயவாஸீ" முதலான கடவுளின் லக்ஷணங்களை முன் குறிப்பிட்டபடி மற்ற மதஸ்தர்கள் கிளிப்பிள்ளைகளைப்போல் திருப்பிச்சொல்லிக் கொண்டிருக்கிறார்களேயல்லாமல், கடவுளின் நிஜ-ஸ்வரூபத்தை யாவது ஜீவனுடைய நிஜ-ஸ்வரூபத்தையாவது அவர்கள் உண்மையாய் அறிந்துகொண்டவர்களில்லை. நிற்குணப்பிரஹ்ம விஜ்ஞானம் அவர்களுக்குக் கிடையாது; அவர்களுக்கு ஏற்படக்கூடியதுமல்ல. இந்த ஸ்திதியிலுள்ளவர்களுக்கு அரூபித்தன்மை, ஸர்வ-வியாபித்தன்மை முதலான ஸர்வாத்ம-லக்ஷணங்கள் பிடிபடக்கூடியவையல்ல அவர்கள் கடவுள் என்று யாரைச்சொல்லுகின்றார்களோ அவர் எக்காலமும் ஸகுண-மூர்த்திதான். அவர் மேலான உத்தம-லோகத்திலேயே எப்போதும் வாஸஞ்செய்வதாகவும் அவ்வுத்தம-லோகஞ் சென்று அங்கு அவரைப்போல் ஆனந்தியாயிருப்பதே மனிதனுக்கு ஸர்வோத்தம நற்கதியென்பதாகவும் உறுதியான கொள்கையுடனிருந்து வருவதால், அவர்கள் இப்பூலோகத்தில் கண்ணிற்படக்கூடிய வஸ்துக்களிலும் கடவுள் இருக்கக்கூடுமென்று எண்ணுமலேயிருந்துவருகின்றார்கள். கடவுள் கண்ணால் பார்க்கப்படக்கூடிய வஸ்துக்களில் இல்லாமல் வெகு தூரத்தில் வேறு உலகத்தில் இருப்பதாக தியானிக்கவேண்டிய தாயிருப்பதால், அவர்களெல்லோரும் மனதினல் மாத்திரம் அவரை ஒருவிதமாய் பாவனை செய்துவருகின்றார்கள்

கடவுள் ஸர்வ-வியாபீ என்பது அவர்களின் உண்மையான கொள்கையாயிருக்குமானால், கடவுள் ஸ்தூல-விக்கிரஹத்தில் இல்லையென்று அவர்கள் எண்ணவேமாட்டார்கள். அல்ப-புத்தியுடன் கூடிய ஹிந்து உபாஸகன் ஸ்தூல-விக்கிரஹத்திற்கு வெளியிலும் கடவுள் இருப்பதைத் தெரிந்துகொள்ளவில்லை யானாலும், அவன் அவ்விக்ரஹத்தில் கடவுள் இருக்கிறாரென்று எண்ணியிருப்பது ஒருக்காலமும் தப்பாகமாட்டாது. விக்ரஹத்தில் மாத்திரம் கடவுள் இருப்பதாக எண்ணுகிறவனைத்தான்

சாஸ்திரம் அல்ப-புத்தியுடன்கூடியவன் என்று சொல்லியிருக்கின்றதே தவிர விக்கிரஹத்தைப் பூஜை செய்வதற்காக அல்ல. விக்கிரஹத்திலும் கடவுளிருப்பது உண்மையானால், அதை ஏன் பூஜைக்கு உபயோகப்படுத்தக்கூடாது? இந்த பூலோகத்தில் தென்படக்கூடிய எவ்வித ஸ்தூல-வஸ்துக்களிடத்திலும் கடவுள் இல்லையென்று மற்ற மதஸ்தர்கள் எண்ணியிருப்பதினாலேயே அந்த வஸ்துக்களை பூஜைக்கு உபயோகப்படுத்தக்கூடாதென்று அவர்கள் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். எப்போது அவர்கள் ஸ்தூல-வஸ்துக்களில் கடவுள் இல்லையென்று எண்ணிவிட்டார்களோ அப்போது திருச்யமும் ஸ்தூல—வஸ்துக்களடங்கியதுமான இப்பூலோகத்திலேயே கடவுள் இல்லையென்றே அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்களென்பதும் நிச்சயம்.

இப்படிப்பட்ட எண்ணமுள்ளவர்கள் கடவுளை ஸர்வ-வியாபியென்று வாயினால் மாத்திரம் சொல்லி வருவதற்கு அர்த்தமே கிடையாது. அவர்களுடைய அந்தரங்கக்கொள்கையில் கடவுள் ஏதோ ஒரு உயர்ந்த ஸ்தானத்திலிருந்துகொண்டு மனித-ராஜாவைப்போல் அங்கிருந்தே தன்னுடைய ஆஜ்ஞா-சக்தியினால் ஸகல உலக காரியங்களையும் நடத்தி வருகிறாரென்றே பாவிக்கப்பட்டிருப்பதாகத்தான் வெளியாகின்றது. எப்படி இராஜாவின் அதிகாரம் ராஜ்யம் பூராவிலும் பரவி ஸர்வ-வியாபியாயிருக்கின்றதோ, அப்படியே கடவுளின் அபரிமிதமான ஆஜ்ஞா-சக்தி ஜகத்துப் பூராவிலும் பரவி ஸர்வ-வியாபியாயிருக்கிறதென்றும், ராஜா தன் அரண்மனையில் ஆனந்தமாய் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பது போல் கடவுள் அவருடைய சொந்த உலகத்திலேயே தன் பூர்ணானந்தத்திலிருந்துவருகிறாரென்றுமே அவர்களுடைய கொள்கையாயிருக்கவேண்டும். அதாவது கடவுளின் ஆஜ்ஞா-சக்திக்குத்தான் ஸர்வ-வியாபித்தன்மையுண்டேயல்லாது கடவுளுக்கு ஸர்வ-வியாபித்தன்மையில்லையென்றே அவர்கள் சொல்வதாகத்தான் ஏற்படும்.

ஸர்வ-வியாபியாயில்லாமல் ஓரிடத்தில் காணப்படக்கூடிய கடவுள் அரூபியாகவுமிருப்பதற்கில்லே. ஓரிடத்தில் காணப்படக்கூடிய தன்மையே ரூபத்தின் காரியம். இந்தப்படி கடவுளுக்கு சொந்தமாகவே ஒரு ரூபம் ஸ்திரமாயிருக்குமானுல், அவரை வேறு ரூபத்தின் மூலமாய் உபாஸிப்பது பிசகுதானுகும். ஆகையால், மிலேச்ச-மதஸ்தர்கள் ஸ்தூல-விக்கிரஹாதிகளே உபயோகப்படுத்துகிறதில்லேயென்பது நியாயந்தான். ஹிந்துக்களுக்கோவெனில், உண்மையில் கடவுள் ஸர்வ-வியாபிதான் என்றும், அரூபிதானென்றும், அவரே ஸகல உலகங்களிலும், அதுபோல் இவ்வுலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும் ஸம்பூர்ணராயிருக்கிருரென்றும், ஸகல ரூபங்களிலும் அவரே பிரகாசிக்கிருரென்றும் உறுதியாய்த் தெரியவந்திருப்பதால், இவர்கள் மாத்திரம் ஸ்தூல-விக்கிரஹாராதனத்தைச் செய்து வருகிருர்களென்பதும் நியாயந்தான்.

6. மனது ரூபமற்றதை கிரஹிக்காது

ஒருக்கால் அன்னிய-மதஸ்தர்கள் அடியிற்கண்டபடி ஆக்ஷேபம் சொல்லக்கூடும். கடவுளே ஸர்வ-வியாபியென்பதும் அவர் அரூபிதானென்பதுமே தங்களுடையவும் கொள்கையென்றும், ஸர்வ-வியாபியானதினுல் ஸ்தூல-வஸ்துக்களிலும் அவர் இருக்கிருரென்பதும் உண்மையானுலும், ஸ்தூல-வஸ்துக்கள் ரூபங்களுடன் கூடியிருப்பதால் அரூபியான அவரை ஸ்தூல-விக்கிரஹம் மூலமாய் ஆராதனஞ்செய்வது தப்பென்பது தங்களுடைய தீர்மானமென்றும் அவர்கள் வாதிக்கலாம். இந்தப்படி ரூபத்தின் மூலமாய் அரூபியான கடவுளேக் கொண்டாடக்கூடாதென்பது வாஸ்தவமானுல் ஸூக்ஷ்ம-ரூபத்தின் மூலமாக (Through mental image) அவரைத் தொழுவதும் தப்பென்றே முடிவாகும். மனதினுல் செய்யப்படக்கூடிய தியானத்திற்குக் கடவுளே விஷயமாக்கவேண்டுமானுல் அவருக்கு ஒரு ஸூக்ஷ்ம-ரூபத்தை மனதினுல் கற்பித்தேயாக வேண்டும். பாவனு-ரூபமாகிய ஸூக்ஷ்ம-ரூபங்கூட இல்லாமல்

கடவுளே மனதினல் தியானஞ்செய்ய முடியாது. மனதே துவைதத்திற்குட்பட்ட திருச்ய-கோடியைச் சேர்ந்திருப்பதால், அது மற்ருெரு திருச்யத்தைத்தான் விஷயீகரிக்குமேயல்லமல், அதிருச்யமான கடவுளாகிய அரூப-வஸ்துவை கிரஹிக்க அதற்கு சக்தி கிடையாது

அரூபங்களாயிருக்கின்ற ஆகாயம், மின்சாரம், நற்குணங்கள், துற்குணங்கள், கணித-தத்துவங்கள் (Arithmetic) முதலானவைகளே மனது கிரஹிக்கவில்லையாவென்று கேட்டால், இவைகளேப்பற்றிச் சிந்திக்கும்போதும் ஒவ்வொரு விஷயத்திலும் ஏதாவது வியக்தமான ரூபத்தை அல்லது உதாஹரணத்தைப் பிடிமானமாக ஜ்ஞாபகத்தில் அல்லது பாவனேயில் வைத்துக்கொண்டுதான் மனது சிந்தனே செய்யக்கூடுமென்று உறுதியாய்ச் சொல்கின்ருேம். இது மனஸ்-தத்துவ-சாஸ்திரத்தில் முடிவாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிற விஷயம். இதை இங்கு விஸ்தரித்தால் பிரகிருதத்திற்கு ஸம்பந்தமன்னியில் மிக விரியும்.

மனதே கட்டுக்கடங்கிய (Limited) உள்ளிந்திரியமாதலால் அது ஏதாவது ஒருவிதமான கட்டுக்கு அடங்கியிருக்கிற ரூபவத்தான விஷயத்தைத்தான் உட்கொள்ளக்கூடும். ஓரிடத்தில் கட்டுக்கு அடங்கியதும் திருச்ய-ரூபியுமான மனதினல் ஸர்வ-வியாபியும், அனந்தமும், அதிருச்யமும் அரூபியுமான பரமாத்மப் பொருளே (உண்மையான கடவுளே) எவ்விதத்திலும் கிரஹிக்க முடியாதென்பதாக சுருதியே முறையிடுகின்றது; இவ்விதமாகவே தத்துவ-ஜ்ஞானிகளான மஹான்களால் ஸம்சயமின்றி ஸித்தாந்தப்படுத்தப்பட்டுமிருக்கின்றது. ஆகையால், மற்ற மதஸ்தர்கள் மனதினல் கடவுளே தியானிப்பதாகச் சொல்லும்போதெல்லாம் அவருக்கு ஒரு ஸூக்ஷ்ம-ரூபத்தைக் கற்பித்துக்கொண்டே தியானஞ்செய்கின்ருர்கள் என்பதே நிச்சயம்.

எவ்வித ரூபமும் இல்லாத கடவுளுக்கு ஸூக்ஷ்ம-ரூபத்தைக் கற்பிப்பது நியாயமாயிருக்குமானுல், ஸதூல-ரூபத்தையும் அவருக்கு ஏன் கற்பிக்கக் கூடாது? அருபியாயிருக்கிறவரிடம் ரூபகல்பனத்தைச் செய்வதே தோஷமாகுமானுல், மனதிஞல் செய்யப்படுகின்ற ஸூக்ஷ்ம-ரூப-கல்பனமும் தோஷந்தானுகும். ஆகையால், கடவுள் உண்மையில் அருபி என்ற காரணத்திஞல் ஸ்தூல-விக்கிரஹ ஆராதனம் கூடாதென்று சொன்ஞல், அதே காரணத்திஞல் ஸூக்ஷ்மரூபத்தில் அவரை மனதிஞல் தியானம் செய்வதும் பிசகு என்பதாகவே முடியும். அதாவது, கடவுளின் அருபித் தன்மையினுல் அவரிடம் ரூப-கல்பனத்தைச் செய்வது தோஷமாகுமானுல், இவ்வித தோஷம் எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுவேயாகும். மனிதனுடைய மனதின் சக்திக்குறைவை உத்தேசித்து எல்லா மதஸ்தர்களும் இவ்வித தோஷத்திற்கு உடன்படவேண்டியதாயிருக்கின்றது.

கடவுளின் ஸர்வ-வியாபித்தன்மையை உத்தேசித்தால், ஹிந்துக்கள் செய்து வருகிறபடி ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இருவகை-வஸ்துக்களிலும் கடவுளின் ஸான்னித்தியத்தைப் பாராட்டி ஆராதனையைச் செய்வதே சரியென்பதும், அவசியமென்பதும். ஸ்தூல-வஸ்துக்களில் அவர் இல்லாதிருப்பது போல் எண்ணி அவருடைய ஸர்வ-வியாபித் தன்மைக்கு விரோதப்படும்படியாக ஸ்தூல-விக்கிரஹாராதனத்தை தூஷித்துவருவதே பெரும் தோஷமாகுமென்பதும் வியக்தமாய் வெளியாகும். ஆகையால், மற்ற மதஸ்தர்களைவிட ஹிந்துக்கள் எவ்வகையிலும் கீழ்ப்பட்டவர்களில்லை யென்று ஏற்படுவதுமல்லாமல், ஹிந்துக்களுடைய ஆசாரணைகளே கடவுளின் ஸர்வ-வியாபித் தன்மைக்கு ஒத்திருக்கின்றன வென்றும் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். ஹிந்துக்களிடம் ஸ்தூல-விக்கிரஹாராதனம் இருப்பதிஞலேயே இவர்கள் இவ்வுலகத்தில் மற்ற யாவரையுங் காட்டிலும் நிரம்பவும் உயர்ந்தவர்க

ளென்பதும், மற்றவர்கள் விக்கிரஹாராதனத்தின் தத்துவங்களைத்தெரிந்து கொள்ளாமலே அறிவில்லாமையால் கண்மூடித்தனமாக அதை தூஷித்துக்கொண்டு வந்திருக்கிறார்களென்பதும் மறுபடியும் பின்னால் ஸ்பஷ்டப்படுத்தப்படும்.

7. தத்வமறியவும் ரூபம் அவசியம்

விக்கிரஹத்தில் மாத்திரம் கடவுள் இருப்பதாக எண்ணி பூஜை செய்கிறவர் அல்ப-புத்தி யுள்ளவரென்று முன்னால் சொல்லப்பட்டது. இவ்வித அல்ப-புத்தி யில்லாதவர்களும், காணப்பட்டதும் காணப்படாததுமான ஸகல வஸ்துக்களிலும் இடங்களிலும் ஒரே கடவுள் பரிபூர்ணரா யிருக்கிறாரென்று உறுதியாய்த் தெரிந்து கொண்டிருக்கின்றவர்களும், அதி-கூர்மையான புத்தியுள்ளவர்களுமான ஹிந்து-மஹான்களிலும் வெகு பெயர்கள் ஸ்தூல-விக்கிரஹாராதனத்தைச் செய்து வருகின்றார்கள். இவர்களை மூடர்களென்று சொல்பவர்தான் மூடராவர். இவ்வித மஹான்களும் ஏன் ஸ்தூல-விக்கிரஹ-பூஜையைச் செய்து வருகிறார்களென்று யோசிக்கவேண்டியதுண்டு. இவர்கள் வெளிப்படையான ஸ்தூலப்பிடிமானமில்லாமலே மனதினால் மாத்திரம் தியானஞ் செய்து வரக்கூடிய யோக்கியதை யுள்ளவர்களென்பதில் சற்றும் ஸந்தேஹத்திற்கிடமில்லை. ஆகிலும், இவர்கள் ஸ்தூல-பூஜையை விட்டுவிடவில்லை. ஏன்? இப்படிப்பட்ட மஹான்களுக்கும் அப்பூஜையினால் ஆகவேண்டிய காரியம் ஏதோயிருப்பதாகத்தான் எண்ணவேண்டும். அதென்னவென்று பொறுமையுடன் விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய தவசியம். இதைத் தெரிந்து கொண்டுவிட்டால் விக்கிரஹாராதனத்தின் அவசியத்தன்மையும் மேன்மையும் நன்கு வெளிப்படும்.

உண்மையில் அரூபியாயிருப்பது பிரஹ்மத்தைத்தவிர வேறல்ல. ரூபமென்றால் அளவுக்குட்பட்ட எல்லையுடன் கூடி

யிருப்பது. எது அகண்டமாயும் இரண்டற்றதாயுமுள்ளதோ அது தான் மற்றொன்றினால் கண்டிக்கப்படாததினால், அளவுக்குட்படாத அரூபியான உண்மைப்பொருளாகும். பிரஹ்மமென்ற பரமாத்மாதான் இவ்வுண்மைப்பொருள். பரமாத்மாவைத்தவிர வேறொன்றும் உண்மையில் கிடையாது. எப்படி முன் குறிப்பிட்ட பிரகாரம், ஒரே சிதாபாஸன் ஸ்வப்ந-திருக்காகவும் ஸ்வப்ந-பிரபஞ்சமாகவும் இரண்டுபட்டிருப்பது போல் தோன்றுகின்றானோ, அப்படியே ஒரே பரமாத்மா வியாவஹாரிக-திருக்குகளாகிய ஜீவர்களாகவும் வியாவஹாரிக-திருச்யப்பிரபஞ்சமாகவும் இரண்டுபட்டிருப்பதுபோல் தோன்றுகின்றார். பார்க்கின்ற (அறிகின்ற) திருக்கைக்காட்டிலும் வேறாகவே பார்க்கப்படுகின்ற (அறியப்படுகின்ற) திருச்யம் காணப்படுவதால், திருச்யம் பூராவும் அளவுக்குட்பட்ட எல்லைகளுடன் கூடிய ரூபவத்தான வஸ்துக்களேயாகும். ஆகாசம் மின்சாரம் முதலிய அறியப்படக்கூடிய ஸகலமும் திருச்யங்களே தவிர வேறல்ல. எதுவரையில் திருச்யங்களிருப்பதான தோற்றம் திருக்காகிய ஜீவனுக்கு இருந்து வருகின்றதோ அதுவரையில் இந்த ஜீவனும் பரிமிதப்பட்டவன்தானென்பதும் நிச்சயமே.

இந்தப்படி பரிமிதப்பட்டிருக்கின்ற ஜீவனும் ரூபவான் தான். பரிமிதப்பட்டவனாகவே யிருந்து வருகின்ற ஜீவனுக்கு ஸம்ஸார-துக்கமும் தொடர்ந்தே வரும். இந்த ஸ்திதியில் ஜீவனுக்கு, தன்னுடைய பரிமிதத்தன்மை இல்லாமற் போய், அகண்ட பிரஹ்மத்தன்மையில் மாத்திரம் தான் மிஞ்சி நிற்க வேண்டுமென்ற உத்தேசம் ஏற்பட்டால், அதாவது, ஜீவன் மோக்ஷத்தை அடைய வேண்டுமானால், தன்னிடத்திலிருக்கின்ற பரிமிதத்தன்மையையும் தான் ஸம்பந்தப்பட்டபட்டில் வெளியிலுள்ள திருச்யத்தோற்றங்களையும் போக்கடித்துக்கொள்ள வேண்டியது அவசியம், தனக்கு வெளி-திருச்யங்களின் தோற்றங்கள் பூர்ணமாய் லயமாகி மறைவடைகிறவரையில்

தன்னுடைய பரிமிதத்தன்மையும் நிவிருத்தியாகமாட்டாது. தன்னிடத்திலும் மற்ற யாவற்றிலும் அநித்யமாகவும் ரூபவத்தாகவுமிருக்கின்றவை எவையோ அவை யெல்லாவற்றையும் தள்ளி ஒதுக்கிவிட்டும், இப்படி ஒதுக்குவதினால் "தான்" "மற்றது" என்ற பேதமும் அற்றுப்போகும்படி செய்துவிட்டும், இரண்டற்ற நித்தியமான அரூப-வஸ்துவாகவே நின்றுவிடவேண்டும். அதாவது திருக்காகிய தன்னிடத்தில் எந்த அநித்யச்சேர்க்கைகள் ஆரோபணஞ்செய்யப்பட்டு பரிமிதப்பட்ட ரூபவானாகிய திருக்காக தன்னைச்செய்தனவோ அவைகளையும், திருச்யப்பிரபஞ்சத்தில் எந்த அநித்யச்சேர்க்கைகளின் ஆரோபணத்தினால் திருச்யத்வம் (ரூபவத்வம்) விளங்குகின்றதோ அவைகளையும் திரஸ்காரஞ்செய்வதின் மூலமாய் தன்னுடைய ஸ்வதஸ்-ஸித்தமான அத்விதீய-பிரஹ்மானுபவத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்விதமாக இருவகையான அப்பியாஸம் அவசியமாயுள்ளது. ஒன்று தன்னிடத்திலுள்ள ஆரோபணங்களைப்போக்கடிப்பது, மற்றொன்று திருச்யப்பிரபஞ்சத்திலுள்ள ஆரோபணங்களை விலயப்படுத்துவது. ஜீவர்கள் அநேகர்களாயிருந்தபோதிலும் ஒவ்வொரு ஜீவனுக்கும் தன்னைத்தவிர மற்ற ஜீவர்கள் எல்லோரும் திருச்யப்பிரபஞ்சத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆகையால் தன்னிடத்திலுள்ள ஆரோபணங்களும் தான் ஸம்பந்தப்பட்டமட்டில் தனக்கு விஷயங்களாகக்கூடியதாக திருச்யப்பிரபஞ்சத்திலுள்ள ஆரோபணங்களும் நிவிருத்தியடைந்துவிட்டால், தன்னிடத்திலும் பிரபஞ்சத்திலும் பொதுவாயும் ஏகமாயுமுள்ள பிரஹ்ம-வஸ்து தானாகவே பிரகாசிக்கும்.

அத்யாயம் 20

விக்கிரஹாராதனம்

1. பிரஹ்ம பாவனை

பிரபஞ்சத்திலுள்ள ஆரோபணங்களை விலக்குவது எப்படியென்று ஆலோசிக்கவேண்டும். பிரபஞ்சாத்மகமான ஜகத்தோ அதி-விஸ்தாரமாகவும் நானாவித-பேதங்களுடன் கூடிய அனந்தமான வஸ்துக்களடங்கியதாகவுமிருக்கின்றது, ஜகத்திலுள்ள ஸகல வஸ்துக்களையும் சோதித்து அவைகளிலுள்ள ஆரோபணங்களைப் போக்கடிப்பது ஜீவனுக்கு ஸாத்தியப்படக்கூடாத காரியம். இப்படிச் செய்யவேண்டிய அவசியமுமில்லை. மாதிரிக்காக எதையாவது ஒரு திருச்ய-வஸ்துவை யெடுத்துக்கொண்டு அதிலுள்ள ஆரோபணங்களை விலக்கிவிடத் தெரிந்துகொண்டுவிட்டால் போதுமானது. பூத-தத்துவ-பரிசோதகர் (Chemist) எப்படி ஒரு பதார்த்தத்தை சோதித்துப்பார்த்து அதைப்போலொற்ற ஸகல பதார்த்தங்களின் தத்துவங்களையும் தெரிந்துகொண்டு விடுகின்றாரோ, அப்படியே பிரஹ்மத்தை ஸாக்ஷாத்கரிக்க இச்சிப்போராகிய ஜிஜ்ஞாஸுவும் திருச்ய-பதார்த்தங்களில் ஒன்றை மாதிரிக்காக விக்கிரஹ-ரூபமாய் தன் எதிரில் வைத்துக்கொண்டு, அதில் ஏற்கனவே ஏறிப் பற்றச்செய்யப்பட்டிருக்கின்ற ஆரோபணத் தோற்றங்களை (Phenomenal appearances) மனதினால் ஒதுக்கித்தள்ளி, அதிலுள்ள சர்வ-வியாபியான உண்மைப் பொருளாகிய (Noumenal reality) ப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரித்துவிட யத்தனிக்கவேண்டும்.

இப்படி யத்தனிக்கும் போது ஏதாவது ஒரு ஸ்தூல-வஸ்து எதிரிலிருப்பதே போதாதோ, அதை பூஜை செய்ய வேண்டியதற்கு என்ன அவசியமென்று ஸந்தேஹிக்கக்கூடும். உபாஸனத்தின் முடிவான உத்தேசம் வெறும் மனோபாவனையல்ல;

விக்கிரஹத்திலுள்ள பிரஹ்மப் பொருளை நேராக ஸாக்ஷாத்கரிக்கிறதான அனுபவ-ஸித்தியே அவ்வுத்தேசம். விக்கிரஹத்தை எதிரில் வைத்துக்கொண்டு அதில் பிரஹ்ம-புத்தியை செலுத்தி தியானித்தால் மட்டில் போதாது. யாராவது ஒருவர் ஒரு கலப்பு-வஸ்துவை (Compound Salt) கெமிஸ்டின் கையில் கொடுத்து அதில் இன்ன தத்துவங்கள் (Elements) அடங்கியிருக்கின்றனவென்றும் வெளியிட்டு, அந்த தத்துவங்களைப் பிரித்தெடு வென்று சொல்லியிருந்தால். அந்த கெமிஸ்ட் அவ்வஸ்துவை எதிரில் வைத்துக் கொண்டிருந்து அதில் குறிப்பிட்ட தத்துவங்களை மனதினுல் தியானஞ் செய்து கொண்டு மாத்திரமிருந்தால் அவைகள் வெளியாகமாட்டா. அவைகளை வெளிப்படுத்தக்கூடிய காரியங்களை (Experiments) செய்யவேண்டும். இதுபோலவே, விக்கிரஹத்தைப் பார்த்துக் கொண்டு அதிலுள்ள பிரஹ்மத்தை தியானித்தால் மட்டில் அந்த உண்மைப் பொருள் அனுபவத்திற்கு வரமாட்டாது. பிரஹ்மத்தின் லக்ஷணம் ஸச்சிதானந்த-லக்ஷணம். விக்ரஹத்திலோ விபரீத-லக்ஷணங்களே காணப்படுகின்றன. அது அழிவுள்ளதாகையால் ஸத்துமில்லை, அது ஜடமாகையால் சித்துமில்லை, சித்தே இல்லாவிடத்து ஆனந்தமும் கிடையாதென்பது நிச்சயமே. இவ்வித விக்கிரஹத்தில் ஸச்சிதானந்த-ஸ்வரூபியான பிரஹ்மத்தின் அனுபவரூப-தர்சனம் ஏற்படவேண்டுமானுல், அதில் அதிகமாய் வேலை செய்யவேண்டியதுண்டு. முதலில் அதில் ஸச்சிதானந்தப் பிரஹ்மம் இருக்கிறதென்ற பாவனையை உபாஸகர் தன்னிடம் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வித பாவனையை ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன், விக்கிரஹத்தின் ஸ்தூல-ரூபத்திற்கு ஆதாரமாகவும் அதற்கு அனுகுணமாகவும் அதை ஸம்பந்தித்து ஸூக்ஷ்ம-ரூபமும் இருப்பதாக பாவித்துக் கொள்ளவேண்டும். இந்த ஸூக்ஷ்ம-ரூபமும் வெளியில் தெரிகின்ற ஸ்தூல-ரூபமும் சேர்ந்து

பிரஹ்மத்திற்கு குணவத்துவத்தையும் ரூபவத்துவத்தையும் ஏற்படுத்தி யிருப்பதாகவும் எண்ணிக்கொள்ள வேண்டும். இவ்விதமாக பாவிக்கப்பட்ட ஸூக்ஷ்ம-ரூபமும் விக்கிரஹத்தின் ஸ்தூல-ரூபமும் ஜீவ-ரூபங்களில்லை யென்பதும் ஜ்ஞாபகத்தி லிருக்கவேண்டும். இவ்வுலகத்தில் ஜீவர்களின் ஸ்தூல-சரீரங்கள் நான்கு வகைப்பட்டவைகள் அதாவது, அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம், ஜராயுஜம். மேற்கண்ட விக்கிரஹத்தின் ஸ்தூல-ரூபமோ இந்நான்கு விதங்களிலும் சேராதது. அது ஜீவ-சரீரங்களுக்கு வேறுபட்டுள்ள, ஆனால் உலகத்தில் அடங்கிய, ஸ்தூல-ரூபம். இவ்வுலகமுள்பட, ஸகல ஜீவ-சரீரங்களுமுள்பட, ஸ்தூல-ஜகத்துப் பூராவும் ஸகுண-பரமாத்மாவுக்கு ஸ்தூல-சரீரமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால், அந்த விக்கிரஹம் ஜீவ-சரீரங்களில் சேரா மலும் பரமாத்மாவின் சரீரத்தில் அடங்கியுமிருக்கின்றது. இக்காரணத்தினால் அதை பரமாத்மாவின் சரீரமாகவே பார்ப்பது நியாயமாகும்.

ஆனால் ஸ்தூல-ஜகத்துப்பூராவும் பரமாத்ம-சரீரமா யிருக்கையில் அதன் லேச-லேசபாகத்தையே அச்சரீரமாக எப்படிப்பார்க்கலாமென்று கேட்கக்கூடும். உபாஸகர் ஜகத்துக்குள் அடங்கியவராகையால், ஸ்தூல-ஜகத்துப் பூராவையும் அவர் பார்க்கிறதற்கில்லை ஜகத்துக்கு வெளிப்பட்டு நின்று பார்க்கக்கூடுமானால்தான், அது முழுவதும் பார்வைக்கு விஷயமாகும். இப்படி முழு-ஜகத்தையும் விஷயீகரித்துக் கொண்டுதான் ஸகுண-பரமாத்மாவை உபாஸிக்கலாமென்று சொல்லவுங்கூடாது. எப்படி ஒரு மனிதன் தான் ஆச்ரயித் திருக்கின்ற யஜமானனை உபாஸித்து ஸ்தோத்திரஞ்செய்யும் போது அவருடைய கண்ணை அல்லது பாதத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டு செய்தாலும் அந்த ஸ்தோத்திரம் அந்த யஜமானனுக்கே ஸம்பந்தப்படுகின்றதோ, அப்படியே ஜகத்தில் ஒரு அல்ப-பாகமாகிய விக்கிரஹத்தை

ஜோக்கி உபாஸகரால் செய்யப்படுகின்ற காரியம் யாவும் பரமாத்மாவுக்கே ஸம்பந்தப்படக்கூடியது மேலும் அல்ப-பாகமாகவே விக்கிரஹமிருந்தபோதிலும், அதிலும் அகண்டரான பரமாத்மா பரிபூர்ணராயிருக்கிறு ரென்று முன்னமே காண்பிக்கப்பட்டு மிருக்கின்றது. இப்படியே, விக்ரஹத்தில் ஸம்பந்தப்பட்ட ஸூக்ஷ்ம-ரூபமும் ஸமஷ்டி-ஸூக்ஷ்ம-ஜகத்தின் அல்ப-பாகமாகவே இருந்த போதிலும் அதன் மூலமாய் உபாஸிக்கப்படுகின்ற அகண்டரான பரமாத்மாவுக்கு பூர்ணத்தன்மை குறைந்துவிடமாட்டாது. இவ்விதமாக, பிரகிருத உபாஸகர் ஸம்பந்தப்பட்ட மட்டில், குறிப்பிட்ட விக்கிரஹமே பரமாத்மாவின் ஸமஷ்டி-ஸ்தூல-தேஹப்பிரதிநிதியாகவும், அத்துடன் ஸம்பந்தப்பட்ட ஸூக்ஷ்மா காரமே பரமாத்மாவின் ஸமஷ்டி-ஸூக்ஷ்ம-தேஹப்பிரதிநிதி யாகவும் இவ்விரண்டு தேஹங்களுக்கும் காரணமாயிருக்கின்ற மாயைக்கு அதிபதியாயும் அதீதராயுமிருப்பவரே ஸகுணப் பிரஹ்மமென்ற பரமாத்மாவாகவும் இருந்துவருவதில், ஸாக்ஷாத் பரமாத்மாவின் முன்னிலையில் உபாஸகர் தன்னுடைய தனிமை யான ஜீவத்துவ நிலைமையை விட்டொழித்து தான் பரமாத்மாவுடன் ஒன்ருகிவிடுவதான மோக்ஷ-ஸித்தியின் பொருட்டு தான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அந்தப் படி பின்வருமாறு பூஜாக்கிரமத்தில் நடந்துவருகின்ருர்.

2. பூஜாக்கிரமம்

எதிரிலிருக்கின்ற விக்கிரஹம் பரமாத்ம-விக்கிரஹந்தா னென்பதை முதலில் சில கிரியைகளினுல் உபாஸகர் உறுதிப் படுத்திக்கொள்கின்ருர். ஸர்வ-வியாபியான பரமாத்மா எவ்விதமாக ஜீவனுகிய தன்னிடத்தில் இருந்து வருகின்ருரோ, அவ்விதமாகவே விக்கிரஹத்திலுமிருக்கின்ருர் என்பதை ஸ்திரப்படுத்திக்கொள்ளும்பொருட்டு உபாஸகர் ஆரம்பத்தில் தன்னுடைய ஹிருதயத்தில் பகவானை தியானித்துக்கொண்டு

விக்ரஹத்திலும் ஆவாஹனக்கிரியையினல் பகவானுடைய ஸான்னித்தியத்தை ஸ்தாபித்துக்கொள்கின்ருர். எப்படி உண்மையில் தான் நிர்குணப்பிரஹ்மமாயிருந்தாலும் வியஷ்டி-சரீரப்பிராண- புத்தியாதிகளால் தனக்கு ஜீவத்வம் ஏற்பட்டிருக்கின்றதோ, அப்படி பகவானுக்கும் ஸமஷ்டி-சரீரப்பிராண-புத்தியாதிகளினல் ஸகுணத்வம் ஏற்பட்டிருப்பதான விபரத்தையும் பிராணப்பிரதிஷ்டாதி காரியங்களினல் வியக்தப்படுத்திக்கொள்கின்ருர். எவ்விதம் ஒரு கிருஹஸ்தர் தன் சொந்த நன்மையை உத்தேசித்து தன்னுடைய இருப்பிடத்திற்கு தன் தேச-மஹாராஜாவையே வரும்படி செய்துகொண்டு விடக்கூடுமானல், அவர் வந்தவுடன் பல உபசாரங்களை, அம் மஹாராஜாவுக்குத் தேவையில்லாமலிருந்தாலும், மரியாதையின் பொருட்டு அந்த கிருஹஸ்தர் செய்து வருவாரோ, அவ்விதமாகவே தன் முன்னிலையில் ஸாக்ஷாத் ஸகுண-பிரஹ்மமாகிய பகவானுடைய ஸான்னித்தியம் லபிதது விட்டதாக நிச்சயம் படுத்திக்கொண்டு உபாஸகர், பகவானுக்குத் தேவையில்லையென்பதைத் தெரிந்து கொண்டவரானலும், மரியாதைக்காகவும் பின் சொல்லப்போகிற காரணத்திற்காகவும் ஆஸனம், அர்க்கியம், பாத்யம், ஸ்நபனம், வஸ்த்திரம், சந்தனம், புஷ்பம், அலங்காரம், அர்ச்சனம், தூபம், தீபம், நைவேத்தியம், கற்பூர-ஹாரத்தி, புஷ்பாஞ்ஜலி, ஸ்தோத்திரம் முதலானவைகளால் உபசரிக்கின்ருர்.

இவ்வித உபசாரங்களினல் உபாஸகர் சிறுகச்சிறுக மமதா- பரித்தியாகத்தை (தனது என்பதை விட்டொழித்தலை) செய்துவிடுகின்ருர். தனக்குப் பிரியமும் சொந்தமுமாயுள்ள ஸுக-விஷயங்களையும் பதார்த்தங்களையும் பகவானுக்கு ஸமர்ப்பணஞ் செய்து விட்டும், அவைகளிலும் அவைகளைப் போலொத்த மற்ற திருச்யங்களிலும் தனது என்ற புத்தியைப் போக்கடித்து விட்டும், பிறகு உபாஸகருக்கு சரீர-பிராண-புத்தியாதிகளிலிருந்த அஹந்தா (தான்) என்பதும் ஆத்ம-

நிவேதனத்தினால் கடைசியில் அவரால் பரித்தியாகஞ் செய்யப் படுகின்றது. இவ்விருவகை தியாகந்தான் ஆராதனையின் முக்கிய கருத்து. இவ்விருவிதத்தியாகம் ஸம்பூர்ணமாய்ச் செய்யப்பட்டுவிட்டால, ஜீவதவமே, அதாவது, சிதாபாஸத்வமே மறைந்து போய்விடும். இந்த ஸம்பூர்ணததியாகம் மேலான நிவிருத்தி-தர்மங்களாகிய ஜ்ஞானப்பியாஸங்களினால் தான் ஸித்திக்கக் கூடியதானலும், விக்கிரஹாராதனத்தினால் இதை வெகு தூரம் ஸாதித்துக்கொள்ளலாம். இந்த ஆராதனத்தில் ஒவ்வொரு நாளும் கொஞ்சங்கொஞ்சமாக திருச்ய-பதார்த்தங் களில் "தனது" என்றபுத்தியும், சரீராதிகளில் "தான்" என்ற புத்தியும் குறைந்து கொண்டேவருவதற்குள்ள அப்பியா ஸங்களை மனஸினலும், வாக்கினலும் சரீரத்தினலும் செய்து வருவதற்கு அவகாசமிருந்து கொண்டிருக்கிறது. இவ்வித அப்பியாஸங்களினால் எவ்வளவு சீககிரத்தில தன் மேலான உத்தேசம் பின்-ஜ்ஞானப்பியாஸத்தை முன்னிட்டு நிறைவேறக் கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஸாமான்ய மனிதனுக்கு தியானத்தினல் மாத்திரம் அவ்வுத்தேசம் ஜ்ஞானப்பியாஸத் தின் பேரில்கூட கைகூடமாட்டாது.

விக்கிரஹத்திலுள்ள பிரஹ்மப் பொருளை நேராக ஸாக்ஷாத் கரிப்பதே விககிரஹாராதனத்தின் முடிவான உத்தேசமென்று முன் சொல்லப்பட்டது. இப்படி ஸாக்ஷாத்கரிப்பதற்கு விரோதி களாயிருப்பது தன்னுடைய ஜீவத்வமும் விக்கிரஹம் போலொத்த ஸகல திருச்யத்தின் ரூபவத்துவமுந்தான். ஜீவத்வம் என்பது அஹந்தா (நான்)–மமதா (எனது)–ரூபமாக விளங்குகின்றது. சரீராதிகளில "நான்" என்ற புத்தியும் மற்றவைகளில் "அன்யம்" என்ற புத்தியும் இம்மற்றவை களுக்குள் சிலவைகளில் "எனது" என்ற புத்தியும் இருந்து கொண்டிருக்கும் வரையில் ஜீவத்வம் போகாது. மேற்கண்ட பூஜாகிரமத்தில் பதார்த்தத்யாக-ரூபமான உபசாரங்களால் "எனது" என்ற புத்தி நாளுக்குநாள் குறைந்து கொண்டே

வரும்; ஆத்ம-நிவேதனத்தினால் "நான்" என்ற புத்தியும் மலினப்பட்டு விடும். "நான்" என்ற புத்தியிருக்கும் வரையில் தான் "அன்யம்" என்பதும்கூடவே யிருந்து வரும்; "நான்" என்பது மலினப்பட்டால் "அன்யம்" என்ற புத்தியும் குறைந்துவிடும். இவ்வித அப்பியாஸங்களுடன்கூட, விக்கிரஹத்தில் ஸ்தூல-வஸ்து-புத்தியை வைக்காமல் அதையே பரமாத்மாவென்று எண்ணி பூஜையைச் செய்து வந்தால் விக்கிரஹத்தின் ரூபவத்துவமும் பார்வையிலிருந்து மறைந்து போகும். எப்படி முன் சொல்லிய உதாஹரணத்தில் தாஸன் யஜமானனுடைய கண், பாதம் முதலான சரீர-அவயவங்களைப் பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தாலும், பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாலும், தன்-பார்வைக்கு விஷயம் அந்த அவயவங்கள் தானென்ற ஞாபகமேயில்லாமல், தன்-சொற்களை கிரஹிக்கின்ற அறிவு-ஸ்வரூபியாயிருக்கின்ற யஜமானனே தன்னால் பார்க்கப்பட்டவரென்று உறுதி யேற்பட்டுவிடுகின்றதோ அப்படியே காலக்கிரமத்தில் உபாஸகருக்கும் விக்கிரஹ-ரூபத்தின் பார்வையே யில்லாமல் போய் ஸாக்ஷாத் பரமாத்மாவே தன்-அனுபூதி-விஷயமாகிவிட்டதாக உறுதி யேற்பட்டுவிடும். இந்தப்பிரகாரம், மேற்குறிப்பிட்ட விரோதிகளான தன் ஜீவத்வமும் விக்ரஹத்தின் ரூபவத்துவமும் நாசமடைந்து விக்கிரஹாராதனத்தின் முடிவான உத்தேசமாகிய பிரஹ்ம-ஸாக்ஷாத்காரம் ஸித்தித்துவிடக்கூடும்.

உலகத்தில் விக்கிரஹாராதனத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ளாமலே வெகு ஜனங்கள் பூஜை செய்து வந்து ஸித்தியைப் பெறாமலிருக்கிறார்களென்ற காரணத்தினால் விக்கிரஹாராதனத்தையே உபயோகமில்லை யென்று சொல்லி விடக்கூடாது. இவ்விதமாகவே, தியானக்கிரமங்களையும் அவைகளின் உத்தேசங்களையும் அறிந்துகொள்ளாமலே வெகு பெயர்கள் நெடுநாள் தியானித்துவந்தும் யாதொரு பயனையும் காணாமலிருக்கிறார்களே யென்றெண்ணி தியானமே

பிரயோஜனமில்லை யென்று சொல்லிவிடுவதும் நியாயமாகாது. விக்கிரஹாராதனத்தின் கிரமங்களையும் தத்துவங்களையும் நன்றாக விசாரித்துத் தெரிந்துகொண்டு அதைச் செய்பவர்களுக்கு அதன் மேலான பலன் இன்னதென்று வெளியாகாமற் போகாது. அனுத்மத்தியாகமும் ஆத்ம-நிவேதனமுமே அதில் முக்கிய காரியங்கள். ஸகல காரிய-கரணங்களுடன் கூடிய தன்னையே பகவானுக்கு அர்ப்பணஞ் செய்துவிடுவது ஆத்ம-நிவேதனம். இதைத்தான் வந்தன-நமஸ்காரங்கள் குறிப்பிடுகின்றன. அனுத்மத்தியாகத்திலும் ஆத்ம-நிவேதனத்திலும் வியஷ்டி-ஜீவத்தன்மை நசித்துப்போய்விட்டால், உபாஸகரிடத்தில் பாக்கியிருப்பது அதிஷ்டான-பிரஹ்மந்தான். வியஷ்டியை அபேக்ஷித்து ஸமஷ்டி என்ற வியவஹாரம் ஏற்பட்டிருப்பதால், உபாஸகரின் வியஷ்டித்வம் மறையும் காலத்திலேயே அவர் ஸம்பந்தப்பட்டமட்டில் ஸமஷ்டித்வமும் ஸகுணத்வமும் பகவானை விட்டு நீங்கி அவ்வதிஷ்டான-பிரஹ்மமாகவே பகவானும் மிஞ்சி நின்றுவிடுகின்றார். உபாஸகர், உபாஸ்யர் என்ற பேதமே மறைந்துபோய், அகண்ட-ஸச்சிதானந்த-பிரஹ்மமே நிரந்தரமாக விளங்குகின்றது.

3. ஆராதனையில் பேதம்

மேற்கண்ட விக்கிரஹாராதனக்கிரமம் உயர்ந்த ஜ்ஞானாப்பியாஸியான பரோக்ஷாத்ம-ஜ்ஞானியால் அனுஸரிக்கப்படுகின்றது. இவ்வித பரோக்ஷ-ஜ்ஞானிக்கு விவேக-வைராக்கியாதிகள் ஏற்கனவே பலப்பட்டிருக்கக்கூடியதாலும், மமதா (தனது என்ற) பாவனையும் மிகவும் குறைவு பட்டிருக்குமாகையாலும், பூஜையில் உபசாரக்கிரியைகளை விஸ்தாரப்படுத்தாமல் சுருக்கமாகச் செய்து முடித்துவிட்டு, தன்னிடத்தில் விசேஷமாய் குறைவுபடாமலிருந்து வரக்கூடிய அஹங்தையின் (தான் என்பதின்) பரித்தியாகத்தின் பொருட்டு ஆத்ம-

நிவேதனத்திலும் அதன் ஸம்பந்தமான தியானப் பிரார்த்தனைதி களிலும் இவர் அதிக காலத்தைச் செலவழிப்பார். ஸாதாரண மாய் மமதையின் ஒழிவின் பேரில்தான் அஹங்கையின் ஒழிவை ஸாத்தியப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருக்கிறபடி யாலும், வைராக்கிய முண்டாகாமலும் பரோக்ஷாத்ம-ஜ்ஞானம் ஏற்படாமலுமிருக்கின்ற உபாஸகருக்கு இந்திரிய-விஷயத் தியாகத்தில் அப்பியாஸஞ் செய்வதே முக்கியமானதாலும் இவர் ஆராதனத்தில் உபசார-காரியங்களை விஸ்தாரப்படுத்திக் கொண்டும், பகவானை உத்தேசித்துத் தியஜிதது வரக்கூடிய பதார்த்தங்களை அதிகப்படுத்திக் கொண்டுமிருந்து, கடைசியில் செய்யவேண்டிய ஆத்ம-நிவேதன-காரியத்தை ஒரு விதமாக பாவனையாய் நடத்திவருவார். ஸ்வபாவத்தில் மமதை மிகவும் அதிகப்பட்டிருக்கக் கூடியவருடைய பூஜையில் ஸாமான்களின் சேர்க்கை-ஸம்பந்தமாகவும் மற்ற விதங்களிலும் ஆடம்பரம் விசேஷமாய் காணப்படும். அவருடைய ஸ்திதியில் இதுவும் அவசியந்தானென்றே சொல்லவேண்டும்.

அன்றியும், உபாஸகர்களுக்குள் பரஸ்பரம் காணப் படுகின்ற மற்றுமுள்ள குண-தாரதம்மியங்களுக்குத் தக்கபடி அவர்களுடைய உபாஸ்ய-மூர்த்திகளும் பேதப்படக்கூடியவை. எப்படி ஸகல ஜீவர்களிடத்திலும் ஆத்மா என்ற பிரஹ்மம் ஒன்றேயானாலும் நாநாவித-குணக்கலப்புகளினால் ஜீவர்கள் ஒருவருக்கொருவர் பின்னப்பட்ட ஸ்வபாவங்களுடன் கூடி இருக்கின்றார்களோ, அப்படியே ஒவ்வொரு உபாஸகருக்கும் தன்னுடைய உபாஸ்ய-வஸ்து குணாதீதமான பரமாத்மா என்ற ப்ரஹ்மந்தானென்று பொதுவாய்த் தெரிந்திருந்தபோதி லும், தன்னுடைய மனதைக் கவரக்கூடிய குண-விசேஷங் களுடன் கூடிய பரமாத்ம-மூர்த்தியில்தான் மனப்பற்றுதலும் பக்தியும் அவருக்கு உண்டாகக்கூடியதாயிருக்கின்றது. ஆந்தரமான குணங்களில் மாத்திரமில்லாமல், வெளி-வேஷ-ஸம்பந்தத்திலும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே ஒவ்வொரு

வித-வேஷத்தில்தான் திருப்தியும் மரியாதையும் தானுகவே உண்டாகின்றது. தன்னுடைய மனதுக்குப் பிடித்தமில்லாத குணமாவது ரூபமாவது காணப்படுகின்ற இடத்தில் மதிப்பும் மரியாதையும் மனதில் உதிக்கிறதேயில்லே. இது மனித-ஸாமான்யத்திற்கே இயற்கையாயுள்ளது. அபரோக்ஷ-ஸாக்ஷாத்காரமில்லாமல் அஜ்ஞானி-ஸ்திதியிலேயே உபாஸகர்களெல்லோரும் இருந்து வருவதால், அவரவர்களின் அஜ்ஞானி-நிலைமைக்கு அனுகுணமாக அவர்கள் தனித் தனியான உபாஸ்ய-மூர்த்திகளை ஆசிரயித்தும், உபாஸித்தும் மேற்செல்ல வேண்டியதாயிருக்கின்றது. உண்மையில் பரமாத்மா நிர்குணராகவும் அரூபியாகவுமிருப்பதினலேயே, அந்தந்த உபாஸகருக்குத் தகுந்த விதங்களில் குணரோபணத்தையும் ரூப-கல்பனத்தையும் பகவானிடத்தில் செய்வது ஸாத்தியப்பட்டிருக்கின்றது.

4 அசிரத்தைக்குக் காரணம்

இப்படிக் கன்னியில், பகவானே வாஸ்தவத்தில் குணவானுகவும் ரூபவானுகவும் இருப்பாரேயானுல், அவருடைய சொந்த குண-ரூபங்களுக்கு மாறுதலாயிருக்கிற குண-ரூபங்களை அவரிடம் ஆரோபிப்பது உசிதமே யாகாது. அவருடைய வாஸ்தவமாயுள்ள குண-ரூபங்களுக்கு ஈடுபடக்கூடிய ஸ்வபாவத்துடன் சேர்ந்தவர்கள் தான் அவரிடம் உண்மையான பக்தியைச் செலுத்தக்கூடும். மற்றவர்களுக்கு பக்தி யுண்டாகக்கூடியதேயில்லே. இதனுலேயே, கடவுளை குறிப்பிட்ட குண-ரூபங்களுடன் கூடியவராகவே ஏற்ப்படுத்திக் கொண்டிருக்கிற மதாந்தரங்களிலுள்ள ஜனங்களில் அதிகப் பெயர்கள் (Majority) அக்கடவுள் பேரில் தங்களுக்கு மனப்பற்றுதலேயில்லாமலிருந்து வருகின்றுர்கள். உதாஹரணத்தை உத்தேசித்து மாத்திரம் கிருஸ்துவ-மதத்தை எடுத்துக் கொள்வோம். அம்மதத்தில் கடவுளுக்குள்ளதாகச் சொல்லப்-

பட்டிருக்கின்ற அரிதான நற்குண-ஸ்வபாவங்களினல் மத்திய-ஸ்தானத்திலுள்ள வெகு பெயர்களுக்கு அக்கடவுளிடம் பக்தியுண்டாகக்கூடும். அவ்வித மேலான குண-ஸ்வபாவங்களின் அருமையைத் தெரிந்து கொள்ளக் கூடாத தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களின் மனதுகளைக் கவர்ந்து வசப்படுத்தக் கூடியதான மூர்த்திகளே அம்மதத்தில் இல்லாததினுல் அந்த ஸ்திதியிலுள்ளவர்கள் பேருக்கு மாத்திரம் தங்களை கிருஸ்துவர்களென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அம்மதம் உபயோகப் படாமலேயிருந்து வருகின்றது. மத்தியம-ஸ்திதியிலுள்ளவர்களுக்குள்ளும் கொஞ்சம் ஆலோசனு-பலமுள்ளவர்கள் அக்கடவுள் மலையில் (on the Mount) தன்னுடைய ரூபத்திலேயே ஆவிர்ப்டவித்து வெளிவிட்டுச் சொல்லியிருக்கின்ற சில வார்த்தைகளை கவனிக்கும் போது அக்கடவுள் அஸூயை (Jealousy) உள்ளவராகவே காணப்படுகிறாரே என்றெண்ணி, அஸூயையுடன் கூடியவர் எப்படி கடவுளாவரென்று மலைத்து அவரிடம் பக்தி நிலைக்காமலிருந்து வருகின்றார்கள். வேறு சில கிருஸ்துவர்கள் "ஸகுண-ஸ்வரூபியான கடவுள் ஸாமான்யமாய் யத்தினஞ் செய்பவரைப் போல் ஆறு நாள் சிரமப்பட்டு வேலையைச் செய்து இப்பூலோகத்தை 6000 வருஷங்களுக்கு முன்பாக ஸ்ருஷ்டித்தார், ஏழாவது நாளில் சிரமபரிகாரஞ் செய்துகொண்டார்" என்ற கிருஸ்துவ-மதக்கொள்கையை ஒப்புக்கொள்ள முடியாமலிருக்கின்றார்கள். பூமி-தத்துவ-சோதகர்களாயிருக்கிற (Geologists) கிருஸ்துவர்கள் மேற்குறிப்பிட்ட ஸ்ருஷ்டி-காலத்தைப் பிசகென்றும் இப்பூலோகம் உண்டாகி வெகு கோடி வருஷங்களாயிருக்கவேண்டுமென்றும் உறுதியாய்ச் சொல்கின்றார்கள். மற்றும் சில தத்துவ-பரிசோதனையில் ஆவலுள்ள புத்திக்கூர்மையுடன் கூடியவர்கள் குண ரூபங்களுடன் சேர்ந்திருக்கிற கடவுளிடம் (Personal God) உண்மையில் கடவுள்-தன்மையே பூர்ணமாயிருக்கமுடியாதே என்ற சங்கையின் பேரில், கிருஸ்தவ-மதம் ஆலோசனையேயில்லாத கீழான அதிகாரிகளுக்குத்தான்

சரியென்றும், அது தத்துவ-சாஸ்திரத்திற்கு விரோதப்படுவதால் உண்மையாயிருக்கக் கூடியதில்லையென்றும் அந்தரங்கத்தில் தீர்மானித்துக் கொண்டும், ஜனங்களிடம் பழங்கிவருவதற்காக மாத்திரம் (as a mere social matter) தங்களை கிருஸ்துவர்களென்று சொல்லிக்கொண்டுமிருக்கின்றார்கள். இவ்விதமாக கிருஸ்துவ-மதம் கீழ்-ஸ்திதிகளிலுள்ளவர்களுக்கு உபயோகப்படாமலும் (as too high), மத்தியம-ஸ்திதிகளிலுள்ளவர்களிலும் அனேகர்களுக்கு திருப்திப்படாமலும் (as unsatisfactory), மேலான ஸ்திதியிலுள்ளவர்களுக்கு கீழ்ப்பட்டதாகவும் (as too low), உண்மையில்லாமலும் (as untrue), இருந்துவருவதற்கு முக்கிய காரணம் அம்மதத்தில் குறிப்பிடப்பட்ட கடவுள் ஸ்வரூபத்தில் ஸகுணராகவே யிருப்பதும், நாநாவித-ஜீவர்களுககு ஒரேவித உபாஸ்யத்தை (Ideal for devotion) கொடுத்திருப்பதுமே தவிர வேறல்ல.

5. ரூபபேதங்கள்

உபாஸகர்களின் பரஸ்பர-பேதங்களினால் பரமாத்மாவிடத்திலும் நாநாவித-குண-ரூப-கல்பனம் அவசியமென்று ஏற்பட்டபோதிலும், இவ்வித குண-ரூப-கல்பனத்தைச் செய்யவே வெகு ஜனங்களுக்கு யோக்கியதையிருக்கக் கூடியதில்லை. மனது வசப்படாமல் இந்திரிய-விஷய-போகங்களைத்தேடி அலைந்துகொண்டிருக்கும்போது, பரமாத்மாவின் நற்குணகணங்களையும் அவைகளுக்கு ஒற்றுமையாயிருக்கக்கூடிய ரூபத்தையும் பாவனை செய்வதற்கும், பாவனா-பலத்தின் பேரில் ஸ்தூலமாய் கற்பிக்கப்படவேண்டிய விக்கிரஹத்தை உண்டாக்குவதற்கும் பெரும்பாலும் ஜனங்கள் சக்தியற்றவர்களாகவுமிருக்கின்றார்கள். தவிரவும், இந்தப்படி ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் புதிதாகவும் அவ்வித பாவனையைச் செய்வது அவசியமுமில்லை. ஸகலவித-மனித-ஸ்வபாவங்களுக்கும் தக்கவிதங்களில் பரமாத்மாவின் குண-பாவனா-ரூப--

பேதங்கள் பிரத்யேகமாய் சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் தனக்குத் திருப்திகரமான எதையாவது ஒன்றை அவலம்பித்துக்கொண்டும் அதற்குரிய ஸ்தூல-விக்கிரஹத்தை ஸம்பாதித்துக்கொண்டும் அல்லது ஏற்படுத்திக்கொண்டும் உபாஸனத்தைச் செய்து வருவதே மனிதன் செய்யவேண்டிய காரியம். பேரானந்த-ஸமுத்திரக்கரையில், அவ்வானந்தாமிருதத்தை நேரில் கையிலெடுத்தோ அல்லது அதிலேயே ஸம்பூர்ணமாய் பிரவேசித்தோ அனுபவிக்கக்கூடியவர்களான ஸாமான்ய-ஜ்ஞானிகளையும் விசேஷ-ஜ்ஞானிகளான ஜீவன் முக்தர்களையும் தவிர மற்ற எல்லோரும் அதை எடுத்துப் பானஞ் செய்வதற்காகவே, தயாராகவும் தினுசு தினுசாகவும் வைக்கப்பட்டிருக்கின்ற ஏராளமான திவ்ய-ஸ்வர்ண-பாத்திரங்களில் ஒன்றைக் கைக்கொண்டு பேரானந்தத்தை உடனே கிரஹித்து அனுபவிப்பதைவிட்டு மணலைப் பிடித்து தனிப்பாத்திரத்தைத் தானே உண்டாக்கிவிடுவதாக வீண் யத்தினத்தைச் செய்து காலத்தை வியர்த்தப்படுத்திக்கொண்டும், அமிருத-பானத்தைச் செய்யவே முடியாத ஸ்திதியில் இருந்துகொண்டும் இருப்பவர் புத்தியுள்ளவராக மாட்டார்.

குணங்களின் முவ்வகை-பேதங்களை யனுஸரித்து மூன்று பிரதான ஸகுணப் பிரஹ்ம-மூர்த்தி விபவங்களும், முக்குணங்களுக்கும் ஐந்து ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் மனது ஆக இந்த பதினொன்றுக்கும் பரஸ்பரம் பலவிதமாக ஏற்படக்கூடிய ஸம்பந்த வேறுபாடுகளின் காரணத்தினால் மேற்கண்ட மும்மூர்த்திகளின் அம்சங்களாகவே தனித்தனியே விளங்குகின்ற (11 ருத்திரர்கள் + 12 ஆதித்தியர்கள் + 8 வஸுக்கள் + பிரஜாபதி + இந்திரன் = 33) முப்பத்துமூன்று முக்கிய தேவதா-மூர்த்திகளும் இருப்பதாக சாஸ்திரததில் துலங்குகின்றது. இவ்வித ஒவ்வொரு தேவதையுடையவும் அம்சபூதர்களாக கணக்கிலடங்காத தேவர்கள் சிற்சில

அவாந்தர-பேதங்களுடன் இருந்துவருவதாகவும், இக்காரணத்தினால் மொத்தம் முப்பத்துமுக்கோடி தேவதா-மூர்த்திகளுண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு "கோடி" என்றால் "அனந்தம்" என்றுதான் கருத்து. மேற்கண்ட பிரதான ஸகுண-மூர்த்திகளுக்கும் அம்சதேவதா-மூர்த்திகளுக்கும் தனித்தனியே சக்தி-ரூபங்களும் விசேஷ ஸ்திரீ-வியக்திகளில் ஏற்பட்டிருக்கின்ற விஷயமும் பிரஸித்தமே. இதுவுந் தவிர, லோக-திக்பாலர்கள் முதலான வேறு சில பிரதான தேவதா-மூர்த்திகளும், பரமாத்மாவின் விசேஷ அம்சபூதர்களாக ஆவிர்ப்பவித்திருக்கின்ற கணபதி, ஸுப்ரஹ்மண்யர் முதலான ஸர்வோத்கிருஷ்ட மூர்த்திகளும், ஸங்கர்ஷணாதி திவ்யதம-மூர்த்திகளும், பலவித அவதார-ரூபங்களும் அவரவர்களுக்குள்ள சக்தி-ரூபங்களும் இருந்துவருகின்ற விபரமும் சாஸ்திர-கிரந்தங்கள் மூலமாய் எல்லோருக்கும் தெரியவரும். இவ்விதமாக சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட லக்ஷணங்களையுடைய அனந்தமான ஸகுண-தேவதா-மூர்த்தி-சக்திகளில், முன் சொல்லிபபடி, எது எந்த உபாஸகருக்குப் பிடித்தமுள்ளதாயிருக்குமோ அதையே அவர் மனதினால் தியானித்துக்கொண்டு அதற்குரிய ஸ்தூல-விக்கிரஹத்தை ஆராதித்துவரவேண்டும். தனக்கு இன்னது தான் பிடித்தமென்றுகூடத் தெரியக்கூடாத ஸ்திதியிலிருப்பவர் விபரந்தெரிந்த ஒரு தார்மிகப் பெரியோரை குருவாக ஆசிரயித்து அவர் ஏற்படுத்துகிற விக்கிரஹத்தைக் கைக்கொண்டு அவர் குறிப்பிடுகிற மார்க்கததில் உபாஸனத்தைச் செய்துவரவேண்டும். தன்னுடைய சொந்த மனப்பிடித்தத்தின் பேரில் ஸகுண-மூர்த்தியைக் கைக்கொள்பவரும் சரியான குருவை அடைந்து, அவரிடம் தன்னுடைய மனோ-பாவங்களை வெளிப்படுத்தித் தன்னுடைய மனப்பிடித்தம் கிரமமான மார்க்கத்திலேயே ஏற்பட்டிருக்கிறதென்பதையும் உறுதிப்படுத்திக்கொண்டு, அந்த குரு-மூலமாக விக்கிரஹாராதனத்தைத் தொடங்கி நடத்திவருவதே உத்தமமாகும்.

6. ரூபங்கள் வாஸ்தவமே

இந்தப்படி ஒவ்வொரு மனிதனும், அவனுடைய ஸ்திதி தாழ்ந்ததானாலும் உயர்ந்ததானாலும், குண-ரூபங்கள் மூலமாய் பரமாத்மாவிடம் பக்தியைச் செலுத்திக் கரையேறும்பொருட்டு, தார்மிக-ஹிந்த-மதத்தில் நானாவித-குண-ரூபங்கள் பகவானிடம் மேற்கண்டபடி ஆரோபிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வித ஆரோபணங்களைச் செய்தது யாரென்று ஒரு கேள்வி ஏற்படலாம். இவை ஜீவர்களாலேயே செய்யப்பட்ட ஆரோபணங்களல்ல, ஜீவர்களை நிமித்தீகரித்து பரமாத்மாவின் ஸங்கல்பத்தினால் ஏற்பட்ட ஆரோபணங்கள். இவை பெரும்பாலும் பிரபஞ்ச-அத்தியாரோபக்கிரமத்தில் (ஸ்ருஷ்டியில்) ஏற்பட்டவை. பிரபஞ்ச-ஸ்ருஷ்டியே ஜீவர்களை உத்தேசித்தே நடந்துவருவதுபோல், பரமாத்மாவிடத்தில் பலவித-குண-ரூப-ஆரோபணங்களும் ஜீவர்களுக்காகவே செய்யப்பட்டு வருகின்றன. அதாவது, ஜீவர்களுடைய நன்மைக்காகவே பகவானுடைய ஸங்கல்பத்தினால் அவரிடத்திலேயே அனேகவித-குண-ரூபாரோபணம் பகவன்மாயா-காரியமாக நடக்கின்றது. "ஆரோபணம்" என்று சொல்வதினாலேயே உண்மையல்லவென்று தூவனிக்கின்றது. பிரபஞ்ச-ஸ்ருஷ்டியே வாஸ்தவமில்லையென்பதே ஸத்தியம். ஆனால், இது யாருக்கு வாஸ்தவமில்லையென்பதை கவனிக்கவேண்டும். ஸகல—திருச்ய-விலயம் அனுபூதிக்கு வந்திருக்கின்ற ஜ்ஞானிக்கு வாஸ்தவமில்லை. அஜ்ஞானிக்கு வாஸ்தவந்தான் ஜ்ஞானியின் பார்வையில் ஜகத்துப் பூராவும் மித்யைதான். ஸம்ஸாரி—ஸ்தானத்திலிருக்கின்ற அஜ்ஞானிக்கு தன் சரீரம், சுற்றத்தார்கள், ஸம்ஸார-ஸுக-துக்கங்கள், வீடு, சொத்துக்கள், இவ்வுலகம் எல்லாம் உண்மையாயிருப்பது எப்படியோ, அப்படியே அவன் ஸம்பந்தப்பட்டமட்டில் ஸ்வர்க்கம், நரகம், நானாவித—தேவதா-மூர்த்திகள், ஸகலமும் வாஸ்தவந்தானேயொழிய பொய்யல்ல. எவருக்கு இவ்வுலகமும் தான் தனி ஜீவனென்பதும்

ஜ்ஞானத்தினல் மறைவடைந்துவிடுமோ. அவருக்குத்தான் மற்ற உலகங்களுமில்லை, தேவதைகளுமில்லை.

அத்யாயம் 21

த்ரிமூர்த்திகள்

1 ஸகுண பிரஹ்ம ஆவிர்பாவம்

இப்பால், முன் குறிப்பிட்ட ஜகத்-ஸ்ருஷ்டிக்கிரமத்தில் எவ்விதமாக பரமாத்மாவிடத்தில் குண-ரூப-கல்பனங்கள் ஏற்பட்டனவென்பதை விசாரிப்போம். இவ்விசாரம் வியாவஹாரிக-தசையில்தான் நடக்கக்கூடியது. வியாவஹாரிகத்திற்கு அதீதமான பாரமார்த்திக-தத்துவம் உண்மையில் விசார-விஷயமேயல்ல, அது ஸ்வானுபூதி-விஷயம். கல்பம், பிரளயம் என்ற விஷயங்கள் வியாவஹாரிக-விஷயங்கள்தான். பாரமார்த்திகத்தில் கல்பமாவது, பிரளயமாவது, ஈசுவரரென்ற ஸகுணப்பிரஹ்மமாவது, பரமாத்ம-ஜீவாத்ம-பேதங்களாவது, ஜகத்தாவது, ஸ்ருஷ்டி–ஸ்திதி–ஸம்ஹாரங்களாவது யாதொன்றும் கிடையாது. ஆகையால், நம்முடைய பிரகிருத-விசாரம் வியாவஹாரிகத்தில் பிரளயத்தின் முடிவிலும் கல்பத்தின் ஆரம்பத்திலும் என்ன நடந்திருக்கின்றதென்பதைத் தான் கொஞ்சம் வியக்தப்படுத்தக்கூடியது. பிரளயங்களும் கல்பங்களும் அனுதி-காலமாக மாறி மாறி வந்துகொண்டிருக்கிறபடியால், அவைகளுக்கு முதல் ஆரம்பமாவது அவ்வித ஆரம்பத்திற்குக் காரணமாவது உண்டென்று சொல்வதற்கு இல்லை. பாரமார்த்திக-திருஷ்டியில் பிரளய-கல்பங்களே மேற்கண்டபடி மித்யையாயிருப்பதால் உண்மையில்லாதவைகளுக்கு உண்மையான ஆரம்ப-காலமாவது காரணமாவது இருக்கக்கூடியதே இல்லை. ஜீவர்கள் ஸம்பந்தப்பட்டமட்டில், ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரளயத்திற்கு அல்லது கல்பத்திற்கு ஆதியும்

அந்தமும் உண்டென்று சொல்லக்கூடும். நடப்பு-கல்பத்தின் ஆரம்பத்தில் ஸ்ருஷ்டிக்கிரமம் எப்படியிருந்ததென்று தெரிந்து கொண்டால் ஒவ்வொரு கல்பாரம்பத்திலும் அவ்விதமாகவே அது நடந்துவருவதாக ஊஹித்துக்கொள்ளலாம் பிரளய-காலத்தில் ஈசுவரரைத்தவிர வேறு யாதொன்றும் கிடையாது. அதற்கு முன்னிருந்த கல்பத்திலிருந்தவர்களும் கைவல்ய-முக்தியை அடையாதவர்களுமான ஜீவர்கள் எல்லோரும் ஸுஷுப்தியில் போல் அவரவர்களுடைய காரண-சரீரமாகிய அவித்யையில் லயமாகியும், அக்காரணோபாதியும் மற்றும் ஜகத்துப்பூராவும் ஈசுவர-மாயையில் அடங்கி லயப்பட்டும், இம் மாயையும் ஈசுவரரிடம் அடங்கி ஒடுங்கியும் இருக்கின்ற ஸ்திதி பிரளயமென்று கூறப்படுகின்றது. இவ்வித ஈசுவர-மாயைக்கு அவ்யக்தமென்றும் ஆவரண-சக்தியென்றும் பெயர்களுண்டு.

இம்மாயையில் ஸத்வ-குணம் பிரதானமாயுள்ளது. சுத்தப் பிரஹ்மத்திற்கு அபின்னமாயிருக்கிறதும் அநிர்வாச்யமும் குண-ஸாம்யத்துடன் கூடியதுமான மூலப்பிரகிருதி யென்ற சுத்த-மாயா-சக்தியிடத்தில் ஸத்வ-குணம் தலையெடுத்து அம் மாயா-சக்தியே ஸாத்விக-அவ்யக்த-மாயையாக விளங்குங்கால் அதன் மூலமாய், அதாவது, அதை உபாதியாகக்கொண்டு, பிரகாசிக்கின்ற பிரஹ்ம-சைதன்யத்திற்கு ஈசுவரர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கின்றது. நாம ஸம்பந்தப்பட்டமட்டில், பிரளய-கல்பங்களின் தொடர்ச்சிக்கு ஆதியே இருந்திருப்ப தில்லையாதலால், முதல் முதல் எந்தக் காலத்தில் குண-ஸாம்யத் துடன் கூடிய சுத்த-மாயை ஸத்வ-குணத்துடன் கூடிய அவ்யக்தமாகத் தோன்றிற்றென்பது சொல்லப்படக்கூடியதே யில்லை. பிரளய-கல்பங்களின் தொடர்ச்சி அநாதியாயிருப்பது போல் அவ்யக்த-மாயா-சபளிதரான ஈச்வரரும் அநாதியே. ஜீவர்களெல்லோருக்கும் இவ்வீசுவரர்தான் ஸர்வோத்தமரும் அநாதியுமான ஸகுணப் பிரஹ்மமென்ற பரமாத்மா. இவரே ஸகல ஜகத்துக்கும் அரூபியான ஸமஷ்டி-காரணாத்மா.

பிரளயத்தின் முடிவு-காலத்தில், ஈசுவரரால் அதிஷ்டிதமாயிருக்கிற (ensouled) ஸாத்விக-அவ்யக்த-மாயை யென்ற ஆவரண-சக்தியிலிருந்து **ரஜோகுணம்** தலையெடுத்திருக்கிற **மஹத்** என்று பெயர் கொண்ட **விக்ஷேப-மாயா-சக்தி** உத்பன்னமாகின்றது. இந்த மஹத்தின் மூலமாய் பிரகாசிக்கின்ற பிரஹ்ம-சைதன்யத்திற்கு **ஹிரண்யகர்ப்பர்** என்று பெயர். எல்லையற்ற அந்தகார-ஸமுத்திரம் போலிருக்கின்ற அவ்யக்த-மாயையில் மத்தியில் உதித்திருக்கிற மஹத்-தத்துவத்தின் அபிமானியாகிய இந்த ஹிரண்யகர்ப்பர் **அஸ்பஷ்டமாயும் ஸ்பஷ்டமாயும்** விளங்குகின்ற தேஜோ-ரூபியாயிருந்துகொண்டு வரப்போகிற ஸகல ஜகத்துக்கும் **ஸமஷ்டி-ஸூக்ஷ்மாத்மாவாக** இருந்து வருவார். இந்தப்படி அவ்யக்த-மாயையாகிற-அந்தகார-மத்தியில் உண்டாயிருக்கிற மஹத்-தத்துவத்தில் தோன்றுகின்ற ஹிரண்யகர்ப்பரைத்தான் புராணங்கள் பிரளய-மஹாஸமுத்திரத்தில் ஆல்-இலையில் பள்ளிகொண்டு யோக-நித்திரையிலிருக்கிற சிசு-ரூபியான மஹாவிஷ்ணு வென்று வர்ணிக்கின்றன. இவரே ஸர்வ-ஸூக்ஷ்ம-பாலகர்.

இந்த ஹிரண்யகர்ப்பரால் அதிஷ்டிதமாயிருக்கிற ராஜஸ-மஹத்தென்ற விக்ஷேப-மாயா-சக்தியிலிருந்து தமோ-குணம் தலையெடுத்திருக்கின்ற அஹங்காரம் என்ற பெயருடன் கூடிய ஸ்தூல-மாயா-சக்தி யுண்டாகின்றது. இந்த அஹங்கார-சக்தி மூலமாய் பிரகாசிக்கின்ற பிரஹ்ம-சைதன்யத்திற்கு **விராட்** என்று பெயர். இவருடைய உத்பத்தியைத்தான் மஹா விஷ்ணுவின் நாபி-கமலத்திலிருந்து ஏற்பட்ட உத்பத்தியாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர் **ஸ்பஷ்டமான** ரூபத்துடன் கூடியவர். இவர்தான் ஸகல ஜகத்துக்கும் **ஸமஷ்டி-ஸ்தூலாத்மா.** இவரே ஸர்வ-ஸ்தூல-பாலகர்.

இவ்விதமாக ஒவ்வொரு பிரளயாந்தத்திலும் **ஈசுவரர், ஹிரண்யகர்ப்பர், விராட்** என்பதான மூன்று ஸகுண-பிரஹ்ம-ஸ்வரூபங்கள் முதலில் விளங்குகின்றன. இம்மூன்றும்

ஜகத்தின் ஸமஷ்டியாத்ம-ஸ்வரூபங்கள் இந்தப்படி பிரஹ்மத்திற்கு மூவ்வகையாக ஸகுணத்வம் ஏற்பட்டிருந்தபோதிலும் ஸமஷ்டியாத்ம-ஸ்வரூபிகளான (Universal Beings) ஈசுவராதி மூவர்களும் ஜகத்துக்குள்ளடங்கிய ஜீவர்களுக்கு (Individual Beings) நேராகவே உபாஸன-விஷயமாகக் கூடியவர்களில்லை. உபாஸனாரம்ப-அப்பியாஸ-காலத்தில் உபாஸ்யத்தைக் காட்டிலும் உபாஸகர் அன்னியராகவும் வெளிப்பட்டவராகவும் இருந்துகொண்டே உபாஸ்யத்தை உபாஸன-விஷயமாகச் செய்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் உபாஸகர்களாகிய அல்ப-ஜீவர்களுடைய உபாஸன-ஸௌகர்யத்தின் பொருட்டும் மற்றுமுள்ள ஜகத்-காரியங்களை யுத்தேசித்தும், மேற்கண்ட மூவர்களே, பின்னால் விவரிக்கப்போகிற பிரகாரம், தங்கள் தங்களுடைய அம்சங்களை வியஷ்டி-ரூபங்களுடன் ஏற்படுத்தி ஜீவர்களுக்கு ஸகுணோபாஸன-ஸௌகரியத்தைச் செய்துகொடுத்திருக்கின்றார்கள்.

2. த்ரிமூர்த்திகளும் அவர்கள் சக்திகளும்

இம்மூவர்களிடத்திலிருந்தும் தனித்தனியாக இரண்டு அம்சங்கள், ஒன்று புருஷ-ரூபத்திலும் மற்றொன்று ஸ்திரீ-ரூபத்திலும், வெளிப்பட்டன. ஈசுவரரிடமிருந்து அவருடைய ஸ்வாம்சமாக ருத்திரரும், அவருடைய மாயையின் அம்சமாக ஸரஸ்வதீயும் ஆவிர்ப்பவித்தார்கள். இப்படியே, ஹிரண்ய கர்ப்பரிடமிருந்து ஸ்வாம்சமாக விஷ்ணுவும், மாயாம்சமாக கௌரீயென்ற உமையும் உண்டானார்கள். விராட்டிடமிருந்து ஸ்வாம்சமாக பிரஹ்மாவும், மாயாம்சமாக லக்ஷ்மீயும் வெளிப்பட்டார்கள். இந்தப்படி ஒரே உற்பத்தி-ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறவர்களுக்குள் ஸஹோதரத்வம் இருந்துவருவதும் சாஸ்திர பிரஸித்தமே. அதாவது, ருத்திரரும் ஸரஸ்வதீயும், விஷ்ணுவும் கௌரீயும், பிரஹ்மாவும் லக்ஷ்மீயும் ஸஹோதர-ஸஹோதரிகள். இவர்களுக்குள்ளாக ருத்திரர் ஜகத்-ஸம்ஹார-கர்த்தா விஷ்ணு

பரிபாலன-கர்த்தா, பிரஹ்மா ஸ்ருஷ்டி-கர்த்தா. இப்படியே ஸரஸ்வதீ க்ரியா-சக்தி, கௌரீ ஜ்ஞான-சக்தி, லக்ஷ்மீ இச்சா-சக்தி

ஈசுவரர், முன் குறிப்பிட்டபடி, அரூபியானதாலும், அனுத்ம-திருஷ்டியில் அவருடைய அவ்யக்த-மாயை அந்தகார-ஸமுத்திரத்திற்கு ஒப்பிடப்பட்டிருப்பதாலும், அவரும் அவருடைய அம்ச பூதர்களான ருத்திரரும் ஸரஸ்வதீயும் தமோகுண-ஸம்பந்தமுள்ளவர்களென்றும், அவ்வந்தகார-ஸமுத்திர-மத்தியில் ஸ்பஷ்டாஸ்பஷ்ட-தேஜோரூபியாய் விளங்கினவரும் ஸூக்ஷ்ம-விக்ஞானத்துடன் கூடினவருமான ஹிரண்யகர்ப்பரும் அவருடைய அம்சபூதர்களான விஷ்ணுவும் கௌரீயும் ஸத்வகுண-ஸம்பந்தமுள்ளவர்களென்றும், அஹங்கார-மாயா-சபளிதரான விராட்டும் அவருடைய அம்ச பூதர்களான பிரஹ்மாவும் லக்ஷ்மீயும் ரஜோகுண-ஸம்பந்தமுள்ளவர்களென்றும் எண்ணப்பட்டுவந்திருக்கின்றது. மேலும், கோர-கிருத்யமான ஸம்ஹார-காரியம் ருத்திரரிடத்திலும், ஸர்வ-லோக-ஹிதகரமான பரிபாலன-காரியம் விஷ்ணுவிடத்திலும், ஸ்ருஷ்டி-காரியம் பிரஹ்மாவிடத்திலும் இருந்து வருவதினுலும் இம்மூவர்களின் முறையே தமஸ்-ஸத்வ-ரஜோ-குணங்கள் உறுதியடைந்திருப்பதாகவும் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனுல், இவ்வித எண்ணங்களும் பாவனைகளும் அவ்வளவு சரியல்லவென்பதும், உண்மையில் ருத்திரர் ஸத்வ-குணவான் என்பதும், விஷ்ணு ரஜோ-குணவான் என்பதும், பிரஹ்மா தமோ-குணவான் என்பதும் பின்னுல் துலக்கிக் காட்டப்படும்.

குறிப்பிட்ட மூன்று தேவிகளும் மாயையின் அம்சங்களாகவே உண்டாகியிருப்பதில், அந்தந்த மாயையில் அடங்கியிருந்த குணங்களில் ஒன்றே பிரதான-குணமாக அந்தந்த அம்சங்களில் தனித்தனியே விளங்குகின்றது. ஈசுவரருடைய அவ்யக்த மாயை ஸத்வ-குணப்பிரதானமானுலும் அதில்

அடங்கியிருந்த தமோ—குணம் ஸரஸ்வதியிடம் பிரதானப்பட்டு அவள் கிரியா-சக்தியாகவும், ஹிரண்யகர்பருடைய மஹத் என்ற மாயை ரஜோ-குணப்பிரதானமானாலும் அதில் அடங்கியிருந்த ஸத்வ-குணம் கௌரீயிடம் பிரதானப்பட்டு அவள் ஜ்ஞான-சக்தியாகவும், விராட்டின் அஹங்கார மாயை தமோ-குணப்பிரதானமானாலும் அதிலடங்கியிருந்த ரஜோ-குணம் லக்ஷ்மீயிடம் பிரதானப்பட்டு அவள் இச்சா-சக்தியாகவும், பிரத்தியேகமாய் விளங்குகின்றார்கள். இந்தப்படி மூன்று தேவிகளுடையவும் பிரதான - குணங்கள் அவரவர்களின் ஸஹோதரர்களுடைய மேற்கண்ட உண்மையான குணங்களுக்கு வேறாக மாறிப்போனதற்கு விசேஷகாரணமுண்டு. ஸஹோதர-ஸஹோதரிகளுக்குள் குண - பேதமிருந்தால்தான், அடியில் குறிப்பிடப்போகிறபடி, பதி-பத்னீகளுக்குள் ஸமான-குணவத்துவம் ஏற்படுவது ஸாத்தியப்படக்கூடும். எந்த தேவீ எந்த ஸகுண-மூர்த்திக்கு பத்னீ-ஸ்தானத்தில் சக்தி-ரூபிணியாக அம்மூர்த்தியுடன் சேர்க்கப்படவேண்டியவளோ அந்த மூர்த்தியின் குணமே அவளுக்கிருக்கவேண்டியதவசியமாகையாலும், ஸஹோதர-ஸஹோதரிகளுக்குள்ளாக பதி-பத்னீ—பாவம் ஏற்படக்கூடாமலிருப்பதாலும், தேவிகளின் குணங்கள் மேற்சொல்லியபடி பின்னப்படவேண்டியதாயிற்று. இப்படி பின்னப்படுவது, அதாவது, எந்தமாயையின் அம்சமாக ஒவ்வொரு தேவியும் ஆவிர்பவித்தாளோ அந்த மாயையின் பிரதான-குணத்திற்கு வேறுபட்டுள்ள குணம் அந்த தேவிக்கு இருப்பது ஸாத்தியமாவென்று சற்றும் ஸந்தேஹப்படவேண்டாம். எங்கும் யாரிடத்திலும் முக்குணங்களும் சேர்ந்தேயிருப்பதால் இது ஸாத்தியந்தான். ஸத்வ-குணப்பிரதானையான அவ்யக்த-மாயையிலிருந்து ரஜோ-குணப்பிரதானையான மஹத் என்ற மாயையும், இந்த ரஜோ-குணப்பிரதானையான மஹத்திலிருந்து தமோ - குணப்பிரதானையான அஹங்கார-மாயையும் உண்டாகவில்லையா? இதுபோல்தான் தேவிகளின்

குண-விசேஷங்களும் மாறுதலாக ஏற்பட்டனவென்று அறிந்து கொள்ளவேண்டும். பிரஹ்மாவின் ஸ்ருஷ்டிக்கிரியையில் கிரியா-சக்தியின் அவசியத்தன்மையினால், அவர் ஸரஸ்வதீயுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றார். துவைதாத்மகமான ஜகத்தின் ஸ்திதி காமம் என்ற இச்சையையே மூலமாகக்கொண்டிருக்கிறபடியால், ஜகத்-பரிபாலகரான விஷ்ணு இச்சா-சக்தியான லக்ஷ்மீயுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றார். பின்னால் காட்டப்போகிற பிரகாரம் ஸ்வயம் ஜ்ஞானானந்தமயராகவும் நித்தியாத்மாவாகவுமிருக்கின்ற ருத்திரருடைய அனாத்ம-துவம்ஸ-கிருத்யத்தில் ஜ்ஞான-சக்தியின் ஆனுகூல்யமிருப்பதால், அவர் கௌரீயுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றார். இவ்விதமாய் த்ரி-மூர்த்திகளும் மூன்று தேவீகளும் அடங்கிய மஹா-தம்பதி-த்ரய-ரூபமாக பரம-பொருளே விசேஷமாய் ஸகுணப்பட்டு சோபிக்கின்றது.

3. குணப்பிராதான்யம்

முன் சொல்லியபடி அம்சாம்சி-பாவம் ஏற்பட்டிருப்பதால் ருத்திரருக்கும் ஈசுவரருக்கும், இப்படியே விஷ்ணுவுக்கும் ஹிரண்யகர்ப்பருக்கும், பிரஹ்மாவுக்கும் விராட்டுக்கும் அபேதம் ஸித்திக்கின்றது. ஜீவர்கள் ஈசுவராதி ஸமஷ்டி-ரூபிகளை நேராக உபாஸித்துவர சக்தர்களில்லையாதலால், இவர்களுக்கு ஈசுவராம்சமாகிய ருத்திரரே ஜகத்தின் ஸமஷ்டி-காரணாபிமானியாகவும், ஹிரண்யகர்ப்பாம்சமாகிய விஷ்ணுவே ஸமஷ்டி-ஸூக்ஷ்மாபிமானியாகவும் விராடம்சமாகிய பிரஹ்மாவே ஸமஷ்டி ஸ்தூலாபிமானியாகவும் இருந்துவருகின்றார்கள். வாஸ்தவத்தில் கேவல சைதன்யத்திற்கு குணவத்துவம் கிடையாது. குணவத்துவம் மாயையைச்சேர்ந்தது. மாயா-சக்தி-ஸம்பந்தமாகவே சைதன்யத்தில் குணவத்துவம் ஆரோபிக்கப்படுகின்றது. முன் காட்டிய விபரப்பிரகாரம் எவ்விதம் ஈசுவர-ஹிரண்யகர்ப்ப-விராட் மூவர்களும் பிரஹ்ம-சைதன்யமே தவிர வேறல்லவோ, அவ்விதமே அவர்களுடைய ஸ்வாம்ச

பூதர்களான ருத்திர-விஷ்ணு-பிரஹ்மா மூவர்களும் பிரஹ்ம-சைதன்யமே யல்லாமல் வேறல்ல

ஆயினும், மாயா-ஸம்பந்தத்தினால் அம்சிகளில் ஆரோபிதமான அந்தந்த குணவத்துவம் அம்சங்களிலும் ஸம்பந்தப்பட்டிருக்கின்றது அதாவது, எப்படி ஸாத்விச-அவ்யக்த-மாயா-சபளிதரான ஈசுவரர் ஸத்வ-குண-பூயிஷ்டரோ, அப்படியே அவருடைய ஸ்வாம்சபூதரான ருத்திரரும் ஸத்வ-குண-பூயிஷ்டர் மேலும், ருத்திரர் ஸத்வ-குணப்பிரதானையான கௌரீயுடன் சேர்க்கப்பட்டுமிருக்கின்றார். எவ்விதம் ராஜஸ-மஹத்-என்ற-விக்ஷேப-மாயா-சபளிதரான ஹிரண்யகர்ப்பர் ரஜோ-குண-பூயிஷ்டரோ, அவ்விதமாகவே அவருடைய ஸ்வாம்சபூதரான விஷ்ணுவும் ரஜோ-குண-பூயிஷ்டர். விஷ்ணு ரஜோ-குணப்பிரதானையான லக்ஷ்மியுடன் சேர்க்கப்பட்டுமிருக்கின்றார். எப்படி தாமஸ-அஹங்கார-மாயா-சபளிதரான விராட் தமோ-குண-பூயிஷ்டரோ, அப்படியே அவருடைய ஸ்வாம்சபூதரான பிரஹ்மாவும் தமோ-குண-பூயிஷ்டர். இவர் தமோ-குணப் பிரதானையான ஸரஸ்வதீயுடன் சேர்க்கப்பட்டுமிருக்கின்றார். பைங்களோபநிஷத் முதலான சுருதி-பாகங்களில் விவரித்திருக்கிற பிரகாரம் இதுவே வேதத்தின் முடிவான கொள்கை.

இதற்கு எதிரிடையாக ருத்திரரை தமோ-குணவானென்றும், ஜீவர்களிடம் காணப்படுகின்ற தமோ-குணம் எவ்விதம் தூஷிக்கப்படத் தகுந்ததோ அவ்விதமே த்ரி-மூர்த்திகளில் ஒருவரிடமிருக்கின்ற தமோ-குணமும் தூஷிக்கப்படத் தகுந்ததுதானென்றும் ஜனங்கள் அபிப்பிராயப்படும்படியாக கிரந்தங்களில் எழுதிக் கொண்டு நெடு நாளாக சில சிவ-த்வேஷிகள் தவறான பிரசாரத்தைச் செய்துவந்திருக்கின்றார்கள். முன் குறிப்பிட்டபடி, ஈசுவரர் அரூபியாயிருப்பதும், அவருடைய அவ்யக்த-மாயை அனைத்தும் பார்வையில் அந்தகார-ஸமுத்திரத்திற்கு ஸமானமாகச்

சொல்லப் பட்டிருப்பதும், அவருடைய அம்சபூதரான ருத்திரரின் செய்கை கோர-ரூபமான ஸம்ஹார-கிருத்தியமா யிருப்பதுமான இவையெல்லாம் ஈசுவரரையும் ருத்திரரையும் தமோ-குணவான்களாகச் செய்துவிடக் கூடியவை யல்ல. அரூபியாயிருப்பது பிரஹ்மத்தின் ஒர் லக்ஷணமாகையால், அவ்யக்தமாயிருக்கிற ஸாத்விக-மாயையின் மூலமாய் பிரஹ்மம் ஈசுவரராக விளங்கும் போதும் அதற்கு வியக்தத்தன்மை ஏற்படக்கூடாததுபற்றி ஸ்வயமான அரூபித்தன்மைக்கு ஹானி யுண்டாகாமலிருந்து விடுவதினுல் தமோகுண-ஸம்பந்தத்தை ஈசுவரரிடத்தில் ஆரோபிப்பது அஜ்ஞான-காரியமே தவிர வேறல்ல. அரூபியாயிருப்பது ஈசுவரருக்குப் பெருமையே யல்லாமல் குறைவல்ல. ஈசுவரருக்கும் பிரஹ்மத்திற்குமுள்ள அபேதத்தையே அது குறிப்பிடுகின்றதென்று சொல்ல வேண்டும்.

மேலும், அவ்யக்த-மாயாத்மகமான பிரளய-அந்தகாரத்தை தமோ-குண-இருளைப்போல் பாவித்து, அம்மாயைக்கு அதிபதியும் இவ்வித பிரளய-காலத்திலும் ஸாக்ஷியாயிருந்த வருபவருமான ஈசுவரரை தமோ-குணவானென்று எண்ணியதும் அறியாமையே யாகும். இந்த ஸாக்ஷித்தன்மையும் அவருடைய மேன்மையைத் தான் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு கல்பத்திலும் ஜகத்தின் ஸூக்ஷ்மாம்சங்களும் ஸ்தூலாம்சங்களும் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றனவே யல்லாமல், அதன் காரண-ரூபம் ஸ்ருஷ்டிக்கப்படுவதில்லை. பிரளயத்திலும் காரண-ரூபமாக ஈசுவர-மாயையில் ஜகத்து இருந்து கொண்டுதானிருக்கின்றது. இவ்வித காரண-ரூபம் இருப்பதினுல்தான் பின்-கல்பாரம்பத்தில் ஜகத்தின் ஸூக்ஷ்ம-ஸ்தூலத்தன்மைகளின் உத்பத்தி ஸாத்தியப்படக் கூடியதாயிருக்கின்றது. பிரளயமானுலும் கல்பமானுலும், இருவித ஜகத்தின் அவஸ்தைகளிலும் ஸமஷ்டி-காரணுத்மாவாகிய ஈசுவரர் அவசியம் இருந்தே தீரவேண்டும். இதனுலேயும் அவர் நித்தியரென்று ஸ்திரப்படுத்தப்

படுகின்றது. அவர் ஸர்வ-காரண-மூர்த்தியாதலால், அவரே ஸகல உத்பத்திக்கும் காரணம். அவரிடமே ஸகலமும் பிரதிஷ்டையை அடைந்து நின்றுவருகின்றது. அவரிடமே ஸகலமும் கல்பாந்தத்தில் லயத்தையும் அடைகின்றது.

ஈசுவர - ஹிரண்யகர்ப்ப - விராட் - ஸ்வரூபங்களுக்குள்ளாக ஸூக்ஷ்ம-ஹிரண்யகர்ப்ப ஸ்வரூபம், ஸ்தூல-விராட்-ஸ்வரூபம் இவ்விரண்டும் கல்பத்திற்காக மாத்திரம் வியக்தப்படுகின்றது. காரண-ஈசுவர-ஸ்வரூபமோவெனில் மேற்கண்டபடி கல்பங்களிலும் பிரளயங்களிலும் தொடர்ந்தே ஸர்வாந்தர-ஸர்வ-ஸாக்ஷி - ஸ்வரூபமாக இடைவிடாமலிருந்துவருகின்றது. ஈசுவரர் ஒருவர்தான் எப்போதும் விழிப்புடனிருப்பவர். ஸூக்ஷ்ம - ஸ்தூலாபிமானங்களுடன் கூடியிருக்கின்ற ஹிரண்யகர்ப்ப-விராட்-ஸ்வரூபங்கள் இரண்டுக்கும் உத்பத்தியுமுண்டு, நாசமுமுண்டு. கல்பாரம்பத்திற்கு முன்னால் ஹிரண்யகர்ப்பர் உண்டாவதை ருத்திரர் நேரில் பார்க்கிறாரென்பதாக சுருதி வியக்தமாய்ச் சொல்லுகின்றது. (हिरण्यगर्भं पश्यत जायमानम्) முன் சொல்லியபடி ஹிரண்யகர்ப்பர் யோக-நித்திரையிலிருந்ததையும் ஈசுவரர் ஸாக்ஷியாக இருந்து பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார். விராட்டின் உதபத்தியோ ஸர்வப்பிரஸித்தமே. உத்பத்தியுள்ளவர்களுக்கு நாசமும் உண்டென்பது நிச்சயமே. அன்றியும், ஸ்தூலம் ஸூக்ஷ்மத்திலிருந்து உண்டாவதும் ஸூக்ஷ்மம் காரணத்திலிருந்து உண்டாவதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உண்மையில் ஸர்வ-காரணமாயிருப்பதற்கு வேறு உத்பத்தி-காரணமில்லையென்பதும், இருக்குமென்று சொல்லக்கூடுமானால் அனவஸ்தா-தோஷம் வருமென்பதும் வெகு பெயர்களுக்குத் தெரியவரும். ஆகையால், ஸர்வ-காரணாத்மாவாகிய ஈசுவரருக்குத்தான் உத்பத்தி-நாசங்கள் கிடையாதென்பது ஸித்தம். இந்தப்படி பல விதங்களில் ஈசுவராதி மூவர்களுக்குள்ளும் பரஸ்பர-அவாந்தர-வித்தியாசங்களிருப்பதற்கு அநு

குணமாகவே அவர்களுடைய ஸ்வாம்சபூதர்களான ருத்திரர்-விஷ்ணு-பிரஹ்மா மூவர்களுக்குள்ளும் வித்தியாஸங்களுண்டென்பதும் நிச்சயமே.

4. ஸம்ஹார கிருத்தியம் தமோகுணமல்ல

இனி ருத்திரரின் ஸம்ஹார-கிருத்தியம் தமோ-குண-காரியமாவென்பதை சற்று விசாரிப்போம். அநித்தியமாயிருக்கின்ற அனாத்மாவுக்குத்தான் நாசமுண்டு. ஆத்மாவுக்கு நாசங்கிடையாது. ஆகையால், ருத்திரருடைய ஸம்ஹார-கிருத்தியம் எப்போதும் அனாத்ம-ஸம்பந்தமாகவே நடத்தப்படுகின்றது. அனாத்ம-ஸம்பந்தத்தினால்தான் ஜீவனுக்கு ஜீவத்வமே ஏற்பட்டிருக்கின்றது. ஜீவனுக்கு ஸம்பந்தப்பட்டிருக்கின்ற அனாத்மாவின் துவம்ஸம் அவசியமா இல்லையாவென்று விசாரிக்கையில், அவசியமென்றே வெளியாகின்றது. இவ்வித துவம்ஸம் இருவகை, 1. ஆத்யந்திக-துவம்ஸம், 2. தாத்காலிக-துவம்ஸம். ஆத்யந்திக-துவம்ஸத்தினால் ஜீவனுக்கு கைவல்ய-மோக்ஷமே ஸித்தித்துவிடுகின்றது. தாத்காலிக-துவம்ஸத்தினால் ஒருவித சரீர-ரூப-அனாத்ம-ஸம்பந்தம் விலகிப்போய் மற்றொருவித சரீர-ரூப-அனாத்ம-ஸம்பந்தம் உண்டாகின்றது. ஆகையால், முக்தியின் பொருட்டு ஆத்யந்திகமான அனாத்ம-நாசம் அபேக்ஷிக்கப்படுகின்றது. அனாத்மபூதமான சரீரத்தின் கிரஹணம் பூர்வ-கர்மத்தின் பலன். கர்மங்கள் மூவகை, 1. ஸஞ்சிதம், 2. பிராரப்தம், 3 ஆகாமி அனாதியான முன்-மனித-ஜன்மங்களில் செய்யப்பட்ட நாநாவித நற்செய்கை துர்ச்செய்கைகளின் காரணத்தினால் பெரும் மூட்டையாகச் சேர்ந்து காலத்தில் பலன்களைக் கொடுப்பதற்காக விருத்தியாகிக்கொண்டே வந்திருக்கின்ற கர்ம-வினைகள் ஸஞ்சித-கர்மங்கள். ஒரு ஜன்மம் ஏற்படும்போது, அந்த ஜன்மத்தில் முன்னுள்ள கர்ம-வினைகளுக்குள்ளாக எவைகளின் பலன்களாக ஸுக-துக்கங்கள் அனுபவிக்கப்படவேண்டுமென்று ஈசுவர-ஸங்கல்பமேற்பட்டிருக்கின்றதோ அவைகள்

பிராரப்த-கர்மாக்கள். இவ்வித ஜன்மம் மனித-ஜன்மமாயிருந்தால், இதிலும் புதிதாக ஜீவனால் செய்யப்படுகின்ற செய்கைகள் ஆகாமி-கர்மங்கள். இந்த ஆகாமி-கர்மங்கள்தான் ஸஞ்சித-மூட்டையைப் பெருக்கச்செய்கின்றன. எதுவரையில் ஜீவனுக்கு ஸஞ்சித-கர்மங்கள் பாக்கியிருந்து வருமோ அது வரையில் மறுபடியும் அடிக்கடி அவனுக்கு ஜன்மங்கள் வந்துகொண்டிருக்கும். ஸகல-ஸஞ்சித-நாசமும் ஜன்மமில்லாமையும் ஏற்படவேண்டுமானால், இதற்கு ஒரு உபாயந்தான் உண்டு. அது அபரோக்ஷாத்ம-ஜ்ஞானப்ப்ராப்தியே. அதாவது கர்ம-பந்தங்களுச்குக்கட்டுப்பட்டிருக்கின்ற ஜீவனுடைய விமோசனத்தின் பொருட்டு அவனுக்கு ஸம்பந்தப்பட்ட ஸகல அனாத்மச் சேர்க்கைகளுடையவும ஆத்யந்திக-த்வம்ஸம் ஸாத்தியப்படவேண்டுமானால் அந்த ஜ்ஞானத்தைத் தவிர ஸாதனாந்தரம் கிடையாது. ஜகத்தில் ஜ்ஞானாப்பியாஸிகளாயிருக்கின்ற எல்லா ஜீவர்களுக்கும் ருத்ர-ரூபியான ஈசுவரர்தான் ஜ்ஞான-தாதா (ஜ்ஞானத்தைக்கொடுப்பவர்) ஜ்ஞானாப்பியாஸத்தின் பரிபாக-காலத்தில் ஜீவனுக்கு அவரே ஜ்ஞானத்தைக்கொடுத்து நடப்பு-ஜன்மத்தின் பிராரப்த-முடிவு-காலத்தில் அந்த ஜீவனுடைய அனாத்ம-ஸம்பந்தம் பூராவையும் ஆத்யந்திகமாக த்வம்ஸஞ் செய்துவிடுகின்றார்.

அஜ்ஞானி-விஷயத்திலோவெனில் பிராரப்த-முடிவில் தாத்காலிகமான அனாத்ம-த்வம்ஸத்தைத்தான் செய்கின்றார். இதன் காரணத்தையும் தெரிந்துகொள்ளவேண்டிய தவசியம். ஆத்ம-ஸ்தானந்தான் மோக்ஷ-ஸ்தானம். எதுவரையில் ஒருவருக்குத் தான் கர்த்தா, போக்தா என்ற பாவனைகளுடன் கொஞ்சமாகிலும் தன்னிடத்தில் அனாத்ம-புத்தியிருந்துவருமோ, அது வரையில் மோக்ஷம் எட்டமாட்டாது. ஆத்மப்பிரஹ்மைக்த்வ-ஸாக்ஷாத்காரமானது தோஷங்களுடன் கூடிய அந்தக்கரணங்களையுடையவர்களுக்கும் ஆத்ம-விசாரத்தைக் கிரமப்படி செய்யாதவர்களுக்கும் ஒருக்காலும் கிட்டாது. மலம், விக்ஷேபம்,

ஆவரணம் இம் மூன்று தோஷங்களும் அந்தக்கரணத்தில் இருக்குங்கால், தன்னிடத்தில் ஜீவத்வ-புத்தியே ஸ்திரப் பட்டிருக்குமே அல்லாமல் ஆத்மத்வ-புத்தியிருக்காது. எதுவரையில் அநாத்மபூதங்களான ஸ்தூல—ஸூக்ஷ்ம-சரீரங்களில் "தான்" என்ற எண்ணமும், வெளியிலுள்ள விஷயங்களில் "தனது" என்ற எண்ணமும் ஜீவனிடத்தில் காணப்படுகின்றதோ அதுவரையில் அவன் அநாத்ம-ஸ்தானங்களிலேயே இருந்துகொண்டு ஸம்ஸாரியாக ஸுக-துக்கங்களை அநுபவித்து வருவான். இப்படிப்பட்டவன் அம் மூன்று தோஷங்களையும் நிவர்த்திக்கவேண்டுமென்று இச்சித்தால், ஸம்ஸாரியாகவும் கர்த்தா-போக்தாவாகவுமிருந்துகொண்டே திருப்பித்திருப்பி சாஸ்திரத்தில் குறிப்பிட்ட யத்தினங்களைச் செய்யவேண்டியதாயிருக்கின்றது. இவ்வித யத்தினங்கள் பஹுப்பிரகாரங்களாயிருப்பதுந் தவிர, அந்த ஸுக-துக்க-காரணங்களாகிய பூர்வ-கர்மங்களும் நாநாவாக இருந்து பல ஜன்மங்களைக் கொடுக்கக் கூடியதாயிருப்பதால், அந்த யத்தினங்களை அநேக ஜன்மங்களில் செய்துவரவேண்டியதாகவேயிருக்கின்றது.

5. ஸம்ஹாரத்தின் உத்தேசம்

கர்மங்களின் வைசித்திரியத்தினுல் அவைகளின் பல-போகங்களின் பொருட்டு அடிக்கடி மத்தியில் மனித-ஜன்மமில்லாமலே வேறு கீழ்-திர்யக் முதலான ஜன்மங்களும் அல்லது தேவர் முதலான மேல்-ஜன்மங்களும் ஏற்படக்கூடும். இவ்வித கீழ்-மேல்-ஜன்மங்களில் கர்ம-பல-போகங்கள் மாத்திரமுண்டே யல்லாமல், புதிதாக கர்ம-ரூப யத்தினங்களைச் செய்ய ஜீவனுக்கு அவகாசங்கிடையாது. சித்தத்தை சரியானபடி சிக்ஷித்து வரவேண்டிய யத்தினங்கள் அநேகமாய் மனித-ஜன்மத்தில் தான் நடக்கக் கூடியவை. புவர்-லோகம் முதலுள்ள மேல்-உலகங்களிலும் உபாஸனஞ் செய்வதற்கு அவகாசமுண்டென்பது உண்மையானுலும், அங்கு மல-தோஷத்தைப் போக்கடிக்கக் கூடிய ஸத்-கர்மாநுஷ்டான-ரூப-

யத்தினங்களுக்கு இடமேயில்லை. ஆகையால், மற்ற ஜன்மங்களுக்கு மத்தியில் இப்பூலோகத்தில் எப்போது மனித-ஜன்மம் கிடைக்குமோ அப்போது தான் சித்த-சுத்தியின் பொருட்டும், அப்பால் ஜ்ஞானத்தின் பொருட்டும் முயற்சிகளைச் செய்ய வேண்டியதாயிருக்கின்றது. தவிரவும், ஸர்வ-ஸாக்ஷியான ஈசுவரரே கர்ம-பலனைக் கொடுப்பவராகவுமிருக்கின்றார். ஆதலால், அஜ்ஞானி-ஜீவர்களுக்கு எப்படி சித்த-சிக்ஷணம் மூலமாய் முடிவில் ஜ்ஞானோத்பத்தி-ஸௌகரியம் ஸித்திக்கக் கூடுமோ, எப்படி அவர்களுடைய ஜ்ஞானப்பிரதிபந்தகங்களாயிருக்கிற விசேஷ வைதிக-லௌகிக-காம்ய-கர்மங்களுக்கு அவைகளின் பலானுபவம் மூலமாய் நாசம் ஏற்படக்கூடுமோ, அப்படியே ஜீவர்களுக்கு நாநாவித ஜன்மங்களை அடிக்கடி ஈசுவரர் கொடுக்கின்றார். இப்படி அவர்களுக்குத் தொடர்ந்து பல ஜன்மங்களை ஏற்படுத்த வேண்டுமானால், அடிக்கடி அவர்களுக்கு மரணத்தையும் ஏற்படுத்துவது அவசியமாயிருக்கின்றது. ஆகையால், அடுத்தடுத்து மரணத்தைச் செய்வித்தே ஜ்ஞானோத்பத்தியின் ஸௌகரியத்தை உண்டாக்க வேண்டியதாயிருக்கின்றது; அதாவது, ஈசுவரருடைய ஸம்ஹார-கிருத்தியம் ஜீவர்களின் ஜ்ஞானோத்பத்திக்காகவே ஏற்பட்டிருக்கிறதாகத்தான் சொல்லவேண்டும்.

சரீர-நாசங்களை அடிக்கடி செய்துவைத்து ஸத்-கர்மங்களுக்கும், உபாஸனங்களுக்கும், கர்ம-பலானுபவம் மூலமாய் ஜ்ஞானப்பிரதிபந்தக-கர்மங்கள் நசிப்பதற்குமாக பல விதமாய் ஈசுவரரால் ஜீவர்களுக்கு அவகாசங்கள் கொடுக்கப்படுகின்றன. ஸத்-கர்மங்களினால் சித்த-சுத்தியையும், உபாஸனங்களினால் சித்தத்தின் ஐகாக்ரியத்தையும், ஸுக-துக்க போகங்களினால் ஜ்ஞானப்பிரதிபந்தக – கர்மங்களின் நாசத்தையும் திருச்ய-விஷயங்களில் வெறுப்பு அல்லது வைராக்கியத்தையும் அடைந்து, அதாவது, ஜ்ஞானத்திற்குப் பூர்வாங்க-ஸாதனங்களைப்பெற்று, தீவ்ரமான ஜ்ஞானேச்சையின்பேரில் கிரமப்படி

ஸத்-குருநாதரை ஆசிரயித்து வேதாந்த-தத்துவ-விஷயமான சிரவண-மனனங்களைச் செய்து, நிதித்தியாஸன-ரூபமான யோகத்தில் எப்போதும் யார் இருந்து வருகின்றாரோ அந்த முமுக்ஷுவுக்கு ஈசுவரரே ஸர்வோத்க்ருஷ்டமும் அழியக் கூடாததுமான அபரோக்ஷத்வ-விஜ்ஞானத்தைக்கொடுக்கின்றார். இந்தப்பிரகாரமாக, ஈசுவரருடைய ஸம்ஹார-காரியம் அனர்த்தத்தின் பொருட்டில்லையென்பதும், ஜீவர்களின் மோக்ஷ-ஸாதனரூபமாகவே நடத்தப்பட்டு வருகிறதென்பதும், அதாவது மரணத்தை ஏற்படுத்துவதின் உத்தேசமே சாசுவதமாய் ஜனன-மரணத்திலிருந்து விடுவிப்பதே யென்பதுமே ஸத்தியம்.

ஸ்வயம் ஜ்ஞான-மூர்த்தியாயிருப்பவரும், ஜ்ஞான-நேத்திரமாகிய மூன்றாவது நேத்திரத்துடன் கூடியவரும், ச்ருதி-ஸ்மிருதிப் பிரஸித்தமாய் ஜ்ஞானப்பிரதாதாவாயிருப்பவரும், ஸாக்ஷாத் ஜ்ஞான - சக்திக்கே பதியாயிருப்பவருமான ருத்திர-ரூபியாகிய ஈசுவரர் ஸகல ஜீவர்களையும் மோக்ஷ-நிலைக்குத் தூக்கிவிடுவதற்காகவே மேற்கண்டபடி தன்னிடத்திலேயே ஸம்ஹார-கிருத்தியத்தையும் சேர்த்துவைத்துக் கொண்டிருக்கின்றார். ஸர்வப்பிரகாசகமாகிய ஜ்ஞானம் ஸத்வ-குணத்தையே குறிப்பிடுமாகையாலும், முன்னால் சொல்லப்பட்ட மற்ற காரணங்களாலும் ருத்திரர் பரம-ஸாத்விக-மூர்த்தியென்பதே நிச்சயம். இவ்வித ஜ்ஞானேசுவரரிடம் அஜ்ஞான மௌட்டியாதி லக்ஷணங்களுடன் சேர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகின்ற கீழான தமோ-குணத்தை ஆரோபிப்பது சாஸ்திரஜ்ஞர்களுக்கு யோக்கியமே யில்லை.

உண்மையில் முன் காட்டியபடி தமோ-குணப்பிரதானராயிருக்கின்ற பிரஹ்மாவிடமுள்ள தமோ-குணம் கீழான தமோ-குணமல்லவென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். வியஷ்டி-ஸ்வரூபங்களில் ஸம்பந்தப்பட்டிருக்கின்ற குணங்களின் அவாந்தர-தாரதம்யங்களும் உச்சத்வ-நீசத்வங்களும் ஒரே

விதமாய் ஸமஷ்டி-ஸ்வரூபங்களில் ஸம்பந்தப்பட்ட குணங்களிலும் இருக்குமென்று எண்ணுவது தப்பு. ஸமஷ்டியாத்ம-ஸ்வரூபங்கள் மூன்றிலுமுள்ள குணங்கள் ஒன்றுக்கொன்று பின்னப்பட்டிருந்தபோதிலும், அவையெல்லாம் மஹா உத்க்ருஷ்ட, அப்பிராகிருத, கல்யாண, ஐச்வர குணங்களே யல்லாமல் கீழான, அல்ப, பிராகிருத, பந்தப்படுத்தக்கூடிய குணங்களல்ல.

6. மாயை மும்மூர்த்திகளை பாதிக்காது

முன் காட்டப்பட்டபடி பிரஹ்மா-விஷ்ணு-ருத்திரர் மூவர்களும் ஏகமான ஸாக்ஷாத் நிற்குண-பிரஹ்ம-சைதன்யமே தவிர வேறல்ல. மாயா-ஸம்பந்தத்தினுல் மூவகையான குண-பேதங்களும் மூர்த்தி-பேதங்களும் பிரஹ்மத்தில் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றன. பிரகிருத விஷயத்திற்கு அவசியமான மட்டில் தமோ-குணத்தை மாத்தரம் உதாஹரணத்திற்கு எடுத்துக்கொண்டு, மும்மூர்த்தி-ஸம்பந்தமாயுள்ள தமோ-குணம் ஜீவர்களின் தமோ-குணத்தைப்போலாகாதென்பது இங்கு கொஞ்சம் விவரிக்கப்படும். தமோ-குணப்பிரதானமாகிய மாயை தாமஸீ என்றும் சொல்லப்படுகின்றது. இதுவே அஹங்கார-ரூபியாக பஞ்ச-பூதங்களுக்கும் அவைகளின் காரியங்கள் யாவற்றுக்கும் மூல-காரணமாயிருந்துவருகின்றது. இந்த விஷயம் பின்னுல் வியக்தப்படுத்தப்படும். கேவலம் அஹங்கார-வடிவமாக மாத்திரமிருக்கிற தாமஸீயினுல் பிரஹ்ம-சைதன்யம் முழுவதும் மறைவடைந்துவிடமாட்டாது. பின் குறிப்பிடப்போகிறபடி அஹங்காரம் பூத-தன்மாத்திரைகளாகவும் பஞ்சீகிருத-பூதங்களாகவும் பரிணமப்பட்டு தடித்துப் போன பிறகுதான் அது பிரஹ்ம-சைதன்யத்தை மறைக்கக்கூடியதென்று எண்ணப்படலாம். கண்ணுடியும் (Plain Glass) ஸாதாரண பானையும் இரண்டும் மண்ணுலேயே செய்யப்பட்டிருந்த போதிலும், கண்ணுடியின் உபாதான-காரணமாகிய மண் சுத்தமாயும் ஸ்வச்சமாயும் (Clear and transparent)

இருந்தும், பானையின் உபாதான-காரணமாகிய மண் விபரீதமாய் (Opaque) இருந்தும் வருவதால் கண்ணாடிக்குள் வைக்கப்பட்டிருக்கிற மின்சார-தீபத்திற்கு வெளிப்பிரகாசமும், பானைக்குள் வைக்கப்பட்டிருக்கிற மின்சார-தீபத்திற்கு வெளிப்பிரகாசமில்லாமையும் காணப்படுவதுபோல், அஹங்கார-தத்வத்தை மாத்திரம் உபாதியாகக்கொண்ட பிரஹ்மாவின் ஸ்வாத்மப்பிரகாசத்திற்கு கொஞ்சமேனும் குறைவுண்டாகாமலும், அஹங்கார-காரியங்களான பாஞ்ச-பௌதிக-ஸூக்ஷ்ம-ஸ்தூல-உபாதிகளுக்குக் கர்ம-கதியில் கட்டுப்பட்டிருக்கின்ற ஜீவர்களிடந்தான் - பிரஹ்ம-சைதன்யத்தின் பிரகாசம் மறைவுபட்டிருப்பதாகவுமிருந்துவருகின்றது. ருத்திர-விஷ்ணு-பிரஹ்மாக்களின் மாயோபாதிகளுடைய தாரதம்யப்படி, வெண்மை-சிவப்பு-நீல-வர்ணக் கண்ணாடிகளைப்போல், அவாந்தர-பேதங்களிருப்பது ஸத்தியமானாலும் அவ்வித மாயா-பேதங்கள் மும்மூர்த்திகளின் ஸ்வரூப-பிரகாசத்தன்மைக்கு விரோதமில்லாமலேயிருக்கின்றன.

பின் சொல்லப்போகிற பிரகாரம் மும்-மூர்த்திகளின் ஸ்தானங்கள் மற்ற ஸ்தானங்களை அபேக்ஷித்து காரண-ஈசுவர-ஸ்தானங்களாயிருப்பதினாலும், காரண-ஸ்தானத்திற்கு ஸத்வ-குணமே பிரதானமானதினாலும், மும்-மூர்த்திகளின் உபாதிபூத-மாயைகளும் அவாந்தர-குண பேதங்களுடன்கூட ஸத்வ-குணத்திற்கு லக்ஷணமான ஸ்வச்சத்தன்மையுடனும் சேர்ந்தேயிருக்கின்றன. எப்படி ஸூர்ய-பிம்பத்தை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கக்கூடியவரின் திருஷ்டியில் அது கொஞ்சம் நீல-வர்ணத்துடன் கூடிய பிம்பமாகவே காணப்பட்டாலும், அந்த நீல-வர்ணம் ஸூர்ய-தேஜஸ்ஸை கொஞ்சங்கூட குறைத்துவிடாமலிருக்கின்றதோ, அப்படியே பிரஹ்மாவிடமுள்ள தமோ-குணமும் அவருடைய ஸ்வயம்-பிரகாசரூபித்தன்மைக்குக் குறைவை யுண்டாக்கிவிடமாட்டாது. ஜீவர்களுடைய தமோ-குணத்தை இருளுக்கு ஒப்பிட்டிருப்பதுபோல், பிரம்மாவின் தமோ-குணத்தை இருளைப்போல் எண்ணிவிடக்

கூடாது. அஜ்ஞான-இருளாகிய தமோ-குணம் ஸர்வஜ்ஞ-மூர்த்தியான பிரஹ்மாவிடம் எவ்வகையிலும் ஸம்பந்தப்படக்கூடியதே யில்லை. கீழான தமோ-குண-இருளை ஸர்வஜ்ஞரிடம் ஆரோபிப்பது ஸூர்ய-கிரஹண-காலத்தில் ஸூர்யனிடம் இருளை ஆரோபிப்பது போல அயோக்யம்.

எவ்விதம் ஒரு எலுமிச்சம்பழத்தை கண்ணுக்கு எதிரில் கையில் வைத்துக்கொண்டு ஸூர்ய-பிம்பத்தையே கண்ணில் படாமல் மறைத்துவிடக்கூடுமோ, அவ்விதமாகவே எதிரில் ஸமீபத்திலிருக்கிற சிறு சந்திர-கோளத்தினால் வெகு தூரத்திலிருக்கிற பெரும் ஸூர்ய-மண்டலமே கிரஹண-காலத்தில் மறைக்கப்பட்டுவிடுகின்றது. எலுமிச்சம்பழத்தினால் எப்படியோ, அப்படியே சந்திரன் குறுக்கிடுவதினால் ஸூர்யனுடைய ஸ்வப்பிரகாசத்திற்குக் குறைவுண்டாகமாட்டாது. சந்திர-கிரஹணத்திலோவெனில் சந்திரனுக்குள்ள பிரதிபலன-ரூபப்பிரகாசம் நஷ்டமாகிவிடும்படியாக பூமியின் சாயை-ரூபமான இருள் சந்திரனை உண்மையில் வியாபித்துவிடுகின்றது. இதுபோலவே அவித்யா-வசங்கதனாகிய ஜீவ-சிதாபாஸனுக்குத்தான் உண்மையான தமோ-குண-ஸம்பந்தமிருக்கக்கூடுமேயல்லாது மாயா-பதியான ஸர்வஜ்ஞருடைய ஸ்தானத்தில் அது ஒட்டக் கூடியதல்ல.

வாஸ்தவத்தில் ஜீவனிடத்திலும் அந்தராத்மாவாயிருப்பவர் பரமாத்மாவேயானாலும், அவர் ஜீவ-அவித்யா-காரியங்களாகிய கோசங்களினால் மூடப்பட்டவர் போல் காணப்படுகின்றார். எந்த ஜ்யோதிஸ் ஸூர்யனிடத்தில் விளங்குகின்றதோ அதுவே இவ்வுலக-மத்தியிலும் (Centre) சந்திர-மத்தியிலும் இருந்து வருவது வாஸ்தவமானாலும், அது தடித்த இருளடைந்த கோசங்களினால் (Opaque Covering layers) மறைபட்டுப்போய், இவ்வுலகமும் சந்திரனும் மேல்-பார்வையில் ஸ்வயம்-பிரகாசங்களாயில்லாமலிருக்கின்றன. இவ்விதமாகவே, ஜீவனிடத்திலுள்ள அந்தராத்மாவும் அவித்யா-கார்ய கோசங்களினால் மறைவு

பட்டுப்போய், ஜீவன் தமோ-குண-இருளால் பாதிக்கப்படக் கூடிய ஸ்திதியிலிருந்துவருகின்றான். முன் சொல்லியபடி, ஜீவனிடமிருக்கின்ற ஆத்மா மண்பானைக்குள்ளிருக்கிற மின் சார-தீபத்தைப் போலிருக்கிறபடியால், மண்பானையின் வெளிப் புறம் ஸ்வயம்-பிரகாசமாயில்லாமல் அது இருளினால் பாதிக்கப் படக்கூடியதாக இருப்பது போல், வியஷ்டி-மனோ-ரூப-ஜீவ கோசமும் தமோ-குணத்தனால் பாதிக்கப்படக்கூடியதாயிருக் கின்றது. தன்னிடத்தில் இருள் அடர்ந்திருக்கையில், தான் தமோ-குணத்திற்குள்ளடங்கியிருப்பதாகத் தெரிந்து கொண்டி ருக்கின்ற ஜீவன், பரமாத்மாவிடத்தில் தமோ-குணம் ஸம்பந்தப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்ட சாஸ்திர-வாக்கியங்களை முன்னிட்டு, பரமாத்மாவும் தன்னைப்போலவே தமோ-குணத் தினால் பாதிக்கப்படக் கூடியவரென்றே தரபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றான். ஸூர்யப்பிரகாசத்திற்கு முன்பாக இருள் நிற்கமாட்டாதென்பதும், ஸூர்யனிடம் கிரஹண-காலத்தில் காணப்படுகின்ற இருள் பார்க்கிறவனுடைய ஸ்தானத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிற சந்திரச்சாயை-ரூபமான இருளேயல்லாமல் ஸூர்யனிடம் யாதொரு இருளுமில்லையென் பதுமே எப்படி ஸத்தியமோ, அப்படியே பரமாத்மாவிடம் ஆரோபிக்கப்படுகின்ற கீழான தமோ-குணமும் ஆரோபிக் கின்ற ஜீவனைச் சேர்ந்ததேயல்லாமல் பரமாத்மாவைச் சேர்ந்த தில்லையென்று உறுதியாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

7. பூத ஸ்ருஷ்டி

ஜகத்துப் பூராவும் மேற்கூறிய மும்மூர்த்திகளால் ஸமஷ்டி யாத்ம-ஸ்வரூப-நிலைமைகளில் வியாபிக்கப்பட்டும உஜ்ஜீவிக்கப் பட்டுமிருக்கின்றது. ஏற்கனவே முன் சொல்லியபடி, ஜீவர் கள்-ஸம்பந்தப்பட்ட மட்டில், ஈசுவராதி மூவர்களுக்கும் ருத்தி ராதி மூவர்களுக்கும் அபேதத்தையே பாராட்டி, ருத்திரரைத் தவிர தனியாக ஈசுவரர் வேறு கிடையாதென்றும், விஷ்ணு வைத் தவிர ஹிரண்யகர்ப்பர் வேறு கிடையாதென்றும்,

பிரஹ்மாவைத் தவிர விராட் வேறு கிடையாதென்றும், உறுதியான எண்ணம் ஒவ்வொரு உபாஸகருடைய மனதிலுமிருக்க வேண்டியதவசியம் முக்கியமாய் உபாஸகர்களை அனுக்கிரஹிக்கும் பொருட்டே ஈசுவராதி மும்-மூர்த்திகளும் ருத்திராதி மூன்று ரூபங்களில் பிரகாசிக்கின்றார்கள். அதாவது, உபாஸகர்கள் பார்க்கக் கூடியதான ரூபங்களை ஈசுவராதிகளே தரித்துக் கொண்டு ருத்திராதி திரி-மூர்த்திகளாக சோபிக்கிறார்களென்பதே உண்மை. முன் அம்சாம்சி-பாவம் சொல்லப்பட்டிருப்பதில், அம்சியினால் தன்னிடத்தில் செய்துகொள்ளப்பட்ட திருச்யமான ஏகதேச-ரூபத்தின் ஆரோபணமே அம்சத்வ-கிரஹணமென்று அறிந்து கொள்ளவேண்டும். ஆகையால், இரண்டு ஜதை மும்-மூர்த்திகளிருப்பதாக எண்ணிவிடாமல், பிரஹ்ம-விஷ்ணு-ருத்திரர்களை ஸர்வோத்கிருஷ்ட மும்-மூர்த்திகளென்றும், இவர்களே ஸமஷ்டி-ரூபவான்களாகவும் வியஷ்டி-ரூபவான்களாகவும் இருவிதமாகவுமிருக்கின்றார்களென்றும், இவர்களுக்கு மேலாகவாவது அன்னியர்களாகவாவது வேறு மும்-மூர்த்திகள் கிடையாதென்றும் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த விதமாகவே, கௌரீ என்ற பார்வதியையே ஸாத்விக-அவ்யக்த-மாயை யென்றும், லக்ஷ்மியையே ராஸஜ-மஹத்ரூபிணியான மாயையென்றும் ஸரஸ்வதியையே தாமஸ-அஹங்கார-ரூபிணியான மாயையென்றும் மனதில் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். எப்படி மேற்கண்டபடி ருத்திரர் ஸர்வ-காரணாத்மாவோ அப்படியே கௌரீ ஸர்வ-காரண-மாயாத்மிகையான ஆவரண-சக்தி விஷ்ணு ஸர்வ-ஸூக்ஷ்மாத்மாவாயிருப்பதுபோல், லக்ஷ்மீ ஸர்வ-ஸூக்ஷ்ம-மாயாத்மிகையான விக்ஷேப-சக்தி. எவ்விதம் பிரஹ்மா ஸர்வ-ஸ்தூலாத்மாவோ, அவ்விதம் ஸரஸ்வதீ ஸர்வ-ஸ்தூல-மாயாத்மிகையான ஸ்தூல-சக்தி. ஜகத்தின் ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹார-காரியங்கள் பூராவும் இம்மூன்று சக்திகளின் அனுஸரணையின் பேரில் மேற்கண்ட மும்-மூர்த்திகளால் நடத்தப்படுகின்றன.

இது மாத்திரமல்ல. ஜகத்து முழுவதும், அதில் ஒவ்வொரு அணுவும், அந்தந்த மாயா-சக்திகளுடன் கூடிய மும்-மூர்த்திகளால் அதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. (Is ensouled). காரணத்தைவிட்டு ஸூக்ஷ்மமாவது, ஸூக்ஷ்மத்தைவிட்டு ஸ்தூலமாவது தனிப்பட்டிருக்கக்கூடாததால், திருச்யப் பிரபஞ்சத்தில் எங்கும் மும்-மூர்த்திகளும் மூன்று சக்தி-தேவிகளும் சேர்ந்தேயிருக்கின்றனரென்றே சொல்லவேண்டும். ஆனால் பிராதான்ய-தாரதம்யத்தினால் ஸ்தூல-ஸூக்ஷ்ம-காரண வஸ்துக்களென்றும் ஸ்தானங்களென்றும் தனித்தனியாக வஸ்து-ஸ்தான-பேதங்கள் வியவஹரிக்கப்படுகின்றன.

முதலில் மாயா-கார்ய-பேதங்களை கவனிப்போம். மாயா-கார்யமும் திருச்யமுமான (காணப்பட்ட, அனுபவிக்கப்பட்ட) ஜகத்து முழுவதும் பாஞ்ச-பௌதிகம், அதாவது ஐந்து பூதங்களினுல் (Elements) அமைக்கப்பட்டுள்ளது. ஐந்து பூதங்களாவன, பிருதிவீ, அப், தேஜஸ், வாயு, ஆகாசம். இந்த ஐந்தும் ஒன்றோடொன்று சேர்க்கப்படாமலிருந்தால் (not compounded) அவை பூத-தன்மாத்திரைகளென்று சொல்லப்படுகின்றன. ஜகத்திலுள்ள ஸூக்ஷ்ம வஸ்துக்கள் யாவும் இந்த தன் மாத்திரைகளாலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து பூதங்களும் ஒன்றோடொன்று குறிப்பிட்ட விதத்தில் சேர்க்கப்பட்டுவிட்டால் (Compounded) அவை பஞ்சீகிருத-பூதங்களென்று சொல்லப்படுகின்றன. அடியிற்கண்ட பஞ்சீ-கரணத்தினுல் சேர்க்கப்பட்டது பஞ்சீ-கிருதம். ஐந்து தன் மாத்திரைகளிலும் ஐந்து அணுக்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு அணுவையும் இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு தன் மாத்திரை-அணுவின் ஒவ்வொரு பாதியைத் தனியாக வைத்துவிட்டு, மற்றொரு பாதியை நான்கு அரைக்கால்-பாகங்களாகப் பிரித்து வைத்துக் கொண்டு, முன் தனியாக வைக்கப்பட்ட ஒவ்வொரு பாதி-பாகத்துடனும் மற்ற நான்கு பூதங்களின் நான்கு அரைக்கால்-பாகங்களைச் சேர்த்து விட்டால், ஐந்து பஞ்சீகிருத-

பூதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. ஜகத்திலுள்ள ஸ்தூல-வஸ்துக்கள் யாவும் இந்த பஞ்சீகிருத-பூதங்களாலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக ஸ்தூல-பூதங்கள் ஸூக்ஷ்ம-பூத தன்மாத்திரைகளிலிருந்துண்டாயிருக்கின்றன.

பூததன்மாத்திரைகளுக்குள்ளும் காரண-காரிய-பாவங்கள் சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது, ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து தேஜஸ், தேஜஸ்ஸிலிருந்து அப், அப்பிலிருந்து பிருத்வீ என்பதாக உத்பத்திக்கிரமம் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆகாசத்திற்கே பரம்பரா-காரணங்கள் எவையென்று விசாரிக்குங்கால், அது அஹங்காரத்திலிருந்தும், அஹங்காரம் மஹத்திலிருந்தும் மஹத் அவ்யக்தத்திலிருந்தும், உண்டானதாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்யக்தாதி மூன்றும் சுத்த-மாயை யென்ற மூலப்பிரகிருதியிலிருந்துண்டாயிருப்பதாக முன்னமே சொல்லப்பட்டுமிருக்கின்றது. இங்கு ஓர் ஸந்தேகம் ஏற்படக்கூடும். தைத்திரீய-சுருதியில் ஆத்மாவிலிருந்தே ஆகாசம் உண்டாயிருப்பதாகக் காணப்படுகிறதே யென்று கேட்கலாம். அங்கு "ஆத்மாவிலிருந்து" என்று சொன்னதற்கு "ஆத்மாவின் சக்தியிலிருந்து" என்றுதான் தாத்பர்யம். இரண்டற்றதான ஆத்மாவிலிருந்து வேறொன்றும் உண்டாவதற்கில்லை. உண்டாவது என்ற வியவஹாரமே மாயிக-ஜகத்-வியவஹாரந்தான். ஸர்வப்பிரபஞ்சத்திற்கும் மூல-காரணமான ஆத்ம-மாயையிலிருந்து பரம்பரையாய் ஆகாசம் உண்டாயிற்று என்பதுதான் கருத்து.

இவ்விதமாக மூலப்பிரகிருதி யென்ற மாயையிலிருந்து உண்டான ஸகல வஸ்துக்களையும் அடியிற்கண்ட மூன்று பெரும் வகுப்புகளில் அடக்கலாம்:—

(1) காரண-ரூபங்களான— 1. அவ்யக்தம்
2. மஹத்
3. அஹங்காரம்

(2) ஸூக்ஷ்ம-ரூபங்களான-ஐந்து பூத தன்மாத்திரைகளால் அமைக்கப்பட்டவை,

(3) ஸ்தூல-ரூபங்களான-ஐந்து பஞ்சீகிருத-பூதங்களால் அமைக்கப்பட்டவை.

அத்தியாயம் 22

ஸகுணோபாஸனம்

1 லோகங்களில் தாரதம்யம்

காணப்படுகின்ற ஜகத்துப்பூராவிலும் எங்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் முன் குறிப்பிட்ட காரண-ஸூக்ஷ்ம-ஸ்தூல-ரூபங்கள் மூன்றும் சேர்ந்திருக்கின்றன. ஆகிலும், பிராதான்யம்-அப்பிராதான்யம் என்பதை முன்னிட்டு இப் பூலோகம் முதல் மேலான ஸத்தியலோகமென்ற ஏழாவது லோகம் வரையுள்ள லோகங்களுக்குள்ளாக இந்த பூலோகம் ஸ்தூல-லோகமென்றும், புவர்-லோகம் முதல் தபோ-லோகம் வரையுள்ள (भुवः सुवः महः जनः तपः) ஐந்து லோகங்களும் ஸூக்ஷ்ம-லோகங்களென்றும், ஸத்திய-லோகம், காரண-லோகமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். அதாவது, பூ-லோகத்தில் பஞ்சீகிருத-பூதங்களின் பிராதான்யமும், புவராதி ஐந்து லோகங்களில் பஞ்சதன்மாத்திரைகளின் பிராதான்யமும், ஸத்திய - லோகத்தில் தன்மாத்திரைகளுக்கும் காரணமாகிய ஸ்தூல-ஸூக்ஷ்ம - காரண - மாயைகளுக்கே பிராதான்யமும் இருந்து வருகின்றன. புவராதி ஐந்து லோகங்களுக்குள்ளும், புவர்லோகத்தில் பிருதிவீ-தன்மாத்திரைக்கும், ஸுவர்-லோகத்தில் அப்-தன்மாத்திரைக்கும், மஹர்-லோகத்தில் தேஜஸ்-தன்மாத்திரைக்கும், ஜன-லோகத்தில் வாயு-தன்மாத்திரைக்கும் தபோ-லோகத்தில் ஆகாச-தன்மாத்திரைக்கும் பிராதான்யமுண்டென்றும் அவாந்தர-பேதங்கள் வெளியாகின்றன.

இந்தப்படியே, ஏழாவதான ஸத்திய-லோகத்திலும் மாயா-பிராதான்ய விஷயமாய் அவாந்தர-பேதங்களுண்டு காரண-லோகமென்ற இந்த ஸத்திய-லோகமே ஸகுணப்பிரஹ்ம-லோகமென்றும் சொல்லப்படுகின்றது. மேற் சொல்லிய ஸகுணப் பிரஹ்மங்களான மும்-மூர்த்திகளும் இதில் தெளிவாய் பிரகாசிக்கின்றார்கள். இதுவே சதுர்முகப்பிரஹ்மாவின் ஸத்தியலோகமென்றும், விஷ்ணுவின் வைகுண்ட மென்றும், ருத்திரரின் கைலாஸ மென்றும் மூன்று விதமாகவும் விளங்குகின்றது. இம்மூன்றுக்குள்ளாக, ஸத்திய-லோகத்தில் ஸ்தூல-மாயா-சக்தியாகிய அஹங்காரத்தினுடையவும், வைகுண்டத்தில் ஸூக்ஷ்ம-மாயா-சக்தியாகிய மஹத்-தத்தவத்தினுடையவும், கைலாஸத்தில் காரண-மாயா-சக்தியாகிய அவ்யக்தத்தினுடையவும் பிராதான்யம் விசேஷமாய்க் காணப்படுகின்றது. பூராதி ஏழு லோகங்களுக்குள்ளாக ஸத்திய-லோகமென்ற ஸகுணப்பிரஹ்ம-லோகம் காரண-லோகமென்று சொல்லப்பட்டது வாஸ்தவமானாலும், அந்த லோகத்திலும் மேற்சொல்லிய முகாந்திரத்தினால், அதாவது தனித்தனியான மாயா-சக்திப் பிராதான்யமிருப்பதினால் ஸத்திய-லோகம் ஸ்தூல-ஸகுணப் பிரஹ்ம-லோக மென்றும் வைகுண்டம் ஸூக்ஷ்ம-ஸகுணப் பிரஹ்ம-லோக மென்றும் கைலாஸம் காரண-ஸகுணப்பிரஹ்ம-லோக மென்றும் பிரத்தியேகமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அன்றியும், எப்படி மாயையின் முக்குணங்களும் மாயா-காரியங்களில் சேர்ந்திருக்குமானாலும், பிரதானத்தன்மையை உத்தேசித்து ஸ்தூலத்தில் தமோ-குணமும், ஸூக்ஷ்மத்தில் ரஜோ-குணமும், காரணத்தில் ஸத்வ-குணமும் விசேஷமாய் காணப்படுகின்றனவோ, அப்படியே பரமாத்ம-ஸ்வரூப-லக்ஷணங்களாகிய ஸத், சித், ஆனந்தம் இம்மூன்றும் எப்போதும் சேர்ந்தேயிருக்குமென்பது உண்மையானாலும், இவை பின்னப்பட்டதாயுள்ள மாயா-காரியங்களின் மூலமாய் கவனிக்கப்படும்போது, ஸ்தூலத்தில் ஸத்தும், ஸூக்ஷ்மத்தில்

சித்தும், காரணத்தில் ஆனந்தமும் பிரதானப்பட்டிருப்ப தாகவே தனித்தனியே பிரகாசிக்கின்றது. இதனால்தான், பூ-லோகத்தில் ஸதத்துடையவும், புவராதி ஐந்து லோகங்களில் சித்துடையவும், ஸகுணப் பிரம்ம-லோகங்களில் ஆனந்தத் துடையவும பிராதான்யம் அனுபவிக்கப்படுகின்றது.

கீழ் ஆறு லோகங்களை அபேக்ஷித்து ஏழாவதான ஸகுணப் பிரஹ்ம-லோகங்கள் ஆனந்தப்பிரதானமான லோகங் களானாலும், அவைகளுக்குள்ளாகவே ஒன்றுக்கும் மற் றொன்றுக்குமுள்ள அவாந்தர-பேதங்களை முன்னிட்டு, அவை களுக்குள்ளாக ஸ்தூல-லோகமாகிய ஸத்திய-லோகத்திலும் பிரஹ்மா-ஸரஸ்வதீயிடத்திலும் ஸத்தன்மையின் பிராதான்ய மும், பொதுவாக அந்த-லோக-வாஸிகளிடம் ஸ்தூலக்கிரியா-ஸம்பந்தமான விசேஷ உத்ஸாஹமும், ஸூக்ஷ்ம-லோகமாகிய வைகுண்டத்திலும் விஷ்ணு-லக்ஷ்மீயிடத்திலும் சித்தன்மை யின் பிராதான்யமும், பொதுவாக வைகுண்ட-வாஸிகளிடம் ஸூக்ஷ்ம-புத்தி-விருத்தி-ரூபஸூக்ஷ்ம-விசேஷங்களும், காரண-லோகமாகிய கைலாஸத்திலும் ருத்திர-கௌரீயிடத்திலும் ஆனந்தப் பிராதான்யமும், பொதுவாக கைலாஸ-வாஸிகளிடம் காரணாத்ம-நிஷ்டமான நிஜானந்தமும் முக்கியமாய் சோபிக் கின்றன. இவ்விதமாக திரி-மூர்த்திகளுக்குள்ளாக ருத்திர-ரூபியான ஈசுவரர் ஆனந்த-ஸ்வரூபியாயிருப்பதினால் தான், அவர் ஆனந்த-தாண்டவத்தைச் செய்துவருகின்றார். சில காலங்களில் ஈசுவரருடன் கூடவே ஆனந்த-ஸ்வரூபிணீயான கௌரீயும் அவ்வித தாண்டவத்தைச் செய்து வந்திருப்பதும் அனேகர்களுக்குத் தெரிந்த விஷயம்.

மேலும், ஸ்தூல-சரீர-காரியமாகிய கர்மத்தில் ஸத்தன்மை யும், ஸூக்ஷ்ம-மானஸ-காரியமாகிய உபாஸனத்தில் சித்தன்மையும், காரண-ஆத்மானுபூதி-ரூபமாகிய ஞானத்தில் ஆனந்தமும் முக்கியமாயிருப்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இக்காரணத்தினால் தான், கிரியாப்பிராதான்யம்

ஸத்திய-லோகத்திலும், பக்திப்பிராதான்யம் வைகுண்டத்திலும், ஜ்ஞானப்பிராதான்யம் கைலாஸத்திலும் விசேஷமாய் விளங்குவதாகத் தெரியவருகின்றது. இப்பூ-லோகத்தில் நடத்துப்படுகின்ற தேவ-பிதுரு-காரியங்களான கர்மாக்களில் கர்மங்கள் சரியாய் நடந்துவருவதை பிரஹ்மாவே மேற்பார்த்து வருவதான பாவனையுடன் ஒருவரை பிரஹ்மா என்று வரணம் செய்யப்பட்டு வருவது தார்மிகர்களுக்குத் தெரியவரும். தார்மிகர்களின் நற்கதியின் பொருட்டு ஈசுவரரால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற பிரவிருத்தி-நிவிருத்தி தர்மங்களுக்குள்ளாக, கர்மரூப பிரவிருத்தி-தர்மத்திற்கு பிரஹ்மாவின் ஆதரவும், உபாஸனரூப-பிரவிருத்தி-தர்மத்திற்கு விஷ்ணுவின் ஆதரவும், ஜ்ஞானுப்பியாஸரூப-நிவிருத்தி-தர்மத்திற்கு ருத்திரரின் ஆதரவும் அதிகமாய் அபேக்ஷிக்கப்படுகின்றன. பிரஹ்மாவினால் ஸ்ரீமண்டனமிச்ர-ரூபமாகச் செய்யப்பட்ட அவதாரத்தில் கர்மங்களின் முக்கியத் தன்மையும், விஷ்ணுவால் ஸ்ரீராம-ரூபமாகவும் ஸ்ரீ கிருஷ்ண-ரூபமாகவும் செய்யப்பட்ட முக்கியாவதாரங்களில் பக்தியின் பிரதானத் தன்மையும் ருத்திரரால் ஸ்ரீ சங்கரபகவத்பாத-ரூபமாகச் செய்யப்பட்ட அவதாரத்தில் ஜ்ஞானத்தின் முக்கியத் தன்மையும் விசேஷமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இப்படிச் சொல்வதினால் பிரஹ்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் ஜ்ஞானத்திலாவது, ருத்திரருக்கும் பிரஹ்மாவுக்கும் பக்தியிலாவது, விஷ்ணுவுக்கும் ருத்திரருக்கும் கர்மத்திலாவது ஆதரவில்லையென்று அர்த்தமில்லை. ருத்திரர் எப்படி எல்லோருக்கும் தக்ஷிணுமூர்த்தி-அவஸரத்திலும் மற்ற விதங்களிலும் ஆதி ஜ்ஞான குருவோ, அப்படியே விஷ்ணுவும் பிரஹ்மாவும் ஸகலர்களுடையவும் ஜ்ஞான-குரு-மஹா பரம்பரையில் முதலில் இருக்கின்றார்கள். இப்படியே தேவ-பிதுரு-கர்மாக்களில் ருத்திர-விஷ்ணுக்களுக்கு ஏராளமான ஸம்பந்தமிருப்பது பிரஸித்தமே, பக்தி-விஷயத்திலும் மும்-மூர்த்திகளும் ஈடுபட்டவர்கள்தான் என்பதிலும் ஸந்தேஹமில்லை. ஆகையால் முன் சொல்லிய

பேதங்கள் பிராதான்ய-விஷயங்களென்று மாத்திரம் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்.

2. ஸத்யலோகப் பிராப்தி

மோக்ஷப்பிரதிபந்தகமாக மலம், விக்ஷேபம், ஆவரணம் என்ற மூன்று தோஷங்கள் ஜீவர்களிடமிருப்பதாக முன் பல தடவை சொல்லப்பட்டது. மல-தோஷம் வெகுதூரம் நிவிருத்தியானால்தான் விக்ஷேபத்தைப்போக்கடிப்பது ஸாத்தியப்படக் கூடியதாகும், அந்த இரண்டு தோஷங்களும் பெரும்பாலும் நீக்கப்பட்டால்தான் ஆவரண-தோஷத்தை விலக்குவதற்குள்ள யத்தினம் பலிக்கக்கூடியதாகும். ஆகையால் (1) மல-தோஷத்தை மாத்திரம் நீக்கவேண்டுமானால் ஸத்-கர்மானுஷ்டானம் மாத்திரம் போதுமானது, (2) விக்ஷேப-தோஷத்தை நீக்கவேண்டுமானால் ஸத்-கர்மானுஷ்டானம் ஸகுணோபாஸனம் இரண்டும் அவசியங்களாகும். (3) ஆவரண - தோஷத்தை நீக்கவேண்டுமானால் ஸத்-கர்மானுஷ்டானம், ஸகுணோபாஸனம் சிரவண-மனன-நிதித்தியாஸன-ரூபஜ்ஞானாப்பியாஸங்களாகிய நிவிருத்தி-கர்மங்களைக் கைக்கொள்ளுதல், இம்மூன்றும் அவசியங்களாகும்.

மோக்ஷத்தில் இச்சையுள்ள முமுக்ஷுக்களான தார்மிகர்கள் பலவிதமாய் காணப்படுகின்றார்கள். சிலர்கள் வேத-விஹிதமான கர்மானுஷ்டானத்தினாலேயே மோக்ஷம் ஸித்தித்துவிடுமென்று எண்ணிக்கொண்டு தீவ்ர-கர்மானுஷ்டான-பரர்களாக மாத்திரமிருந்துவருகின்றார்கள். இவர்களுடைய பார்வையில் ஸ்தூலக்கிரியா-சக்தியே ஸர்வோத்தம பர-சக்தியாக விளங்குகிறாள். ஸர்வ-கர்மங்களுக்கும் ஸாக்ஷி-பூதராயிருந்து மேல் பார்த்துவருகின்ற பிரஹ்மாவே முக்கியமாய் ஸர்வ-ஸாக்ஷியான பரமாத்மாவாக இவர்களால் பாவிக்கப்படுகின்றார். ஸத்-கர்மத்திலும் உபாஸனம் கலந்தேயிருக்கின்றது. ஆனால் அதன்

உபாஸனும்சத்திற்கு அப்பிராதான்யமும் ஸ்தூலகிரியாம்சத் திற்குப் பிராதான்யமுமிருந்துவருவதினுல், அது "ஸத்-கர்மம்" என்ற பெயரால் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தப்படி கர்மத்தில் அடங்கியிருக்கின்ற உபாஸன-ஸம்பந்தத் தில் பரமாத்மா கர்ம-ஸாக்ஷியாகவே அந்த தார்மிகர்களால் உபாஸிக்கப்படுகின்ருர். இவ்வித உபாஸனத்திலும் தங்களுக்கு அபேதமாகவே உபாஸ்யத்தை பாவித்து உபாஸித்து வருகின்ருர்கள். பின்னுல் சொல்லப்போகிற பிரகாரம் இவ் வுபாஸனம் பர-பக்தியையே குறிப்பிடுமாகையால், இவர்கள் கிரம-முக்தியைப் பெறத் தகுந்தவர்களாயும் காணப்படுகின்ருர் கள். இவ்வித உபாஸனத்துடன் கலந்த ஸத்-கர்மானுஷ்டானம் ஸ்திரப்பட்டும், மேற்கண்டபடி கிரியா-சக்தியிடத்திலேயே பர-சக்தி-பாவனை பலப்பட்டும் வந்திருக்கின்ற இப்படிப்பட்ட தார்மிகர்களுக்கு பிரஹ்மாவின் ஸத்தியலோகத்தின் பிராப்தி ஸித்தித்துவிடுகின்றது.

ஆகிலும் அந்த பர-பக்தி கர்மத்திற்குள்ளடங்கியதாக அப்பிரதானத்தன்மையுடனிருப்பதால், இவ்வித தார்மிகர்கள் தங்களை கர்த்தாக்களாக பாவித்துவந்திருப்பது நின்று போகாமலும் இவர்களுக்கு இந்தப்படி தங்களிடத்திலுள்ள கர்த்ருத்வ-பாவனையின் காரணததினுல் அஹங்காரத்தை கடக் காமலும் இருந்து வருவதால், அஹங்கார-மாயை பிரதானமா யிருக்கிற ஸத்திய-லோகத்தைக் கடந்து மேற்செல்லக்கூடாத வர்களாயுமிருக்கின்ருர்கள். சுருதியில் கர்மத்தினுல் பித்ரு-லோகமும் வித்யையினுல் (உபாஸனத்தினுல்) தேவ-லோகமும் பிராப்தமாகுமென்று கண்டிருக்கையில், கர்மானுஷ்டாதாவுக்கு பிரஹ்மாவின் ஸத்திய-லோகமே பிராப்தமாகிவிடுகிறதென்று சொல்வது சரியாகுமாவென்று கேட்கலாம். பிரகிருத தார்மிகர்கள் முமுக்ஷுக்களென்று முன்னமேயே குறிப்பிடப் பட்டது. மோக்ஷத்தைத் தவிர வேறென்றிலும் இவர்களுக்கு இச்சை கிடையாது. தனித்தனியாக கர்மங்களுக்குச் சொல்லப்

பட்டிருக்கின்ற பலன்களில் இவர்களுக்கு உத்தேசமில்லை யாதலால், அவ்வித பலன்களை மாத்திரம் அனுபவிக்கும்படி யான ஸௌகரியங்களுடன் கூடிய பித்ரு-லோகமென்ற புவர்-லோகத்திற்கு இவர்கள் போவதற்குக் காரணமில்லை. அவ்வித பலன்களில் இச்சையில்லாமலே இவர்களால் செய்யப்பட்டிருக் கின்ற கர்மங்கள் இவர்களுக்குச் சித்த-சுத்தியை ஏற்படுத்திக் கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் அவைகளின் பலன் சித்த-சுத்தியே யென்ற ஜ்ஞானம் இவர்களுக்குக் கிடையாது. அவைகளையே இவர்கள் மோக்ஷத்திற்கு அந்தரங்க-ஸாதனங்களாக எண்ணிக்கொண்டிருந்திருக் கின்றார்கள். அவை பரம்பரா-ஸாதனங்கள்தானென்று இவர்கள் அறிந்து கொள்ளாமலிருந்திருப்பதுமல்லாமல், மோக்ஷத்தின் வாஸ்தவ-ஸ்வரூபத்தையும் இவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டவர்களில்லை அன்றியும், உபாஸ்யரான பரமாத்மாவிடத்தில் இவர்களுக்கு ஏகத்வ-பாவனை உறுதியா யிருந்த போதிலும், இந்த ஏகத்வம் எப்படிப்பட்டதென்பதையும் இவர்கள் செம்மையாய் கிரஹித்தவர்களில்லை இதெல்லா வற்றிற்கும் காரணம் இவர்கள் உபாஸனத்தை முக்கியமா யெண்ணாமல் அதை கர்மத்திற்கே அங்க-பூதமாய் பாவித்து வந்திருப்பதும் ஜ்ஞானாப்பியாஸத்தில் பிரவேசிக்காமலேயிருந்து வந்திருப்பதுமே தவிர வேறல்ல. இவ்விதமான தார்மிகர்கள் அஹங்கார-தரணத்தின் பொருட்டும், உபாஸனம் பலப்படும் பொருட்டும், மேலான ஜ்ஞானாப்பியாஸத்தைச் செய்யும் பொருட்டும் ஸத்திய-லோகம் போய் பிரஹ்மாவின் ஸன்னிதியிலேயே தகுந்த யத்தினங்களைச் செய்துவரக்கூடும்.

3. வைகுண்ட லோகப் பிராப்தி

வேறு சில தார்மிகர்கள் மேற்கண்டபடி கர்மானுஷ்டான-பரர்களாகவும் தீவ்ர-உபாஸகர்களாகவும் காணப்படுகின் றார்கள். இவர்களிடம் கர்மாக்கள் அப்பிரதானங்களாயும் உபாஸனங்கள் பிரதானங்களாயுமிருந்து வருகின்றன. இவர்

களுடைய கொள்கையில் உபாஸனமே மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனமென்றும், ஸூக்ஷ்ம-விக்ஷேப-இச்சா-சக்தியே பராசக்தி யென்றும், விஷ்ணுவே மோக்ஷ-தாதாவென்றும் உறுதியாய் பாவிக்கப்பட்டிருக்கின்றது. விஷ்ணுவிடமிருந்தே மோக்ஷத்தை இச்சிக்க வேண்டுமென்று சாஸ்திரத்திலும் வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கின்றது மோक्षमिच्छेज्जनार्दनात् ஆகையால், இவர்கள் சித்த-சுத்தியின் பொருட்டு ஸத்-கர்மாக்களை அனுஷ்டித்துக் கொண்டும், தீவ்ர-விஷ்ணு-பக்தர்களாயிருந்து கொண்டும், விஷ்ணுவையே தங்களுடைய அந்தர்யாமியான பரமாத்மாவாக அபேத-பாவனையுடன் உபாஸித்துக் கொண்டும் வருகின்றார்கள். இவ்வுபாஸனம் பர-பக்தியையே வெளியிடுவதால், இவர்கள் கிரம-முக்தியை அடைய யோக்கியர்களாகவே யிருக்கின்றார்கள். இவ்விதமாக ஸத்-கர்மானுஷ்டானத்துடன் கலந்த பகவதுபாஸனம் பலப்பட்டும், ஸூக்ஷ்ம-விக்ஷேப-இச்சா-சக்தியாகிய லக்ஷ்மியிடத்திலேயே பரா-சக்தி பாவனை ஸ்திரப்பட்டும் வந்திருக்கின்ற தார்மிகர்களுக்கு விஷ்ணுவின் வைகுண்ட-லோகத்தின் பிராப்தி ஸித்தித்து விடுகின்றது.

ஆகிலும், இவர்களுடைய பர-பக்தியில் ஏகத்வ-பாவனை மட்டுமிருப்பதாலும், அதாவது, இந்த பாவனை மனோ-விருத்தி-ரூபமேயல்லாமல் அநுபூதி-ரூபமில்லையாதலாலும், இவ்வநுபூதி ஏற்படுகிற வரையில் தங்களிடம் போக்தாக்கள் என்ற பாவனை கூடவேயிருந்து வருமாகையாலும், இவ்வநுபூதி உண்டாவதற்கும் தங்களுடைய போக்துருத்வம் நசித்துப் போவதற்கும் ஸாதனமாயுள்ள மேல்-ஜ்ஞானப்பியாஸத்தில் அவர்களுக்கு பிரவிருத்தி இல்லாமலிருந்திருப்பதாலும், போக்த்ருத்வ-காரண-பூதையான மஹத் என்ற ஸூக்ஷ்ம-இச்சா-சக்தி-மாயையே பிரதானமாயிருக்கிற வைகுண்ட-லோகத்தைக் கடந்து அவர்கள் மேற்செல்லக் கூடாதவர்களாயிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் இஷ்டப்பட்டால் பிரஹ்மாவின்

ஸத்திய-லோகத்தையும் பார்க்கலாம். முன் சொல்லப்பட்டபடி முக்கியமாய் கர்மானுஷ்டானபரர்களாக மாத்திரமிருந்து ஸத்திய-லோகப் பிராப்தி பேற்றவர்களுக்குத் தான் வைகுண்ட-தர்சனம் கிடைக்காதே யொழிய, கர்மானுஷ்டானத்துடன் தீவ்ர-உபாஸனா-பரர்களாகவுமிருந்து வைகுண்ட-லோகத்தை அடைந்தவர்களுக்கு ஸத்திய-லோக-தர்சனம் அஸாத்தியமல்ல.

4 கைலாஸ லோகப் பிராப்தி

மற்றும் சில தார்மிகர்கள் மேற்கண்டபடி கர்மானுஷ்டாதாக்களாகவும், உபாஸகர்களாகவும் இருந்துவருவதுமல்லாமல், விசேஷமாய் அத்வைத-ஜ்ஞானப்பியாஸிகளாகவும் இருக்கின்றார்கள். ஜீவப்பிரம்மைகத்வ-போத-ரூபமான அபரோக்ஷ-ஜ்ஞானமே மோக்ஷ-ஸாதன மென்பதும், ஸர்வ-காரண-பூதையான ஆவரண-ஜ்ஞான-சக்தியாகிய கௌரீயே பரா-சக்தியென்பதும், ஜ்ஞானப்பிரதாதாவாகிய சங்கரரென்ற ருத்திர-ரூபியான ஈசுவரரே உண்மையான மோக்ஷ-தாதா வென்பதும் இவர்களுடைய முடிவான கொள்கை. ஜ்ஞானந்தான் மோக்ஷ-ஸாதனமென்று வேத-சாஸ்திரங்களில் ஸந்தேஹமின்றி தெளிவாய்ச் சொல்லப் பட்டிருக்கின்றது. ஸமஷ்டி-காரணாத்மாவும் ஒப்பற்ற ஜ்ஞானேசுவரராகவு மிருக்கின்ற சங்கரரிடமிருந்தே ஜ்ஞானத்தைப் பெறவேண்டு மென்றும் சாஸ்திரம் வியக்தமாய்ச் சொல்லுகின்றது. சங்கரரிடமிருந்து ஜ்ஞானத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு தான் ஜீவனுக்கு முக்தியுண்டு.

முக்தியென்றால் அனாதியான முன்-கர்மங்களின் காரியத் தொடர்ச்சியில் ஏற்பட்டுள்ள சரீரமாகிய தனி அறை (Solitary cell)யிலிருந்தும் இதற்கு இருப்பிடமான திருச்யப்பிரபஞ்ச-ஜகத்தாகிய இந்த மஹா காராக்கிருஹத்தி (ஜயிலி)லிருந்தும் விடுதலையை அடைந்து ஸச்சிதானந்தப் பிரஹ்மமாக மிஞ்சி நிற்பதே. இவ்வித ஜகத்-ரூபமான காராக்கிருஹத்தின்

பரிபாலகர் விஷ்ணு. சங்கரரிடமிருந்து ஜ்ஞானத்தைப் பெற்றுக்கொண்டவரைத்தான் அந்த காராக்கிருஹத்திலிருந்து விஷ்ணு விடுவிப்பார். விடுதலைக்கு ஹேதுவான ஜ்ஞானம் ஏற்படாதவரையில், விடுதலையைச் செய்ய விஷ்ணுவுக்கு அதிகாரங்கிடையாது. அவ்வித ஜ்ஞானத்தை சங்கரரிடமிருந்து பெற்றுக்கொண்டுவிட்ட ஜீவனை விடுதலை செய்யாமலிருக்கவும் விஷ்ணுவுக்கு அதிகாரமில்லை. எப்படி மஹாராஜாவிடமிருந்து ஒரு கைதியின் விடுதலை-விஷயமாக ஆஜ்ஞை கிடைத்துவிட்டால் காராக்கிருஹத்தின் முக்யாதிகாரி (Jail Superintendent) அக்கைதியை விடுதலை செய்தே தீரவேண்டுமோ, அப்படியே ஜ்ஞானிகளுக்கு விடுதலையை (ஜகத்திலிருந்து விமோசனத்தை) விஷ்ணு கொடுத்தே தீரவேண்டும். மஹாராஜாவிடமிருந்து ஆஜ்ஞை ஏற்பட்டபோதிலும் விடுதலையைச்செய்பவர் காராக்கிருஹ-அதிகாரிதான் என்பது எப்படி ஸத்யமோ, அப்படியே சங்கரரிடமிருந்து ஜ்ஞானம் பிராப்தமானாலும் மோசனத்தைச் செய்துவைப்பவர் விஷ்ணுதான் என்பதில் ஸந்தேஹமில்லை. இதனால்தான் சங்கரரிடமிருந்து ஜ்ஞானத்தையும் விஷ்ணுவிடமிருந்து மோக்ஷத்தையும் இச்சிக்கவேண்டுமென்று சாஸ்திரத்தில் துலக்கப்பட்டிருக்கின்றது. மோக்ஷம் விஷ்ணுவால் ஏற்படுவது வாஸ்தவமானாலும், அதை ஏற்படுத்தும்படி செய்விப்பது சங்கரருடைய காரியமேயாகையால் உண்மையான மோக்ஷ-தாதா சங்கரர்தான் என்பதே ஸித்தம். ஆகையால், பிரகிருதத்தில் குறிப்பிட்ட தார்மிகர்கள் முக்கியமாய் ஜ்ஞானப்பியாஸிகளாயிருப்பதில், இவர்கள் ஜ்ஞானேசுவரரான சங்கரருடைய பக்தர்களாகவே பெரும்பாலுமிருந்துவருகின்றார்கள். இவர்கள் சித்த-சுத்தியின் பொருட்டு, அதாவது மல-தோஷ-நிவிருத்திக்காக, ஸத்-கர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டும், சித்த-சஞ்சலட-நாசத்தின் பொருட்டு, அதாவது விக்ஷேப-தோஷ-நிவிருத்திக்காக சங்கரரையே தங்களுடைய அந்தராத்மா

என்ற பரமாத்மாவாக அபேதபாவனையுடன் உபாஸித்துக் கொண்டும். இந்த அபேத-பாவனை நேர் அனுபூதி-ஜ்ஞான-ரூபமாக ஸித்தித்துவிடும்பொருட்டு, அதாவது ஆவரண-தோஷ-நிவிருத்திக்காக சிரவண-மனன-நிதித்தியாஸனரூப-ஜ்ஞானாப்பியாஸங்களை தீவ்ரமாய்ச் செய்துகொண்டும் வருகின்றார்கள். இந்த உபாஸனம் பர-பக்தியையே குறிப்பிடுவதால், இவர்கள் கிரம-முக்தியைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களே இந்தப் பிரகாரமாக ஸத்-கர்மானுஷ்டானத்துடனும், ஈசுவரோபாஸனத்துடனும், தீவ்ர-ஜ்ஞானாப்பியாஸத்துடனும், காரண-ஆவரண-ஜ்ஞான-சக்தியாகிய உமாதேவீ யென்ற கௌரீயிடத்திலேயே ஸ்திரமான பர-சக்தி-பாவனையுடனும் கூடினவர்களான இந்த தார்மிகர்களுக்கு ருத்திரரின் கைலாஸ-லோகம் பிராப்தமாகி விடுகின்றது.

கைவல்ய-மோக்ஷ-ஸித்தி-பரியந்தம், அதாவது, காரணத்மிகையான அவ்யக்த-மாயையின் தரண யோக்கியதை ஸித்திக்கும் வரையில், இவர்கள் கைலாஸத்திலேயே இருந்து கொண்டு உபரி ஜ்ஞானாப்பியாஸங்களைச் செய்துவர வேண்டும். இவர்கள் இஷ்டப்பட்ட காலங்களில் வைகுண்ட-ஸத்திய-லோகங்களையும் பார்க்கக்கூடும். ருத்திரரின் ஸந்நிதியில் எப்படியோ அப்படியே விஷ்ணுவின் ஸன்னிதியிலும் பிரஹ்மாவின் ஸன்னிதியிலுமிருந்துகொண்டு இவர்கள் உத்தம ஜ்ஞானாப்பியாஸங்களைச் செய்து வரலாம். மேற்கண்ட விபரப்படி கிரம-முக்தி-மார்க்கக் கிரமத்தில் பிரஹ்மாவின் ஸ்தூல-லோகமாகிய ஸத்திய-லோகத்திற்கு மாத்திரம் போகக்கூடிய முமுக்ஷுக்கள் ஸூக்ஷ்ம-லோகமாகிய வைகுண்டத்திற்காவது காரண-லோகமாகிய கைலாஸத்திற்காவது போகக் கூடியவர்களில்லை. இந்தப்படியே, வைகுண்டத்திற்கு மாத்திரம் போகக்கூடிய முமுக்ஷுக்கள் ஸத்திய-லோகத்திற்கும் போகக்கூடியவர்களானாலும் கைலாஸத்திற்குப் போகக்கூடியவர்களில்லை. கைலாஸத்திற்குப் போகக்கூடிய முமுக்ஷுக்கள் மாத்திரம்

மூன்று ஸகுணப்பிரஹ்ம-லோகங்களிலும் இஷ்டப்படியிருந்து வரக்கூடும்.

5. காரணத்தில் காரியங்கள் அடங்கினவை

ஸகல லோகங்களிலும வஸ்துக்களிலும் ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் இம்மூன்றும் சேர்ந்தே யிருக்குமென்று முன் சொல்லப்பட்டது. காரணமில்லாமல் ஸூக்ஷ்மமாவது, ஸூக்ஷ்மமில்லாமல் ஸ்தூலமாவது இருக்கவே முடியாது. ஆனால் ஸ்தூலாவஸ்தையில்லாமல் ஸூக்ஷ்மாவஸ்தையும், ஸ்தூல-ஸூக்ஷ்மாவஸ்தைகளில்லாமல் காரணாவஸ்தை மாத்திரமும் இருக்கக்கூடும். பச்சை வெட்டுச் செங்கல்களால் நிர்மாணஞ் செய்யப்பட்டிருக்கிற ஒரு வீட்டை உதாஹரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். மண்ணில்லாவிடில் செங்கல் இல்லை. மண்-செங்கல்களில்லாவிடில் வீடும் இருக்கமாட்டாது. செங்கல்-ரூபமும் வீடு என்ற ரூபமும் இல்லாமல் போனாலும், அவ்விரண்டுக்கும் காரணமான மண் இருந்தே தீரும் எப்படி மண்ணில் செங்கல்லும், வீடும் பிரதிஷ்டையை அடைந்திருக்கின்றனவோ, அப்படியே ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இரண்டும் காரணத்தில் பிரதிஷ்டையை அடைந்திருக்கின்றன. எவ்விதம் மண்ணே செங்கலாகவும் வீடாகவும் தோன்றுகிறதோ, அவ்விதம் காரணமே ஸூக்ஷ்மமாகவும் ஸ்தூலமாகவும் விளங்குகின்றது. வியஷ்டி-ஜீவாத்ம-விஷயத்தில் உண்மையான காரண-பாரமார்த்திக-ஜீவாத்மாவாகிய பிராஜ்ஞன் ஒருவனே அவஸ்தா-பேதங்களினால் ஸ்தூலாபிமானியாகிய விசுவனாகவும் ஸூக்ஷ்மாபிமானியாகிய தைஜஸனாகவும் விளங்குகின்றானே யல்லாமல் பிராஜ்ஞன்-விசுவன் தைஜஸன் என்பதாக மூன்று ஜீவாத்மாக்கள் தனித்தனியா யில்லை யென்பதே அனுபவ-ஸித்தம். இந்தப்படிக்கே, ஸமஷ்டி-ஸர்வாத்ம-விஷயத்திலும் பிரஹ்மா-விஷ்ணு-ருத்திரர்களென்று காணப்படுகின்ற மூவகை-பேதத்தோற்றங்களும் வியவஹாரங்களுமிருந்தாலும், மூன்று ஸமஷ்டி-ஆத்மாக்கள் வாஸ்தவத்தில்

தனித்தனியா யில்லை யென்பதே உண்மை. அதாவது, ஸமஷ்டி-காரணாத்மாவான ருத்திரரே ஸமஷ்டி-ஸூக்ஷ்மாத்மாவாகிய விஷ்ணுவாகவும் ஸமஷ்டி-ஸ்தூலாத்மாவாகிய பிரஹ்மாவாகவும் விளங்குகின்றார்.

இப்படியே, காரண-அவ்யக்த-மாயாத்மிக-ஜ்ஞான-சக்தியாகிய உமாதேவீயே (கௌரீயென்ற பார்வதீயே) ஸூக்ஷ்ம-மஹதாத்மிக-இச்சா-சக்தியாகிய லக்ஷ்மீயாகவும் ஸ்தூலாஹங்கார-மாயாத்மிக-கிரியா-சக்தியாகிய ஸரஸ்வதீயாகவும் விளங்குகின்றாள். பிரயோஜனத்தை உத்தேசிக்காமல் அதாவது இச்சையில்லாமல், கிரியை செய்யப்படுகிறதே யில்லை நிஷ்காம-கர்மமென்று சொல்லப்படுகின்ற விஷயத்திலும், சித்த-சுத்திரூபப் பிரயோஜனத்தையாவது பகவதாஜ்ஞானுஸரணரூபப் பிரயோஜனத்தையாவது லோக-ஸங்கிரஹரூபப் பிரயோஜனத்தையாவது இச்சித்துக் கொண்டு தான் அந்த கர்மம் செய்யப்படுகின்றது. ஆகையால், கிரியை எப்போதும் இச்சையைப் பொருத்தே நிற்கின்றது. இச்சையோவெனில் ஜ்ஞானத்தைப் பொருத்து நிற்கின்றது எந்த விஷய-ஸம்பந்தமாக இச்சை உண்டாகின்றதோ அந்த விஷயத்தின் ஜ்ஞானத்தை முன்னிட்டே அது உண்டாகக்கூடும். பிரத்தியக்ஷத்தினாலேயோ ஜ்ஞாபகத்தினாலேயோ அல்லது புதிதான மனோ-பாவனையினாலேயோ ஏறக்குறையத் தெளிவாக எது முதலில் ஜ்ஞானத்திற்கு விஷயமாகின்றதோ அது-ஸம்பந்தமாகத்தான் இச்சை உதிக்கும். ஜ்ஞானத்தை முன்னிடாமல் இச்சை உண்டாவதேயில்லை. இச்சையை முன்னிடாமல் கிரியை உண்டாவதில்லையென்று முன்னால் காண்பிக்கப்பட்டது. ஆதலால், இச்சையில் கிரியையும், ஜ்ஞானத்தில் இச்சையும் பிரதிஷ்டையை அடைந்திருக்கின்றன. அந்தந்த சக்திகளுடன் கூடியவர்களுக்குள்ள பரஸ்பர-ஸம்பந்தங்களும் மேற்கண்டதற்கு ஒற்றுமையாகவே யிருக்கும். அதாவது, கிரியா-சக்தி ரூபிணீயாகிய ஸரஸ்வதீ இச்சா-சக்தி ரூபிணீ

யாகிய லக்ஷ்மீயிடத்திலும், லக்ஷ்மீ ஜ்ஞான-சக்தி ரூபிணீயாகிய கௌரீயிடத்திலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வித மாக சரஸ்வதீ, லக்ஷ்மீ இருவர்களும் கௌரீயை ஆசிரயித்தவர் களே கௌரீயை விட்டுத் தனியாக ஸரஸ்வதீ-லக்ஷ்மீகளால் க்ஷணங்கூட இருந்துவர ஸாத்தியப்பட மாட்டாது. ஆகையால், மூன்று தனி தேவிகள் இருப்பது போல் சொல்லாமல், மேற்சொல்லியபடி கௌரீயே மற்ற இருவர் களைப் போலவும் விளங்குகிறாளென்றே சொல்லவேண்டும்.

இப்படியே, காரண-ஸகுணப்பிரஹ்ம-லோக மாகிய கைலாஸமே ஸூக்ஷ்ம ஸகுணப்பிரஹ்ம-லோகமாகிய வைகுண்ட மாகவும் ஸ்தூல-ஸகுணப்பிரஹ்ம-லோகமாகிய ஸத்திய-லோக மாகவும் தோன்றுகின்றதென்றே எண்ண வேண்டும். இவ்வித மாக மூவ்வகைப்பட்டுத் தோன்றுவதெல்லாம், ஜீவர்களின் குண-பேதங்களையும் அவைகளின் காரியங்களான யோக்கியதா-பேதங்களையும் முன்னிட்டு, எல்லோரையும் ஜீவத்வ-ஸ்தானத்திலிருந்து உத்தரணஞ் செய்வதற்காகவே, பரமாத்மாவால் முன் குறிப்பிட்டபடி ஸங்கல்பிக்கப் பட்டிருக்கின்றதென்பதே உண்மை. இவ்வுண்மை நன்றாக ஸகுணோபாஸகரின் புத்தியில் பதிந்து விட்டால், அதாவது, ஸகுணப்பிரஹ்ம-லோகத்திரய-மூர்த்தித்ரய தேவீத்திரய-ஸம்பந் தமாயுள்ள திருச்ய-பேதங்களெல்லாம் உபாஸகர்களின் குண-பேதங்களைப் பொருத்தவைகளே தவிர வேறல்ல வென்று தெரிந்துகொண்டுவிட்டால், குணங்களைக் கடந்து ஸ்வானுபூதி-ரூபமாய் பார்க்க யத்தனிப்பதற்கு, அதாவது சிரவண-மனன ரூப-ஜ்ஞானாப்பியாஸங்களைச் செய்து சீக்கிரத்தில் நிதித்தி யாஸனரூப-நிர்குணோபாஸனத்தைக் கைக்கொள்வதற்கு யோக் கியராகிவிடுவார். கிரம-முக்தி-மார்க்கத்தில் கைலாஸத்தையே அடையக்கூடிய அல்லது அடைந்திருக்கின்ற முமுக்ஷுவிடந் தான் இவ்வித விசேஷ யோக்கியதை யிருக்கக்கூடியது. இவர் ஸர்வ-காரண-ஸகுணப்பிரஹ்ம-மூர்த்தியான ருத்திரரையும்

ஸர்வ-காரண-மாயா-சக்தியான கௌரீயையும் மனதினாலாவது பிரத்தியக்ஷமாகவாவது தர்சனஞ் செய்யும் போதே அந்த இரண்டு மூர்த்திகளிலும் காணப்படுகின்ற ஸ்தூலாம்சங்களும் ஊஹிக்கப்படுகின்ற ஸூக்ஷ்மாம்சங்களும் ஆரோபிதங்களே யல்லாமல் வாஸ்தவமில்லை யென்றும், தன்னால் தத்காலத்தில் ஸாக்ஷாத்கரிக்கக்கூடாத காரணாம்சந்தான் வாஸ்தவமென்றும் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டிருக்கின்றார். முன்னாலேயே காண்பித்தபடி காரணாம்சம் ஆனந்த-பூர்ணமாகவேயிருப்பதால் அவ்வம்சம் ஸ்வாத்மானுபூதி-விஷயமே யல்லாமல் பின்னாதிருச்ய-விஷயமல்ல.

6. த்ரிபுராந்தகர்

அன்றியும், ஸ்தூலத்வஸூக்ஷ்மத்வங்களை ஒட்டியே காரணத்வ-வியவஹாரம் ஏற்பட்டிருக்கின்றதே யொழிய, இது தனியாக ஏற்படுவது கிடையாது. ஸ்தூலத்வ-ஸூக்ஷ்மத்வங்களின் மித்யாத்வம் ஸித்தமாயிருக்கும்போது, காரணத்வமும் மித்யைதானென்றே இவர் தெரிந்துகொண்டுவிடுகின்றார். ருத்திரரின் ஆனந்த-தாண்டவாதி-ஸமயங்களில் பிரகாசிக்கின்றதும் எப்போதும் அவரிடம் ஸ்வதஸ்ஸித்தமாயிருப்பதுமான பேரானந்தம் துரீயாத்ம-ஸ்வரூபமேயாதலால், ருத்திரரின் உண்மையான காரணஸ்தானம் துரீயஸ்தானமேயல்லாமல் முக்குணங்களுக்காவது மூன்று அவஸ்தைகளுக்காவது உட்பட்ட மூன்றாவது ஸ்தானமல்ல. ஜீவர்கள் அவர்களுடைய காரண-உபாதியான அவித்யைக்கு வசப்பட்டிருப்பதால், அவித்யா-காரியங்களான ஸ்தூல-ஸூக்ஷ்ம-ஸ்தானங்களாகிய ஜாக்கிரத்-ஸ்வப்நாவஸ்தைகளிலிருந்து விடுபட்டு, கேவல-அவித்யா-ஸ்தானமாகிய ஸுஷுப்தி-அவஸ்தையில் கட்டுப்பட்டிருக்கும்போது, அவர்கள் மூன்றாவதான காரணஸ்தானத்திலுள்ள பிராஜ்ஞர்களென்று சொல்லப்படுகின்றார்கள். இம்மூன்று ஸ்தானங்களையும் உத்தேசித்து கைவல்ய-மோக்ஷ-ஸ்தானமாகிய ஆத்ம-ஸ்தானம் துரீய (நான்காவது) ஸ்தான

மென்று கூறப்பட்டிருக்கிறது. மேற்சொல்லிய விதமான பந்தத்துடன் கூடிய மூன்ருவது ஸ்தானமே ருத்திரருக்குக் கிடையாது. அவருக்கு காரணோபாதியாகச் சொல்லப்பட்ட மாயை அவருடைய ஸ்வாதீனத்திலேயே இருப்பதாலும், அம்மாயையினுல் அவருடைய பிரஹ்மத்வத்திற்குக் கொஞ்சங்கூட குறைவுண்டாகக்கூடாததாலும் அவருடைய ஸ்வஸ்தானம் துரீயமென்ற பிரஹ்மஸ்தானந்தானென்பதே நிச்சயம். உண்மையில் ஸர்வ-காரணமாயிருப்பது ஏகமான பிரஹ்மத்தைத்தவிறவேறல்ல. ருத்திரர் காரணாத்மரூபியென்ருல் அவரே பிரஹ்மம் தான் என்றே அர்த்தம். இவ்வுண்மை சுருதியிலும் இதிஹாஸ புராணங்களிலும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுமிருக்கின்றது. ஸாமான்ய-ஜீவப்பிரபஞ்ச-திருஷ்டியில் ஸ்தூல ஸூக்ஷ்ம காரண-ஸ்தானங்களென்று முக்குணங்களையும் ஒட்டி எவை சொல்லப்பட்டிருக்கின்றனவோ, அவைகளுக்கு அதீதமான துரீயப் பிரஹ்மஸ்தானத்தில் ருத்திரர் இருந்து வருவதினுல்தான், ஸ்தூல-ஸூக்ஷ்ம-காரணரூப-ஸம்ஸாரத்திரயத்தையும் நிச்சேஷமாய் பஸ்மஞ்செய்துவிட அவருக்கு பரிபூர்ண சக்தியிருக்கின்றது. இவ்வித சக்தி மற்ற யாருக்குங் கிடையாது இதனுல்தான் அவரே திரி-புர-ஹரரென்றும் திரி-புராந்தகரென்றும் பிரஸித்தி ஏற்பட்டிருக்கின்றது. ஸ்தூல-ஸூக்ஷ்ம காரணாத்மகமான பந்தத்திரயமே புரத்திரயம் (முப்புரம்). இந்த முப்புரத்தில் எல்லா ஜீவகோடிகளும் பத்தர்களாய் (அடைபட்டவர்களாய்) இருக்கின்ருர்கள். இம்முப்புரமே "ஜகத்" என்று சொல்லப்படுகின்றது. ஸ்தூலத்வத்தில் பற்றுதல், ஸூக்ஷ்மத்வத்தில் பற்றுதல், காரணத்வத்தில் பற்றுதல், இம்மூன்றுமே திரி-புராஸுரர்கள். இவ்வஸுரர்களை ஹதஞ்செய்து முப்புரத்தையும் நாசஞ்செய்ய மேற்கண்டபடி ருத்திரர் ஒருவரே சக்தர். இவர் மூன்ருவதாகச் சொல்லப்பட்ட காரண-ஸ்தானத்திற்குக் கட்டுப்பட்டவராயிருந்தால், காரண-புரமுள்பட முப்புரத்தையும் நாசஞ்செய்ய இவரால் முடிந்திருக்கமாட்டாது. இவருக்கு மாயை வசப்பட்டிருப்ப

தாலும், இவரே துரீயப்பிரஹ்மத்தைத் தவிர வேறில்லையாத லாலும், அனாத்மபூதமான முப்புரத்தையும் கொளுத்தி பஸ்மமாகச் செய்வதும திரி-புராஸுரர்களை ஸம்ஹாரஞ்செய்வதும் இவருக்கு ஒரு பெரிய காரியமில்லாமலிருந்திருக்கின்றது. வேறுஸாதனங்களைத்தேடாமலே கேவல மந்தஹாஸத்துடன் தன் மூன்றாவதான ஜ்ஞான-நேத்திரத்தைக் கொஞ்சம் திறந்ததினாலேயே திரி-புர-ஸம்ஹாரம ஸித்தித்துவிட்டது. அனாத்மபூதமான ஸகலத்துடையவும் நாசத்தில் ஆத்ம-ஜ்ஞானம் ஒன்றுதான் ஸாதனம் என்பது நன்றாக வெளியிடப்பட்டது. இங்கு குறிப்பிட்ட மந்தஹாஸம் ருத்திரரின் ஆனந்த-ஸ்வரூபத்தையே தூலக்குகின்றது. மேற்கண்டபடி திரி-புர-ஸம்ஹாராதிகளைச் செய்யும்பொருட்டு விஷ்ணு பிரஹ்மாதிகளான ஸகல முக்கிய தேவர்களாலும் ருத்திரர்-பிரார்த்திக்கப்பட்டார். பந்தாத்மகமான லோகங்களின் ஸம்ரக்ஷணையின் பொருட்டு ஏகதேசத்தில் ஏதாவது துஷ்ட-ஸம்ஹாராதி காரியம் செய்யப்படவேண்டுமானால், அது விஷ்ணுவாலேயே (ருத்திராம்சத்தின் ஆவேசத்துடன் கூடிய அவதாரங்களைச் செய்து) முடித்துவிடப்படக்கூடும் வியஷ்டி-ஸமஷ்டி-ஸ்தூல-ஸூக்ஷ்ம காரணபூதமான ஸர்வமும் நாசத்தை அடைய வேண்டுமானால், அதாவது, ஸாக்ஷாத்கைவல்ய மோக்ஷமே ஏற்படவேண்டுமானால், ஸ்தூல-ஸூக்ஷ்ம-காரண ஸ்தானங்களாகிய மூன்று ஸ்தானங்களுக்கும் அப்பாலுள்ள துரீய-ஸ்தானத்தில் யார் இருந்துவருகின்றாரோ அவர் ஒருவரால்தான் அவ்வித நாசம் ஏற்படக்கூடும். இவ்விதமாக ருத்திரர் உண்மையில் துரீயப்பிரஹ்மமே யென்ற விஷயம் மேலே குறிப்பிட்ட உத்தம ஜ்ஞானாப்பியாஸிகளுக்குத் தெரியவருமாகையால், இவர்களுடைய உறுதியான ஏகத்வ-புத்தியுடன் கூடியதும் சிவ-பக்தியுடன் கலந்ததுமான ஜ்ஞானாப்பியாஸம் சுத்த-நிர்குணோபாஸனமாகவே ஏற்பட்டு, முடிவில் இவர்களை துரீய-நிர்குணப்பிரஹ்மப்பிராப்தி ரூபமான கைவல்ய-மோக்ஷத்தில் சேர்ப்பிவித்து விடுமென்பதே ஸித்தம்.

7. கிரம முக்தி

இங்கு மறுபடியும் ஒரு கேள்விக்கிடமிருப்பதாகச் சிலர்கள் எண்ணக்கூடும். ஸகுணோபாஸகர் உத்தமோத்தம ஸகுணப் பிரஹ்ம-லோகத்திற்குச் சென்ற பிறகும் அவருக்கு அங்கே நிர்குணோபாஸனம் நிலைத்து பலப்பட்ட பின்புதான் அபரோக்ஷாத்ம-ஜ்ஞானம் உதிக்கக்கூடியதாயிருப்பதினால் நிர்குணோபாஸனந்தான் முக்கியமென்பதும் அதுவே ஜ்ஞானத்திற்கு அந்தரங்க ஸாதனமென்பதுமே வாஸ்தவமென்று ஏற்படுகின்றது. இந்தப்படியே முன்னால் சொல்லப்பட்டுமிருக்கிறது. ஸகுணப்பிரஹ்ம-லோகத்திற்குப் போய்ச் சேருவதற்குள்ள விசேஷ உபாஸனாதி-சிரமங்களை எடுத்துக் கொள்ளாமலே இவ்வுலகத்தில் நிர்குணோபாஸன-அப்பியாஸத்திலேயே புத்தியைப் பூராவும் செலுத்தி ஜ்ஞானப்பிராப்திக்கு வழியைத் தேடிக்கொள்வதே உத்தமமில்லையாவென்று கேட்கலாம். அதாவது கைலாஸாதி-லோகப்பிராப்தியின் பொருட்டு அதிக யோக்கியதையை உண்டாக்கக்கூடியதான விசேஷ ஸகுணோபாஸனங்களைக் கைக்கொள்ளாமலே, ஜ்ஞானாப்பியாஸத்திற்கு எம்மட்டில் அவசியமாயுள்ளதோ அம்மட்டில் நித்திய-நைமித்திக-கர்மங்களால் சித்த-சுத்தியையும், அக்கர்மங்களில் அடங்கியிருக்கின்ற ஸாமான்ய உபாஸனங்களின் மூலமாக சித்த-ஐகாக்ரியத்தையும் ஸாதித்துக்கொண்டும், ஒழுங்காய் சிரவண-மனனங்களைச் செய்து பரோக்ஷ ஜ்ஞானத்தை ஸம்பாதித்துக்கொண்டும், மேலான நிதித்தியாஸன-ரூபமான நிர்குணோபாஸனத்தை அப்பியஸித்து வருவதே சிலாக்கியமென்று மேற்கண்டவர்கள் எண்ணலாம். இப்படி எண்ணுவது சாஸ்திர-விரோதமில்லையென்று சொல்லக்கூடியதானாலும், புனர்-ஜன்ம-கஷ்டங்களுக்குட்படாமலே நிதித்தியாஸனம் உறுதிப்பட்டு முடிவான உத்தேசமாகிய ஜ்ஞான-ஸித்தி லகுவாயும் சீக்கிரத்திலும் நிச்சயமாகவும் கைகூடவேண்டுமானால் பர-பக்திக் கிரமத்தில்

மேற்சொல்லிய விசேஷ உபாஸனங்களைச் செய்து ஸகுணப் பிரஹ்ம-லோகஞ்சென்று அங்கு மேல் யத்தினங்களைச் செய்வதே பெரும்பாலும் முமுக்ஷுக்களுக்கு அனுகூலமென்பதாகவே வெளியாகின்றது.

கர்ம-லோகமாகிய இவ்வுலகத்தில் பிரவிருத்தி-தர்ம-மார்க்கத்தில் இருந்து வருபவர்களுக்கு நிதித்தியாஸனுபிப்யாஸம் ஸம்பூரணமாய் இக்கொடிய கலி-காலத்தில் பலப்படுவது அனேகமாய் சிரமப்படும். அதாவது. தார்மிகர்கள் வேத-விஹிதமான நித்திய-நைமித்திக-கர்மங்களையும் அவசியமான லௌகிக-காரியங்களையும் செய்யாமலிருக்கக் கூடாததாலும், இககர்ம-பூமியில் ஸுக-துக்கானுபவங்கள் பலவிதமாக ஏற்பட்டுக் கொண்டேயிருக்கக்கூடியதாலும், இவ்வித கர்ம-காரிய-அனுபவ-காலங்களில் தைல-தாரையைப் போல் நிரந்தரமாக ஆத்ம-சிந்தனத்தைச் செய்வது பெரும்பாலும் ஸாத்தியப்படக் கூடாததாலும், அவர்களுடைய நிதித்தியாஸன-அப்பியாஸத்திற்கு அடிக்கடி பங்கம் ஏற்பட்டுக் கொண்டு தானிருக்கும். தொடர்ந்து நடத்தப்படாமல் இப்படி விட்டு விட்டுச் செய்யப்படுகின்ற தியானம் சீக்கிரத்தில் ஸமாதியில் முடிவடையக் கூடியதல்ல. ஸமாதி நிலைத்து அபரோக்ஷ-ஜ்ஞானம் ஸித்தித்தாலொழிய பாக்கியுள்ள ஸஞ்சித-கர்ம-வினைகள் நாசமாக மாட்டா. ஆகையால், பிரவிருத்தி-தர்ம-மார்க்கத்திலிருந்து கொண்டு நிதித்தியாஸனைப்பியாஸத்தைச் செய்து வருகின்றவர்களும் விசேஷ ஸகுணோபாஸனத்தைக் கைக்கொள்ளாதவர்களுமான முமுக்ஷுக்கள் ஜ்ஞான-ஸித்தி-பரியந்தம் திரும்பத்திரும்பவும் இவ்வுலகத்தில் ஜன்மங்களை அடையும்படியாகவே நேரிடும். எல்லா லோகங்களுக்குள்ளாக காரண-லோகமாகிய ஸகுணப்பிரஹ்ம-லோகத்தில் காரணத்வ-ஸம்பந்தத்தில் முன் காட்டியபடி ஸத்வ-குணப்பிராதான்யமே விசேஷமாயிருப்பதாலும், அங்குள்ளவர்களுக்கு பசி, தாகம், சோகம், மோஹம், ஜரை, மரணம் இந்த ஆறு ஊர்மிகளென்ற

தோஷங்கள் கிடையாதாகையாலும், அந்த லோகத்தில் (அதிலும் ஸர்வோத்தமமான காரண-காரண-லோகமாகிய கைலாஸத்தில்) எவ்வளவு ஸ்பஷ்டமாகவும் சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் ஆத்மப்பிரகாசம் விளங்கக்கூடியதோ அவ்வளவு தெளிவாயும் விரைவாகவும் உறுதியாயும் தமோ-குணப்பிரதானமான இப்-பூலோகத்தில் விளங்கக் கூடியதில்லை.

இவ்வுலகத்திலுள்ள இக்காலத்திய முமுக்ஷுக்களுக்குள்ளாக வெகு பெயர்கள் விசேஷ உபாஸனமார்க்கத்தைக் கைக்கொள்ளாமலே ஜ்ஞானப்பியாஸத்தைச் செய்து வருவதாகச் சொல்லிக் கொண்டும், இனி தங்களுக்கு பூ-லோகத்தில் புனர்-ஜன்மமே கூடாதென்ற தீவ்ர எண்ணங் கொண்டுமிருக்கின்றார்கள். இவர்களில் அனேகர்கள் ஜ்ஞான-ஸித்தி ஏற்படுவது லகுவான காரியமென்றும் தப்பிதமாக எண்ணிக் கொண்டுமிருக்கின்றார்கள். இங்கு புனர்-ஜன்மம் இவர்களுக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமானால், இவர்களுடைய தத்கால-யத்தினங்கள் நடப்பு ஜன்மத்திலேயே ஜ்ஞான-ஸித்தியில் முடிவடையக் கூடுமானால் தான் அவ்வுத்தேசம் நிறைவேறும். ஜ்ஞானம் ஸித்திக்காமல் ஜ்ஞானப்பியாஸக-ஸ்தானத்திலிருக்கும்போதே ஜீவ-காலம் முடிவாகி விட்டால் மறுபடியும் இங்கு ஜன்மம் ஏற்பட்டே தீரும். அதைத் தடுக்கமுடியாது. ஜ்ஞான-ஸித்தியை அடையாத ஜ்ஞானப்பியாஸகருக்கு புனர்-ஜன்மம் உண்டாகாமலிருப்பதற்கு இரண்டு மார்க்கங்கள் தான் உண்டு, ஒன்று ஜ்ஞானப்பியாஸத்துடன் தீவ்ரமான பர-பக்தியும் சேர்ந்திருந்து கிரம-முக்தியைப் பெறுவதற்குள்ள யோக்கியதை ஸ்திரப்பட்டிருக்க வேண்டும், மற்றொன்று தீவ்ர-தரமான வைராக்கியத்தை முன்னிட்டுத் தகுந்த அதிகாரியாயிருந்தால் பிரவிருத்தி-தர்ம-மார்க்கத்தை விட்டு முழுவதும் விலகி பரம ஹம்ஸாசிரமத்தைக் கைக்கொண்டு சுருதிப்படிக்குள்ள பரம ஹம்ஸ-தர்மங்களை நன்கு ஆசரித்து வரவேண்டும். இவ்வித

பர-பக்தரும் பரமஹம்ஸரும் ஸகுணப் பிரஹ்ம-லோகஞ் சென்று அங்கு ஜ்ஞான-ஸித்தியை நிச்சயமாய்ப் பெறுவார்கள். இவ்விருவர்களுக்கும் இப்பூலோகத்தில் மறு ஜன்மம் ஏற்படவே மாட்டாது. இந்த விபரம் கடைசியில் கொஞ்சம் துலக்கிக் காட்டப்படும். ஸகுணப்பிரஹ்ம-லோக-வாஸ-காலத்தில் இவ்விருவர்களுடைய பூர்வ கெட்ட கர்மங்கள் யாவற்றும் நல்ல கர்மங்களில் அனேகங்களும் அநுதற்குரிய பலன்களைக் கொடுக்க அவகாசமன்னியில் அடங்கியே யிருந்துவந்து இவர்களுக்கு அந்த லோகத்தில் ஜ்ஞான-ஸித்தி ஏற்பட்டவுடன் நிச்சேஷமாய் நாசத்தை அடைந்து விடுகின்றன. இவ்விருவர்களைத்தவிர மற்ற அப்பியாஸகர்களெல்லோரும் பூ-லோகத்தில் மறுபடியும் அடிக்கடி ஜன்மங்களை எடுத்துக் கொண்டும் அவரவர்களின் பூர்வ நல்ல-கெட்ட கர்ம-பலன்களை அனுபவித்துக்கொண்டுமே யிருப்பார்கள்.

ஆகையால், எந்த முமுக்ஷுவின் மனதில் தனக்கு மறு ஜன்மமே வேண்டாமென்ற எண்ணம் உறுதியாயிருக்குமோ அவர் ஜ்ஞானாப்பியாஸத்தை மாத்திரம் செய்து வந்தால் போதாது; பர-பக்தியைச் செலுத்தி ஸகுணோபாஸனத்தையும் செம்மையாய் நடத்திவர வேண்டியதுமவசியம். விசேஷ ஸகுணோபாஸன-பலத்தினால் தனக்கு ஸகுணப்பிரஹ்ம-லோகப் பிராப்தியையும் பூ-லோகத்தில் புனர்-ஜன்மமில்லாமையையும் ஸ்திரப்படுத்திக் கொண்டே ஜ்ஞானாப்பியாஸத்தினால் கைவல்ய-முக்திக்கு வழிதேடுவது தான் யுக்தி-யுக்தமான செய்கையாகும். ஸகுணோபாஸனத்தில் செலவாகக்கூடிய காலத்தை ஜ்ஞானாப்பியாஸத்திலேயே சேர்த்துச் செலவழித்தால் ஜ்ஞானம் சீக்கிரத்தில் கைகூடலாமேயென்று நினைத்துக்கொண்டு ஸகுணப் பிரஹ்ம-லோகத்திற்குப் போய் சேருவதற்கு இடமில்லாமலே செய்து கொண்டிருந்தும் ஜ்ஞான-ஸித்தி பூர்த்தியாகாமல் போய் விட்டால் மறுபடியும் இக்கலி-காலத்தில் இங்கு ஜன்மங்களும் அவைகளை ஒட்டிய அஸௌகரியங்களும்

கஷ்டங்களும் திரும்பி வந்து கொண்டு தானிருக்கக்கூடியவை. ஆதலால், புனர்-ஜன்மத்தில் பயமும், ஜ்ஞான-ஸித்தியில் ஊக்கமும் மிகுதியாயுள்ளவர்களும் வேத-விதிப்படி பரமஹம்ஸாசிரமத்தைக் கைக்கொள்ளத் தகுதி யில்லாதவர்களுமான முமுக்ஷுக்கள் எல்லோரும் ஸகுணோபாஸனத்தை நன்கு அவலம்பிக்க வேண்டியதவசிய மென்பதே உறுதி. ஸகுண-மூர்த்தியான ஈசுவரருடைய அனுகிரஹத்தினாலேயே மாயா-தரணம் மூலமாய் ஆத்மத்வ-ஸித்தி விளங்க வேண்டியதாயிருக்கின்றது. ஈசுவர-மாயையைக் கடப்பது கஷ்டமென்றும் அவ்யக்தமான நிர்குணப் பிரஹ்ம-மார்க்கம் பிடிபட்டு அதில் செல்வது தேஹவான்களுக்கு மிகவும் சிரமப்படுமென்றும் பகவானே கீதையில் வெளியிட்டுச் சொல்லியுமிருக்கின்றார். மேற்கண்ட ஈசுவரானுக்கிரஹத்தைப் பெரும்பாலும் ஸகுணோபாஸன-பலத்தினாலேயே ஸாதித்துக்கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. ஆகையால், ஜ்ஞானாப்பியாஸகர்களும் உறுதியுடன் பர-பக்தியைச் செலுத்தி உத்தம ஸகுணோபாஸகர்களாகவு மிருப்பதே நன்மை.

அத்தியாயம் 23

நித்ய ஸுகம்

1. விஷய ஸுகம்

ஆனந்தமே பிரஹ்ம-ஸ்வரூபம் ஆனந்தத்திலேயே பிரஹ்மத்தின் ஸத்-சித்-ஸ்வரூபங்களும் விளங்குகின்றன. காணப்பட்டதும் காணப்படாததுமான ஸகல வஸ்துக்களிடத்திலும், அதுபோலவே நம் ஒவ்வொரு ஜீவனிடத்திலும், உண்மையாய் எக்காலத்திலும் மாறுதலின்றி ஸதிரமாயிருக்கிற பொருள் அந்த ஆனந்த-ஸ்வரூபியான பிரஹ்மந்தான். உண்மையில் பிரஹ்மமாயிருந்தும், அதைவிட்டு விலகியது

போல் நாமிருப்பதால், ஆனந்தமும் நம்மைவிட்டு விலகியது போல் தோன்றுகிறது. எப்பொழுது இப்படி நாம் விலகியிருப்பதான தோற்றத்திற்குக்காரணமாகிய அவித்யை நம்மை விட்டு நீங்குமோ, அப்பொழுது நம்முடைய ஆனந்த-ஸ்வரூபமும் நன்கு விளங்கும். பிரஹ்மம் ஒன்றுதான் ஸத்தியம், ஜகத்து ஸத்தியமல்ல, ஜீவர்களாகிய நாம் பிரஹ்மத்தைத்தவிர வேறல்ல, என்ற விஷயங்கள் தெளிவாய் வேதங்களின் முடிவு பாகங்களாகிய உபநிஷத்துக்கள் மூலமாய் ஸர்வேசுவரனுல் வெளிப்படுத்தப்பட்டும், நம் ஆசாரியர்களால் அத்புதமான பாஷ்யாதி-கிரந்தங்கள் மூலமாய் விசதமாகத் துலக்கி ஸ்தாபிக்கப்பட்டுமிருக்கின்றன.

எப்படி உண்மையான பொருள் பிரஹ்மத்தைத் தவிர வேறல்லவோ, அப்படியே உண்மையான ஆனந்தமும் பிரஹ்மானந்தத்தைத் தவிர வேறல்ல. இன்றிருந்து நாளையில்லாமலிருக்கக்கூடிய தோற்றங்களில் பொருள் என்ற புத்தி எப்படி நமக்கு ஏற்பட்டிருக்கின்றதோ, அப்படியே க்ஷணிகமாயிருக்கிற விஷய-சுகத்தோற்றங்களில் ஆனந்தம் என்ற பிரமையும் நமக்கேற்பட்டிருக்கின்றது. விஷய-சுகம் வேறு, ஆனந்தம் வேறு என்பதையும், எப்படி இவ்விரண்டும் வெவ்வேறு என்பதையும், தெரிந்துகொள்ளவேண்டியது முக்கியம். எல்லாவற்றுக்கும் அதிஷ்டானமாகிய பிரஹ்மம் இல்லாவிடில் ஜகத்து இருக்கமாட்டாது. ஜகத்து இல்லாவிடினும் பிரஹ்மம் இருக்கும். ஜகத்து பிரஹ்மத்தைக் காட்டிலும் வேறில்லாவிட்டாலும், பிரஹ்மம் ஜகத்தைவிட வேறுதான். ஆகையால், ஜகத்தும் பிரஹ்மமும் ஒன்றுதானென்று எப்படிச் சொல்லக்கூடாதோ, அப்படியே, விஷய-சுகமும் சாஸ்திரத்தில் சொல்லியபடி பிரஹ்மானந்தத்தின் க்ஷணிகமான தாத்காலிக-பிரதிபலன-ரூபமாகவே இருந்தபோதிலும், பிரஹ்மானந்தமே விஷய-சுகமாக மாட்டாது. எவ்விதம் அந்தக்கரணத்தில் பிரதிபலித்திருக்கிற சிதாபாஸனென்ற ஜீவத்தோற்றமானது

பிம்ப-ரூபியான பிரஹ்மமென்ற ஆத்மாவைக்காட்டிலும் வேறில்லையானாலும், ஆத்மாவே ஜீவனாகிறதில்லையோ, அவ்விதமாகவே, நித்திய-அகண்டமான பிரஹ்மானந்தம் வேறுதான், அதன் லேசலேசமானதும், அநித்தியமும், அல்பமும், கேவல-பிரதிபலனமாத்திரமுமான விஷய-சுகம் வேறுதான்.

எதுவரையில் ஒருவருக்கு திருக்-திருச்ய-ரூபமான பிரபஞ்சத்தில் தான் ஒரு ஜீவன் என்ற பாவனையிருந்து வருகிறதோ, அதுவரையில் அவர் சுக-துக்கங்களுக்குத் தான் பாத்தியப்பட வேண்டுமே யொழிய, அவருக்கு பிரஹ்மானந்தம் எட்டமாட்டாது. அநித்தியமான ஜீவத்வம் மறைந்து சுத்த-நித்திய-பிரஹ்மத்வம் மாத்திரம் மிஞ்சி நின்றபோதுதான் பிரஹ்மானந்தம் விளங்கும். அந்தக்கரண-விசிஷ்டனாகிய வெவ்வேறான பரிமித-ஜீவனால் கால-தேச-நிமித்தங்களுக்குட்பட்டு பரிமிதமானதும், பின்னப்பட்டதுமான போகங்களைத் தான் அனுபவிக்க முடியுமே தவிர அபரிமிதமாயும், அகண்டமாயும், ஏகமாயுமுள்ள ஆனந்தத்தை மனஸினால் எண்ணுவதற்குக்கூட ஸாத்தியப்படமாட்டாது. வாஸ்தவத்தில் நாம் ஆத்மா என்ற பிரஹ்மமாக இருந்தும், நம்முடைய ஆத்மத்வம் மறைந்து நின்று நம் ஜீவத்வம் மாத்திரம் கூத்தாடிக் கொண்டிருக்குங்கால் நம்முடைய ஆனந்த-ரூபமும் மறைந்திருந்து நம் சுக-துக்கங்கள் தான் திரும்பித்திரும்பி வந்து கொண்டிருக்கும்.

அபரிமிதமான ஆனந்தம் மறைந்து போய் பரிமிதமான விஷய-சுகம் ஏற்பட்ட போதிலும், துக்கம் எப்படி வந்ததென்று ஸந்தேஹிக்கலாம். சுகத்தின் பரிமிதத்தன்மைக்குக் காரணமே துக்கமென்று தான் வெளியாகின்றது. விஷய-சுகத்திற்கு சுகத்தன்மையே துக்க ஸம்பந்தத்தினால் தான் ஏற்படுகிறது. அச்சுகத்திற்கு முன்பாகவாவது, பின்னாலாவது, ஸம-காலத்திலாவது துக்கமிருந்தால்தான் அதற்கு சுகத்வமிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இப்படி பலகாலங்களில் துக்க-ஸம்பந்த

மிருப்பது பற்றியே சுகங்களை சாஸ்திரத்தில் ஸாத்விக சுக மென்றும், ராஜஸ-சுகமென்றும், தாமஸ-சுகமென்றும் விபாகப் படுத்தியிருக்கிறது. ஆரம்பத்தில் துக்கமும் முடிவில் சுகமு மாக இருப்பது ஸாத்விக-சுகம். முதலில் சுகமும் கடைசியில் துக்கமுமாக இருப்பது ராஜஸ-சுகம். எப்போதும் துக்கக் கலப்புடனிருந்து பிரமையினால் மாத்திரம் சுகமென்று எண்ணப் படுவது தாமஸ-சுகமாகும். விஷய-சுகங்கள் யாவும் இம் மூன்று விதங்களுக்குள்ளடங்கியவைகளே. இம்மூன்று விதங் களிலும் துக்க-ஸம்பந்த மிருப்பதால், துக்கத்தை ஒட்டியே விஷய-சுகத்திற்கு சுகத்தன்மை யுண்டென்பதாக அறிந்து கொள்ளவேண்டும். பனியில் கஷ்டப்பட்டவனுக்கு வெய்யில் சுகமாயிருக்கும். வெய்யிலில் போய் கஷ்டப்பட்டவனுக்கு நிழல் சுகமாயிருக்கும். வெய்யில்-சுகம் வேண்டுமானால் பனியில் கஷ்டப்பட்டிருக்கவேண்டும். நிழல்-சுகம் வேண்டுமானால் வெய்யிலில் போய் அடிபட்டிருக்க வேண்டும். இப்படி கஷ்டப் படுவதினால் அந்தந்த சுகங்களில் இச்சையுண்டாகின்றது. இவ்விதம் கஷ்டப்படாதவனுக்கு வெய்யில்சுகத்திலாவது நிழல்-சுகத்திலாவது இச்சை யுண்டாவதில்லை. இப்படி இச்சையே யில்லாமல் வீட்டில் ஸ்வஸ்தனை இருப்பவனைத் தான் வாஸ்தவ மான சுகியென்று சொல்லுகின்றோமே யொழிய, பனியிலாவது வெய்யிலிலாவது கஷ்டப்பட்டு விட்டு வெய்யிலையாவது நிழலை யாவது அடைந்து ஸந்தோஷப்படுகிறவனை சுகியென்று நாம் சொல்லுகிறதில்லை. இது போல், ஒருவித துக்கமும் துக்க- ஸம்பந்தத்துடன் கூடிய சுகமும், இவ்வித சுகத்தில் இச்சையும் இல்லாதவனைத் தான் ஆனந்தீ யென்று சொல்லலாம். யாதொன்றிலும் இச்சை யில்லாமையே ஆனந்தீயின் ஒரு முக்கிய லக்ஷணம்.

2. வைதிக மதத்தின் மேன்மை

உண்மையில் நமக்கு எப்போதும் ஸ்வதஸ்-ஸித்தமாயிருக் கின்ற பிரஹ்மானந்தத்தை நாம் இப்போது அநுபவிக்கவில்லை

யென்ற தோற்றத்தின் காரணமும் முன் சொல்லியதிலிருந்தே துலங்கும். ஆத்மத்வ-நிலையை விட்டு ஜீவத்வ-நிலையிலேயே நாமிருந்து வருவதுதான் காரணம். இது பின்னால் கொஞ்சம் விவரிக்கப்படும். ஆனால் சிலர்கள் வேறு காரணத்தைக் குறிப்பிடுகின்றார்கள். இக்காரணத்தை முதலில் சற்று சோதித்துப்பார்ப்போம். உலகத்தில் ஸாமான்யத்திற்கு அனுபவம் கிடையாது, விசேஷத்திற்குத்தான் அனுபவமுண்டு. ஸாமான்யமாய் எங்கும் வியாபித்திருக்கின்ற அக்னியாவது மின்சாரமாவது அனுபவிக்கப்படுவதில்லை. அவை, தங்களுடைய வியாபகத்தன்மையை விட்டு, ஏதாவது ஒரு பதார்த்தத்தில் ஸம்பந்தப்பட்டுக் கட்டுக்குள்ளடங்கி நின்றால் தான் அனுபவத்திற்கு யோக்கியமானவையாகும். கட்டையிலாவது திரியிலாவது ஸம்பந்தப்பட்ட அக்னிக்கும், ஒரு யந்திரத்தில் ஸம்பந்தப்பட்ட அல்லது இடி-மின்னல்-ரூபமாய் பரிமிதத்தன்மையை யடைந்த மின்சாரத்திற்குந்தான் அனுபவிக்கப்படக்கூடிய யோக்கியதை யுண்டு. இதுபோல், எங்கும் வியாபகமாய், ஏகமாய் நிற்கும் அகண்ட பொருளான பிஹ்மத்தின் ஆனந்தம் அனுபவ-விஷயமில்லை யென்றும், அது ஒரு விஷய-ஸம்பந்தத்தில் கட்டுப்பட்டால் தான் சுக-ரூபமாய் அனுபவிக்கப்படுமென்றும், இதனால் தான் நாம் இப்போது பிரஹ்மானந்தத்தை அனுபவிக்கவில்லை யென்றும் சொல்லிக் கொண்டு, சுருதி-வாக்கியங்களுக்கு நேர் விரோதமாக, கைவல்ய-மோக்ஷத்தில் ஆனந்தானுபவமே யிராதென்று சில ஆஸ்திக-ஜனங்கள்கூட எண்ணும்படி மேற்கண்ட சிலர்கள் செய்து வருகிறார்கள். இப்படிச் செய்ததினால் நாளடைவில் பலவிடங்களில் சுருதி-வாக்கியங்களில் சிரத்தைக் குறைவும் உண்மையான மோக்ஷ-விஷயத்தில் இச்சைக் குறைவும் ஏற்பட்டு, சுருதியின் முக்கிய தாத்பரியமான அத்வைதப்பிரஹ்ம-ஜ்ஞானத்திலும் நிர்குண-நிஷ்டையிலும் பல ஆஸ்திகர்களுக்கு பனப்பிடிப்பு நீங்கி, இந்நாட்டில் ஹிந்துக்களுக்குள்ளாகவே சுருதி-விருத்தமான கொள்கைகளும் அவை

களை ஆதாரமாகக் கொண்ட புது மதாந்தரங்களும் உண்டாகி வந்திருக்கின்றன.

இப் பூலோகத்தில் ஹிந்து-மதமென்று சொல்லப்படுகின்ற ஆர்ய-வைதிக-மதத்திற்கு ஏற்பட்டிருக்கிற விசேஷ மேன்மைக்குக் காரணம் அதன் உயர்ந்த அத்வைதக் கொள்கையைத் தவிர வேறல்ல ஜீவன் வேறு, கடவுள் வேறு, ஜகத்து வாஸ்தவம் என்று போதிக்கின்ற மதங்கள் எல்லா தேசங்களிலுமிருக்கின்றன. துவைதத்தில் ஸத்திய-புத்தியை ஸ்திரப்படுத்துகிற சைவம், வைஷ்ணவம் முதலான மதங்கள் மாத்திரம் இப்பரத-கண்டத்திலிருந்திருக்குமானால் உலகத்தில் புதிதாயுண்டாகி வந்திருக்கின்ற மற்ற மதங்கள் வெகு காலத்திற்கு முன்பாகவே ஹிந்து-மதத்தை விழுங்கி அது இருந்த இடமே தெரியக் கூடாமலடித்திருக்கக்கூடும். இத்தேசத்தில் வேறு எவ்விதமான நூதன-மதம் பிரவேசித்தாலும், நம் ஸநாதனமான ஆர்ய-மதத்திற்கு முன்னால் நிற்பதற்குக்கூட அதற்கு யோகியதையில்லை யென்று அதற்கே தோன்றும்படிக்கும், அது பயந்தும் வெட்கமடைந்தும் அடங்கியுமிருக்கும்படிக்கும் செய்துவந்திருப்பது அத்வைத-தத்துவமும், அதை வெளியாக்கி போதிக்கிற வேதாந்த-சாஸ்திரமும், கர்ம-கதியையும் புனர்-ஜன்ம-விஷயத்தையும் துலக்கிக் காட்டுகின்ற வேத-சாஸ்திரமுமேயல்லாமல் வேறல்ல. மற்ற மதங்களுக்கு தத்துவ-சாஸ்திர-பலமே கிடையாது. அவைகளுக்கு விரோதமாகவே பெரும்பாலும் தத்துவ-சாஸ்திரம் பிரவர்த்தித்துமிருக்கின்றது. ஹிந்து-மதம் அப்படியல்ல. ஹிந்து-மதத்திலிருந்தே தத்துவ-சாஸ்திரம் பிறந்திருக்கிறது. தத்துவ-சாஸ்திரத்திற்குள்ள பூரா-விபரங்களும் வேதத்திலேயே வெளியிடப்பட்டிருக்கின்றன.

3. திருக்-திருச்ய விபாகம்.

உலகத்தில் ஸாமான்யத்திற்கு அனுபவங் கிடையாது. விசேஷத்திற்குத்தான் அனுபவமுண்டென்ற கொள்கை எம்

மட்டில் வாஸ்தவமென்பதும் மேற்கண்ட சாஸ்திரம் மூலமாகவே வெளியாகும். திருக்-திருச்ய-ரூபமான த்வைதமே மேலிட்டிருக்கிற இப்பிரபஞ்சத்தில் அநுபவ-விஷயமான சுக-ஸம்பந்தமாக அக்கொள்கை வாஸ்தவமென்பதில் ஸந்தேஹமில்லை. திருக்-திருச்ய-விபாகத்தினாலேயே, திருக்கைக் காட்டிலும் திருச்யம் வேறு என்றும், அவ்விரண்டிலும் ஒன்று மற்றொன்றினால் கண்டிக்கப்பட்டிருப்பதால் இரண்டுக்கும் அகண்டத்தன்மை கிடையாதென்றும் தெரிந்து கொள்ள வேண்டியதவசியம். அகண்டமான பிரஹ்மமும் அதற்கு அபின்னமான சக்தியாகிய மாயையும் பரிமிதமாகியதுபோல் முறையே ஜீவ-ரூபமாகிய திருக்காகவும் பிரபஞ்ச-ரூபமாகிய திருச்யமாகவும் விளங்குவதாகத் தோன்றுங்கால், திருக்குக்கு அநுபவிக்கக்கூடிய யோக்கியதையும் திருச்யத்திற்கு அநுபவிக்கப்படக்கூடிய யோக்கியதையுமுண்டாகின்றன. இவ்விருவித யோக்கியதையும் திருக்-விஷயத்திலும் திருச்ய-விஷயத்திலும் சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கிறது. திருக்குடைய அநுபவ-யோக்யதை, அதாவது போக்தா என்ற தன்மை, தேஹ இந்திரியங்கள் கூடிய அந்தக்கரணத்தினால் பரிமிதப்பட்டிருக்கிறது. திருச்யத்துடைய அநுபவிக்கப்படக்கூடிய யோக்கியதை, அதாவது, போக்கியம் என்ற தன்மை, திருச்யத்தின் வியக்தத்தன்மையைப் பொறுத்ததாகப் பரிமிதப்பட்டு இருக்கிறது. ஐந்து பூதங்களால் அமைக்கப்பட்ட, அதாவது, பாஞ்ச-பௌதிகமான ஸகல வஸ்துக்களும் திருச்யங்கள்தான். அவைகளில் ஜீவனுகிய போக்தாவுக்கு விஷயமாகக் கூடாத அவ்வியக்த-தசையென்றும், விஷயமாகக்கூடிய வியக்த-தசையென்றும், இருவகை தசை யுண்டு. மனத்துடன் கூடிய இந்திரியாதிகளினால் குறுகிக் கட்டுப்பட்டிருக்கிற ஸ்தானத்திலுள்ள போக்தா அவ்வியக்த-தசையிலுள்ள திருச்யத்தை அநுபவிக்க முடியாது. திருக் போக்தாவாக்க் குறுகி நிற்பதுபோல், திருச்யமும் தேச-காலபதார்த்த-ஸம்பந்தத்தால் குறுகி அடங்கி நின்றால்தான் அது போக்யமாக அநுபவிக்கப்

படக்கூடும். அக்னி, மின்சாரம் முதலான திருச்யங்கள் ஸாமான்யமென்ற அவ்யக்ததசையிலிருந்தால் இந்திரியாதிகளுடன் கூடிய அந்தக்கரணத்தின் கட்டுக்கடங்கியிருக்கிற பரிமிதமான யோக்கியதையுள்ள போக்தாவாகிய ஜீவனுக்கு அனுபவ-விஷயமாகா. அவை ஓரிடத்தில் கட்டுக்குட்பட்டு ஒளிரூபமாகவாவது, ஒலிரூபமாகவாவது, வேறு எவ்வகையிலாவது விசேஷமென்ற வியக்த-தசையை அடைந்திருந்தால்தான் போக்கியங்களாக அனுபவ-விஷயங்களாகக்கூடியவை. ஆகையால், ஸாமான்யத்திற்கு அனுபவங் கிடையாது, விசேஷத்திற்குத்தான் அனுபவமுண்டு என்று சொல்வதெல்லாம் போக்தாவின் யோக்கியதைக்-குறைவையுத்தேசித்தே சொல்லப்படுகின்றது. திருக் - திருச்ய-பேத - மயமான பிரபஞ்சத்தில் அல்ப-சக்தியுள்ள போக்தாவுக்கு போக விஷயமாகக்கூடிய அல்ப-வியக்த-நிலையிலிருக்கிற திருச்யத்திற்குத்தான் போக்யத்வமுண்டு. சுக-துக்க-ரூபமான போகங்களெல்லாம் போக்தா என்ற ஸ்தானத்திலிருக்கிற அல்ப ஜீவனுக்கே ஏற்பட்டிருக்கிறபடியால், அவைகள் திருச்யத்தின் வியக்தத்தன்மையாகிய விசேஷ-தசையை அபேக்ஷிக்கிறதென்பது நியாயந்தான்.

4. ஆத்மாநந்தம்.

பிரஹ்மானந்தமோ விஷய-சுகம்-போலல்ல. அல்ப திருக்காகிய ஜீவனைப்போல் பிரஹ்மம் பரிமிதப்பட்டதுமல்ல. ஆனந்தமே பிரஹ்ம-ஸ்வரூபமாகையால், அது திருச்யமுமல்ல மற்றொரு திருச்யத்தைச்சார்ந்து நிற்பதுமல்ல. திருச்யத்தைப் பொறுத்து அண்டியிருக்கிற சுகத்தின் பொருட்டு எப்படி திருச்யத்தின் விசேஷ-வியக்தத்தன்மை அபேக்ஷிக்கப்படுகின்றதோ, அப்படி ஒன்றிலும் அண்டிநிற்காத ஸ்வதந்திரமான அகண்ட-பூர்ண-பிரஹமானந்தம் யாதொரு அல்பமாகிய விசேஷத்தன்மையை அடைந்த போக்கியத்தையும் அபேக்ஷிக்கவில்லை. பசியேயில்லாமல் ஸ்வரூபத்திலேயே திருப்தியுட

னிருப்பது வேறு, பசியின் பேரில் ஆஹாரத்தைச் சாப்பிடுகிற சுகத்தை அனுபவிப்பது வேறு. இப்படியே, ஸ்வரூபமாகவே அனுபவிக்கப்படுவது வேறு, தானல்லாத வேறென்று சுத விஷயமாகி அனுபவிக்கப்படுவது வேறு. பின் சொல்லிய தற்குள்ள நிபந்தனைகள் முன்சொல்லியதற்குக் கிடையாது. இந்த விபரத்தை அறியாமலும், விஷய-சுகம் போலவே பிரஹ்மானந்தம் பெரிய சுகமென்று எண்ணியும், திருச்யப்பிரபஞ்சத்தில் சுகப்பிராப்தியின் பொருட்டு ஏற்பட்டிருக்கிற விதி-நிபந்தனைகளைப் பிரபஞ்சத்திற்கு அதீதமான பிரஹ்மானந்த விஷயத்தில் ஆரோபணஞ்செய்து, தாறுமாருன கக்ஷிகளைச் சொல்லிக்கொண்டு முன் குறிப்பிட்ட பிரகாரம் சிலர்கள் அஜ்ஞானிஜனங்களின் புத்திகளைக் கலங்கச்செய்துகொண்டும், சுருதி விரோதமான விபரீதக்கொள்கைகளைப் பிரசாரஞ்செய்துகொண்டும் தவருன ஆசரணைகளைக் கற்பித்துக்கொண்டும் ஹிந்து-மதத்தை வேறுபடுத்தி வருகின்ருர்கள்.

பிரஹ்மானந்தம் விளங்கவேண்டுமாஞல் பிரஹ்மமாகவே யிருந்தால் போதும். ஆத்மாவே பிரஹ்மமென்று சுருதி வெளியிட்டிருப்பதால், ஆத்ம-ஸ்வரூபத்தை நன்ருகக் கிரமப்படி விசாரித்துத்தெரிந்துகொண்டு, ஆத்மாவல்லாததும் அநாதி காலமாய் சுமக்கப்பட்டு எண்ணத்தொலையாத கஷ்டங்களைக் கொடுத்து வந்திருக்கிறதுமான வீண் அநாத்மபாரங்களை இறக்கிவைத்துவிட்டு சும்மாயிருந்தால் போதும். ஜீவனுக்கு சும்மாயிருப்பதுதான் கஷ்டமாயிருக்கிறது. கஷ்டப்படுவதே சுகமென்று எண்ணப்பட்டுவந்திருக்கிறது. விஷய-சுகத்தை ஸம்பாதிப்பதற்காகப் பெரும் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு, ஆத்மானந்தத்தை விளங்கவொட்டாமலே செய்து வந்திருக்கிருன். ஆஞல், ஆத்மானந்தம் வேண்டாமென்று எண்ணமுண்டா? அதுவுமில்லை. எக்காலத்திலும் குறைவில்லாத பேரானந்தம் வேண்டுமென்ற இச்சைகொண்டே, அது விளங்கக்கூடாத-விதமாகவே பிரயத்தினங்களைச் செய்து

வருகின்றான். இதற்குக் காரணம் தத்வத்தைத்தெரிந்து கொள்ளாமைதான். ஒவ்வொரு ஜீவனிடத்திலும் ஸ்திரமாய் நின்றுவருகிற உண்மையான ஆத்மதவமும், மாறி மாறிக் கொண்டேயிருக்கிற வெறும் தோற்றமாகிய ஜீவதவமுமிருக்கின்றன. ஆத்மதவ-ஸம்பந்தத்தில் அகண்டமான பிரஹ்மானந்தம் எப்போதும் ஸ்வதஸ்-ஸித்தமாயுள்ளது ஜீவத்வ-ஸம்பந்தத்தில் முன்சொல்லியபடி அல்பமான சுக-துக்கங்கள் தான் மாறிமாறி யேற்பட்டுக் கொண்டே யிருக்கக்கூடியவை. எதுவரையில் ஒருவனுக்குத் தன்னிடத்தில் ஜீவத்வ-புத்தி யிருக்கிறதோ அதுவரையில் அவனுக்கு திருச்ய பிரபஞ்சம் வாஸ்தவமென்ற எண்ணமுமிருக்கும். ஜீவத்வ-புத்தியினால் தான் தன்னிடம் போக்தா என்ற தப்பிதமான பாவனையும் திருச்யத்தில் போக்கியத்வ-பாவனையும் கூடவே யிருந்துவரும். எப்பொழுது தன்னிடத்தில் உறுதியான அகண்டாத்ம-புத்தி ஏற்படுகிறதோ, அப்பொழுதே தன்னுடைய போக்திருத்வ-பாவனை நீங்கிப்போவதுடன் அது முதலே திருச்யபதார்த்தங்களிலுள்ள மாறுதலையடையக் கூடிய தோற்றங்களும் தன்னுடைய பார்வையிலிருந்து கிரமமாய் மறைவையடைந்து, உள்ளும் வெளியும் எங்கும் ஒரே விதமாய், அதாவது, உள்-வெளி என்ற பேதப்பார்வையே அற்றுப்போய், அகண்டமான ஆத்மாநந்தானுபவமே முடிவில் ஸித்திக்கும்.

5. ஸ்வரூப மறைவு

ஓர் உதாஹரணமெடுத்துக் கொள்ளலாம். நாடகத்தில் ஒரு தனிகனான புருஷன் பிச்சைக்காரி-வேஷம் போட்டுக் கொண்டு கிழட்டு-ஸ்திரீயாகவே நடித்து வருகிறான். இந்த வேஷதாரியிடத்தில் இரண்டு தன்மைகளிருக்கின்றன, ஒன்று பொய்யான வெறும் தோற்றமாகிய கிழட்டுப் பிச்சைக்கார-ஸ்திரீத்தன்மை, மற்றொன்று உண்மையானதும், ஸ்திரமாயுள்ளதும், பலம் ஐசுவரியம் இவைகளுடன் கூடியதுமான

புருஷத்தன்மை. எதுவரையில் தன்னை இப்பிச்சைக்காரியாகவே பாவித்து நடித்து வருகிறானோ, அதுவரையில் அவனுடைய உண்மையான புருஷ-பலமும் மனோ-தைரியமும் ஐசுவர்யமும் மறைவடைந்ததாகவே காணப்படுவதுமல்லாமல், பிச்சைக்காரக்-கிழவிக்குள்ள அச்சமும், தைன்யமும், நடுக்கமும், மற்றும் பரிதபிக்கப்படக்கூடிய நிலைகளுமே மேலிட்டுக் காணப்படும். கெஞ்சிப் பிச்சையெடுப்பதாக நடித்து வரும் ஸமயத்தில் கண்ணீரைச் சொரிந்து கொண்டே பிச்சை கேட்க வேண்டுமானால், தன்னை உண்மையான பிச்சைக்காரியாகவே எண்ணிக்கொண்டாலொழிய கண்ணீர் வர மாட்டாது, கண்ணில் தீனப் பார்வையும் வாக்கில் தீன-ஸ்வரமும் சரியாக இருக்கவும் மாட்டாது. தான் ஸ்திரீதானென்று எண்ணினாலொழிய அடக்கம், லஜ்ஜை முதலான ஸ்திரீ-கர்மங்களும் வெளியாக மாட்டா. நன்றாக பிச்சைக்காரியாகவே ஆடி வருகிற வேஷ-தாரி இப்படி ஆடி வருங்காலத்தில் தன்னை உண்மையான பிச்சைக்காரியாகவே பாவித்து ஆடியிருக்கிறானென்பதில் ஸந்தேஹமில்லை. அதாவது, தன்னுடைய சொந்த நிலைமையை மறந்து வேஷத்திற்கு அனுகுணமாகவே யிருந்து வந்திருக்கிறானென்பதே நிச்சயம். இப்படியே அடிக்கடி ஆடிப்பெயர் வாங்கினவனுக்கு எங்கும் நாடகங்களில் பிச்சைக்காரி-வேஷமே போட்டுக் கொள்ளும்படிக்கும் ஏற்படும். வாஸ்தவ-பிச்சைக்காரக்-கிழவிக்குள்ள நடையுடை-பாவனைகளும் நாளுக்கு நாள் இவனிடத்தில் விருத்தியாகி ஸ்திரப்பட்டுக் கொண்டேவரும்.

இதுபோலவே, உண்மையில் நாம் அளவற்ற ஆனந்த-ஸ்வரூபியான ஆத்மாவாகவே இருந்த போதிலும், அநாதிகாலமாக வெகுஜன்மங்களில் ஜீவத்வ-பாவனையை பலவாறாக பலப்படுத்திக் கொண்டு கிஞ்சிஜ்ஞனும் சுக-துக்கங்களுக்கு பாத்தியப்பட்டவனுமான ஜீவனாகவே நடந்து வந்திருப்பதால், நம் ஆத்மத்வமும் அதற்குள்ள அகண்ட-ப்ரஹ்மானந்தமும் மறைவடைந்திருப்பது போல் காண்கின்றன. எப்படி நாடகத்தில்

ஸத்திய-புத்தியை வைத்து ஒரு பிடி அரிசிப் பிச்சை வாங்கு வதற்காக தீன-ஸ்வரத்துடன் கெஞ்சிக் கூத்தாடி கண்ணீர் விட்டுக் கதறும் ஸமயத்தில் நடனுடைய சொந்த ஐசுவரியம், பலம், தைரியம் முதலானது உபயோகப்படாமல் மேற்கண்ட படி மறைந்து நிற்கின்றதோ, அப்படியே உலகத்தில் ஸத்திய-புத்தியை வைத்து அல்பமாகிய விஷய-சுகத்தைத் தேடு வதிலும், அதற்கு ஸாதனமென்பதாக தனத்தை ஸம்பாதிப்ப திலும் பெரும்பாலும் முயற்சியைச் செய்து வருகிற பாமரன் விஷயத்தில் ஜீவத்வமே மேலிட்டு நின்று ஆத்மத்வம் மறை வடைந்ததாகவே எண்ணவேண்டும். விசேஷ ஐசுவரியம் தனக்கிருப்பதாகத் தெரிந்த தனிகன் பிடி அரிசி கிடைக்க வில்லையே யென்று துக்கப்பட்டுக் கெஞ்சிக் கதறமாட்டான். ஆனந்த-ஸ்வரூபியான ஆத்மாவாகவே தன்னைத் தெரிந்து கொண்டவன் துச்சமான இப்பூலோக-வாழ்க்கையிலும் இந்திரிய-சுகத்தைத் தேடுவதிலும் புத்தியைச் செலுத்தி ஓடி ஆடித் திரியமாட்டான். வாஸ்தவத்தில் தனிகனாக இருப்பவன் பிச்சைக்காரி-வேஷம் பூண்டுகொள்வதற்குக் காரணம் அறியா மையாலுண்டான மோஹந்தான். அப்படி வேஷம் போட்டுக் கொண்டு ஆடுவதிலேயே சுகமிருப்பதாக மோஹங்கொண்டு வேஷத்திற்குரிய துக்கங்களை அனுபவிக்கும்படி நேரிடுகிறது. இந்த துக்கங்களையே சுகங்களாக மோஹத்தினால் நடன் எண்ணிக்கொண்டது போல், உண்மையில் ஆனந்தமில்லாத விஷய-சுகங்களில் அவித்யா-மோஹத்தினால் ஜீவன் ஆனந்த மிருப்பது போல் தப்பாக எண்ணிக் கொண்டு வாஸ்தவத்தில் மேன்மேலும் அதிகமாக கஷ்டப்பட்டுக் கொண்டே யிருக்கின்றான்.

மேற்கண்டபடி அஜ்ஞானத்துடனும் மோஹத்துடனுங் கூடிய நடனுக்குத்தான் பிச்சைக்காரித்தன்மையுண்டே யல்லாது, உண்மையான தனிக ஸ்தானத்தில் அத்தன்மை ஒட்டமாட்டாது. தனிகன் எப்போதும் தனிகன்தான்.

பிச்சைக்காரி-வேஷம் போட்டு ஆடியதினால் உண்மையிலுள்ள தனம் வேறெங்கும் போய்விடவில்லை. தன்னிடத்தில் ஆரோபிக்கப்பட்ட பிச்சைக்காரி-ஸ்தானத்தில் தான் கஷ்டங்களேற்பட்டன. வாஸ்தவ-ஸ்தானத்தில் தனக்கு யாதொரு கஷ்டமும் வந்துவிடவில்லை. இப்படியே, அவித்யாமோஹத்துடன் கூடிய ஆரோபிதனான ஜீவனுக்குத்தான் பிரஹ்மானந்தம் தோன்றாமல் மறைபட்டு துக்காதிகள் ஏற்படுகின்றனவே யல்லாது உண்மையான ஆத்மாவுக்கு ஆனந்தம் நஷ்டமாகி விடவுமில்லை, கஷ்டம் வந்துவிடவுமில்லை, நாம் சுகம் வேண்டுமென்று உலகத்தில் முயற்சிசெய்து கஷ்டப்படுவதெல்லாம் நம்முடைய ஜீவத்வ-ஸ்தானத்தில் நடக்கிறதே யல்லாமல், அகர்த்த நம் ஆத்மதவ-ஸ்தானத்தில் யாதொரு ஸம்பந்தமும் கிடையாது. நாடகத்தில் பிச்சையில் கிடைக்கக்கூடிய அரிசியையாவது காசையாவது நடன் தன் வீட்டுக்குக் கொண்டுபோவதில்லை. பிச்சைக்காரி-ஸ்தானத்தில் அவனுக்கு ஏற்படுகிற வசவுகளும் அவமானங்களும் அவனுடைய உண்மையான நிலைமைக்கு ஸம்பந்தப்படக்கூடியவை யல்ல.

ஆகிலும் உண்மையில்லாத ஸ்தானத்திலிருந்துகொண்டு ஏன் கஷ்டப்படவேண்டுமென்று ஆலோசிக்கவேண்டியதுண்டு நடனுக்கு வாஸ்தவத்தில் தரித்திர தசை வராவிட்டாலும் அவன் தரித்திர-தசையைத் தன்பேரில் ஆரோபித்துக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்? நாடகத்தில் ஆடும் ஸமயத்தில் வேஷத்திற்குத்தக்கபடி மனஸில் துக்கத்தைத் தருவித்துக் கொண்டே நடிக்கவேண்டியதாயிருக்கிறது. தருவித்துக் கொண்ட துக்கமும் துக்கமே தவிர சுகமல்ல. நடன் கொஞ்சம் ஆலோசனை செய்து தனக்குப் பிச்சைக்காரி-ஸ்தானத்தில் உண்டாகக்கூடிய கஷ்டங்களையும் கணக்குப்பார்த்து, தான் நன்றாக ஆடுவதாக ஜனங்கள் சொல்லும் வார்த்தையினால் தனக்குண்டாகக்கூடிய ஸந்தோஷத்தையும் கணக்குப்பார்த்து

இரண்டையும் ஒத்துப்பார்க்க ஆரம்பித்தால் அவனுக்கு அப்பால் வேஷம் போட்டுக்கொள்வதில் புத்தி யுண்டாக மாட்டாது இப்படிக்கணக்குப் பார்ப்பவர்களே அபூர்வம். எவராகிலும் கணக்குப்பார்க்க யத்தனித்தாலும் தப்பாகவே கணக்கை முடித்துவிடக்கூடும். வேஷம்போட்டு ஆடும்போது இக்கணக்குப் பார்ப்பது சிரமப்படும். மற்றக் காலங்களில் கணக்குப்பார்த்தால், முன்னால் ஆடியபோதுண்டான துக்கங்களின் வீர்யமெல்லாம் மறைந்துபோய், ஸ்வல்ப-துக்கந்தான் ஏற்பட்டதாகத் தோன்றும். இப்படிக் கணக்குப்போடுகிற காலத்தில் தன்னுடைய கியாதியே மனதில் மேலிட்டிருக்கக் கூடியதால், கணக்கின் முடிவும் தப்பாகவேயிருக்கும். இந்தப் படியே, உலகத்தில் விஷய-சுகத்தை ஸம்பாதிக்க எவ்வளவு கஷ்டப்படவேண்டியதா யிருக்கிறதோ, அவ்வளவு கஷ்டங்களையும் சரியானபடி கணக்கிட்டு, அவைகளின் பயன்ரூபமான சுகத்தையும், அந்த சுகத்தையனுபவிக்கும்போது அதற்கப்பாலுமேற்படக்கூடிய பயன்-ரூப-துக்கங்களையும் அப்படியே கணக்கிட்டால், புத்தியுள்ளவனுக்கு இந்த ஸுகமும் வேண்டாம், இந்தக்கஷ்டங்களும் வேண்டாமென்றே உறுதியாய்த்தோன்றும். எப்படி பிசகில்லாமல் கணக்குப் போட்டுபார்க்கக்கூடிய நடன் கணக்கு-முடிவில் தான் வேஷம் போட்டு ஆடுவதினால் தனக்கு சுகம் மிச்சமில்லையென்றும் துக்கந்தான் அதிகரித்திருக்கின்றதென்றும் தெரிந்துகொண்டு விட்டால், தன்னுடைய வேஷதாரி-ஸ்தானத்திலிருந்து தன் நோக்கத்தைத் திருப்பி தன் சொந்த தனிக-ஸ்தானத்திலிருந்து கொண்டு ஸந்துஷ்டனாகவே இருக்கக்கூடுமோ, அப்படியே நாமும் நம்முடைய ஜீவத்வ-ஸ்தானத்தில் நமக்குண்டாகக் கூடிய சுக துக்கங்களை ஒத்துப்பார்த்து பிசகின்றியில் கணக்கை முடித்து கவனித்தால் ஜீவத்வ-ஸ்தானத்தில் நமக்கு விஷய-சுகங்களே வேண்டாமென்றே முடிவு செய்துகொண்டு நம் ஆத்மத்வ-ஸ்தானத்தில் சுத்தப்பிரஹ்மானந்திகளாகவே

இருந்துவருவோம். ஆனால், நமக்குள் சரியானபடி கணக்குப் போட்டுப்பார்ப்பவர்கள் மிகவும் அரிது.

6. நம்பிக்கை வேண்டும்

ஜீவத்வ-நிலையில் பிசகாய் கணக்கைப் பார்த்து முடிவு செய்து கொண்டு ஏதோ சுகமே மிஞ்சி நிற்பது போல் நாம் தீர்மானித்துக் கொண்ட போதிலும், இந்த சுகத்தையும் தள்ளி விடுவதே நலமென்று தான் முடிவில் வெளியாகும். ஜீவ-ஸ்தானத்தில் நாம் அனுபவிக்கக்கூடிய சுகம் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் அது பரிமிதந்தானென்பதில், அதாவது, முடிவுள்ளதாகையால் அளவுக்குட்பட்டது தானென்பதில் ஸந்தேஹமில்லை. ஆத்ம-ஸ்தானத்திலேற்படக் கூடிய அபரிமிதமான அகண்ட-பிரஹ்மானந்தத்துடன் பரிமிதமான ஜீவ-சுகத்தை ஒத்துப்பார்க்கக்கூடுமானால், இந்த அல்ப-சுகத்திற்கு இருப்பே இருக்க முடியாது. தவிரவும், இந்த அல்ப-சுகத்தில் புத்தி சென்று கொண்டிருக்கிற வரையில் பிரஹ்மானந்தம் கிட்டப்போகிறதுமில்லை. பிரஹ்மானந்தம் வேண்டுமானால் அல்ப-சுகத்திலுள்ள இச்சையைத் தொலைக்க வேண்டும் எப்படி ஸ்வல்பமான விதை-தான்யத்தை புஜித்து விடாமல் பூமியில் வீசியெறிந்துவிட்டால்தான் பின்னால் ஏராளமான தான்யம் கிடைக்குமோ, அப்படியே, அல்பமான விஷய—சுகங்கள் யாவற்றையும் தியாகஞ் செய்தால்தான் அனந்தமான பிரஹ்மானந்தம் தானாகவே விளங்கும். விதையையும் பக்குவப் படுத்தி புஜித்துவிடுவேன், நன்றாய் விளைந்து தான்யமும் கிடைக்க வேண்டுமென்றால் நடக்கமாட்டாது. விஷய ஸுகங்களையும் அனுபவிப்பேன் ப்ரஹ்மாநந்தமும் வேண்டுமென்றால் இது ஒருக்காலமும் கிட்டாது. அல்பமான சுகத்தைத் தியாகம் செய்துதான் மேலான சுகத்தைக் கைக்கொள்ளக் கூடும். இது எக்காலமும் மாறாத தத்துவம். ஆகையால், விஷய-சுகத்தில் நன்மை யிருப்பதாக எண்ணுபவர்களும்

அதையும் பிரஹ்மானந்தப்பிராப்தியின் பொருட்டு தள்ளிவிட வேண்டியது அவசியமென்பதே ஸித்தம்.

இங்கு ஓர் கேள்விக்கிடமுண்டு. ஜீவத்வ-ஸ்தானத்திலிருக்கிறவரையில் பிஹ்மானந்தம் இன்னதென்றே தெரியப்போகிறதில்லை. இன்னதென்றே அறியப்படக்கூடாததில் ஜீவனுக்கு எப்படி இச்சை யுண்டாகக்கூடும்? அதை யுத்தேசித்துக் கையிலிருக்கிற சுகத்தையும் தியாகஞ்செய்வது எப்படி ஸாத்தியப்படும்? எந்த பூமியில் விதையைப் போடுகிறோமோ அப்பூமியிலேயே பயிருண்டாவதையும் தான்யம் கிடைப்பதையும் பார்த்திருக்கின்றோம். ஆகையால், பின்னால் லாபம் கிடைக்குமென்ற உறுதியுடன் விதையைத் துணிந்து பூமியில் வீசிப்போட்டு விடுகிறோம். இவ்வித நம்பிக்கையும் துணிவும் புத்திக்கே எட்டாத பிரஹ்மானந்தப்பிராப்தி-விஷயத்தில் எப்படி யுண்டாகும்? இப்படி யுண்டானாலொழிய விஷய-சுகங்களைத் தள்ளி விடுவதெப்படி? இது நியாயமான கேள்விதான். நம்பிக்கையில்லாவிடில் பிரவிருத்தி யுண்டாகமாட்டாதென்பது வாஸ்தவம். பிரஹ்மானந்த-ஸ்வரூபத்தை வெளியிட்டிருக்கிற சுருதி-வாக்கியங்களிலாவது, அவைகளை அனுஸரித்து நடந்து வந்து மேற்சென்று ஸ்வானுபூதியைப் பெற்றிருக்கிற மஹான்களுடைய வார்த்தைகளிலாவது, நம்பிக்கையில்லாத ஜனங்களால் விஷய-சுகத்தைத் தியாகஞ் செய்ய முடியாதென்பதும் வாஸ்தவமே. உலகத்தில் பெரும்பாலும் இவ்வித ஜனங்களேயிருந்துவருவதால்தான் விஷய-சுகங்களையே கிரமப்படி ஒருவருக்கொருவர் இடைஞ்சலில்லாமலும், பரஸ்பரம் சண்டை-சச்சரவு நேரிடாமலும், ஹிதமான மார்க்கத்தில் அனுபவிப்பதற்காக ஸாமான்ய-பிரவிருத்தி-நீதிகளும், இப்படி ஒவ்வொருவரும் அனுபவித்து வருவதில் அவருடைய ஸ்வபாவத்திலாவது, பரலோக-விஷயமாகவாவது, பின்-ஜன்மங்கள்-ஸம்பந்தமாகவாவது கெடுதலுண்டாகாத விதமாகவும், காலக்கிரமத்திலாவது அவரை நிவிருத்தி-மார்க்கத்தில் சேர்ப்பிவிக்கக்

கூடிய விதமாகவும், பிரவிருத்தி-தர்மங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு விஷய-சுகங்களைத் தியாகஞ்செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்ட விபரம் முக்கியமாய் நிவிருத்தி-தர்ம-மார்க்கத்தில் பிரவேசித்திருப்பவர்களையும் பிரவேசிக்க எண்ணம் கொண்டிருப்பவர்களையும் உத்தேசித்துச் சொல்லப்பட்டதாக அறிந்துகொள்ளவேண்டும். வேதாந்த-குரு-வாக்கியங்களில் உண்மையான சிரத்தையுள்ள சரியான அதிகாரிக்குத் தான் நிவிருத்தி-மார்க்கத்தில் பிரவேசிக்க-கூடியும். ஒருக்காலமும் விதையைப் போட்டபோது பார்க்காமலும், அவ்விதையிலிருந்துதான் பயிருண்டாயிற்றென்பதை நேரில் தெரிந்து கொள்ளக்கூடாமலுமிருக்கிற சிறுவன், பெரியோரின் வார்த்தையை நம்பி, தானும் தன் கையிலுள்ள தான்யத்தை பூமியில் விதைத்து வருவது எப்படியோ, அப்படியே வேதாந்த-குரு-வாக்கியங்களில் நம்பிக்கையை வைத்து, விஷய-சுகங்களைத் தியாகஞ்செய்து, நிவிருத்தி-மார்க்கத்தில் துணிவாகப் பிரவேசித்து, குறிப்பிட்ட அப்பியாஸங்களைச் செய்துவருகுக்க காலக்கிரமத்தில் பிரஹ்மானந்தம் கைகூடுமென்பதில் சற்றும் ஸந்தேஹத்திற்கிடமேயில்லை.

7. வழிதெரிந்து அப்யஸிக்கவேண்டும்

இப்படி நிவிருத்தி-மார்க்கத்தில் பிரவேசிக்கக்கூடியவர்களுக்கு எவ்விதமான யோக்கியதையிருக்கவேண்டுமென்பதும், அம்மார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டிய பிரகாரமும், பிரவேசத்திற்குப்பின்பு பிரஹ்மானந்தப்பிராப்தியின் பொருட்டுச் செய்யப்படவேண்டிய அப்பியாஸங்களும் தெளிவாய் சுருதியிலேயே வெளியிடப்பட்டிருக்கின்றன சுருதியில் குறிப்பிட்ட மார்க்கத்திலேயே சென்று அப்பியஸித்தால்தான் பிரஹ்மானந்தம் ஸித்திக்கும். சுருதியினால் மாத்திரம் வெளியிடப்பட்டிருக்கிற பிரஹ்மானந்தத்தை சுருதி-மார்க்க மன்னியில் வேறு வழியில் விளங்கச்செய்விக்க முடியாது. சுருதி-மார்க்கத்தை விட்டுச்

சொந்தமாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட குறுக்கு-வழியில் நிவிருத்தி-தர்மத்தை அப்பியஸிப்பதாகச் சொல்லிவந்தால், இப்படி அப்பியஸிக்கப்பட்டது நிவிருத்தி-தர்மமேயாகாது. காலக்கொடுமையால் வெகு பெயர்கள் சுருதியில் கண்ட நிவிருத்திக் கிரமத்தை அறிந்துகொள்ளாமலும், அல்லது உதாஸீனஞ்செய்தும் தங்களுடைய அல்ப-புத்திகளுக்குத் தோன்றியவாறு பிசகான யுக்திகளைக் கைக்கொண்டு விதி வரம்பு-மீறி அக்கிரம-வழியில் துறவி வேஷம் பூண்டு மஹரிஷி பரமஹம்ஸர், துரீயாதீதர், அவதூதர், வித்வத்-ஸன்னியாஸீ என்ற பெரும் பெயர்களை வஹித்துக்கொண்டும், பின்னும் அப்பெயர்களால் குறிப்பிடப்பட்ட உண்மையான அப்பியாஸிகளுக்கு சுருதியில் விதிக்கப்பட்டிருக்கிற தர்மங்களுக்கு நேர் எதிரிடையாக நடந்துகொண்டும், தாங்கள் விதி வரம்புகளைக் கடந்த மேலோர்களென்று பிதற்றிக்கொண்டும் அநியாயமாய் தாங்களும் கெட்டு உலகத்தையும் கெடுத்து வருகின்றார்கள். இவர்களுக்கு வெறிபிடித்தால் போல் ஆரம்பத்தில் கொஞ்ச காலம் மும்முரமாக வைராக்கியமேற்பட்டு ஸகல பந்தங்களையும் தியாகஞ்செய்துவிட்டதாக மனோ-பாவனையுண்டானாலும், இது நீடித்து நின்று அபரோக்ஷ-ஜ்ஞானத்திலாவது பிரஹ்மானந்தப் பிராப்தியிலாவது முடிவடையக்கூடியதல்ல. இது சிலகாலம் வரையில் தீவ்ரமான ஒழிவை வெளிக்காட்டி கடைசியில் அஜ்ஞானி-ஜனங்களை மோஹப்படுத்தக்கூடிய கீழான ஹட-யோகப்பிரகடனங்களிலும், மந்திர-தந்திர வியாபாரங்களிலும், கிருஹஸ்தரைப்போல் பணம் ஸம்பாதிப்பதிலும், மடம் கட்டிக்கொள்வதிலும், சமையலைச் செய்வித்து உண்பதிலும், சுகம் தேடுவதிலுமே முடிவாகும். சுருதி-விதிகளின்படி கிரமமாய் விஷய-சுகங்களையும் பிரவிருத்தி-தர்மங்களையும் தியாகஞ்செய்து படிப்படியாக மேற்சென்றவர் ஒருகாலத்திலும் திரும்பவும் கீழான ஆசரணைகளைக்கைக்கொள்ளமாட்டார். ஆகையால், உண்மையான சித்த-பரிபாகத்தினால் நிவிருத்தி-தர்ம-மார்க்கப்பிரவேசத்தில் இச்சைகொண்டவர், அப்படிப்

பிரவேசிப்பதற்கு முன்பாகவே நிவிருத்தி-தர்மத்திற்குரிய ஸகல சுருதி-விதிகளையும் ஆராய்ச்சிசெய்து தெரிந்துகொண்டும், தான் பின்னால் ஆசரித்துவரக்கூடிய தர்ம-விபரங்கள் இன்னவைதானென்று மனஸில் நிச்சயப்படுத்திக்கொண்டும், தன்னுடைய யோக்கியதைக்குத் தகுதியுள்ள நிவிருத்தி-மார்க்கப்பிரிவில் இறங்கி மெல்ல மெல்ல மேற்சென்று, முடிவில் பிரஹ்மானந்தத்தை அடைவதின் மூலமாய் தன்னுடைய முக்கிய உத்தேசம் நிறைவேறும்படி செய்து, நடப்பு-ஜன்மத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அத்தியாயம் 24

பரபக்தி

1. உண்மையான லோகோபகாரம்

ஜ்ஞானமேற்பட்டு ஸமாதி-காலத்தில் பிரஹ்மானந்தமே யாரால் அனுபவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த மஹானுக்கு விஷய-சுகத்தில் மறுபடியும் இச்சையாவது அச்சுகத்தைக் கொடுக்கக்கூடிய காரியங்களில் பிரவிருத்தியாவது உண்டாகா தென்பது நிச்சயம். பிராரப்த கர்ம-சேஷத்தினல் போகானுபவ விஷயமான சில காரியங்கள் இவரிடம் காணப்பட்டாலும் இவர் தானுகவாவது மற்றவர்களைக்கொண்டாவது விசேஷப் பிரயத்தின-பூர்வமாக சுகத்தின் அல்லது சுக-ஸாதனத்தின் ஸம்பாத்தியத்தில் இறங்கி வேலை செய்ய மாட்டார். இது ஸாதாரண-ஜ்ஞானி- விஷயம். ஜீவன்-முக்த-தசையை அடைந்த விசேஷ-ஜ்ஞானி விஷயத்திலோ, அவருக்கு எப்போதும் இடைவிடாமல் பிரஹ்மானந்தானுபவம் தொடர்ந்தே யிருந்து பாஹ்யப்பிரதீதியே மிகவும் குறைவுபட்டிருக்குமாகையால், அவரால் மேற்கண்ட விசேஷப்பிரயத்தினங்கள் செய்யப்படுவதற்குக் காரணமேயில்லை. இக்காலத்தில் சிலர்கள் உண்மையில் அக்ஞானி-ஸ்திதியிலிருந்துகொண்டே தங்களை ஜ்ஞானிகளாக அல்லது ஜீவன் முக்தர்களாகவே பாவித்துக் கொண்டும், பிரஹ்மானந்தம் தங்களுக்கு அனுபவ-ஸித்தமென்றே காட்டிக்கொண்டும், வெகு விபரீதப் பிரவிருத்திகளைச் செய்துகொண்டும், இதெல்லாம் லோக – ஸங்கிரஹத்தின் பொருட்டுச் செய்யப்படுவது போல் சொல்லிக்கொள்கிறார்கள். லோக-ஸங்கிரஹ-காரியம் இன்னதென்றே தெரிந்து கொள்ளாமல் தங்களுடைய சுருதி-விருத்தமான செய்கைகளுக்கெல்லாம் இப்பெயரால் நாம- கரணஞ் செய்துவிடுகிறார்கள்.

லோக-ஸங்கிரஹ-கர்மம் பெரும்பாலும் பிரவிருத்தி-தர்மத்தைச்சேர்ந்தது. அதாவது அது பிரவிருத்தி-கர்ம-மார்க்கத்திலிருப்பவரால் செய்யப்பட வேண்டிய வியாபார-தர்மச்செய்கை. வாஸ்தவத்தில் ஜ்ஞான-ஸித்தியை பெற்றிருப்பவராலும் அது செய்யப்படலாம். சுருதி-விதிகளின் பிரகாரம் யாருக்கு எந்தக் காரியத்தில் அதிகாரமிருக்கின்றதோ அவர் அந்தக்காரியத்தை லோக-ஸங்க்ரஹத்தை உத்தேசித்துச் செய்தால் நல்ல காரியந்தான். அபரோக்ஷ-ஸாக்ஷாத்காரத்தை அடையாதவரும், நிவிருத்தி-தர்ம-மார்க்கத்தில் பிரவேசித்திருப்பவரும், அம்மார்க்க-விதி-நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பவருமான அஜ்ஞானி-தார்மிகர் தான் செய்யக்கூடாத காரியத்தைச் செய்துகொண்டு, இது லோகோபகாரத்தின் பொருட்டென்றால் என்ன அர்த்தமோ தெரியவில்லை. அக்காரியத்தைச் செய்தால் பாபமேயாகும். அதாவது ஜ்ஞானியாவது அல்லது பிரவிருத்தி-தர்ம-மார்க்கத்திலிருக்கின்ற கிருஹஸ்தராவது செய்யக்கூடிய காரியங்களை நிவிருத்தி-தர்ம-மார்க்கத்தில் இருப்பவரும் ஜ்ஞானப்பியாஸகராக மாத்திரமிருக்க வேண்டியவருமான ஸந்நியாஸீ செய்தால் துர்கதிதான் பலனாகும். ஒரே காரியம் ஒருவனுக்கு தர்மமாகவும், மற்றொருவருக்கு அதர்மமாகவுமிருக்கலாம் அன்ன-தானத்தைச்செய்கின்ற கிருஹஸ்தருக்குப் புண்யமும், அதையே செய்கின்ற ஸந்நியாஸிக்குப் பாபமும் வேத-சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன இப்படியே, லோக-ஸங்கிரஹ-காரியங்களை ஸந்நியாஸீ நேரிலாவது மனுஷ்யாளைக் கொண்டாவது செய்ய அல்லது செய்விக்கக் கூடாதென்று சுருதியில் வியக்தமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

लोकसंग्रहयुक्तानि नैव कुर्यान्न कारयेत् ॥

ஒருவர் சுருதி-விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தால் இவரைப் பார்த்து மற்றவர்களும் அவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டு

நடந்துவந்து நல்ல கதியை அடையக்கூடும். இதுவே உண்மையான லோகோபகாரச் செய்கையாகும். சுருதிக்கு விரோதமாக தான் நடந்துகொண்டும், தன்னைப் பார்த்து மற்றவர்களும் அப்படியே நடக்கும்படி செய்வித்தும், தன்னுடைய சுருதி-விருத்தமான காரியங்களுக்கு ஜனங்களை த்ரவ்யாதிகளால் உபகரிக்கும்படி செய்வித்தும் வந்தால், இவர் உலகத்திற்கு அபகாரஞ்செய்பவராகவும், ஜனங்கள் ஒத்தாசை செய்வதற்குப் பிரதி-பலனாக பாபத்தையே ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் ஆவர். இது எவ்விதத்திலும் லோகோபகாரச் செய்கையாக மாட்டாது. உண்மையில் ஜ்ஞானத்தை யடைந்தவர் ஜ்ஞான-நிஷ்டையிலிருந்து கொண்டிருப்பதே லோகோபகாரச் செய்கையாகும். இவரைப் பார்த்த மாத்திரத்தில் ஜனங்களின் ஆஸ்திகத்தன்மையும் ஜ்ஞானத்தில் இச்சையும் விருத்தியடைந்து அவர்கள் நன்மார்க்கத்தில் விசேஷப்பிரயத்தினங்களைச் செய்யக்கூடும். இப்படியில்லாமல் ஸன்னியாஸி-வேஷம் பூண்டவர்தான் ஜ்ஞானியென்று வெளிக்காட்டிக்கொண்டே தன்னுடைய மனுஷியாள் மூலமாய் பண வசூல் செய்வதிலும், மடம் முதலானது கட்டிக்கொள்வதிலும், மற்றும் ஸௌகரியங்களைத் தேடிச் சேர்த்துக்கொள்வதிலும் முயற்சியுள்ளவராகக் காணப்பட்டால், ஜ்ஞானமே பிரயோஜனமில்லை யென்றும், ஜ்ஞானத்தினலேற்படுவதாய்ச் சொல்லப்படுகிற பிரஹ்மானந்தமென்பதெல்லாம் வெறும் பேச்சென்றும், பணத்தினலும் நல்ல ஜாகை முதலான ஸௌகரியங்களினலும் ஏற்படுகின்ற சுகங்களே பெரியதென்றும் பெரும்பாலும் ஜனங்களுக்குத் தோன்றி, அவர்களுடைய ஏற்கனவே பலமாயிருக்கிற அஜ்ஞானம் அதிகமாக உறுதிப்பட்டுப்போகும். இது உலகத்திற்கு அபகாரச்செய்கையைத் தவிர வேறல்ல.

வாஸ்தவத்தில் ஜ்ஞானத்திலும் பிரஹ்மானந்தப் பிராப்தியிலும் உத்தேசமுள்ளவர் தானும் சுருதி-விதிகளை யனுசரித்து நடந்து கொண்டு தன் நடத்தையினல் மற்றவர்களையும் அவ்வழ

வர்களுக்குள்ள விதிப்பிரகாரம் ஒழுங்காக நடந்துவரும் படியாகச் செய்விப்பதே மேற் சொல்லியபடி பெரும் லோகோபகார-காரியம். உண்மையில் ஜ்ஞானியாகவாவது ஜீவன்-முக்தராகவாவது இருப்பவர் அஜ்ஞானி-ஜனங்களின் புத்திகளில் விபரீத-பாவனைகள் உண்டாகும்படி நடந்துவரமாட்டார். இவர் விதி-நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டவரில்லையானாலும், மற்ற ஜனங்கள் தன்னைப் பார்த்துவிட்டு சுருதி-விரோதயாய் நடந்து கெட்டுப்போகாமலிருக்கும் பொருட்டு தானும் அவ்விதிகளுக்கு அனுஸரணையாகவே நடந்துவருவார். தான், மற்றவர் என்ற வித்தியாஸப்பார்வையே யில்லாமல் எங்கும் பிரஹ்ம-திருஷ்டியே உறுதிப்பட்டிருந்து பாஹ்ய-விருத்தி யில்லாமல் பிரஹ்மானந்தத்திலேயே பரிபூரணமாய் ஆழ்ந்திருக்குங் காலத்திலும் சுருதி-விருத்தமான செய்கைக்கு அவகாசமே இராது. ஆகையால், சுருதி-விதிகளை மீறி தன்னுடைய ஸௌகரியாதிகளுக்கு அனுகூலமாக நடந்து வருபவர் ஜ்ஞானியல்லவென்பதே நிச்சயம்.

2. விஷயத்தியாகம்

பிரஹ்மானந்தம் பிரகாசிக்க வேண்டுமானால் பிரஹ்மமாகவே யிருந்தால் போதுமென்றும், சுருதி-வாயிலாக எதெல்லாம் பிரஹ்மம் அல்லவென்று தெரியவருகிறதோ அதெல்லாவற்றையும் தள்ளி ஒதுக்கிவிட்டு நின்றால் போதுமென்றும் முன்னாலேயே சொல்லப்பட்டது. இப்படித்தள்ளுவதுதான் தியாகம் என்று சொல்லப்படுகின்றது. இந்தத் தியாகத்தினால் தான் முக்தி-நிலையை ஸம்பாதித்துக்கொண்டு பிரஹ்மானந்தத்தை அனுபவிக்கலாம். எது பிரஹ்மம் அல்லவென்று விசாரிக்குங்கால், நமக்கு இப்பொழுது புலப்படாதது போலிருக்கிறதும், இந்திரியங்களுடன் கூடிய மனஸினாலும் புத்தியினாலும் அறியப்படக்கூடாததும், நம்மிடத்திலும் வெளியிலும் எங்கும் அறிகிறவனுக்கும் அறியப்படக்கூடியதற்கும் பொதுவாகவும், ஏகமாகவும், அகண்டமாகவு மிருப்பதாகச்

சொல்லப்படுகிற ஸர்வாதாரபூத-அதிஷ்டானப் பொருளாகிய சுத்தாத்மாவைத்தவிர மற்றதெல்லாம் பிரஹ்மமல்லவென்று தெரியவருவதால், எல்லாவற்றையும் தள்ள வேண்டியது தானென்று ஏற்படுகின்றது.

ஆகிலும், ஸகல இந்திரிய-மனோ-புத்தி-விஷயங்களையும் அவைகளின் மூலமாயுண்டாவதாக எண்ணப்படுகின்ற சுகங்கள் யாவற்றையும் தள்ளிவிடவேண்டுமென்று ஸாமான்ய-ஜனங்களிடம் சொல்வதில் உபயோகமில்லை. ஆனால், இப்படித் தள்ளிவந்தாலொழிய உண்மையான பிரஹ்மானந்தம் விளங்கப்போகிறதுமில்லை. ஆகையால், எல்லோரிடத்திலும் அளவற்ற கருணையினால் தாய்-ஸ்தானத்திலுள்ள சுருதி எல்லா ஜனங்களும் மெல்ல மெல்ல அவரவர்களுக்குத் தக்க விதங்களில் கொஞ்சங் கொஞ்சமாகத் தியாகத்தைச் செய்துகொண்டு வரட்டுமென்ற உத்தேசத்துடன், நேராகத் தியாகஞ்செய்யவேண்டு மென்று சொல்லாமல், முடிவில் தியாகத்திலேயே அப்பியாஸம் எவ்விதம் பலப்படுமோ அவ்விதமாகவே, மறைபொருளாக பிரவிருத்தி-தர்மங்கள் என்று பெயரிட்டு, பலவாறாக தர்மங்களை விதித்துவந்திருக்கிறது. மனிதனுக்குப் பெரும்பாலும் பிரவிருத்தியிலேயே நோக்கமிருப்பது பற்றி, பிரவிருத்தி-தர்மங்களை யேற்படுத்தியதுடன் அந்த தர்ம-காரியங்களை அவன் உத்ஸாஹத்துடனும் செய்துவரும் பொருட்டு பல ஆசை-வார்த்தைகளையும் சுருதியே சொல்லி வந்துமிருக்கின்றது. ஆனால், ஆசையே பின்னால் மறைந்து போகும்படியான விதமாகவும் அந்த தர்மங்கள் அத்புதமாக அமைக்கப்பட்டுமிருக்கின்றன. அவரவர்களின் ஸ்தானத்திற்குத் தகுதியுள்ளதும், தனித்தனியே விதிக்கப்பட்டிருப்பதுமான உபாஸனையுடன் கலந்த கர்ம-ரூபங்களாகிய தர்மங்கள் கிரமமாய் ஆசரிக்கப்பட்டுவரும்போது கடைசியில் அவைகளின் பலனில் இச்சையே யில்லாமலேற்பட்டு, அவைகள் கர்ம-பக்தி-யோக-ரூபமாய் முடிவடைந்து, சித்தத்தை சுத்தி

செய்தும் நல்வழியில் ஒர்மைப்படுத்தியும் மேலே மனப்பூர்வமாகவே ஸகலத் தியாகத்தையும் செய்துவிடக்கூடிய யோக்கியதையையும் கிரமமாய் விருத்தி செய்து விடுகின்றன

3. பூர்ணத்தியாகம்

இவ்வித யோக்கியதை பூர்ணமாயேற்பட்டு ஸர்வத் தியாகத்தைச் செய்துவிட்டவருக்கு ஒன்றிலும் பற்றுதலாவது விஷய-சுகங்களில் ஆசையாவது கொஞ்சமேனுமிருக்க மாட்டாது. இப்படியே, ஜ்ஞாதிகளென்றும் பந்துக்களென்றும் ஸ்னேகிதர்களென்றுமுள்ள அபிமானங்கள் யாவற்றும் அற்றுப்போய்விடும். ஆனால், இவ்வளவிருந்தும் இவருக்கு பிரஹ்மானந்தம் விளங்காமலேயிருந்தவரும். ஏன்? த்யாகமே மோக்ஷானந்தத்திற்குக் காரணமென்று சுருதியே சொல்லும் போது, இவ்வளவு தியாகத்தைச் செய்தும் இவருக்கு பிரஹ்மானந்தானுபவமில்லாததற்குக் காரணமென்ன? ஏற்பட்டிருக்கிற தியாகம் தியாகமென்பதில் தடையில்லை. ஆனால், அதை பூர்ணத் தியாகமென்று எண்ணினது மாத்திரம் சரியல்ல. தியாகம் பூர்ணமாவதற்கு இனியுஞ் சில பெரும் அப்பியாஸங்கள் செய்யப்படவேண்டியவைகளாயிருக்கின்றன. இவ்வுலகத்திலும் வேறு உலகங்களிலும் தனக்குண்டாகக் கூடிய சுகங்கள் யாதொன்றும் தேவையில்லையென்று வெறுத்துத் தள்ளினது வாஸ்தவந்தான். ஆனால், தன்னைத் தவிர மற்ற-ஜீவகோடிகளும், பதார்த்தங்களும், இவைகள் அடங்கிய திருச்யப்பிரபஞ்சமுமிருக்கின்றனவென்ற புத்தி மாறவில்லை. தியாகஞ் செய்வதென்றால் தன்னை விட்டு வெளியில் வீசி யெறிந்து விடுகிறதென்று மாத்திரம் அர்த்தமல்ல. வீசி யெறியப்பட்டதில் பின்னால் மறுபடியும் விருப்பமுண்டாகலாம். பசியில்லாதகாலத்தில் விட்டெறியப்பட்ட பழத்தை மறுபடியும் பசியுண்டானால் தேடக்கூடும். பசியே உண்டாகாமலிருக்குமானால்தான் தேடாமலிருக்கலாம்.

பிரபஞ்சத்தில் தனக்கு ஒன்றும் வேண்டியதில்லையென்று எண்ணினல்மட்டில் தியாகம் பூர்ணமாகாது.

சுருதி-முகமாய் உண்மையில் பிரஹ்மம் ஒன்றுதான் வாஸ்தவமாயுள்ளது, மற்றதெல்லாம் மித்யை, ஜீவனே உண்மையில் அந்த பிரஹ்மந்தான் என்று விபக்தமாய் தெரிய வரும்போது, பிரபஞ்சமே வாஸ்தவமல்ல, தான் ஆசைப்படக் கூடிய விஷயங்களே உண்மையில் கிடையாது போக்கிய-வஸ்துக்களே கிடையாதாகையால் தான் போக்தாவுமல்ல, தன்னைத்தவிர வேறொன்றுக்கும் வாஸ்தவத்தில் இருப்புக் கிடையாது, தானே நித்திய-பூர்ணானந்த-ஸ்வரூபீ என்பதான உறுதியுள்ள ஜ்ஞானம் ஏற்பட்டு எப்போது தன் ஆத்மாவினாலேயே அனாத்ம-தோற்றங்களடங்கிய ஸர்வபிரபஞ்சமும் மூடப்பட்டும் வியாபிக்கப்பட்டும் அது இருந்த இடமே தெரியாமலும் திரும்பவும் தோன்ருமலும் மறைந்து விடுமோ, அப்போதுதான் தியாகம் பரிபூர்ண-தியாகமாகும். இந்தத் தியாகத்தின் பொருட்டுள்ள அப்பியாஸத்தில் பிரவேசிப்பது தான் நிவிருத்தி-தர்ம-மார்க்கப்பிரவேசமென்று சொல்லப் படுகிறது. இவ்வப்பியாஸத்திற்குத்தான் முக்கியமாய் ஜ்ஞானப்பியாஸமென்று பெயர். முன் சொல்லப்பட்ட ஸாமான்ய வெளிப்படையான தியாகத்தைச் செய்துவிட்டு, மேலான நிவிருத்தி-தர்மத்தைக் கைக்கொண்டு சுருதி-விதிகளின்படி சிரவண-மனன-நிதித்தியாஸனங்களை ஒழுங்காய்ச் செய்து அத்வைத-ஜ்ஞானத்தையடைந்து பிரஹ்மானந்தியாகநிற்பதே உண்மையான ஸர்வோத்தமத் தியாகத்தின் பலனாகும்.

மேற்கண்டபடி ஜ்ஞானத்தின் பொருட்டு நிவிருத்தி-மார்க்கத்தில் பிரவேசிப்பதற்காக ஸாமான்யத் தியாகத்தைச் செய்வதுதான் விவிதிஷா-ஸன்னியாஸமென்று சொல்லப் படுகிறது. இக்காலத்தில் ஸாக்ஷாத் அபரோக்ஷ-பிரஹ்ம-ஜ்ஞானிகள் மிகவும் அரிதாகையால், உண்மையாய் வித்வத்-

ஸன்னியாஸஞ்செய்து கொள்ளக் கூடிய ஜ்ஞானிகளைக் காண்பது முடியாத காரியம். விவிதிஷா-ஸன்னியாஸத்தினல் சிரவண-மனன-நிதித்தியாஸன-ரூபமாகிய ஜ்ஞானப்பியாஸத்திற்கு விசேஷ ஸௌகரியங்கள் உண்டாகக்கூடியவை. ஸன்னியாஸஞ் செய்தும் மறுபடியும் பிரவிருத்திகளில் புத்தியைச் செலுத்தினல் அவ்வித ஸௌகரியங்களில்லாமல் போவதுடன் செய்யப்பட்ட ஸன்னியாஸமும் வியர்த்தமாகி விடும். ஸன்னியாஸத்தைச் செய்து சுருதியில் ஸன்னியாஸிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிற விதிகளின்படி தவருமல் நடந்துகொண்டு ஜ்ஞானப்பியாஸத்தைச் செய்தால்தான் மேற்கண்ட ஸாமான்ய-தியாகம் காலக்கிரமத்தில் பூர்ண-தியாகமாகி பிரஹ்மானந்தம் கைகூடும். ஸன்னியாஸத்தினலேயே மோக்ஷம் ஸித்தித்து விடுமென்று எண்ணுவதெல்லாம் அறியாமைதான். ஜ்ஞானப்பியாஸத்தைச் செய்யவேண்டியதே ஸன்னியாஸியின் முக்கிய காரியம். ஜ்ஞானத்தைத் தவிர மோக்ஷமென்ற பிரஹ்மானந்தப் பிராப்திக்கு வேறு அந்தரங்க-ஸாதனம் கிடையாது. முன்விவரித்தபடி ஜ்ஞானத்தினல்தான் தியாகம் பரிபூர்ணத்தன்மையை அடையக்கூடும். ஸாமான்ய-தியாகத்தினல் ஜ்ஞானப்பிராப்தியின் பொருட்டு ஸௌகரியங்களும், ஜ்ஞானத்தினல் தியாகத்திற்குப் பூர்ணத்தன்மையும் ஏற்படுவதினல், தியாகமும், ஜ்ஞானமும் பரஸ்பர-ஸாதன-ரூபங்களென்றும் சொல்லலாம். ஆகையால், முமுக்ஷு-விஷயத்தில் இவ்விரண்டுமே பிரதானமானவை. இவ்விரண்டும் சேர்ந்தே பிரஹ்மானந்தப் பிராப்திக்கு அந்தரங்க-ஸாதன மென்பதாகச் சொல்லவேண்டும். ஜ்ஞானத்துடன் சேராத வெளிப்படையான தியாகமாவது, பூர்ணத்தியாகத்தில் முடிவடையாத ஜ்ஞானமாவது பிரஹ்மானந்தத்தை விளங்கச் செய்விக்க முடியாது. இக்காரணத்தினல், ஸன்னியாஸிகள் வெகு ஜாக்கிரதையுடனிருந்து இவ்விரண்டையுஞ் சேர்த்து பலப்படுத்துவதான நோக்கத்திலேயே அப்பியஸித்து வரவேண்டும். தவிரவும், நாளுக்கு நாள் மேன்மேலும் விஷயங்களைத் தள்ளிக்கொண்டே

போக வேண்டுமே யொழிய, தள்ளின விஷயங்களையாவது அல்லது புதிதான விஷயங்களையாவது ஸ்வீகரிப்பதில் புத்தியைச் செலுத்திவிடக்கூடாது. சுருதியில் உபநிஷத்-பாகங்களில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் ஜாக்கிரதையுடன் நடந்து வந்தால்தான் தடையின்றி சீக்கிரத்தில் மேற்சென்று மோக்ஷானந்தத்தை அடையலாம். சுருதி-விதிகளுக்கு எதிரிடையான வழிகளிற் சென்று தன்முக்கிய உத்தேசத்தைக் கெடுத்துக் கொள்ளலாகாது. எவ்வளவு பெரியோர்களால் ஆசரிக்கப்பட்டு வந்திருந்த போதிலும் சுருதி-விருத்த-ஸம்பிரதாயங்கள் தள்ளத் தகுந்தவைகளே. சுருதிஒன்றே கதியென்று பூர்ணமாய் நம்பி சுருதி-மார்க்கத்திலேயே சென்று கொண்டிருப்பவரை வேத-புருஷனாகிய பரமேசுவரர் கைவிடமாட்டாரென்பதிலும், எப்படியாவது பிரஹ்மானந்த-பூர்ணமான தன் ஸ்தானத்திலேயே கொண்டு போய் சேர்த்து விடுவாரென்பதிலும் கொஞ்சங்கூட ஸந்தேஹமின்றி தைரியத்துடன் உறுதியாயிருக்கலாம்.

4. பக்தி இருவிதம்

மோக்ஷத்தில்தான் பிரஹ்மானந்தானுபவம் பூர்ணமாய் இருக்குமென்பதும், பந்தத்திற்குட்பட்டிருக்கிறவரையில் அவ்வானந்தம் இராதென்பதும் எல்லோராலும் நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஆனால், முன் குறிப்பிட்டபடி தியாகத்துடன் சேர்ந்த ஜ்ஞானம்தான் மோக்ஷ-ஸாதனமென்பதை ஸ்ரீ வைஷ்ணவர் முதலான [1] துவைத-வாதிகள் ஒப்புக்கொள்ளாமல் பக்தியையே மோக்ஷத்திற்கு அந்தரங்க-ஸாதனமாகவும் ஜ்ஞானத்தை பக்திக்கே ஸாதனமாகவும்

---

1. ஸாமான்யமாய் விசிஷ்டாத்வைதமென்று சொல்லப்படுவதை நன்ருக நிர்வசனஞ் செய்து பார்த்தால் அது துவைதமாகவே வெளியாகிறபடியால், அதுவும் துவைதமென்றே இப்புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

சொல்லுகின்றார்கள். இவ்விஷயத்தில் அத்வைதிகளுக்கும் அந்த துவைத-வாதிகளுக்குமுள்ள பெரும் அபிப்பிராய-பேதத்தைத் தீர-விசாரிக்க ஆரம்பித்தால், உண்மையில் அபிப்பிராய-பேதமே இல்லையென்றே வெளியாகும். துவைத-வாதிகள் மோக்ஷ-ஸ்தானமென்று எதைக் குறிப்பிடுகிறார்களோ அந்த ஸ்தானத்தை அடையவும் அதிலேற்படக்கூடிய சுகத்தை அனுபவிக்கவும் வேண்டுமானால் பக்தி ஒன்றே முக்கிய ஸாதனமென்பதை அத்வைதிகள் ஆக்ஷேபிக்கவில்லை. அன்றியும், ஏகத்வ ஸித்தியுடன் கூடிய அபரோக்ஷ-ஆத்ம-ஜ்ஞானம் உண்டென்பதாகவே அந்த வாதிகளுக்குத்தெரியாமல் அல்லது அவர்கள் ஒப்புக்கொள்ளாமல், குருவிடமிருந்தும், சாஸ்திரம் மூலமாகவும் வேறு விதமாகவும் ஏற்படக்கூடிய பரோக்ஷமான மனோ-விருத்தி-ரூப-ஜ்ஞானத்தையே அவர்கள் ஜ்ஞானமென்று சொல்லிவருவதால், இவ்வித பரோக்ஷ-ஜ்ஞானம் பக்தியை யுண்டாக்குவதற்கு ஸாதனமாகுமென்றும் இது மோக்ஷத்திற்கு நேர் ஸாதனமாகாதென்றும் அத்வைதிகள் ஒப்புக்கொள்ளவும் தடையில்லை. எம்மட்டில் உயர்ந்த லோக பதவிகளும் மேலான விஷய-சுக-போகங்களும் இருப்பதாகவும், அவைகளை அடைய ஸாதனங்கள் இன்னவை தானென்றும் துவைத-வாதிகள் சொல்லுகிறார்களோ அம்மட்டில் அவர்கள் சொல்வதற்கும் அத்வைதிகள் சொல்வதற்கும் விசேஷ வித்தியாஸமே இல்லையாதலால், அவ்விஷயத்தில் அந்த துவைத வாதிகளுடன் வியவஹாரஞ் செய்வதற்கு யாதொரு முகாந்திரமும் காணப்படவில்லை. ஆனால், துவைத-வாதிகள் போகக்கூடாத ஒரு ஸ்தானமும் அவர்கள் அடையக் கூடாத ஒரு ஆனந்த விசேஷமும் இருப்பதாக அத்வைதிகள் சொல்லிக்கொண்டு அந்த ஸ்தானத்தை அடையவும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கவும் ஒரு ஸாதனத்தைக் குறிப்பிடும் போது, அந்த ஸ்தானத்தையும் அதில் கிடைக்கக்கூடியதையும் வாஸ்தவமென்று அந்த வாதிகள் ஒப்புக்கொள்ள முடியாததால்

அவைகளுக்கு ஸம்பந்தப்பட்ட ஸாதனமாகிய அத்வைத-ஜ்ஞானத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடவில்லை. இவ்விதமாய், அத்வைதிகளின் உயர்ந்த முக்கியக் கொள்கை துவைதிகளுக்கு விரோதமாயிருப்பதாக எண்ணப்பட்ட போதிலும், துவைதிகளின் கீழான கொள்கை அத்வைதத்திற்கு விரோதமில்லை.

பிரஹ்மானந்தப்பிராப்திக்கு எந்த அபரோக்ஷமான ஏகத்வ-ஜ்ஞானத்தை நேர் ஸாதனமாக அத்வைதிகள் சொல்லுகிறார்களோ அந்த ஜ்ஞானத்திற்கு பக்தியே ஒரு ஸாதனம். பக்தி இருவகை, அதாவது அபர-பக்தி, பர-பக்தி. அபர-பக்தியில் உபாஸகர் உபாஸ்ய-தேவதையை தன்னைக்காட்டிலும் வேறாகவே எண்ணி உபாஸிப்பார். பர-பக்தியில் தனக்கு அபேதமாகவே உபாஸிப்பார். இவ்விரண்டுக்குள் பர-பக்தி மேற்கண்ட ஜ்ஞானத்திற்கு நேர்ஸாதனமாகும். பர-பக்தியினால் ஜ்ஞானமுண்டாவதை யுத்தேசித்து, பரபக்தியையே ஜ்ஞானமென்று வெகு பெயர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இவ்விரண்டும் வெவ்வேறுதான். பர-பக்தியில் ஏகத்வ-பாவனை செய்யப்படுகிறதே யொழிய ஏகத்வ-அனுபவம் கிடையாது. இவ்வனுபவமுண்டானால் தான் ஜ்ஞான முண்டாயிற்றென்று சொல்லலாம். துவைதத்திலேயே புத்தியுள்ளவர்களுக்கு பர-பக்தி யிருக்கக்கூடியதல்ல. துவைத-நோக்கமுள்ள சைவ-வைஷ்ணவர்கள் கைலாஸம்-வைகுண்டம் போவதே மோக்ஷமென்று சொல்லுகிறார்கள். இப்பூலோக-வாழ்க்கையை உத்தேசித்து அந்த உத்தம-லோக-வாழ்க்கை வெகுகாலம் நீடித்திருக்குமாகையால், அது நித்தியமென்று சொல்லப்படுகிறது. ஆகிலும், அவ்வாழ்க்கைக்கும் முடிவுண்டு. அபர-பக்திமான்களில் அனேகர்கள் நடப்பு கல்பத்தில் பூலோகத்திற்குத் திரும்பி வந்துவிடக்கூடும். சில மஹான்கள் மாத்திரம் நடப்பு கல்பம் முடிவு வரையில் அங்கு இருந்துவிட்டு வரப்போகிற கல்பாரம்பத்தில் இங்கு திரும்பி வருவார்கள்.

பர-பக்திமான்களோ வெனில் இப்படி ஒரு காலத்திலும் திரும்பி வரமாட்டார்கள். இவர்களுடைய பர-பக்தியின் பலத்தினுல் அபரோக்ஷ-ஜ்ஞானத்தை யடைந்து அவ்வுத்தம-லோகத்திலிருந்தே கைவல்ய-மோக்ஷத்தைப் பெறுவார்கள். பர-பக்திமான்கள் கைலாஸம்-வைகுண்டம் போவதெல்லாம் அங்கு ஏற்படக்கூடிய ஜ்ஞான-ஸாதனத்தை யுத்தேசித்தே ஒழிய, அதில் கிடைக்கக்கூடிய உத்தம சுகத்தை யுத்தேசித்தாவது, அல்லது அதுவே மோக்ஷ-ஸ்தானமென்று எண்ணங்கொண்டாவதல்ல கைலாஸமும் வைகுண்டமும் திருச்யப்பிரபஞ்சத்திற்குட்பட்டவைகளே. அவைகளில் கிடைக்கக்கூடிய சுகமும் உத்தமமான விஷய-சுகமேயன்றி பிரஹ்மானந்தமாகமாட்டாது. பர-பக்தியைச் செலுத்தி கடைசியில் பிரஹ்மானந்த-பூர்ணமான கைவல்ய-மோக்ஷத்தின் பொருட்டு மேற்கண்டபடி ஸாதனமாக எண்ணி கைலாஸம்-வைகுண்டம் போகிறவருக்கு அங்கு போவதே கிரம-முக்தியாகும். கைவல்ய-மோக்ஷத்திலேயே உத்தேசமில்லாமல் அபர-பக்தியின் பயன்-ரூபமாக அவ்வுத்தம-லோகங்களுக்குப் போய், அப்பால் முன் சொன்னபடி திரும்பவும் பூலோகத்தில் ஜன்மம் எடுப்பவர்களுக்கு அப்படிப் போவதை மோக்ஷமென்று எக்காரணத்தினுலும் சொல்ல இடமில்லை. ஆகையால், உண்மையான மோக்ஷத்திலும் பிரஹ்மானந்தத்திலும் துவைத-வாதிகளுக்கு உத்தேசமில்லாததினுல், அவைகளுக்கு நேர் ஸாதனமாயுள்ள ஏகத்வ-ஜ்ஞானத்திலும் அவர்களுக்குப் புத்தி யுண்டாவதில்லையென்பதும் ஆச்சரியப்படத்தக்கதல்ல.

5. பக்தியோகம்

விஷய சுகத்தில் இச்சையும், அதைத் தேடுவதில் பிரயத்தினமும் இருப்பதை பசு-பக்ஷி-மிருகங்களிடத்திலும் காணலாம். இது மனுஷியனுக்கு அஸாதாரண-லக்ஷணமல்ல. ஆத்ம-ஸ்வரூப-விசாரஞ் செய்து இனி பிறப்பிறப்பில்லாமல் திருச்யப்பிரபஞ்சத்தை விட்டு வெளியேறி மோக்ஷானந்தத்தை

அடைய வழி தேடுவதே மனுஷியனுடைய அஸாதாரணச் செய்கையாகும். இப்படி முக்திபெற வழிதேடாமல், விஷய-சுகங்களிலேயே உயர்ந்த சுகங்கள் கிடைக்கக்கூடிய ஸ்தானங்களுக்குப்போய் நீடித்து சுகித்து வாழ்ந்துவரவேண்டுமென்ற உத்தேசத்துடன், கடவுள் வேறு, தான் வேறு என்று பாவித்து அபர-பக்தியில் ஈடுபட்டிருப்பவரை பசுவுக்கு ஸமானரென்று சுருதியே வியக்தமாய்ச் சொல்லுகின்றது.

अन्योऽसावन्योऽहमस्मीति न स वेद । यथा पशुरेवं स देवानाम् ॥

அபர-பக்தியினுல் பக்தருடைய கீழான கோரிக்கை நிறைவேறுமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனுல், மனுஷியன் செய்யவேண்டிய விதத்தில் பக்தி செலுத்தப்படவில்லையென்று மாத்திரம் அர்த்தம். பர-பக்தி தான் மேலான ஜ்ஞானயோகத்திற்கும் அதன் மூலமாய் பிரஹ்மானந்தப் பிராப்திக்கும் ஸாதனமான பக்தி யோகமாகும். மோக்ஷத்திற்கு ஸாதனமாகக்கூடிய பிரகாரம் பர-பக்தியை செலுத்துவதுதான் மனுஷியன் செய்யவேண்டிய காரியமென்று தாத்பரியம். ஆனால், பக்தி மார்க்கத்தில் பிரவேசிக்கும் காலத்திலேயே பர-பக்தியைக்-கைக்கொள்வது ஸாத்யப்படமாட்டாது. ஆரம்பத்தில் அபர-பக்தி தான் கைக்கொள்ளத்தகுந்தது. அபர-பக்தி முதிர்ந்து, ஈசுவரானுக்கிரஹமேற்பட்டு, அப்பால் தான் பர-பக்தியில் புத்தியுண்டாகக்கூடும். எக்காலத்திலும் பர-பக்தியே கூடாதென்று தீவ்ரமான விபரீத எண்ணங்கொண்டு அபர-பக்தியிலேயே யிருந்து வருவது பிசகென்று மாத்திரம் இங்கு காண்பிக்கப்பட்டது.

பிரம்மாணந்தப் பிராப்தியின் பொருட்டு ஜீவத்வ-நிலையை விட்டு ஆத்மத்வ-நிலையிலிருக்க வேண்டுமென்று முன் பல-தடவை சொல்லப்பட்டது. யோக-ரூபமாகிய பர-பக்தியினுல் தான் இந்த ஆத்மத்வ-நிலையை சீக்கிரத்தில் ஸாதித்துக்-கொள்ளலாம். உபாஸகர் தன்னையும் தான் உபாஸிக்கிற

கடவுளையும் எப்படி ஒன்ருக பாவிக்கவேண்டுமென்பதின் பிரகாரமும் வேத-சாஸ்திரத்தில் துலக்கப்பட்டிருக்கிறது. அல்பனும் கிஞ்சிஜ்ஜ்ஞனும், துக்கியும், ஜனன-மரணங்களுக்குட்பட்டவனுமான ஜீவனுகிய உபாஸகனும் நித்திய-சுத்த-புத்த-ஆனந்த-ஸ்வரூபியும் ஸர்வ-வியாபியுமான ஸர்வேசுவரனும் எப்படி ஒன்ருகக் கூடுமென்று கேட்கலாம். கிஞ்சிஜ்ஜ்ஞனை உபாஸகனும் ஸர்வ-ஜ்ஞனை ஈசுவரனும் ஒன்று என்று சொல்லக்கூடாதென்பது வாஸ்தவம். பல அல்ப-குணங்கள் சேர்ந்து உபாஸகனிடத்தில் ஜீவத்வத்தையும், பல மஹா கல்யாண-குணங்கள் சேர்ந்து உபாஸ்யனிடத்தில் ஈசுவரத்வத்தையும் அமைத்து வைத்திருக்கின்றன. உபாஸகன் தன்னையும் ஈசுவரனையும் ஒன்ருகவே பாவிக்கும்போது, ஈசுவரனிடமிருந்து தன்னை வேறுபடுத்திய தன்னுடைய அல்ப-குணங்களை ஒதுக்கித் தள்ளியும், தன்னிடமிருந்து ஈசுவரனை வேறுபடுத்திய ஈசுவரனுடைய பெரும் கல்யாண-குண-கணங்களையும் தள்ளி வைத்தும், இருவர்களிடமும் பொதுவாயும், ஸ்திரமாயும், தள்ளத்தகாததாயுமிருக்கிற ஆத்மப்பொருளை மாத்திரம் கவனித்து அது ஒன்றேயல்லாமல் பலவல்லவென்று உறுதியாய்ச் பாவித்து வருவதே உத்தம பர-பக்தியின் லக்ஷணம். இப்படி அடிக்கடி பாவித்துவந்தால், நாளுக்கு நாள் தன்னுடைய அல்ப-குணங்கள் மறைந்தும், தன் ஜீவத்வ-புத்தி மலினப்பட்டும், ஆத்மத்வ-புத்தி பலப்பட்டும் வருவதுமல்லாமல் ஈசுவரனுடைய மஹாகுணங்களும் தன் மனதை விட்டு விலகி அவரிடத்திலும் அவரால் வியாபிக்கப்பட்டிருக்கிற வெளிப்பிரபஞ்சத்திலும் (அதாவது, எங்கும்) ஆத்மத்வ-புத்தியே தன்னிடத்தில் உறுதிப்பட்டும் வரும். இப்படியே நாளுக்குநாள் ஆத்மத்வ-புத்தி விருத்தி யடைந்து அதிகமாய் பலப்பட்டும், ஜீவத்வ-புத்தியும் திருச்யத்தின் பார்வையும் குறைந்து மலினப்பட்டும் வந்தால், காலக்கிரமத்தில் குரு-கடாக்ஷத்தினுலும் ஈசுவரானுக்கிரஹத்தினுலும்

மேலான ஜ்ஞானப்பியாஸங்களும் பூர்த்தியாகி, ஆத்மானுபவம் தெளிவாய் ஏற்பட்டு ஜீவத்வ-திருச்யத்வ-புத்திகள் மறுபடியும் தோன்றக்கூடாமலே மறைந்து போய் பிரஹ்மானந்தமே நிரந்தரமாக விளங்கக்கூடும்.

6. எல்லா ஆசைகளையும் விடவேண்டும்

அபர-பக்தியில் மாத்திரமிருப்பவர்களுக்கு இவ்வித ஆத்மத்வ-ஸித்திக்கே இடமிராதாகையால் அவர்களுக்கு பிரஹ்மானந்தானுபவமும் ஏற்படக்கூடியதல்ல; கைலாஸம்-வைகுண்ட மென்ற ஸகுணப்பிரஹ்ம-லோகத்தில் கிடைக்கக் கூடிய போகங்களையும் பகவானுடைய கைங்கரிய-சுகத்தை யுமே பெரியதாயெண்ணிக் கொண்டும், தன் ஜீவத்வத்தையும் வரவர பலப்படுத்திக்கொண்டும், ஜீவனுக்குள்ள கதிகளையே தனக்கு உறுதிப்படுத்திக் கொண்டும் வரலாமே யொழிய உண்மையான பிரஹ்மானந்தம் கிட்டப் போகிறதே யில்லை. இப்படிச் சொல்வதினால் பகவத்-கைங்கரிய-சுகத்தை மிகவும் தாழ்ந்த சுகமென்று சொல்லியதாக எண்ணிவிடக்கூடாது. சுகங்களுக்குள் பகவத்-கைங்கரிய-சுகம் பெரியதே. ஆனால், மற்ற விஷய-சுகம் போல் அக்கைங்கரிய-சுகமும் ஆனந்தப் பிரதிபலனமே யல்லாமல் ஸாக்ஷாத் பிரஹ்மானந்தத்திற்கு ஒப்பாக மாட்டாதென்று மாத்திரம் சொன்னதாக அறிந்து கொள்ளவேண்டும். அன்றியும், அந்த கைங்கரியத்திலேயே சுகமிருப்பதினால் தானே அது செய்யப்படுகிறது? அவாப்த-ஸமஸ்த-காமனாகவும் நித்திய-திருப்தராகவுமிருக்கின்ற ஈசுவர னுக்கு பக்தர்களின் கைங்கரியத்தினால் ஆகவேண்டியது யாதொன்றுங் கிடையாது. அந்த கைங்கரியம் தங்களுக்கு சுக-ஸாதனமாகவே அபர-பக்தர்களால் செய்யப்படுவதால், இந்தக் கைங்கரியமும் சுகந்தேடுகிற காரியமே யல்லாமல் வேறல்ல வென்பதே நிச்சயம். முன் பலவாறாகச் சொல்லியபடி எதுவரையில் திருச்யப்பிரபஞ்சத்தில் கிடைக்கக் கூடிய சுகத்தில் இச்சையும் அதைத்தேடுவதில் பிரயத்தினமும் காணப்

படுகிறதோ அதுவரையில் பிரஹ்மானந்தம் எட்டமாட்டாதென் பதும் நிச்சயம். அவ்விச்சையையும் பிரயத்தினத்தையும் பாக்கி யன்னியில் பூராவாகத் தியாகஞ் செய்துவிட்டு சுருதியில் கண்டபடி பர-பக்தியுடன் ஜ்ஞானுப்பியாஸத்தைச் செய்தால் தான் பிரஹ்மானந்தம் ஸித்திக்கக்கூடும். சரியானபடி தியாகத்தைச் செய்யாமலும் உண்மையான ஏகத்வ-ஜ்ஞானத்தைத் தேடாமலும் வேறுவிதமான காரியங்களிலேயே புத்தி சென்றுகொண்டிருந்தால், திருச்யப்பிரபஞ்சத்திலடங்கிய லோகங்களுக்குள்ளாகவே போக்கு-வரத்துடன் அலைந்து கொண்டேயிருக்கவேண்டியது தானென்பதே உண்மை.

7. சரணுகதி

தியாகமும் ஏகத்வ-ஜ்ஞானமும் சேர்ந்தே பிரஹ்மானந்தத்தை விளங்கச்செய்விக்குமென்று முன்னுலேயே காண்பிக்கப் பட்டது. எவ்விதம் துவைத-வாதிகள் ஏகத்வ-ஜ்ஞானத்திற்குப் பதிலாக பேத-ஜ்ஞானத்துடன் சேர்ந்த அபர-பக்தியை மோக்ஷ-ஸாதனமென்று எண்ணிக் கொண்டிருக்கிறுர்களோ அவ்விதமாகவே ஸர்வத்தியாகத்திற்குப்பதிலாக அவர்களுக்குள் சைவர்கள் சில தீக்ஷைகளையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவித சரணுகதிக் கிரமத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறுர்கள். தியாகம் பூர்ணமாக வேண்டுமானுல், வெளிப்படையான ஸர்வத்தியாகம் மாத்திரம் போதாதென்றும், ஆந்தரமாகவும் தியாகம் ஸ்திரப்பட்டுப் பூர்த்தியாகும்படியாகக் குறிப்பிட்ட ஜ்ஞான-வழியைத் தேடவேண்டுமென்றும் முன் சொல்லப்பட்டது. வெளித் தியாகத்தைக்கூட செய்யாமல் பகவச்சரணுகதியைச்செய்வதாக பாவனை செய்வதெல்லாம் உபயோகமற்ற காரியமேயாகும். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் கீதையில் எல்லா தர்மங்களையும் தியாகஞ் செய்துவிட்டுத் தன்னைச் சரணமடையவேண்டுமென்றே தெளிவாய்ச் சொல்லியிருக்கின்றுர். இப்படிச் சொல்லியதற்கு வைதிக-லௌகிக-ரூபமான தர்மாதர்மங்கள் யாவற்றையும் பரித்தியாகஞ் செய்தபின்புதான் சரணுகதியைச் செய்ய

வேண்டுமென்று வெளியாகின்றது. இப்படி யாவற்றையும் பரித்தியாகஞ் செய்யக் கூடியது பிராஹ்மண-புருஷர்களின் விஷயத்தில் ஸன்னியாஸ-காலத்திலும், மற்ற ஜாதியார்களின் விஷயத்திலும் ஸ்திரீகளின் விஷயத்திலும் சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்ட வீரமார்க்க-பிரவேசத்திலுந்தான் நடக்கக் கூடியது. ஸன்னியாஸ-கல்பத்திலேயே ஸர்வத்தியாகஞ் செய்துவிட்டு அப்பால் பகவச்சரணாகதியைச் செய்வதான பிரயோகங்களும் ஸ்பஷ்டமாய்த் துலங்குகின்றன. இக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தர்மாதர்மங்களைத் தியாகஞ் செய்யாமல் பலத்தியாகம் மாத்திரம் செய்தால் போதுமென்று சொல்லிக் கொண்டு கிருஹஸ்த-ஸ்தானத்திலேயே சரணாகதியைச் செய்வதாக பாவனை செய்து வருகின்றார்கள். கிருஹஸ்தராகவே யிருந்துகொண்டும், கிருஹஸ்த-ஸ்தானத்தில் தனக்குள்ள போகங்களை அனுபவித்துக்கொண்டும், தான் செய்து வருகிற லௌகிக-காரியங்களினால் தனக்குக் கிடைக்கக் கூடிய வரும்படிகளை ஸ்வீகரித்து உபயோகப்படுத்திக் கொண்டே தான் ஸர்வ-கர்ம-பலத்தியாகஞ் செய்வதாய்ச் சொல்லிக்கொண்டும், வாக்கினால் மாத்திரம் சரணாகதியைச் செய்தால் இதன் பலனும் இதற்கு ஒத்ததாகத் தானிருக்கக் கூடும். இது பகவான் சொன்ன சரணாகதியாகமாட்டாது. பொய்யான தியாகத்திற்கும் பொய்யான சரணாகதிக்கும் பலனாக உண்மையான மோக்ஷானந்தம் ஏற்படாதென்பதே திண்ணம்.

பகவான் கீதையில் கர்ம-பலத்தியாகத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்லியது வேதோக்தமான கர்மத்தை, அதன் பலத்தியாகத்தினால், கர்ம-யோகமாக மாற்றி, அது சித்த-சுத்தியின் பொருட்டு ஏற்பட வேண்டு மென்று உத்தேசித்துச் சொல்லப்பட்ட விஷயம். எதுவரையில் பலத்தில் இச்சை இருக்கிறதோ அதுவரையில் கர்மம் சித்த-சுத்தியின் பொருட்டு உபயோகப்படாமல் போய்விடும். சித்தம் சுத்தப்

பட்டாலொழிய உபாஸனையில் சித்தம் ஒர்மைப்படுவதற்காவது மேல்-ஜ்ஞானப்பிராப்தி ஸாத்தியப் படுவதற்காவது இடமில்லை. அன்றியும், கர்ம-ஸன்னியாஸத்தை சாஸ்திரப்படி செய்ய க்ஷத்திரியனுன அர்ஜுனனைப் போன்ற அதிகாரமில்லாதவர் களால் கர்மத்தியாகம் செய்யப்படக் கூடாததால், அவர்கள் பலத்தியாகத்தைத்தான் செய்யவேண்டு மென்று வற்புறுத்தி பகவானுல் உபதேசிக்கப்பட்டது. இப்படி பலத்தியாகஞ்செய்ய வேண்டுமென்று பகவான் சொன்னது வேத-விஹிதமான கர்மங்களுக்குத்தான் பொருந்துமே தவிர, லௌகிக-கர்மங் களுக்காவது அதர்மச் செய்கைகளுக்காவது பொருந்தக்கூடிய தல்ல. லௌகிக-காரியங்களையும் அதர்மச்செய்கைகளையும் செய்யாமலே பூராவும் விட்டொழித்து விட்டுத்தான் சரணு கதியைச் செய்யக்கூடுமென்று தாத்பரியம். உத்தியோகஞ் செய்து, அல்லது வேறு விதமாய், பணம் ஸம்பாதித்துக் கொண்டும், நிலங்களைச் சாகுபடிசெய்து அல்லது செய்வித்து அனுபவித்துக் கொண்டும், மற்றும் லௌகிகப் பிரவிருத்திகளை வைத்துக்கொண்டும், சரணுகதியைச் செய்யலாமென்று சாஸ்திரம் எவ்விதத்திலும் இடங்கொடுக்கவே யில்லை.

தவிரவும், சுருதி-விஹிதமான கர்மங்களின் தியாகத் திலேயே சுருதியின் பிரகாரம் அதிகாரியான பிராஹ்மணன் சரணுகதியைச் செய்யவேண்டு மென்றுல், தன்னுல் சாஸ்திரப் படி எவ்வளவு தியாகஞ்செய்யக்கூடுமோ அவ்வளவையும் குறையில்லாமல் செய்ய வேண்டும். கர்மத்தியாகத்தையே செய்ய அதிகாரமிருக்கும் போது, அதைச்செய்ய மாட்டேன் பலத்தியாகத்தைத்தான் செய்வேனென்று பிராஹ்மணன் சொன்னுல், இது ஸர்வ-தர்மத்தியாகமாக மாட்டாது. ஸர்வ-தர்மத்தியாகத்தைச் செய்யாதவர் சரணுகதியைச் செய்ய யோக்கியரல்ல வென்பதே பகவானுடைய கொள்கை. சாஸ்திரப் படிக்குள்ள சரணுகதியானது கர்ம-மார்க்கத்தைப் பூராவும் விட்டு வெளியேறுகிற பரமஹம்ஸ-ஸன்னியாஸியால் தான்

செய்யப்பட்டு வருகிறதென்று சொல்லவேண்டும். இக்காலத்திலோ வீரமார்க்கப்பிரவேசம் ஸாத்தியப்படக்கூடியதல்ல. வீரமார்க்கம் இன்னதென்று பின்னுல் துலங்கும். பரமஹம்ஸர் ஸன்னியாஸ-காலத்திலேயே பகவச்சரணுகதியைச் செய்து விட்டு, மேலான அபரோக்ஷ-ஜ்ஞானப்பிராப்தியின் பொருட்டு சுருதியில் குறிப்பிட்ட பகவதாஜ்ஞைப்பிரகாரம் ஜ்ஞானுப்பியாஸத்தில் பிரவேசிக்கிருர். இவ்வித ஜ்ஞானத்திலும் அதன் மூலமாக ஏற்படக்கூடிய கைவல்ய-மோக்ஷத்திலும் த்வைத-வாதிகளுக்கு உத்தேசமில்லாததாலும், ஸாமான்ய அபர-பக்தியினுல் கிடைக்கக்கூடிய லோகத்திற்கு மேற்பட்ட மோக்ஷ-ஸ்தானமாவது அதற்குரிய விசேஷ ஸாதனமாவது இல்லையென்று எண்ணியிருப்பதாலும், அவர்கள் ஒருவித பகவச்சரணுகதியுடன் நின்றுவிடுகிருர்கள். அத்வைதிகளுக்கு உண்மையான பகவச்சரணுகதியே பூர்வாங்கமாக ஏற்பட்டு அப்போது நிவிருத்தி-மார்க்கத்திலிறங்கி உத்தம ஜ்ஞானுப்பியாஸம் ஆரம்பிக்கப்படுகிறது. இதனுல் தான் ஸ்ரீ வைஷ்ணவர்களால் சரணுகதிக்கு முக்கியத்தன்மையும், அத்வைதிகளால் ஜ்ஞானுப்பியாஸத்திற்கு முக்கியத்தன்மையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சரணுகதிக்குப் பின்னுல் ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்துவருகிற வேதாந்த-விசாரம் கால-க்ஷேபார்த்தமாகவே நடப்பதாக அவர்களே ஒப்புக்கொள்கிருர்கள். சரணுகதிக்கு மேல் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமேயில்லையென்பதே அவர்களுடைய கொள்கை. அத்வைதிகளின் சரணுகதி பிரவிருத்தி-காரியங்களின் முடிவையும் நிவிருத்தியில் பிரவேசத்தையும் குறிப்பிடுகின்றது.

அத்தியாயம் 25

பிரஹ்மாநந்தம்

1. பரம்பரா ஸாதனங்கள்

முக்குணங்களுமற்ற ஆத்ம-ஸ்தானம் நிர்குண-ஸ்தானம். இதுதான் முக்காலத்திலும் அழியாத உண்மையான ஸ்தானம். இந்த ஸ்தானத்தில்தான் வாஸ்தவ ஆனந்தம் விளங்கக் கூடியது. இதைத்தவிர மற்ற, அதாவது, அனாத்ம-ஸ்தானங்கள் யாவும் ஸகுண-ஸ்தானங்கள். இந்த ஸகுண-ஸ்தானங்களுக்குள்ளாக கைலாஸம்-வைகுண்டம் என்பது உத்தமோத்தம-ஸ்தானங்கள். குணவத்தான ஸகல பிரபஞ்சத்தையும் உண்டாக்கியும், பரிபாலித்தும், லயப்படுத்தியும் வருகிற ஸகுணப்பிரஹ்மமாகிய ஸர்வேசுவரனே ரூபவானாக, முன் விவரித்த பிரகாரம், இவ்வுத்தம ஸ்தானங்களில் பிரகாசிக்கின்றார். இதனால் அந்த ஸ்தானங்களடங்கிய லோகத்திற்கு ஸகுணபிரஹ்ம-லோகமென்று பெயர்வந்தது. இதுவே திருச்யப் பிரபஞ்சத்தில் உத்தமோத்தமலோகம். ஈசுவரனாகிய ஸகுணப் பிரஹ்மமே பர-தத்துவமென்று எண்ணியும், அவர் வேறு, தான் வேறு என்று பாவித்தும், உபாஸித்து வருகிற தீவ்ர அபர-பக்திமான்கள் அடையக்கூடிய உயர்ந்த ஸ்தானம் இதுவே. அவர்களுடைய உபாஸனா-பலத்திற்குத் தக்கபடி அந்த லோகத்தில் அவர்கள் வாஸஞ் செய்யக்கூடிய காலமும் வேறுபடும். இதே ஸகுணப்பிரஹ்மமாகிய ஈசுவரனையே பர-தத்துவமென்று எண்ணி பர-பக்திமான்களும் உபாஸிக்கின்றார்கள். ஆனால், குணத்துடன் கூடியிருப்பதை பர-தத்துவ-லக்ஷணமாக எண்ணாமலும், ஈசுவரனுடைய மஹா-குணங்களையும் தன்னிடமிருக்கிற அல்ப-குணங்களையும் ஒரு பொருட்டாக எண்ணாமலும், இருவகை-குணங்களையும் தள்ளி விட்டு மிஞ்சி நிற்கிற ஏகமான ஆத்ம-வஸ்துவை மாத்திரம்

பர-தத்துவமாக எண்ணியும், தனக்கு அபேதமாகவே பாவித்து ஈசுவரனை உபாஸித்து வருகின்றார்கள். இப்படி தன்னிடத்திலும் உபாஸ்ய-மூர்த்தியிடத்திலுமுள்ள குணங்கள் யாவற்றையும் தள்ளி ஒதுக்கியே உபாஸித்து வருவதால், இவ்வித உபாஸனை சீக்கிரத்தில் நிர்குண-பிரஹ்ம-நிஷ்டா-ரூபமாகிய அபரோக்ஷ-ஜ்ஞானத்தில் பூர்த்தியடைந்து பிரஹ்மானந்தானுபவத்துடன்கூடிய கைவல்ய-முக்தியில் முடிவடையக்கூடும். ஒருக்கால் இப்பூலோகத்தில் அந்த நிஷ்டை பூர்ணமாகாவிட்டால், அதுமேல்-ஜ்ஞானாப்பியாஸத்தினால் பூர்ணமாகும் பொருட்டு அந்த உபாஸகர் ஸகுணப்பிரஹ்ம-லோகத்திற்குப் போய்ச்சேர்ந்து அங்கு ஸகுணப்பிரஹ்ம-ஸன்னிதியிலேயே ஜ்ஞான-ஸித்தியைப் பெற்று குணக்கட்டிலிருந்து விடுபட்டு நிர்குணாத்மகமான கைவல்ய-மோக்ஷத்தை அடைவார்.

மேற்கண்ட இருவகை-பக்தர்களுக்கும், அவரவரின் பக்தி ஸ்திரப்பட்டு நிலைக்கும் பொருட்டு, மனது சுத்தமாயிருப்பது மிகவும் அவசியம். மனது அசுத்தமாயிருக்கும் வரையில் அது ஒர்மைப்படுவது ஸாத்தியமில்லை. ஒர்மைப்படாத மனதில் பூர்ண-பக்தி க்ஷணங்கூட தங்கி நிற்கமுடியாது. ஆகையால், பக்தி ஸித்திப்பதற்காகவும் சித்த-சுத்தியின் பொருட்டும் கர்ம-யோகம் அவசியமாயுள்ளது. இந்த கர்ம-யோகம் கர்ம-பலனில் இச்சையுள்ளவரையில் ஸித்திக்கமாட்டாது. ஆகையால், எல்லோருக்கும் முதலில் கர்ம-யோகம் ஸித்திக்கும் பொருட்டு பலத்தியாகமே முக்கியமென்று வற்புறுத்தி சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, பலத்தியாகமில்லாவிடில் கர்ம-யோகம் ஏற்படாது. கர்ம-யோகமில்லாவிடில் சித்த-சுத்தியுண்டாகாது. சித்த-சுத்தியன்னியில் பக்தியே நிலைக்கமாட்டாது. ஸாமான்ய அபர-பக்தியே உண்டாகக்கூடாத நிலைமையில் உத்தம பர-பக்தியும் அதற்குமேல் அபரோக்ஷ-ஜ்ஞானமும் உண்டாக முடியாதென்பதும் நிச்சயமே. ஸாமான்ய அபர-பக்தராகிய துவைதியானாலும், உத்தம - பர

பக்தராகிய அத்வைதியானாலும், எல்லோராலும் பலத்தியாகஞ் செய்யப்படவேண்டியது அவசியமாயிருந்த போதிலும், இவ்வித பலத்தியாகம் ஒருவருக்குத் தன்னிடத்தில் ஜீவத்வ-புத்தி யிருக்கும்வரையில் ஸம்பூர்ணமாக ஏற்படாது. ஜீவத்வ-புத்தி யினால்தான் தான் போக்தா என்ற பாவனையும் ஸ்திரப் பட்டிருக்கும். தன்னை போக்தா என்றும் நினைத்துக்கொண்டு பல-ரூபமான போகம் மாத்திரம் தனக்குக்கூடாதென்று எண்ணுவது ஸாத்தியப்படமாட்டாது. இது இயற்கைக்கு விரோதப்படும். ஆகையால், ஸம்பூர்ணமான கர்ம-பலத் தியாகமும் உத்தம பர-பக்திமானிடத்தில்தான் காணப்படு மென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். கர்மம், பக்தி, ஜ்ஞானம் இவையெல்லாம் பரம்பரையாக உண்மையான மோக்ஷானந்தத்திற்கே ஸாதனங்களாகயிருப் பதால், எவ்வித கர்மம், எவ்வித பக்தி, எவ்வித ஜ்ஞானம் அப்படி ஸாதனங்களாக இருக்கக்கூடியவைகளோ அவைகள் தான் உண்மையான கர்ம-பக்தி-ஜ்ஞானங்களாகும். ஆதலால், பலத்தியாகத்துடன் செய்யப்பட்ட கர்மமே கர்மமாகும் பர-பக்தியே பக்தியாகும், அபரோக்ஷமான ஏகத்வ-ஜ்ஞானமே ஜ்ஞானமாகும். மற்றதெல்லாம் வியாபாரமும், தைன்யமும், ஆடம்பரமுந்தான்.

2. கர்ம-பக்தி-ஜ்ஞான யோகங்கள்

பிரஹ்மானந்தத்தை விளங்கச் செய்விக்கக்கூடிய மார்க்கத்தின் கிரமம் இன்னதென்று இங்கு ஒருவாறு சுருக்கிச் சொல்லப்படுகிறது:—

(1) **கர்ம-யோகம்:—** ஒவ்வொருவரும் அவரவருக்கு சாஸ் திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிற கர்மங்களை, அவைகளின் பலத்தில் இச்சையன்னியில், செய்து வரவேண்டியது. பலனில் இச்சையில்லாவிட்டால் செய்வதற்கே மனதில் தூண்டுதல் உண்டாகாதே யென்று நினைத்தால், வேத-சாஸ்திரங்களில்

குறிப்பிட்ட கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று ஈசுவரனே கட்டளையிட்டிருப்பதால், அவருடைய கட்டளைக்கு உட்பட்டுச் செய்ய வேண்டியிருக்கிறதென்று மாத்திரம் எண்ணிச்செய்தால் போதுமென்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இப்படி கர்மத்தைச் செய்யும்போதும் தன்னை கர்த்தா-ஸ்தானத்தி லிருந்து விலக்கி, தான் ஸாக்ஷிமாத்திரனாக இருப்பதாகவே பாவித்து வரவேண்டும். ஜீவனிடத்திலிருக்கிற ஆத்மாவும் ஈசுவரனிடத்திலிருக்கிற ஆத்மாவும் ஒன்றேயானாலும் சிதாபாஸத்தன்மையான ஜீவத்வமும் ஈசுவரத்வமும் ஒன்றாக மாட்டாதாகையால், பிரபஞ்சம் பூராவுக்கும் பொதுவாயுள்ள ஸமஷ்டி-சிதாபாஸனாகிய ஈசுவரன் சாஸ்திரம் மூலமாய் கட்டளையிட்டிருக்கிற யஜமானனாகவும், வியஷ்டி-சிதாபாஸனாகிய ஜீவன் அக்கட்டளையை அனுசரித்து நடந்து வருகிற தாஸனாகவும் இருப்பதில், கேவல ஸாக்ஷியாக இருவரிடத்திலும் ஆத்ம-ஸ்வரூபியாயிருக்கிற தனக்கு யாதொரு கர்ம-ஸம்பந்தமுமில்லையென்ற உறுதியான பாவனை இருந்து கொண்டிருக்கவேண்டும்.

(2) பக்தி-யோகம்:—மேற்கண்டபடி ஸாக்ஷி-மாத்திரனாக நின்று கர்மம் நடத்தப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறதான பாவனை பலப்பட்டு விட்டால், உபாஸனையைச் செய்வதிலும் தன்னையும் உபாஸ்யமான ஸகுண-மூர்த்தியையும் ஆத்மத்வ-ஸ்தானத்தில் ஒன்றாகவே பாவித்து பர-பக்தியைச் செலுத்துவதும் ஸாத்தியப்பட்டுவிடும். பர-பக்தியினால் செய்யப்படுகின்ற உபாஸனையில், பாஹ்ய (வெளி) பூஜை நடந்தாலும் அல்லது ஆந்தரமான ஹிருதய-ஸ்தானத்திலேயே பூஜை நடந்தாலும், வியஷ்டி-சிதாபாஸனாகிய ஜீவன் அம்ச-ஸ்தானத்திலிருந்து கொண்டு ஸமஷ்டி-சிதாபாஸனாகிய ஈசுவரனை அம்சி ஸ்தானத்தில் பூஜைசெய்து வருவதாகவும், தான் இருவர்களுக்கும் ஆத்மாவாக இருந்து பூஜை நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிற ஸாக்ஷியாக இருப்பதாகவும் மாத்திரம் பாவனை செய்துவரவேண்டும்.

(3) ஜ்ஞான-யோகம் :— மேற்சொல்லிய இருவகை-ஸாதனங்களிலும், அதாவது கர்ம-யோகத்திலும் பக்தி-யோகத்திலும் ஆத்மத்வ-பாவனை மாத்திரம் செய்யப்பட்டு வந்திருக்கிறதே யொழிய ஆத்மத்வ-ஸித்தி ஏற்படவில்லை. இந்த ஸித்திக்காக உத்தம குருவை அடைந்து சிரவணாதி-ஜ்ஞானாப்பியாஸத்தைச் செய்யவேண்டியதவசியம். முதலில் ஜ்ஞானாப்பியாஸத்திற்குள்ள ஸௌகரியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வித ஸௌகரியம் பெரும்பாலும் நிவிருத்தியிலுல்தான் ஸாத்தியப்படக்கூடியதே யல்லாமல், பிரவிருத்தியிலுல் சேகரித்துக் கொள்ளப்படக்கூடியதல்ல. சாஸ்திரப்படி ஸன்னியாஸத்தில் அதிகாரமில்லாத கிருஹஸ்தர்கள் தங்களுடைய வர்ணாசிரம-விதிகளின்படி தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற நித்திய-நைமித்திக-கர்மங்களை மாத்திரம் முன் சொல்லியபடி பலத்தில் இச்சையில்லாமல் நடத்திக்கொண்டும், வேறு எல்லா வைதிக-காம்மிய-கர்மங்களையும் லௌகிகப் பிரவிருத்திகளையும் பூர்ணமாய் விலக்கி ஒழித்துவிட்டும், தங்களுக்குள்ள சொத்துக்கள் முழுவதையும் புத்திராதிகளுக்கும் தர்ம-காரியங்களுக்குமாக கிரமப்படி பாகித்துக்கொடுத்துவிட்டும், தங்களுக்கென்று யாதொரு ஸ்வான்-பாத்தியமும் வைத்துக்கொள்ளாமல் தங்களுக்கு அவசியமாயுள்ள ஆஹாராதிகளுக்குமாத்திரம் கிலுப்தமான ஏற்பாட்டைச் செய்துகொண்டும், அல்லது பிரதி தினமும் உபாதானத்திலும் பக்த ஜனங்கள் வலுவில் செய்துவருகிற உபகாரத்திலும் கிடைப்பதைக்கொண்டு மாத்திரம் கால-க்ஷேபஞ்செய்துகொண்டும், பிரஹ்ம-நிஷ்டராயிருக்கக் கூடிய சரியான குருவைத்தேடி ஸாமான்யமாக சரணமடைந்து சாஸ்திர-விதிப்படி தத்துவ-விஷய-சிரவணாதிகளைச் செய்யவேண்டும். இப்படி ஒழுங்காக சிரவண-மனன-நிதித்தியாஸனங்களை அந்தந்தக் காலங்களில் செய்துவந்தால் காலக்கிரமத்தில் ஜ்ஞான-நிஷ்டை ஏற்படக்கூடும். சொத்துக்கள் முதலான விசேஷ லௌகிக-ஸௌகரியங்களைத் தியாகஞ்செய்துவிட தைரியமன்னியில்

அவைகளில் பற்றுதலை மாத்திரம் குறைத்துக்கொண்டு ஸௌகரியப்பட்டமட்டில் குருவிடம் தத்துவ-விசாரத்தைச் செய்து கொண்டிருப்பவர்களுக்கும் பலனில்லாமல் போகாது. ஆனால், இவர்களுக்குப் பூர்ணமான ஜ்ஞான-ஸித்தி யுண்டாவது சிரமப்படும். கிருஹஸ்தர்களைக் காட்டிலும் நைஷ்டிக-பிரஹ்மசாரிகளுக்கும் வானப்பிரஸ்தர்களுக்கும் ஆத்ம-விசார-விஷயத்தில் அதிக ஸௌகரியமுண்டு. ஆனால், இவ்விருவர்களையும் இக்காலத்தில் காண்பதரிது. அம்மூவர்களையும் அபேக்ஷித்து ஸன்னியாஸிகளுக்கு வெகு ஜாஸ்தியாகவே ஜ்ஞானப்பியாஸ-ஸௌகரியங்களுண்டு. இவ்வித விசேஷ-ஸௌகரியங்களை சுருதியில் குறிப்பிட்ட விதிகளின்படி உபயோகப்படுத்திவந்தால் ஜ்ஞான-ஸித்தி வெகு சீக்கிரத்தில் ஸன்னியாஸிகளுக்கு ஏற்பட்டுவிடும்.

3. பிரஹ்மவித்துக்கள்

ஜ்ஞான-ஸித்தியைப் பெற்றவர் பிரம்மவித் என்றும் ஜ்ஞானீ என்றும் கூறப்படுகிறார். இவருக்கு மரணத்திற்குப் பின்பு கைவல்ய-மோக்ஷமேயுண்டு. இவருக்கு இவ்வுலகத்திலும் ஸமாதி-தசையில் உண்மையான பிரஹ்மானந்தானுபவமுண்டு. ஸமாதி கலைந்து வெளிப்பார்வை யேற்பட்ட காலத்திலும், அதாவது, வ்யுத்தான-காலத்திலும் அந்த அனுபவத்தின் ஜ்ஞாபகமிருக்கும். பிரஹ்மானந்தமே அனுபவிக்கப்பட்டு விட்டதால், இவருக்கு வ்யுத்தான-தசையில் இவ்வுலக-விஷயங்கள் யாதொன்றிலும் பற்றுதலாவது இச்சையாவது இருக்கமாட்டாது. இவையெல்லாம் துச்சமாகவே தோன்றும். வ்யுத்தான-காலத்தில் பிரஹ்மானந்தம் ஸாக்ஷத்தாக அனுபவிக்கப்படாமல் அதன் ஜ்ஞாபகந்தானேயிருக்கிறதென்ற காரணத்தினால், ஆனந்தமே எப்போதும் இருக்கக்கூடிய மார்க்கத்தைத் தேடுவதிலும் இவருக்கு புத்தி யேற்படலாம். இம்மார்க்கமும் சாஸ்திரத்தில் துலங்குகின்றது. இந்த பிரஹ்மவித்துக்கு ஜ்ஞான-ஸித்தி யுண்டாயிருந்த போதிலும் இவருக்கு

பூர்வ-வாஸனைகள் பாக்கியிருந்தும் மனது நாசமடையாமலிருந்தும் வருவதால் வ்யுத்தான-தசையில் பிரஹ்மானந்தம் நன்கு விளங்கவில்லை.

வாஸனு-க்ஷயமும் மனோ-நாசமும் ஏற்பட்டுவிட்டால் அவ்வானந்தம் தானுகவே பிரகாசிக்கும். அப்போது இந்த ஜ்ஞானீ **ஜீவன்முக்தர்** என்று சொல்லப்படுவார். ஜீவன்முக்தருக்கு வ்யுத்தான-காலத்தில் ஸ்வல்ப வெளிப்பார்வையுடன் பிரஹ்மானந்தானுபவமேயிருக்கும், ஸமாதி-காலத்தில் பிரஹ்மானந்தானுபவம் மாத்திரமிருக்கும். எக்காலத்திலும் இவருக்கு பிரஹ்மானந்தானுபவம் விட்டுப்போகாது. ஜீவன்முக்தியில் மூன்று தசைகளுண்டு. முதலாவது தசையில் ஜீவன்முக்தர் **பிரஹ்மவித்வரன்** என்று கூறப்படுகிறுர். இவர் ஸமாதியிலிருந்து தானுகவே வ்யுத்தான-தசைக்கு வரக்கூடும். இவருக்கு அடுத்த மேல் ஸ்தானத்திலிருப்பவர் **பிரஹ்மவித்-வரீயான்** இவர் ஸமாதியை விட்டுத் தானுக வ்யுத்தான-தசைக்கு வருகிறதில்லை. யாராகிலும் எதுவாகிலும் ஸமாதியைக் கலைத்து விட்டால் வ்யுத்தான-தசைக்கு வந்துவிடுவார். இவரையும்விட உயர்ந்த ஸர்வோத்தம-ஸ்தானத்திலிருப்பவர் **பிரஹ்மவித்-வரிஷ்டர்** பிராரப்த-நாச-பரியந்தம் இவருடைய சரீரம் மாத்திரம் இவ்வுலகில் காணப்படுமேயல்லாமல் இவர் எவ்வகையிலும் ஸமாதியைவிட்டு வெளியில் வரமாட்டார். யார் என்ன செய்தாலும் இவருடைய ஸமாதி கலையக்கூடியதல்ல. இவரே உத்தமோத்தம-ஜீவன்முக்தர். முன் குறிப்பிடப்பட்ட இரண்டு ஜீவன் முக்தர்களுக்கும் வ்யுத்தான-தசையில் கொஞ்சமாவது வெளி-திருஷ்டியுடன் கலந்ததாகவே பிரஹ்மானந்தானுபவமிருக்கும். பிரஹ்மவித்-வரிஷ்டருடைய பிரஹ்மானந்தத்திற்கு யாதொரு ஸம்பந்தமும் கலப்புமிருக்க மாட்டாது. விதேஹ-கைவல்ய-மோக்ஷ-ஸ்திதிக்கும் இவருடைய ஸ்திதிக்கும் எவ்வகையிலும் அணுவளவும் வித்தியாஸங்கிடையாது. சுருதியில் காண்பிக்கப்பட்ட மார்க்கத்திலேயே அக்கம் பக்கம் சலிக்காமல்

ஜாக்கிரதையுடன் சென்றுகொண்டிருந்தால் கடைசியில் இப்படிப்பட்ட மஹோன்னத-ஸ்திதியும் ஸ்வச்சமான பிரஹ்மானந்தமும் யாருக்கும் கைகூடலாம்.

4. ஸ்வரூப ஸ்பூர்த்தி

பிரஹ்மவித் முதலுள்ள மேற்கண்ட ஜ்ஞானிகள் தான் வாஸ்தவ ஆத்மாவாகவே, அதாவது ஸ்வ-ஸ்தானத்திலேயே இருக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஆத்மா என்ற ஸ்வம் ஆக இருப்பதுதான் தமிழில் சும்மா இருப்பதென்று சொல்லப்படுகிறது. இதனால்தான் பிரஹ்மானந்தம் விளங்க வேண்டுமானால் சும்மாயிருந்தால் போதுமென்று முன் கூறப்பட்டது. தான் அல்லாத வீண் சுமைகளாகிய அனாத்ம பாரங்கள் யாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தானாக மாத்திரம் மிஞ்சிநிற்கிற உண்மையான ஆத்மா என்ற பரமான பிரஹ்ம-வஸ்துவிடத்தில் பிரஹ்மானந்தம் தானாகவே பூர்ணமாய் விளங்கும். ஸ்வரூபானந்தானுபவத்திலேயே பிரஹ்மத்தின் பரிபூர்ண-ஜ்ஞான-ஸ்வரூபமும் ஸத்-ஸ்வரூபமும் பிரகாசிக்கின்றன.

உண்மையில்லாததும் அல்பமுமான அனாத்ம-ஸம்பந்தத்தில் உண்மையான பூர்ண-ஸச்சிதானந்தானுபவம் விளங்க இடமேயில்லை. விஷய-சுகம் எவ்வளவு அனுபவிக்கப்பட்டாலும் அனுபவிக்கமுடியாத சுகங்கள்தான் அனந்தமாய் பாக்கி இருக்கும். பிரபஞ்சத்தில் கிடைக்கக்கூடிய சுகங்கள் பூராவையும் அனுபவிப்பது ஜீவனுக்கு ஸாத்யமே இல்லை. ஏராளமாயிருக்கிற பாக்கி சுகங்களை அனுபவிக்க முடியவில்லை என்பதே துக்க-ரூபந்தான். மேலும் முன் சொல்லியபடி, அனுபவிக்கப்பட்ட ஸ்வல்ப-சுகத்திலும் ஏராளமான துக்க-ஸம்பந்தமு மிருந்தேவந்திருக்கும். ஆகையால், ஜீவத்வ-நிலையிலிருந்துகொண்டு அனாத்மப் பிரபஞ்சத்தில் பூர்ண-சுகத்தைத் தேடுவதெல்லாம் முட்டாள்தனமேதவிர வேறல்ல. இப்படியே, அனாத்ம-விஷயமான மனோ-விருத்திரூப-ஜ்ஞானத்தை அதிகப்

படுத்திக் கொண்டேயிருந்து தன்னை ஸர்வஜ்ஞனுக எண்ணிக் கொண்டிருப்பதும் மூடத்தனந்தானுகும். நூதன-லௌகிகப் படிப்புகளில் மற்ற எல்லோரையும் விட உயர்ந்த ஸ்தானத்தில் தானிருப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவனை பரீக்ஷை செய்ய ஆரம்பித்தால், இவருக்குத் தெரியாத விஷயங்கள் தான் ஏராளமாயிருப்பதாகவும், தெரிந்த விஷயம் ஸ்வல்பமென்பதாகவும் உடனே வெளியாகும். இவருடைய காலடிக்கு கீழே பூமியில் என்ன இருக்கிறதென்று கேட்டாலும் இவரால் பதில் சொல்ல முடியாது. இவர் இறக்கை கட்டிக்கொண்டு உயரப் பறந்துபோய்ச் சந்திரனை எட்டிப்பிடித்தாலும், சந்திரனுக்கு மேலுள்ள அனந்தமான வெளியில் எதெல்லாமிருக்கிறதென்று கேட்டாலும் இவர் பதில் சொல்லக்கூடியவரில்லை. இந்த க்ஷணத்தில் பிரபஞ்சத்திலுள்ள ஸகல-விஷயங்களையும் தான் அறிந்துகொண்டு விட்டதாகப் பிரமை கொண்டிருந்தாலும், அனுதியான முன்-காலங்களில் நடந்ததையும் அனந்தமான பின் காலங்களில் நடக்கப்போகிறதையும் பற்றிக் கேட்டால், இவர் தனக்குத் தெரியாதென்றுதான் சொல்வார். ஆகையால், ஜீவத்வ-நிலையில் பூர்ண-ஜ்ஞான மேற்படுவது ஸாத்தியமில்லையென்பதே நிச்சயம். இவ்விதமாகவே, ஜீவனுக்கு ஸம்பூர்ண-ஸத்-லக்ஷணமுமிருக்கமுடியாது உத்பத்தி-விநாசங்களுடன் கூடிய அல்பமான சரீர-ஸம்பந்தத்திலேயே ஜீவனுடைய இருப்பைத் தீர்மானிக்கவேண்டியதாயிருப்பதால், ஜீவத்வ-நிலையில் பூர்ணமும் அனந்தமுமான ஸத்துவமுங் கிடையாது. உண்மையான ஸச்-சித்-ஆனந்த-ஸ்வரூபத்தை அனுபவிக்கவேண்டுமென்றால் தன் ஜீவத்வ-நிலையை விட்டொழித்து திருச்யப் பிரபஞ்சத்தையும் ஆத்மாவிடத்தில் லயப்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது, மித்தியா-பூதமானதும் தோன்றியும் மறைந்துகொண்டுமிருக்கிற தன் சரீர முள்பட ஸ்தூலப் பிரபஞ்சம் பூராவையும் அதற்குக் காரணமான ஸூக்ஷ்மப் பிரபஞ்சத்தில் லயப்படுத்தியும், அப்பால் ஸூக்ஷ்மத்தையும் அதன் மூல-காரணமாகிய

மாயையில் லயப்படுத்தியும், இந்த மாயைக்கும் ஆத்மாவைக் காட்டிலும் தனிமையான இருப்பே கிடையாதாகையால் இதையும் முடிவில் ஆத்மாவிடத்தில் லயப்படுத்தியும், இவ்விதமாக ஜீவத்வத்தையும் திருச்யப் பிரபஞ்சம் பூராவையும் இருந்த இடமே தெரியாமல் செய்துவிட்டு, ஏகமும் அகண்டமுமான ஆத்மாவாகவே நின்றால்தான் பரிபூர்ணமான ஸச்சிதானந்த-ஸ்வரூபம் நன்கு விளங்குமென்பதே பரம-ஸித்தாந்தம்.

5. ஸத்-சித்-ஆனந்தம்

இந்தப்படி எல்லோரிடத்திலும் நிஜமாயுள்ள ஆத்ம-ஸ்வரூபம் ஸச்-சித்-ஆனந்த-ஸ்வரூபமென்பது ஒவ்வொருவருக்கும் ஒருவிதத்தில் கொஞ்சம் அனுபவஸித்தமாகவுமிருக்கின்றது. இப்படிப்பட்ட நிஜ-ஸ்வரூபத்துடன் கூட நாம-ரூப-துக்கங்கள் மூன்றும் சேர்ந்திருப்பதான அநாத்ம-ஜகத்தும் விளங்கிக் கொண்டிருக்கின்றது. சற்றுகவனித்து சோதித்துப்பார்த்தால் நாமம், ரூபம், துக்கம் இம் மூன்றும் உண்மையல்லாத அநித்தியத் தோற்றங்களென்றும். ஸத-சித்-ஆனந்தம் இம் மூன்றுந்தான் ஸத்தியமான சாசுவத-ஆத்ம-ஸ்வரூபங்களென்றும் உடனே வெளியாகும். மனிதனை எடுத்துக் கொள்வோம். இவனுக்கு ஜாக்கிரத், ஸ்வப்நம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிருந்து வருவதில், ஜாக்கிரத்-காலத்தில் ஸ்தூல-சரீரத்தை அபிமானித்து அதில் நாம-ரூப ஸஹிதனாகவே இருந்துகொண்டும், வெளி இந்திரியங்களுடன் கலந்த மனதினால் விஷயங்களை அறிந்து கொண்டும் துக்கங்களையும் ஆனந்தப் பிரதிபலன-ரூபங்களான ஸுகங்களையும் அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றான். ஸ்வப்ந காலத்தில் ஸூக்ஷ்ம-சரீரத்தை அபிமானித்து அதிலும் நாம-ரூப-ஸஹிதனாகவே இருந்துகொண்டும், மனதினால் மாத்திரம் விஷயங்களை அறிந்துகொண்டும், மேற் சொல்லியபடி துக்கங்களையும் ஸுகங்களையும் அனுபவித்துக் கொண்டுமிருக்கின்றான். ஸுஷுப்தி-காலத்தில் நாம-ரூபங்களில்லாமல்

காரண-சரீரமென்ற அவித்யையில் இருந்துகொண்டும், அப்போது மனதும் லயப்பட்டிருப்பதால் கேவல ஆத்ம-தேஜஸினுல் அவித்யை மாத்திரமிருப்பதை (ஒன்றும் தெரியாமை என்பதின் மூலமாய்) அறிந்துகொண்டும், அபரிமித-ஸுகமாகிய பேரானந்தத்தை அனுபவித்துக் கொண்டுமிருக்கின்ருன்.

எவை மனிதனுக்குத் தன்னுடைய சொந்த ஸ்வரூபங்களாயிருக்கக் கூடியவைகளோ அவைதான் மேற்கண்ட முக்காலங்களிலும் அதாவது மூன்று அவஸ்தைகளிலும் தொடர்ந்திருந்து வரும். ஒரு அவஸ்தையில் இருந்தும் மற்ருெரு அவஸ்தையில் இல்லாமலுமிருப்பவை ஆத்ம-ஸ்வரூபத்தைச் சேர்ந்தவையாக மாட்டா. மேலே குறிப்பிட்ட முக்கால-விபரங்களையும் ஒன்ருேடொன்று ஒற்றுப்பார்த்தால் அடியிற்கண்ட விஷயங்கள் வெளியாகின்றன. நாமமும் ரூபமும் ஜாக்கிரத-ஸ்வப்ந-காலங்கள் இரண்டிலுமிருக்கின்றன, ஸுஷுப்தி-காலத்தில் இல்லை. ஸ்தூலத்வம், ஸூக்ஷ்மத்வம், கேவல-காரணத்வம் இவைகளும் அந்தந்த காலத்திற்குத் தகுந்தபடி வேறுபடுகின்றன. ஆனுல் மூன்று அவஸ்தைகளிலும் எவ்விதமான இருப்பு என்பதில் பேதங்கள் காணப்பட்ட போதிலும், இருப்பு என்பது பொதுவாகவே (as common factor) இருந்து வருகின்றது. இப்படியே, அறியப்பட்ட விஷயங்களில் பேதங்களிருந்தபோதிலும், அறிவு என்பது எல்லா அவஸ்தைகளிலும் பொதுவாகவே தொடர்ந்திருக்கின்றது. இது போலவே, அனுபவிக்கப்பட்ட ஸுகம் ஆனந்தப்பிரதிபலன-மாத்திரமான அல்ப-ஸுகமாகவாவது அல்லது பேரானந்த-ரூபமான மஹா-ஸுகமாகவாவது மூன்று அவஸ்தைகளிலும் காணப்படுகின்றது, துக்கமோவெனில் இப்படிக் காணப்படவில்லை. அதாவது, ஜாக்கிரத்-ஸ்வப்ந-காலங்கள் இரண்டிலும் ஸுகம், துக்கம் இரண்டும் அனுபவிக்கப்படுகின்றன; ஸுஷுப்தியில் துக்கமில்லை, ஸுகம் மாத்திரம் அனுபவிக்கப்படுகின்றது.

இவ்விதமாக சில அவஸ்தைகளில் காணப்பட்டும் சில அவஸ்தைகளில் காணப்படாமலுமிருக்கின்ற நாம-ரூப-துக்கங்களும் ஸ்தூல-ஸூக்ஷ்மாதி பேதங்களும் மனிதனுடைய நிஜ-ஸ்வரூபத்தைச் சேர்ந்தவையல்லவென்றும், எல்லா அவஸ்தைகளிலும் காணப்படுகின்ற இருப்பு-அறிவு-ஸுகம் என்ற ஸத்-சித்-ஆனந்த-லக்ஷணமே அவனுடைய உண்மையான ஆத்ம-ஸ்வரூப-லக்ஷணமென்றும் ஒவ்வொருவருடைய அனுபவத்திலேயே துலங்குகின்றது.

6. ஆனந்த ஸாகரம்

மேற்கண்டபடி ஆத்மா என்ற பிரஹ்மம் ஸச்-சித் ஆனந்த-ஸ்வரூபி என்பது வாஸ்தவமானாலும், அந்தப்படியே அது அநேகமாய் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், அது கேவல ஆனந்த-ஸ்வரூபீ என்று மாத்திரம் சொன்னாலே போதுமானது. முன் குறிப்பிட்டபடி, ஆனந்தத்திலேயே ஸத்-ஸ்வரூபமும் சித்-ஸ்வரூபமும் பிரகாசிக்கின்றன. அதாவது, ஆனந்தம் இருக்கிறது என்பதினால் அதன் ஸத்-லக்ஷணமும் ஆனந்தம் விளங்குகின்றது என்பதினால அதன் சித்-லக்ஷணமும் அதில் ஸ்வதஸ்-ஸித்தமாயிருக்கின்றன. இவ்வித இருப்பும் விளங்குதலுமில்லாமல் ஆனந்தமிருக்கக் கூடாததால் ஸத், சித் இரண்டும் ஆனந்தத்தில் அடக்கமென்று சொல்லவேண்டும். ஆகையால், பிரஹ்மத்தின் ஸ்வரூப-லக்ஷணத்தைக் குறிப்பிடும் போது, அனாவசியமாக விரிக்காமல் அது ஆனந்த-ஸ்வரூபீ என்று குறிப்பிடுவதே போதுமானது. தத்துவ-திருஷ்டியில் சுத்த அத்விதீய-ஆனந்த-ஸ்வரூபியான பிரஹ்மத்தை அணுவென்றாவது மஹத்தென்றாவது சொல்வதற்கில்லை. சிறிது-பெரிது என்பதெல்லாம் துவைதத்திற் குட்பட்டிருக்கிற அனாத்மப் பிரபஞ்ச-வியவஹாரத்தைச் சேர்ந்தது. ஏகமும் அகண்டமுமான பிரஹ்மத்தை மற்றொன்றுடன் ஒப்பிடுவதற்கு இரண்டாவது உண்மைப்பொருளே கிடையாதாகையால், அது சிறிதுமல்ல, பெரிதுமல்ல. ஆகிலும், துவைதப் பிரபஞ்சத்தில்

உழன்றுவருகின்ற ஜீவனுடைய பார்வையில் ஆகாசம் முதலான அதி-நுட்பமான பூதங்களிலும் ஊடுருவியிருப்பதாகத் தெரியவருகின்ற பிரஹ்ம-வஸ்து வெகு நுட்பமாகவே அதாவது அணுவுக்கும் அணுவாகவேயிருக்கவேண்டுமென்றும், ஸகல பிரபஞ்சமும் அடங்கிய இம்மஹத்தான பிரஹ்மாண்டமே பிரஹ்மத்தின் லேசலேசமான அல்பப் பிரதிபிம்பத்தோற்றமென்று வெளியாவதால் அதே பிரஹ்மம் மஹத்துக்கும் மஹத்தாகவும் இருக்கவேண்டுமென்றும் இருவிதமாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வித மஹத்வ-பாவனையில் முன் சொல்லியபடி கேவல-ஆனந்தமாத்திர-ஸ்வரூபியான பிரஹ்மத்தை ஆனந்த-ஸாகரமென்று வர்ணிப்பது உசிதமாகும். இந்த ஆனந்த-ஸாகரம் விசித்திரமாயுள்ளது. இது உலகத்தில் காணப்படுகின்ற ஸமுத்திரத்தைப்போல் எல்லைக்கரைக்குட்பட்டதல்ல. கீழ்தளமாவது மேல்-மட்டமாவது இல்லாத பிரஹ்மானந்த-ஸமுத்திரம் அளவுக்கடங்கியதான எவ்வித பரிமிதத்தன்மைக்கும் கட்டுப்பட்டதல்ல. அதன் விஸ்தீர்ணம், ஆழம், உயரம் ஸகலமும் அனந்தம். உண்மையில் பத்து திக்குகளிலும் அளவுக்குட்படாததற்கு விஸ்தீர்ணம் யாது, ஆழம் யாது, உயரம் யாது, மேல்-கீழ் யாவை, திக்கென்பதுதான் யாது? இம்மஹா-ஸமுத்திரம் உலக-ஸாகரத்தைப்போல் உத்பத்தி-விநாசங்களுக்குட்பட்டதுமல்ல. அதாவது, தேசத்தில் போல் காலத்திலும் ஆனந்த-ஸாகரம் அனந்தமே. இதைத்தவிர இரண்டாவதுக்கே அவகாசமில்லாததால், இது ஸம்பந்தமாய் ஸஜாதீய-விஜாதீய-பேதங்களுக்குப் பிரஸக்தியே யில்லை. இப்படி ஒரு திக்கிலும் எல்லையில்லாததும், மேலே யென்று சொல்லக்கூடியதாக ஆகாசம் முதலான வேறொன்றிலாவது, கீழேயென்று சொல்லக்கூடியதாக தளத்திலாவது பரிமிதப்படாததுமான பிரஹ்ம-ஸாகரத்தை ஸகல விதத்திலும் அனந்த-பரிபூர்ணானந்த-வெள்ளமாக மனஸில் பாவித்துக்கொள்ளலாம். அன்றியும், ஸாமான்ய ஸமுத்திரத்தில் அலைகளும், ஜலத்திற்கு வேறு

பட்டுள்ள மகர-மத்ஸ்யாதி-ஜந்துக்களும் பவழங்கள்-முத்துக்கள்-ரத்னங்கள் வகையரு நிதிகளும் இருப்பதினல் அவாந்தர-பேதங்கள் காணப்படுவது போல், பிரஹ்மானந்த-ஸாகரத்தில் அவாந்தர-பேதங்களையுண்டுபண்ணக் கூடிய துவைதத்திற்கே இடமில்லாததால் ஸ்வகத-பேதங்களும் கிடையாது அதாவது, இந்த ஸாகரத்தில் பிரஹ்மானந்தாமிருதத்தைத் தவிர இரண்டாவதே யில்லையென்பது தாத்பரியம். இந்தப்படி இவ்வானந்த-ஸாகரத்திற்கு வெளிப்பட்டதும் யாதொன்றுமில்லையென்பதும், இதற்குள்ளாகவும் வேருென்றுமில்லை யென்பதும் வாஸ்தவமாளுலும் நாநாவிதப் பிரபஞ்சம் நம்முடைய பார்வையில் தோன்றிக் கொண்டிருக்கின்றது. பிரஹ்மத்திற்கு வெளிப்பட்டதே ஒன்றுங்கிடையாதாகையால், இப்பிரபஞ்சம் பிரஹ்மத்திலேயே தோன்றுகின்றது என்றுதான் சொல்லவேண்டியதாயிருக்கிறது. பிரஹ்மானந்த-ஸாகரத்தில் பிரஹ்மத்தைத் தவிர வேருென்றுமில்லையாதலால், இப்பிரபஞ்சத்திற்கு உபாதான-காரணம் பிரஹ்மந்தானென்றும் சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

7. அனுஸந்தானக்கிரமம்

பிரபஞ்ச-ஜகத்தன்மை எப்படி வந்ததென்று விசாரிக்கையில், முன் குறிப்பிட்ட நாமம், ரூபம் இவ்விரண்டினுல்தான் அது ஏற்பட்டிருப்பதாகவும் வெளியாகின்றது. அதாவது, சுத்த ஆனந்த-ஸ்வரூபியான பிரஹ்மத்தில் நாம-ரூப-கல்பனை செய்யப்படுவதினுல் அதுவே ஜகததென்று வியவஹரிக்கப்படுகின்றது ஆனுல், நாம-ரூபங்கள் அநித்தியமானதாலும், இவை பிரஹ்மஸ்வரூபத்தில் சேராததாலும், பிரஹ்மமே ஜகத்தாகிவிட்டதாகச் சொல்லக்கூடாது. ஜகத்தில் நாமம், ரூபம் இவ்விரண்டும் அதிகமாகக்காணப்பட்டாலும், ஜகத்து பிரஹ்மத்தைத்தவிர வேறில்லையென்று மாத்திரம் அறிந்துகொள்ள வேண்டும். ஜலத்திற்கு சைத்யம் (குளிர்ச்சி) என்பது இயற்கையாயுள்ளது. இந்த சைத்ய-சக்தி அதிகமாக வெளிப்

பட்டால், ஜலத்திலேயே பனிக்கட்டிகள் உண்டாகிவிடக்கூடும். இப்பனிக்கட்டிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ள பலவித ஆகார-பேதங்களுடனிருக்கலாம் ரூப-வித்தியாஸங்களினுல் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பெயரும் வாய்ந்திருக்கக்கூடும். பனிக்கட்டிகள் ஜலத்தைக்காட்டிலும் வேறல்ல. ஆகிலும், அவைகளையே ஜலமென்று சொல்லுகிறதில்லை. ஜலத்திற்கு ஸ்வதஸ்-ஸித்தமாயிருக்கிற திரவத்வம் அடங்கி நின்று, அதற்கு விரோதமான கடினத்வம் பனிக்கட்டியில் காணப் படுகின்றது. ஜல-சைத்ய-சக்தியின் பலவிதப் பிரகடனத் தினுல் பனிக்கட்டிகளிருக்கு மிடத்தில் அசைவுதலேற்பட்டு அவைகள் ஒன்றுக்கொன்று விபரீதமாய் மோதிக்கொண்டால் பரஸ்பரம் கெடுதல்களும் அவைகளுக்குண்டாகலாம். ஆயினும் இக்கெடுதல்கள் ரூப-நாம-ஸம்பந்தமாக நேரிடக்கூடுமே யல்லாது அவைகளால் பனிக்கட்டிகளின் உபாதான-காரண பூதமான ஜலத்திற்கு யாதொரு ஹானியுங்கிடையாது. அந்த ரூப-நாமங்களுக்கு ஹேதுவான விசேஷக்குளிர்ச்சி உபஸம் ஹாரஞ் செய்யப்பட்டுவிட்டால், "பனிக்கட்டிகள்" என்ற தோற்றங்களே மறைந்துபோய் அவை ஜலமாகவே மிஞ்சி நின்று விடுகின்றன.

இவ்விஷயங்களை ஜ்ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, துவைதப்பிரதீதியுடனும் கொஞ்சம் ஸ்தூல-புத்தியுடனும் கூடிய ஒவ்வொரு முமுக்ஷுவும் அடியிற்கண்டபடி எப்போதும் பாவனை செய்துவருவது நலமாகும்.

"நானே அகண்ட-பிரஹ்மானந்த-ஸாகரம். என்னைத் தவிர ஸஜாதீயமாகவாவது விஜாதீயமாகவாவது இரண்டாவது வஸ்துவே கிடையாது. உண்மையில் என்னிடம் ஸ்வகத பேதங்களும் இல்லையானுலும், சைத்ய-சக்தியினுல் பனிக் கட்டிகள் ஜலத்தில் உண்டாகித்தோன்றுவது போல், மாயா-சக்தி-விஜிரும்பணத்தினுல் இந்த சரீரமுள்பட பல சரீர பதார்த்தங்களடங்கிய ஜகத்து எனக்குள்ளிருப்பதுபோல்

தோன்றுகின்றது. இப்படித் தோன்றுவதே மாயா காரியந்தான். இந்த சரீரம் என்று சொல்வதினாலேயே துவனிக்கின்ற விசேஷ அபிமானததைப்பாராட்டுவதே மற்ற சரீரங்களும் ஜகத்தும் இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் அதாவது, ஒரு சரீரத்தை அபிமானித்து அதில் ஸம்பந்தப் பட்டிருக்கின்ற பாஹ்ய-ஆந்தர-இந்திரியங்கள் மூலமாய் அறிவுப்பார்வையைச் செலுத்துவதினாலேயே தனக்கு வெளிப் பட்ட ஜகத்து இருப்பதாக தோன்றுவதற்குக்காரணமாகின்றது இவ்விதமாக ஜீவ-சிதாபாஸனுடைய பரிமித-திருஷ்டியினால் அவனுக்கு ஜகத்துத் தோன்றிக்கொண்டிருப்பதை ஸாக்ஷி சைதன்ய-ஸ்தானத்திலிருக்கின்ற நான் பிரத்தியக்ஷீகரிக் கின்றேன். மேலும், எப்படி ஜலத்தின் ஸ்வரூப பூதமான திரவத்தன்மைக்கு நேர் விரோதமாக கடினத்தன்மை பனிக் கட்டிகளில் காணப்படுகின்றதோ, அப்படியே ஆத்மாவின் ஆனந்த-ஸ்வரூபம் மறைந்து நின்று ஜகத்தில் பெரும்பாலும் ஆபாஸ-ரூபமான ஸுகமும் விபரீதமான துக்கமும் விசேஷ மாய்க் காணப்படுகின்றன. சரீராதிகள் யாவும் நாம-ரூபாத்மகமேயல்லாமல் வேறொன்றுமில்லை. திருச்யப் பிரபஞ்சத்திலிருந்து ரூபத்தையும் நாமத்தையும் விலக்கிவிட்டு அதன் இருப்பைத் தெரிந்து கொள்ள யத்தனித்தால் அது இருந்த இடமே தெரியக்கூடியதல்ல. அதாவது, தான்-மற்றவ ரென்றும், ஆண்-பெண்ணென்றும், தேவர்கள்-மனிதர்க ளென்றும், மனிதர்களுள் ஜாதி-வகுப்பு-ஆசிரமங்களென்றும், மிருகம்-பறவைகளென்றும், ஊர்வன-ஜந்துக்களென்றும், பல வித ஜலசரங்களென்றும், மரம்-செடி-புல்-பூண்டுகளென்றும் சூரிய-சந்திர-நக்ஷத்திர-பூமிகளென்றும், கீழ்-மேல்-கிழக்கு மேற்கு முதலான திக்குகளென்றும் நாநா விதங்களாக வியவஹரிக்கப்படுகிறவைகளிலிருந்து இந்திரியங்கள் மூலமாய் கிரஹிக்கப்படுகின்ற வெறும் தோற்றங்கள் யாவற்றையும் பொருட்டாகவே பாவிக்காமல் தள்ளி ஒதுக்கிவிட்டால் மிஞ்சி

நிற்பது நானேயல்லாமல் மற்ற யாதொன்றுமில்லை. ஸுக-துக்கங்கள் அத்தோற்றங்களுககே ஸம்பந்தப்பட்டவைகள். அவைகள் யாதொன்றிலும் எனக்கு ஸம்பந்தங்கிடையாது. எப்படி மஹாஸமுத்திர-ஜலத்தில் பனிக்கட்டிகள் தோன்றி மறைந்து கொண்டிருக்குமோ, அப்படியே என்னிடத்தில் திருச்யப்பிரபஞ்சத்தின் உத்பத்தி-ஸ்திதி-நாசங்கள் காணப்படுகின்றன. பனிக்கட்டிகளின் மாறுதலினால் ஜலத்திற்கு எவ்விதம் ஹானி கிடையாதோ, அவ்விதமாகவே பிரபஞ்சத்தில் ஜீவத்தோற்றங்களாகிய சிதாபாஸங்களின் ஸுக-துக்கானுபவங்களினால் கேவல அதிஷ்டானத்மாவும் ஆனந்த-ஸ்வரூபியுமான எனக்கு யாதொரு கெடுதலுங்கிடையாது. மிகவும் அல்பமும் உண்மையில்லாத தோற்ற-மாத்திரமுமான பிரபஞ்சத்தின் லேசலேச-பாகமாகிய இவ்வுலகத்தில் எது எப்படியிருந்தாலும், எது நேரிட்டாலும் எனக்கென்ன? எந்தப்பனிக்கட்டியின் எந்த மூலை முறிந்தாலென்ன, எந்தப்புறம் அதிகரித்தாலென்ன? ஆனந்தாமிருத-ஸ்வரூபியான எனக்கு நஷ்டம் எது, லாபம் எது? கற்கண்டுக்கட்டி உடைந்துபோனாலென்ன, அல்லது மற்றக்கட்டிகளுடன் சேர்ந்து பெருத்துவிட்டாலென்ன? அதன் ஸ்வரூப-பூதமான தித்திப்புக்குக் குறைவுமில்லை, விருத்தியுமில்லை. நன்மை-தீமை, உயர்வு-தாழ்வு, சுத்தம்-அசுத்தம், ஸுகம்-துக்கம், புண்யம்-பாபம், தர்மம்-அதர்மம், பந்தம்-மோக்ஷம் முதலிய த்வைதங்கள் யாதொன்றும் எனக்குக்கிடையாது. கொடிய தாரித்திரிய-கஷ்டங்களை அனுபவிப்பதாக துஸ்-ஸ்வப்நத்தைக்கண்டு விழித்துக்கொண்டுவிட்ட மஹாராஜாவுக்கு கஷ்டங்களின் ஸம்பந்தம் தனக்கில்லையென்று தெரியவருவதுபோல், மித்தியா பூதமான பிரபஞ்ச-துக்கங்கள் எனக்கு எக்காலத்திலும் உண்மையில் கிடையாதென்பதே ஸத்தியம். மேற்கண்ட ஸ்வப்ந-காலத்திலேயே தான் பார்ப்பதெல்லாம் ஸ்வப்நந்தான் உண்மையல்லவென்று தெரிந்துகொண்டேயிருந்தால் எப்படி மஹாராஜாவுக்கு ஸ்வப்ந-தாரித்திரிய-கஷ்டங்களினால் தனக்கு

யாதொரு கெடுதலுமில்லையென்று உதாஸீன-புத்தியே அக்காலத்திலுமிருந்துவருமோ, அவ்விதமாகவே என் முன்பாக பிரபஞ்சத்தின் த்வைத-வைசித்திரியங்கள் நாநாவாகத் தோன்றினாலும், அவைகளிலிருந்து ஸுக-துக்கங்கள் உண்டாவதாகக் காணப்பட்டாலும், அவையெல்லாம் துச்சமென்றே தெரிந்துகொண்டு உதாஸீனனாகவே யிருப்பது மல்லாமல் ஸ்வானந்தானுபவத்திலேயே ஸ்திரமாயிருந்தும் வருகின்றேன்.

பூராவும் பொய்த்தோற்றங்களாயிருக்கிற மித்யா-திருச்ய-காக்ஷிகளில் நல்ல பொய், கெட்ட பொய், அழகான பொய், குரூபமான பொய், சிறிய பொய், பெரும் பொய், உண்மையான பொய், பொய்யான பொய் முதலான ஸகல வித்தியாஸ-வியவஹாரங்களும் வீண் என்றே சொல்லவேண்டும். இவ்வித வியவஹாரங்களில்லாமையே நிஜமான மௌன-ஸித்தியாகும். வாயை மூடிக்கொண்டு வியவஹாரங்களில் அடிக்கடி புத்தியைச் செலுத்தி மனதினாலும் எழுத்து முதலான வெளி-வியாபாரங்களாலும் த்வைத-பாவனைகளைப் பலப்படுத்திக் கொண்டிருப்பது மௌனமேயாகாது. உண்மையில் அத்வைத-நிலைமை ஸித்தித்திருப்பவரிடம் வாஸ்தவமான மௌனமிருக்குமே யல்லாமல், மேற் சொல்லிய வியவஹாரங்கள் யாதொன்று மிருக்கக்கூடியவையல்ல.

அத்தியாயம் 26

நிவிருத்தி மார்க்கம்

1. வர்ணாசிரம தர்மம் அவசியம்

வித்தியாஸப்பார்வையால் உண்டாகின்ற வியவஹாரங்கள் பூராவும் வீண் என்றும், இவ்விதப் பார்வையும் வியவஹாரங்களும் உண்மையில் அத்வைத-நிலைமை ஸித்தித்திருப்பவரிடம் இருக்கமாட்டாவென்றும் முன் அத்யாயத்தின் முடிவில் கூறப்பட்டது. இப்படியே, ஆத்ம-ஜ்ஞானிதான் உண்மையான ஸம-தர்சி யென்பதாகவும், ஸம-தர்சனப்பியாஸமே உத்தம-ராஜயோகாப்பியாஸ மென்பதாகவும் 3வது அத்தியாயத்தின் கடைசியில் சொல்லப்பட்டு மிருக்கின்றது. இந்தப்படி பேதங்கள் யாவும் அற்றுப்போய் அகண்டைகத்வ-நிலையிலிருப்பதே முக்கியமாயிருந்த போதிலும், நாநாவித-அதிகாரி-தாரதம்மியத்தை நிமித்தமாகக் கொண்டு வேத-சாஸ்திரங்களில் விதி-நிஷேத-நிபந்தனைகள் பலவிதங்களாகக் காணப்படுகின்றன. ஜகத்தில் தோன்றுகின்ற நாநாத்வம் அந்த நிபந்தனைகளின் மூலமாய் வேத-சாஸ்திரங்களாலேயே உறுதிப்படுத்தப் பட்டிருப்பது போலவும் ஸாமான்ய-ஸ்தூல-திருஷ்டியுள்ளவர்களால் எண்ணப்படக் கூடியதாயுமிருக்கிறது. வேத-சாஸ்திரங்கள் எவர்களால் எவ்விதமாகத் தெரிந்துகொள்ளப் படவேண்டுமென்று அவைகளிலேயே வியவஸ்தை குறிப்பிடப் பட்டிருக்கின்றதோ அதற்கு நேர் விரோதமாக இக்காலத்தில் அவைகளைத் தெரிந்துகொள்வதாகவும் தெரிந்துகொண்டு விட்டதாகவும் பாவித்துக் கொண்டிருக்கின்ற அனதிகாரிகளான சிலர்களின் அபிப்ராயத்தை அனுஸரித்து சிலநாஸ்திகர்கள் வேத-சாஸ்திரங்களிலேயே முன்-பின்-விருத்தமான நிபந்தனைகள் காணப்படுவதாகவும் அவை முற்றிலும் பிசகுதானென்பதாகவும் புலம்பிக்கொண்டு, தங்களை அதார்மிக-ஸ்தானத்தில் ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மற்றும் சிலர்கள் நாநா-விதமான வேத-சாஸ்திர-நிபந்தனை களையும் அதிகாரி-தாரதம்மிய-கோட்பாடுகளையும் தப்பென்று சொல்லாமல், தங்களை ஸகல-விதத்திலும் உத்தம-அதிகாரி களாகவே தீர்மானித்துக் கொண்டு, வாஸ்தவத்தில் தங்களுக்குத் தகுதியில்லாத மார்க்கங்களில் இறங்கி நற் கதியின் பொருட்டு யத்தனித்து வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். வேறு சிலர்கள் வேத-சாஸ்திரங் களால் எந்த அத்வைத-தத்துவம் உத்தமோத்தமமென்று வெளியிடப்பட்டிருக்கின்றதோ அது மாத்திரம் சரியென்றும், அவைகளில் காணப்பட்ட மற்ற விஷயங்கள் யாதொன்றையும் கவனிக்க வேண்டியதேயில்லை யென்றும் எவ்விதத்திலும் உலகத்தில் யாதொரு வித்தியாஸங்களையும் பாராட்டாமலே எல்லாக் காரியங்களிலும் நடந்துவருவதே மனிதனுடைய உத்தமச் செய்கையென்றும் பிதற்றிக்கொண்டு ஸ்வ-தர்ம-பிரஷ்டர்களாகவும் வெறும் வாய்ப்பேச்சு-வேதாந்திகளாகவு மிருந்துவருகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் முன் அத்யாயக் கடைசியில் எவ்வித வித்தியாஸப் பார்வையும் வியவஹாரங் களும் கூடாதென்று வெளியிடப்பட்டிருக்கிற முடிவான கொள்கை தங்களுடைய விபரீதமான அபிப்பிராயத்திற்கு அனுகூலமாயிருப்பதாக ஒருக்கால் எண்ணிவிடக்கூடும். அங்கு சொல்லப்பட்ட விஷயம் பலன் ரூபமென்பதாகவும், அது ஸாதன ரூபமல்லவென்பதாகவும், அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

திருச்யப் பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற கணக்கி லடங்காத வேறுபாடுகளெல்லாம் மறைவை அடைந்து ஏகமான உண்மைப்பொருளின் அனுபூதி முமுக்ஷுக்களுக்கு விளங்குவதற்காகவே வேத-சாஸ்திரங்கள் மூலமாய் அவரவர் களுடைய தனித்தனியான நிலைமைகளுக்குத் தகுந்த விதங் களில் பலவாறாக ஸாதன-மார்க்கங்கள் துலக்கிக் காட்டப் பட்டிருக்கின்றன. அதாவது, பஹுப்பிரகாரங்களான

வித்தியாஸப்பார்வை முடிவில் இல்லாமல் போவதற்காகவே பஹுப்பிரகாரங்களான ஸாதன-வித்தியாஸங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸாதனங்களிலேயே வித்தியாஸங்களிருக்கக்கூடுமானால், ஸகல வித்தியாஸங்களுக்கும் அதீதமாயிருக்கின்ற ஏகமான ஸத்திய-வஸ்து கைகூடுமாவென்று ஸந்தேஹப்பட வேண்டாம். வித்தியாஸப்பார்வையாகிய கெடுதலை நீக்கும் பொருட்டு வித்தியாஸ-ஸஹிதமான ஸாதனத்தையே கைக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அழுக்கடைந்த பாத்திரத்திலுள்ள அழுக்குப்போகவேண்டுமானால், மண் முதலான அழுக்குடன் சேர்ந்த பதார்த்தங்களினால் அதைத் தேய்த்து சுத்தி செய்தால்தான் அவ்வழுக்குப்போகும். அழுக்கைப் போக்கடிப்பதற்காக ஸாதனத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிற அழுக்கு அனுகூலமான அழுக்கேயாகும். ஜலத்தில் கலக்கப்பட்ட தேத்தாங்கொட்டைப் பொடியைப் போல், இந்த அனுகூல அழுக்கு விபரீத அழுக்கைப் போக்கடித்துவிட்டுத் தானும் பின்னால் மறைந்துபோய்விடும். ஆகையால், முடிவான அத்வைத தத்துவத்தைக் குறிப்பிடுகின்ற வேத-வாக்கியங்களை மாத்திரம் வாக்கினால் சொல்லிக்கொண்டு, அவ்வித தத்துவம் ஸ்வானுபூதியில் ஸித்திக்கும் பொருட்டாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அப்பியாஸங்களுக்கு ஸம்பந்தப்பட்ட நாநாவித வித்தியாஸங்களை ஆக்ஷேபிப்பது அறியாமையே தவிர வேறல்ல.

ஸாதனங்களில் ஸம்பந்தப்பட்டிருக்கின்ற வித்தியாஸங்களைக் கைக்கொள்வதினால், முடிவில் நிவிருத்தியாகவேண்டிய வித்தியாஸப்பார்வையும் வியவஹாரங்களும் பலப்பட்டுவிடமாட்டா. சரீரத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிற துர்-லேபனங்களையும் உஷ்ணத்தையும் விலக்குவதற்காகவே லேபன-ரூபமாகவும் உஷ்ணவத்தாகவுமிருக்கின்ற தைலத்தைத் தேய்த்துக்கொண்டு, அப்பால் அதுவும் அலம்பி வெளியேற்றப்படுகின்றது. எப்படி எண்ணெய்த்தலையுடன் எப்போது

மிருப்பதற்காக எண்ணெய் தேய்த்துக்கொள்ளப்படுகிற தில்லையோ, அப்படியே வித்தியாஸப்பார்வையிலும் வியவஹாரங்களிலுமே எப்போதுமிருப்பதற்காக ஸாதன-வித்தியாஸங்கள் கைக்கொள்ளப்படவில்லை. பையன்கள் பள்ளிக்கூடக்கட்டுப்பாடுகளுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டுக்கொண்டு, அவைகளுக்கு அநுஸாரணையாகவே நடந்துவருவது கடைசியில் வித்வானாகி பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறி நிர்ப்பந்தமே யில்லாத சாசுவதமான ஸ்வாதந்திரிய ஸுகத்தை அடையும்பொருட்டே யல்லாமல், எப்போதும் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டிருப்பதற்காக அல்ல. எப்படியும் பின்னால் ஸ்வாதந்திரியந்தானே உத்தேசமென்று சொல்லிக்கொண்டு பள்ளிக்கூடத்தில் சேராமலிருந்தாலும் அல்லது வித்யை பூர்த்தியாகாமலே பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டாலும், உண்மையான ஸ்வாதந்திரிய-ஸுகம் ஏற்படாது; படிப்பில்லாதவனுக்குள்ள அஸௌகரியங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உட்பட்டுக்கொண்டே எந்நாளுமிருக்கும்படி நேரிடும். இப்படிப்போல், வர்ணாசிரமாதி-விசேஷ-தர்மாசரணைகளை அததற்குள்ள விதி-நிஷேத-நிபந்தனைகளுக்கு உட்பட்டுக்கொண்டே ஒழுங்காக நடத்திக்கொண்டு வராமல் அவைகளை உதாஸீனஞ் செய்துவிட்டுத் தனக்குத்தோன்றியவாறு நடந்துவருபவர் ஆத்ம-நிஷ்டமான வாஸ்தவ-ஸ்வாதந்திரியத்தையும் பேரானந்தத்தையும் ஒரு நாளும் அனுபவிக்கப்போகிறதில்லை. வர்ணாசிரம-தர்மாசரணைகளின் மூலமாகவே வர்ணாசிரமங்களைக் கடந்து மேற்செல்லவேண்டியதாயிருக்கின்றது.

கரையிலிருப்பவர் ஜலத்தில் நீந்தவில்லையே யென்ற காரணத்தினால், கரைக்கு வெகு தூரத்தில் பிரவாஹத்தின் மத்தியில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர் தானும் நீந்த வேண்டியதில்லை யென்று எண்ணிக்கொண்டிருந்தால், இவர் ஜலத்திலேயேயிருந்து கஷ்டப்படவேண்டியதுதான், கரையை அடையமுடியாது. ஒருக்கால் இவர் புத்திப்பிரமையால்

தானும் கரையிலேயேயிருப்பதாக பாவித்துக்கொண்டு சும்மாயிருந்தால், பிரவாஹ-வேகம் இவரை இழுத்துக்கொண்டுபோய் சுழல்களில் தள்ளிக்கெடுத்துவிடு மென்பதில் ஸந்தேஹமில்லை. இவ்விதமாகவே, தன்னை ஜ்ஞானியென்று தப்பிதமாக எண்ணிக்கொண்டு வர்ணாசிரம-தர்மங்களைக் கைவிட்டுவிட்டு தான் ஸ்வாதந்திரியத்துடனிருப்பதாக பிரமைகொண்டிருப்பவருக்கு தூர்கதியே ஏற்படுமென்பதாக உறுதியாய் அறிந்துகொள்ளவேண்டும். ஹைஸ்கூலில் சேர்ந்து படித்துவரவேண்டிய பையன் தன்னை பி. ஏ. என்று எண்ணிக்கொண்டு விட்டதினால் அவன் பி. ஏ ஆகிவிடமாட்டான் அவனுடைய ஸ்திதி பித்துப்பிடித்தவனுடைய ஸ்திதியேயாகும். ஆகையால் எப்படி பிரவாஹ-கஷ்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆவலுடனிருப்போருக்கு கரைபோய்ச்சேரும் வரையிலதை நோக்கி நீந்திப்போவது அவசியமோ, அப்படியே முமுக்ஷுவும் தனக்கு அபரோக்ஷ-ஜ்ஞான-ஸித்தி ஏற்படுகிற வரையில் வர்ணாசிரம-விசேஷ-தர்மங்களைக் கைவிடாமல் ஒழுங்காக ஆசரித்துவரவேண்டியதவசியம்.

2. ஸாதன சதுஷ்டயம்.

இவ்விடத்தில் ஓர் ஸந்தேஹம் மனஸில் உதிக்கக்கூடும். அபரோக்ஷ-ஸாக்ஷாத்கார-ஜ்ஞானம் ஸித்திக்கும்வரையில் வர்ணாசிரம-விசேஷ-தர்மங்களை ஆசரித்தே வரவேண்டுமென்பது உண்மையானால், ஸர்வ-தர்மங்களையும் பரித்தியாகஞ்செய்து விட்டுத்தான் தன்னை சரணமடையவேண்டுமென்று பகவான் சொல்லியிருக்கிற வசனம் ஜ்ஞானிக்கே ஸம்பந்தப்பட்ட வசனமென்றும், அஜ்ஞானிகளொருவரும் பகவச்-சரணாகதியைச் செய்யக்கூடாதென்றும் தாத்பரியமா? ஜ்ஞானமே கைவல்ய-மோக்ஷத்திற்கு நேர்-அந்தரங்க-ஸாதனமென்று வேதத்தினால் தெரியவரும்போது, அது ஏற்பட்ட பிறகு சரணாகதி எதற்காகச் செய்யப்படவேண்டும்? அன்றியும் ஏகத்வ-விஜ்ஞான-ரூபமாகிய அறிவுடன்கூடிய அபரோக்ஷ-

ஜ்ஞானியின் திருஷ்டியில் இரண்டாவது தத்துவத்திற்கே இருப்பு இருக்கக்கூடியதில்லையாகையால், அதாவது, அத்வி தீயமான சுத்தாத்மாவாகிய தன்னைத்தவிர பகவான் என்பதாகத்தனியான பரமாத்மாவே கிடையா தாகையால், ஜ்ஞானி யாரை சரணமடையக்கூடும்? அல்லது, அஜ்ஞானிதான் பகவச்-சரணாகதியைச் செய்யக்கூடுமென்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், ஜ்ஞானமுண்டாவதற்கு முன்பாகவே, அதாவது அஜ்ஞானி-தசையிலிருக்கும்போதே சரணாகதிக்குப் பூர்வாங்கமாக-ஸர்வ-தர்மங்களையும் தியாகஞ் செய்து விடவேண்டுமென்பதாகவே ஏற்படுவதால், ஜ்ஞான ஸித்திவரையில் வர்ணாசிரம-விசேஷ-தர்மங்களைக் கைவிடக் கூடாதென்று முன்சொல்லியது எப்படிச்சரியாகுமென்று ஆக்ஷேபிக்கலாம். இதற்கு ஸமாதானம் இனிச்சொல்லப் போகிற விபரங்களினால் ஸித்தித்துவிடக்கூடும்.

முன் கண்டபடி சிரவணாதி-ஜ்ஞானாப்பியாஸங்களுக்குப் பூர்வாங்கமாக உண்மையான பகவச்-சரணாகதி பரமஹம்ஸ-ஸன்யாஸ-காலத்தில்தான் செய்யப்படுகின்றது. வேதாந்த-சாஸ்திரத்தில் குறிப்பிட்ட பிரகாரம் விவேக-வைராக்ய-சமாதி-ஷட்க-முமுக்ஷுத்வ-ரூபமாகிய ஸாதன-சதுஷ்டய-ஸம்பத்துடன் கூடியவரே சிரவணாதிகளுக்கு முக்கிய அதிகாரி. இந்த சதுஷ்டயத்தில் அடங்கிய வைராக்கியம் ஸம்பூர்ண மாகவும் முமுக்ஷுத்வம் வெகு உறுதியாகவும் இருந்தாலொழிய பரமஹம்ஸாசிரமத்தைக் கைக்கொள்ள யாருக்கும் அதிகார மில்லை. மேலும், நித்தியாநித்திய-வஸ்து-விவேகம் பலப்பட்டிருந்தாலன்றி அநித்திய-வஸ்துக்களடங்கிய மித்யா-ஜகத்தின் விஷயத்தில் ஸம்பூர்ண-வைராக்கியம் உண்டாக மாட்டாது. விவேக-வைராக்கிய-முமுக்ஷுத்வங்கள் இம்மூன்று ஸாதனங்களும் பலப்படவேண்டுமானால் சமாதி-ஷட்கத்தின் அப்பியாஸங்கள் நன்கு உறுதியடைந்திருக்கவேண்டியதும் அவசியம். இவ்விதமாக, ஸாதன-சதுஷ்டயம் முழுவதும் யாருக்கு நன்றாக ஸித்தித்திருக்குமோ அவர்தான் மற்ற

விஷயங்களிலும் வேத-சாஸ்திரப்படிக்குள்ள அதிகாரியாயிருந்தால் பரமஹம்ஸாசிரமத்தை ஸ்வீகரிக்கக்கூடும்.

இவ்வளவு உத்தமாதிகாரியா யிருப்பவர் முன்னுலேயே வெகு தூரம் நீந்திப்போய் ஸம்ஸார-மத்தியப்பிரவாஹ-வேகத்திலிருந்து விடுபட்டும், கரைக்கு ஸமீபத்தில் ஓட்டமேயில்லாமல் தேக்கமாயிருக்கிற, ஆனல் ஆழமுள்ள, ஸம்ஸார-ஜலத்திலிருந்துகொண்டும், அங்கு மிதந்திருப்பதற்குள்ள பிரயத்தினத்தை மாத்திரம் செய்துகொண்டும், பக்கத்தில் வெகு உயரமாயிருக்கின்ற கரையில் ஏறவேண்டிய துறை தெரியாமல் தத்தளித்துக்கொண்டு மிருப்பவராகச் சொல்லப்படலாம். எவ்விதம் ஜலத்தில் தத்தளித்துக்கொண்டிருப்பவரைச் சரியான ஏறுந்துறையில் நின்றுகொண்டிருக்கின்ற ஓர் நண்பர் சப்தங்கொடுத்து அழைத்தால், இவர் உடனே அத்துறையை நோக்கி நீந்திச்சென்று தாமஸமில்லாமல் கறையேறிவிடுவாரோ, அவ்விதமாகவே உத்தமாதிகாரியாயிருந்து பரமஹம்ஸாசிரமத்தைக் கைக்கொண்டும், மோக்ஷ-ஸாதன-பூதமான ஏகத்வ-விஜ்ஞான-ஸித்திமாத்திர மில்லாததினுல் திருச்யப் பிரபஞ்சரூப-ஸம்ஸாரத்தில் தத்தளித்துக்கொண்டு மிருக்கிற முமுக்ஷுவும் மஹா ஆப்தரான குருநாதருடைய முகத்திலிருந்து வெளிப்பட்ட பிரணவ-மஹாவாக்கியங்களின் சிரவண-மஹிமையினுல் இழுக்கப்பட்டு விசேஷ மனன-நிதித்தியாஸன-ரூபங்களாகிய யத்தினங்களால் குருநாதர் இருக்கிற அத்விதீய-ஸ்வரூப-ஸாக்ஷாத்காரத் துறையை அடைந்து துவைத-ஸம்ஸார-துக்கத்திலிருந்து சாசுவதமாய்க் கரையேறி விடக்கூடும். உத்தமாதிகாரியான பரமஹம்ஸருக்கு ஒரு தடவை சிரவணத்தினுலேயே உடனே மனன-நிதித்தியாஸனங்கள் ஏற்பட்டுப் பூர்த்தியாகி, ஸமாதி நிலேத்து, ஜ்ஞான-ஸித்தி யுண்டாகிவிடலாம். இப்படியில்லாமல் ஸாமான்ய அதிகாரிகளாகவே யிருந்து பெரும்பாலும் முமுக்ஷுக்கள் திரும்பத்திரும்பவும் நெடுநாள் சிரவணுதிகளைச் செய்யும்படி ஏற்படலாம்.

3 நிவிருத்தி தர்மங்கள்

எப்படியும், சிரவண-காலத்திற்கு முன்பாகவே ஸன்னியாஸ-காலத்தில் பரமஹம்ஸர் பிரவிருத்தி-ரூபமான ஸகல தர்மங்களையும் தியாகஞ் செய்துவிடுகின்றார். அஜ்ஞானியாகவே யிருக்குங்காலத்தில் தனக்கு விஹிதமாயுள்ள ஸ்வ-தர்மங்களைத் தியாகஞ் செய்யலாமாவென்று கேட்டால், அது-விஷயமாக வேத-சாஸ்திரங்களில் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அவ்வனுமதியை அனுஸரித்துச் செய்யலாமென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. அதாவது, தனக்கு விஹிதமான தர்மங்களைத் தியாகஞ் செய்யக்கூடாதென்று எந்த வேதத்தினால் விதிக்கப்பட்டிருக்கிறதோ அதிலேயே தியாகஞ் செய்வதற்குள்ள ஸந்தர்ப்பங்களும் காரணங்களும் தனக்கு ஸம்பந்தப்படக் கூடியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அந்தப்படி தியாகத்தைச் செய்யக்கூடும். அதாவது, ஸன்னியாஸத்தில் அதிகாரியா யிருக்கிற பிராஹ்மணன் சுருதி-விதிகளை அனுஸரித்து ஸன்னியாஸத்தினால் ஸ்வ-வர்ணாசிரம-கர்மங்களுள்பட ஸர்வ-கர்மங்களுடையவும் தியாகத்தைச் செய்துவிடலாம். இந்தப்படி சுருதிப்பிரகாரம் தியாகஞ் செய்யப்படுகிறவரையில் தனக்குள்ள விஹித-கர்மானுஷ்டானத்தை நிறுத்தவே கூடாது. இந்த விஷயம் முன்னாலேயே வற்புறுத்தப்பட்டும் இருக்கிறது. எப்படி அக்னிஹோத்திரியாக இருப்பவர் அவருடைய ஜீவ-காலம் பூராவும் அக்னிஹோத்திரத்தைச் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிற வேத-விதி ஸன்னியாஸ-ஸம்பந்தமான விலக்குக்கு உட்பட்ட விதியே தவிர வேறல்லவோ, அதாவது, ஸன்னியாஸம் ஏற்பட்டுவிட்டால் அக்னிஹோத்திரம் நின்று போய்விட வேண்டுமென்றே தாத்பரியமோ, அப்படியே முன்னால் சொல்லியபடி ஜ்ஞான-ஸித்தி ஏற்படுகிற வரையில் ஸ்வ-தர்மங்களை விட்டுவிடக்கூடாது என்று சொல்லப்பட்ட விஷயமும் சுருதிப்படிக்குள்ள ஸன்னியாஸத்

தினல் ஏற்படக்கூடிய விலக்குக்கு உட்பட்டதாகவே அறிந்து கொள்ளவேண்டும். அதாவது, ஸன்னியாஸமில்லாமல் வேறு விதமாக விஹித-கர்மத்தியாகத்தை யாரும் செய்யக்கூடாதென்று அர்த்தம்.

ஸன்னியாஸ-காலத்திலேயே ஸகல தர்மங்களையும் தியாகஞ் செய்துவிடவேண்டுமானால், அப்பால் சிரவணுதி-தர்மங்களை எப்படிக் கைக்கொள்வது நியாயமாகுமென்று கேட்கலாம். பிரவிருத்திரூப-தர்மங்கள்தான் தியாகத்திற்கு நேராக விஷயமாகக்கூடியவை. வர்ணுசிரம-தர்மங்கள் பெரும்பாலும் பிரவிருத்தி-ரூபங்கள். தியாகமென்பதே நிவிருத்தி-ரூபமாகையால், நைஷ்கர்ம்ய-ஸித்தியில் பரிணமிக்கக்கூடியவைகளும் நிவிருத்தி-தர்மங்களென்று கூறப்பட்டவைகளுமான சிரவணுதிகள் தியாகஞ் செய்யப்படவேண்டியவையல்ல. முன் விவரித்தபடி சிரவணுதி-ஜ்ஞானுப்பியாஸங்களாலேயே ஸாமான்ய-தியாகம் பரிபூர்ண-தியாகமாகிவிடவேண்டியதாயிருப்பதால், சிரவணுதிகள் தியாகியாயிருப்பவருக்கு அனுகூலங்களேயல்லாமல் விரோதங்களல்ல.

நியாயமாய், சிரவண-மனன-நிதித்தியாஸனங்களை வர்ணுசிரம-தர்மங்களென்று சொல்லவுங் கூடாது. அவைகள் ஸூக்ஷ்ம-சரீரமென்ற அந்தக்கரணத்துக்கு மாத்திரம் ஸம்பந்தப்பட்டவைகள். வர்ணம் (ஜாதி), ஆசிரமம் இவ்விரண்டும் ஸ்தூல-சரீரத்திற்கு மாத்திரம் ஸம்பந்தப்பட்டவைகள். பொதுவாகவே ஜகத்திலுள்ள எவ்விதமான வித்யை ஸித்திக்கவேண்டியதாயிருந்தாலும், அந்தந்த வித்யைக்குத்தகுந்த விதங்களில் அப்பியாஸகர்களால் சிரவண-மனன-தியானங்கள் செய்யப்படவேண்டியவைதான். எப்படி, தாழ்ந்ததானுலும் உயர்ந்ததானுலும், ஐஹிகமானுலும் பாரலௌகிகமானுலும், அந்தந்த வித்யைக்குரிய அப்பியாஸகர்களின் யோக்கியதைகளும் சிரவணுதி-அப்பியாஸப் பிரகாரங்களும் இன்னவையென்று தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ,

அப்படியே ஸர்வோத்கிருஷ்டமான பிரஹ்ம-வித்யா-ஸித்தியின் பொருட்டுச் செய்யப்படவேண்டிய வேதாந்த-சிரவணாதிகளுக்கு உத்தமாதிகாரி உண்மையான ஸன்யாஸிதானென்றும், மத்தியம அல்லது அதம அதிகாரிகள் மற்ற ஆசிரமிகளான பிரவிருத்தி—தர்ம— மார்க்கஸ்தர்களுக்குள்ளிருக்கலாமென்றும் வெளியிடப்பட்டிருக்கிறது. வேதாந்த-சிரவணாதிகள் விசேஷ-தர்மச்செய்கைகளாயிருந்தபோதிலும், அவை முன் சொல்லியபடி பிரவிருத்தி-ரூபமான வர்ணாசிரம-தர்மங்களுக்குள் சேராத விசேஷ-நிவிருத்தி-தர்மச்செய்கைகளே. இவ் விசேஷ நிவிருத்தி-தர்மங்கள் மேற்கண்டபடி தியாக-விஷயமாககூடாததால், இவை ஸன்னியாஸத்திற்கும் சரணாகதிக்கும் பிற்பாடுகூட முமுக்ஷுக்களிடம் அவசியம் காணப்படக்கூடியவைதான். அபரோக்ஷ-ஜ்ஞானமுண்டாகும் வரையில் சிரவணாதிரூப—ஜ்ஞானாப்பியாஸங்கள் செய்யப்பட வேண்டியவைகளே. இவ்விதமாக ஸன்னியாஸத்திற்கும் சரணாகதிககும் பிறகுகூட ஜ்ஞானாப்பியாஸ-ஸ்தானமாகிய அஜ்ஞான தசையில் முமுக்ஷு இருந்துவரக்கூடியதால், சரணாகதி-விஷயமாக கீழையில்கண்ட பகவத்-வாக்கியம் ஜ்ஞானிக்கே ஸம்பந்தப்பட்ட வாக்கியமாவென்று முன் கேட்ட கேள்வி சரியல்லவென்பதும், சரணாகதியைச் செய்பவர் அஜ்ஞானியேயென்பதும் நிச்சயம்.

ஜ்ஞானமேற்படுவதற்கு முன்பாக, அதாவது ஜ்ஞானியின் நிலைமை ஸித்திக்கும் வரையில், ஒருவரும் விஹித-தர்மத்தின் தியாகத்தைச் செய்யக்கூடாதென்று முன் சொல்லப்பட்டது. ஜ்ஞானிக்கு அவருடைய ஸமாதி-காலத்தில் பாஹ்யப்பிரதீதியே யில்லாமலும், தான் தனி ஜீவன் அல்லது கர்த்தா என்ற மனோ-விருத்தியே உண்டாகாமலும், தர்மானுஷ்டானத்திற்கு இடமில்லாமலுமே யிருக்கும். வ்யுத்தான-காலங்களில் ஸன்னியாஸியாயில்லாத ஜ்ஞானியும் லோக-ஸங்கிரஹத்தை உத்தேசித்து தர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டேயிருப்பார்.

எப்படியும், ஜ்ஞான-ஸித்தி வரையில் வர்ணாசிரம-விசேஷ தர்மங்களைக்கைவிடக்கூடாதென்று முன் சொல்லப்பட்ட விஷயம் நியாயந்தானென்பதும், அதாவது, ஸன்னியாஸத்தைச்செய்துகொள்ளாமல் ஒருவரும் தனக்கு விஹிதமான பிரவிருத்தி-தர்மங்களைத்தியாகஞ்செய்யவே கூடாதென்பதும், உண்மையான ஸன்னியாஸிகள் ஆசரிக்கவேண்டிய தர்மங்கள் சிரவண—மனன —நிதித்தியாஸனங்களாகிய நிவிருத்தி-தர்மங்களைத் தவிர வேறல்லவென்பதும் ஸித்தம். இந்த நிவிருத்தி-தர்மங்களை ஆசிரம-தர்மங்களென்றும் சொல்லுவதற்கில்லையானாலும், ஒருவிதத்தில் இவைகளையே நிவிருத்திபரர்களான ஸன்னியாஸிகளின் ஸ்வ-தர்மங்களென்று சொல்லலாம். ஜ்ஞான-ஸித்தி ஏற்படும் வரையில் ஸ்வ-தர்மங்களைக் கைவிடக்கூடாதென்று முன் சொல்லப்பட்ட விஷயம் ஸன்னியாஸிகள் ஸம்பந்தப்பட்டமட்டில் சிரவணாதிகளுக்கும் பொருந்தக்கூடியதென்றே எண்ணவேண்டும்.

4. ஸாதன ஸன்னியாஸம்

சிரவணாதி-நிவிருத்தி-தர்மங்களைத் தவிர வேறு எவ்வித தர்மங்களும் ஸம்பந்தப்படாத பரமஹம்ஸ-ஸன்னியாஸமே உண்மையான ஸர்வாரம்ப-ஸர்வஸங்க-பரித்தியாக—ரூப—ஸன்னியாஸம். வாஸ்தவத்தில் ஸன்னியாஸம் பலவிதமல்ல. அது ஒரேவிதமென்று சுருதியிலேயே வியக்தமாய்ச் சொல்லப்பட்டுமிருக்கிறது. அனேக முமுக்ஷுக்களிடம் அஜ்ஞானம் மிகவும் அதிகமாகவே பாக்கியிருக்கக்கூடியதாலும், சரீர-மனோ-புத்தி-சக்திகள் மிகவும் குறைவுபட்டிருக்கக் கூடியதாலும், அனேகர்கள் வேத-சாஸ்திரப்படிக்குள்ள ஸன்னியாஸகர்ம-கலாபங்களை முற்றிலும் ஒழுங்காக அனுஷ்டிக்க முடியாத ஸ்திதியிலிருந்து வரக்கூடியதாலும், அவரவர்களின் தாரதம்மியத்துடன் கூடிய நிலைமைகளுக்குத் தக்கபடி பலவிதமான ஸாதனரூப (preliminary or preparatory) ஸன்னியாஸங்களும் வேத-சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

तत्त्वतस्तु एक एव संन्यासः ।
अज्ञानेन अशक्तिवशात् कर्मलोपतश्च संन्यासः त्रैविध्यमेत्य

ஸன்னியாஸத்தின் முதல் உத்தேசம் நிவிருத்தி-தர்ம-மார்க்கப் பிரவேசமாயிருந்தபோதிலும், வெகு முமுக்ஷுக்கள் தீவிர-வைராக்கியமுள்ளவர்களாயும், ஆனால் பிரவிருத்தி ரூப-தர்மங்களைப் பூராவும் விட்டொழித்துவிட முடியாதவர்களாகவுமிருந்துகொண்டே நிவிருத்தி-தர்மாப்பியாஸங்களைச் செய்துவரவேண்டிய ஸ்திதியிலிருந்து வருபவர்களாயுமிருப்பதால், அவர்களுடைய பிரவிருத்தி-நோக்கங்களுக்குக் கொஞ்சம் போக்கு விட்டுக்கொடுத்து அவர்களை நிவிருத்தி-தர்மங்களை ஆசரித்துவரும்படி செய்வதற்காகவே சுருதி குடீசக-பஹூதக-ஹம்ஸங்களாகிய முன் குறிப்பிட்ட ஸாதனரூப-ஸன்னியாஸங்களையும் அந்தந்த அதிகாரிகளுக்கு விதித்திருக்கின்றது. அனேகர்கள் முமுக்ஷுக்களாகவேயிருந்தும் தீவ்ர-வைராக்கியமில்லாதவர்களாயிருப்பதாலும், அல்லது தீவ்ர-வைராக்கியம் உள்ளவர்களாயினும் சுருதி-விதிப்படி ஸன்னியாஸத்திற்கு யோக்கியர்களாயில்லாததாலும் அவர்கள் கிருஹஸ்தாதி-ஸ்தானங்களில் இருந்துகொண்டே ஒருவிதமாய் சிரவணாதிகளை செய்யவும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த சிரவணாதிகளுக்குத் தியாகத்தினாலும் உண்மையான சரணாகதியினாலும் ஏற்படக்கூடிய நன்மைகளின் பலன் உண்டாகக் கூடாமலிருக்கின்றது. இவ்வித சிரவணாதிகளைப்பற்றி முன் கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது.

குடீசகாதிகளுடைய பிரவிருத்தி-நோக்கங்களுக்கு அனுஸரணையாக அவர்களுக்கு சில பாஹ்ய (காயிக) மான தர்மங்களையும் சுருதியே விதித்திருப்பதால் கர்மாங்க-பூதங்களாகிய சிகா-யஜ்ஞோபவீதங்களை அவர்கள் விஸர்ஜனம் செய்யக் கூடாமலிருக்கின்றார்கள். அவர்களுடைய ஸன்னியாஸங்களினால் அவர்களின் கிருஹஸ்தாதி-பூர்வாசிரமங்களுக்குரிய

நித்திய-நைமித்திகாதி-கர்மங்கள் தியாகஞ் செய்யப்படுகின்றனவே யல்லாது பிரவிருத்திரூப-கர்மங்கள் யாவற்றும் விலக்கப்படுகிறதில்லை. இவ்விதமாகவே குருவிடமிருந்து கொண்டு சிரவணாதிகளை அப்பியஸிக்கவேண்டிய பரமஹம்ஸருக்கும் பரோக்ஷ-ஜ்ஞானங்கூட ஏற்படாமலிருப்பதாலும், அவருக்கு ஜ்ஞானக்குறைவினால் தன்னிடத்தில் கர்த்ருத்வ-புத்தி பாக்கியிருந்தே வருமாகையாலும் அவரும் சிரவண-மனனங்கள் பூர்த்தியாகிற வரையில் ஹம்ஸரைப்போலவே ஏகதண்ட-தாரணாதி சில பாஹ்ய-தர்மங்களை அனுஷ்டித்து வரவேண்டுமென்றும், பரோக்ஷாத்ம-ஜ்ஞானமும் நிதித்தியாஸன-யோக்கியதையும் பூர்ணமாக ஏற்பட்ட பிறகுதான் அவர் உண்மையான (முக்கிய-பக்ஷ) பரமஹம்ஸராக இருந்து வரக்கூடுமென்றும் சுருதியிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வித முக்கிய-பக்ஷ-பரமஹம்ஸ-ஸ்தானத்திலிருப்பவர்களுக்குள்ளும் முக்கிய-பரமஹம்ஸர், துரீயாதீதர், அவதூதர் என்பதான அவாந்தர-பேதங்களும், பொதுவாகவே ஸன்னியாஸிகளின் வேறு சில அவாந்தர-பேதங்களும் சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகப் பலவாயிருக்கின்ற ஸன்னியாஸி-பேதங்களின் ஜ்ஞானம் கிருஹஸ்தாதிகளுக்கும் இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. இக்காலத்தில் கிருஹஸ்தாதிகளில் அனேகர்கள் தங்களுடைய கிருஹஸ்தாதி-தர்மங்களையே இன்னவையென்று நன்றாகத் தெரிந்துகொள்ளாத ஸ்திதியிலிருந்துவருவதால், இவர்களுக்கு ஸன்னியாஸிப் பிரபேதங்களுடையவும் ஸன்னியாஸி – தர்மங்களுடையவும் ஜ்ஞானமேயில்லாமலிருப்பது ஆச்சரியமல்ல. இப்படி ஜ்ஞானமில்லாமையால், இவர்கள் வாஸ்தவ-ஸன்னியாஸிகளையும் போலி-ஸன்னியாஸிகளையும் பிரித்துத் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றார்கள். சில போலி-ஸன்னியாஸிகளின் நடத்தையினால் வாஸ்தவ-ஸன்னியாஸிகளிடத்தில் கூட

வெகு ஜனங்களுக்கு மதிப்புக் குறைந்துபோய் அபசாரங்கள் நேர்ந்துகொண்டும் ஸன்னியாஸிகளுக்கு அஸௌகரியங்கள் விருத்தியடைந்துகொண்டும் வருகின்றது. ஸன்னியாஸாசிரமத்திற்குரிய நாநாவித வெளிப்படையான லக்ஷணங்களை யாவது ஜனங்கள் தெரிந்துகொண்டிருந்தால்தான் மேற்கண்ட அபசாரங்களும் அஸௌகரியங்களும் அதிகமாய் நேரிடாமலிருக்கக்கூடும். உண்மையான ஸன்னியாஸிகளுக்குள்ளும் யதி-தர்ம-சாஸ்திர ஆராய்ச்சியைச் செய்யாத சிலர்கள் அறியாமையால் தங்களுக்குத தோன்றியவாறு நடந்துகொண்டும் ஜனங்களுக்குத் தப்பான விஷயங்களைச் சொல்லி போதித்துக் கொண்டும் விபரீத-பாவனைகளைப் பெருகச் செய்து வருகின்றார்கள். கிருஹஸ்தாதிகளே யதி-தர்மங்களையும் யதி-லக்ஷணங்களையும் உள்ளபடி தெரிந்துகொண்டிருந்தால் தான் யதார்த்த-ஸன்னியாஸிகளெல்லோரும் ஒழுங்காகவேயிருந்து வருவார்கள், போலி-ஸன்னியாஸிகளும் கிட்ட அணுகார்கள். இதெல்லாவற்றையுமுத்தேசித்தும், சுருதி முதலான மூல-கிரந்தங்களைப் பார்த்துச் சரியானபடி விஷய-விபாகங்களைச் செய்ய முடியாத ஸ்திதியிலிருப்பவர்களின் பார்வைக்காகவும், இங்கு பலவித ஸன்னியாஸிகளின் லக்ஷணங்கள் சுருக்கமாய் காட்டப்படுகின்றன.

5. ஸன்னியாஸி பேதங்கள்

ஸன்னியாஸிகள் நான்கு பெரும் வகுப்பினர்கள்:—

(1) நடப்பு-ஜன்மத்தில் இஹலோக-ஸுகங்கள் யாதொன்றும் வேண்டியதில்லையென்ற தீவ்ரமான வைராக்கியத்துடன் கூடிய பிராஹ்மணன் குடீசக – ஆசிரமத்தைக் கைக்கொள்ளத் தகுதியுள்ளவர்.

(2) தீவ்ரமான வைராக்கியத்துடனும் சக்தியுடனும் கூடிய பிராஹ்மணன் பஹூதக-ஆசிரமத்தைக் கைக்கொள்ளத் தகுதியுள்ளவர்.

(3) பூ-லோகம் முதல் ஸத்ய-லோகம் வரையுள்ள லோகங்கள் யாவற்றிலும் ஏற்படக்கூடிய ஸுகங்கள் யாதொன்றும் வேண்டியதில்லை என்பதுடன் இனி புனர்-ஜன்மமே கூடாதென்ற தீவ்ர-தரமான வைராக்யத்துடன் கூடிய பிராஹ்மணன் ஹம்ஸ-ஆசிரமத்தைக் கைக் கொள்ளத் தகுதியுள்ளவர்.

(4) அவ்வித தீவ்ர-தரமான வைராக்கியத்துடனும், ஸாக்ஷாத் கைவல்ய-மோக்ஷத்தில் முக்கிய உத்தேசத்துடனும் கூடிய பிராஹ்மணன் பரமஹம்ஸ — ஆசிரமத்தைக் கைக்கொள்ளத் தகுதியுள்ளவர்.

பரமஹம்ஸ-ஆசிரமத்தை ஸ்வீகரிப்பவர்களில் நிதித்தியாஸனத்திற்கு வேண்டிய யோக்கியதை ஏற்படாமல் சிரவண மனனத்திலேயே ஈடுபடவேண்டியவர்கள் அமுக்கிய பரமஹம்ஸர் எனப்படுவார். நிதித்தியாஸனத்திற்கு யோக்கியதையுள்ளவர்களும் அந்த யோக்கியதையின் தாரதம்மியத்தினால் முக்கிய பரமஹம்ஸர் என்றும், அதற்குமேல் துரீயாதீதர் என்றும், அதற்குமேல் அவதூதர் என்றும், சொல்லப்படுவார்கள். நிதித்தியாஸனம் பூர்த்தியாகி ஸமாதிநிலைத்து வாஸனாக்ஷயம் மனோநாசம் செய்து ஜீவன்முக்த தசையடைந்து ஜாதியென்றும் ஆசிரமமென்றும் வித்தியாஸ திருஷ்டியே அற்றுப்போயிருப்பவர் அதிவர்ணாசிரமி எனப்படுவார். இந்த ஒவ்வொருவரின் தர்மங்களும் சுருக்கமாக அடுத்த அத்யாயத்தில் காட்டப்படும்

மேலே காட்டியபடி ஸன்னியாஸாசிரமத்தில் அதிகாரியாயிருப்பவர் பிராஹ்மணனைத் தவிர மற்றவரில்லை. இந்த விஷய-ஸம்பந்தமான வேத-சாஸ்திர-நிபந்தனைகளிற் சிலவை முன்-அத்யாயங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவ்வேத-சாஸ்திர-நிபந்தனைகளை மீறியே இக்காலத்தில் நடந்து வருபவர்கள் அந்த நிபந்தனைகளுக்குரிய வாக்கியங்கள் பிராஹ்மணனால் ஏற்படுத்தப்பட்ட கட்டுவாக்கியங்களாயிருக்கலா

மென்று சொல்லத் துணிந்துவிட்டார்கள். ஏதோ சில மேற்கு தேசங்களில் ராஜகீய-அதிகாரமுள்ள வகுப்பினர் (Political classes) தங்களுக்கு அனுகூலமாகவும் வியாபாரிகள்-வியவஸாயிகள் முதலானவர்களுக்கு எதிரிடையாகவும் சில காலங்களில் சட்ட-விதிகளை யேற்படுத்திக்கொண்டது போல், பிராஹ்மணனும் சாஸ்திரங்களில் தனக்கு வேண்டிய விதமெல்லாம் நிபந்தனைகளை எழுதி வைத்திருக்கக்கூடுமென்று எண்ணுகின்றார்கள். பிராஹ்மணன் தன்னுடைய லாபத்தைக்கருதி கட்டு-வாக்கியங்களை வேத-சாஸ்திரங்களில் புகவிடச் செய்திருப்பானேயாகில், சாஸ்திர-நிபந்தனைகளெல்லாம் பிராஹ்மணனுக்கு அனுகூலமாகவே யிருக்கவேண்டும் என்பதையும் அவைகள் பெரும்பாலும் பிராஹ்மணனுடைய இவ்வுலக-வாழ்நாள்களை ஸுகமே யில்லாத வாழ்-நாள்களாகச் செய்திருக்க மாட்டாவென்பதையும் மேற்கண்ட ஆக்ஷேபகர்கள் தெரிந்துகொள்ளவில்லை. இவ்வுலகத்தில் "நன்மை" என்று ஸாமான்யமாகச் சொல்லப்படுவதெல்லாம் இந்திரிய - ஸுகங்களிலும் ஐசுவரியத்திலும் ராஜகீய அதிகாரத்திலும் அடங்கியதாகவே யிருக்கின்றது இம்மூன்று விஷயங்களிலும் பிராஹ்மணனுக்கு ஸம்பந்தமில்லாமலிருக்கும்படியாகவே வேத - சாஸ்திர - வாக்கியங்கள் பிரவர்த்தித்திருக்கின்றன. இஷ்டப்படிக்கெல்லாம் இந்திரிய-ஸுகங்களை (காமனைகளை) தேடிக்கொள்வதற்குள்ள ஸௌகரியத்தை சூத்திரனுக்கும், ஐசுவரியத்தைச் சேகரிக்கும் தன்மையை வைசியனுக்கும், ராஜகீய-அதிகாரத்தை க்ஷத்திரியனுக்கும் ஏற்படுத்திக்கொடுத்து, பிராஹ்மண-ஜீவனத்தைப் பிறவிமுதல் மரணம் வரையில் கஷ்ட-ஜீவனமாகவே வேத-சாஸ்திரங்கள் செய்திருக்கின்றன. இவ்வுண்மையை அறியாமலே இக்காலத்திய-துர்க்கக்ஷிகள் செய்யப்பட்டுவருகின்றன.

ब्राह्मणस्य हि देहोऽयं नोपभोगाय कल्पते ।
इह क्लेशाय महते प्रेत्यानन्तसुखाय च ॥

பரலோக-விஷயமான ஸுகந்தான் பிராஹ்மணனுக்கு உண்டேயல்லாமல் இவ்வுலகில் ஸுகமே யில்லை யென்பதற்கு ஒற்றுமையாகவே. எவ்வித உலக- இன்பங்களுக்கும் இச்சைகளுக்கும் கொஞ்சமேனும் இடங்கொடாத ஸன்னியாஸாசிரமம் பிராஹ்மணனுக்கு மாத்திரம் விதிக்கப்பட்டிருக்கிறதென்று எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

6 வேறு சில வகுப்புகள்

இது வரையில் விவரிக்கப்பட்டவைகள் தான் ஸன்னியாஸிகளுக்குள் முக்கிய-பேதங்கள். இவைகளுக்குள்ளடங்கியவைகளாகவே வேறு சில காரணார்த்த-பேதங்களும் வேத-சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

(1) கிரமமாய் ஸன்னியாஸ-விதிகளின்படி பிரயோகங்கள் பூராவையும் நடத்த இடமன்னியில் மரணம் ஸமீபித்து விட்டால் பிரேஷோச்சாரணம் முதலான சில முக்கிய-கர்மங்களை மாத்திரம் ஆசரித்துச் செய்யப்படுகின்ற ஸன்னியாஸம் ஆதுர அல்லது நிமித்த-ஸன்னியாஸமென்றும், கர்ம-கலாபங்களுடன் வேத-சாஸ்திரங்களில் சொல்லிய கிரமப்படி விஸ்தாரமாய்ச் செய்யப்படுகின்ற ஸன்னியாஸம் கிரம அல்லது அநிமித்த-ஸன்னியாஸ மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது, ஆதுர-ஸன்னியாஸமே ஆபத்-ஸன்னியாஸம் என்றும் கூறப்படுகின்றது இந்தப்படி ஸன்னியாஸிகளுக்குள் ஆதுர-ஸன்னியாஸிகள் என்றும் கிரம-ஸன்னியாஸிகள் என்றும் இருவகையுண்டு. ஆதுர-ஸன்னியாஸி பிரணவ-மகாவாக்கியோபதேசங்களைப் பெறுமலும் அபரோக்ஷ-ஜ்ஞானமில்லாமலும் ஸித்தியடைந்து விட்டால், உடனே பூலோகத்தில் மறுபடியும் பிராஹ்மண-ஜன்மமெடுத்து அந்த ஜன்மத்தில் கிரம-ஸன்னியாஸத்தை அடைவார்.

சாஸ்திரப்பிரகாரமுள்ள ஸன்னியாஸம் ஆதுர-விதிப்படியாவது அல்லது கிரம-விதிப்படியாவது நடத்தப்படவேண்டிய

தவசியம். இவ்விரு வகையிலும் ஏற்படாதது ஸன்னியாஸமே ஆகமாட்டாது. இக்கலி-காலத்தில் இவ்விருவகையிலும் அகப்படாத விதமாக பெரும்பாலும் நடத்தப்பட்டுவருகிறது. ஆனால் இதையும் கிரம-ஸன்னியாஸமென்றே ஜனங்கள் அறியாமையால் சொல்லிக்கொள்கிறார்கள். கிரம-ஸன்னியாஸம் நடத்தப்பட வேண்டுமானால், அதம-பக்ஷத்தில் இரண்டு-நாள்-கிரியையினால் தான் அது பூர்த்தியாகக் கூடும். முதல்-நாளில் அபரான்ஹ-காலத்தில் (18 நாழிகைக்கப்பால்) ஆரம்பித்து அஷ்ட-சிராத்த-க்ஷௌராதி-பூர்வாங்ககிரியைகளை செய்து முடித்து அன்று வேத-சாஸ்திரங்களில் சொல்லியபடி உபவாஸமிருந்துகொண்டும், ராத்திரியில அக்னி-ஸம்ரக்ஷணம், பாராயணம், ஜபம், தியானம் முதலானதுகளுடன் விதிப்படி ஜாகரணம் (கண்-விழிப்பு) செய்துகொண்டுமிருந்து, இரண்டாவது தினத்தில் கிரமப்படி நடத்தவேண்டிய மேல்-கிரியைகளையும் செய்தபிறகுதான் கிரம-ஸன்னியாஸத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். அஷ்ட-சிராத்தங்களை அபரான்ஹத்திலேயே செய்யவேண்டுமென்பதும், மேற்கண்ட முதல்-நாள்-உபவாஸமும் ராத்திரியில் ஜாகரணமும் கிரம-ஸன்னியாஸத்தின் முக்கிய அங்கங்களென்பதும் வேத-சாஸ்திரங்களில் தெளிவாய்த் துலங்குகின்றன. இப்படியிருக்க இக்காலத்தில் காலையிலேயே சிராத்தங்களை நடத்தியும், உபவாஸம் ஜாகரணம் முதலானதுகளுக்கு இடமேயில்லாமல் செய்தும், இரண்டு-நாள்-கிரியைகளை ஒரே பகலில் ஆஹாராதி-சரீர-ஸௌகரியங்களுக்கு இடைஞ்சலன்னியில் நடத்தி முடித்து விடுகின்றார்கள். விதி-தப்பி நடத்தப்படுகிற கிரியை கிரியையே ஆகமாட்டாதென்று சொல்லுகிற சாஸ்திர-வசனப்படி மேற்கண்டது கிரம-ஸன்னியாஸமாக மாட்டாதென்றே எண்ண வேண்டியதாயிருக்கிறது.

ஸன்னியாஸத்திற்கே தகுதியில்லாதவர்கள் எப்படி நடத்திக்கொண்டபோதிலும் நடத்திக்கொள்ளட்டும்: அது

விசார-விஷயமே அல்ல. உறுதியான வைராக்கியத்தினால் நியாயமாய் ஸன்னியாஸத்தில் புத்தி ஏற்பட்டும், வேத-சாஸ்திரங்களில் மிக்க சிரத்தையுடன் கூடியும், மோக்ஷத்தில் இச்சை பலப்பட்டும், இருப்பவர்கள் விதிப்படிக்குள்ள கிரம-ஸன்னியாஸத்தை ஒழுங்காய்ச் செய்து கொள்ளாமல் ஏன் வழிதப்பிப்போய் தங்களுடைய முக்கிய உத்தேசத்தைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்? இப்படிச் செய்வதற்குக் காரணம் ஸன்னியாஸத்திற்கு முன்பாகவே அது-ஸம்பந்தமான வேத-சாஸ்திர-விதிகளை நன்றாகத் தெரிந்து கொள்ளாதது தானென்று சொல்லவேண்டும். எப்படிக் காலக்கொடுமையால் பிராஹ்மண்ய-பலத்திற்கு முக்கியமான ஸம்ஸ்காரமாகிய உபநயனத்தையும், ஸ்த்ரீகளுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரே வைதிக ஸம்ஸ்காரமும் தர்ம-பரம்பரைக்கு முக்கிய-காரணமுமான விவாஹத்தையும், அவைகள் விஷயமாய் சாஸ்திரத்தில் குறிப்பிட்டபடி நான்கு-தின-காரியங்களை நடத்தாமல், ஒரே தினத்தில் செய்துவிடுவதாகச் சிலர்கள் பாவனை செய்து பிரவிருத்தி-தர்மத்தைக் கெடுத்து வீண்படுத்துகின்றார்களோ, அப்படியே மோக்ஷத்திற்கு முக்கிய-ஸாதனமாகிய ஸன்னியாஸத்தையும் பாவனையாக ஒரு பகலில் நடத்துவதாகக்காட்டி நிவிருத்தி-தர்மத்தையும் கெடுத்துக் கொண்டு வருகின்றார்கள். இப்படி பாவனையாகச் செய்யப்படுகிற காரியங்களின் உண்மையான பலன்கள் இன்னவை என்று ஈசுவரனுக்குத்தான் தெரியக்கூடியது.

ஸன்னியாஸத்தில் ஸங்கல்பம், பிரேஷோச்சாரணம், அபயப்பிரதானம் இவைகள்தான் முக்கியமென்றும், மற்றதெல்லாம் அங்கமாகையால் முக்கியமில்லை என்றும் சக்ஷி சொல்லப்பட்டால் அது சரியன்று. மரணம் ஸமீபித்த காலத்தில் செய்யப்படுகிற ஆதுர-ஸன்னியாஸத்தில்தான் அங்கங்களுக்கு முக்கியத்தன்மை இல்லையென்பது சாஸ்திரத்தின் கருத்து. கிரம-ஸன்னியாஸத்தில் அங்கத்

திற்கே முக்கியத்தன்மை யுண்டு. இந்த முக்கியத்தன்மையால் தான் அந்த ஸன்னியாஸத்திற்கு கிரமத்வம் ஏற்படுகிறது. அன்றியும், அங்கமில்லாமல் செய்யப்படுகிற ஆதுர-ஸன்னியாஸத்தின் பலனும் அங்கங்களுடன் செய்யப்படுகிற கிரம-ஸன்னியாஸத்தின் பலனும் ஒன்ருகமாட்டா. அவை வெவ்வேறுதானென்றே சுருதியிலேயே வெளியாகின்றது. முன் குறிப்பிட்டபடி மறுபடியும் இப்பூமியில் பிறப்பு ஆதுர-ஸன்னியாஸிக்குத்தான் சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய கிரம-ஸன்னியாஸிக்குச் சொல்லப்படவில்லை. ஆகையால், கிரம-ஸன்னியாஸத்திற்குள்ள உத்தம நன்மையை அடைய வேண்டுமானல் இரண்டு நாள்களில் அதை விதிப்படி செய்து கொண்டால்தான் அது பயன்படுமென்பதே ஸித்தம்.

(2) முன்னலேயே அபரோக்ஷ-ஜ்ஞானியாயிருந்து ஸன்னியாஸஞ் செய்துகொள்பவர் வித்வத்-ஸன்னியாஸி என்றும், அந்த ஜ்ஞானத்தை ஸம்பாதிக்கும் பொருட்டும் ஸன்னியாஸஞ் செய்துகொள்பவர் விவிதிஷா-ஸன்னியாஸீ என்றும் இரண்டு பேதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

(3) அவ்விருவர்களுக்குள், வித்வான் ஜீவன்முக்த-ஸ்தானத்தை உத்தேசித்து வாஸனக்ஷய - மனோநாசத்தின் பொருட்டு விசேஷ யோகத்தையும், அவித்வான் நிதித்தியாஸன-ரூபமான யோகத்தையும், அப்யஸிக்கக்கூடியதாலும், இவ்வித அப்பியாஸங்களில்லாமலே அநேகமாய் ஸன்னியாஸிகள் இருக்கக் கூடியதாலும், யோகி-ஸன்னியாஸீ என்றும் அயோகி-ஸன்னியாஸீ என்றும் இருவகை பேதங்களும் சாஸ்திரத்தில் துலங்குகின்றன. ஆதியில் குறிப்பிட்ட நான்குவித பேதங்களில் குடீசக-பஹூதக-ஹம்ஸர்களுக்குள் நிதித்தியாஸனரூப-யோகாப்பியாஸத்திற்கு ஸாமான்யமாய் இடமில்லாததினல், பரமஹம்ஸர்களுக்குள்ளாகவே யோகி பரமஹம்ஸர் என்றும் அயோகி-பரமஹம்ஸர் என்றும் விபாகம் விசேஷமாய் வெளியாகின்றது.

(4) தவிரவும், உறுதியான வைராக்கியத்தை முன்னிட்டோ, அல்லது ஞானத்தை முன்னிட்டோ, அல்லது இரண்டையும் முன்னிட்டோ, அல்லது இரண்டும் பலப்படாமல் ஆசிரமக்கிரமப்படி செய்யவேண்டுமென்று எண்ணியோ, அல்லது எப்போதும் வேதத்தில் முக்கிய-தமமான பிரணவத்தையே உபாஸிக்கவேண்டுமென்று உத்தேசித்தோ ஸன்னியாஸஞ் செய்து கொள்பவர்களை சாஸ்திரத்தில் முறையே வைராக்கிய-ஸன்னியாஸீ என்றும், ஜ்ஞான-ஸன்யாஸீ என்றும், ஜ்ஞான-வைராக்ய-ஸன்யாஸீ என்றும், கர்ம-ஸன்னியாஸீ என்றும், வேத-ஸன்னியாஸி என்றும் பலவிதமாய் விபாகப்படுத்தியிருக்கிறது. இந்த பேதங்களெல்லாம் பலவாயிருந்தபோதிலும் இங்கு முன் பக்கங்களில் விவரித்திருக்கிற முக்கிய பேதங்களுக்குள் அடங்கியவைகளே.

(5) அன்றியும், லிங்க-ஸன்னியாஸீ என்றும் அலிங்க-ஸன்னியாஸீ என்றும் ஒருவித விபாகமும் சொல்லப்பட்டிருக்கிறது. சுருதிப்படி நான்காவது ஆசிரமமாகிய ஸன்னியாஸாசிரமத்தில் அதிகாரம் பெற்றிருக்கிற பிராஹ்மணர்களுக்குள் காஷாய-கௌபீன-வஸ்திர-தண்ட-கமண்டலு முதலான லிங்கங்களுடன், அதாவது அடையாளங்களுடன், கூடிய ஸன்னியாஸீ லிங்க-ஸன்னியாஸீ என்று சொல்லப்படுகின்றார். அலிங்க-ஸன்னியாஸிகள் இருவகை. லிங்க-ஸன்னியாஸியே சிரவண-மனனத்திற்குப் பின்பு முன் சொல்லியபடி நிதித்தியாஸன-அப்பியாஸத்தின் பொருட்டு வஸ்திரம், தண்டம், கமண்டலு முதலானதுகளை சுருதி-விதிப்படி விஸர்ஜனஞ் செய்துவிட்டு லிங்கமில்லாமல் அலிங்க-ஸன்னியாஸீயாக இருக்கக்கூடும். இவ்வித அலிங்க-ஸன்னியாஸிகளும் மேற்கண்ட லிங்க-ஸன்னியாஸிகளும் முன் விவரிக்கப்பட்ட முக்கிய-ஸன்னியாஸி-பேதங்களுக்குள்ளடங்கியவர்கள்.

7. வீரமார்க்கம்

ஸன்னியாஸாசிரமத்தில் அதிகாரமில்லாத க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர்களும் ஸ்திரீகளும் காஷாயம் முதலான லிங்கங்களில்லாமல், உத்தம வைராக்கியத்தை முன்னிட்டு, சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வீர-மார்க்கத்தில் பிரவேசித்து சரீரத்தியாகத்தைச் செய்யலாம். இப்படிப்பட்ட வீரமார்க்க-அவலம்பிகளும் கௌரவமாக அலிங்க-ஸன்னியாஸிகள் என்றே கூறப்பட்டு மரியாதை செய்யப்படுகின்றார்கள். கொஞ்சமேனும் பலனில் இச்சையில்லாமல் நிஷ்காம-கர்மங்களைச் செய்துவருகிற கர்ம-யோகிகள் ஆசிரமக்கிரமத்தில் ஸன்னியாஸிகளாக இல்லாமலும் ஸன்னியாஸிகளென்ற ஸ்தானத்தில் வந்தனுதிகளுச்கு யோக்கியர்களாக இல்லாமலுமிருந்தபோதிலும், அவர்கள் ஸந்நியாஸிகளுக்கு ஸமானர்களென்றே எப்படி பகவானுல் கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றதோ, அப்படியே வீர-மார்க்கத்தில் செல்பவர்களையும் ஸன்னியாஸிகளுக்கு துல்யர்களாகவே மனஸில் எண்ணி கௌரவப்படுத்தவேண்டும். இக்கலி-யுகத்தில் வீர-மார்க்கத்தில் செல்வது கிரமமில்லையென்று சிலர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால், இக்கலியின் ஆரம்ப-காலத்தில் பாண்டவ-திருதராஷ்டிராதிகளால் கடைசியில் வீர-மார்க்கப் பிரவேசஞ்செய்யப் பட்டிருப்பதாகவே தெரியவருகின்றது. இந்த யுகத்தில் ஸன்னியாஸமே கூடாதென்று ஓரிடத்தில் காணப்படுகிற புராண-வாக்கியத்திலேயே எந்தக்காலம் வரையில் ஜாதிப்பிரிவுகளும் வேதப்பிரவிருத்தியும் தேசத்தில் காணப்படுகின்றனவோ அதுவரையில் ஸன்னியாஸஞ் செய்து கொள்ளப்பட வேண்டியது தானென்று விதிக்கப்பட்டிருப்பது போல், அக்காலம் வரையில் வீர-மார்க்கப்பிரவேசமும் சாஸ்திரப்படி செய்யப்படலாமென்று தான் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஆனால், அதற்குரிய உத்கிருஷ்ட வைராக்கியமாவது, தன் சரீரத்தையும் அதன் மூலமாய் ஏற்படக்கூடிய மஹத்தான

மரணாந்த-கஷ்டங்களையும் ஒரு பொருட்டாகவே எண்ணாமலிருப்பதாவது இக்காலத்திய மனிதர்களுக்கு ஸாத்தியப்படக்கூடியதல்ல. உலக-வாழ்க்கையிலும் ஸுகங்களிலும் தீவ்ரமான வெறுப்பு உண்டாகியும், தன் சரீரத்தில் தான், தனது என்ற புத்தி முழுவதும் நீங்கிப்போயும், அதன்பேரில் சரீரத்தை விஸர்ஜனஞ்செய்து உத்தம பதவியை அடையவேண்டுமென்ற முடிவான உத்தேசத்துடனும், ஆஹாரமில்லாமலே ஒரே திக்கை நோக்கி நடந்து போய்க்கொண்டேயிருந்து, எதிரில் அக்னியிருந்தாலும், ஜலமிருந்தாலும், துஷ்டமிருக மிருந்தாலும், உன்னதமலை யிருந்தாலும், அக்கம்பக்கஞ் சலிக்காமல் நேராகவே சென்று பிராணத்தியாகத்தைச் செய்வது முதலானது வீர-மார்க்க-கமனமாகும்.

அத்தியாயம் 27

ஸன்னியாஸி தர்மங்கள்

1. குடீசகர்

1. சிகையும் யஜ்ஞோபவீதமும் உண்டு.

2. ஸ்திரமாய் ஒரே குடிசையில் அல்லது மடத்தில் வஸித்துவரலாம். தன் புத்திரனுடைய அல்லது பந்து முதலானவருடைய கிருஹத்திலும் ஏகாந்தமான இடத்தில் தனிமையாய் வஸிக்கலாம்.

3. காலையிலும் மத்தியான்ஹத்திலும் ஸாயங்காலத்திலும், அதாவது, மூன்று காலங்களிலும் (திரிஷவண) ஸ்நானஞ்செய்யவேண்டியது.

4. இரண்டு மாஸங்களுக்கு ஒரு தடவை (ருது) க்ஷௌரம் செய்து கொள்ளவேண்டும்.

5. இடுப்பில் கட்டிக்கொள்ள ஒரு வஸ்திரமும் மேலுக்கு ஒரு வஸ்திரமும், ஆக இரண்டு காஷாய-வஸ்திரங்களுண்டு.

6. மூன்று தண்டங்களைச் சேர்த்துக்கட்டிய திரிதண்டத்தை தரிக்கவேண்டும்.

7. புண்ட்ரம் வெள்ளை கோபீ-சந்தனத்தினால் ஊர்த்வ-புண்ட்ரம், அதாவது, கோபீ-நாமத்தைப்போட்டுக்கொண்டு அதன் பேரில் பஸ்மோத்தூளனத்தைச் செய்துகொள்ள வேண்டும்.

8 வெளிப்படையான அனுஷ்டானங்களும், மந்திர-ஜபங்களும், விக்கிரஹாராதனம் முதலான பாஹ்ய-பூஜையும் உண்டு.

9 ஸன்னியாஸிகள் எல்லோருக்கும் பிரணவோபாஸனம் ஏற்பட்டிருப்பதில், இவர் உபாஸிக்கவேண்டிய பிரணவம் மானுஷப்பிரணவம்.

10. தன்னுடைய மாதா, பிதா, குரு இவர்களுடைய ஆராதனைகளையும் செய்துவரவேண்டும்.

11. மண்வெட்டி, கூடை, உரி முதலான சில சாமான்களும் மரத்தினாலாவது மண்ணினாலாவது சுரை-தேங்காய்-மூங்கில் இவைகளாலாவது செய்யப்பட்ட கமண்டலுவுமுண்டு. (பொதுவாகவே, எவ்வித ஸன்னியாஸியும் லோஹங்களினால் செய்யப்பட்ட பாத்திரங்களை வைத்துக்கொள்ளக்கூடாது.)

12. குரு இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டு எப்போதும் வேதாந்த-சிரவணத்தைச் செய்து வரவேண்டும்.

13. ஒரே கிருஹத்தில் பிக்ஷை புஜிக்கவேண்டியது. புத்திரன், பந்து வகையருவின் கிருஹத்திலும் புஜிக்கலாம்.

14. ஸித்தியான பின்பு இவருடைய சரீரத்தை அக்னியினால் தஹனம் செய்யவேண்டும். பூமியில் புதைப்பது முதலானது கூடாது.

15. அபரோக்ஷ-ஜ்ஞானமுண்டாகாமல் ஸித்தியடைந்து விட்டால் இவர் புவர்-லோகம் போய் ஸுகித்திருப்பார்.

[குறிப்பு :— குடீசக-ஸன்னியாஸம் சுருதியில் சொல்லப்பட்டிருந்தும், இத்தென்தேசத்தில் ஸ்மார்த்தர்கள் குடீசக-ஆசிரமத்தைக் கைக்கொள்கிறதில்லை. ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் குடீசக-ஸன்னியாஸம் செய்யப்பட்டுவருகிறது; ஆனால், இவர்கள் சுருத்யுக்தமான புண்ட்ரத்தைத் தரிக்கிறதில்லை, மற்றும் சுருதிப்படிக்குள்ள ஆசாரணைகளையும் மாற்றிக் கொண்டு விட்டார்கள்.]

2. பஹூதகர்

1. சிகையும் யஜ்ஞோபவீதமும் உண்டு.

2. பின் சொல்லப்படுகிற சிரவண-காலமும் சாதுர்மாஸ்ய-காலமுந்தவிர மற்றக்காலங்களில், சரீரத்தில் சக்தியுள்ள

வரையில், ஸஞ்சாரஞ்செய்து கொண்டே யிருக்கவேண்டும். ஸ்திரமாய் ஒரே மடத்தில் வஸித்துவரக்கூடாது. தன்னுடைய பூர்வாசிரம-கிராமத்திற்குப் போகக்கூடாது.

3. தினந்தோறும் இரண்டு காலம் ஸ்நானஞ் செய்ய வேண்டும், மூன்று கால-ஸ்நானமுஞ் செய்யலாம்.

4. நான்கு மாஸங்களுக்கு ஒரு தடவை க்ஷௌரஞ் செய்து கொள்ளவேண்டியது.

5. ஒரு காஷாய-வஸ்திரந்தானுண்டு.

6. குடீசகரைப் போல் திரி-தண்டத்தையும் தரிக்க வேண்டும்.

7. புண்ட்ரம்-விபூதி-திரிபுண்ட்ரம்.

8 வெளிப்படையான அனுஷ்டானங்களும் மந்திர-ஜபங்களும் விக்கிரஹாராதனம் முதலான பாஹ்ய-பூஜையும் உண்டு.

9. உபாஸிக்கவேண்டிய பிரணவம் மானுஷப் பிரணவந்தான்.

10. எப்போதும் வேதாந்த-சிரவணத்தைச் செய்துவர வேண்டியது. குரு ஸஞ்சாரத்திலிருந்தால் இவரும் கூடவே ஸஞ்சாரஞ் செய்துகொண்டு சிரவணத்தை அனுஷ்டிக்க வேண்டும். குரு ஒரே இடத்திலிருந்தால் இவரும் சிரவணத்தின் பொருட்டு அவ்விடத்திலேயே யிருக்கலாம்.

11. குடை, பாதுகை, உரி, ஜல-பவித்திரம், பாத்திரம், ஆஸனம் முதலான சில சாமான்களும் முன் குறிப்பிட்ட கமண்டலுவும் உண்டு.

12. எட்டு கிருஹங்களில் எட்டுக் கபளம் மாதூகர பிக்ஷையை வாங்கி ஆஹாரஞ் செய்யவேண்டும்.

13. ஸித்தியான பின்பு இவருடைய சரீரத்தை பூமியில் புதைக்கலாம் (கனனம்), அல்லது, ஆழமுள்ள ஜலத்தில் கல்லைக்கட்டிப் போட்டுவிடலாம்; தஹனமில்லை.

14. அபரோக்ஷ-ஜ்ஞான முண்டாகாமல் ஸித்தியடைந்துவிட்டால் இவர் ஸ்வர்க்க-லோகம் போய் ஸுகித்திருப்பார்.

[குறிப்பு :—இத்தென்தேசத்தில் பஹூதக-ஸன்னியாஸிகள் காணப்படவில்லை. இங்கு ஸன்னியாஸஞ் செய்துகொள்கிற ஸ்மார்த்தர்கள் எல்லோரும் பரமஹம்ஸாசிரமத்திற்குரிய விதிப்படி ஸன்னியாஸஞ் செய்துகொண்டாலும், அனேக விஷயங்களில் அவர்கள் குடீசக-பஹூதக-ஸன்னியாஸிகளின் ஆசாரணைகளையே கைக்கொண்டிருக்கிறார்கள். நடப்பு-ஜன்மத்தில் இஹ-லோகத்தில் ஏற்படக்கூடிய ஸுகங்கள் தேவையில்லை யென்ற தீவ்ரமான வைராக்கியம் வந்தும், ஸ்வர்க்கம்-வைகுண்டம்-கைலாஸம் முதலான உத்தம லோகங்களில் கிடைக்கக் கூடிய ஸுகங்களில் மனப்பற்றுதல் ஏற்பட்டும், வெளிப்படையான அனுஷ்டான-பூஜாதிகளிலும் மந்திர-ஜபாதிகளிலும் மனப்பிரவிருத்தியுடன் கூடியும் இருப்பவர் தன் சக்திக்குத் தக்கபடி குடீசக-பஹூதக-ஆசிரமங்களையே கைக்கொள்ளவேண்டியது. ஸஞ்சாரஞ் செய்ய தைரியமில்லாமலும், தன் சரீர-ஸௌகரியங்களை விசேஷமாய்க் கவனித்துக்கொண்டு மிருப்பவர் குடீசக-ஸன்னியாஸத்தைத்தான் அவலம்பிக்கக்கூடும். மேற்கண்டவர்கள் பரமஹம்ஸாசிரமத்தைக் கைக்கொள்வது சாஸ்திர-விருத்தம்.]

3. ஹம்ஸர்

1. சிகையை எடுக்காமல் அத்துடன் சேர்த்து ஜடையை வளர்த்துவரவேண்டியது; இவருக்கும் யஜ்ஞோபவீதமுண்டு.

2. சரீரத்தில் சக்தியுள்ளவரையில் சாதுர்மாஸ்ய காலந் தவிர மற்றக்காலங்களில் ஸஞ்சாரஞ்செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஸ்திரமாய் ஒரே மடத்தில் வஸித்து வரக்கூடாது; தன்னுடைய பூர்வாசிரம-கிராமத்திற்குப்போகக்கூடாது.

3. தினந்தோறும் பிராதஸ்-ஸ்நானம், அதாவது, ஒருவேளை ஸ்நானஞ் செய்துவரவேண்டும்.

4. க்ஷௌரம் கிடையாது.

5. தரித்துக்கொள்ளவேண்டிய வஸ்திரம் ஒரு துண்டு-காஷாய-வஸ்திரந்தான். அஜினத்தையும் (மான்தோலையும்) உபயோகிக்கலாம்.

6. ஏக-தண்டத்தை, அதாவது, ஒரே தண்டத்தை தரிக்க வேண்டும். கமண்டலுவையும் வைத்துக்கொள்ளலாம். உரியுமுண்டு.

7. புண்ட்ரம் விபூதி-திரி-புண்ட்ரமாவது இருக்கலாம், அல்லது, கோபீ-சந்தன-ஊர்த்வ-புண்ட்ரமாவது இருக்கலாம்.

8 வெளிப்படையான அனுஷ்டானங்களாவது மந்திர ஜபங்களாவது பூஜையாவது கிடையாது, மானஸ பூஜையுண்டு.

9. உபாஸிக்கவேண்டிய பிரணவம் ஆந்தாப்பிரணவம்.

10. செய்யவேண்டிய காரியம் முக்கியமாய் மனனமும் தியானமுந்தான் முன் குறிப்பிடப்பட்ட குடீசக-பஹூதக ஸ்தானங்கள் ஏற்படாமலும் சிரவணமில்லாமலும் ஹம்ஸா சிரமத்தைக் கைக்கொள்பவர் பஹூதகரைப்போல் சிரவண-விதியை அனுஷ்டிக்கவேண்டும்.

11. அஸங்கிலுப்தமான (முன்னமேயே ஸங்கல்பிக்கப் படாத) 3, 5 அல்லது 7 கிருஹங்களில் மாதுூகர-பிக்ஷையை வாங்கி புஜிக்கவேண்டும்.

12. ஸித்தியான பின்பு இவருடைய சரீரத்தை ஆழமுள்ள ஜலத்திலேயே கல்லைக்கட்டிப் போட்டுவிடவேண்டும். பூமியில் புதைப்பது, தஹனம் முதலானது கூடாது.

13. அபரோக்ஷ-ஜ்ஞானம் உண்டாகாமல் ஸித்தியடைந்து விட்டால் இவர் தபோ-லோகம்போய் திருப்தராக இருப்பார். ஸத்ய-லோக-ஸுகத்தில்கூட இச்சையில்லாதவரும் கைவல்ய-மோக்ஷத்தில் இச்சையில்லாதவருமான இவருக்கு ஸத்ய-லோகத்

தில் மோக்ஷத்தின் பொருட்டு ஏற்படக்கூடிய உத்தம ஜ்ஞானாப்யாஸத்தில் அதிகாரமில்லாததினால், இவர் தபோ-லோகத்தில் உத்தம விரக்தர்களுக்குக்கிடைக்கக்கூடிய ஸ்தானத்திலேயே திருப்தராக இருக்கின்றார்.

[குறிப்பு:— ஹம்ஸ-ஸன்னியாஸிகளும் இத்தென் தேசத்தில் காணப்படவில்லை. சாஸ்திர-விதிகளின்படி நியாயமாய் தனித்தனியே குடீசக-பஹூதக-ஹம்ஸ-ஸ்தானங்களுக்கு மாத்திரம் தகுதியுள்ள வெகு பெயர்கள் முன் குறிப்பிட்டபடி தங்களுடைய யோக்கியதையை கவனிக்காமலே பரமஹம்ஸ-விதிப்படி ஸன்னியாஸஞ் செய்துகொள்கிறார்கள்.]

4. அமுக்கிய பரமஹம்ஸர்

1. இவர் ஸன்னியாஸ-காலத்தில் பரமஹம்ஸாசிரமத்திற்குரிய விதானப்பிரகாரம் சிகையையும் யஜ்ஞோபவீதத்தையும் எடுத்து விஸர்ஜனஞ் செய்துவிடுவதால் அவ்விரண்டும் இவருக்குக் கிடையாது.

2. தினந்தோறும் ஹம்ஸரைப்போல் ஒரு வேளை ஸ்நானஞ்செய்து வரவேண்டும். சிரவண-காலத்தில திரிகால-ஸ்நானஞ் செய்து வரவேண்டுமென்றும் பக்ஷாந்தரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஆறு மாஸங்களுக்கு ஒருதடவை (அயனம்) க்ஷௌரஞ் செய்துகொள்ளவேண்டியது.

4. தரிக்கவேண்டிய வஸ்திரம் ஒரே கந்தை காஷாய-வஸ்திரந்தான், இரண்டாவது கூடாது. இரண்டு காஷாய-ஜீர்ண-கௌபீனங்களை வைத்துக்கொள்ளலாம்; அஜினத்தையும் உபயோகிக்கலாம். புது வஸ்திரத்தையாவது கௌபீனத்தையாவது கிரஹிக்கவுங்கூடாது, தரிக்கவுங்கூடாது.

5. ஒரு வைணவ (கல் மூங்கிலால் செய்யப்பட்ட) ஏக-தண்டத்தைத் தரிக்கவேண்டும். கமண்டலுவையும் வைத்துக்கொள்ளலாம்.

6. பஹூதகரைப்போல் இவருக்குப் பாதுகையு மிருக்கலாமென்று பக்ஷாந்தரமுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஸன்னியாஸிகள் தோலினால் செய்யப்பட்ட (சர்ம) பாதுகையை உபயோகப்படுத்தக்கூடாது. தவிரவும், யதி தர்ம-நிர்ணய-கிரந்தத்தில் மரத்தினால் செய்யப்பட்ட (காஷ்ட) பாதுகையையும் அவர்கள் தரிக்கக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், ஸன்னியாஸிகள் தரிக்கக்கூடிய பாதுகை திருணமயமான அதாவது புல்லினால் செய்யப்பட்ட (தார்ண) பாதுகைதானென்று தெரியவருகிறது. நிஷித்த மான காஷ்ட-பாதுகையை உபயோகப்படுத்துவதைவிட பாதுகையே யில்லாமலிருப்பதே பரமஹம்ஸருக்கு உத்தம மென்று வெளியாகின்றது. பிக்ஷாடன-காலத்தில் பாதுகை அவசியமென்று சொல்லப்பட்ட சாஸ்திர-வாக்கியம் பஹூதக பரமென்றும் பரமஹம்ஸருக்கு ஸம்பந்தப்பட்டதல்ல வென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

7. புண்ட்ரம் பஸ்மோத்தூளனம் மாத்திரம்.

8. வெளிப்படையான அனுஷ்டானங்களாவது மந்திர-ஜபங்களாவது பூஜையாவது கிடையாது, மானஸ-பூஜை யுண்டு.

9. உபாஸிக்கவேண்டிய பிரணவமும் ஆந்தரப்பிரணவந் தான்.

10. மற்றவர்களுக்கு மஹாவாக்கியோபதேசத்தைச் செய்ய இவருக்கு அதிகாரமுண்டு.

11. குடீசகாதி-ஸ்தானங்களை அடையாமலும் சிரவணஞ் செய்யாமலும் பரமஹம்ஸராகிவிட எண்ணங்கொண்டும், சிர வணத்தை உத்தேசித்தும், இந்த அமுக்கிய-பரமஹம்ஸ-பக்ஷத்தைக் கைக்கொண்டிருப்பதால், இவர் முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியமெல்லாம் சிரவணமும், மனனமும், தியானமுந்தான். குரு ஸ்திரமாய் ஒரே இடத்திலிருந்தாலும்,

அல்லது ஸஞ்சாரத்திலிருந்தாலும், இவர் குருவுடன் கூடவே யிருந்துகொண்டு சிரவணஞ்செய்யவேண்டும்.

12. சிரவணமில்லாத காலங்களில் சரீரத்தில் சக்தியுள்ள வரையில், சாதுர்மாஸ்யம் தவிர மற்ற காலங்களில், ஸஞ்சாரஞ் செய்ய வேண்டியது. பூர்வாசிரம-ஜ்ஞாதி-பந்து-ஸ்னேஹித-ஜனங்களிருக்கிற இடங்களுக்காவது, தன்னுடைய முன் சொந்த தேசத்திற்காவது, முன் பரிசயமுள்ள தேசத்திற்காவது போகக்கூடாது. ஸ்திரமாய் ஒரே மடத்தில் வஸித்து வரக்கூடாது.

13 இவரும் ஹம்ஸரைப்போல் மூன்று, ஐந்து, அல்லது ஏழு கிருஹங்களில் அஸங்கிலுப்த-மாதுகர-பிக்ஷையை வாங்கி புஜிக்கவேண்டும்.

14. ஸித்தியான பின்பு இவருடைய சரீரத்தை விகிரணம் செய்யலாம், அதாவது, சரீரத்தைத் துண்டு துண்டாகச் சேதித்து கிராமத்திற்கு வெளியில் நான்கு திக்குகளிலும் பிராணிகள் தின்னும்படியாகப் போட்டுவிடலாம்; அல்லது, சரீரத்தை பூமியில் புதைக்கலாம் (கனனம்) அல்லது, ஆழமுள்ள ஜலத்தில் கல்லைக்கட்டிப் போட்டுவிடலாம். ஒருக் காலமும் பரமஹம்ஸரின் சரீரத்திற்கு அக்னி-தஹனம் கூடாது.

15. அபரோக்ஷ-ஜ்ஞான முண்டாகாமல் ஸித்தியடைந்து விட்டால் இவர் கிரம-முக்தியைப் பெறுவார், அதாவது, ஸத்ய-லோகம் போய் அங்கிருந்து கைவல்ய-மோக்ஷத்தை யடைவார். பரமஹம்ஸருக்கு ஸத்ய-லோக-ஸுகத்தில் இச்சையில்லாம லிருந்தபோதிலும், இவருக்குக் கைவல்ய-மோக்ஷத்தில் உத்தேச மிருந்துகொண்டிருப்பதாலும், இவருக்கு அரைகுறையாக இருக்கிற ஜ்ஞானாப்யாஸத்திற்குப் பூர்த்தி ஸத்ய-லோகத் திலேயே ஏற்படக்கூடியதாலும், முக்கியமாய் மோக்ஷார்த்த மாக அபரோக்ஷ-ஜ்ஞானப்பிராப்தியின் பொருட்டே இவர் ஸத்ய-லோகம் போகும்படி ஏற்படுகிறது. ஸத்ய-லோகம்

என்பதே ஸகுண-பிரஹ்ம-லோகம். இதுவே முன் விவரித்த படி சதுர்முக-பிரஹ்மோபாஸகர்களுக்கு பிரஹ்ம-லோகமாகவும் (ஸத்திய-லோக மென்றே சொல்லுகிறதுமுண்டு) விஷ்ணு-பக்தர்களுக்கு வைகுண்டமாகவும், சிவ-பக்தர்களுக்கு கைலாஸ மாகவும் முகசியமாய் விளங்குகின்றது.

[குறிப்பு :—அமுக்கிய-பரமஹம்ஸராக இருந்து தண்ட-வஸ்திரங்களைத் தரிப்பவர் தன் குருவுடன் கூடவேயிருந்து சிரவண-மனனங்களைச் செய்துவரவேண்டும். அவை பூர்த்தியாகி உறுதியான பரோக்ஷ-ஆத்ம-ஜ்ஞானம் ஏற்படுவதற்கு முன்பாக குருவை விட்டு விலகக்கூடாது. அப்படி விலகி விட்டால் இவருடைய ஸன்னியாஸத்தின் முக்கிய உத்தேச மாகிய ஜ்ஞானப்பிராப்திக்கு இடமில்லாமல் போய்விடும். இப்படி குருவை விட்டு வெளியேறித் தானுகவே மனனஞ் செய்து வரலாமென்று சொன்னால் அது சரியன்று. மனன-காலத்தில் மனஸில் உதிக்கக்கூடிய ஸந்தேஹங்களை அப்போதைக்கப்போது நிவிருத்தி செய்துகொள்ள குரு ஸமீபத்தில் இல்லையானல் மனனம் பிரயோஜனப்படாது. ஆகையால், நிதித்தியாஸன-யோக்கியதை பூர்ணமாக ஏற்படும் வரையில் குருவிடமிருந்துகொண்டே திருப்பித்திருப்பி சிரவண-மனனங்களைச் செய்துவரவேண்டியதவசியம்.]

5. முக்கிய-பரமஹம்ஸர்

ஸன்யாஸத்திற்கு முன்பாகவே அபரோக்ஷ ஜ்ஞானியாக இருப்பவர் ஸன்னியாஸஞ் செய்துகொண்டால் அக்காலம் முதலே அவர் முக்கிய பரமஹம்ஸராக இருந்து வந்து, முக்கிய-பரமஹம்ஸ-தர்மங்களையாவது தூரீயாதீததர்மங்களையாவது, அவதூததர்மங்களையாவது, ஆசரித்து வரலாம். அப்படி ஜ்ஞானியாக இல்லாமல் ஜ்ஞானப்பிராப்தியின் பொருட்டு சிரவணுதிகளை உத்தேசித்தும் முன்சொல்லிய பிரகாரம் அமுக்கிய-பரமஹம்ஸராக இருப்பவர் குருவிடமிருந்துகொண்டு

சிரவண-மனனங்களைச் செய்து, உறுதியான சாஸ்திர-ஜன்ய (பரோக்ஷ) ஜ்ஞானம் ஏற்பட்ட பின்பு, மேல்-நிதித்தியாஸனத்தை அப்பியஸிக்க வேண்டியதற்காக குருவின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அவரை விட்டு வெளியேறி, அப்பால் நதி முதலான புண்ய-தீர்த்தத்தில் தன்னுடைய தண்டம், வஸ்திரம், கமண்டலு முதலான ஸகல சாமான்களையும் சுருதி-விதிப்படி விஸர்ஜனஞ்செய்து விட்டு, முக்கிய-பரமஹம்ஸராகி, முக்கிய-பரமஹம்ஸ-தர்மங்களையாவது துரீயாதீத-தர்மங்களையாவது அவதூத-தர்மங்களையாவது கைக்கொள்ளலாம். ஸன்னியாஸ-காலத்திலேயே பரோக்ஷமான ஆத்ம-ஜ்ஞானம் ஏற்பட்டிருக்கக் கூடியவரின் விஷயத்திலுங் கூட அனுபூதி-ரூபமாயில்லாத அவ்வித ஜ்ஞானத்திற்குப் பலவித காரணங்களால் மாலின்யமுண்டாகக் கூடியதாலும் பெரும்பாலும் ஸன்னியாஸத்திற்குப் பின்பு செய்யப்படுகின்ற சிரவண-மனனங்களே பூர்ண-பலவத்துக்களாயிருக்கக்கூடியதாலும், பரோக்ஷ-ஜ்ஞானியும் அமுக்கிய-பரமஹம்ஸராகிப் பிற்பாடு குறைந்த பக்ஷம் ஒரு வருஷ-காலமாவது குருவிடமிருந்துகொண்டு மறுபடியும் சிரவண-மனனங்களைச் செய்து வந்து தன்னுடைய பரோக்ஷ-ஜ்ஞானத்தை நன்கு உறுதிப்படுத்திக்கொண்டு அப்பால்தான் குருவை விட்டு வெளியேறி மேற்கண்ட கிரமப்படி தண்ட-வஸ்திராதிகளின் விஸர்ஜனத்தைச் செய்து முக்கிய பரமஹம்ஸராகக்கூடும்.

1. முக்கிய – பரமஹம்ஸர் திகம்பரராகவுமிருக்கலாம், அல்லது ஒரு கௌபீனத்துடன் மாத்திரமுமிருக்கலாம். வஸ்திர-தாரணம் கூடாது.

2. சிகையாவது யஜ்ஞோபவீதமாவது கிடையாது.

3. தினந்தோறும் ஒருவேளை அல்லது பலதடவை ஜலத்தில் ஸ்நானஞ் செய்யலாம். இவருக்கு மானஸ-ஸ்நானம் முக்கியமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. க்ஷௌரங்கிடையாது; செய்துகொள்ளுகிறதாயிருந்தால் ஆறு மாஸங்களுக்கு ஒரு தடவை அடன க்ஷௌரஞ் செய்துகொள்ளலாம்.

5. புண்ட்ரம் பஸ்மோத்தூளனம் மாத்திரம்.

6. வெளிப்படையான அனுஷ்டானங்களாவது மந்திர-ஜபங்களாவது பூஜையாவது கிடையாது. மானஸ-பூஜையைச் செய்யலாம்.

7. உபாஸிக்கவேண்டிய பிரணவம் பிரம்மப் பிரணவம்.

8. மற்றவர்களுக்கு மகாவாக்கியோபதேசத்தைச் செய்ய இவருக்கும் அதிகாரமுண்டு.

9. இவர் செய்யவேண்டிய காரியம் நிதித்தியாஸனமென்கிற இடைவிடாத தியானமொன்றுதான், வேறில்லை.

10 சரீரத்தில் சக்தியுள்ளவரையில் சாதுர்மாஸ்ய-காலந் தவிர மற்றக் காலங்களில் இவர் ஸஞ்சாரஞ் செய்துகொண்டேயிருக்கவேண்டும். பூர்வாசிரம-ஜ்ஞாதி-பந்து-ஸ்னேஹித-ஜனங்களிருக்கிற இடங்களுக்காவது, தன்னுடைய முன் சொந்ததேசத்திற்காவது, முன் பரிசயமுள்ள தேசத்திற்காவது போகக்கூடாது. ஸ்திரமாய் ஒரே மடத்தில் வஸித்துவரக்கூடாது.

11. ஸஞ்சாரம் செய்யமுடியாமல் சரீரத்தில் சக்தி குறைந்து போய்விட்டால் கிரி, பர்வதம், குஹை, வனம், தேவாலயம், கிராமத்தின்கோடி, மரத்தடி முதலான ஏகாந்த-ஸ்தலத்தில் ஸ்திரமாய் வஸித்துவரலாம்.

12 இவர் கிராமத்தில் பிரவேசித்து ஐந்து கிருஹங்களில் கர-தல-பிக்ஷையை வாங்கி அந்தந்த கிருஹத்திலேயே நின்றுகொண்டே புஜிக்கவேண்டும், அல்லது நடந்துகொண்டே புஜிக்கலாம்; மத்தியில் ஆசமனம் கிடையாது. இவருக்கு ஜல-ஸ்தலந்தான் கமண்டலு. தன் கர-தலம், அதாவது உள்ளங்

கைதான் பிக்ஷா-பாத்திரம். ஸ்திரமாய் ஏகாந்த-வாஸஞ் செய்யும்போது ஸமீபத்தில் கிராமங்களில்லா விட்டால், அயாசிதமாக யதிருச்சையாய் கிடைத்ததை புஜித்துக்கொண்டு திருப்தராக இருக்கவேண்டும்.

13. ஸித்தியான பின்பு இவருடைய சரீரத்தை முன் சொல்லியபடி விகிரணம், கனனம் அல்லது ஜலத்தில் போடுவது இம்மூன்றில் ஒன்றைச் செய்யவேண்டும்.

14. இந்த முக்கிய-பரமஹம்ஸருக்கு அபரோக்ஷ ஜ்ஞான மேற்படக்கூடியதால் இவருக்கு கைவல்ய-மோக்ஷமேயுண்டு. ஒருக்கால் ஜ்ஞானமேற்படாமல் ஸித்தியாகிவிட்டால் இவர் முன் சொல்லியபடி கிரம-முக்தியின் பொருட்டு ஸத்ய-லோகம் போய் அங்கிருந்து கைவல்ய-மோக்ஷத்தை யடைவார்.

[குறிப்பு :— இக்காலத்தில் முக்கிய-பரமஹம்ஸ-தர்மத்தைக் கைக்கொள்பவர்கள் அபூர்வமாயிருக்கிறார்கள். கால-ரீதியை அனுஸரித்து, கிரமமாய் சாஸ்திர-விதிகளின்படி ஸன்னியாஸஞ்செய்து கொள்கிறவர்களே ஸ்வல்பமாயிருப்பது போல், அப்பால் முக்கியபக்ஷ-விதிகளைக் கைக்கொண்டு ஆசரிப்பவர்களும் மிகவும் அரிது என்பது நியாயந்தான். உறுதியான பரோக்ஷ-ஜ்ஞானமேற்பட்டு குருவின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வெளியேறிய பின்பு சுருதியில் சொல்லப்பட்ட விதிப்படி தண்ட-வஸ்திராதிகளைத் தியாகஞ் செய்துவிட்டு திகம்பரராக அல்லது ஒருகௌபீனத்துடன் மாத்திரமிருந்துவருவதற்கு சரீர-சக்தியும் மனோ-தைரியமும் இல்லாதவர் அமுக்கிய-பக்ஷத்திலேயே யிருந்து கொண்டு நிதித்தியாஸனத்தைச் செய்து வரலாம். சிரவண-மனனங்களைப் பூர்த்தி செய்துகொண்ட அமுக்கிய-பரமஹம்ஸர்களெல்லோரும் முக்கிய-பக்ஷத்தை அவலம்பிக்க வேண்டுமென்பதாகக் கட்டாயமில்லை. சரீர-சக்தியும் மனோ-தைரியமுமுள்ளவருக்குத்தான் முக்கியபக்ஷ-விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. முக்கியபக்ஷ-விதிகளை

அனுஸரிப்பவருக்கு நிதித்தியாஸன-அப்பியாஸத்தில் விசேஷ ஸௌகரியங்களுண்டென்பது சுருதியின் கருத்தாகையால், சக்தியுள்ளவருக்கு சீக்கிரத்தில் தன்னுடைய பரோக்ஷ-ஜ்ஞானம் அபரோக்ஷ-ஸாக்ஷாத்கார-ஜ்ஞானத்தில் முடிவாக வேண்டுமென்ற உத்தேசமிருக்கும் பக்ஷத்தில் முக்கிய-பக்ஷத்தைக் கைக்கொள்வது மிக்க அவசியம்.]

6. துரீயாதீதர்

1. சிகையாவது யஜ்ஞோபவீதமாவது கிடையாது.

2. திகம்பரராகவே யிருக்கவேண்டும்.

3. நியதமாய் ஜலத்தில் ஸ்நானம் அவசியமில்லை. இவருக்கு பஸ்ம-ஸ்நானம் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. க்ஷௌரம் கிடையாது.

5. புண்ட்ரம் திலகம் என்கிற பொட்டு மாத்திரந்தான்.

6. வெளிப்படையான அநுஷ்டானமாவது மந்திர-ஜபமாவது பூஜையாவது கிடையாது.

7. உபாஸிக்கவேண்டிய பிரணவம் பிரம்மப் பிரணவந்தான்.

8. மற்றவர்களுக்கு மஹாவாக்கியோபதேசத்தைச் செய்ய இவருக்கும் அதிகாரமுண்டு.

9. இவர் செய்யவேண்டிய காரியமும் நிதித்தியாஸனம் என்கிற இடைவிடாத தியான மொன்றுதான், வேறில்லை.

10. சரீரத்தில் சக்தியுள்ளவரையில் ஸஞ்சாரம் செய்து கொண்டே யிருக்கவேண்டும். பூர்வாசிரம - ஜ்ஞாதி - பந்து-ஸ்னேஹித-ஜனங்களிருக்கிற இடங்களுக்காவது, தன்னுடைய

முன் சொந்த தேசத்திற்காவது, முன் பரிசயமுள்ள தேசத்திற்காவது போகக்கூடாது. ஸ்திரமாய் ஒரே மடத்தில் வஸித்து வரக்கூடாது.

11. ஸஞ்சாரஞ் செய்யமுடியாமல் சரீரத்தில் சக்தி குறைந்து போய்விட்டால் கிரி, பர்வதம், குகை, வனம், தேவாலயம், கிராமத்தின் கோடி, மரத்தடி முதலான ஏகாந்த-ஸ்தலங்களில் ஸ்திரமாய் வஸித்து வரலாம்.

12 இவர் பழத்தை புஜிப்பார், அல்லது இவர் கிராமத்தில் பிரவேசித்து மூன்று கிருஹங்களில் கோமுக-விதிப்படி (வாயினாலேயே), அதாவது கையை உபயோகப்படுத்தாமல் அன்னபிக்ஷையை புஜிக்கலாம். இவருக்கும் ஜல-ஸ்தலந்தான் கமண்டலு. தன் வாய்தான் இவருக்கு பிக்ஷா பாத்திரம். ஸ்திரமாய் ஏகாந்த-வாஸம் செய்யும்போது ஸமீபத்தில் கிராமங்கள் இல்லாமலிருந்தால் அயாசிதமாக யதிருச்சையாய் கிடைக்த பலாதிகளை புஜித்துக்கொண்டு திருப்தராக இருக்க வேண்டும்.

13. ஸித்தியான பின்பு முக்கிய-பரமஹம்ஸருக்கொப்பந்தம் இவருடைய சரீரத்தை ஸம்ஸ்காரஞ் செய்யவேண்டும்.

14. முக்கிய பரமஹம்ஸரைப் போலவே இவருக்கும் நேர் கைவல்ய-முக்தியாவது கிரம-முக்தியாவது ஏற்படும்.

[குறிப்பு :-எக்காலத்திலும் துரீயாதீத-ஸன்னியாஸிகளைக் காண்பது அரிது. இவர்களுக்கு திகம்பரமே விதியாயிருப்பது மன்னியில் ஆஹார-நியமமும் அஸாதாரணமாயிருக்கிறது. இக்காலத்திலும் இவர்களிருக்கக்கூடுமானால், பெரும் வனாந்தரங்களிலும் மலைகளிலுமிருந்துகொண்டு பழங்களை புஜித்துக் காலங்கழித்து வரக்கூடும். பட்டண-வாஸங்களிலும் கிராமாதிகளிலும் அபூர்வமாகக்கூட இவர்கள் இத்தென் தேசத்தில் காணப்படவில்லை.]

7. அவதூதர்

1. சிகையாவது யஜ்ஞோபவீதமாவது கிடையாது.

2. திகம்பரராகவே யிருப்பார் ஒருக்கால் காஷாய-வஸ்திரத்தைத் தரித்தாலும் தரிப்பார். இவருக்கு நியமமில்லை.

3. ஜலத்தில் ஸ்நானம் அவசியமில்லை. இவருக்கு வாயவ்ய ஸ்நானம் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

4. க்ஷௌரங்கிடையாது.

5. யாதொரு புண்ட்ரமுங் கிடையாது.

6. வெளிப்படையான அனுஷ்டானமாவது மந்திர-ஜபமாவது பூஜையாவது கிடையாது.

7. உபாஸிக்கவேண்டிய பிரணவம் பிரம்மப்பிரணவந்தான்.

8. மற்றவர்களுக்கு மஹாவாக்கியோபதேசத்தைச் செய்ய இவருக்கும் அதிகாரமுண்டு.

9. இவர் செய்யவேண்டிய காரியமும் நிதித்தியாஸனம் என்கிற இடைவிடாத தியானமொன்றுதான், வேறில்லை.

10. இவர் அஜகர (மலைப்பாம்பு)-விருத்தியைக் கைக்கொண்டு தானிருக்குமிடத்தில் யாராவது கொண்டுவந்து கொடுத்த ஆஹாரத்தை வாயினுல் கிரஹித்து புஜிக்க வேண்டும். வேறு விதமான பிக்ஷை கூடாது. இவருக்கும் ஜல-ஸ்தலந்தான் கமண்டலு, தன் வாய்தான் பிக்ஷா-பாத்திரம்.

11. ஸித்தியான பின்பு முக்கிய-பரமஹம்ஸருக்கொப்பாகும் இவருடைய சரீரத்தை ஸம்ஸ்காரஞ் செய்யவேண்டும்.

12. முக்கிய-பரமஹம்ஸரைப்போலவே இவருக்கும் நேர் கைவல்ய-முக்தியாவது, கிரம முக்தியாவது ஏற்படும்.

[குறிப்பு :—துரீயாதீதரைப் போல் அவதூத-ஸன்னி யாஸியையும் இக்காலத்தில் பார்ப்பது மிகவும் அரிது. இத் தென்தேசத்தில் கிராமாதிகளிலாவது பட்டண-நகரங்களி லாவது அவதூதர் இல்லையென்றே சொல்லலாம் அவதூதரின் லக்ஷணங்கள் இன்னவையென்றே ஸாமான்ய-ஜனங்களுக்குத் தெரியாததினால், திகம்பரராக இருக்கிற அல்லது கௌபீனத் துடன் மாத்திரமிருக்கிற ஸன்னியாஸியை அவதூதரென்று எண்ணிவிடுகின்றார்கள். திகம்பரம் அவதூதருக்கு முக்கிய-லக்ஷணமில்லை. பரமஹம்ஸரும் திகம்பரராயிருக்கலாம். துரீயாதீதர் திகம்பரராகவே யிருக்கவேண்டும். ஒரு கௌபீனத் துடன் மாத்திரமிருப்பது பரமஹம்ஸருக்கே லக்ஷணம். அவ தூதர் அநேகமாய் திகம்பரராக இருக்கக்கூடுமானாலும், அவர் முன் குறிப்பிட்டபடி ஒருக்கால் வஸ்திரத்தை தரிக்கவும் கூடும். அவதூதருக்கு முக்கிய வெளிப்படையான அஸாதாரண-அடையாளங்கள் விபூதி முதலானதை தரிக்காமல் புண்ட்ரமே யில்லாமலிருப்பதும் அஜகர-விருத்தியினால் ஆஹாரஞ் செய்வதுந் தான். இவ்விரண்டு அடையாளங்களுமில்லாதவர் அவதூத ரில்லை பஸ்மோத்தூளனத்தையாவது வேறு புண்ட்ரத்தை யாவது தரிப்பவரும், அஜகர-விருத்தி யன்னியில் வேறு வித மாய் ஆஹாரத்தைக் கிரஹித்து அல்லது ஏற்படுத்திக்கொண்டு உண்பவரும் கீழான ஸன்னியாஸியாகவாவது அல்லது கிருஹஸ்தருக்கு ஸமானராகவாவது ஆவரேயல்லாது அவதூத ராகமாட்டார். பொதுவாக மற்ற ஸன்னியாஸிகளை அபே க்ஷித்து அவதூதருக்கு நியமமில்லையென்று சொல்லப்பட் டிருந்தாலும், அவதூதரின் முக்கிய அஸாதாரண லக்ஷணங் களில் கூட குறைவு இருக்கலாமென்று நினைக்கக்கூடாது. முக்கிய லக்ஷணங்களிருப்பதினால் அவதூதராக ஏற்பட்டிருக் கிறவர் ஸஞ்சாரம் முதலான இதர சில விஷயங்களில் மற்ற ஸன்னியாஸிகளைப்போல் நியமங்களுக்குக் கட்டுப்பட்டவரில்லை யென்று மாத்திரம் தாத்பர்யம், அவதூதர் பின் சொல்லப்

படப்போகிற அதிவர்ணாசிரமியைப் போல எல்லா விஷயங்களிலும் நியமங்களைக் கடந்தவராக மாட்டார் அதிவர்ணாசிரமி வர்ணாசிரம விதிகளைப்பூராவும் கடந்து மேல்போனவர். அவதூதரோவெனில் வர்ணாசிரம தர்மங்களுக்குட்பட்ட ஸன்னியாஸாசிரமத்திலுள்ளவர். விதிநிஷேதங்களுக்குப் பூராவும் இவர் வெளிப்பட்டவரில்லை. மேற்குறிப்பிட்ட அஸாதாரண அடையாளங்களைத்தவிர, இவருக்கும் மற்ற ஸன்யாஸிகளுக்கும் பொதுவாயுள்ள யதிதர்மங்களையும் இவர் மீறி நடக்கக்கூடாது.]

8 அதிவர்ணாசிரமீ

வேத சாஸ்திர கிரந்தங்களிலும் லோகத்திலும் சில மஹான்கள் அதிவர்ணாசிரமீ என்ற பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அதிவர்ணாசிரமீ என்பவர் வர்ணதர்மத்தையும் அதாவது ஜாதி வியவஸ்தையையும், ஆசிரம தர்மத்தையும் அதிக்கிரமித்து மேற்சென்றவர். வாஸ்தவமான அதிவர்ணாசிரமீ ஸன்னியாஸிகளைக்காட்டிலும் நிரம்பவும் மேலானவர். நியாயமாய் அதிவர்ணாசிரமியை ஸர்வோத்தம ஸன்னியாஸியே என்றும் ஸன்னியாஸி மண்டலமாகிய மஹா விருக்ஷத்தின் கொம்பிலேயே நன்கு பழுத்து உதிர்ந்த பழமென்றும் சொல்லவேண்டும். பிராஹ்மணனாக இருந்து கிரமமாய் சாஸ்திர விதிப்படி ஸன்னியாஸம் செய்துகொண்டு, ஸன்னியாஸி தர்மங்களை நன்றாய் ஆசரித்து வந்து, சிரவண மனன-நிதித்தியாஸனங்களின் பூர்த்தியின்பேரில் ஸமாதி நிலைத்து ஸாக்ஷாத அபரோக்ஷமான ஆத்ம ஜ்ஞானத்தை அடைந்து, அப்பாலும் பாக்கியிருக்கக் கூடிய மனோவாஸனைகளைப் பூராவும் போக்கடித்து, மனோ-விருத்திகளையும் நன்கு அடக்கி, ஸர்வோத்தமமான ஜீவன்முக்த-ஸ்தானத்தை அடைந்திருப்பவர் எவரோ அவரே அதிவர்ணாசிரமீ என்று கூறப்படுகிறார். இப்படிப்பட்ட மஹானுடைய புத்தியில் ஜாதியென்றும் ஆசிரமமென்றும் வித்தியாஸ-திருஷ்டியேயிருக்கமாட்டாது.

இவர் யாரைப்பார்த்தாலும், எதைப்பார்த்தாலும், பிரஹ்மத்தின் வடிவமாகவே பார்ப்பாரேயொழிய பேதப் பார்வையே இருக்கு ஏற்படாது. இப்படியே இவர் தன்னுடைய சரீரத்தைப் பார்க்கும்போதும், எப்பொழுதாவது தன்னைப்பற்றி நினைக்கும்போதும், இவரிடம் பிரஹ்மத்வ-புத்தியே பிரதானமாக இருக்குமேயன்றி தான் பிராஹ்மணன் என்றாவது, ஸன்னியாஸீ என்றாவது மனோ-பாவனை யுண்டாகாது. வர்ணம், ஆசிரமம் இவ்விரண்டின் எண்ணமே இவருக்கு இராதாகையால், தான் அவ்விரண்டையும் கடந்தவர் என்ற எண்ணமும் இவருக்கிராது. வாஸ்தவமான அதிவர்ணாசிரமி தான் அதிவர்ணாச்ரமி என்று ஒருபொழுதும் சொல்லிக் கொள்ளமாட்டார். வர்ணாசிரம-விதிகளை மீறி தான் நடந்து வருவதாகவும் அவருக்குத்தோன்றாது. அவருடைய செய்கை களைப்பார்த்து வருகிற மற்றவர்கள் அவரை வர்ணாசிரமங்களைக் கடந்த அதிவர்ணாசிரமீ என்று ஊஹித்துச்சொல்லக்கூடுமே யல்லாமல், மனப்பூர்வமாய் தான் அவ்விதிகளை மீறி நடக்கக் கூடியவரென்ற விருத்தி அவருடைய மனஸில் உதிக்காது. எந்தக்காலம் வரையில் ஒருவருக்குத் தன்னிடத்திலும் மற்றவர் களிடத்திலும் பேத புத்தியும் தான் அதிவர்ணாசிரமீ என்ற எண்ணமும் இருந்து வருகிறதோ, அது வரையில் தன்னுடைய வும் மற்றவர்களுடையவும் வர்ணாசிரம-ஸம்பந்தமான பேதங் களும் அவருடைய மனஸை விட்டுப்போகக்கூடியதில்லை. இவ்வித பேதங்கள் பூராவும் அற்றுப்போய் எங்கும் பிரஹ்மப் பார்வையே உறுதிப்பட்டிருப்பவரே உண்மையான அதிவர்ணா சிரமியாவர் ஆகையால், லோகத்தில் ஜாதியென்றும் ஆசிரம மென்றும் பேதங்கள்மற்றவர்களால் பாராட்டப்பட்டாலும்தான் பாராட்டுகிறதில்லை யென்றும், தான் அப்பேதங்களைக்கடந்த அதிவர்ணாசிரமீ என்றும் சொல்லிக்கொண்டு எவர் மனப்பூர்வ மாக வர்ணாசிரம-விதிகளை மீறி நடந்துவருகிறாரோ அவர் அதி வர்ணாசிரமீ இல்லையென்பது நிச்சயம். இப்படிப்பட்ட யோகீ

அதிவர்ணாச்ரமிகள், தாங்களும் கெட்டு லோகத்திலும் தர்மத்தைக்கெடுத்துக்கொண்டு, இக்கலி-காலத்தில் அதிகரித்து வருகின்றார்கள் இக்காலத்தில் ஸ்ரீ ஸதாசிவ-பிரஹ்மேந்திர-ஸரஸ்வதீ-ஸ்வாமிகளுக்குக்கொப்பான வாஸ்தவ- அதிவர்ணாச்ரமிகளைப் பார்ப்பது மிகவும் துர்லபம்.

ஜீவன் முக்தருக்கும் வ்யுத்தான-தசையுண்டென்றும் அவருக்கு பாஹ்ய-திருச்யப்பிரதீதி யிருக்கலாமென்றும் கிரந்தங்கள் மூலமாய் வெளியாவதால், ஏன் அதிவர்ணாச்ரமியின் புத்தியிலும் வர்ணாச்ரம-வித்தியாஸப்பார்வை யிருக்கக்கூடாதென்று கேட்கலாம. நன்றாய் விசாரித்து சோதித்துப் பார்த்தால் இந்த ஸந்தேஹத்திற்காவது கேள்விக்காவது இடமுண்டாகாது. அபரோக்ஷ-ஜ்ஞானம் மாத்திரம் ஏற்பட்டு ஜீவன் முக்த-ஸ்தானத்தை அடையாதவரை ஸாமான்ய ஜ்ஞானீ என்றும் பிரம்மவித் என்றும் சொல்லுகிறதுண்டு. இப்படிப்பட்ட பிரம்மவித்துககுத்தான் வ்யுத்தான-தசையில் மேறகண்ட திருச்யப் பிரதீதி பூர்ணமாயிருக்கக் கூடியது. முன் சண்டபடி இவருக்கு ஸமாதி-காலத்தில் மாத்திரம் ஆத்மானுபவமிருக்குமே யல்லாது வ்யுத்தான-காலத்திலிராது. வ்யுத்தான-காலத்தில் ஸமாதி-அனுபவத்தின் ஜ்ஞாபகம் மாத்திரமிருக்கும். ஜீவன் முக்தாகிய அதிவர்ணாச்ரமிக்கு இப்படியல்ல இவருக்கு எப்பொழுதும் ஆத்மானுபவம் தொடர்ந்தே யிருக்கும். இதற்கு விச்சித்தியே யிராது. ஆனால், இவருக்கும் ஸமாதி-காலம் வ்யுத்தான-காலமென்கிற கால-பேதமுண்டு. ஸமாதி-காலத்தில் ஆத்மானுபவம் மாத்திரமிருக்கும், வ்யுத்தான-காலத்தில் பாஹ்யப்பிரதீதியுடன் கூடியதாகவே ஆத்மானுபவமிருக்கும். இதெப்படி யிருக்கலாமென்று ஸந்தேஹப்படவேண்டாம். ஜீவன்முக்தருக்கு பிராரப்த-சேஷத்தாலுண்டாகிற பிரதீதிகளை உயிரில்லாத பிரதீதிகளென்றே சொல்லவேண்டும். அவைகளுக்கு ஆத்மானுபவத்தைக் கெடுக்கக்கூடிய யோக்கியதை (சக்தி) கிடையாது. இவ்வித உயிரில்லாத பாஹ்யப்பிரதீதி

களும் கீழ்ப்படிகளிலுள்ள ஜீவன்முக்தர்களாகிய பிரஹ்ம-வித் வரன், பிரஹ்மவித்-வரீயான் இவ் விருவர்களுக்கு மிருக்குமே யொழிய ஸர்வோத்கிருஷ்ட ஜீவன்முக்தராகிய பிரஹ்மவித்-வரிஷ்டருக்குக் கொஞ்சங்கூட ஏற்படமாட்டா. முன்-சொல்லிய பிரகாரம் இவர் தானுகவாவது மற்றவர்களின் பிரயத்தினத்தினலாவது ஸமாதியை விட்டு வெளியில் வரவே மாட்டார். ஸமாதியை விட்டு வெளியே வந்து பிராரப்த-போகத்தை பிரஹ்மவித்-வரனும் பிரஹ்மவித்-வரீயானும் அனுபவிப்பதுபோல் பிரஹ்மவித்-வரிஷ்டனுக்குப் பிராரப்த-போகத்தில் அனுபவம் ஏற்படுவதில்லை. தூங்குகின்ற குழந்தைக்குப் பாலேப்போட்டினுல் அது எப்படி அறியாமலே பாலே உட்கொள்கின்றதோ அப்படியே பிரஹ்மவித்-வரிஷ்டனுடைய பிராரப்தானுபவம் நடந்துவரும். இவருடைய உன்னத-ஸ்தானத்திலிருந்து கவனிக்கக்கூடுமானல் பிராரப்தானுபவமே கிடையாதென்றுதான் சொல்லவேண்டும். மேற்கண்ட மற்ற இரண்டு ஜீவன்முக்தர்களுக்கும் பிராரப்தானுபவமிருந்தபோதிலும், அந்த அனுபவம் அவர்களுடைய ஸாக்ஷாத் ஆத்மானுபவத்தால் அழுத்தப்பட்டதாகப் போய்விட்டபடியால், பிராரப்தானுபவ-காலத்தில்கூட திருச்யப்பிரதீதி பூர்ணமாயில்லாமலே அவர்கள் ஆனந்திகளாகவே யிருப்பார்கள் வ்யுத்தான-காலத்தில் பூர்ணமான பாஹ்யப் பிரதீதியையுடைய பிரஹ்மவித்தாகிய ஸாமான்ய ஜ்ஞானியே அதனுல் ஏமாந்து போகாமல் தன் ஸமாதிகால-ஆத்மானுபவ-ஜ்ஞாபக-பலத்தினுல் ஜகத்தை ஸ்வப்னம்போல் எண்ணி அலக்ஷியஞ்செய்து எங்கும் பேதப் பார்வையன்னியில் ஆத்ம-திருஷ்டியைச் செலுத்திவரசக்தரா யிருக்கையில், உயிரில்லாததும் ஸாக்ஷாத் ஆத்மானுபவத்தால் நன்கு அடக்கப்பட்டதுமான பாஹ்யப் பிரதீதியையுடைய உத்தமோத்தம-ஜ்ஞானியாகிய ஜீவன்முக்தரென்ற அதிவர்ணுசிரமியின் புத்தியில் வர்ணுசிரமாதி பேதப் பார்வை கொஞ்சமேனு மிருக்கமாட்டா தென்பதே உண்மை.

வக்கீல் G. ராமசந்திரய்யர்

தர்ம விமர்சனம்

முதலாவது அனுபந்தம்

உ

முதலாவது

சென்னை மாகாண வர்ணாசிரம-தர்ம மஹாஸங்கம், திருநெல்வேலி

1920

உபசரணைக் கமிட்டி அக்கிராஸனாதிபதி நல்வரவு-கூறுதல்

श्रीरस्तु

धर्मो विजयते

श्रीसद्गुरुपादारविन्दाभ्यां नमः

सर्वाभ्यो देवताभ्यो नमो नमः

नमः परमऋषिभ्यः

ஆஸ்திக-மதாபிமானிகளே! ஸநாதன-தர்மோத்தாரக-சிகாமணிகளே!

தங்கள் வரவு நல்வரவு

1 இந்த ஸ்ரீ தக்ஷிண-கங்கா-தாம்ரபர்ணீ-தீரத்தில் இரு கரையிலும் அடுத்தடுத்துள்ள சைவ-வைஷ்ணவ-திவ்ய-க்ஷேத்ரப் பிரதேசங்களுக்குள் மத்யப்பிரதேசமானதும் இம் மஹாநதீ உத்தரவாஹினீயாய் பிரவஹிக்குமிடத்து அதற்கு மேல்-பக்கமாயுள்ளதும்-ஸகல விதத்திலும் ஸ்ரீ காசீ-துல்யமுமான திருநெல்வேலியென்ற இந்த ஸ்ரீ சாலிவாட-புரத்தில் ஜகத் காரண-பரம்பொருளே இரு-ரூபமெடுத்து ஈசான்யத்தில் ஸ்ரீ கைலாஸநாதராக விளங்கியும், நிர்ருதியில் ஸ்ரீ வரதராஜப் பெருமாளாகக்கோலங்கொண்டும் நமக்கிருபுரமுமிருந்து நமது

ஸநாதன-வர்ணாச்ரம-தர்ம-பரிபாலன விஷயத்தில் சிறிதும் ஊனம் நேரிடாது பாதுகாத்துவரப்பட்டதும், ஸ்ரீ பகவத்-திவ்ய கருணா-கடாக்ஷத்திற்கு பாத்தியப்பட்டதாக தர்ம-மூர்த்தி களான தங்கள் வரவினாலேயும் நாங்கள் ஊஹித்துப் பெருமை யுடன் கொண்டாடி வரப்பட்டதுமான இந்த ஆர்ய-தர்ம-சாலை யில் ஆர்யோத்தமர்களாகிய தங்களுக்கு இவ்வுபசரணைக் கமிட்டியார்கள் ஸ்வாகதமென்று ஆவலோடு சொல்வதும், தங்கள் வரவைக்கண்டு மகிழ்வதும், அச்சொல்லையும் அம் மகிழ்ச்சியையும் ஆதரவுடனும் அன்புடனும் தாங்கள் அங்கீ கரிப்பதும் கிரமமேயாகும். தான் பெரியோராகிலும், தன் வீடு சென்றாலும், அங்கு தனக்கடங்கிய ஒரு சிறு பாலகன் ஸந்தோஷத்துடன் வாருங்களென்று சொல்வதினால் தனக்குத் திருப்தியுண்டாவதுமுண்டல்லவா? ஸ்ரீ ஜகதீசன் நமக்களித் திருக்கும் பதார்த்தங்களில் சிலதை யெடுத்து நாம் அவருக்கே ஆஸனாதிகளைக் கொடுத்தும் நிவேதனஞ்செய்தும் வருவதினால் அவருக்கு நம்மிடத்தில் மூகோல்லாஸமும் கிருபா-விலாஸமு முண்டாவதாக நாமெண்ணவில்லையா? இந்த நியாயங்களைக் கைக்கொண்டு அதி-மஹனீயர்களாகிய தங்களுடைய ஸ்வ-ஸ்தானமாகவே யிருக்கிற இந்த தர்ம-நாட்டில் தங்கள் வறுதிக் குட்பட்டு அடங்கியிருக்கிற இந்த உபசரணைக்கமிட்டி-அங்கத் தினர்களுக்காக பிரதிநிதி-ஸ்தானத்தில் நான் அவர்களின் ஆஜ்ஞைக்கிணங்கி தங்களுக்கு நல்வரவுபசரணை வாக்குக்கூறு வதும் யுக்தமேயாகுமென்று தைரியங்கொண்டு ஸ்வாகத மென்று சொல்லத்துணிந்தேன். தாங்களெல்லோரும் இந்நாட்டு ஹிந்து-மதாபிமானிகள் பேரில் தயவு புரிந்து இந்த முதலாவது மாகாண-ஸநாதன-வர்ணாச்ரம- தர்ம-மஹாஸங்கத்தை யதோ சிதமாய் நடத்திக்கொடுத்தும், சுமார் மூவாயிரம் பிரதிநிதிகளா டங்கிய இந்த மஹா-ஸங்கத்தினால் நம்தேசத்திற்கு நன்மையும் அனாதியாயுள்ள ஆஸ்திக-மத-வைதிக-தர்ம-விஷயங்களில் ஹிந்துக்களெல்லோருக்கும் சிரத்தா-பக்தி அதிகரித்தும், நவீன

விபரீதக்கொள்கைகளில் எவருக்கும் புத்தி சென்று கெட்டுப் போகாமலும், இப்மாகாணமெங்கும் முன்போல் ஸத்-கர்மா னுஷ்டானுேபாஸன-ஜ்ஞான-மார்க்கங்களில் பிரஹ்ம-க்ஷத்ரிய வைசிய-சூத்திர ஸகல வர்ணத்தார்களும் கலப்பு (ஸங்கர) ஜாதியார்களும் ஒழுங்குதவருது நடந்துவந்து ஐகமத்யத்துடன் திருப்தர்களாயுமிருக்கும்படி செய்துகொடுத்தும். மற்றும் தங்கள் ஆலோசனைகளில் எங்கெங்த உபாயங்களை அவலம் பித்து ஜனங்களை நல்-வழிகளில் ஸ்தாபிக்கவேண்டுமென்று தோன்றுகின்றதோ அந்தப்படிக்கெல்லா மேற்படுத்திக் கொடுத்தும் அனுக்கிரஹிக்கவேணுமென்பதாய்த் தாழ்மை யுடன் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

2 நம்-ஹிந்துக்களின் தத்கால-ஆசரணைகளில் சில சீர்திருத்தங்கள் அவசியமாய்ச் செய்யப்பட வேண்டியவை யென்பது ஸகலர்களாலு மொப்புக்கொள்ளப்பட்ட விஷயம். ஆனல் எதை எவ்வகையில் சீர்திருத்த வேண்டிய தென்பதில் அபிப்பிராய - பேதங்களேற்பட்டிருக்கின்றன. லௌகிக-ஸாமர்த்தியமும், ஆங்கிலேய-வித்தியாப்பியாஸமும், ராஜாங்க-ஊழியத்தில் அல்லது வேறு அர்த்தார்ஜனத் தொழில்களில் உயர்ந்த ஸ்தானமுமுள்ள சிலர்கள் நம்முடைய வர்ணுசிரம-தர்மங்களின் கொள்கைகளினுலும் ஆசரணைகளினுலும் ஹிந்துக்களின் நிலைமை கெட்டுப்போய் விட்டதென்றும், வர்ணுசிரம-பேதங்களை அடியோடு தொலைத்தாலொழிய ஹிந்துக்களுக்கு நன்மை யேற்படாதென்றும், நாநா-ஜாதிகளில் பிறந்திருக்கிற நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ளவேண்டிய வியவஸ்தையிலும், நாம் நடத்திவருகின்ற விவாஹாதி-ஸம்ஸ்கார-விஷயங்களிலும், மற்றுமுள்ள நமது தர்மாசரணைகளிலும் ஸம்பந்தப்பட்டிருக்கிற சாஸ்திரீயமான விதி-நிஷேத-நிபந்தனைகளை நாம் விலக்கிக்கொண்டும், தத்கால-ஸௌகரியங்களுக்கேற்றபடி நம்-சாஸ்திரங்களை நாமே மாற்றிக் கொண்டும், மேல்-நாட்டு நாகரிகங்களை யனுஸரித்து ஸ்வாதந்-

திரியத்துடன் நாம் நடந்துவரவேண்டுமென்றும் பலவாறுகப் பிதற்றியும் தர்மப்பிரஷ்டர்களாய் ஆசரித்தும் வருகின்றார்கள். மற்றும் சிலர்களும் தங்களுக்கு விபரந்தெரியாமலே தங்கள் ஹிதத்திற்கு விரோதமாய், ஷெ தர்மப்பிரஷ்டர்களின் சில வெளிப்படையான பாவனைகளில் மயங்கி, மேற்கண்டபடியே சொல்லி வர இப்பால் சுற்றுக்கொண்டிருக்கின்றார்கள் ஷெ இருவகையார்களைத் தவிர மற்ற யாவத்து ஹிந்துக்களுக்கும் வேத-சாஸ்திரங்களிலும் வர்ணாசிரம-தர்மங்களிலும் சிரத்தை பூராவும் குன்றிப்போகாமலிருந்துவருவதில் இவர்களின் அபிப்பிராயப்படியே, நம்முடைய சாஸ்திர-முறைக்கிணங்கிய ஆசார-ஒழுக்கங்களே லோகோத்தரமானவையென்றும், இக்காலத்தில் ஹிந்து-ஜனங்களுக்குள் காணப்படுகின்ற மாறுபாடுகளும் கெடுதல்களும் ஆர்ய-தர்மாசரணையிலிருந்து ஜனங்கள் நழுவிப் போனதாலேற்பட்டவைகளென்றும், அக்கெடுதல்களைப்போக்கடித்து நம்-ஜனங்கள் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால் வேத-சாஸ்திரங்களிலும் அவைகளைப் போதிப்பிவிக்கும் ஆசார்யர்களிடத்திலும் விசுவாஸம் அதிகரிக்கும்படி செய்து சாஸ்திரோக்தமான ஸதாசார-தர்மானுஷ்டான-நடைகளில் தங்களைத் திருப்பிக்கொள்வதன்னியில் வேறு மார்க்கமில்லை யென்றும், சுமார் 50, 60 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாய் வைதிக-சிரத்தையும் சாஸ்திர-ஆராய்ச்சியு மில்லாதவர்களும், ஸதாசார-கர்மானுஷ்டானங்களைப் பெரும்பாலும் கைவிட்டவர்களும், பிரதான லௌகிக-ஸ்தானங்களை யடைந்தவர்களுமான ஜனங்களின் வறுதிக்குட்பட்டு நம்-நாட்டில் அனேகர்கள் நடந்து வந்திருப்பதே நமக்குள் காணப்படுகின்ற கேடுகளுக்கு விசேஷ-காரண மென்றும் ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது.

3. வர்ணாசிரம-தர்ம-ஸம்ரக்ஷண- விஷயமாய் கவனிக்கப்படவேண்டியவைகள் அநேகங்களுண்டு. ஆங்கிலேய-வித்யாப்பியாஸமுள்ளவர்களுடைய மனதுகளில் படக்கூடிய சங்கைகளை யுத்தேசித்துச் சில விபரங்களைக் குறிப்பிட்டு

ஆங்கிலேய-பாஷையில் இன்று நான் கொஞ்சம் விரிவாய் வெளியிட நேரிடும். ஷெ சங்கைகளேற்படாதவர்கள் முன்பாக ஷெ விபரங்களைத் தமிழில் சொல்லக் காரணமாவது அவசியமாவதில்லாததால் அவைகளை நிறுத்திக்கொண்டு, இரண்டொரு முக்கிய ஸங்கதிகளைச் சுருக்கமாய்த்தொட்டுக்காட்டி அவைகளையும் மஹா-தார்மிகர்களான தங்களுடைய ஆலோசனை-விஷயங்களாக விட்டு நான் சீக்கிரத்தில் முடித்துக்கொள்கிறேன்.

(1) நமது வர்ணாசிரம-தர்மம் ஸநாதனமாயுள்ளது. நமது பிரமாணோத்தமமான வேதமும் அனாதி. அதனால் உபபாதிக்கப்படும் பரமாத்மப்பொருளும் அனாதி. அப்பொருளை அடைவதற்குள்ள தர்மோபாய-மார்க்கங்களும் அனாதிகள். ஷெ மார்க்கங்கள் முடியுமிடத்திலுள்ள ஜ்ஞான-நிலையில் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்ற சாசுவதாகண்ட-ஸச்சிதானந்தாத்ம-ஸ்வரூப-ஜ்யோதிஸ்ஸே அப்பொருளின் விளக்கம். தர்மோபாய-மார்க்கங்கள் அனாதியாயிருந்தும் அவைகளின் வழியாய்ச் செல்வோரை-அதிலும் அறிந்து செல்வோரை, இக்காலத்தில் காண்பது அரிதாய்ப் போய்விட்டது. இக்காலத்தில் அனேகமாய் ஸாத்திய-ஸம்பந்தமான சிந்தையே யில்லாததினால் ஸாதன-தர்ம-ஜ்ஞானத்தைத் தேடுவாரில்லை. தர்ம-ஸ்வரூபம் தெரிந்தாலல்லவோ அதில் மனதுக்குப் பற்றுதலேற்படும்? பெரும்பாலும் ஜனங்களுக்கு தர்ம-ஸ்வரூப-ஜ்ஞான மில்லாததையிட்டு அதர்ம-துஷ்டமான அர்த்த-காமங்களுக்கு வசப்பட்டு யாதாயாதமாய் அலைந்து கஷ்டப்படுகின்றார்கள். ஆகையால், தர்மாதர்ம-விவேசனம் ஜனங்களுக்கு உண்டாகும்படி உபாயங்களை யாலோசித்து எல்லோரையும் நல்-வழிப்படுத்துங்கள்.

(2) காலத்தின் கொடுமையோ, அல்லது நம்-ஜனங்களின் அத்யுத்கடமான பாபத்தின் பயனோ, எது-காரணம் பற்றியோ, நம்முடைய இம்மாகாண-தர்ம-நாட்டில் சில வர்ணத்தார்களுக்குள், அதிலும் விசேஷமாய் பிராஹ்மண-வர்ணத்தாருக்கெதிரிடையாக, துர்க்கக்ஷிகளேற்பட்டு ஒருவருக்கும் ஸுகமன்னி

யில், எல்லோருடைய தர்மமுங்கெட்டு, ஹிதமின்னது அஹிதமின்னதென்றறியாமல், மூடத்தனமாய் ஒருவர் பிதற்றியதை மற்றவரும் பின்பற்றிச் சொல்லிக்கொண்டு, நற்கதிக்கிடமின்றி மோஹத்திலாழ்ந்து கிடக்கிறார்கள் பலர். அவர்களையும் ஸன்மார்க்கத்தில் கரையேற்றி அவர்களும் நற்கதியடையும்படியான காரியங்களையும் தாங்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

(3) இதுவுந்தவிர, முன்குறிப்பிட்ட தர்மப்பிரஷ்டர்களின் கொள்கைகள் நமது சாஸ்திர-விதிகளுக்கு நேர் விரோதமாயிருப்பதால், இங்கு கூடியிருக்கிற பெரியோர்கள் அவகாசத்திற்குத் தக்கபடி ஷை தப்பிதமான கொள்கைகளொவ்வொன்றையுமெடுத்துப் பரிசோதித்து, அலசி, அவைகளின் மேல்-பூச்சுகளை விலக்கி, உள்ளிருக்கும் தத்துவாபாஸங்களை நன்கு விரித்துக்காட்டி, இனியாவது நமது ஹிந்துக்கள் ஷையார்களின் மோஹகரமான சொற்களுக்குக் காது கொடாமலும் ஷையார்கள் இனி எவ்விடத்திலும் சென்று நம்-ஜனங்களைக் கெடுக்க இடங்கொடாமலும் செய்யத்தக்க ஏற்பாடுகளையும் தாங்கள் யோஜித்து கல்பிக்கவேண்டியதாயிருக்கின்றது ஷை விபரீதக்கொள்கைகள் இன்னவையென்று வெகு ஜனங்களுக்கு ஏற்கனவே தெரியவருமாகையால் அவைகளைத் தனித்தனியாகக் குறிப்பிட்டு நான் சொல்லித் தங்களுடைய அருமையான காலத்தை வியர்த்தப்படுத்துவதிலிஷ்டமில்லை. தாங்கள் செய்யவேண்டிய உபகார-காரியங்களைப் பற்றிப் பொதுவாகத் தங்களுக்கு ஜ்ஞாபகப்படுத்துகிறேனே தவிர வேறில்லை.

4. மஹாத்மாக்களான தங்களுக்கு மேற்கண்ட காரியங்கள் பெரியவையல்ல. தாங்களும் தங்களைப்போலொத்த மஹான்களும் அந்தந்தக் காலங்களில் கொஞ்சம் சிரமமெடுத்து கவனித்து தர்ம-லோபம் நேரிடாமல் ஜாக்கிரதையுடன் பாதுகாத்திருந்திருக்கும் பக்ஷத்தில் இப்போதுள்ள இவ்வளவு கெடுதல்கள் தென்படமாட்டா. அவரவர்களின்

குடும்பத்திலுள்ள சிறு பையன்களையும் பெண்களையும் அன்பு கலந்த கண்டிப்புடன் நல்-வழி தவருது நடக்கும்படி செய்தும், நூதனப்படிப்பு-ஸம்பந்தமாய் பையன்களுக்குத் தங்களுக்குத் தெரியாமலே சேர்க்கை தோஷத்தினுலும், அத்தியாவசியகத்தி னலும், தற்செயலாலும் நேரிடுகின்ற சில துராசாரங்களை அப்போதைக்கப்போது யோக்கடித்தும், சிறுகச் சிறுக தர்மோபதேசங்களைச்செய்தும், நாமனுஷ்டானங்களை இயன்ற வாறு அவர்களின் பார்வையில் செய்துகாட்டியும் வர வேண்டியது பெரியோர்களுக்கு அவசியமென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே.

5. நமது புண்ய-பூமியில் ஏற்கனவே அநாதிகாலமாய் வேருன்றி ஓங்கி வளர்ந்திருக்கின்ற ஆர்ய-வர்ணாசிரம-தரு வானது தக்காலத்தில் ஸர்வ-தோஷகாமான அவித்யா-மாருத விஜிரும்பணத்தாலும் தாபத்திரயாதிக்யத்தாலும் சோர்ந்து போயிருக்கும் நிலையிலிருந்து தங்களுடைய குளிர்ந்த அன்பு-மிகுந்த தர்ம-முயற்சிப்பெருக்கால் மீண்டும் தழைத்தும் சாகோப சாகையாய் விருத்தியடைந்தும் ஸகலர்களுக்கும் தர்ம-புருஷார்த்த-பலனும் அதன் மூலமாய் பரம-புருஷார்த்தமான மோக்ஷ-ஸாம்ராஜ்யானந்தமுமேற்படும்படி ஸ்ரீ பகவத்-ஸங்கல்ப முண்டாகக்கருதி நாமெல்லோரும் ஏகோபித்து அவருடைய திருவடிகளில் மனதைச் செலுத்தி முறையிட்டுப் பிரார்த்திப் போம். நம்முடைய நித்தியமான வைதிக-மதமும் ஸநாதன மான வர்ணாசிரம-தர்மமும் அவருடைய ஸாக்ஷாத் பார்வை யிலும் ஆதரவிலுமிருப்பதால், தைரியத்துடனும் நம்பிக்கை யுடனும் அவர்மீது பொறுப்பைவைத்து அவருடைய ஆஜ்ஞா-ரூபங்களாகிய சுருதி-ஸ்மிருதிகளின் வழியாய் அவர் நமக்குக் காட்டியிருக்கிற தர்ம-மார்க்கங்களில் தவருமல் நாம் நடந்தும் மற்றவர்களை நடக்கும்படி செய்தும் முயற்சிக்கவேண்டியதான நமது முக்கிய கடமையை நம்மால் கூடியவரையில் இந்த

மஹா-ஸங்க-காரியத்தை முன்னிட்டுச் செலுத்துவோம். கருணா-நிதியாகிய ஸ்ரீஜகதீசன் நம்முயற்சிகளுக்கு நல்-வழி காட்டி நம்மெல்லோரையும் கிருதார்த்தர்களாயும் தன்யர்களாயுஞ் செய்வாராக!

ஶுபமஸ்து

தர்ம விமர்சனம்

இரண்டாவது அனுபந்தம்

உ

श्रीरस्तु

धर्मो विजयते

இரண்டாவது

சென்னை மாகாண வர்ணாசிரம-தர்ம-மஹாஸங்கம்

1921-ம் வருஷத்தில் தஞ்சாவூரில் கூடியது

அக்கிராஸனாதிபதியின் முதல் பிரஸங்கம்

श्रीसद्गुरुपादारविन्दाभ्यां नमः

सर्वाभ्यो देवताभ्यो नमो नमः

नमः परमऋषिभ्यः

ஆர்ய-மதாபிமானிகளே! பெரியோர்களே! ஸ்நேஹிதர்களே!

1. இக்கலி-முழக்கத்தின் மத்தியிலகப்பட்டு விழித்துத் தத்தளித்து வருகின்ற வைதிக-மதாபிமானிகள் ஒருங்கே சேர்ந்து மஹா-ஸபையை ஏற்படுத்தி வர்ணாசிரம-தர்மம் நீடூழி வாழ்ந்து ஸகலர்களையும் நற்கதியிற் சேர்ப்பிவிக்கக்கூடிய மார்க்கங்களைப் பர்யாலோசனை செய்யும்படியான புத்தி-யோகத்தைக் கொடுத்தனுக்கிரஹித்த ஸ்ரீ பரமாத்மாவை ஏகோபித்து நாம் அந்தரங்கசுத்தியாய் ஸ்துதித்து வரவேண்டியதும், நம்-தர்ம-வழிபாடுகளுக்குக் கேடன்னியில் எக்காலமும்

ஜா ருகர்களாய் பாதுகாத்து வந்திருக்கிற நமது ஆசார்ய-சிரேஷ்டர்களுக்கு நாமெப்போதும் பணிவுடன் வந்தனமளித்து வரவேண்டியதும் நமது கடமையென்பது வியக்தமே. இந்த மஹா-ஸங்கம் கூடுவதற்கு ஈசுவரானுக்கிரஹமும் ஸத்-குருக்களின் ஸங்கல்பமுமே எப்படிக் காரணங்களோ அப்படியே இந்த மஹா-ஸபையின் காரியங்கள் பூராவும் ஸரியாய் நடந்தேறி வருவதற்கும் அவைகளையே நம்பியிருக்கின்றோம்.

2. தாங்கள் மிக்க அபிமானத்துடனும் ஆதாவுடனும் எனக்கேற்படுத்தியிருக்கின்ற இந்தப் பெரும் ஸ்தானத்திலும் வீற்றிருக்க ஷெ நம்பிக்கையின் தைரியத்தைக்கொண்டே மனந்துணிந்து ஒப்புக்கொண்டேன். தைவானுகூலமும், மஹத்-ஸங்கல்பமும், ஆர்யோத்தமர்களுடைய தர்ம-மார்க்க-முயற்சிகளுமொன்று சேர்ந்தால் எந்த ஸத்-காரியம் நிறைவேறாது? ஸாமான்ய-லௌகிகனுகவும் விசேஷப்பிரஜ்ஞை யில்லாதவனுகவுமிருக்கிற என்னுடைய குறைகள் இந்த மஹா-ஸங்க-காரியங்களில் ஸம்பந்தப்படமாட்டா வென்று உறுதிகொண்டு, எந்த ஸ்தானத்திலிருந்தாவது ஸத்-ஸங்க-நன்மையை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் நான் தங்கள் கட்டளைக்கிணங்கி தங்களுடன் சேர்ந்து நானுமிந்த மஹா-ஸபையை நடத்துவதாய் பாவனை செய்துகொள்ளத் துணிவுகொண்டேன். ஈசுவரனிடத்திலும் ஸத்-குருக்களிடத்திலும் பொறுப்பை வைத்து இங்கிருக்கும் பெரியோர்களே தீர்காலோசனையின்பேரில் நிதானமாய் இந்த ஸபா-காரியாதிகளை நடத்திக்கொண்டு இந்த ஸ்தான-கௌரவத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதுடன் என்னுடைய ஸொந்தக் குறைகள் ஏதாவது தட்டுப்பட்டால் அவைகளையும் நீக்கி என்னையும் பாவனப்படுத்தி உத்தாரணஞ் செய்யவேண்டுமென்றும் தாழ்மையாய் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

3. தத்காலத்தில் நம்-வர்ணுசிரம-தர்மானுஷ்டானத்திற்கு உண்டாயிருக்கிற இடையூறெல்லாம் நவீன ஆங்கிலேயப்

படிப்பிருலேயே பெரும்பாலுமேற்பட்டிருக்கின்றது. ஆங்கிலேயப்படிப்பிலகப்படாத நம்மவர்கள் ஷிதர்மத்திலிருந்து அதிகமாய் நழுவிப்போகவில்லை. அவர்களுக்குள் காணப் படுகின்ற கெடுதல்கள் ஸ்வல்பம். அவைகளிலும் அநேகங்கள் ஆங்கிலேயப் படிப்பினர்களுடைய ஸஹவாஸததாலேற் பட்டவையல்லாது வேறல்ல. ஆங்கிலேயப்படிப்பிலாழ்ந்துள்ள நான் அப்படிப்பில்லாத சுத்த ஸன்மார்க்கஸ்தர்களுக்கு விசேஷமாய்ச் சொல்லும்படியான ஸ்திதியிலில்லை. ஆங்கிலேய-வித்யையின் கோணல்களினுலுண்டாயிருக்கிற கேடுகளை நான் அனுபவத்துடன் அறிந்தவனுகையால் அவைகளை யெடுத்துக் காட்டிக் கண்டித்து அவ்வித்யை யுள்ளவர்களுக்கு மாத்திரம் கொஞ்சம் சொலலவேண்டியதுண்டு. இதற்கப்பால் நான் ஆங்கிலேய-பாஷையில் தெரிவிக்கும் ஸமயத்தில் அவர்களுக்கு அவகாசப்பட்டமட்டில் அந்தப்படி சொல்லிக்கொள்கிறேன். தங்களில் ஆங்கிலேயப் படிப்பில்லாத சிலர்களை யுத்தேசித்து மாத்திரமிப்போது தமிழில் சிற்சில விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்லி நிறுத்திக்கொள்கிறேன். தங்களுக்குண்டாகாத வீண்-ஸந்தேஹங்களை உண்டாகும்படி செய்து அவைகளுக்கு ஸமாதானங்களைத் தேடியெடுத்துக் காட்டுவது வீண்-சிரமமே யாகும். ஆங்கிலேயட்படிப்புள்ள எங்களை யபேக்ஷித்துத் தாங்கள் மிக்க தன்யர்கள். ஆனல், தாங்களே தன்யர்க ளென்று நாங்களெடுத்துச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய ஸ்திதியில் தங்களிலும் சிலர்களிருக்கின்றுர்கள். இதுவும் கால-வேற்றுமைதான்.

4. எவ்வளவு ஜாக்கிரதையுடனிருந்தாலும் ஆங்கிலேய-கலாசாலைகளில் படிப்போர்களுக்குத் தங்களுக்குத் தெரியாமலே துராசாரமும், துஷ்ட-ஸஹவாஸமும், தவருன கொள்கைகளும் சிறுகச்சிறுக அமைந்துவிடும். இவைகளாலுண்டாகும் கேடுகள் பலவை. இக்கேடுகள் மற்றவர்களை இவ்வளவு லெகுவாய் அணுகமாட்டா. துராசாரப் பழக்கத்தினுல் ஸதாசாரத்தில்

அசிரத்தையும் ஸதாசார-நிஷ்டர்களிடத்தில் மதிப்புக்குறைவும் அலக்ஷியமும் லௌகிகர்களில் அனேகர்களுக்கு விருத்தியடைந்துவருவதைக் காண்கின்றோம். துஷ்ட-ஸஹவாஸத்தினால் நல்வழிப்பிடிப்பு நீங்கி, தர்ம-மார்க்கப் பிரஷ்டர்களாயும், இந்திரிய-வசங்கதர்களாயும் காணப்படுகின்றார் பலர். இவ்விருவகைத் தோஷங்களுடன் தப்புக் கொள்கைகளுஞ் சேர்ந்தவிடத்தில் கலிபுருஷ-தூதர்களாகவே விளங்குகின்றார் சிலர். ஷை மூவகை தோஷங்களுமிருக்குமிடத்து உயர்ந்த லௌகிக-ஸ்தானமும், அதாவது, பெரிய உத்தியோக-நிலையும், அபரிமித-பணக்கொழுப்பும், வெளிச்செல்வாக்கும், வாக்-விஜ்ரும்பணமுஞ்சேர்ந்து ஒத்திருந்துவிட்டால் ஸாக்ஷாத் கலிபுருஷாவதாரமே நிதர்சனமாகத் துலங்கும். இக்கலிபுருஷாவதாரத்தின் மஹிமை தனி. ஸர்வ-சக்தனான ஸ்ரீ லக்ஷ்மீகாந்தனாகிய பகவானுங்கூட ஒவ்வொரு சரீரமெடுத்தே அப்போதைக்கப்போது அவதாரஞ்செய்தார். சிற்சில லீலைகளில் மாத்திரம் பகவான் ஒரே காலத்தில் நாநா-சரீர-கிரஹணத்தைச் செய்ததாகத் துலங்குகிறதேயொழிய, அவதார-முக்கிய-காரியங்களையெல்லாம் ஒரே சரீரத்துடனிருந்துதான் அவர் நடத்தியிருக்கின்றார். கலிபுருஷனோவெனில் பற்பல சரீரங்களெடுத்து இடம் தவறாது, தான் நேராகவும் தன் தூதர்களைக்கொண்டும், பட்டணம் பட்டணமாய், கிராமம் கிராமமாயிருந்து தினந்தோறும் தன் கலி-தர்மப்பிரசாரத்தை நடத்திவருகின்றான். அஹோ ஆச்சரியம்!

5. நமது ஸர்வோத்கிருஷ்ட ஆர்ய-நிவாஸப்பிரதேசமான இப்பரதகண்டமெங்கும் மனுஷ்ய - க்லிஷ்ட - கல்பனையாலேற்பட்ட மதாந்தரங்களும், ஆர்யமத-வேஷம் பூண்ட அனார்ய-ஜுஷ்டமான அவாந்தர-போலி-மத-ஸித்தாந்தங்களும், இவைகளைக் கைக்கொண்டு பரவச்செய்கிற ஸமாஜங்களும் ஸபைகளுமாகச் சேர்ந்து வியாபித்துக்கொண்டு, அனாதியாயுள்ளதும், ஸாக்ஷாத் ஈசுவர-ப்ரோக்தமானதும், ஸகல ஜீவர்

களுக்கும் மோக்ஷ-பர்யந்தம் ஸ்தாயியாய் நிலைநின்று கை தூக்கிவிடக்கூடியதுமான நம் - ஸநாதன - வைதிக - மதமும் காப்பாற்றப்படவேண்டியதுபோல் நினைக்கும்படியான ஸ்திதியில் நம்மைக்கொண்டுவந்து விட்டிருக்கின்றன. ஆனால் நம்-மதமும் அதைச்சார்ந்த வர்ணாசிரம-தர்ம-மார்க்கங்களும் அடியோடு கெட்டுத் திரோதானத்தை அடைந்துவிடுமென்ற பயத்திற்குக் கொஞ்சமேனுமிடமில்லை. ஈசுவராஜ்ஞா-ரூபங் களும் நித்தியங்களுமான வேத-சாஸ்திரங்களினால் வெளியிடப்பட்ட த்ரைகாலிக (त्रैकालिक) உண்மைகளும் பொய்யானா லொழிய, அவ் உண்மைகளின் காரணத்தைக்கொண்டே ஈசுவரனால் நடத்திவரப்பட்ட ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹார-காரியங்களினால் மாறி மாறித் தோன்றியும் மறைபட்டுமுள்ள இப்பிரபஞ்சத்திற்கே மறு-தோன்றுதலன்னியில் ஸர்வ-நாசமேற்பட்டாலொழிய, (किं बहुना) அழிவற்ற ஈசுவரனுக்கே ஹானியேற்பட்டாலொழிய நம் வைதிக-மத-வர்ணாசிரம-தர்ம-மார்க்கங்களுக்குக் கேடுண்டாகாது. இவைகளின் ஸம்ரக்ஷணை பொறுப்பெல்லாம் ஈசுவரருடையது. அவரோ நித்யர், ஸர்வஜ்ஞர், ஸர்வ-சக்தர். நாம் இப்போதும், எப்போதும் முயற்சிக்கவேண்டியதெல்லாம் நமக்கும் அந்த உத்தமமான தர்ம-மார்க்கங்களுக்குமுள்ள ஸம்பந்தம் நம்முடைய நடத்தையால் நீங்கிப்போகாமலும் அவைகளின் நன்மையை நாம் அடைவதில் நம் தவறுதல்களினால் இடையூறுண்டாகாமலும் மாத்திரம் பாதுகாத்துக்கொள்வதற்கேயல்லாமல் வேறொன்றுக்குமல்ல.

6 நம்மவர்கள் யாவருக்கும் நம்-மதத்தில் அந்தரங்கமான அபிமானத்தையும், வர்ணாசிரம-தர்ம-மார்க்கங்களில் ஊக்கத்துடன் பிரவிருத்தியையும், வைதிக-சிரேஷ்டர்களிடத்தில் நிஜமான கௌரவ-புத்தியையும் விருத்திசெய்து கொடுக்க வேண்டியதவசியம். நம்-மதத்தின் உத்கிருஷ்டத்தன்மையையும் கொள்கைகளையும் ஸரியாயறிந்த பெரியோர்கள் அவைகளை

மற்றவர்களுக்கு மனதில் படும்படி யெடுத்துக்காட்டி உபதேசிப்பதால் ஷெ அபிமானம் விருத்தியடையும். இதனுல் இம்மதக்கொள்கைகளின் முடிவான உத்தேசமும் இந்த உத்தேசம் நிறைவேறும் பொருட்டு அவரவர்களின் பிரகிருதிக்குத் தக்கபடி நம்-சாஸ்திரங்களில் குறிப்பிடப் பட்டிருக்கிற ஸாதனுனுஷ்டானத்தில் ஆவலும் நாளடைவில் தெளிவாய் புத்தியிலேற்பட்டு ஷெ தர்மப்பிரவிருத்திக்கு ஆதிக்கியமும், அந்தப்படி ஏற்கனவே விசேஷப் பிரவிருத்தி செய்து வந்திருப்பவர்களிடத்தில் அதிக மதிப்பும் தானுகவே யுண்டாகக்கூடியவை. நம்-மதத்தின் உத்கிருஷ்டத்தன்மையை நன்கு சொல்ல ஆரம்பித்தால் விரியும். கூடியவரையில் சுருக்கிச் சொல்லுகிறேன். இம்மதம் இன்று நேற்று வந்தது அல்ல. இப்பூலோக-ஸ்ருஷ்டிக்கப்பால் வந்ததுமல்ல. இப் பிரபஞ்ச-ஸ்ருஷ்டி-ஸ்திதி-லய-காரியங்களே இம்மத-முக்கியப் பிரமாணமான வேதத்தின் ஸத்யப் பொருளைக்கொண்டே ஜகதீசனுல் நடத்திவரப்படுகின்றன. அனுதியாயுள்ள இம் மதத்தின் ஆதியைக் குறிப்பிட்டு B. C. கிருஸ்துவ-வருஷக் கணக்கில் சொல்லிவிடுவதாகப் பிரயத்தினஞ்செய்யும் நவீனப் படிப்பு-நிபுணர்களின் மௌட்டியமொன்றே வெளியாவதைத் தவிர ஷெ பிரயத்தினத்திற்கு வேறு பலன் கிடையாது. ஷெ கணக்குப்படிக்குங்கூட நம்-தேச-ஆர்யர்களைத் தவிர மற்ற இப்பூலோகவாஸிகள் (அதிலும் இப்போது வெகு நாகரிகஸ்தர் களென்று சொல்லிக்கொள்பவரெல்லாம்) உடுக்கத்துணியில்லா மலும், இரைப்பண்டமின்னதென்றறியாமல் கண்டதைத்தின்று வயிறு வளர்த்து வந்தும், விருக்ஷ-குஹ-பூகிருஹங்களைத் தவிர நிற்க நிழலின்றியும் வளையவந்த காலத்திலேயே வேதமும் வைதிக-மதானுஷ்டானமும் விசேஷ நாகரிகமும் நமக்கிருந் திருப்பதாக வெளியாகின்றது.

7. அன்றியும், ஸநாதனமான நம்-மதமொன்றுதான் மனுஷியனுலேற்படுத்தப்படாத மதம். நம்-வேதமொன்றுதான்

மனுஷிய-ப்ரோக்தமில்லாத, அதாவது, அமானுஷமான வாக்கு. இப்பூலோகத்தில் பிரசாரத்தை அடைந்துவரும் மற்ற ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு மனுஷிய-மஹாஷிகூ சார்ந்து நிற்கின்றது. அந்தப்படியே அம்மதங்களின் ஒவ்வொரு மூல-கிரந்தமும் மனுஷிய-ப்ரோக்தமாகவே ஒப்புக்கொள்ளப்பட்டுமிருக்கின்றது. அநாதியாயும் அமானுஷ-ப்ரோக்தமாயுமிருக்கிற நம்-ஆர்ய-வைதிக-மதமொன்றே ஸத்யமாயுள்ளது. முக்காலத்திலும் ஸத்யத்வம் மதாந்தரங்களுக்குக்கிடையாது. மதாந்தரக் கொள்கைகள் பூராவும் ஸத்யங்களாயிருக்கும் பக்ஷத்திலும், அவைகள் ஈசுவர-ஸம்மதங்களாயிருக்கும் பக்ஷத்திலும், அம்மதங்கள் முன்னில்லாமலிருந்து இப்பால்வந்து தோன்றுவதற்கு நியாயமில்லை. இப்படித்தோன்றும் காலத்திற்கு முந்திய காலங்களிலுள்ள ஜீவர்களை ஈசுவரன் கவனிக்கவில்லையென்ற தோஷம் அவரை வந்தணுகும். இப்போது பூலோகத்தில் பலவிடங்களில் பிரசாரத்தையடைந்துவருகிற நவீன மதங்கள் ஏற்படுவதற்கு முன்பாக இவைபோன்ற வேறு அநேக மதங்களிருந்ததாகவும் அவைகள் லோபமடைந்து விட்டதாகவும் துலங்குகிறது. லோபமடையக்கூடிய மதங்களும் இன்றிருந்து நாளைக்குச் சாகும் மதங்களுமெப்படி ஈசுவர-ஸம்மதங்களாகக் கூடும்? நம்-வைதிக-மதமொன்றே இத்தோஷங்களன்னியில் நிஷ்களங்கமாய், ஆதி-மத்தியாந்த-ரஹிதமாய், நித்ய-ஸித்தமாய் விளங்கிவரும் மதம். இதுவே ஸர்வோத்கிருஷ்டமான மதமென்பதில் ஸந்தேஹமுமேற்படுமோ?

8. தவிரவும், ஈசுவர-ஸம்மதமான மதம் ஈசுவர-ஸ்ருஷ்டிக்குட்பட்டிருக்கிற அகில லோகங்களுக்கும் உரித்தானதாயும், இப்பிரபஞ்சத்திலுள்ள ஸகல ஜீவ-கோடிகளுடைய முன்-பின்-கதாகதிகளை பரிஷ்காரமாய்க் காண்பிவிக்கத் தக்கதாயுமிருக்க வேண்டியது அவசியம். நம்-மதத்தைத் தவிர வேறொரு மதத்திற்கும் இந்த லக்ஷணம் பொருந்தாது. வைதிக-மதமொன்றுதான் ஸகல-லோகங்களுக்குமொத்தது. அதில்

கண்ட உபாஸனு-மார்க்கங்களை யவலம்பித்தே மேல்-லோகங்களிலிருப்போர்கள் பெரும் நற்கதியை யடைய முயற்சிக்கின்றுர்கள். அதில் கண்ட மேலான ஜ்ஞானமார்க்கத்தையே ஸத்ய-லோகத்தில் ஸாக்ஷாத் ஸகுணப்பிரஹ்மமே உத்தம ஸத்யலோக-வாஸிகளுக்கு உபதேசம்செய்துவருவதாய்த் தெரியவருகிறது. நம்-பூலோகத்திற்கு மேலாகவும் கீழாகவும், அதாவது, உத்கிருஷ்டமாகவும் நிகிருஷ்டமாகவும் எவ்வளவு லோகங்களுண்டு, எங்தெந்த கதியுள்ள ஜீவர்கள் என்னென்ன காரணங்களுக்காக அங்கு போகிறுர்கள், அங்கிருந்து வருகிறுர்கள்? இதுபோலொத்த விஷயங்கள் யாவும் நம்-மதக்கிரந்தங்களினுல் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பூலோகத்திலுள்ள மனுஷியாளுள்பட ஸகல ஜீவர்களுடைய தத்கால-நிலைமையையும், இந்த நிலைமை யேற்படுவதற்குக் காரணங்களையும், கெடுதலான நிலைமையைவிட்டு நீங்குவதற்கும் நற்கதியின் பிராப்தியின் பொருட்டுச் செல்வதற்குமுள்ள பாதைகளையும் நம்-மதக்கிரந்தங்கள்தான் கர்மகதி-புனர்ஜன்ம-விஷயங்களான நிரூபணங்களினுல் துலக்கிக் காட்டுகின்றன. மற்ற மதங்களின் பிரவர்த்தகர்களுக்கே இவ்விபரங்கள் தெரிந்ததாகக் காணப்படவில்லை. மனுஷியன் எதற்காகப் பிறந்திருக்கிறுன்? அவன் எந்த ஸ்தானத்தை நோக்கிச் செல்லவேண்டியவன்? அப்படிச் செல்லும மார்க்கங்களின் லக்ஷணங்கள் யாவை? இப்பூலோகத்தில் மனுஷியர்களுக்குள், சிலர் பிறவி முதல் ஸந்துஷ்டர்களாயும் சிலர் துக்கிதர்களாயும், சிலர் ஸம்பன்னர்களாயும், சிலர் தரித்திரர்களாயும், பலவிதமாய்க் காணப்படுவதற்குக் காரணம் யாது? மனுஷியனைத் தவிர இதர பிராணிகளிடத்தும் ஸுக-துக்க-தாரதம்யம் இவ்விதமே காணப்படுகிறதே, இது ஏன்? இவை முதலான கேள்விகளுக்கு திருப்திகரமாய் ஸமாதானஞ் சொல்லக்கூடிய மதம் நமதொன்றே இந்தப்படி நம்-வைதிக மதத்தின் ஸர்வோத்கிருஷ்டத்தன்மையை யெடுத்து ஒவ்வொரு

விஷய-ஸம்பந்தமாய்க் காட்டுவதானல் மிக்க விரியும். உத்தமோத்தமமான மதத்தின் பிரயோஜனம் பூராவையுமடையக்கூடிய ஜன்மாக்களையெடுத்திருக்கும் தன்யர்களான நமக்கு நம்-மதத்தின் மீது அபிமானமில்லாமலிருந்தால்தான் ஆச்சரியப்படக்கூடியது.

9. மேலும், வெறும் மதாபிமானம் போதாது. மத-நூல்களில் சொல்லப்பட்டிருக்கிற விதி-நிஷேதங்களை உல்லங்கனஞ்செய்து தனக்குத் தோன்றியவாறு நடந்துகொண்டே நம்மதமே சிலாக்கியமென்று வாயினல் மாத்திரம் சொல்லி அபிமானித்துவரும் ஜனங்கள் நமக்குள் இப்போது வெகு பெயர்களுண்டு. இந்த அபிமானம் நிஷ்பலமானது அபிமானம் வைத்தும் தர்ம விரோதமாய் நடப்பவர் கொடும்-பாபியாவர். இந்த விபரம் தெரிந்தோ அல்லது வேறு காரணங்களாலோ சிலர்கள் தங்கள் மதாபிமானத்தை வெளிக்காட்டி தாங்கள் தங்களுடைய இந்திரிய வசப்பட்ட மனது போகும் போக்கெல்லாம் நடந்து வருகிற மார்க்கங்களையே நம்-மத-மார்க்கங்களென்றும், சாஸ்திர-ஆராய்ச்சியுள்ள வித்வான்களான நம்-பூர்விகர்கள் அனுஷ்டித்துவந்த மார்க்கங்கள் ஸரியல்லவென்றும் சொல்லிக்கொண்டு இப்பால் சிலகாலமாய் துர்க்கக்ஷிகளை செய்துவருகின்றார்கள். இவ்வித துர்க்கக்ஷிகளைச் செய்ய ஆரம்பித்த காலத்திலேயே நம்மவர்களில் விஷயமறிந்த பெரியோர்கள் ஜாக்கிரதையாயிருந்து பஹிரங்கமாய்க் கண்டித்திருந்தால் இந்நாளில் ஏற்பட்டிருக்கும் தர்மக்கேடு இவ்வளவு கொடுமையாயிராது. இதை இப்பொழுது சொல்வதில் விசேஷப் பயனில்லை. சொல்லியுமாகவேண்டியதாயிருக்கிறது, இனியும் அதிகக்கெடுதலேற்படாமலிருக்கும் பொருட்டு. ஆசார-சீர் திருத்தக்காரர்கள் (Social Reformers) என்று பெயர் வைத்துக்கொண்டு நம்முடைய பிராசீனமாயுள்ள ஸதாசார-சீர் யாவத்தையும் திருத்திக் கெடுத்துவிட யத்தனிக்கின்றார்கள். இப்போது நம்-மதத்திற்கு வந்திருக்கும் அனர்த்த

மெல்லாம் இவர்களாலேயே உண்டாயிருக்கிறது. இதர மதஸ்தர்களாலேற்படும் கெடுதல் அதிகமில்லை. இந்த ஆசார-சீர்திருத்தக்காரர்கள் நம்மவர்களுக்குள்ளேயே யிருந்து கொண்டு, உடம்பில் புகுந்திருக்கிற கொடிய விஷம்போல், உள்ளிருந்தே மேன்மேலும் அனர்த்தத்தை விளைவிக்கின்றார்கள். இவர்கள்-விஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டியதவசியம். இவர்களின் விஷமச் செய்கைகளுக்கு இடங்கொடுக்கலாகாது. தாக்ஷிண்யத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் இவர்களின் தப்புக்கொள்கைகளை எடுத்துக் கண்டித்துக் காட்டவேண்டியது நமது இன்றியமையாத கடமை. இவர்கள் சில காலமாய்த் தனி-கோஷ்டியாயிருந்து, தனி-ஸபையேற்படுத்திக்கொண்டு நம்-வர்ணாசிரம தர்மங்களுக்கெல்லாம் எதிரிடையான கொள்கைகளையே தங்களாலியன்றமட்டிலும் பிரசாரப்படுத்தி வந்திருக்கின்றார்கள். ஆனால், பெரும்பாலும் நம்-ஜனங்கள் அவைகளை ஒப்புக்கொள்ளாமல் நாளதுவரையில் நிராகரித்துவந்திருக்கின்றார்கள்.

10. இப்படியிருக்க, இத்தேசத்திலுள்ள ஜனங்கள் யாவருக்கும், அதாவது, எல்லா ஜாதியார்களுக்கும், வகுப்பினர்களுக்கும், மதஸ்தர்களுக்கும் பொதுவான ராஜாங்க (Political)-ஸம்பந்தமாயுள்ள ஸங்கதிகளை ஆலோசித்துவரவேண்டியதற்காக ஏற்பட்ட காங்கிரஸ் முதலான பெரும் ஸபாக்கூட்டங்களில் கலந்திருக்கும் ஆசார-சீர்திருத்தக்காரர்கள் துர்-யுக்தியினால் தூண்டப்பட்டு இப்பால் சில காலமாய் மெல்ல மெல்ல தங்கள் கொள்கைகளையும் ஷெ ராஜாங்க-ஸபா-காரியங்களுடன் கலந்து விடுவதற்கு யத்தனித்து வருகிறார்கள். ஷெ ராஜாங்க-காரியாதிகளை நடத்திவருகின்ற பிரமுகர்களில் அநேகர் ஷெ திருத்தக்காரர்களாகவேயிருப்பதினால் இந்த துர்-யுக்தி பலித்துப்போகக்கூடியதாயுமிருக்கின்றது. இவ்விஷயத்திலும் தாங்களெல்லோரும் வெகு கவனத்துடனிருக்கவேண்டியது முக்கியம். எந்நாளும் நடந்ததுபோல் பொது

ஸபைகளில் பொதுக்காரியங்கள்தான் இனிமேலும் நடந்துவரு மென்றெண்ணுவதற்கிடமில்லை. ஆசார - சீர்திருத்தக்காரர் களின் கொள்கைகளில் சிலவைகள் ஏற்கனவே ராஜாங்கத் தீர்மானங்களுக்குள் புகுந்துவிட்டன. நமது ஸ்திரீ - தர்ம-சாஸ்திர-விதிகளுக்கும் நம்-பஞ்சம-ஜாதியார்களுக்கும் மற்ற ஹிந்துக்களுக்கும் சாஸ்திரப்படிக்குள்ள ஸம்பந்தாஸம்பந்த-வியவஸ்தைகளுக்கும் நேர் எதிரிடையான தீர்மானங்கள் பஹிரங்கமாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஸம்வத்ஸரத்தில் நாகபுரத்தில் நடந்த காங்கிரஸ்ஸில் 20,000 தகிற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் ஆஜரிலிருந்ததாய்த் தெரியவருகிறது. ஷை 20,000 பெயர்களுமா அவ்விதத் தீர்மானங்களுக்கு உடன்பட்டிருந்தார்கள்? இவ்வளவு கெட்டா போய்விட்டது நம்மவர்களின் நிலைமை? அப்பெரும் ஸபையில் நமது ஆர்ய-மதத்திலும் வர்ணாசிரம-தர்மத்திலும் சிரத்தையுள்ளவர் யாருமிருந்திருப்பதில்லையா? மேற்கண்ட தீர்மானங்கள் ஒப்பேறுவதற்கு நம்மவர்களின் அஜாக்கிரதையே காரணம், அல்லது, மனோ-தைரியமில்லாமை. ராஜாங்க - விஷயங்களுக்கு ஸம்பந்தமில்லாததும் தர்ம-விரோதமானதுமான தீர்மானங்களை நான்கு மதஸ்தர்களுங் கலந்த பொது ஸபைக்குக் கொண்டுவரும்போது எழுந்திருந்து உடனே ஆக்ஷேபிக்காதவர்கள் எப்படி தேசப் பிரதிநிதியாவர்களோ தெரியவில்லை. இதுவரையில் போனது போகட்டும். இனியாவது வைதிக-மதாபிமானமுள்ள லௌகிக பெரியோர்களெல்லோரும் கவனத்துடனிருந்து பொது-ராஜாங்க விஷயத்தீர்மானங்களை யாலோசிக்கும் ஸபைகளில் மேற்கண்டபடி தர்மவிருத்தமான தீர்மானங்களைப் புகவிட யத்தனிக்கும் ஸமயங்களில் உடனே ஆக்ஷேபித்துத் தடுத்து விடுவார்களென்று நம்புகிறேன். தர்மத்தை நிலைநிற்கச் செய்வது பெரியகாரியம். இது பெரியோர்களுக்கே ஸாத்தியமான காரியம். தர்மத்தைக் கெடுப்பது பெரிய காரியமில்லை. இது எந்த அல்பராலுஞ் செய்யப்படக்கூடியது.

11. நம்முடைய ஆர்ய-தர்மம் அன்யாதிருசம். ஏனென்றால், நம்-முக்கிய புருஷார்த்தம் அன்யாதிருசம். அது மோக்ஷ-புருஷார்த்தமே. அதற்கு ஸாதனமாயுள்ளது தர்மம். இப்பூலோகத்தில் மோக்ஷ-புருஷார்த்தத்தையும் அதன் ஸ்வரூபத்தையும் நன்கு வெளியிட்டு, அதன் ஸாக்ஷாத்கார-ஸாதனங்களாகிய விசேஷ-தர்ம-மார்க்கங்கள் யாவற்றையும் விசதமாய்க் குறிப்பிட்டுக் காட்டி, மனுஷ்ய-ஸாமான்யத்திற்குள்ள அர்த்த-காம-புருஷார்த்தங்களையும் தர்மாங்கங்களாகச் செய்து கொடுத்திருக்கும் மஹத்-தமமான மதம் நம்-மதம். மோக்ஷ-ஸ்வரூபமின்னதென்றறியக்கூடாத அவைதிகப் பிரவர்த்தகர்களுக்கு விசேஷ-தர்ம-மார்க்கங்கள் துலங்க நியாயமில்லை; ஸாமான்ய-தர்மங்கள்தான் தெரியக்கூடியவை, அதாவது, நன்றியறிதல் வேண்டும், பொய் சொல்லக்கூடாது, திருடலாகாது முதலானவைகள். ஸாமான்ய-தர்மங்கள் மானிட-ஜன்மமெடுத்த இப்பூலோகத்திலுள்ள ஸகலர்களுக்கும் பொதுவே. இந்த ஸாமான்ய-தர்மங்களை யனுஷ்டிப்பவன்தான் மனுஷ்யனுவன். இவைகளைக்கூட கைவிட்டவன் மிருகப்பிராயனேயொழிய வேறல்ல ஆகையால், ஸாமான்ய-தர்மங்களைக்கைவிடாது அனுஷ்டிக்க வேண்டியது எல்லோருக்குமவசியமாயுள்ளது. ஆனால், இவை மாத்திரம் நம்-வைதிக-மதஸ்தர்களுக்குப் போதாது. இந்த ஜன்மாவில் ஸரியானபடி மனுஷ்யர்களாக இருப்பதுமட்டும் நம்-உத்தேசமல்ல. நமதாசை பேராசை நம்முடைய விசாரம் பெரும் விசாரம். மனுஷ்ய-ஜன்மாவின் ஸுகமின்னதென்று அறிவோம. துக்கத்தையே ஸுகமாகப் பாராட்டுவோரையும் காண்கின்றோம். இந்த ஜன்மம் எதற்காக நமக்கேற்பட்டிருக்கிறதென்பதை நம்-சாஸ்திரங்களின் வாயிலாகத்தெரிந்து கொண்டிருக்கின்றோம். நரகப்பிராயமாயும் மல-மூத்திர-கிரிமி-மாம்ஸ-பூயிஷ்டமாயும் ஸதா-ரோகக்கிரஸ்தமாயுமிருக்கிற இவ்வுடலைச் சுமந்து ஆஹார-நித்திராதிகளினுல் காலங்கழிப்பது மாத்திரம் நமதெண்ணமல்ல. மோக்ஷ-நிலையை அடையும் பொருட்டு இவ்வுடலையும் சுமக்கின்றோம்.

இம்மானிட-சரீரமெடுத்து விசேஷ-தர்மப்பயிற்சிக்காக இப்பரத கண்டத்திலேற்பட்டுள்ள சாதுர்வர்ண்ய-மஹா-தர்ம-வித்யா-சாலையில் வந்து சேர்ந்திருக்கின்றோம். விசேஷ-தர்மத்தைத் தான் நமது ஆர்ய-தர்மமென்று சொல்லுகின்றோம். ஸாமான்ய-தர்மத்தின் ஆசரணையைப் போதிக்கும்படியான ஸாமான்ய-பள்ளிக்கூடங்கள் இப்பூலோகத்திலெங்குமுண்டு. நித்ய-நிரதிசயானந்த-ஸ்வரூபமான மோக்ஷ-ஸாம்ராஜ்யத்தில் இச்சையிருப்போருக்கும் இச்சை யேற்படக்கூடியவருக்கும் நமது சாதுர்வர்ண்ய-மஹாவித்யா-சாலை ஒன்று தான் இப்பூலோகத்திலுள்ளது. ஈசுவரப்பிரேரிதர்களாயிருந்து கொண்டு மானிட-ஜன்மாக்களை யடையும் ஜீவர்களில் எவர்களுக்கு பூர்வ-ஜன்ம-ஸம்ஸ்காராதிகளினால் மேற்கண்ட மோக்ஷேச்சை யுண்டாகக் கூடியதோ, அல்லது, எந்த ஜீவர்களுக்கு மோக்ஷத்தின் பொருட்டு பரம்பராஸாதனங்களாயுள்ள அவாந்தர-விசேஷ-தர்ம-பிரவிருத்திகளும் ஸித்திகளுமுண்டாகக்கூடியவைகளோ, அவர்களெல்லோரையும் நம்-வர்ணாதிகளுக்குள் அமைத்து அவரவர்களுக்குத்தக்கதாயுள்ள, அதாவது, அந்தந்த ஜாதிக்குரிய விசேஷ-தர்மாசரணைகளை நடத்தும்படியான பிறப்புகளை ஈசுவரன் கொடுத்தனுக்கிரஹிக்கிறார். நம்-விசேஷ-தர்ம-நாடாகிய இப்பரதகண்டத்தில் மாத்திரந்தான் சாதுர்வர்ண்யமிருக்கக்கூடியது. மற்ற தேசங்களில் இல்லை யென்பதினால் நமக்குள்ளேற்பட்டிருக்கிற ஜாதி-வியவஸ்தைகளுக்குக் குறைவுண்டாகுமா? அது நம்-தர்ம-மார்க்கங்களின் உத்கிருஷ்டத் தன்மையைத்தான் காட்டும். குக்கிராமங்களெங்கும் வகுப்பு-வியவஸ்தையில்லாத திண்ணைப் பள்ளிக்கூடங்கள் தான் உண்டென்ற காரணத்தினால், பிரதான நகரத்தில் மாத்திரமுள்ள முதல்-கிரேட்-காலேஜுக்கும் அதில் படிப்போர்களுக்கும் குறைவுண்டா?

12. இத்தேசத்தில் மட்டும் வர்ணாசிரம-பேதங்களிருப்பதற்குப் பல காரணங்களுண்டு. நடப்பு-கல்பத்தில் மானவ

ஸ்ருஷ்டியில் விசேஷ-தர்ம-மார்க்க-நிஷ்டர்களும் பிரவர்த்தகர்களுமாகிய மஹான்களான ஆர்யோத்தமர்கள் இப்பூலோகத்தில் முதலில் ஆவிர்ப்பாவமடைந்த விடத்திற்கு ஆர்யாவர்த்தமென்று பெயர். ஆர்யர்களின் தர்ம-நிஷ்டா-ஸௌகரியங்களின் பொருட்டே யேற்பட்டிருக்கிற ஸ்தலம் இப்பரத கண்டம். தர்ம-கர்ம-ஸாதனமான சரீரத்தின் ஸௌக்கியத்திற்தக்க சீதோஷ்ண-ஸௌகரியங்களும், ஸ்நான-தர்ப்பண பானாதிகளுக்காக அடுத்தடுத்துப் பிரவஹிக்கும் திவ்ய-மஹாநதிகளும், ஏகாந்தத்தியானாதி-தபஸ்களுக்கு உசிதமான ரமணீய-வன-கிரிப்பிரதேசங்களும், தேஹ - போஷணைக்கும் சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டிருக்கும் ஸகலவித கர்மாக்களுக்கும் தேவையாயுள்ள எவ்வகை பதார்த்தங்களையும் உத்பத்திசெய்து கொடுக்கும்படியான அத்புத-ஸாரக்ஷேத்திரங்களுமொன்று சேர்ந்து ஈச்வராஜ்ஞையினாலேற்பட்டிருக்கும் கர்ம-பூமி இப்பரதகண்டம். இது மற்ற பூ-பாகங்களுடன் சேர்ந்து ஒரு காலத்திலும் கலந்துவிடாமலிருக்கும்படியாக மூன்று புறங்களில் ஸமுத்திரத்தையும் வடபுறத்தில் இப்பூலோகத்திலேயே உன்னத-தமமும், ஸகலவிதத்திலும் உத்தமமும், அலங்கனீயமுமான ஹிமவத் பர்வதத்தையும் அதற்கு மேல்-பக்கமிருந்தும் கீழ்ப்பக்கமிருந்தும் தெற்கேயுள்ள ஸமுத்திரம் வரையில் கர்ம-பூமி-யெல்லையைக் குறிப்பிட்டுக் காட்டும்படி பெரும் நதிகளையும் ஈசுவரர் அமைத்துவைத்திருக்கின்றார். இப்பூலோகம் தோன்றியகாலம் முதல் மானிட-ஜன்மம் இப்பூலோகத்திலேற்பட்டது முதல், இப்பரதகண்டம் நம்-ஆர்ய-கர்ம-பூமியாகவேயிருந்து வந்திருக்கிறது. ஏதோ ஆர்யர்கள் வடக்கேயிருந்தோ வடமேற்கேயிருந்தோ இக்கண்டத்திற்குச் சில காலத்திற்கு முன்பு வந்ததாகப் புதுப்படிப்புள்ளோர் சொல்லுங்கதைகள் பொய். இப்பூலோகத்தில் முதலில் வந்தவதரித்த மனிதர்கள் வேதத்தையடைந்து அதில் கண்ட தர்ம-மார்க்கங்களை யவலம்பித்தார்கள். இவர்கள்

உத்தமர்களாகையால் ஆர்யர்களென்ற பெயரை வஹித்தார்கள். அவ்வவதாரம் ஆதியிலேற்பட்ட இடம் இத்தேசமென்பதில் ஸந்தேஹம் வேண்டாம். எந்த இடத்தில் முதல் முதலில் மனிதன் வஸித்திருக்கக்கூடியதென்று யுக்தியினால் கண்டுபிடிக்க இப்போது மேற்கு-தேசத்திய தத்துவாலோசனை செய்பவர்களில் சில முக்கியஸ்தர்கள் முயலுவதில் நம்-தேசமிருக்குமிடத்தையே குறிப்பிடுவதாய்த் தெரியவருகின்றது. இவர்கள் சொல்வதையுமொரு ஆதாரமாகக் காட்டும்படியான காலமிதுவானதால் சொன்னேன், வேறல்ல. ஸநாதனமான விசேஷ-தர்ம-மார்க்கங்களைவிட்டு விலகாமல் நமதார்ய—சிரேஷ்டர்களெல்லோரும் நடந்துவந்திருக்கின்றார்கள். இப்போதும் வெகு மஹான்கள் அந்தப்படியே நடந்துவருகின்றார்கள். இப்படி நடப்போர் ஒருவராயிருந்தாலும் டலராயிருந்தாலும் இதற்கேற்பட்ட தேசம் இத்தேசமே மற்ற எத்தேசமும் கர்ம-பூமியல்ல, போக-பூமியேயாகும். 'கர்ம' என்பதினால் விசேஷ-கர்மாவைத்தான் குறிப்பிடுகின்றோம். ஸாமான்ய-கர்மாக்கள் அதாவது செய்கைகள் எத்தேசங்களிலும் நடந்தேறி வாலாம். நமது தேசம் கர்ம-பூமியென்றும் மற்றவை போக - பூமிகளென்றும் சொன்னதினால் ஸாமான்ய கர்மாக்கள் இங்கில்லையென்றாவது போகானுபவமிங்கில்லையென்றாவது அர்த்தமல்ல. இத்தேசத்திற்கும் மற்ற தேசங்களுக்குமுள்ள வித்தியாஸம் இத்தேசத்தில் விசேஷ-தர்ம-மார்க்கங்களை யவலம்பித்து, விசேஷ-கர்மாக்களைச் செய்து, விசேஷ நற்கதியையடைய இடமுண்டென்பதுதான். இந்த ஸௌகரியம் மற்ற தேசங்களில் கிடையாது. அன்றியும் சாஸ்திரங்களில் காணப்பட்ட விசேஷ-கர்மாக்கள் யாவற்றையும் எல்லோரும் அனுஷ்டிக்க வேண்டியதாக நம் மதக்கொள்கையல்ல. அந்தப்படி அனுஷ்டிப்பது ஸாத்தியமுமல்ல. எந்த எந்த கர்மாக்களை யார் யார் அனுஷ்டிக்கவேண்டியதென்பதற்கு வியவஸ்தை விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வியவஸ்தைக்காகவே

ஈசுவரனுல் வர்ணுசிரம-பேதங்களேற்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்ற எத்தேசத்திலுமில்லாத கர்மானுஷ்டான-விசேஷம் இப் பரதகண்டத்தில் மாத்திரமிருப்பதுபற்றி இத்தேசத்தில் மாத்திரம் வர்ணுசிரம-பேதங்களும் தனிமையாகவே காணப் படுகின்றனவென்பது நியாயமே.

13. மேற்கண்ட விபரங்களினுல் நமது-ஆர்ய-மத-தர்மா சரணைகளுக்கும் மற்றவர்களுடையஆசரணைகளுக்கும் வித்யாஸ மிருக்கவேண்டியதே ஸரியென்பது வெளியாகின்றது. இந்த ஸ்திதியில், இதர தேசங்களிலுள்ள நம் தர்ம-விருத்தமான ஆசரணைகளை இங்கு நாமனுஷ்டித்து வரவேண்டியதென்றும் நமக்குள்ள விசேஷ-ஸதாசாரங்களை நாம் விட்டுவிடவேண்டு மென்றும் அக்கிரமமாயும் அறியாமையாலும் சிலர்கள் பிதற்றி வருகின்ருர்கள், இவர்களின் வார்த்தைகளை கவனியாமல் தள்ளிவிடும்படி நம்மவர்களுக்கு அதிலும் முக்கியமாய் நம்-சிறுவர்களுக்கு அடிக்கடி உபதேசித்து வருவது நம்-பெரியோர் களின் கடமை. முதலில் நான் தெரிவித்துக்கொண்டபடி இந் நாட்டிலேற்பட்டிருக்கிற ஆங்கிலேயப்படிப்பே அனேக அனர்த்தங்களுக்குக் காரணமாயிருப்பதால் நம்-சிறுவர்களுக்கு அப்படிப்பை நிறுத்தி பிராசீனமாயுள்ளதும் வாஸ்தவ பிரஹ்ம-சர்யத்துடன் சேர்ந்ததுமான நம்-வேத-சாஸ்திர-ஆராய்ச்சி களையும் தேஹ-யாத்திரைக்குஅவசியமாயுள்ளதும் அவரவர் களுக்குத் தகுந்ததுமான அதாவது, அந்தந்த ஜாதி-முறைப் படிக்குள்ள லௌகிக பிரவிருத்தி-யோக்கியதைகளையு முண்டாக்கக்கூடியதான தனித்தனி வித்தியா-சாலைகளையேற் படுத்திவைக்க வேண்டியதவசியம். ஆங்கிலேய-பாஷா-ஜ்ஞானமே கெடுதலென்று நான் சொன்னதாக எண்ணக் கூடாது. சில லௌகிக பிரவிருத்திகளுக்கு உபயுக்தமானதும் தத்காலத்தில் பௌதிக-சாஸ்திராப்பியாஸத்திற்கு அவசிய மாயுள்ளதுமான ஆங்கிலேய-பாஷா-ஜ்ஞானத்தையும் வேண்டுவோர்கள் ஸம்பாதித்துக்கொள்ளலாம். ஆனல்

அப்படி ஸம்பாதித்துக்கொள்ளும் மார்க்கம் நம்-தர்ம-மார்க்கங்களுக்கு விபரீதமாயில்லாமலிருக்கும்படி நாம் உத்தேசிக்கிற வித்யா-சாலைகளிலேயே அதையும் அமைத்து வைத்துவிட வேண்டியது. இப்படியெங்கும் வித்யாசாலைகளை ஏற்படுத்துவதில் பற்பல ஆலோசனைகள் பலர்களுக்குண்டாகும். அவையெல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்து நம்-தேச-நன்மைக்கும் ஆர்ய-தர்மத்திற்கும் ஒற்றுமையாயிருக்கும்படி கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியதாயுமிருக்கிறது. இனி தாமதிக்க இடமில்லை. தாமதிக்கத் தாமதிக்கக் கெடுதல் வெகு வேகமாய் விளையும். விஷயமறிந்த பெரியோர்கள் நாளடைவில் குறைந்து போய்விடுகின்றார்கள். கலி-மாஹாத்மியத்தால் விஷயமறியாத மூடர்கள் விருத்தியடைகின்றார்கள். இவர்கள் துர்-யுக்திகளைச் சொல்லிக்கொண்டு தர்மத்தை அதிகமாய்க் கெடுக்க முயலுகின்றார்கள். சாஸ்திர-ஆராய்ச்சி-கந்தங்கூட இல்லாதவர்களும் ஆங்கிலேயப் படிப்பினால் தங்களை ஸர்வஜ்ஞர்களாக பாவித்துக்கொண்டவர்களுமான சிலர்கள் இப்போது பெரிய லௌகிக-ஸ்தானங்களை யடைந்த பெரியோர்களாகிவிட்டபடியால் இவர்களின் வார்த்தைகளே நம் சிறுவர்களுள்பட ஸாமான்ய-ஜனங்களின் பார்வையில் மதிப்புள்ளவைகளாக விளங்குகின்றன. இதுவே நமது தேசத்திற்கும் தர்மத்திற்கும் ஏற்பட்ட பெரும் அனர்த்த-ஹேது. ஆகையால் மேற்சொல்லியபடி நம்-சாஸ்திர-விஜ்ஞானத்தையும் தர்மாசரணைகளையும் நன்றாய்ப் பரவச் செய்யத்தக்கதாயும் மற்றும் லௌகிக-விருத்திகளுக்கு உபயுக்தமானதுமான தேசீய-வித்தியா-சாலைகள் உடனே எங்குமுண்டானாலொழிய வேறு கதியில்லை. தாங்கள் தயை செய்து இனி தாமதத்திற்கு இடங்கொடாமல் ஒற்றுமையுடன் முயற்சி செய்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் நம்-வர்ணாசிரம-தர்மங்களுக்கு அபிவிருத்தி-கரங்களான வேத-சாஸ்திர-வித்யா-சாலைகளையும்

ஷெ தர்மங்களுக்கு அவிரோதிகளான லௌகிக கலாசாலைகளை யும் ஸ்தாபித்துக்கொடுங்கள். இதுவே தாங்களிப்போது முதலில் செய்யவேண்டிய காரியம்.

14. வித்தியாபிவிருத்தி-ஸம்பந்தமாயும் தர்ம-ரக்ஷணையை உத்தேசித்தும் நமது ஸ்திரீ-ஜனங்களின் விஷயத்தில் ஜாக்கிரதையாய் நாம் கவனஞ் செலுத்தவேண்டியதுண்டு. புருஷார்த்தங்கள் நான்கும் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பொதுவென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் ஸ்திரீகளுக்கு இயற்கையாய்ச் சில முக்கிய வேறுபாடுகள் ஈசுவரனால் அவர் களின் ஸ்வபாவங்களிலும், சக்தி ஸாமர்த்தியங்களிலும், சரீரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்காரணம் பற்றி ஷெ புருஷார்த்தங்களைத் தேடும் மார்க்கங்களில் ஸ்திரீ-புருஷர்களுக்குள் பேதமுண்டு. ஒரு விஷயத்திலும் ஸ்திரீ புருஷர்களுக்குள் வித்தியாசம் பாராட்டக்கூடாதென்றும், இருவர்களுக்கும் கல்விப் பயிற்சி ஒரேவிதமாயிருக்கவேண்டு மென்றும், புருஷர்களுக்குள்ள வெளி-ஸ்வாதந்திரியம் பூராவும் ஸ்திரீகளுக்குமுண்டென்றும், புருஷர்கள் கைக்கொள்ளும் தொழில்-விருத்திகள் யாவற்றையும் ஸ்திரீகளும் கைக் கொள்ளலாமென்றும் அடிக்கடி சொல்லி வருகின்றார்கள் பலர்கள். இதைக்கேட்டு சரியென்று ஆமோதித்து வருபவர் களும் அனேகர்களுண்டு. ஆனால் இவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து ஈசுவரனிடத்தில் முறையிட்டு ஸ்திரீ-ஜன்மாவுக்குள்ள அவயவ-விசேஷங்களையும் சக்தி-ஸ்வபாவங்களையும் முதலில் மாற்றிக்கொடுக்கும்படிச் செய்தாலொழிய அவர்களின் மனோரதம் நிறைவேறத் தக்கதில்லை. அதாவது, ஸ்திரீகளின் ஸ்திரீத்தன்மை தொலைந்தாலொழிய அவர்கள் தங்களுக்கேற் பட்டிருக்கும் விசேஷ விதிகளை உல்லங்கனஞ்செய்ய இடமில்லை. மீறி நடந்தால் அதனாலேற்படும் கெட்ட பலன் அவர்களை அடையாமலிருக்கும்படி தடுக்க மார்க்கமில்லை. இதை ஸ்திரீ களுள்பட நம்மவர்கள் யாவரும் அறிந்துகொள்ளவேண்டியது.

ஸ்திரீ-தர்மங்கள் பூராவையுமெடுத்துச் சொல்வதானால் விரியு மாகையால் சில முக்கிய ஸங்கதிகளை மாத்திரம் சுருக்கிச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இவைகளின் தனித்தனியா யுள்ள முகாந்திரங்களையெடுத்துச்சொல்ல அவகாசமில்லை. ஸ்திரீகளுக்கு ஒரு காலத்திலும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து அதிலும் பையன்களுடன் சேர்ந்து, வாசிப்பதென்பது கூடாது. விவாஹமாகும் வரையில் மாதா-பிதாக்களே வீட்டில் வைத்துப் பெண்களுக்கு வித்தியாப்பியாஸத்தைச் செய்துவைக்க வேண்டுமென்பதே முக்கிய பக்ஷம். விவாஹமான பின்பு புருஷன்-மூலமாய் வித்தியாபிவிருத்தியையும் தர்மாப்பியாஸத் தையுஞ் செய்துகொள்ளவேண்டியது. பணம் ஸம்பாதிக்கும் படியான வெளி-விருத்திகளில் ஸ்திரீகளை விடுவது அதர்மமே யாகும். ராஜாங்கக்காரியங்களிலும் தேசீயப்பொதுக் காரியங் களிலும் ஸ்திரீகளின் ஸம்பந்தமிருக்கலாகாது. நம்-சாஸ்திர-ரீதியாய் வீட்டிற்கு வெளியிலுள்ள வியவஹாரங்களில் புருஷனுக்கு மற்றப் புருஷர்களுக்கொப்பந்தம் ஸமமான ஸ்வாதந்திரியத்தையும் வீட்டுக்குள்ளடங்கிய ஸங்கதிகளில் ஸ்திரீக்கு தன் புருஷனுக்கொப்பந்தம் ஸமமான ஸ்வாதந்திரி யத்தையும் வைத்து நமதாசரணைகள் உள்ளும் வெளியும் ஒழுங்காய் நடந்தேறிவரும் பொருட்டு விதிகளேற்பட்டிருக் கின்றன. இந்த விபரம் நம்-வாஸ்தவ-தர்ம-பத்னீகள் எல் லோருக்கும் ஸ்பஷ்டமாய்த்தெரியும். வீட்டுக்கு வெளியில் அவர் களுக்கு ஸ்வாதந்திரியமிருக்கலாகாதென்பதையும் அப்படி ஸ்வாதந்திரியம் பாராட்டினாலும் நிலைநிற்காதென்பதையும் நன்றாய் அறிவார்கள். வெளியில் ஸ்வாதந்திரியம் வேண்டு மென்று இந்த தர்ம-நாட்டில் நாளதுவரையில் ஒரு தர்ம-பத்னீயும் உத்தேசித்திருப்பதில்லை. தர்ம-பத்னீ-நிலையைவிட்டு நழுவினவர்களும், பதியையே விட்டு விலகினவர்களும், தர்மா தர்ம-விவேசனமேயில்லாதவர்களும், தர்மப் பிரஷ்டர்களா யிருக்கிற பதிகளால் உபதேசிக்கப்பட்டவர்களும், நம்-சாஸ்திர

விதிகளுக்கு நேர் விரோதமாய் பிரதிலோமாதி-ஸம்பந்தங் களைச் செய்தவர்களுமான ஸ்திரீகளுக்கும் இவர்களுடன் நெருங்கிய துஸ்-ஸஹவாஸ மேற்பட்ட ஸ்திரீகளுக்கும் மாத்திரம் ஷெ வெளி-ஸ்வாதந்திரியத்தில் இச்சை ஏற்படுமே ஒழிய, நம்-ஹிந்து-ஆர்ய-ஸ்திரீகளில் மற்றவர்களுக்குண்டா காது. இந்த மற்ற யாவத்து ஸ்திரீகளின் தர்மத்தையும் காப்பாற்றிக்கொடுக்கவேண்டியது நம்மவர்களின் கடமை. தாங்களெல்லோரும் ஜாக்கிரதையாயிருந்து ஷெ ஸ்வாதந்திரியத் திற்காக வெளியில் வந்து பேசிவரும் ஸ்திரீகளுடன் மற்ற ஸ்திரீகளுக்குப் பழக்கமேற்படாமல் பாதுகாத்துக் கொடுப்ப துடன் தாங்களும் மேற்கண்டபடி ஸ்வாதந்திரியம் பாராட்டிக் குதிக்கும் ஸ்திரீகளின் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்காமல் விலகி நிற்பதும், ஸாத்தியப்பட்டால் ஷெ வார்த்தைகளை அவர்கள் பஹிரங்கமாய்ச் சொல்வதற்கே இடங் கொடாமல் சட்டத்திற்கிணங்கிச் செய்வதும் அவசியமென்று தோன்றுகிறது. சாஸ்திர-முறைப்படி ஸ்திரீ-தர்மம் காப்பாற்றப் பட்டால்தான் பெரும்பாலும் மற்ற தர்மங்கள் கைகூடும். ஸ்திரீகளின் தர்மம் காப்பாற்றப்படவேண்டுமானால் புருஷர்கள் அபிஜ்ஞர்களாயிருந்து ஸ்திரீகளுக்கு ஜ்ஞான விருத்தியைச் செய்துவைத்து அவர்கள் தர்மத்தைவிட்டு விலகாமலிருக்கும்படி காத்துவரவேண்டியது. இந்தப் பிரகாரம் ஸ்திரீ-புருஷர் களெல்லோருடைய நற்கதியும் புருஷர்களுடைய வித்தியாப்பி யாஸ-ரீதியைப்பொறுத்து நிற்கின்றது. ஆதலால்தான், மேலேகண்ட வித்தியா-சாலைகளையும் கலாசாலைகளையும் ஸரியானபடி ஏற்படுத்திக்கொடுப்பதே தாங்களிப்போது உடனே செய்யவேண்டிய காரியமென்று சொல்லவேண்டிய தாயிற்று.

15. பெரியோர்களே, இதைச் செய்துகொடுத்து விட்டால் மற்றுமுள்ள ஸகல நன்மையான காரியங்களும் பின்தொடர்ந்து நடந்தேறிவரும். ஸரியான வித்யையும் தொழில்-முறைகளும்

ஸதாசாரங்களும் நம்-ஜனங்களிடத்தில் இருந்து விட்டால் நம்-தேசத்திற்கும் நமக்கும் ஆகவேண்டியது வேறொன்றுமில்லை. எல்லோரும் தன்யர்களாகவே பவிப்பார்கள். பகவத்-க்ருபையும் மேன்மேலும் விருத்தியடைந்து விசேஷ ஸௌகரியங்களுடனும் ஸந்தோஷத்துடனும் உன்னதஸ்திதியில் இருந்து வருவார்கள். ஈசுவரன்மீது பாரத்தை வைத்து முயற்சியுங்கள். தர்மம் தானாகவே ஓங்கி வளர்ந்து வரும். மஹனீயர்களும் ஜ்ஞான வ்ருத்தர்களுமான தங்களுக்கு எல்லா விஷயங்களையுமெடுத்துச் சொல்லவேண்டியதாக நான் எண்ணவில்லை. இதுவரையில் சொன்ன இரண்டொரு ஸங்கதிகளையும் தங்களுக்கு ஜ்ஞாபகார்த்தமாய்த் தெரியப்படுத்தினேனே ஒழிய, தங்களுக்குத் தெரியாததைச் சொல்லிவிடவில்லை. கால-கதியை உத்தேசித்து ஜ்ஞாபகப்படுத்த வேண்டியதும் ஒரு அவசிய காரியமாக ஏற்பட்டதால் சொல்லும்படி நேரிட்டது, வேறொன்றுமில்லை. ஸர்வோத்க்ருஷ்டமான மதத்தின் நன்மையை அடையும்படியாக புண்ணிய ஜன்மாக்களை எடுத்திருக்கும் ஜீவர்கள் எல்லோரும் இவ்வித ஜன்மாக்களை வீண்படுத்தாமலும் ஈசுவர-நிர்திஷ்டமான வர்ணாசிரம-தர்ம-மார்க்கங்களை அதிக்கிரமிக்காமலுமிருந்து பகவத்-கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகி நி:ச்ரேயஸமென்ற பரம-புருஷார்த்தத்தையுமடையும்படியான யோக்கியதையுள்ளவர்களாகும்படி பரிபூர்ணமாக அனுக்கிரஹஞ் செய்யுங்கள்.

शुभमस्तु

ஸ்ரீ ராமாநந்த ஸ்வாமிகள்

சதாப்தீ ஞாபகார்த்த ஸமிதியின் வெளியீடுகள்

கிடைச்குமிடம் :—

1. ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.
2. ஸ்ரீ சிவராமகணபதி கனபாடிகள்,
   மேல்மங்கலம், மதுரை ஜில்லா.
3. ஸ்ரீ M. ராமஸுப்ரஹ்மண்ய அய்யர், தர்மாதிகாரி,
   ஸ்ரீ சிருங்கேரி மடம், திருநெல்வேலி டவுன்.
4. மானேஜர், ஸ்ரீ அதிஷ்டானம், மஹாதானபுரம்,
   திருச்சி ஜில்லா.
5. ஸ்ரீ P. ஸுப்ரஹ்மண்ய அய்யர்,
   P. 142, G. Block, New Alipore, Calcutta-53.
6. ஸ்ரீ R. A. சட்டநாத அய்யர்,
   புரோப்ரைட்டர், மாடர்ன் ஸ்டோர்ஸ்,
   No. 31, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.
7. ஸ்ரீ S. V. லக்ஷ்மண அய்யர், அட்வொகேட்,
   தர்மாதிகாரி, ஸ்ரீ சிருங்கேரி மடம் 2வது அக்ரஹாரம்
   சேலம் டவுன்.
8. ஸ்ரீ T. R. அனந்தஸுப்ரஹ்மண்ய அய்யர், B. A., B. L.
   No. 16, மாளவியா தெரு, ராம்நகர், கோயமுத்தூர்.
9. ஸ்ரீ ஸித்தநாதஸுப்ரஹ்மண்ய அய்யர்,
   Retd. Ramnad District Board Office,
   No. 19, லக்ஷ்மீநாராயணபுரம் அக்ரஹாரம், மதுரை.